விக்தியோதயம்



378·06
விக்தி
SLIPR

உங்கள் பணத்தை எங்களிடம்

முதலீடு செய்து

20 %

வட்டி பெறுங்கள்.

த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்

191, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7680

தலைமையகம் :

3ஆவது மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு.

தொலைபேசி : 23861

[ஸ்தாபிதம் : 1940]

வித்தியோதயம்

Vidyodayam

1976-77-78

இணை இதழாசிரியர்கள்:

ச. அருட்சோதி

நா. வரதராசா

தமிழ் மன்றம்

இலங்கைப் பல்கலைக் கழகம், வித்தியோதய வளாகம்,

நுகேகொடை.

THAMIL MANTRAM

UNIVERSITY OF SRI LANKA, VIDYODAYA CAMPUS,

NUGEGODA.

ஆயிரத்துத் தொளாயிரத்து
எழுபத்தேழாம் ஆண்டு
ஆவணித் திங்களிலே
தர்மமாம் பௌத்தநெறி
தனைக்கு மிந்நாட்டில்
உதித்த அதர்ம
உணர்வு வெள்ளத்திலே
உயிரைப் பறிகொடுத்த
உத்தமச் செம்மல்கட்கு
இம்மலர் சமர்ப்பணம் !

With the best Compliments

of

Lankan Foreign Trades

28—½, BOGALA BUILDING,
JANADHIPATHI MAWATHA,
(QUEEN STREET)

COLOMBO-1

● EXPORTERS OF LANKA PRODUCES ●

Greetings from the Patron

It gives me great pleasure to felicitate the Tamil Manram of our Campus and its members on the occasion of the third Tamil Festival.

The Tamil medium students of our Campus are in the Faculty of Management studies and their relationship with the Sinhala Students illustrates the positively congenial atmosphere that national amity and understanding can bring about.

I am happy to note that the Manram's Annual is a much awaited publication among Tamil medium Commerce Students.

With regards

Professor July de Silva
President,
Vidyodaya Campus, Nugegoda.

வித்தியோதயத்துக்கு

எமது வாழ்த்துக்கள்!

↓

சன்சயின்

சோப்

25 மேல் உறைக்கு
ஒரு அப்பியாசக் கொப்பி
அன்பளிப்பு.

இன்றே சன்சயின் சோப்பை
பிரயோசனப்படுத்துங்கள்.

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

துணைக் காப்பாளரின் ஆசியுரை

வித்தியோதய வளாகத்தில் தமிழ் மொழி மூலம் பயிலும் மாணவர் தொகை மிகக் குறைவாக இருந்தும் 'வித்தியோதயம்' எனும் சஞ்சிகையை வருடா வருடம் எமது மாணவர்கள் அனுகூலமாக வெளியிடுவது போற்றத்தக்க காரியமாகும். இச் சஞ்சிகையில் இருக்கும் கட்டுரைகளின் சாரமும், தரமும் வேறு கல்வி நிறுவனங்களின் மாணவர் சங்கங்களால் வெளியிடப்படும் சஞ்சிகைகளிலும் பார்க்க மிக உயர்ந்ததென்றே கூறவேண்டும். முன்னர் வெளியிடப்பட்ட "வித்தியோதயம்" சஞ்சிகைகளும், இம் முறை வெளியிடப்படும் சஞ்சிகையும் இதற்குச் சான்றாகும். அத்துடன் இந்த சஞ்சிகையை நிர்வாகம், வணிகம் சம்பந்தமான கல்வி பயிலும் வெளி மாணவர் பணம் கொடுத்து வாங்க ஆண்டுதோறும் ஆர்வமாக இருக்கின்றார்கள். ஆயினும் அவர்களின் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்வதற்கு இச் சஞ்சிகைக்குச் சில சமயம் பற்றாக் குறையும் நிலவுகின்றது.

இவ்வருடம் தொடக்கம் எமது வளாகத்திற்குப் புதிய தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்படாததன் விளைவாக இம் முறை சஞ்சிகை வெளியீட்டுச் செலவுக்கு எமது அங்கத்தினர் பெரிதும் கஸ்டப்படுகின்றனர். இது ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகவும் இருக்கின்றது. எமது தலைவர்களுக்கு வித்தியோதய வளாகத்திலுள்ள தமிழ் மொழிமூல பயிற்சி நெறிகளின் முழு விபரமும் தெரியாததனாலேயே இந் நிலை ஏற்பட்டிருக்கின்றது என்று நாம் விளங்கவேண்டியதாக இருக்கின்றது. இவ்வளவு காலமும் வித்தியோதய வளாகத்தில் தமிழ் மொழி மூலம் முகாமை, வணிக, நிர்வாக போதனை நடைபெறுவது தமிழ்மொழிமூலக் கல்வியில் ஆர்வமுள்ள சில வெளியாருக்குத் தெரியாமல் இருப்பதென்பது கவலைக்குரிய விடயமாகும்.

வணிகம் என்பது முற்காலம் தொடங்கி வியாபாரத்துடன் சம்பந்தப்பட்டதாக இருந்து வந்துள்ளது. மற்றைய கல்வி நிலையங்கள் வணிக பயிற்சி நெறிகளைப் போதிக்கும் போது வணிகம், பொருளியல், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கல்வி நெறிகளை நடாத்துகின்றார்கள். வித்தியோதய வளாகம் ஒன்றிலேயே வணிகம் என்பது முகாமைப் பீடத்தின் ஒரு பகுதியாக இருந்து வணிகம், முகாமை, நிர்வாகம், ஆகிய வற்றை ஒன்றுடனொன்று இணைந்தவை என்று காட்டும் முறையாகப் பாடங்கள்

அமைந்துள்ளன இது ஒரு புதிய அணுகு முறையாகும் முறையாகச் சில சிறப்பியல்ப் பாடங்களாகிய உற்பத்தி முகாமை, நிதி முகாமை, சந்தைப்படுத்தல் முகாமை, ஆளணி முகாமை, பொது நிர்வாகம், வியாபார நிர்வாகம், அமைப்பின் உளவியல், நிகழ்ச்சித் திட்ட மதிப்பீடு ஆகியவை போன்ற தற்கால வணிகத்துக்கும் முகாமைக்குரு அத்தியா வசியமான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இது எமது ''வித்தியோதயத்தி'' லிருக்கும் கட்டுரைகளிலிருந்து தெளிவாகப் புலனாகும்.

ஆகவே எமது வருங்கால முகாமை, வணிகக் கல்வி அபிவிருத்தி சம்பந்தமாக அக்கறையுடையோர் எடுக்கும் எந் நடவடிக்கைகளும் இதை அடிப்படையாகக் கொண்டு, மற்றைய இடங்களில் இருக்கும் வரையறைகளையும் சிந்தித்துத் தீர்மானம் எடுப்பின் கல்வி அபிவிருத்தியையும், முகாமை வணிக அறிவையும் வளர்க்கலாம்.

வித்தியோதயம் தொடர்ந்து ஆண்டுதோறும் வெற்றிகரமாக வெளியிடப்பட வாழ்த்துகின்றேன்!

சி. மாணிக்கவாசகர்
சிரேஷ்ட வணிக விரிவுரையாளர்.

பெரும் பொருளாளரிடமிருந்து . . . . .

"வித்தியோதயம்" மூன்றுவது இதழ் வெளியாகின்றது. இது எமது தமிழ் மன்ற மாணவர்களின் தொடர்ச்சியான ஆர்வத்தையும் செயற்றிறனையும் எடுத்துக்காட்டுகின்றது.

"வித்தியோதயம்" என்னும் இச் சஞ்சிகை எமது மன்ற அங்கத்தவர்களின் திறமைக்கான சான்றாக இருக்கும் அதே வேளையில் பல்கலைக்கழகப் புகுமுக மாணவர் நிலையில் இதன் இதழ்கள் ஒவ்வொன்றுமே இன்றியமையா உசாத்துணை 'நூல்' களாக அமைந்துள்ளமை எனக்குப் பெரும் திருப்தி அளிக்கின்றது.

தமிழின் வளர்ச்சி பன்முகப்பட்ட அறிவுத்துறைகளை தமிழிலே எடுத்து கூறுவதிற்றான் தங்கியுள்ளது.

வித்தியோதய வளாகம்,
நுகேகொடை
10-03-1978.

கார்த்திகேசு சிவத்தம்பி
இணைத்தமிழ்ப் பேராசிரியர்

ஸ்தாபகர் : **எம். பி. பரமேஷ்**

10ஆவது ஆண்டு விழா!

பரமேஷ்-கோணேஷ்

புரொடக்ஷன்ஸ்

எம். பி. பரமேஷ்

மாலினி பரமேஷ்

ஆகியோருடன் 23 கலைஞர்கள்

பங்குபற்றும்

"இசைத் தென்றல்"!

எம். பி. பரமேஷ். மாலினி பரமேஷ்

பாடிய 14 பாடல்கள் கொண்ட

L P. இசைத்தட்டு வெளிவருகின்றது.

விலை ரூபா 68-00.

எம். பி பரமேஷ் பாடிய

14 பொப் இசைப் பாடல்கள் கொண்ட

மற்றுமோர் LP இசைத்தட்டு

ரூபா 54-50இல் வெளிவருகின்றது.

பாடல்களை இயற்றியவர், இசையமைத்தவர் :

திருகோணமலை எம். பி. பரமேஷ்

ஸ்தாபகர் : **எம். பி. கோணேஷ்**



ஸ்தாபகர் : **எஸ். இ. மகேஷ்**

பதிய இசைத் தட்டுக்கள்

இந்திய தமிழ். ஹிந்தி

இசைத்தட்டுக்கள்

விற்பனைக்குள்ளன.

எம். பி. பரமேஷ்

அவர்களின் சிறந்த

இசையமைப்பில் உங்கள்

பாடல்களை இசைத்தட்டில்

வெளியிட ஆவலா?

இதுவரை பிரபல்யமாகாத

பல புதிய பாடகர்களின்

104 பாடல்களை 10LP

இசைத்தட்டுக்களில்

வெளியிடவுள்ளோம்.

ஆர்வமுள்ளவர்கள்

விபரங்களுக்குத் தொடர்பு

கொள்ளவும்.

பரமேஷ்-கோணேஷ்

புரொடக்ஷன்ஸ்,

9, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

அறிவிப்பாளர் : **K. T. செல்வகுமார்**

Message from Dean of the Faculty

It is with great pleasure I write this short message to the third issue of the annual magazine "Vidyodayam" published by the Tamil Mantram of the Vidyodaya Campus. The articles on Commerce, Economics, Law, Accounting etc. can be of great benefit to the Tamil students as well as to the interested general reader.

I congratulate to the Tamil Mantram on its praiseworthy effort and wish continuing success of the magazine.

K. A. Munasinghe

Acting Dean,
Faculty of Management Studies
and Commerce.
08-03-78.

அன்பளிப்பு!

சேகர் மோட்டோர்ஸ்

118, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ
ஸ்ரீமதே இராமாநுசாய நம
வெங்கடேஸ்வரா

இராமாநுசர் வணக்கம்

பூமன்னு மாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த
பாமன்னு மாறன் அடிபணிந்துய்ந்தவன் பல்கலையோர்
தாம்மன்ன வந்த இராமானுசன் சரணு விந்தம்
நாம்மன்னி வாழநெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே
—திருவரங்கத்தமுதனார்.

எங்கும் புகழ்பெற்ற ஈஸ்வரி புடைவைகட்கும், மற்றும் சாய்ப்புச் சாமான்கள், பாடசாலை உபகரணங்கள், இன்னும் உங்கள் தேவைகளுக்குரிய பொருட்களையும் நயமாகப் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

தலைமை நிலையம் :
நாதன் அன் கோ.
102/3, முதலாம் மாடி,
மூன்றாம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

வெங்கடேஸ்வரா
25, நவீன சந்தை (மேல்மாடியில்),
யாழ்ப்பாணம்.

Message from the Head of the Department.

It gives me great pleasure to send cordial greetings and a message on the occasion of the third issue of VIDYODAYAM, the Journal of the Tamil Mantram of the Vidyodaya Campus organised by the Tamil students of this department.

The students in the Tamil stream have been very active in both academic and extra-curricular activities of the Campus. Among their many and varied activities, the publication of this Journal is a very encouraging and commendable one. I am proud to record here that as a publication of students attached to a single academic department of the Campus, VIDYODAYAM has been the only journal that has appeared regularly over the last three years. The Tamil Mantram deserves our congratulations for this effort.

VIDYODAYAM is a valuable addition to the very limited supply of indigenous reading materials in the field of Commerce. I hope the journal will continue to appear with articles of quality and relevance in the various disciplines it serves.

I wish VIDYODAYAM every success.

Department of Commerce,
Vidyodaya Campus,
Nugegoda.

Hema Wijewardena
Head, The Department of Commerce.

வித்தியோதயத்துக்கு எமது ஆசிகள்!

↓

றேடியோ, ரேப்றெக்கோடர், மற்றும் சகலவிதமான மின்சார உபகரணங்களையும் திருத்திக் கொடுப்பதில் நிபுணத்துவம் பெற்றவர்கள். அத்துடன் தரமான, நாகரீகமான அன்பளிப்பு பொருட்களையும், சிறுவர் விளையாட்டுப் பொருட்களையும், மலிவான விலையில் வழங்குவதில் முன்னணி வகிப்பவர்கள்.

↓

கீதன் ரேடேர்ஸ்

610|1, பருத்தித்துறை புதிய வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்.

எமது நல்லாசிகள்!

சகல கடைச்சல் வேலைகளும்
சிறந்த முறையிலும், குறைந்த செலவிலும்
உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

தேவி கடைச்சல் தொழிற்சாலை

107, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர் தரும் செய்தி

நவீன வர்த்தக உலகியல் நமது நாட்டுத் தமிழ் மக்களின் வர்த்தக அறிவும் வளர வேண்டுமெனும் பெருநோக்குடன் முதலிரு சுடர்களிலும் அறிவொளி பரப்பிய ''வித்தியோதயம்'' இம்முறையும் பல இன்னல்களின் மத்தியில் மூன்றுவது அறிவுச் சுடராக உருவெடுத்து, உங்கள் அன்புக் கரங்களில் தவழ்வதைக் கண்டு பூரிப்படை கின்றேன்.

ஐம்பத்திரண்டு தமிழ் பேசும் மாணவர்களின் பெருமுயற்சியினால் 1974ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 19ஆந் நாள் உதயமான எமது மன்றம் நாலாவது வயதை யடைந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் கூட, மன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஐம்பத் தொன்பதுக்கே அதிகரித்துள்ளது. ஏனைய வளாகத் தமிழ் மன்றங்களுடன் ஒப்பு நோக்குகையில் எமது தமிழ் மன்றம் குறைந்த எண்ணிக்கை யுடைய அங்கத்தவர் களைக் கொண்டிருப்பினும் அதன் தமிழ்ப்பணி எவ்விதத்திலும் குறைந்துவிடவில்லை. இவ்வகையில் இம்மலர் வெளியிடுவதற்கும், விழா எடுப்பதற்கும் எமது ஒவ்வொரு அங்கத்தவரின் பணியும் இன்றியமையாததாயிற்று.

இலங்கைப் பல்கலைக்கழக வளாகங்களில் எமது வளாகத்தில் மட்டுமே ஆறு பாட நெறிகளைக் கொண்ட முகாமைப்பீடம் சகல வசதிகளையும் கொண்டு அமைந் துள்ளது. வருடாவருடம் ஆயிரக் கணக்கான மாணவர்கள் இம் முகாமைப் பீடத்திற்கு அனுமதிக்கப்படும் வேளையில், தமிழ் மாணவரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப் பது கவலைக்குரியது. சென்ற ஆண்டு அனுமதி வழங்கப்பட்டிருந்த பதினான்கு தமிழ் மாணவர்களும் குறுகிய நேர அறிவித்தலுடன் இரு வேறு வளாகங்களுக்குத் திருப்பி யனுப்பப்பட்டார்கள். பரிதாபம்! இக் குறைவான எண்ணிக்கையினரின் அனுமதி கூட மறுக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழில் முகாமைக் கல்வி பெறும் பெரு வாய்ப்பை எமது எதிர்காலச் சந்ததி இழந்துவிட்டது.

எவ்விடர் வரினும் ''தமிழ்ப் பணி செய்வோம்'' ''தமிழை வளர்ப்போம்'' என்ற உயரிய நோக்குடைய செயற்குழு உறுப்பினர் உதவியுடன் இதழாசிரியர்களின் இடை யறா ஆக்கபூர்வமான முயற்சியினால் உதிக்கும் ''வித்தியோதயம்'' வாசகர்களாகிய உங்கள் மத்தியில் செல்வாக்குப் பெற வேண்டும் என வாழ்த்தும் இவ்வேளையில், தமிழ் மன்றத்தைப் பொறுப்பேற்றுத் தொடர்ந்து தமிழ்ப்பணி புரியக் காத்திருக்கும் என் னருமைத் தோழர்களை வாருங்கள் — வந்து நற்றமிழ்ப் பணி புரியுங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன்,

வாழ்க தமிழ்! வளர்க வித்தியோதய வளாகத் தமிழ் மன்றம்!

நன்றி!

மு. சுப்பிரமணியம்
தலைவர்

அன்பளிப்பு!

உங்கள் உற்பத்திப் பொருட்களை விற்கவேண்டுமா?
உங்களுக்குத் தேவையான பாவனைப் பொருட்களை
வாங்கவேண்டுமா?
இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

எஸ். பி. சாமி அன் கம்பனி

72, 4ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு–11.
தொலைபேசி : 22640

193, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7025

வாழ்த்துக்கள்!

அழகிய தங்க நகைகளுக்கு
சி. செல்லையா அன் சன்ஸ்
ஒருமுறை விஜயஞ் செய்தாவ்
உண்மை விளங்கும்
இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

சி. செல்லையா அன் சன்ஸ்
222, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Space Donated
by

PRINCE
Photographers
Sir. Pon. Ramanathan Road,
CHUNNAKAM.

உப தலைவரின் செய்தி

பிறந்தோம் – வாழ்ந்நோம் – இறந்தோம் என்றில்லாமல் நாமும் தமி ழால் வாழ்கிறோம் என்ற ஆன்ம திருப்தியை, நீங்கள் எமது 'வித்தியோதயத்தை' புரட்டும் சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொள்கிறோம்.

'மலர் வளர வாழ்த்துகிறேன்' என ஓரிரண்டு வார்த்தைகளில் கூறி கீழே ஒரு கையெழுத்துப் போட்டுவிடலாம். ஆனால் அப்படிச் செய்வது என்னை நான் மறைத்துக் கொள்வதாகும். ஏனெனில் எமது மலர் ஏதோ ஒரு துறையில் புகழுக்குரியதாகிவிட்டதால், அதைப்பற்றி அறிய அக்கறையுள்ள பலர் ஆவலாக இருப்பர். அவர்களுக்காக நான் ஓரிரண்டு வார்த்தைகள் கூறலாமென நினைக்கிறேன்.

இதயத்தை திறந்து வெளிப்படையாகக் கூறினால், எமது மாணவர் எண் ணிக்கையை பொறுத்தளவில் நாம் மிகவும் துர்ப்பாக்கிய சாலிகள். மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்தும் எமது முயற்சியைப் பல கலைகளிலும் பாயவிட்டு அதன் வெளிப்பாடாக எமது கலைவிழாவை ஆண்டுதோறும் நடாத்தி வருகிறோம்.

இம்மலரின் பணியில் நாம் பெறுகின்ற அறிவுத் திருப்தியை விட, சம் பாதித்துக் கொண்ட அனுபவங்கள் உண்மையில் வாழ்க்கையின் ஒளி விளக்கு கள். எத்தனை ரகமான மனிதர்கள் சமுதாயத்தின்—உயர் மட்டத்தில் இருந்து அடிநிலை வரை முற்றுமுழுதாக இல்லாவிட்டாலும் மேலோட்டமாக அறிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இத் தூய பணியின் மூலம்தான் கிடைக்கிறது.

திட்டம், தீர்மானம், கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்தல் என்ற முகாமைத்துவ கொள்கைகளின் பின்னணியில் உற்பத்தியாகிய 'வித்தியோதயம்' எண்ணற்ற புத்திஜீவித நுகர்வோரைத் திருப்திப்படுத்தும் என்ற நம்பிக்கையில் உங்களி டம் இருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

யோசேப் மலன்கோவ்
உபதலைவர்

With the best Compliments

from

Peninsula Group of Companies

25, Stanley Road, JAFFNA.

Phone : 7657

இதழாசிரியர்களின் சிந்தனையிலிருந்து.....

"வணிக நிர்வாகக் கல்வியைத் — தமிழில்
வளமுற வைப்போம் இம் மண்ணில்"

என்ற உயர் இலட்சியத்தை உயிர் மூச்சாகக் கொண்டு செயற்படும் எமது தமிழ் மன்றத்தின் வெளியீடான "வித்தியோதயம்" மூன்றாவது மலரை உங்கள் கரங்களில் தவழவிட்டுள்ளோம். அதன் அழகை, அதன் இதழ்களின் மென்மையை, அதனுள் இருக்கும் தேனினைப் பருகத் துடித்துக் கொண்டிருக்கும் உங்களுடன் சிலவார்த்தைகள்...

"புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவ தில்லை அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்".

பாரதி அன்று கூறினான். இன்று அது ஒரு தீர்க்கதரிசன உண்மையாகும். மேற்கே வளர்ந்துள்ள—வளர்ந்து வரும் மேன்மைக் கலைகளை —துறைகளைத் தமிழிலும் வளர்க்க வேண்டும். அவைகளை அழகுறச் சொல்லும் திறமையைத் தமிழுக்கு ஊட்ட வேண்டும். இதனைப் பாரதி எடுத்துக் கூறி இத்தனை ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் கூட "தமிழுக்கும் அமிழ்தென்று பேர்", "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று அடி மேலேயே அடிவைக்கும் நம்மவர்கள் அம் மேன்மைக் கலைகளைத் தமிழில் வளர்க்க முன்வரவில்லை. பழம் பெருமை பேசிப் பேசி மகிழ்ந்தோமே ஒழிய பைந்தமிழ் வளர யாது செய்தோம்?

தாய்மொழிக் கல்வியைத் தவமிருந்து பெற்றுப் பல்லாண்டுகள் ஆகியும்கூட இன்று தமிழ் மொழி மூலம் உயர்கல்வி கற்கும் மாணவருக்கு வணிக, நிர்வாக, தொழில் நுட்ப, விஞ்ஞான, கணிதத் துறைகளில் தமிழ்ப் பாடநூல்கள் இல்லாமை, பேரிடராக அமைந்துள்ளது. இதையெல்லாம் நம் "தமிழ் வளம்படுத்தி"களுக்கு நினைத்துப்பார்க்க நேரமில்லை. ஈராயிரம் வருடங்களுக்கு முன் மடித்துவைத்த இராச இராசன் காலத்து ஏடுகளைப் புரட்டிப் புரட்டி இனிமை காண்பதில்தான் அவர்கள் கவனமெல்லாம். தமிழ் இலக்கியத்தை வளர்ப்போன் மட்டும் தமிழை வளர்த்தவனாகிவிட முடியாது. தமிழைப் பல்வேறு துறைகளிலும் வளர்க்க முன்வரவேண்டும். அப்போதுதான் "தமிழை வளர்க்கின்றோம்", "தமிழ் வளர்ந்துள்ளது" என்பவை அர்த்த புஷ்டியுள்ள வார்த்தைகளாக அமைய முடியும். ஆனால் எத்தனை மன்றங்கள் இப்புதிய துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன?

ஒரு சில மன்றங்கள இப் புதிய துறைகளின் வளர்ச்சியில் ஓரளவு அக்கறை செலுத்தினும் அவையும் பூரணத்துவமற்றதாகவே காணப்படுகின்றது. மரபு, ஒழுங்கு என்ற கட்டுக்கோப்புகளைத் தாண்டிப் புதிய திசையில் தமது வளர்ச்சிப் பாதையை அமைக்க விரும்பாமை அவற்றின் பூரணத்துவமின்மைக்கு ஒரு காரணம் எனலாம்.

இம் மலரை விமர்சிக்கும் சிலர் இது ஒரு மலரா அல்லது பாடநூலா என்று அர்த்தமற்ற கேள்வியொன்றைக் கேட்டுவைக்கின்றனர். அதிகரித்துவிட்ட அச்சுச் செலவு. இதன் ஒவ்வொரு இதழ்களின் அருமைப்பாட்டையும், அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றது. இந் நிலையில் அறிவுப் பசிக்கு இரைதேட ஆவலுடன் ஒவ்வொரு இதழையும் புரட்டும் அத்தனை மாணவர்களின் அபிலாசைகளையும், இலக்கியம் என்ற பெயரால் ஏமாற்ற விரும்பவில்லை. அத்தனை மலர்களுமே அதனைத் திருப்பித் திருப்பி எழுதும்போது இவ்வொரு மலராவது அதனை வரையாவிட்டால் எத்தனை தூரம் இலக்கியம் குன்றிவிடும்? இவற்றினை ஏனோ சிந்திக்கத் தவறிவிடுகின்றார்கள்!

மேலும் சிலர் இது ஒரு ''தமிழ் மன்றம்'' வெளியிடும் மலரல்ல. இதனை ஒரு 'வணிக மன்றம்' அமைத்து அதன்மூலம் வெளியிடலாம் என பரிகசிப்பதும் எமது காதில் கேட்கின்றது. இவர்களுக்கு ஒரு தமிழ் மன்றத்தின் பணி அதன் கடப்பாடு என்ன என்பது பற்றிய அறிவு பூச்சியம் என்றே சொல்ல வேண்டும். ''இலக்கியம் செய்வதுதான் தமிழ் மன்றம்'' என்பது இவர்கள் வேதாந்தம். இரக்கப்பட வேண்டும்! ஏடுகளைப் புரட்டி இனிமைகாண்போரின் ஒலியில் செவிகளைத் தீட்டிக்கொண்ட இவர்களுக்கு இச் செய்தியில் முதலில் காட்டிய பாரதியின் பாடல்களைக் கேட்டிருக்க நியாயமில்லைத்தான். போகட்டும்!

இத்தகைய பல்வேறு குறுக்கீடுகளுக் கிடையில் வணிக, நிர்வாகக் கல்விக்கென தூய நறுமணத்தை — தமிழ் மணத்தைப் பரப்பவென மலர்ந்த ''வித்தியோதயம்'' மூன்றாவது மலரை இப்போது உங்கள் கரங்களில் மணங்கமழ வைத்துள்ளோம். தமிழுக்கு முற்றிலும் புதிய துறைகளான கணக்கியல், முகாமையியல், கிரயவியல், கணக்காய்வு, சட்டம் போன்ற துறைகளுக்கு முதன்மை அளித்துள்ளோம்.

எமது முதலிரு மலர்களுக்கும் அறிஞர்கள், வணிகர்கள் ஆகியோரிடம் இருந்து கிடைத்த வரவேற்பு—குறிப்பாக மாணவ சமுதாயத்தில் இருந்து கிடைத்த அமோக வரவேற்பு எம்மைப் பிரமிக்க செய்ததுடன், மேன்மேலும் உற்சாகப்படுத்தி எம்மை இப்பணியைத் தொடரத் தூண்டிற்று. மாணவர்களின் தரச் சிறப்பு மிக்க படைப்புக்கள் இம்மலருக்கு புது மெருகூட்டுகின்றன. வளர்ந்துவரும் மாணவ சமுதாயத்தின் அறிவுப் பசிக்கு இதைவிட நாம் அளிக்கக்கூடிய போஷாக்கு வேறு இருக்க முடியாதென்றே நம்புகிறோம்.

பிற மொழியில் உள்ள ''நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'' எனும் எமது பெருவிருப்பின் நிறைவேற்றலே, எமது பதில் பீடாதிபதி அவர்களின் கட்டுரையினை மொழிபெயர்த்து இம்மலரில் அளித்துள்ளோம்.

''வித்தியோதயத்துக்கு எழுதுங்கள்'' என நாம் விரிவுரையாளர்களிடமும், மாணவர்களிடமும் வேண்டியபோது, எமக்கு வந்து சேர்ந்த ஆக்கங்களோ ஏராளம், ஆனால் அவை எல்லாவற்றையும் பிரசுரிப்பதற்கு இம்மலர் இடம் கொடுக்கவில்லை. இதனால் பல மாணவர்களது—ஏன் சில விரிவுரையாளர்களது கட்டுரைகளைக்கூட நாம் அச்சேற்ற முடியாமல் போனமைக்காக வருந்துகின்றோம்.

மலருக்கு அழகூட்டினோம்! மணம் சேர்த்தோம்! இப்பொழுது உங்கள் கரங்களில் மணங்கமழ விட்டுள்ளோம்! எமது பணி நிறைவேறியது! மலரை நுகர்ந்து பயன் பெறுவது உங்கள் கடமை. மலரை இதழ் இதழாகப் புரட்டுங்கள்! ஒவ்வொரு இதழ்களிலும் உங்கள் அறிவுப் பசிக்கு வேண்டிய ஊட்டச் சத்துமிக்க உணவுகள் கிடைக்கும்!

''வித்தியோதயத்தின்'' கதிரொளிகள் உங்கள் அறிவுச் சுடரைப் பிரகாசிக்கச் செய்யட்டும்!

ச. அருட்சோதி
ந. வரதராசா
(இணை இதழாசிரியர்கள்)

G. A. Q., B. A.

First in Law, LL. B.

First in Commerce, B. Com.

I. A. B., I. A. A. (Part I & II),

G. C. E. (O/L - A/L.).

கலை, விஞ்ஞான, வர்த்தக பாடங்களுக்கு

The Jaffna Law Centre

தலைமை அலுவலகம் :
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை :
B. M. C. ஒழுங்கை,
(வெலிங்டன் தியேட்டர் சந்தி)
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு : மேற்படி துறைகளுக்கு தபால் கல்விச்சேவையும் நடாத்தப்படுகின்றது.

உதயத்தில் மலர்ந்தவைகள் . . . . .

தலைப்பு	தந்தவர்	தாள் இடம்
கணக்கியல் :		
மூலதனத் திட்டங்களின் இலாப இயல்பு முறைகள்	டி. ரி. இராஜரட்ணம்	37— 39
ஒன்றித்த கணக்குகளும் கம்பனிச் சட்டமும்	ச. தம்பிப்பிள்ளை	87— 89
கணக்கீடும் கணக்கீட்டுக் கற்பிதங்களும்	க. முருகேசு	107—110
கணக்கியலில் சில நுண்ணாய்வுகள்	எஸ். இராசதுரை	159—167
முகாமையியல் :		
முகாமையில் அதிகாரக் கையளிப்பு — ஒரு கண்ணோட்டம்	செல்வி மீரா சவுரிமுத்து	73— 77
சந்தைப்படுத்துதற் திட்டமும் அதன் முக்கியத்துவமும்	வ. அன்ரனி	127—136
வணிகவியல் :		
வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயுள்ள உறவு முறை	இ. பாலசிங்கம்	1— 14
ஏற்றுமதி இறக்குமதியில் வர்த்தக மாற்று வீதத்தின் தாக்கம்	து. சந்திரகுமார்	181—186
பொருளியல் :		
இரட்டை அமைப்பும் பொருளாதார அபிவிருத்தியும்	கலாநிதி வி. நித்தியானந்தம்	17— 34
கைத்தொழிற்துறை — பொருளாதார அபிவிருத்தியில் அதன் பங்கு	எம். யூ. எம். ஸனூஸ்	67— 70

குறைவிருத்தி நாடுகளின் இறைக் கொள்கை — கே. எஸ். நடராசா — 79—85

இலங்கையின் வேலையின்மையின் நோக்கும் வேலை நிறைவுக் கொள்கையின் பங்கும் — சி. சிறீஸ்கந்தராசா — 91—105

பொதுத்துறை நிறுவனங்களில் விலையிடற் கொள்கைகள் — கே. ஏ. முன்சிங்க — 113—125

சுதந்திர வர்த்தக வலையம் —ஓர் அறிமுகம் — இ. இராசசுந்தரம் — 139—143

இலங்கையில் விவசாயத்துறை தொடர்பான போக்குவரத்து முயற்சியும் சந்தைப்படுத்தலும் — கலாநிதி க. சுந்தரலிங்கம் — 145—155

இலங்கை நாணயத்தின் மீள் மதிப்பீடு — மொஹமட் இல்லியாஸ் — 169—178

அரசியல்:

1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் முடிவுகள் — ஒரு கண்ணோட்டம் — ஆர். ஜெயரத்தினராசா — 43—63

சிறுகதை:

"அம்மா" — என். சரவணபவன் — 199—204

சட்டவியல்:

கம்பனிகள் சட்டம் — செ. தங்கராஜா — 207—228

மன்றச் செய்தியும் மரபும்

With the Best Compliments

from

Dehiwela Medical Stores

194, GALLE ROAD,

DEHIWELA.

T'Phone : 071—7861

அன்பளிப்பு!

உங்களுக்குத் தேவையான
ஆங்கில மருந்து வகைகளை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

சிங்கம்ஸ் பார்மஸி

25, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

The Best Wishes

General Suppliers,
Commission Agents,
Dealers in Leather Goods.

Universal Agencies

134, ELIE HOUSE ROAD,

COLOMBO-15.

Phone ; 35747

வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயுள்ள உறவு முறை

இ. பாலசிங்கம், A. I. B. (Lond.)
Dipl. Shipping (Lond.)
வங்கிப் பரிசோதகர் – மத்திய வங்கி
பகுதி நேர விரிவுரையாளர்
வித்தியோதய வளாகம்

வங்கி :

வங்கி என்ற சொல்லை ஆராயும் பொழுது இதற்கு சட்டரீதியாக ஒரு முறையான வரைவிலக்கணம் கொடுக்கப் படவில்லை. இலங்கை மாற்றுண்டியல் சட்டத்தை ஆராய்ந்தால் இதில் **வங்கித் தொழில்** என்ற சொற்களையே உள் ளடக்கி யுள்ளது. எனினும் இத்தகைய சொற்களுக்கும் இச் சட்டம் ஒரு வரை விலக்கணம் கொடுக்கவில்லை. எனவே இச் சட்டத்தைப் பொறுத்தவரை வங்கி தொழி லில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் எவ் வெவ் தொழில்களில் ஈடுபட்டு இருக்கின் றனவோ அத் தொழில்களையே வங்கித் தொழில்களாகக் கொள்ள வேண்டியுள் ளது. கம்பனிச் சட்டமோ நாணயச் சட்டமோ **வங்கி** என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் கொடுக்கவில்லை. கம்ப னிச் சட்டம் **வங்கித் தொழில் கம்பனி** என்பது காசோலை, உண்டியல், கட்டளை என்பவற்றின் மூலமாக திரும்பப் பெறுவதற்கு உட்பட்ட நடைமுறைக் கணக்கில் அல்லது வேறு விதத்தில் பண வைப்புக்களை ஏற்பதை தனது பிரதான தொழிலாகக் கொண்டுள்ள ஒரு கம்பனி யைக் குறிக்கின்றது. அத்துடன் கம்பனிச் சட்டம் மேலே கூறப்பட்ட தொழில்க ளுடன் அச் சட்டத்தின் பகுதி 33 3(1) — (7)இல் கூறப்பட்டுள்ள தொழில்கள் எவற்றிலேனும் ஈடுபடலாம் எனவும் கூறு கின்றது.

நாணய சட்டத்தில் **வங்கி** என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் கொடுக்கப் படாதிருப்பினும் **வங்கி நிறுவனம்** என் பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. வங்கி நிறுவனம் என்றால் :

(i) வர்த்தகவங்கிகள்

(ii) அரசாங்கத்தின் முகவராகவோ அல்லது வேறு எவ்விதமாகவோ இயங்கி வைப்புக்களைப் பெற்றோ அல்லது கடனைக் கொடுத்தோ இயங்கும் ஒரு நிறுவனம்.

(iii) நிதிமந்திரியினால் ''வங்கி நிறுவனம்'' என பிரகடனப் படுத்தப் பட்ட ஏதாவதொரு நிறுவனம்.

இதே சட்டம் **வர்த்தக வங்கி** என்பதற்கு பின்வரும் வரைவிலக்கணத்தைக் கொடுக்கிறது :

தனிப்பட்ட ஒரு ஆள் அல்லது ஆட்களைக் கொண்ட ஒரு உறுப்பானது இலங்கையில் மத்திய வங்கி நீங்கலாக பொது மக்களிடம் இருந்து கேள்வி வைப்புக்களை ஏற்று அல்லது உருவாக்கி தொழிற்படுமாயின் அது ஒரு வர்த்தக வங்கியாகும்.

வங்கித் தொழிலைப் பொறுத்த வரையில் மிக முக்கியமான சட்டம் நாணயச் சட்டமே. ஆகவே இலங்கையில் **வங்கி** எனப்படும் பொழுது அது ஒரு **வர்த்தக வங்கியையே** குறிக்கும். எனவே இக் கட்டுரையில் இவ்வாறான வர்த்தக வங்கிகளுக்கும் வாடிக்கை யாளர்களுக்கும் இடையேயான உறவையே ஆராயமுனையப் பட்டுள்ளது.

வாடிக்கையாளர் :

வாடிக்கையாளர் எனும் பதத்துக்கான கருத்தை ஆராயும்பொழுது அது வங்கிகளைப் பொறுத்தவரை முக்கியமானதாகத் தோன்றுகிறது. இந் நாட்டில் உதாரணமாக இலங்கையில் சில வங்கிகளே இயங்குகின்றபொழுதும் அவற்றின் வாடிக்கையாளரோ பல்லாயிரக் கணக்கில் இருக்கின்றனர். வங்கிகள் சார்பான சட்டங்கள் **வாடிக்கையாளர்** என்ற பதத்துக்கு வரைவிலக்கணம் கொடுக்கவில்லை. எனவே வங்கியுடன் தொடர்பு கொண்டுள்ள எல்லோரையுமே வாடிக்கையாளர் எனக் கொள்ளலாமா என்பது கேள்விக் குரியதொன்றாகும். ஒரு வங்கியில் நடவடிக்கைகள் செய்வதற்காக பலர் தினமும் அவ் வங்கிக்கு செல்கிறார்கள். அவ்வாறு வங்கியுடன் நடவடிக்கையில் ஈடுபடும் எல்லோருமே அவ்வங்கியின் வாடிக்கையாளர் எனக் கொள்வது முறையாகுமா என்பதை ஆராயவேண்டும். இதற்கு ஆதாரமாக மாற்றுண்டியல் சட்டத்தில் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலையைப்பற்றிய பகுதியில் **வாடிக்கையாளர்** என்ற சொல்லுள்ளது. அவ்வாறு அச் சட்டத்தில் அமையப் பெற்றுள்ள இச் சொல்லை ஆராயும்போது வாடிக்கையாளர் என்பதற்கு பின்வரும் இரண்டிலொரு வரைவிலக்கணமே பொருந்தும் எனக் கொள்ளலாம்,

(i) ''ஒரு வங்கியில் ஒரு கணக்கை ஆரம்பித்துள்ள ஒருவர்''

(ii) ''ஒரு வங்கியில் ஒரு கணக்கை ஆரம்பித்து அக் கணக்கைப் பாவித்து வந்துள்ள ஒருவர்''

மேலே கூறப்பட்ட வரைவிலக்கணங்களில் ஏதாவது ஒன்றே சரியாக இருக்க வேண்டும். இவற்றை மீண்டும் ஆராயும் பொழுது சட்டரீதியாக தொடர்பை உண்டாக்குகின்ற நிலையில் ஒருவர் ஒரு வங்கியில் வாடிக்கையாளராக இருக்கலாம் எனக் கொள்ளலாம். ஆகவே மேலே கூறப்பட்டுள்ள வரைவிலக்கணம் (i)இல் உள்ள கூற்றே பொருத்தமாக உள்ளது எனினும் வாடிக்கையாளர் என்பதற்கு சாதாரணமான வழக்கத்தில் ஏதாவது ஒரு வியாபார நிலையத்துடன் வழமையாக தொடர்பு கொண்டுள்ள ஒருவர் ஒரு நிறுவனத்தின் வாடிக்கையாளர் எனக் கொள்வது முறை. எனவே பின்வரும் நிலைகளில் ஒரு வங்கியுடன் தொடர்பு கொள்ளும் ஒருவரை சாதாரண வழக்கப்படி **வாடிக்கையாளர்** எனக் கொள்வது முறையாகுமா.

1. பலமுறை ஒரு வங்கிக்கு சென்று காசோலைகளை மாற்றி, அவ் வங்கிக்குத் தெரிந்த ஒருவர்

2. ஒரு வங்கியில் கணக்கை ஆரம்பித்த நிலையில் உள்ள ஒருவர்.

3. ஒரு வங்கியில் கணக்கை ஆரம்பித்து அதைப் பலகாலம் பாவித்துள்ள ஒருவர்,

இவற்றை ஆராயும் பொழுது எழுத்து மூலச் சட்டங்களினூடாக இவற்றிற்கு முறையான ஒரு தீர்வைக்காண முடியாது. வழக்கு மூலச் சட்டங்கள் மூலமே இவற்றுக்கு முறையான ஒரு தீர்வை காணக் கூடியதாக வுள்ளது. Great Western Railway V London & County Bank (1901) என்ற வழக்கில் மாற்றுண்டியல் சட்டத்தில் **வாடிக்கையாளர்** என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் இல்லாத பொழுதிலும் இப்பதம் பிரசித்தம் வாய்ந்த தொன்றாக இருக்கின்றபடியால் ஒருவரை ஒரு வங்கியின் வாடிக்கையாளர் எனக் கொள்வதற்கு அவருக்கு அவ்வங்கியில் ஒரு நடைமுறைக் கணக்கு அல்லது ஒரு வைப்புக் கணக்கு அல்லது அது போன்ற உறவுமுறை இருத்தல் வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ் வழக்கில் முக்கியமாக ஆராயப்பட்டது என்னவெனில் ஒரு வங்கியில் வழமையாக காசோலைகளை மாற்றும் ஒருவர் அவ்வங்கிக்கு அறிமுகமானவராக இருந்தாலும் அவர் அவ்வங்கியின் வாடிக்கையாளரா என்பதேயாகும். மேலே விபரிக்கப்பட்ட தீர்ப்பின்படி அவ்வாறான ஒருவர் வாடிக்கையாளராக இருக்க முடியாது என்பதேயாகும்.

அடுத்து ஒருவர் கணக்கை வங்கியில் ஆரம்பித்த உடனே அவ்வங்கியின் வாடிக்கையாளர் ஆகிறாரா? அல்லது அக் கணக்கை பலகாலம் பாவித்தபின்பே வாடிக்கையாளர் ஆகிறாரா என்பதேயாகும். இதற்கான தீர்வு Ladbroke V Todd (1914) என்ற வழக்கில் கூறப்பட்டுள்ளது. இவ்வழக்கில் ஒருவர் ஒரு காசோலையை ஒரு வங்கியில் செலுத்தி அதை வங்கி அவரது கணக்குக்கு ஒன்று திரட்டுவதற்காக எப்பொழுது ஒப்புக் கொள்கிறதோ அப்பொழுதே வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயான தொடர்பு தொடங்குகிறது என்பதாகும். இதன்படி ஒருவர் வாடிக்கையாளர் ஆவதற்கு வங்கியில் இருந்து தான் முன்பு வைப்பு செய்த பணத்தை (காசோலையோ நாணயமோ) மீளப் பெறுவது முக்கியமல்ல. அவர் செலுத்திய பணத்தையோ காசோலையையோ அவர் ஆரம்பித்துள்ள கணக்கிற்கு வங்கி எப்பொழுது வைப்பாக பெறுகின்றதோ அதேநேரத்திலேயே அவர் அவ் வங்கியின் வாடிக்கையாளராகின்றார்.

மேலே விபரிக்கப்பட்ட 1914ஆம் ஆண்டு வழக்காகிய Ladbroke V Todd என்பதனைத் தொடர்ந்து 1920ஆம் ஆண்டில் Commissioners of Taxation V English Scottish & Australian Bank என்ற வழக்கில் வாடிக்கையாளர் என்ற சொல் குறிக்கும் உறவில் காலம் முக்கியமில்லை. ஆனால் ஒருவரது பணத்தை எப்போது ஒரு வங்கி ஏற்று அதற்கு எதிராக அவன் வரையும் காசோலைகளைச் செலுத்துவதற்கு ஒப்புக் கொள்கின்றதோ அதே நேரத்திலேயே அவன் வங்கியின் வாடிக்கையாளன் ஆகின்றான் என்பதாகும்.

உறவுமுறை :

ஒரு வங்கிக்கும் அதன் வாடிக்கையாளருக்கும் இடையேயுள்ள உறவு சட்டரீதியாக அமையவேண்டும் என்பதை **வங்கி வாடிக்கையாளர்** என்ற சொற்களை ஆராய்வதன்மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாறான உறவு மிகுந்த தத்துவம் வாய்ந்ததும் சிறந்த நடைமுறைகளுக்கு ஒன்றியதுமாக இருக்கவேண்டும்; இவ்வாறான தத்துவத்தையும் நடைமுறைக்கு ஒன்றியதுமான உறவை விளக்கிய பின்பே **வங்கி, வாடிக்கையாளர்** என்ற சொற்களுக்கான முறையான கருத்தை விளங்கக்கூடியதாக இருக்கும்.

வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையிலான உறவு வரலாற்று ரீதி

யாக அபிவிருத்தியடைந்து வளர்ந்த ஒன்றாகும். வங்கித் தொழிலை இங்கிலாந்தில் பொற்கொல்லர் மக்களிடம் இருந்து அவர்களது பணம் மற்றும் அவர்களது பெறுமதி வாய்ந்த திரவியங்கள், முக்கியமாக பொன் போன்றவற்றைப் பாதுகாப்புக்கு பெற்றதில் இருந்தே ஆரம்பித்துள்ளது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டதொழில் சட்ட ரீதியாக **ஒப்பளி ஒப்புக்கொளி (Bailor Bailee)** என்ற முறையிலேயே இருந்தது. இவ்வுறவு முறைக்கு ஒவ்வ பொற்கொல்லர் தம்மிடம் பாதுகாப்பிற்குக் கிடைத்த பணத்தை வட்டிக்கு மற்றையோருக்குக் கொடுக்கமுடியாது. இதற்குச் சான்றாக 1826இல் நடந்த **Hall V Fuller** என்ற வழக்கின் தீர்ப்புள்ளது. இவ்வழக்கில் வங்கி என்பது அதன் வாடிக்கையாளரின் பணத்தை வைக்கும் **களஞ்சியம்** எனக் கூறப்பட்டுள்ளது. இதே போன்று 1830இல் நடந்த **Marzetti V Williams** என்ற வழக்கில் வங்கிகள் தமது வாடிக்கையாளரின் பணத்தைத் தம்முடன் வைத்துள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

மேலே விபரித்துள்ளபடி வங்கிகள் தம் வாடிக்கையாளரிடம் இருந்து வைப்பாகப் பெறும் பணத்தை மற்றையோருக்குக் கடனாக வழங்க முடியாது. இவ்வாறு பாதுகாப்புக்காகத் தொடங்கிய முறை அதே நிலையில் இருந்திருந்தால் வங்கித் தொழில் வளர்ச்சியுற்று இருக்க முடியாது. ஏனெனில் அவ்வாறு ஒப்படைக்கும் பணத்தை அதே நிலையில் வங்கிகள் தம்முடன் வைத்திருந்து திரும்பச் செலுத்தும் நிலையே ஏற்பட்டிருக்கும்.

அடுத்தபடியாக வங்கி ஒரு முகவராக பணியேற்று இருந்தால் அவை தம் முதல்வரின் கட்டளைக்கு ஏற்பவே பணிபுரிந்து இருக்கமுடியும். அவ்வாறான ஒரு முறை ஏற்பட்டு இருப்பின் வங்கிகள் தம் வாடிக்கையாளராகிய முதல்வர்களின் கட்டளைகளுக்கு ஏற்ப இயங்கி அம் முதல்வர்களுக்கு அவர்கள் வைப்புச் செய்த பணத்தின் நிலை, அதனால் ஏற்பட்ட இலாபம் முதலியவற்றைக் காட்டவேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும். ஏனெனில் அவ்வாறான ஒரு உறவு ஒரு நம்பிக்கைப் பொறுப்பை ஏற்படுத்தும். அதன்படி வங்கி தன் முதல்வராகிய வாடிக்கையாளர்களுக்குத் தம் நடவடிக்கைகளுக்கான காரணம்காட்ட வேண்டியநிலை ஏற்படும். இவ்வாறான முறைகளுக்கு முரண்பட்ட வருமதியாளர், சென்மதியாளர் என்ற இன்றைய உறவு முறையை 1848ஆம் ஆண்டு நடந்த **Foley V Hill** என்ற வழக்கின் தீர்ப்பு நிலைநாட்டியது. இவ் வழக்கின் தீர்ப்பின்படி வங்கி வைப்பாகப் பெறும் பணத்தை தனது வாடிக்கையாளர்களிடம் இருந்து கடனாகப்பெற்று அதைத் தான் விரும்பியபடி பாவித்து, ஆனால் வாடிக்கையாளருக்குத் திருப்பிக் கொடுப்பதற்குப் பொறுப்பு உடையது என நிர்ணயிக்கப்பட்டது. இத்தீர்ப்பின்படி வங்கியிடம் செலுத்தப்படும் பணம் வங்கியின் கட்டுப்பாட்டுக்குக் கீழேயே அது தான் விரும்பியபடி பாவித்து அதனால் எழும் இலாபத்தையும் தனதாக்கிச் செலுத்தியவர் கேட்கும்போது அவர் செலுத்திய தொகைக்குச் சமமான தொகையைத் திரும்பக் கொடுப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது என்பதனைத் தெரிந்தே பணத்தை வைப்புச் செய்யும் வாடிக்கையாளராகிய முதல்வர் செய்கின்றார் என்பதேயாகும்.

வருமதியாளர் செல்மதியாளர் உறவு முறை :

Foley V Hill என்ற வழக்கின் தீர்ப்பின்படி வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான உறவு சட்ட ரீதியாக வருமதியாளர் சென்மதியாளர் என்ற போதிலும் அத்துடன் கூடுதலான பல கடப்பாடுகளும் உள என்பது நவீன வங்கித் தொழில் அளிக்கும் சேவைகளில் இருந்து காணக்கூடியதாக உள்ளது. **Foley V Hill** என்ற வழக்கின் தீர்ப்பிலேயே வங்கிகளின் மரபுப்படி வாடிக்கையாளர் வரையும்

உண்டியல்களுக்கு (காசோலை) எதிராக பணம் செலுத்த வங்கிகள் கடமைப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான கூடுதலான சேவைகள் ஒப்பந்த அடிப்படையிலேயே எழுகின்றன. நவீன வங்கித் தொழிலில் வங்கிகள் வாடிக்கையாளர்களின் காசோலைகளை ஒன்று திரட்டுதல் போன்ற செயல்களில் ஈடுபடுதல் வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்தங்கள் மூலமே எழுகிறது எனினும் வருமதியாளர் சென்மதியாளர் என்ற அடிப்படை உறவே வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ளதாகும்.

இன்றைய வங்கித் தொழிலுக்கு அனுசரணையான தீர்வு 1921ஆம் ஆண்டு நடந்த **Joachimson V Swiss Bank Corporation** என்ற வழக்கில் கூறப்பட்டது. இவ்வழக்கின் சாரம் பின்வருமாறு: **Joachimson** என்பது ஜெர்மன் ஆங்கிலப் பங்குதாரர்களைக் கொண்ட ஒரு நிறுவனம். எதிரி வங்கியிடம் இருந்த இந் நிறுவனத்தின் கணக்கு 1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி செலவு மீதியாக இருந்தது. 1919ஆம் ஆண்டு யூன் மாதத்தில் ஆங்கிலேயே பங்காளியினால் இவ்வழக்கு தொடரப்பட்டு அப்பணத்தைப் பங்குடமையைக் கலைப்பதற்காகச் செலுத்தும்படி கோரப்பட்டது. அதற்கு முன்பு அவன் அப்பணத்தை செலுத்தும்படி வேண்டவில்லை.

தீர்ப்பு: வாடிக்கையாளரின் வருமதி அதை அவர்கோருமட்டும் செலுத்த வேண்டியதில்லை. எனவே அவ்வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கூறப்பட்ட மேலதிகத் தீர்ப்பு பின்வருமாறு:

"இவ்வழக்கில் எழும் கேள்வி என்னவெனில் வங்கி வாடிக்கையாளனுக்காக தடைமுறைக் கணக்கை ஆரம்பித்த நேரத்தில் இவர்களுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் யாது? இது ஒரு சாதாரண கடன் ஒப்பந்தம் என்று கூறப்பட்டது. அத்துடன் வங்கி வாடிகையாளர் வரையும் உண்டியல்களுக்கு கணக்கில் உள்ள மீதிக்கு உள்ளாக செலுத்துமதி செய்யக் கடமைப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறான மேலதிகப் பொறுப்பு பிரதான ஒப்பந்தத்தைப் பாதிக்காது எனக் கூறப்பட்டது."

வங்கியானது பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளது. ஆகவே அது செல்மதியாளர்களுக்கு அதைத் திருப்பிக்கொடுப்பதற்குச் சாதாரணமாகப் பொறுப்பாகவுள்ளது. செல்மதியாளர் தான் விரும்பியபோது கடனைத் திருப்பிப் பெறுவதற்கு வழக்குத் தொடரலாம் எனவும் வாதிடப்பட்டது. நீதிபதி இவ்வாறான ஒரு நிலையை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். அவர் கூறியது என்னவெனில் வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே ஒரேஒரு ஒப்பந்தம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது என்பதாகும். இவ்வொப்பந்தம் இருபகுதிகளிலும் பொறுப்பை உண்டாக்குகின்றது. இதை ஆராயும்பொழுது அது பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது. வங்கி பணத்தை ஏற்பதற்கு ஒத்துக்கொள்கிறது. அத்துடன் வாடிக்கையாளரின் கணக்குக்கு அவர்வைப்புச்செய்யும் காசோலை போன்ற உண்டியல்களை ஒன்றுதிரட்டவும் ஒப்புக்கொள்கின்றது, அவ்வாறாகப் பெறும் பணத்தை வாடிக்கையாளர் பொருட்டு நம்பிக்கைக்காக வைத்து இருப்பதற்கு அல்லது அதை வாடிக்கையாளனிடம் இருந்து கடனாகப் பெற்று திரும்பச் செலுத்துவதற்கு ஒத்துக்கொள்கின்றது. அவ்வாறு திரும்பச் செலுத்துவதற்கான வாக்குறுதியானது வங்கியின் எந்தக் கிளையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளதோ அக்கிளையில் வங்கித் தொழில்க் காலத்தில் செலுத்துவதற்கு ஒப்புக்கொள்கின்றது. இவ்வாறான உறுதி வாடிக்கையாளருக்குச் சேரவேண்டிய தொகையில் எவ்வளவிற்கேனும் வாடிக்கையாளரினால் வங்கியின் கணக்குள்ள கிளைமீது வரையப்படும் கட்டளைகளுக்கு எதிராகச் செலுத்துவதை உள்ளடக்குகின்றது. அவ்வாறாக வரையப்

படும் கட்டளைகள் சாதாரணநடவடிக்கைக் காலத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குச் செலுத்தப்படாமல் இருக்குமாதலால் வங்கி வாடிக்கையாளருடன் ஒரு நியாயமான அளவிலான அறிவிப்பு இன்றி வாடிக்கையாளருடனுகிய தொழில் உறவு முறையை நிறுத்தக்கூடாது என்பது ஒப்பந்தத்தில் அடங்கிய ஒரு நிபந்தனையாகும். வங்கி பிழையாக செயல்படுதல் அல்லது மோசடிகளை ஏதுவாக்கல் போன்றவற்றைத் தவிர்ப்பதற்கான முறையில் நியாயமான அளவு கவனத்துடன்தான் எழுதும் கட்டளைகளை வழங்குவதற்கு வாடிக்கையாளர் தன்னைப் பொறுத்த வரையில் ஒத்துக்கொள்கின்றார்.''

இவ்வாருக ஒப்பந்த ரீதியாக ஏற்படும் வருமதியாளர் செல்மதியாளர் என்ற உறவு முறையே இன்றைய வங்கித் தொழிலுக்கு பொருந்துவதாகவுள்ளது. சாதாரணமாக கடன்பட்டோர் தமக்குக் கடன் கொடுத்தோரைத் தேடி அவருக்கு தாம் செலுத்த வேண்டிய பொறுப்பில் இருந்து வங்கிகளுக்கு விதிவிலக்கு கிடைக்கின்றது. அவ்வாறு இன்றி இருந்தால் வங்கிகள் தொடர்ச்சியாக தம் வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரையில் தம் கடமையை நிறைவேற்றத் தவறியவர்களாகக் கருதப்படுவார்கள். அவ்வாறெனில் வாடிக்கையாளர் வங்கிகளுக்கு எதிராக தம் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கென எழுத்தாணையைப் பிறப்பிக்கலாம். **Joachimson V Swiss Bank Corporation** என்ற வழக்கின் தீர்ப்பின்படி வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையில் உள்ள ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனையின்படி வாடிக்கையாளரின் கணக்கு வங்கியின் எந்தக் கிளையில் இருக்கின்றதோ அக் கிளையில் கோரப்படும் வரையும் செலுத்தவேண்டியதில்லை என்பதாகும். அதாவது ஒரு வாடிக்கையாளர் ஒரு வங்கியின் எந்தக் கிளையில் தனது கணக்கை வைத்திருக்கின்றாரோ அக்கிளையில் தனக்கு சேரவேண்டிய பணத்தைக் கோரும் வரையில் அப்பணத்தை அவனுக்குச் செலுத்த வேண்டிய பொறுப்பிலிருந்து வங்கி விதிவிலக்குப் பெறுகின்றது.

ஒப்பந்தத்தின் கீழான கடப்பாடுகள் :

வருமதியாளர் செல்மதியாளர் என்ற அடிப்படையிலான உறவுடன் முகவர் – முதல்வர் என்ற முறையிலான உறவிலுள்ள கடமைகளான நம்பிக்கைப் பொறுப்பு, வாடிக்கையாளரின் கணக்கிலுள்ள நடவடிக்கைகள்பற்றிய செய்திகளை வெளியிடாது பாதுகாத்தல் போன்றவையும் வங்கிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவிலும் கட்டாயமாக இருத்தல்வேண்டும். இவ்வாருன உறவு ஒப்பந்தரீதியாக இவர்களுக்கிடையில் ஏற்படும் உறவில் உள்ளடக்கிய ஒரு உண்மையாகும். இதன்படி வங்கி வாடிக்கையாளரின் கணக்கில் நடைமுறைப்படுத்தப்படும் நடவடிக்கைகள் மற்றும் அவர் வங்கிக்கு கொடுத்திருக்கும் பிணைகள் பற்றிய சொத்துவிபரம் இவைகளை மூன்றும் ஆட்களுக்கு வெளியிடாது பாதுகாத்தல் அவசியமாகும். இத்தத்துவம் **Tournier V National Provincial Bank** என்ற வழக்கில் நிர்ணயிக்கப்பட்டு அதே வழக்கின் தீர்ப்பின்படி பின்வரும் நிலைகளில் ஒரு வங்கியானது தனது வாடிக்கையாளரின் நடவடிக்கைகள் பற்றி வெளியிடலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(i) சட்டத்தின் நிர்ப்பந்தத்தின் கீழ்.

(ii பொது நன்மைகளுக்காக.

(iii வங்கி தனது நன்மைகளுக்காக.

(iv) வாடிக்கையாளரின் ஆணைப்படி (இது எழுத்திலோ அல்லது எழுத்தற்றோ இருக்கலாம்).

காசோலைகளைப் பொறுத்தவரையில் வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு இரு விதமான செயல்களை நடைமுறைப்படுத்துகின்றன. வங்கிகள் வாடிக்கை

யாளரினால் தம்மீது வரையப்படும் காசோலைகளுக்கு எதிராகப் பணத்தைச் செலுத்துகின்ற அதே வேளையில் அவ் வாடிக்கையாளர் தமது கணக்கிற்கு வைப்பு செய்யும் காசோலைகளையும் ஒன்று திரட்டு கின்றன.

காசோலைகள் மீதான செலுத்துமதி :

காசோலைகள் மீதான செலுத்துமதி களைப் பொறுத்தவரையில் வங்கிகள் தம் மீது வரையப்படும் காசோலைகளுக்கு :

1. வாடிக்கையாளரின் கணக்கில் வரையப்படும் காசோலைகளைச் செலுத்துவதற்குப் போதியள வான பணமிருந்தால், அல்லது,
2. வாடிக்கையாளர் தமது கணக்கில் மேலதிகப் பற்று பெறுவதற்கு வங்கி அனுமதி அளித்திருந்தால் ; அத்துடன்
3. காசோலைகள் முறையாக வரை யப்பட்டு இருந்தால்,

பணம் செலுத்துவதற்கு கடமைப் பட்டுள்ளன. எனினும் மாற்றுண்டியல் சட்டமானது பின்வரும் நிலைகளில் ஒரு வாடிக்கையாளரினால் வரையப்படும் காசோலைகளுக்கு பணம் செலுத்தும் பொறுப்பை இழந்து விடுகின்றது எனத் தீர்மானித்துள்ளது :

1. செலுத்துமதி மீதான மாற்று உத்தரவு. அதாவது வாடிக்கை யாளர் தான்வழங்கிய காசோலைக் குப் பணம் செலுத்தவேண்டா மென வங்கிக்கு இடும் கட்டளை.
2. வாடிக்கையாளரின் இறப்புப்பற் றிய அறிவித்தல்.

பின்வரும் நிலைகளும் ஒரு வங்கியை அதன்மீது வாடிக்கையாளரினால் வரையப் படும் காசோலைகளுக்கான செலுத்துமதி யைத் தடைசெய்யும் :

1. வாடிக்கையாளரின் அறிவுக் கோளாறு பற்றிய அறிவித்தல் கிடைத்திருந்தால்.
2. நீதிமன்றத்தால் வழங்கப்படும் எழுத்தாணைகள் பெற்றால். உதா ரணமாகக் காணிசீக் கட்டளை - இவ்வாறான கட்டளை வாடிக்கை யாளர் தமது கணக்கில் இருந்து வரைபுகள் செய்வதைத் தடுக்கும்.
3. ஒரு கம்பனியைப் பொறுத்தவரை அதைக் கம்பனிச் சட்டத்தின் கீழ் ஒடுக்குவதற்கான அறிவித்தல் கிடைத்திருந்தால்.
4. காசோலைகளுக்கெதிராகப் பணத் தைப் பெறுவதற்கு அதை வங்கி யில் சமர்ப்பிப்பவருடைய உரிமை யில் குறைபாடு இருப்பதை வங்கி தெரிந்திருந்தால்.

காசோலைகள் செலுத்துவதைப் பொறுத்தவரையில் அதன் உரிமை, செலுத்தும் வங்கிக்கும் (அதாவது எந்த வங்கியின்மீது காசோலை வரையப் பட்டுள்ளதோ) வரைபவருக்கும் (அதாவது காசோலையை வழங்கிய வாடிக்கையாளர்) இடையிலேயே உள்ளதாகும். ஆகவே ஒரு வங்கியை அதன்மீது வரையப்பட்ட கா சோலையைச் செலுத்தவேண்டாமென அறிவுறுத்தும் உரிமை காசோலையை வரைந்தவருக்கு மட்டுமே உண்டு. எனி னும் ஒரு உண்மையான காசோலையின் உரிமையாளன் அக் காசோலையைத் தான் தொலைத்துவிட்டதாகவோ அல்லது கள வாடப்பட்டு விட்டதாகவோ வங்கிக்கு அறிவித்தல் கொடுத்திருந்தால் அவ்வா றான காசோலைகளுக்கெதிராகப் பணம் செலுத்துமுன் வங்கி வேண்டிய விசாரணை களைச் செய்துகவனமாகஇயங்குதல்அவசிய மாகின்றது. இவ்வாறான நிலைகளில்அநேக மாக வங்கிகள் காசோலைகளை வரைந்தவரி டமிருந்து அறிவுறுத்தல்களைப்பெறுவதற்கு முயலும். உதாரணமாக ஒரு காசோலை காவிக்கு என வரையப்பட்டு இருந்தாலோ அல்லது கட்டளைக்காக வரையப்பட்ட காசோலைகளில் அவை களவாடப்படுவ தற்கு முன்போ அல்லது தொலைவதற்கு

முன்போ வெற்றுகப் புறக்குறிப்பிடப்பட்டு இருந்தால் வங்கிகள் அவ்வாறுன காசோலைகளுக்கு பணம் செலுத்தும் செயலை நியாயமெனக் கொள்ளலாம். ஆனுல் காசோலை எவரிடம் இருந்து களவாடப்படுகின்றதோ அல்லது தொலைகின்றதோ அவரது புறக்குறிப்பை வேண்டி நின்றுல் அவ்வாறுன காசோலைமீது அதன் உண்மையான உரிமையாளன் புறக்குறிப்பிடவில்லை என அறிவித்தல் கொடுத்திருந்தால் அவற்றுக்கு எதிராகப் பணத்தைச் செலுத்துமுன் அவற்றின் புறக் குறிப்பை வங்கி ஊர்ஜிதப்படுத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அதன் மீதுள்ள புறக்குறிப்பு உண்மையான உரிமையாளனினது புறக்குறிப்பாக அர்த்தப்பட்டாலும் அது உண்மையில் களவாகவே இடப்பட்டிருக்கும்.

ஒரு காசோலை மீதான மாற்று உத்தரவைப் பொறுத்த வரையில் அது சக்தி வாய்ந்ததாக அமைய வேண்டுமாயின் அது உண்மையாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருத்தல் வேண்டும். ஒரு வாடிக்கையாளர் தான்வழங்கிய காசோலைகளுக்கு எதிராகப் பணம் செலுத்த வேண்டா மெனப் பணித்திருந்தால் அவ்வாறுன காசோலைகளுக்கு எதிராக வங்கி பணம் செலுத்தினுல் அதனுல் ஏற்படும் நட்டங்கள் எல்லாம் வங்கியையே சாரும்.

ஒரு வாடிக்கையாளரது இறப்புப் பற்றியதில் உள்ள முக்கியம் என்னவெனில் அதைப்பற்றி வங்கிக்கு அறிவித்தல் கிடைத்திருத்தல் வேண்டும். வங்கிகள் வதந்திகளை நம்பி செயற்படக் கூடாது, எனினும் இவ்வாறுன அறிவித்தல் நேரடியாகவும் கிடைக்கவேண்டியதில்லை. இவ்வாறுன அறிவித்தல் புதினப் பத்திரிகைகள் மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ வங்கிக்குக் கிடைத்திருக்கலாம் எனினும் வங்கி தனது பாதுகாப்பிற்காக இவ்வாறு கிடைக்கும் அறிவித்தல்களை ஊர்ஜிதப்படுத்துவது முக்கியமாகும். வாடிக்கையாளர் ஒருவரைப் பற்றி அவர் **வங்கி முறி** என்ற நிலையை எய்திவிட்டார் என்ற அறிவித்தலை வங்கி பெற்றிருத்தால் அவ்வாடிக்கையாளரால் வரையப்படும். காசோலையை அவரோ அல்லது அவரால் சாட்டுதல்பெற்றவரோ அன்றி வேறு எவராவது சமர்ப்பித்தால் வங்கி அவ்வாறுன காசோலைகளுக்கு எதிராகப் பணம் செலுத்த மறுத்தல் வேண்டும். வங்கிக்கு **வங்கிமுறி** விண்ணப்பம் செய்திருந்தால் அல்லது சொத்தைப் பராமரிக்கும் கட்டளை போன்ற அறிவித்தல்கள் கிடைத்திருந்தால் அதில் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரினுல் வரையப்பட்ட காசோலைகளுக்கு எதிராகப் பணம் செலுத்துதலை நிறுத்தல் வேண்டும். கம்பனிகளைப் பொறுத்த வரையில் அவற்றினது ஒடுக்கல்பற்றி அறிவித்தல் கிடைத்திருந்தால் அவற்றுல் வரையப்படும் காசோலைகளுக்கு எதிராகப் பணம் செலுத்துதல் கூடாது. கம்பனிகளைப் பொறுத்தவரையில் அவற்றின் காசோலைகளில் கையொப்பமிட்ட அலுவலரது இறப்பு வங்கிகளின் செலுத்தும் அதிகாரத்தைப் பாதிக்காது.

வங்கிகள் காசோலைகளைச் செலுத்துமுன் அவை முறையாக வரையப்பட்டு இருக்கின்றனவா என அவதானித்தல் அவசியம். வங்கிகள் பின்வருவனவற்றை அவதானிக்கும்.

(i) **திகதி**: காசோலைகளைச் செலுத்தும் திகதிகளில் அவற்றில் காட்டப்பட்டிருக்கும், திகதி அத் திகதிக்குப் பிற்பட்டதாக இருத்தல் கூடாது. காலம் சென்ற காசோலைகளுக்கு எதிராகவும் வங்கிகள் செலுத்துமதியை மறுக்கின்றன. இது சட்டப்படி கூறப்படாது இருப்பினும், வங்கிகள் ஆறுமாத காலம் கடந்த காசோலைகளின் மீது செலுத்துமதியை மறுக்கின்றன.

(ii) **புறக்குறிப்பு**: கட்டளைக் காசோலைகள் முறையாகப் புறக்குறிப்பிடப்

பட்டிருத்தல் வேண்டும். கட்டளைக் காசோலைகள் குறுக்குக் கோடிடப்பட்டு "பெறுவோன் கணக்கு"க்கு எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் அக் காசோலையின் பெறுமதியை பெறுவோன் கணக்கிற்கு வங்கிகள் செலுத்தும். இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் காசோலைகள் வேறு வங்கிகளுக்கு ஊடாக ஒன்று திரட்டலுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் செலுத்தும் வங்கிகள் ஒன்று திரட்டும் வங்கியின் ஊர்ஜிதம் பெற்ற பின்பே செலுத்துமதிகளைச் செலுத்தும்.

(iii) **தொகை:** தொகை எழுத்திலும், இலக்கத்திலும் சமமாக இருக்க வேண்டும்.

(iv) **கையொப்பம்:** காசோலையை வரையும் வாடிக்கையாளரது கையொப்பம் அவர் வங்கிக்குக் கொடுத்திருக்கும் மாதிரிக் கையொப்பத்துடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும்.

காசோலைகள் மீதான புறக்குறிப்புக்கள் ஒரு வங்கி சரிபார்க்கும்போது அது பெறுவோனின் கையொப்பமா அல்லது பெறுவோனின் கையொப்பம் போன்றதோ என்பதை நிர்ணயிக்க முடியாது. ஆகவே மாற்றுண்டியல் சட்டமானது செலுத்தும் வங்கிகளுக்கு இதைப் பொறுத்த அளவில் பாதுகாப்பை அளிக்கின்றது. உதாரணமாக ஒரு காசோலையின் மீதான புறக்குறிப்பு களவாக இடப்பட்டிருந்தால் அவ்வாறான காசோலை மீதானசெலுத்துமதியை வங்கி நன்நம்பிக்கையுடனும் அதன் சாதாரணதொழிற்பாட்டின் ஊடாகவும் செலுத்தினால் அதற்கு மாற்றுண்டியல் சட்டம் பாதுகாப்பைக் கொடுக்கும். ஒரு வங்கிக்கு காசோலை மீதான புறக் குறிப்பு களவாக இடப்பட்ட தென்றோ அல்லது காசோலை களவாடப் பட்டதோ அல்லது தொலைந்து விட்டதோ என்ற அறிவித்தல்கள் கிடைத்த பின் செலுத்தினால் அவ்வங்கி நன்நம்பிக்கையுடன் இயங்கி இருக்க முடியாது. பின்வரும் நிலைகளில் ஒரு வங்கி சாதாரண தொழிற்பாட்டினூடே காசோலைகளைச் செலுத்தியதாகக் கொள்ளப்பட மாட்டாது.

(i) ஒரு வங்கி அதனது வங்கித் தொழிற்பாட்டு நேரத்துக்கு முன்போ அல்லது பின்போ காசோலை மீது செலுத்துமதியைச் செய்திருந்தால், வங்கி, தொழிற்பாட்டு நேரத்திற்குத் திறக்கும் போது வாடிக்கையாளன் தான் வழங்கிய காசோலைக்கான செலுத்துமதியை நிறுத்தவிரும்பினால் வங்கி அக் காசோலையின் தொகையை அதனது கணக்கில் இருந்து அறவிட முடியாது. ஏனெனில் அது சாதாரண தொழிற்பாட்டினூடே செலுத்துமதியைச் செய்யவில்லை.

(ii) காசோலை மீதான குறுக்குக் கோட்டிற்கு மாறாக ஒரு வங்கி செலுத்துமதியைச் செய்திருந்தால். குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைகளுக்கு எதிராக வங்கிகள் பணம் செலுத்தக்கூடாது. அதே போல பெறுவோன் கணக்குக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ள காசோலையின் பெறுமதியை வங்கி பெறுவோன் கணக்கிற்கே செலுத்த வேண்டும். இதற்கு மாறாக வங்கி கொடுக்குமதியைச் செய்தால் அது சாதாரண தொழிற்பாட்டினூடே இயங்கியது என கொள்ள முடியாது.

(iii) வங்கிக்கு அறிமுகம் இல்லாத ஒருவர் காசோலை ஒன்றைத் தபால்மூலம் வங்கிக்கு அனுப்பி அதற்கான செலுத்துமதியை நாணயத்தாள்கள் மூலமாகவோ அல்லது வேறு விதமாகவோ

அனுப்பும்படி பணித்தால் அப் பணிப்பை வங்கி நிறைவேற்றி னாலும் அது சாதாரண தொழிற் பாட்டினூடே செய்யப்பட்டதா கக் கொள்ளமுடியாது.

மாற்றுண்டியல் சட்டமானது குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைகளைப்பொறுத்த வரையில் வங்கிகள் பின்வருமாறு இயங்க வேண்டுமெனப் பணித்துள்ளது;

(i) காசோலை பொதுவாகக் குறுக்குக் கோடிடப்பட்டிருந்தால் அதன் மீதான செலுத்துமதியை வேறு ஏதாவது ஒரு வங்கிக்குச் செலுத் தலாம். (செலுத்தும் வங்கியில் உள்ள வேறொரு கணக்கிற்கும் சேர்ப்பிக்கலாம்.)

(ii) ஒரு காசோலை சிறப்பான குறுக்குக் கோடிடப்பட்டிருந்தால் (அதாவது குறுக்குக் கோடுகளுக் கிடையில் ஏதாவது ஒரு வங்கியின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தால்) செலுத் தும் வங்கி குறிக்கப்பட்ட வங்கிக்கோ அல்லது அவரது முக வருக்கோ செலுத்துமதியைச் செய்தல்வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு ஒரு செலுத்தும் வங்கி இயங்கினால் ஒரு காசோலையின் உண்மையான உரிமை யாளன் அதன் பெறுமதியைப் பெறுதுவிட் டால் வங்கி அதற்குப் பொறுப்பாகாது. அதேபோலப் புறக்குறிப்பு களவாக இடப் பட்டிருந்தாலும் வங்கி பொறுப்பாகமாட் டாது. காசோலைகளை வரையும்போது வாடிக்கையாளர்கள் கவனமாக இயங்கி வங்கிகளைப் பாதுகாத்தல் வேண்டும். இத் தத்துவத்துக்கு மாறாக வாடிக்கையாளர் ஒருவர் இயங்கினால் அவர் வங்கிக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்குத் தடை செய்யப்படுவார். உதாரணமாக London Joint Stock Bank V Mcmillan (1918) என்ற வழக்கில் வாடிக்கையாளர்கள் காசோலையை வழங்கும்போது அதில் காட் டப்பட்டுள்ள தொகையில் எழுத்திலும், இலக்கத்திலும் இடைவெளிகள் விட்டு வரைந்தார். அக் காசோலையை நிரப் பிய எழுதுவினைஞர் அவ்வாறு இடைவெளி கள் விட்டு வரைந்தபின்பு அதில் வாடிக்கை யாளரது கையொப்பத்தைப் பெற்றபின் இடைவெளிகளைச் சாதகமாக்கி காசோலை யின் தொகையைக் கூட்டி கூடுதலான தொகையை வங்கியிடம் இருந்து பெற்றுக் கொண்டார். இதன்மீதான செலுத்துமதி முறையாகவே செய்யப்பட்டது என்று நீதி மன்றம் தீர்ப்புக் கூறியது. இதேபோல Greenwood V Martins Bank (1932) என்ற வழக்கிலும் தீர்ப்புக் கூறப்பட்டது. இவ் வழக்கில் கூறப்பட்ட முக்கியமான அபிப் பிராயம் என்னவெனில் "இரண்டு பகுதி யினரும், நியாயமான அளவிலான கவனத் துடன் முறையாகக் கணக்கை நடாத்துவ தற்குத் தொடர்ச்சியாகக் கடமைப்பட் டுள்ளார்கள்." என்பதாகும்.

காசோலைகளை ஒன்று திரட்டுதல்:

ஒரு வங்கி தனது வாடிக்கையாளருக் காக காசோலைகளை ஒன்று திரட்டும் பொழுது அவற்றின் மீது கிடைக்கும் தொகை அவ்வாடிக்கையாளரின் கணக் கில் சேர்ப்பிக்கப்படும் என்று பொருள் படும் ஒப்பந்தத்தின்படியே செயல்படு கின்றது. இதை மீண்டும் ஆராயும்பொழுது இவ்வாறு ஒன்று திரட்டும் காசோலைகளின் பணத்தை வாடிக்கையாளர் வங்கிக்கு, வங்கிப் பணத்தை ஒன்று திரட்டியபின் கடனாகக் கொடுக்கின்றார் என்பதேயாகும். வங்கியானது காசோலைகளை ஒன்று திரட் டும்பொழுது அடிப்படையில் வாடிக்கை யாளரின் முகவராகக் கடமையாற்றினாலும் அது தனக்காகவும் செயல்படுகின்றது. சாதாரணமாக ஒரு முகவர் தனது கட மையைச் சரிவரச் செய்யும் பொழுது பொறுப்புக்களுக்கு ஆளாகமாட்டார். ஏனெனில் இவ்வாறான நிலை முதல்வர் தனது முகவருக்கு நட்டம் வராமல் பாது

காப்புக் கொடுத்திருப்பார். எனினும் ஒரு வங்கியானது தனது வாடிக்கையாளருக்காக காசோலைகள், மற்றைய கைமாறத்தகும் பத்திரங்கள் ஆகியவற்றை ஒன்று திரட்டும் பொழுது களங்கமின்றி பாதுகாப்பை இழந்துவிடுகின்றது. (Innocently Exposed). இதை மாற்றம் (Conversion) எனக் கூறப்படும். ஒரு வாடிக்கையாளருக்காக ஒரு வங்கி அவ் வாடிக்கையாளருக்கு சொந்தமில்லாத காசோலையை ஒன்று திரட்டுவதை ''மாற்றம்'' என்று கூறலாம். இது அனேகமாக ஒரு காசோலையின்மீது கள்ளப் புறக்குறிப்பிட்டிருக்கும் வேளையிலும் வாடிக்கையாளர் காசோலையைக் களவாடி இருக்கும் வேளையிலும் நேரலாம். இவ்வாறான காசோலைகளின் மீதான ஒன்று திரட்டிய பணத்தை அக் காசோலைகளின் உண்மையான உரிமையாளருக்குத் திரும்பச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. எனினும் மேலே விபரிக்கப்பட்டுள்ளது போல வங்கி வாடிக்கையாளரிடம் இருந்து நட்டம் வராமல் பாதுகாப்பைப் பெறுவதற்குச் உரிமை பெற்றுள்ளது. இவ்வாறான பாதுகாப்பைப் பெறுவதற்குச் சில வேளைகளில் சட்டரீதியான வழக்குகளில் ஈடுபடவேண்டியிருக்கும். இதன்மீதான பாதுகாப்பு அதாவது வாடிக்கையாளரிடம் இருந்து வங்கி தான் பட்ட நட்டத்துக்கு எதிராகப் பணத்தைப் பெறுவது அவ் வாடிக்கையாளரின் கடன் தீர்க்கும் தன்மையில் தங்கியுள்ளது. ''மாற்றம்'' என்ற குற்றச்சாட்டுக்கு வங்கி ஆளாவது முக்கியமாக காசோலைகளை ஒன்று திரட்டும்போது வாடிக்கையாளருக்காக மட்டுமன்றி அது தனக்காகவும் இயங்குகின்றது என்ற கோட்பாட்டினாலேயாகும். உதாரணமாக G. L. Underwood Ltd. V Bank of Liverpool (1924) என்ற வழக்கில் பிரதிவாதிக் கம்பனியின் தனி இயக்குநர் தன் பெயரில் எதிரி வங்கியில் ஒரு கணக்கை வைத்திருந்தார். அக் கம்பனியின் ஒன்று தவிர்ந்த எல்லாப்பங்குகளையும் இயக்குநரே கொண்டு இருந்தார். மற்றைய ஒரு பங்கும் அவரது மனைவியின் பெயரில் இருந்தது. கம்பனியின் கணக்கு வேறு ஒரு வங்கியில் இருந்தது. எதிரி வங்கிக்கு பிரதிவாதிக்கம்பனி இருப்பது தெரிந்திருந்தது. ஆனால் அக் கம்பனிக்கு பிரத்தியேகமாக ஒரு கணக்கு இருப்பது தெரியாது. இயக்குநர் கம்பனிக்குச் சேர்மதியான காசோலைகள் பலவற்றை எதிரி வங்கியில் உள்ள தனது சொந்தக் கணக்கிற்கு வைப்புச் செய்தார். வங்கி அக்காசோலைகளை ஒன்று திரட்டி இயக்குநரின் கணக்குக்குச் சேர்த்தது. இயக்குநர் அப் பணத்தை எல்லாம் கையாடல் செய்துவிட்டார். அதன் பின்னர் கம்பனி குலைக்கப்பட்டது. குலைப்போன் மேலே விபரிக்கப்பட்ட காசோலைகளின் தொகையை அறவிடுவதற்காக வழக்குத் தொடர்ந்தான். இவ் வழக்கின் தீர்ப்பில் எதிரி வங்கி காசோலைகளை ஒன்றுதிரட்டுவதில் ''மாற்றம்'' செய்துவிட்டபடியால் பிரதிவாதிக்கு வங்கி பொறுப்பாகும் என்பதாகும்.

மாற்றுண்டியல் சட்டமானது (பகுதி 82) ஒரு குறைந்த அளவிலான பாதுகாப்பை குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைகளை ஒன்றுதிரட்டுவதில் வங்கிகளுக்கு வழங்குகின்றது. இப் பாதுகாப்பு வங்கிகள் முகவராகஇயங்கி காசோலைகளை ஒன்று திரட்டும் வேளைகளில் கிடைக்கின்றது. முகவர்களாக இயங்கும் வேளைகளில் மறைமுகமாக வங்கிகள் தமக்காகவும் இயங்குகின்றன. எனினும் சிலவேளைகளில் வங்கிகள் தமக்காக மட்டும் இயங்குகின்றன. அதாவது காசோலைகளை ஒன்றுதிரட்டும் பொழுது அவற்றின்மீதான செலுத்து மதியைக் காசோலைகள் வரையப்பட்ட வங்கியிடமிருந்து பெறுவதற்கு முன்பு வாடிக்கையாளருக்குச் செலுத்தினாலோ அல்லது அவரது கணக்குக்குச் சேர்ப்பித்து அதற்கெதிராக வரைவதற்கு அனுமதியளிப்பதினாலோ இந்நிலையை வங்கிகள் அடையலாம். இவ்வாறு இன்றி வங்கிகள் காசோலைகள் மீதான பணத்தை ஒன்று

திரட்டி அதன்மீதான செலுத்துமதிகள் பிற வங்கிகளிடமிருந்து கிடைத்தபின்பு அத் தொகைகளை வாடிக்கையாளரின் கணக்குக்குச் சேர்ப்பிக்கும் வேளைகளில் அவை வாடிக்கையாளர்களுக்காகவே இயங்குகின்றன என "மாற்றம்" என்ற தத்துவத்தைப் பொறுத்தவரையில் கொள்ளல் வேண்டும். மாற்றுண்டியல் சட்டம் இதுபற்றிப் பின்வரும் பாதுகாப்பை அளிக்கின்றது.

> "ஒரு வங்கியானது **நன்னம்பிக்கையுடனும், கவனமின்மையின்றியும்** தனது வாடிக்கையாளருக்காகச் சாதாரணமாகவோ அல்லது சிறப்பாகவோ குறுக்குக் கோடிடப்பட்ட காசோலைகளின் மீதானபணத்தை ஒன்றுதிரட்டியிருந்தால் அவ்வாடிக்கையாளரின் உரிமையில் பிழை இருந்தாலும் வங்கியானது பணத்தைப் பெற்றதற்காக மட்டும் அதன் உண்மையான உரிமையாளனுக்குப் பொறுப்பாகமாட்டாது."

இவ்விடயத்தில் வங்கியானது சட்டப்படி பாதுகாப்பைப் பெற்றிருந்தாலும் அடிப்படையில் வங்கியே பொறுப்பாளியாகக் கருதப்படும். இதன் கருத்து என்னவெனில் மாற்றம் என்ற குற்றச்சாட்டிற்கு வங்கியாளாகும்போது சட்டப்படியான தேவைகள் எல்லாவற்றையும் வங்கிதான் பூர்த்தி செய்துள்ளதாக நீதிமன்றத்துக்கு ஒப்புவிக்கவேண்டும். உண்மையான உரிமையாளன் வங்கியின் கவனம் இன்மையை நிரூபிக்கவேண்டிய அதேநேரத்தில் வங்கி தான் கவனம் இன்மையின்றி இயங்கியதாக ஒப்புவிக்கவேண்டும். இத்தகைய பாதுகாப்பைப் பெறுவதற்கு காசோலையை வங்கி **ஒரு வாடிக்கையாளனுக்கு மட்டுமே நல்லெண்ணத்தில்** ஒன்றுதிரட்டி இருக்க வேண்டும். அத்துடன் வங்கி கவனம் இன்மையின்றியும் இயங்கி இருத்தல் வேண்டும்.

மாற்றுண்டியல் சட்டத்தில் **கவனம் இன்மை** என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் கொடுக்கப்படவில்லை. எனவே இவ்விடயம் வழமையாக தீர்ப்புவழிச் சட்டத்தினால் வழிநடத்தப் படுகின்றது. வாடிக்கையாளருக்காக காசோலைகளை சேகரிப்பதில் பின்வரும் விடயங்கள் வங்கிகளைப் பொறுத்த வரையில் **கவனமின்மையாகக்** கணிக்கப்படுகின்றது.

(i) கணக்குகள் ஆரம்பிக்கப்படும் பொழுது தகவல்களைப் பெறத் தவறுதல்.

(ii) பெறுவோன் கணக்குக்கு எனக் குறிக்கப்பட்ட காசோலைகளை பெறுவோன் தவிர்ந்த வேறு ஒருவரின் கணக்குக்கு ஒன்றுதிரட்டல்

(iii) ஒரு கம்பனியின் பெயரில் வரையப்பட்ட காசோலைகளின்மீது அக் கம்பனியின் அலுவலர் ஒருவரால் புறக்குறிப்பிடப்பட்டு இருப்பினும் அக் கம்பனியின் சேவையில் உள்ள அலுவலர் ஒருவரின் தனிப்பட்ட கணக்குக்கு விசாரணை இன்றி ஏற்றல்.

(iv) பங்குடமைக்குச் செலுத்தப்பட வேண்டிய காசோலையை பங்காளர் ஒருவரின் சொந்தக் கணக்குக்கு ஏற்றல்.

(v) விசேட அதிகாரம் இன்றி உத்தியோக பூர்வமான பதவியின் பெயரில் வரையப்பட்ட(உதாரணமாக: அரசாங்க அதிபர்) காசோலை ஒன்றை அவ்வுத்தியோகத்தரது சொந்தக் கணக்குக்கு ஏற்றல்.

(vi) கம்பனி அல்லது பங்குடமை ஒன்றினால் மூன்றும் பகுதியினர் பெயரில் வரையப்பட்ட காசோலையை விசாரணையின்றி அதை வரைந்த நிறுவனத்தின் அலுவலர் அல்லது அத்தகைய அலுவலரின் மனைவியின் சொந்தக் கணக்குக்கு ஏற்றல்.

(vii) முகவர் ஒருவரினால் அவரது முதல்வரின் கணக்கில் அம் முகவரின் பெயரில் வரையப்பட்ட காசோ

லையை அதே முகவரின் சொந்தக் கணக்கிற்காக விசாரணையின்றி ஏற்றல்.

விசாரணை செய்யாது விடுவதினால் வங்கிகள் தாம் கவனமாக செயற்படுவதை தமக்கெதிராகத் தொடரப்படும் வழக்குகளில் அத்தாட்சிப் படுத்த இயலாமல் இருப்பதை பெரும்பாலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

வங்கி தனக்காக காசோலைகளை ஒன்று திரட்டும் வேளைகளில் அதாவது காசோலையின் பணத்தை ஒன்றுதிரட்டிப் பெறுவதற்கு முன்பு அதன் பணத்தை வாடிக்கையாளருக்குச் செலுத்தியோ அல்லது அவரது கணக்கில் அதைச் சேர்த்து அதை அவர் எடுப்பதற்கு உரிமையை அளிப்பதினாலோ எழும் வேளைகளில் இந்நிலை தோன்றுகின்றது. வங்கியிடம் பெற்ற மேலதிகப் பற்று அல்லது கடன் இவற்றைக் குறைக்கும் நோக்குடன் வேறு வங்கிகளில் வரையப்பட்ட காசோலைகளை வாடிக்கையாளரிடம் இருந்து பெறுவதாலும் இந்நிலை எழலாம். இந்த எல்லாச் சூழ்நிலைகளிலும் வங்கி தனக்காகவே காசோலைகளை ஒன்று திரட்டுகின்றன எனக் கொள்ளலாம். இச் சந்தர்ப்பங்களில் வங்கி தன் நம்பிக்கையுடனும் இச்செயற்பாட்டில் ஒரு கள்ளமும் இடம்பெறாதிருப்பின் வங்கி நெறிமுறை கொண்டிருப்போனாக (holder in due Course) இருந்து காசோலைக்குப் பொறுப்பானவர்களிடம் இருந்து செலுத்துமதிகளை பெறுவதற்கு உரிமையைப் பெறுகின்றது. நெறிமுறை கொண்டிருப்போன் என்ற உரிமையை நிறுவுவதற்கு வங்கி நன்நம்பிக்கையுடனும் காசோலையை மாற்றிச் செய்தவரின் உரிமையில் எவ்விதக் குறைபாடு இருப்பினும் அக் குறைபாட்டைத் தெரியாமலும் இருந்திருத்தல் வேண்டும்.

வங்கிகளின் கவனமின்மை எந்நிலைகளில் எழும் என்பதை ஆராயும்பொழுது தீர்ப்புவழிச்சட்டம் (Case Law) உதவியாக இருக்கும். உதாரணமாக Ladbroke V Todd என்ற வழக்கில் பெறுவோன் கணக்குக்கென வரையப்பட்ட காசோலையை ஒருவன் களவாடி அதைக்கொண்டு, அதில் காட்டப்பட்டிருக்கும் பெறுவோன் தான் எனக்கூறி ஒரு கணக்கை ஆரம்பித்தான். இக் கணக்கை ஆரம்பிக்கும்பொழுது அவனைப்பற்றி எந்தவிதமான அறிமுகத்தையும் வங்கி பெறவில்லை. இக்காசோலையை அவனது கணக்குக்காக வங்கி ஒன்றுதிரட்டியமைக்காக நீதிமன்றம் வங்கி வாடிக்கையாளனுக்கே காசோலையை ஒன்று திரட்டினாலும் அது அக் காசோலையின் மீதான சொத்துரிமையைக் கவனமின்மையின்றியே பெற்றது எனத் தீர்ப்புக் கூறியது. இதேபோன்று Lloyds Bank V Savory & Co. (1933) என்ற வழக்கிலும் Savory & Co என்ற நிறுவனத்தின் ஊழியர்களாகிய எழுதுவினைஞர்கள் அக் கம்பனிக்குச் சொந்தமான காசோலைகளைக் களவாடி வங்கியின் தலைமைக் காரியாலயத்தின் ஊடாக அவ் வங்கியின் கிளைகளில் உள்ள கணக்குகளுக்குச் சேர்ப்பிப்பதற்காகச் செலுத்தினார்கள். ஒரு கிளையில் இருந்த கணக்கு ஒரு எழுதுவினைஞரின் பெயரிலும் வேறு ஒரு கிளையில் இருந்த கணக்கு வேறொரு எழுதுவினைஞரின் மனைவியின் பெயரிலும் இருந்தன. இக் கணக்குகளை ஆரம்பிக்கும்போது வங்கி தமது வாடிக்கையாளராகிய எழுதுவினைஞரின் தொழில்தருநரையோ அல்லது மற்றைய எழுதுவினைஞரின் மனைவியின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கணக்கைப் பொறுத்தவரை அவரது கணவரின் தொழில்தருநரின் பெயரையோ பெறவில்லை. எனவே வங்கி கவனமின்மையின்றி இயங்கியது எனத் தீர்ப்புக் கூறப்பட்டன. Morison V London County and Westminster Bank (1914) என்ற வழக்கில் பிரதிவாதியின் முகாமையாளர் எதிரி வங்கியிடம் இருந்த கணக்கில் வரையப்படும் காசோலைகளுக்குக் கையொப்பம் இடுவதற்கு அதிகாரம் பெற்றிருந்தார். அம்முகாமையாளர் பிரதிவாதிக்குத் தெரியாமல் எதிரி வங்கியில் தனது பெயரிலும்

ஒரு கணக்கை ஆரம்பித்திருந்தார். அம் முகாமையாளர் பலகாலமாகப் பிரதிவாதியின் கணக்கில் தன்னால் வரையப்பட்ட காசோலைகளையும் பிரதிவாதிக்குக்கிடைத்த வேறுபல காசோலைகளில் அவருக்காகப் புறக்குறிப்பிட்டும் தனது சொந்தக் கணக்கிற்கு வைப்புச் செய்தார். எதிரி வங்கி இவ்வாறான காசோலைகளை ஒன்றுதிரட்டி முகாமையாளரது கணக்கிற்கு வைப்புச் செய்தது. வங்கி போதிய விசாரணை இன்றி இச் செயலில் ஈடுபட்டமை கவனம் இன்மை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. Ross V London County and Westminster Bank (1919) என்ற வழக்கில் உத்தியோக பூர்வமான பதவியின் பெயரில் வரையப் பட்டகாசோலைகளை அவ் வுத்தியோகத் தரின்சொந்தக் கணக்கிற்கு ஒன்று திரட்டி யமையில் எதிரி வங்கி விசாரணை இன்றி இயங்கியதால் அது கவனமின்மையாக செயற்பட்டது எனத் தீர்ப்பு வழங்கப் பட்டது.

முடிவுரை :

நவீன வங்கித் தொழிலில் வங்கிகள் பலவகைப்பட்ட சேவைகளைத் தமது வாடிக்கையாளருக்கு அளிக்கின்றன. இவ்வாறான சேவைகளுக்கெல்லாம் அடிப்படையாக வுள்ளது வங்கிகளுக்கும் அவற்றின் வாடிக்கையாளருக்கும் இடையே ஏற்படும் வருமதியாளர் — சென்மதியாளர் என்ற உறவேயாகும். இவ்வாறான உறவு முறை கணக்குகளை ஆரம்பிப்பதிலேயே தொடங்குகின்றது. இதை ஆராயும்பொழுது நடைமுறையில் ஒரு வங்கியில் கணக்கை ஆரம்பிக்க விரும்பும் ஒருவன் அவ் வங்கிக்குச் சென்று தான் ஒரு கணக்கு ஆரம்பிக்க விரும்புவதாகக் கூறுவான். இவ்வாறு கேட்பது சாதாரணமாக ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு உளம் கொள்ளல் எனக் கொள்ளலாம். அதை வங்கி ஒப்புக்கொண்டால் அதில் இருந்து எழுவதுதான் ஒப்பந்தம். எனவே வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயுள்ள உறவு முறையானது ஒரு ஒப்பந்தத்தில் இருந்தே எழுவதால் இதை ஒப்பந்தச் சட்டத்தின் தத்துவங்கள், விதிகள் போன்றவையே ஆட்சிப்படுத்துகின்றன. எனினும், வங்கிகளால் அளிக்கக்கூடிய எல்லாச் சேவைகளையும் உள்ளடக்கும் ஒப்பந்தங்கள் நடைமுறையில் ஏற்படுத்துவது சாத்தியம் இல்லாதபடியால் இவ்வுறவு முறையில் எழும் பல பிரச்சனைகளுக்கு வங்கித் தொழில் சார்புடைய சட்டங்கள், தீர்ப்பு வழிச் சட்டங்கள் மூலமாகவே தீர்வுகள் காணப்படுவது முறைமையாகும். இக் கட்டுரையில் இவ்வுறவு முறையில் எழும் எல்லா அம்சங்களையும் விரிவான முறையில் ஆராய்வது சாத்தியமில்லை என்பதால் இவ்வுறவு முறையில் எழும் முக்கியமான அம்சங்களாகிய கணக்குகளை ஆரம்பித்தல், காசோலைகளுக்கான செலுத்துமதி, காசோலைகளை ஒன்று திரட்டல் போன்றவை சிறப்பாக ஆராயப் பட்டுள்ளது.

உயர் இணைப்பு தாழ் இணைப்பு

கம்பனியின் சாதாரண பங்கு முதலுடன் ஏனைய முன்னுரிமைப் பங்கு முதல், நீண்டகாலக் கடன்கள் ஆகிய முதல்களை ஒப்பிடும்போது, முன்னுரிமைப் பங்கு முதலும் நீண்டகாலக் கடன்களும் சாதாரணபங்கு முதலைவிடக் கூடுதலாக இருப்பின் அது உயர் இணைப்பாகும் (High Geared). மாறாக முன்னுரிமைப் பங்குகள் நீண்டகாலக் கடன்கள் என்பவற்றின் பெறுமதியைவிட சாதாரண பங்கு முதல் கூடுதலாக இருப்பின் அது தாழ் இணைப்பாகும் (Law Geared). உயர் இணைப்புள்ள ஒரு கம்பனியின் சாதாரண பங்குகளுக்கு கூடிய மதிப்பிருக்கும் தாழ் இணைப்பாயின் முன்னுரிமை பங்குகள் கூடிய பெறுமதியுடையதாக விளங்கும்.

தலைநகரிற் சிறந்த
புகைப்பட நிலையம்

Bharat Studio

82/182, KASTURIYAR ROAD,
JAFFNA

BRIGHT CENTRE

B. M. C. LANE, CLOCK TOWER ROAD,
JAFFNA.

G. A. Q., B. Com., B. A.,
G. C. E. (A/L)., G. C. E. (O/L)

புதிய கல்வித்திட்டத்திற்கு ஏற்ப பயிற்றப்பட்ட
ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.

குறிப்பு : வெளிநாடு செல்வோருக்கு 3 மாத காலத்தில்
WELDING CLASSES
நடத்தப்படுகின்றன.

வர்த்தக மாணவரின்
வரப்பிரசாதமாக
வித்தியோதயம் மலர்
எனது இதயம் நிறைந்த
வாழ்த்துக்கள்.

E. V. தளையசிங்கம்

பட்டயக் கணக்காளர்

இரட்டை அமைப்பும் பொருளாதார அபிவிருத்தியும்

கலாநிதி வி. நித்தியானந்தம்
பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
கொழும்பு வளாகம்

பகுதிநேர விரிவுரையாளர்
வித்தியோதய வளாகம்

நீண்ட காலப் பொருளியல் மாற்றங்களை ஆய்வது நெடுங்காலமாகவே பொருளியலாளரின் முக்கிய கவனத்தைப் பெற்று வந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டின் பழம் பொருளியலாளர் மரபு அதனுடன் தொடர்புகொண்டிருந்த பொழுதிலும் இரண்டாவது உலக மகாயுத்தத்துக்குப் பின்பு பல புதிய சுதந்திர அரசுகள் உருவாகியதை யடுத்தே பொருளியலாளர் மீண்டும் பொருளியல் வளர்ச்சி பற்றிய பிரச்சனைமீது கூடிய கவனம் செலுத்தலாயினர். புதிதாக உருவெடுத்த இந்தக் குறைவிருத்தி நாடுகளின் வறுமை, பொதுவாகப் பொருளியல் ரீதியிலும், குறிப்பாகக் கைத்தொழில் ரீதியிலும் தாம் அபிவிருத்தியடைய வேண்டுமென்ற அவற்றின் அவாவாகப் பிரதிபலித்தது. பொருளியலாளர் இப் பிரச்சனைமீது அக்கறை கொண்ட அதே நேரத்தில், ஒரு விடயம் மட்டும் கூடியளவுக்குத் தெளிவாகிக்கொண்டிருந்தது. அதாவது வளர்ச்சி, அபிவிருத்தி என்பன தலா வருமானத்தின்மீது ஏற்படும் அதிகரிப்பாக நோக்கப்பட முடிந்தாலும், உண்மையில், இந்தச் செய்முறை பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியான உருமாற்றத்துடனேயே நெருக்கமான தொடர்பு கொண்டது என்பதாகும். கிராமிய விவசாயத்திலிருந்து நகரக் கைத்தொழில் நோக்கி ஏற்படும் அசைவு பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்த ஓர் அம்சமாக மாத்திரமன்றிப் பொருளாதார வளர்ச்சியையே விளக்கும் ஒரு பிரதான காரணியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்கூறிய புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தின் மத்தியிலும். 1936ஆம் ஆண்டுக்குப் பின்பு கெயின்சியப் பொருளாதாரம் எவ்

வாறு வருமானம், தொழில், வளர்ச்சி என்பவை பற்றிய கோட்பாட்டை ஆக்கிர மித்துக் கொண்டதோ, அது போன்ற நன்கு வரையறுக்கப்பட்ட 'புதிய அபி விருத்திப் பொருளியல்' முறைமையொன்று அபிவிருத்திக் கோட்பாட்டில் வளர்ச்சி யடையவில்லை. எனினும், வளர்ச்சி. அமைப்பு ரீதியான மாற்றம் என்பவற்றிற் குரிய காரணங்களை ஆராயும் அடிப்படைத் தன்மை வாய்ந்த இரு நடைமுறை நோக்கு கள் வளர்ச்சியடைந் திருப்பதாகக் கூற முடியும். அவையாவன, (i) சமீப காலங் களில் ரொஸ்ரௌ என்பாருடன் (W. W. Rostow) இணைத்துக் கூறப்படும் 'வளர்ச்சிக் கட்டங்கள்' அல்லது 'முதன்மைத்துறை' பற்றிய நோக்கு. (ii) இரட்டைப் பொரு ளாதாரம் பற்றிய நோக்கு.

ஆகவே, மேற்கூறியவற்றிலிருந்து, பொதுவான பொருளாதாரக் கோட்பாட் டின் ஒரு கிளை என்ற வகையில் இரட்டை அமைப்பு மாதிரி உரு சமீப காலத்தில் தோன்றியதொன்றே என்பது தெளிவா கும். இரட்டைப் பொருளாதாரம் பற்றிய தகுந்ததொரு மாதிரி உருவை அமைப்ப தற்குப் பொருளாதாரத்தைப் பகுப்பாய் வுக்குட்படுத்தக் கூடியதும், நடைமுறை யிற் கருத்துடையதுமான இரு கூறுகளா கப் பிரிக்க வேண்டியதவசியமாகும். இந் தப் பிரிவு, குறிப்பாகக், குறைவு வருமான முடைய நாடுகள் விவசாயம், மற்றும் மரபு ரீதியான நடவடிக்கைகளிலிருந்து அசைந்து செல்வதை அடிப்படையாகக் கொண்டதா யிருக்க வேண்டும். இவ் வகையில் வழமை யாகப் பயன்படுத்தப்படும் அமைப்புமுறை, ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளும் கிராமிய விவசாயத்துறை, நகரக் கைத் தொழிற்துறை என்பவற்றைக் கொண்ட தாகும்.

I

இரட்டை அமைப்பு என்னும்போது, ஒரு குறிப்பிட்ட நாட்டின் பொருளாதார அமைப்பினுள் வேறுபட்ட மட்டங்களில் வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றை அடைந்த இரு துறைகள் ஒன்றாக இணைந் திருக்கும் நிலை என வரையறை செய்ய லாம். இரட்டை அமைப்புக் கருத்தினைச் சிங்கர் என்பார் (H. W. Singer) இரத்தினச் சுருக்கமாக எடுத்து விளக்கியுள்ளார். அதில் அவர் நான்கு முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளார்.

(i) தரப்பட்ட ஒரு கால இடையில், ஒன்று தரம் கூடியதும் மற்றது தரம் குறைந்ததுமான இரு தொகை நிலை மைகள் ஒரே நேரத்தில் இணைந் திருத்தல்.

(ii) இவ்வாறாக இணைத்திருத்தல் ஒரு நிலைமாறும் தன்மையுடையதாக அல்லாமல் நீண்டதொரு காலத் துக்கு உறுதியாக நிலைத்திருப்ப தொன்றாக உள்ளது. அதாவது, தரம் கூடியதைத் தரம் குறைந்த நிலைமை அப்புறப்படுத்தி அதன் இடத்தைத் தான் எடுத்துக்கொள் வதற்குப் படிமுறை வழியில் அவசி யம் வேண்டப்படும் கால இடையின் மூலம் இது ஏற்படவில்லை.

(iii) தரம் கூடிய நிலைமை, தரம் குறைந்த நிலைமை என்பவற்றின் தராதர அளவு விரைவில் குறைவடை வதற்கு எந்தவிதமான சாத்தியக் கூறுகளும் இல்லை—அவை நிலைத்திருப் பதுடன் அதிகரிக்கவும் செய்யலாம்.

(iv) இந்த இரு தொகை நிலைமைகளுக் கிடையிலான தொடர்பின் விசேட தன்மை யாதெனில், தரம் கூடிய துறை தரம் குறைந்த துறையைத் தன்பாற் கவர்ந்து அதன் தரத்தை உயர்த்த முனைவதும் இல்லை (பரவல் விளைவு) அல்லது தரம் குறைந்த துறையை முற்றாகக் கீழே தள்ளி அழித்து விடுவதும் இல்லை (பின் உந்தல் விளைவு).

மிகை ஊழியத்தைக் கொண்டுள்ள குறைவிருத்திப் பொருளாதாரங்கள் மேற் கூறிய தன்மைகளைப், பெரும்பாலும்,

கொண்டிருக்குமெனலாம். ஆகவே இத்தகைய பொருளாதாரங்கள் இரட்டைப் பொருளாதாரங்கள் என அழைக்கப்படுகின்றன. எனவே நிலையான மெய் வேதன விகிதத்தில் ஊழியத்தின் கட்டற்ற நிரம்பல் இரட்டைப் பொருளாதார அபிவிருத்திக் கோட்பாட்டின் ஒரு பிரதான எடுகோளாகும். இவ்வகையில் ஆதர் லூயிஸ் என்பார் (W. Arthur Lewis) 1954ஆம் ஆண்டு எழுதிய 'ஊழியத்தின் கட்டற்ற நிரம்பலுடன் பொருளாதார அபிவிருத்தி' என்ற கட்டுரை சமீப காலத்திய இரட்டைப் பொருளியல் இலக்கியத்துக்கான சிந்தனையாளர்களின் 'விடுபடு' நிலையாகக் கருதப்படுகின்றது. இத்தகைய மிகை ஊழியத்தைக் கொண்ட பொருளாதாரங்கள், அளவிற் பெரிதாக ஆனால் பெருமளவுக்குத் தேங்கிநிற்கும் சீவனோபாய மட்டத்தில் இயங்கும் ஒரு குடியானவர்கள் விவசாயத்துறையையும், அளவிற் சிறியதாக ஆனால் விரைவாக வளர்ச்சியடைகின்ற வர்த்தகமயமாக்கப்பட்ட ஒரு கைத்தொழிற் துறையையும் கொண்டிருக்கும். இவ்விரண்டிலும் முன்னையதில் நிறுவனரீதியான காரணிகள் வேதனவிகிதத்தைத் தீர்மானிக்கப் பின்னையதில் முதலாளித்துவப் பொருளாதாரமொன்றின் போட்டி நிலைமைகள் அதனை நிர்ணயிக்கின்றன. இத்தகைய இரட்டைப் பொருளாதாரங்களில் ஊழியம் மிகையாகக் காணப்படுவதால், இது துறைகளிலுமான தரப்பட்ட உற்பத்தி நிலைமைகளின் கீழ் ஊழியம் அருமையற்ற ஒரு காரணியாகவும் மூலதனம் மிக அருமையான ஒரு காரணியாகவும் விளங்குகிறது இந் நாடுகளிலான கூடிய சனத்தொகை அமுக்கமும், குறைந்த சேமிப்பு விகிதமும் இந்நிலைமையை மேலும் மோசமாக்குகின்றன, ஊழியத்தின் மேலதிக நிரம்பல் பரந்தஅளவிலான கிராமிய மறைமுக வேலையின்மைக்கும், கீழ் உழைப்புக்கும் இடமளித்தன,

இரட்டைப் பொருளாதார மாதிரி உருக்கள், அபிவிருத்திச் செய்முறையின் போது மரபுரீதியானதுறை, நவீனதுறை என்பவற்றுக்கிடையே ஒன்றை யொன்று பாதிக்கவல்ல தொடர்புகள் எவ்வாறு அதிகரித்துச் செல்லுகின்றன வென்பதை எடுத்து விளக்க முற்படுகின்றன. இவ்வாறு தொடர்புபடும்போது இரு துறைகளும் தொடர்ச்சியான தொழில் நுட்ப மாற்றத்தை அநுபவிக்கின்றன. எனினும் ஊழிய, மூலதனச் சந்தைகளுக்கிடையே எந்தவிதமான பயனுள்ளதொரு தொடர்பும் நிறுவப்படுவதில்லை. இரட்டைப் பொருளாதாரமானது, காரணிகளின் மறு ஒதுக்கீட்டின் வழியாக, விவசாயத் துறையின் வரலாற்று ரீதியான முதன்மை நிலையைக் குறைத்துப் படிப்படியாகக் கைத்தொழிற் துறையின் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. விவசாயத் துறையிலிருந்து கைத்தொழிற் துறை நோக்கி ஊழியத்தைத் தொடர்ச்சியாக மறு ஒதுக்கீடு செய்வதற்கு விவசாயத்துறையின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு முக்கிய பொறிமுறையாகக் கையாளப்படுகின்றது. ஆகவே இதிலிருந்து இரட்டைப் பொருளாதார மாதிரி உருவின் அடிப்படை அம்சம் "மாற்றமடைவதே" என்பதைக் காண முடிகின்றது. அதன் எதிர்கால இறுதி நோக்குப் பொருளாதார முதிர்ச்சியேயாகும். இதனாலேயே இத்தகைய இரட்டைப் பொருளாதார விளக்கம் இயக்கத் தன்மையுள்ள மாதிரி உரு எனப்படுகின்றது. அபிவிருத்திப் பொருளியல் பொறுத்து இயக்கத்தன்மையுள்ள இரட்டைப் பொருளாதார மாதிரி உரு முக்கியமானதே. எனினும், இதனை விரிவாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. இலங்கைப் பொருளாதாரத்தின் அமைப்பினை நன்கு புரியும் பொருட்டு, இயக்கத் தன்மையுள்ள மாதிரி உருவுக்கு முன்தோன்றிய விளக்கத்தை, அதாவது இரட்டை அமைப்பு முறையின் ஆரம்ப நிலையினை, ஓரளவு விரிவாக, ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். பொருளாதார வளர்ச்சி முழுமையான வகையில் ஏற்படுவதற்கு

விவசாயத்துறை, கைத்தொழிற்துறை என்பன ஆற்ற வேண்டிய கடமைகள் பரஸ்பரம் தங்கியிருக்கும் தன்மையுடையவை என்பதை வலியுறுத்தித் துறைகளுக்கிடையிலான தொடர்புகளைத் தகுந்த வகையில் விளங்கிக் கொள்வதற்கு இயக்கத் தன்மையுள்ள இரட்டைப் பொருளாதார மாதிரி உருக்கள் உதவியுள்ளன என எடுத்துக் கூறுவது எம்மைப் பொறுத்தவரை போதுமானது.

II

இயக்கத் தன்மையுள்ள இரட்டைப் பொருளாதார மாதிரி உருக்கள் வளர்ச்சிப் பொருளியலில் தோன்றுவதற்கு எவ்வளவோ காலத்துக்கு முன்னிருந்தே இரட்டை அமைப்புக் கோட்பாடு தோன்றிவிட்டதென்பது மட்டுமன்றி, அது பல வடிவங்களையும் எடுத்துள்ளது. உண்மையில் அதன் தோற்றம் மேற்கத்திய குடியேற்ற நாட்டுவாதத்தினால் அரசியல், பொருளாதார, இராணுவ ஊடுருவல்களுக்குள்ளான மேற்கத்திய முறையல்லாத ஏனைய சமூகங்களில் பின்தங்கும் ஒரு மரபு ரீதியான துறைக்கும், வளர்ச்சியடையும் ஒரு நவீன துறைக்கு மிடையிலான தொடர்பை (அல்லது தொடர்புக் குறைவை) விளங்கிக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட ஒரு முயற்சியின் விளைவேயாகும். இக் கருத்தில், இதுவரை சுயதேவைப் பூர்த்தி செய் மரபு ரீதியான தன்மை கொண்ட ஒரு சமூகம் எப்போது சர்வதேச வர்த்தகத்திற்காகத் திறந்து விடப்படுகின்றதோ அந் நிலையில் இரட்டைத் தன்மை தோன்றிவிட்டதெனலாம். ஆகவே குடியேற்ற நாட்டுவாதத்தின் ஒரு விளைவே இரட்டைத் தன்மை எனலாம்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பமளவில் நெதலாந்துக் கிழக்கிந்திய தீவுகளின் பொருளியல் நலனில் அக்கறை கொண்ட அரசியல்வாதிகளும், அறிவியலாளரும் ஒரு விசித்திர நிலையை எதிர்நோக்கினர். 19ஆம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களில் வளர்ச்சியடைந்த கட்டற்ற வியாபார முறைகளின் கீழ் ஐரோப்பிய பெருந்தோட்டச் சொந்தக்காரர் நன்மையடைந்தது போன்றே ஜாவா தேசத்துக் குடியான்களும் பெரு நன்மை அடைந்திருக்க வேண்டும். எனினும் பெருந்தோட்டச் சொந்தக்காரர் பெற்ற நன்மையின் ஒரு சிறு துளியைக் கூடக் குடியான்கள் அனுபவிக்கவில்லை. 1900-ம் ஆண்டளவில் மேற்கு நாட்டவரது தாராண்மைக் கொள்கைகள் டச்சுக் கிழக்கிந்திய தீவுகளைப் பொறுத்தவரை தோல்வியடைந்து விட்டதென்பது தெளிவாகியிருந்தது. 'குறைவடையும் நலவுரிமை' தான் இங்கு நிலவுகிறதென்பது உத்தியோக ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தத் தோல்விக்குரிய காரணங்களை ஆராயப் புகுந்த டச்சுப் பொருளியலாளர், அதன் மூலம், குறைவிருத்தி நாடுகளில் நிலவும் பொருளாதார இரட்டைத் தன்மையின் அடிப்படைகள் பற்றிய மிக நீண்டதோர் ஆய்வினைத் தம்மையறியாமலே ஆரம்பித்து விட்டிருந்தனர்.

இரட்டை அமைப்புப் பற்றிய கருத்துக்கள் பலவகையில் மாறுபட்டுக் காணப்படுகின்றன. சமூக, அரசியல், பொருளாதார நடத்தைகள் பொறுத்துத் துறை ரீதியில் ஏற்படக்கூடிய வேறுபாடுகளைத் தெளிவற்ற முறையில் எடுத்துக்கூறும் கருத்துரைகள் முதல், பொருளாதார அபிவிருத்தி, அமைப்பு ரீதியான மாற்றம் என்பவை பற்றிய போக்கினை எடுத்துக் கூறும் நன்கு வரையறுக்கப்பட்ட சிறந்த முடிபுகள் வரை இவை வேறுபடுகின்றன. இரட்டைத்தன்மை நிலவும் அடிப்படைகளை முக்கியமாக ஆறு வகைகளில் வாதிக்க முடியும் எனலாம். அவையாவன, (i) சமூக முறைமை, (ii) சமூக அல்லது இனப் பின்னணி, (iii) உற்பத்தி, (iv) சனத்தொகை நடத்தை, (v) நுகர்வோர் சேமிப்பு, செலவீடு என்பவற்றின் அமைப்பு, (vi) உள்நாட்டு வெளிநாட்டுத் துறைகளுக்கிடையிலான தொடர்பு.

எல்வாருயினும் பரந்ததோர் அடிப் படையில் இரட்டைத்தன்மை பற்றிய பல வேறு நோக்குகளையும் இரு முக்கிய தலைப் புக்களின் கீழ் அடக்கலாம். அவையாவன, (1) நிலையான மாதிரி உருக்கள், (2) இயக் கத்தன்மை வாய்ந்த மாதிரி உருக்கள்: இவற்றிற் பின்னையது மரபு ரீதியான, நவீன துறைகளுக்கிடையிலான அதிகரித் துச் செல்லும் தொடர்பினை ஆராய, முன்னையது இந்த இரு துறைகளுக்கு மிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட தொடர்பினை வலியுறுத்துகின்றது.

III -

நிலையான இரட்டைத்தன்மை இரு வேறுபட்ட அம்சங்களைக் பின்னணியாகக் கொண்டது:

1. சமூக இரட்டைத்தன்மை: இது பொருளாதார ஒழுங்குமுறைமை, நியாயம் என்பவை பற்றிய 'மேற்கு நாட்டு', 'மேற்கு நாடல்லாத' கருத்துக்களுக்குக் கலாச்சார வேறு பாடுகளே காரணமென வலியுறுத்து கின்றது.

2. 'தனிப் பிரதேச' இரட்டைத்தன்மை: இது ஊழிய, மூலதன, உற்பத்திச் சந்தைகளின் தவறான நடத்தையை வலியுறுத்தி, அதனூடாக மேற்கத்திய நவீன கைத்தொழில் நாடுகள், உல கின் ஏனைய பிரதேசங்களிலுள்ள மரபு வழிச் சமுதாயங்களுடன் தொடர்பு கொள்வதாகக் கூறுகிறது.

சமூக இரட்டைத் தன்மையின் மூல கர்த்தா டச்சுப் பொருளியல்வாதியாகிய ஜே. எச். போக் (J. H. Boeke) ஆவார். இவர் 1910ஆம் ஆண்டு வெளியிட்ட தமது ஆய்வுக் கட்டுரையிற் பழம்பொருளியலா ளரின் கோட்பாட்டு விளக்கங்கள் அயன மண்டலக் குடியேற்ற நாடுகளுக்குப் பொருத்தமற்றவையென்றும், இவற்றின் பொருளாதாரப் பிரச்சனைகளை அணுகுவ தற்கு வேறுபட்டதொரு கோட்பாட்டு விளக்கம் அவசியமானதெனவும் எடுத்துக் கூறினார். அவருடைய கருத்தின்படி, கூரிய, ஆழமான, பரந்த பிளவொன்று சமுதா யத்தை இரு பகுதிகளாகப் பிரிக்குமாயின் பல சமூக, பொருளியற் பிரச்சனைகள் முற்றும் வேறுபட்டதொரு வடிவத்தை எடுக்கின்றன. இந்நிலையில் மேற்கத்திய பொருளியற் கோட்பாடுகள் நடைமுறைக் குப் பொருத்தமற்றதாகி விடுவதால் தமது பெறுமதியையும் இழந்துவிடுகின்றன.

போக் சமூக இரட்டைத்தன்மையைப் பின்வருமாறு வரையறை செய்கின்றார்:

> 'இறக்குமதி செய்யப்பட்ட சமூக முறைமையொன்று வேறுபட்ட தன்மையுடைய சுதேச சமூக முறைமை யுடன் மோதுவதேயாகும். பெரும் பாலும் இறக்குமதி செய்யப்பட்ட சமூக முறைமை உயர் முதலாளித்துவ மாகவே காணப்படும். ஆனால் அது சமவுடமை அல்லது பொதுவுடமை யாகவோ அல்லது இவற்றினது கலப் பாகவோ இருக்கலாம்'.

இதன் விளைவாக,

> 'ஒருமித்த ஒரு சமுதாயத்திற்குப் பதிலாக சுதேச சமுதாயம் அந்நிய ருடைய சமூகத்துக்கு அருகருகே காணப்பட்டது. ஒரு கூட்டம் மக்கள் காணப்படவில்லை. ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டத்தினர் காணப் பட்டனர். ஒரே தன்மை வாய்ந்த அபிவிருத்தியன்றி இரு வேறுபட்ட அபிவிருத்தி மட்டங்கள் இடம் பெற் றன. ஒருமித்த உறுதித் தன்மைக்குப் பதிலாக ஆளுவோரும், ஆளப்படுவோ ரும் என்ற வேறுபாட்டுணர்வு தலை தூக்கியிருந்தது. இறுதியாக நோக்கின் நிலத்தின் விளைபொருட்களில் மாத் திரம் பெரும் கரிசனை கொண்டு நாட்டு மக்களை அவர்களின் தரம் குறைந்த ஊதியத்தை மட்டும் ஓரளவு வழங்கு மாறு கேட்டும் ஒரு கூட்டத்தினர் காணப்பட்டனர்.'

ஆகவே, இங்கு வேறுபட்ட தன்மை வாய்ந்த இறக்குமதி செய்யப்பட்ட சமூக முறைமை, சுதேச சமூக முறைமை என்பவற்றுக்கிடையிலான மோதலே வலியுறுத்தப்படுன்கிறது. இவ்வாறு மோதும் சமுதாயங்களுக்கிடையிலான பெறுமதி முறைமைகள், பொருளாதாரத் தன்மைகள் என்பனவும் பெரிதும் வேறுபட்டவையாகும். முதலாளித்துவத்தின் கீழான பெறுமதி முறைமை தர்க்க ரீதியில் இயங்குவதொன்ருயிருக்கச் சுதேச சனத்தொகை மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. முந்தியதில் தேவைகள் எல்லையற்றுக் காணப்படப் பிந்தியதன் மத்தியில் அவை மட்டுப்படுத்தப்பட்டனவாயுள்ளன. முதலாளித்துவ முறையில் தொழில், குடும்பம் என்பவற்றுக்கிடையிலான பிரிவு தெளிவானதொன்ருயிருப்பது மட்டுமன்றிக் குடும்பத்தின் பங்கு தொடர்ந்து குறைவடைந்து செல்வதொன்ருகவே காணப்படும். ஆனுல் சுதேச சமூக முறைமையில் குடும்பத்துக்கும் தொழிலுக்கு மிடையிற் பெருமளவு வேறுபாடு இல்லை. இலாப உணர்வோ, போட்டியோ, ஒழுங்கான தொழில் முறையோ அங்கிருப்பதில்லை. அதற்குப் பதிலாக மத, இன, மற்றும் மரபு ரீதியான சமூக நோக்கங்களே அங்கு காணப்படுகின்றன. முதலாளித்துவத்தின்கீழ் தொழிற்பிரிவு முக்கிய அம்சமாயிருக்க, மரபுவழி வந்த சுதேச முறையில் சுயதேவைப் பூர்த்தி செய்யும் சீவனோபாய உற்பத்தியிலீடுபடும் சுயமான குடும்பங்களே காணப்படுகின்றன. சுருக்கமாகக் கூறின் தமது இரட்டைத் தன்மைக்கான ஒரு முன்கூட்டிய நிலைமையாக போக் வெளியீட்டுச் சந்தை, ஊதியச் சந்தை என்பவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட தொடர்புகளினூடாக எல்லையோரங்களில் மாத்திரம் ஓரளவு தொர்பு கொள்ளும் இரு வேறுபட்ட சமூக முறைமைகள் நிலவுகின்றன என எடுத்துக் கொள்ளுகின்ருர்.

தமது ஆய்வில் போக் வெளிப்படுத்தும் முக்கிய உண்மை யாதெனில் மேற்கத்திய கிழக்கத்திய சமூகங்களின் பொருளாதார நடவடிக்கைகளின் நோக்கங்களிலான அடிப்படை வேறுபாடாகும். மேற்கு நாடுகளிலும், கீழைத்தேசங்களிலிருந்த மேற்கத்திய 'தனிப் பிரதேசங்களிலும்' பொருளாதார நடவடிக்கை பொருளியற் தேவையின் நிமித்தம் அமைந்திருக்க, கிழக்கு நாடுகளில் அது பிரதானமாகச் சமூகத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆகவே முதலாளித்துவ சமூகங்களுக்குப் பொருத்தமான பொருளியல் விதிகள், முதலாளித்துவமும், குடியான்களுடைய பொருளாதாரமும் அருகருகே காணப்படும் ஒரு சமூகத்துக்குப் பொருந்தமாட்டாது. சாதன ஒதுக்கீடு, வருமானப் பங்கீடுபோன்றவற்றை நவ—பழம் பொருளியற் தத்துவமாகிய எல்லை விளைவுக் கோட்பாட்டைக் கொண்டு விளக்க முற்படுவதை போக் குறிப்பாகக் கண்டித்தார். கீழைத்தேச சமூகங்களிலுள்ள சாதனங்களின் அசைவற்ற தன்மையின் காரணமாக இவை பொருந்தமாட்டா என இவர் கருதினுர்.

தமது கோட்பாட்டின் மூலம் இவர் வழங்க முற்பட்டிருந்த முக்கிய கொள்கை விளக்கம் யாதெனில், மேற்கத்திய தொழில் நுட்ப முறைகளையும், நிறுவன அமைப்புக்களையும் இந்தோனேசியாவில் (அதாவது ஆசியப் பொருளாதார அமைப்புகளில்) புகுத்த முனைதல் எந்தவிதமான குறிப்பிடத்தக்க ஒரு விளைவையும் ஏற்படுத்த மாட்டாது என்பதேயாகும். முதிர்ச்சியடைந்த முதலாளித்துவத்தை, முதலாளித்துவத்துக்கு முந்திய நிலையிலுள்ள குடியான்கள் பொருளாதாரத்தில் அறிமுகம் செய்தல், பிந்தியதன் சமநிலையைத் தளம்பச்செய்வது மாத்திரமன்றி, மேற்கத்திய பொருளாதாரங்களைப் போன்று முதலாளித்துவம் படிப்படியாக வளர்ச்சியடைவதையும் முற்ருகத் தடுத்துவிடுகின்றது. மரபுவழிவந்த குடியான்கள் விவசாயத்தில் நவீன நுட்பங்களைப் புகுத்துதல் தலா வெளியீட்டை

அதிகரிக்கமாட்டாது. ஆனால், நீண்ட காலத்தில், சனத்தொகை வளர்ச்சிவிகிதம் விரைவடைவதற்கே உதவி புரிகின்றது. இத்தகைய சமூக–பொருளியல் இரட்டைத் தன்மை ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்காவது நிலையானதொன்றாகக் காணப்படும். சமூக–பொருளியல் இரட்டைத் தன்மை யுடைய நாடுகளின் சமூக–பொருளாதாரக் கொள்கை அடிப்படையில், இருவேறுபட்ட பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும், இந்தப் பிரிவினை குறிப்பிட்ட சமூகங்களின் கொள்கைப் பிரயோகத்துக்கேற்ப அமைந்திருக்க வேண்டுமென்றும் போக் முடிவாக எடுத்துக்கூறினார்.

போக் தமது நிலையான இரட்டைத் தன்மைக் கோட்பாட்டை வெளியிட்ட நாள் முதலே அது ஏனைய டச்சுப் பொருளியலாளரின் பலத்த கண்டனத்துக்குள்ளாகியிருந்தது. போக் கோட்பாட்டைக் கண்டிப்பவருள் ஒருவராகிய பேகர் (D. H. Burger) என்பார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> 'இவர் எடுத்துக்கொண்ட முறைமைகளின் வரையறை காரணமாகச் சில பொருளியல் அம்சங்களை, சுய தேவைப் பூர்த்திசெய்யும் முதலாளித்துவத்துக்கு முந்திய கிராமம் என்ற வகையில் மிகத் தாழ்த்தியும், வேறு சிலவற்றை உயர் முதலாளித்துவம் என்ற வகையில் மிக உயர்த்தியும் எடுத்துக்கூற வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால், இந்தோனேசிய சமூகத்திற்கும் மேற்கத்திய சமூகத்துக்குமிடையில் இடையீடு இருப்பது உண்மையாயினும், இது நடைமுறையிலிருப்பதைவிடப் பெரிதுபடுத்திக் கூறப்படுகின்றது. இதன் விளைவாக இந்தோனேசியர்களின் பொருளாதார நடவடிக்கைகளும். உண்மையாக நடைமுறையிலிருப்பதைவிடப், பழமையானவையாக எடுத்துக் கூறப்படுகின்றன.'

போக் தமது கோட்பாட்டைக் கட்டியெழுப்பிய அத்திவாரமாகக் கருதக்கூடிய தேவைகளுக்கிடையிலான பாகுபாட்டையும் பலர் கண்டித்துள்ளனர். தேவைகளைப் பொருளியல் ரீதியானவை, அவ்வாறல்லாதவை எனப் பிரித்தல் பொருத்தமற்றதென எடுத்துக்காட்டப்பட்டது.

காலப்போக்கில் மேற்கத்திய பொருளியற் கோட்பாட்டில் ஏற்பட்ட அபிவிருத்திகளின் விளைவாக போக் கருத்துக்களுக்கெதிராக எழுந்த கண்டனங்களும் கூடியளவுக்கு ஆழம் பெற்றன. சமீப காலத்தில் பெஞ்சமின் ஹிகின்ஸ் (Benjamin Higgins) போக் கருதிய நடைமுறை அவதானங்கள் உண்மையிற் சரியானவைதானா என்றதொரு சந்தேகத்தைக் கிளப்பியுள்ளார். பேகர் என்பாரைப் போன்றே இவரும் போக் இரட்டைத்தன்மையின் தராதர அளவை மிகைப்படுத்திவிட்டாரெனவே கருதுகின்றார். அத்துடன் இரட்டைத்தன்மை கிழக்கத்திய பொருளாதாரங்களுக்கு மாத்திரம்தான் உரியதென்பதை ஹிகின்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்குநாடுகளிலேயே பயன்படுத்தப்படும் நுட்பங்களின் மட்டம், பொருளியற் சமூக நலன், பொருளியற் சமூக நடத்தை என்பவை பொறுத்துத் துறைகளிடையே வேறுபாடு காணப்படமுடியும். போக் காட்டிய உதாரணங்களுக்கு முரணான பல உதாரணங்களைத் தந்து மேற்கத்திய பொருளியற்பாகுபாடு கீழைத் தேசங்களுக்கும் பொருந்தக்கூடியதே என இவர் எடுத்துக்காட்டுகின்றார். மார்ஷல் (Alfred Marshall), ஷும்பிற்றர் (Joseph Schumpeter) ஆகியோருக்குப் பிந்திய மேற்கத்திய சிந்தனைகளை போக் நன்கு அறிந்திராததன் காரணமாகவே அவற்றின் பிரயோகத்தை இவர் தவறாக எடை போட்டாரென ஹிகின்ஸ் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், போக் கோட்பாட்டுக்கெதிராக எழுந்த கண்டனங்கள், குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்திச் செய்முறையை விளங்கிக்கொள்வதற்குரிய ஒரு கருவி என்ற வகையிற், கோட்பாட்டின் முக்கியத்துவத்தை எவ்

வகையிலும் குறைத்திருப்பதாகக் கூற முடியாது. போக் கூறும் பல அம்சங்கள் கைத்தொழில் அபிவிருத்திக்குட்படாத சமூகங்கள் பற்றிய உண்மைகள் பலவற்றை நேரடியாகக் கண்டறிந்ததன் விளைவேயாகும். இதனால், இவை கூடியளவு நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. போக் கோட்பாடு ஒருகுடியேற்ற நாட்டுவாத அடிப்படையிலிருந்து உருவாகியுள்ளபோதிலும், புதிதாகச் சுதந்திரம் பெற்ற பல நாடுகளின் திட்டமிடல் நிறுவனங்களும், பொருளாதாரக் கொள்கையை வகுப்பதற்குப் பொறுப்பாயுள்ள உத்தியோகத்தரும் வெளிப்படையாக அல்லது மறைமுகமாக இந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளனரெனலாம். உதாரணமாக, நவீன பொருளியலில் 'பின்புறம் சரிந்து செல்லும் நிரம்பற்கோடு' எனப் பிரபல்யம் பெற்றிருக்கும் 'நிரம்பலின் நேரெதிர் நெகிழ்ச்சி' (உயர்ந்த லாபம், உயர்ந்த வேதனம் என்பவற்றின் மத்தியில் பொருளியல்முயற்சியில் ஏற்படும் குறைவு) இரட்டைப் பொருளாதாரங்களின் ஒரு முக்கிய பண்பெனப் போக் கொண்டார். இது இன்றும் மேற்கத்திய நாடுகளல்லாத கிராமிய சமூகங்களின் பிரச்சனையாயிருப்பதோடு, விவசாயத்தில் உற்பத்தித் திறமை அதிகரிக்காமலிருப்பதற்குரிய தர்க்கபூர்வமான நியாயமாகவும் எடுத்து விளக்கப்படுகின்றது. ஒரு வகையில் பல குறைவிருத்தி நாடுகள் கனரகக் கைத்தொழில் வளர்ச்சி, இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்கள் என்பவற்றுக்கு முக்கியத்துவமளித்து செயற்கை உர உற்பத்தி, விவசாய இரசாயனப் பொருள் உற்பத்தி, பண்ணை உபகரணங்களின் கைத்தொழில் என்பவற்றிற் போதியளவு முதலீடுகளை மேற்கொள்ளாமைக்கு இதுவே மறைமுகமான காரணமாகவும் இருந்திருக்கலாம். இதனால் பல நாடுகள் விவசாய அபிவிருத்தியை விட்டுக்கொடுத்துக் கைத்தொழில்களை வளர்க்க முற்பட்டுள்ளன எனலாம்.

போக் ஆய்வு தெளிவாக்க முயல்வதெல்லாம் என்னவெனில், குறைவிருத்திப் பொருளாதாரமொன்றின் உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்புத் தானாகவே சேமிப்பு, முதலீடு என்பவற்றை உருவாக்குமென எதிர்பார்த்தால் அது முற்றும் தவறாகும். தவிர, முதலீடு நிச்சயம் உற்பத்தி அதிகரிப்பைக் கொண்டுவருமென எதிர்பார்த்தால் அது இன்னும் தவறாகும். தகுந்த உள்ளீட்டு — வெளியீட்டு விகிதாசாரங்களை முன்கூட்டியே கருத்திற்கொண்டு குறைவிருத்தி நாட்டுக்கெனத் தீட்டப்படும் எந்தவொரு திட்டமும், அந்நாட்டின் கிராமப்புறங்களிற் காணப்படும் நிலைமைகளைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளதென்றே கூறவேண்டும். பொருளாதார அபிவிருத்திப் பிரச்சனைகளை அணுகுவதற்கு முன்பாகப் பொருளாதார அபிவிருத்திக்கான சமூகரீதியான முன்கூட்டிய நிலைமைகள் பற்றிய தெளிந்த அறிவைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். சமூக, கலாச்சார அம்சங்கள் அபிவிருத்திப் பிரச்சனையின் 'எச்சங்கள்' என்ற முறையிற் கருதப்படாமல், அவற்றுக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுத்து, அவற்றைத் தகுந்த வகையிற் கருத்திற்கொண்டே குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த முற்படவேண்டும்.

மேலும் சமீப காலத்தில் சிங்கர் என்பார் (H. W. Singer) ஒழுங்கான வேதனம் வழங்கும் ஊழியம் நிலவும் வரையறுக்கப்பட்ட துறைக்கும், வேலையின்மை, கீழ் உழைப்பு என்பன பல வடிவங்களில் நிலவும் கிராமியத் துறைக்குமிடையிலான பிளவின் அடிப்படையில் தற்காலத்தில் ஏற்படும் இரட்டைத்தன்மை, வழமையான மேற்கத்திய கருதுகோள்களை நேரடியாகவோ அல்லது மாற்றங்களின்றியோ பிரயோகிக்கக் கூடாதென்ற போக் நிலைமையை உறுதிப்படுத்துவதாக உள்ளது எனக் கருதுகின்றார். மிகை ஊழியத்தைக் கொண்ட பொருளாதாரம் அமுலிலிருக்கும் குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை இது பெரிதும் உண்மையென்பதைச் சிங்கர் வலியுறுத்துகின்றார். ஆகவே, முடிவாகக் கூறுமிடத்து போக் தமது இரட்டை அமைப்புக் கோட்பாட்டில், அபிவிருத்திப்

பிரச்சனைகளை அணுகுமிடத்துப் பொருளியலுடன் தொடர்புபடாத கலாச்சார மற்று மனித நடத்தை சம்பந்தப்பட்ட காரணிகளைக் கவனத்திற் கொள்ளுதல் அவசியமென்பதையே வலியுறுத்துகின்றார். எனினும், இவர் இழைத்த தவறு யாதெனில் தமது கோட்பாட்டைச் சமூக ரீதியில் வெளிப்படுத்துவதற்குப் பதிலாகப் பொருளியல் ரீதியில் வெளிப்படுத்தியதேயாகும்.

IV

'தனிப்பிரதேச இரட்டைத்தன்மை' மறுபுறம், வர்த்தகக் கோட்பாட்டினர் பலருடைய முயற்சிகளைப் பிரதிபலிப்பதாயுள்ளது. உள்நாட்டுச் சந்தைக்கு மாத்திரம் உற்பத்தி செய்யும் குறைந்த உற்பத்தித் திறனைக் கொண்டுள்ள ஒரு துறையுடன், ஏற்றுமதிக்கென உற்பத்தி செய்யும் உயர்ந்த உற்பத்தித் திறன்கொண்ட ஒரு துறை இணைந்திருத்தலை இது விளக்குகின்றது. சமூகவியற் கோட்பாட்டைப் போன்றன்றி இரட்டைத் தன்மைக்குரிய காரணங்களை இது தொழில்நுட்ப ரீதியில் ஆராய்கின்றது. இவ்வாறு செய்யுமிடத்துத் தனிப்பிரதேச இரட்டைத்தன்மைக் கோட்பாடு 'பின்தங்கிய' துறையைப் பூரணமான சீவனோபாய மட்டத்துறையாகக் கருதுவதில்லை. அதற்குப் பதிலாக மிகக் குறைந்தளவான பொருளியற் சிறக்குமியல்பைக் கொண்டு பொருளியல் நடவடிக்கையின் பரந்ததொரு நடுவலயத்தில் அமைந்திருக்கும் துறையாகவே அது கருதப்படுகின்றது. அதன் மூலவளங்களின் ஒரு பகுதி சீவனோபாய மட்ட நடவடிக்கை நோக்கியும் மறு பகுதி பணம் சம்பாதிக்கும் நடவடிக்கை நோக்கியும் முடக்கப்பட்டிருக்கின்றது. எனவே, தனிப்பிரதேச இரட்டைத் தன்மை குறைவிருத்திப் பொருளாதாரங்கள் பற்றிய தனது நோக்கிற் கூடியளவு நடைமுறைத்தன்மை வாய்ந்ததெனலாம்.

தனிப்பிரதேச இரட்டைத் தன்மையின் தோற்றம் அறிவியல், தொழில் நுட்பம் என்பவை பொறுத்துச் சர்வதேச ரீதியில் ஏற்படக்கூடிய ஏற்றத் தாழ்வுடன் தொடர்புடையதாகும். இதனையே சிங்கர் 'சர்வதேச இரட்டைத் தன்மை' என அழைக்கின்றார். கோட்பாட்டு ரீதியில், நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியானது நாளடைவில் சுலபமடைந்து வந்திருக்க வேண்டும். ஏனெனில் நாடுகளின் வளர்ச்சியுடன் அறிவியல், தொழில் நுட்பம் என்பனவும் பெருகிச் சென்றதாற் பிந்தி வளர்ச்சியடையும் நாடுகள் இந்த இருப்பிலிருந்து வேண்டிய அறிவு, அநுபவம் என்பவற்றைப் பயன்படுத்தக் கூடியதாயிருந்திருக்க வேண்டும். கைத்தொழிற் புரட்சியைத் தொடர்ந்து அறிவியல், தொழில் நுட்ப அறிவு கட்டற்ற ஒரு வேகத்திற் பெருகியிருந்த தென்பதும் உண்மையாகும். அதே போன்று மேற்கூறிய செய்முறை ஒரு குறிப்பிட்ட நிலை வரை அமுலிலிருந்த தென்பதும் உண்மையேயாகும். ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள், உதாரணமாக, அபிவிருத்தியின் முதற் கட்டத்தில் வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படும் பெரிய பிரித்தானியா, பிரான்ஸ் போன்றவற்றைவிட விரைவாகவே அபிவிருத்தியடைந்தன. மூன்றாவது கட்டத்தில் வளர்ச்சியடைந்த ரஷியா, ஜப்பான் போன்றவை இதற்கு முந்திய இரு கட்டங்களிலுமிருந்த நாடுகளை விடக் கூடிய விரைவுடன் வளர்ச்சியடைந்தன. நான்காவது கட்டத்தில் அபிவிருத்தியடைந்த அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து என்பவற்றைப் பொறுத்தவரையும் இதே செய்முறை திரும்பவும் ஏற்பட்டது. ஆனால் இந்த நிலைக்கப்பால், பெரும்பாலான ஆசிய நாடுகளும், ஆபிரிக்க நாடுகளும் அபிவிருத்தியடையத் தொடங்கிய கட்டத்தில் இந்தச் செய்முறை எதிர்பார்த்தவாறு இயங்கத் தவறிவிட்டது. ஏற்கெனவே திரட்டப்பட்டிருந்த அறிவியல், தொழில் நுட்ப அறிவைத் தகுந்த வகையில் பயன்படுத்துவதற்குப் புதிய நாடுகள் தவறியபோது சர்வதேச ரீதியில் இரட்டைத் தன்மையானது ஏற்படலாயிற்று. தொகையளவில் அறிவானது அதிகரித்துச் சென்ற அதே நேரத்தில், அதன் சேர்க்கை குறைவிருத்தி நாடு

களின் பிரச்சனைகளுக்குப் பொருத்தமற்றதாக ஆகிக்கொண்டிருந்தது. சுருக்கமாகக் கூறின், அறிவியல், தொழில் நுட்பம், முகாமை என்பவற்றில் ஏற்பட்டிருந்த பிரமிக்கத்தக்க முன்னேற்றங்களைப் பயன்படுத்தக் கூடியளவுக்கு இந் நாடுகளின் தரம் உயர்வடைந்திருக்கவில்லை. அதாவது புதிய குறைவிருத்தி நாடுகளின் வளர்ச்சி மட்டம் மிகக் குறைவாக இருந்ததால், மேற்கூறிய துறைகளில் ஏற்பட்ட உயர் முன்னேற்றம் இந் நாடுகளுக்குப் பொருத்தமற்றதாக இருந்தது.

சர்வதேச இரட்டைத்தன்மை பல வழிகளில் உள்நாட்டு இரட்டைத் தன்மைக்கு வழி வகுத்தது. தொழில்நுட்ப ரீதியில் நன்கு முன்னேற்றமடைந்த மேற்கத்திய நாடுகள் குறைவிருத்தி நாடுகளிற் பெருந்தோட்டங்களையும், சுரங்கங்களையும் திறந்த போது தமது நாடுகளிற் காணப்பட்டது போன்ற நுட்பங்களையே இவற்றிற் பயன்படுத்தின. உதாரணமாகப் பெருந் தோட்டங்களின் முகாமை அபிவிருத்தியடைந்த நாடொன்றின் கைத்தொழில் நிறுவனத்தின் முகாமையைப் பெருமளவுக்கு ஒத்திருந்தது. நவீன தொழில்நுட்பம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதிமூலம் தருவிக்கப்பட்டதனாலும், குறைவிருத்தி நாடுகளின் சுதேச அறிவியல், தொழில்நுட்பத் திறமை மிகக் குறைவாக இருந்ததனாலும் இறக்குமதி செய்யப்பட்ட தொழில்நுட்பம் குறைவிருத்தி நாடுகளில் வேரூன்றவில்லை. அத்துடன் அது குறைவிருத்தி நாடுகளின் தேவைகளுக்கேற்ற முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டதொன்றாயுமிருக்கவில்லை. ஆகவே. நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டவிடத்து அது எங்கு புகுத்தப்பட்டதோ, அந்தக் குறிப்பிட்ட பிரதேசத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதொன்றாகவே இருந்தது. இந்தப் பிரதேசம் நவீன தன்மையின் ஒரு 'தனிப்பிரதேசம்' ஆயிற்று. இத்தகைய புதிய முதலீடுகளின் விளைவுகள் பொருளாதாரத்தின் ஏனைய பகுதிகளுக்குப் பரவவில்லை. சுதேசிகளின் பலவீனமான நிலை ஒருபுறமிருக்க, அந்நிய முதலீட்டாளர் தமது அறிவு, அநுபவம் என்பவற்றைப் பரப்புவதிலும் பெருமளவு அக்கறை காட்டவில்லை. சுரங்கங்கள், பெருந்தோட்டங்கள்என்பவற்றைக் கட்டுப்படுத்திய பெரிய சர்வதேச நிறுவனங்கள் தமது லாபங்கள், பங்குலாபம் என்பவற்றின் பெரும்பகுதியைத் தமது சொந்த நாடுகளுக்கு அனுப்பின. இதனால் இவை குறைவிருத்தி நாட்டினுட் திரும்பவும் முதலீடு செய்யப்படுவதற்குச் சந்தர்ப்பம் இருக்கவில்லை. அது மட்டுமன்றித் தமக்குத் தேவையான தரமான முகாமை, மற்றும் திறமைகளை வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதையே நிறுவனங்கள் பெரிதும் விரும்பின. உள்நாட்டவரை இந்தச் சேவைகளுக்குப் பயிற்றுவிக்கும் நீண்ட செய்முறையை மேற்கொள்ள விரும்பாமல் அவர்களைத் தொழிலாளர்களாக அல்லது தரம் குறைந்த குமாஸ்தாக்களாகவும், மற்றும் தரகர்களாகவுமே பயன்படுத்த முன்வந்தன. ஆகவே, நவீன தொழில் நுட்பம், முகாமை என்பன அந்நிய நிறுவனங்களுடன் தொடர்புகொண்டிருந்தமை ஆரம்ப முதலீட்டு மட்டத்திற்கு மேலாக, அவை, குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரத்திற்குட் பரந்து செல்வதற்கு ஒரு தடையாகவே இருந்ததெனலாம்.

எனினும், வரலாற்று ரீதியிற் தனிப் பிரதேச இரட்டைத்தன்மை முதலாளித்துவத்தின் அபிவிருத்தியுடனும், குறிப்பாக சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியுடனும் தொடர்புடையதேயாகும். குடியேற்ற நாட்டுவாதம் இதற்கு மேலும்உறுதியளித்ததென்பதிற் சந்தேகமில்லை. கடந்த நூற்றாண்டில் அயனமண்டல நாடுகளின் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி வைத்த காரணிகளுள் ஒன்று அவற்றின் உற்பத்திப் பொருட்களுக்கு மேற்கு நாடுகளில் ஏற்பட்ட கேள்வியாகும். முதல் விளைவுப் பொருட்களின் கூடிய நிரம்பல், புதிய நிரம்பல் என்பவற்றை மேற்கு வல்லரசுகள் நாடி நின்றமை அயனமண்டலப் பிரதேசம் 'திறந்துவிடப்படுவதற்கு' வழி வகுத்தது.

19ஆம் நூற்றாண்டின் வளர்ச்சியுடன், உணவுப் பொருட்கள், மூலப் பொருட்கள் என்பவற்றின் மூலகங்கள் என்ற வகையில் அயனமண்டலக் குடியேற்ற நாடுகளின் முக்கியத்துவமும் அதிகரித்துச் சென்றது. இவை அப்போது நிலவிய பொருளாதாரக் கொள்கையாகிய தலையிடாக் கொள்கையின் கீழ் பெருந்தோட்டச் சொந்தக்காரரால் உற்பத்தி செய்யப்படுவனவாக இருந்தன.

இக்காலப் பகுதியில் வளர்ச்சியடைந்த உலகரீதியான பொருளியற் சிறப்புநிலையானது, பொதுவாக வாணிப வாதத்தைத் தொடர்ந்து வந்த வர்த்தகத் தாராண்மைக் கொள்கைகளுடனேயே தொடர்புபடுத்தப்படுகின்றது. பழம் பொருளியலாளராகிய அடம் சிமித் (Adam Smith), டேவிட் றிக்காடோ (David Ricardo), தோமஸ் மால்தஸ் (Thomas Malthus), ஜெரமி பெந்தம் (Jeremy Bentham), ஜோன் ஸ்ரூவட் மில் (John Stuart Mill) போன்றோர் நாடுகளிடையான வர்த்தகத்தில் எந்தளவுக்குக் குறைவான தடைகள் நிலவுகின்றனவோ அந்தளவுக்கு உலகப் பொருளாதார அபிவிருத்தி பூரணமானதொன்றாக இருக்குமெனக் கருதினர். வரிகள், தீர்வைகள், அநுமதிப் பங்குகள் போன்ற இவ்வாறான முறைகளினாற் தடைப்படுத்தப்படாத இத்தகைய வர்த்தகமே 'கட்டற்ற வர்த்தகம்' என அழைக்கப்பட்டது. கட்டற்ற வர்த்தகத்தின் மூலம் ஒரு பகுதியிற் தட்டுப்பாடாகவுள்ள பொருட்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகிருப்பது மாத்திரமன்றி, அப் பகுதியிற் சிறப்பாக, மிகையாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பதற்குரிய இலகுவான சந்தை வசதிகளையும் பெற்றுக் கொள்ள முடியுமென இவர்கள் எடுத்துக் காட்டினர். இந்தக் கொள்கையின் செல்வாக்கின்கீழ்ப் பல குடியேற்ற நாட்டு அரசாங்கங்கள், தமது குடியேற்ற நாடுகளின் ஏற்றுமதி வர்த்தகத்தைப் பெருமளவு மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டன. சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியுடன் ஏற்றுமதிச் சந்தையானது குடியேற்ற நாட்டு நடவடிக்கைகளின் முக்கிய கருவியாயிற்று.

எனினும், அந்நிய முதலீடு முடக்கப்பட்ட மார்க்கம், அதன் வழி உருவான அபிவிருத்தி அமைப்பு முறை என்பன, இந்த முதலீட்டைப் பெற்றுக்கொண்ட நாடுகளுக்கு எவ்வளவு தூரம் உதவின என்பது சந்தேகத்துக்கிடமானதே. அந்நிய முதலீடானது ஒரு சிறப்புநிலை முதலீடாக இருந்தது மட்டுமன்றி, ஒரு குறிப்பிட்ட உற்பத்தியாக்கத் திறன் வளைகோட்டின் வழியாகவே அசைந்தும் சென்றது. பெருமளவுக்கு இந்த முதலீடு வேறு துறை நோக்கித் திருப்ப முடியாததொன்றாகவும் காணப்பட்டது. ஏனெனில், போக்குவரத்துத் தொடர்பு போன்ற துறைகளில் முடக்கப்பட்ட வளங்கள், உற்பத்திச் சாதனங்கள் என்பவை 'குறிப்பிட்ட' தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டு ஏற்றுமதிச் சந்தைக்கு அல்லது சில சந்தர்ப்பங்களில் ஒரு தனி ஏற்றுமதி உற்பத்திக்கு மாத்திரமே சேவை செய்தன.

அபிவிருத்தியடைந்த நாடுகள் குறைவிருத்திப் பிரதேசங்களிற் பொருளியல் ரீதியில் அக்கறைகொண்ட நேரத்தில், அப்போது நிலவிய மாற்றுவிகிதத்தின்படி பயிற்சியற்ற ஊழியம், நிலம் என்பவற்றுக்கான செலவுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளை விடக் குறைவிருத்தி நாடுகளில் மிகக் குறைவாக இருந்தன. ஆகவே, இக் காரணிகளைக் கூடியளவு பயன்படுத்தக்கூடிய முன்னேற்றம் வாய்ந்த நுட்பங்களை உற்பத்தி வழிகளில் ஈடுபடுத்தல் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குக் கூடிய நன்மை பயப்பதாயிருந்தது. ஆனால் தொழில்நுட்பம், முகாமை சம்பந்தப்பட்ட, பயிற்சிபெற்ற ஊழியத்தின் நிலைமை முற்றும் வேறுபட்டதாயிருந்தது. நிலவுகின்ற ஊழியத்துக்கேற்பத், திறமை மிகுந்த ஊழியத்தைப் பெறுவதற்கு அல்லது பயிற்றுவிப்பதற்கான நிரம்பற் செலவு குறைவிருத்தி நாடுகளில் அபிவிருத்தியடைந்த நாடுகளைவிட மிகக்கூடியதொன்று

யிருந்தது. எனவே, திறமை மிகுந்த ஊழியத்தைக் கொண்டு நவீன நுட்பங்களின் அடிப்படையிலான உற்பத்திகளைத் தமது நாடுகளிலேயே மேற்கொள்வதில் முன்னேற்றமடைந்த நாடுகள் செலவீட்டு நன்மையை அநுபவிக்கக் கூடியதாயிருந்தன.

மேற்கூறிய இத்தகைய தொடர்புகளின் அடிப்படையிற் குறைவிருத்தி நாடுகளில் ஏற்றுமதி வழி உற்பத்தி செய்யப்பட்டவற்றில் அதிக லாபந் தரக்கூடியதாயிருந்தவை, தொழில்நுட்ப ரீதியிற் பயிற்சியற்ற ஊழியம், நிலம் என்பவற்றைக் கூடுதலாகப் பயன்படுத்தி உற்பத்திசெய்யக் கூடியதாயிருந்த உற்பத்திகளேயாகும். பல அயனமண்டல நாடுகளில் பரந்த நிலப் பரப்புக்களும், மலிந்த பயிற்சியற்ற ஊழியமும் அந்நிய முயற்சியாளருக்கு இலகுவாகக் கிடைக்கக்கூடியனவாயிருந்தன. இலங்கை, மலேயா போன்ற நாடுகளில் பயிற்சியற்ற ஊழியம் இலகுவிற் கிடைக்காமலிருந்தவிடத்தும், அதனைச் சனத்தொகை மிகுந்த இந்தியாவிலிருந்தோ, சீனாவிலிருந்தோ இலகுவில் இறக்குமதி செய்துகொள்ளக் கூடியதாயிருந்தது. தேயிலை, கோப்பி, றப்பர் போன்றவற்றின் உற்பத்தி மேற்கூறிய உயர்ந்த ஊழியக் குணகத்தைக் கொண்டிருந்தது மாத்திரமன்றி, இந்நாடுகளின் தரைத்தோற்றம், காலநிலை என்பன்வற்றுக்குகந்தனவாகவும் காணப்பட்டன. இவற்றின் பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய வேறு பல அம்சங்களும், அபிவிருத்தியடைந்த நாடுகளைவிடக் குறைவிருத்தி நாடுகளில் மலிவாகவேஇருந்தன. உதாரணமாகக் காட்டு நிலங்களைப் பயிர்செய் நிலங்களாக்குதல். நீண்டகாலப் பயிர்ச்செய்கை, பதப்படுத்தல், பாதுகாத்தல் என்பவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்தல் போன்ற செய்முறைகளில் மூலதனப் பொருட்கள், பயிற்சிபெற்ற ஊழியம் என்பவற்றைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகப் பயிற்சி பெறாத ஊழியத்தைப் பயன்படுத்துவதிலான பதிலீட்டு நெகிழ்ச்சி மிகக் கூடியதாயிருந்தது.

எவ்வாறாயினும், ஏற்றுமதிக் கைத்தொழில்களான இத்தகைய 'சிறப்புநிலை' உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு எத்தகைய இயக்கரீதியான நன்மையையும் கொண்டுவரவில்லை. நவீன போக்குவரத்து அறிமுகம், மற்றும் வெளிப்பாட்டு விளைவின் காரணமாக மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட சில புதிய தேவைகள் என்பவை தவிரச் சர்வதேச வர்த்தகம் குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை வேறு எதுவித விளைவையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. முதல்விளைவுப் பொருட்களின் உற்பத்தி, போக்குவரத்துத் தொடர்புகளின் முன்னேற்றம் என்பன மொத்த வளங்களின் எண்ணிக்கையை அதிகரித்ததென்பதிற் சந்தேகமில்லை. எனினும், இந்த எண்ணிக்கை அதிகரிப்பு, குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை உற்பத்தி அதிகரிப்பை ஏற்படுத்தத் தவறிவிட்டது. இந்த முறையீடுகளின் மூலம் சாதாரணமாக ஒருவர் எதிர்பார்க்கும் முதற்தர, இரண்டாந்தரப் பெருக்கல் விளைவுகள், குறைவிருத்தி நாடுகளிலன்றி மூலதனம் உருவாகிய மேற்கத்திய நாடுகளிலேயே ஏற்பட்டன. உற்பத்திக் காரணிகள் வெளி நாடுகளில் உருவாகியவை என்பது மட்டும் இதற்குரிய நியாயமாக இருக்கவில்லை. லெவின் (J. V. Levin) என்பார் சுட்டிக் காட்டுவதுபோலக் காரணிகளின் வெளி நாட்டுடமை ஏற்றுமதிப் பொருளாதாரங்களின் காரணி நிரம்பல், காரணிகளின் விகிதாசாரம் என்பவற்றை மாற்றுவதைவிட அதிகமாக ஒன்றும் செய்திருக்க முடியாது. ஆனால் இதற்குரிய உண்மையான காரணம் ஏற்றுமதித் தொழில்களின் வருமானம் தொடர்ச்சியாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டதேயாகும்.

குடிபெயர்ந்து வந்த காரணிகளாகிய ஊழியம், மூலதனம், முயற்சி என்ற மூன்றுமே தமது வருமானத்தின் ஒரு பகுதியைத் தம் சொந்த நாட்டிற்கு அனுப்பின. எனினும், சாதனங்கள் சிலவற்றைப் பராபரிப்பது தவிர வேறு நுகர்வுச் செலவுகள் எதுவுமேயில்லாத மூலதனம்தான் மிகக் கூடிய தொகையை அனுப்பக்கூடியதா

விருந்தது. எனவே சர்வதேச ரீதியில் இடம் பெறும் இலாபங்களின் மாற்றம் மிகப் பரந்ததொன்றாகக் காணப்பட்டது. 1906ஆம் ஆண்டுக்கும் 1910ஆம் ஆண்டுக்கு மிடையில், உதாரணமாக, 151 மில்லியன் பவுண் வட்டியாகவும், பங்குலாபங்களாக வும் வருடா வருடம் பெரிய பிரித்தானி யாவுக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தது. ஏற்றுமதிக் கைத்தொழிலின் மிக உயர்ந்த வருமானங்களைப் பெற்றுக்கொண்டிருந்த பெருந்தோட்ட முயற்சியும் (முகா மையாளர், பெருந்தோட்ட ஏஜண்டுகள் போன்றோர்) தனது உழைப்பிற் கணிச மான பகுதியைச் சேமிப்பு நிதி, ஓய்வு கால நிதிக் கொடுப்பனவுகள், குடும்பத் தேவைகள், விடுதலைகாலச் செலவுகள் என்பவற்றின் வடிவில் வெளிநாடுகளுக்கு எடுத்துச் சென்றது. தபால், வங்கி வசதி களினூடாகத் தம் தாய்நாட்டுக்கு அனுப் பப்பட்டுக்கொண்டிருந்த குடி பெயர்ந்த ஊழியத்தின் வருமானமும் குறிப்பிடத் தக்க தொன்றாகவே இருந்தது. இலங்கை யில், உதாரணமாக, 1925 — 1945 க்கு மிடைப்பட்ட காலப்பகுதியில் இந்தியத் தோட்டத் தொழிலாளர் வருடா வருடம் சராசரி 2·3 மில்லியன் ரூபாய்களை இந்தி யாவுக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர்.

இத்தகைய நிலைமைகளின் கீழ் ஏற்று மதிக் கைத்தொழில் வருமானங்களின் செலவீடு குறைவிருத்தி நாடுகளில் எத் தகைய பொருளாதார அபிவிருத்தியையும் தூண்டிவிடவில்லை. உள் நாட்டில் ஏதா வது வருமானம் மீதமாயிருந்தால், அது ஏற்றுமதித் துறையுடன் இணைந்த செல்வம் மிகுந்த ஒரு கூட்டத்தவரின் கைகளையே சென்றடைந்தது. இவர்கள் அதனைப் பெரும்பாலும் ஆடம்பரப் பொருட்களின் உயர்மட்ட இறக்குமதிகளிற் செலவிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் சேமித்த தொகைகள் கூட உள்நாட்டுச் சந்தைக்கு உற்பத்தி செய்யக்கூடிய வகையில் ஏற்று மதிப் பொருளாதாரத்தின் எஞ்சிய பகுதி யில் முடக்கப்படவில்லை. ஆனால் கூடிய இலாபந் தரக்கூடிய வகையில் உள்நாட் டில் அல்லது வெளிநாட்டிலிருந்த ஏனைய ஏற்றுமதிக் கைத்தொழில்களிலேயே முத லீடு செய்யப்பட்டன. மேற்கத்திய முத லீட்டாளரைப் பிற்பற்றிக் குடியான்கள் காசுப் பயிர்களைப் பயிர் செய்தனரென்பது உண்மையாயினும், முன்னையவருக்குக் கிடைத்த அதேயளவு நன்மைகள் அவர் களுக்குக் கிடைக்கவில்லை. அத்துடன் அவர்கள் மரபுரீதியான உற்பத்தி முறை களைப் பயன்படுத்தித் தமது மேற்கத்திய சகாக்களைவிடப் பின்னடைந்தநிலையிலேயே காணப்பட்டனர்.

மேற்கூறிய அபிவிருத்திகளின் விளை வாகக் குறிப்பிட்ட நாடொன்றின் ஒரே அமைப்பினுள் வேறுபட்ட முன்னேற்ற மட்டங்களுடன் இரு துறைகள் உருவாக்கப் பட்டிருந்தன. ஒருபுறம் குறைந்த வேதனம் பெறும் பெருந்தொகை தொழிலாளரை வேலைக்கமர்த்திய சுரங்கங்கள், பெருந் தோட்டங்கள் என்பவை காணப்பட்டன. மறுபுறம் வேதனம் பெறும் ஊழியத்தை மிக அருமையாகவே பயன்படுத்தும் சிறு குடியான்கள் அல்லது குடும்பங்களுக்குச் சொந்தமான பண்ணைகள் காணப்பட்டன. புதிதாக உருவாக்கப்பட்ட முதல் விளைவு உற்பத்தித்துறை பொருளாதார அமைப்பி னுள் ஒரு 'தனிப் பிரதேசமாக' அல்லது முதலீட்டை மேற்கொண்ட அபிவிருத்தி யடைந்த நாட்டின் ஒரு 'வெளி நிலைய மாக' இருந்து வரலாயிற்று. ஆகவே, பழமையான ஏற்றுமதிப் பொருளாதார மானது ஓர் இரட்டைப் பொருளாதார மாக ஆயிற்று. இரு துறைகளுக்குமிடையே பொருளாதார ரீதியிலான தொடர்புகள் மிகக் குறைவான ஒரு நிலையிலேயே காணப் பட்டன. ஏற்றுமதித் துறையிலிருந்து, மரபு ரீதியான துறை நோக்கி ஏற்பட்ட 'பரவல் விளைவுகள்' மிகக் குறைவாகவே இருந்தன. ஆதர் லூயிஸ் (Arthur Lewis) இந் நிலைமையைச் சிறப்பாகப் படம் பிடிக் கின்றார். அவர் சொற்களில், '..... ஏகாதி பத்திய வாதிகள் மூலதனத்தை முதலீடு செய்து, தொழிலாளரை வேலைக்கமர்த்து கின்றனர்; வேதனங்களைக் குறைவாக

வைத்திருத்தல் அவர்களுக்கு நன்மை பயப்பதாகும். சீவனோபாயப் பொருளாதாரத்தை வறிய நிலைக்குள்ளாக்கும் வகையில் அவர்கள் பாரதூரமான முயற்சிகளை மேற்கொள்ளாத விடத்தும், அதன் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் அவர்கள் எதுவுமே செய்யவில்லை.'

தனிப்பிரதேச இரட்டைத்தன்மை தொழில்நுட்ப வேறுபாடுகளின் வழி விளக்கப்பட்டாலும், தொழில்நுட்ப இரட்டைத் தன்மையின், ஆகக் குறைந்தது, மூன்று வேறுபட்ட தோற்றங்களை நாம் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

பென்சமின் ஹிகின்ஸ் (Benjamin Higgins) போக் வெளியிட்ட சமூகவியற் கோட்பாட்டை வெளிப்படையாக நிராகரித்து நவீன, சீவனோபாயத் துறைகளுக்கிடையிலான தொழில்நுட்ப ரீதியான வேறுபாடுகளை வலியுறுத்தினார். அவர் கருத்தில் நவீன துறையானது சுரங்கங்களிலும், பெருந்தோட்டங்களிலும் முதல் விளைவுப் பொருட்களை உற்பத்தி செய்வதிற் கூடிய கவனம் செலுத்தும் கைத்தொழிற் துறையாகும். அதே நேரம் மரபு ரீதியான துறையானது உணவுப் பொருட்கள், கைத்திறப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தியிற் கவனம் செலுத்தும் கிராமியத் துறையாகும். ஆகவே இரு உற்பத்திகளையும் முறையே கைத்தொழில் மூலப் பொருட்கள் அல்லது ஏற்றுமதிக்கான முதல் விளைவுப் பொருட்கள், உள்நாட்டு நுகர்விற்கான அத்தியாவசியப் பொருட்கள் எனப் பாகுபாடு செய்து கொள்ளலாம். நவீன துறை வெளிநாடுகளிலிருந்து தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்து கொள்ளுவதொன்றாகவும் மூலதனச் செறிவுடையதாகவும் உள்ளது. இறக்குமதி செய்யப்பட்டதொழில்நுட்பம், அடிப்படையில், ஊழியத்தை மீதப்படுத்துவதொன்றாகவும், உயர்ந்த நிலையான தொழில் நுட்பக் குணகத்தைக் கொண்டதாகவும் உள்ளது. அதாவது நிலையான விகிதாசாரத்தில் உற்பத்திக் காரணிகள் இணைக்கப்பட வேண்டும். இதற்கு மாறாக, மரபு ரீதியான துறை மாறுபடும் தொழில் நுட்பக் குணகத்தைக் கொண்டது. அதாவது ஊழியம், மூலதனம் என்பவற்றுக்கிடையிலான பல்வேறு காரணி விகிதாசாரங்களின் மூலம் பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். அத்துடன் அது ஊழியச் செறிவுடைய உற்பத்தி முறைகளையே பயன்படுத்துகின்றது.

ஹிகின்ஸ் கருத்துப்படி 19ஆம் நூற்றாண்டு அபிவிருத்திச் செய்முறையின்மூலம் குறைவிருத்தி நாடுகளில் ஏற்பட்ட ஒரு முக்கிய விளைவு யாதெனில் விரைந்த சனத்தொகைப் பெருக்கமாகும். 'சில நாடுகளில் சில காலப்பகுதிகளில் சனத்தொகையின் அதிகரிப்பு விகிதம் கைத்தொழிற் துறையில் மூலதனம் திரட்டப்பட்ட விகிதத்தை விட மிகக்கூடியதொன்றாயிருந்தது', என அவர் குறிப்பிட்டார். எனினும், இந்த அதிகரித்த சனத்தொகையை நவீன துறை உறிஞ்சிக்கொள்ள முடியவில்லை. இத்துறையில் உண்மையில் நிலவிய அல்லது நிலவுவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான தொழில் நுட்பக் குணகமே இதற்குக் காரணமாயிருந்தது. ஆகவே, சனத்தொகை பெருகிய அதே விகிதத்திற் தொழில்வாய்ப்புக்கள் பெருகவில்லை. இந்நிலையில் மாறுபடும் தொழில்நுட்பக் குணகம் நிலவிய துறையிலேயே அதிகரித்த சனத்தொகை தனது வாழ்க்கைக்குத் தங்கியிருக்கவேண்டியதாயிருந்தது. மரபு ரீதியான துறையில் நிலவிய மாறுபடும் தொழில் நுட்பத்தின் மத்தியிலும், ஆரம்பத்தில், நிலத்துக்கான ஊழியத்தின் விகிதாசாரத்தை நிலையாக வைத்திருக்கும் வகையில், அதிகரித்த சனத்தொகையைச் சமாளிக்க மேலதிக நிலம் செய்கைக்குட்படுத்தப்பட்டது. எனினும், இவ்வகையில் திறமையாகப் பயன்படுத்தக்கூடிய நிலத்தின் அளவு மட்டுப்படுத்தப்பட்டதொன்றாகவே இருந்தது. ஏனெனில் நிலத்தின் நிரம்பல் ஒருபுறமிருக்கக் கிடைத்த நிலத்தைத் தரமான செய்கைக்குட்படுத்துவதற்கு அவசியமாயிருந்த வேறு வடிவிலான மூலதனமும் இத்துறைக்குக் கிடைக்க

வில்லை. எனவே இறுதியில் சிறந்த நிலத்தின் நிரம்பல் குறைவடைந்துகொண்டு சென்றதும் மூலதனத்துக்கான (பெரும்பாலும் தரமுடைய நிலம்) ஊழியத்தின் விகிதாசாரமும் குறிப்பிடத்தக்களவுக்கு அதிகரிக்கலாயிற்று. தொழில்நுட்பக் குணங்கள் மாறுபடக்கூடியவையாயிருந்ததால் மரபுரீதியான துறையானது மேன்மேலும் ஊழியச் செறிவுடையதொன்றாக ஆகிக் கொண்டிருந்தது.

இந்த விளக்கத்திற்கெதிரான முக்கிய கண்டனம் யாதெனில், பொதுவான விவசாயம் – கைத்தொழில் என்ற பிரிவின் அடிப்படையில் எழும் ஓர் இரட்டை அமைப்பு நிலைக்கு அல்லாமல் பெருந்தோட்டம்–மரபுரீதியான விவசாயம் என்ற வகையில் அமைந்த இரட்டை அமைப்பு நிலைக்கு இது பெருமளவு பொருத்தமற்றதாகும். நவீனதுறையிற் காரணி விகிதாசாரங்கள் தொழில்நுட்ப நிலைமைகளினால் உயர்ந்த மூலதனச் செறிவு நிலையில் வைக்கப்பட்டுள்ளனவென்றும், மரபு ரீதியான துறையில் அவை மாறுபடக்கூடியவையென்றும், இத்துறையில் ஊழியம் நிலையாக இருப்பதால் ஊழியச் செறிவுள்ள முறைகள் பயன்படுத்தப்படுகின்றனவென்றும் ஹிகின்ஸ் விளக்கம் கூறுகின்றது. ஆனால் நவீனதுறை பெருந்தோட்ட விவசாயத்தை மையமாகக் கொண்டுள்ள இலங்கை, மலேசியா போன்ற நாடுகளின் பொருளாதாரங்கள் இந்தப் பொது விளக்கத்தினின்றும் வேறுபடுகின்றன. இப்பொருளாதாரங்களின் நவீன துறையில் ஊழியம் கூடிய உற்பத்தித்திறன் உடையதாயினும், ஒப்பீட்டு ரீதியில் இந்தத் துறையும் ஊழியச் செறிவுடையதொன்றேயாகும். ஆரம்பத்திலிருந்தே இது பெருந்தொகைப் பயிற்சியற்ற ஊழியத்தை உற்பத்தி நடவடிக்கைளுக்குப் பயன்படுத்துகின்றது. ஆகவே, பெரியதோர் ஊழியப் படைக்கு அவசியமில்லாத நவீன துறை பற்றிய கருத்து இங்கு பொருத்தமற்றதாகும். பெருந்தோட்டங்களுக்கு மிகப் பெரியதோர் ஊழியப்படை அவசியமாக இருந்தது மட்டுமன்றி, ஹிகின்ஸ் கருதியது போன்று, தொழில்வாய்ப்புக்கள் இத்துறையில் அருமையாக இருக்கவில்லை. அதற்குப் பதிலாகக் கிராமிய சனத்தொகை தொழில் தேடுவதற்கு வேண்டியளவு வாய்ப்புகள் காணப்பட்டன. எனினும் சில குறைவிருத்திப் பொருளாதாரங்களில், மரபுரீதியான துறையானது பயிற்சியற்ற ஊழியத்துக்கு ஏற்பட்ட இந்தக் கேள்வியைப் பூர்த்திசெய்ய முன்வரவில்லை. மாறாகப் புதிய அபிவிருத்திகளிலிருந்து ஒதுங்கியிருக்கவே விரும்பியது.

இத்தகைய நிலையைப் பகுப்பாய்வு செய்யும் ஸ்னொட்கிறாஸ் (D. R. Snodgrass) அதே நேரத்தில், தனிப்பிரதேச இரட்டைத் தன்மைக்கு முற்றும் வேறுபட்டதொரு விளக்கத்தை அளிக்கின்றார். இவர் கருத்துப்படி சுதேச மரபு ரீதியான துறை நவீன துறையின் ஊழியத் தேவையைப் பூர்த்தி செய்ய முன்வராமைக்குரிய காரணங்களை இரண்டாக வகுக்க முடியும்.

(i) கலாச்சார ரீதியான காரணங்கள்

(ii) மாற்றுப் பொருளாதார வாய்ப்புக்கள்.

இலங்கையில் உதாரணமாகப் 19ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டங்கள் அபிவிருத்தியடைந்துகொண்டிருந்த அதே நேரத்தில் இயற்கை மிகச் சாதகமான கால நிலையையும், மரபு ரீதியான பயிர்களைப் பயிரிடக்கூடிய வேறு நன்மைதரும் நிலைமைகளையும் நாட்டுக்கு வழங்கியிருந்தது. அதுமட்டுமன்றி அடர்த்தியான சனத்தொகை யொன்றுகூட நாட்டிற்காணப்படவில்லை. மரபு ரீதியான துறையின் உற்பத்தியாளருக்கு இயற்கை வழங்கியிருந்த சுலபமான வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துப் பெருந்தோட்டங்கள் வழங்கிய வேதனம் கவர்ச்சியற்றதொன்றாக இருந்திருக்கலாம். அதே நேரத்தில் மரபு வழிவந்த சிங்களக் கலாச்சார அம்சங்கள் சில, (குறிப்பாக அவை தூய நிலையில் பாதுகாக்கப்பட்ட மலைநாட்டில்)

வேதனம் பெறும் ஊழியத்தை வெறுக்கக் காரணமாக இருந்திருக்கலாம். எனினும், ஸ்னெட்கிருஸ் கருத்துப்படி, மேற்கூறிய காரணங்கள் காலப்போக்கிற் சரிப்படுத்தக்கூடியவையேயாகும். ஆகவே, நிலைமையில் மாற்றம் ஏற்படாததற்குரிய காரணத்தை வேறோர் இடத்திலேயே ஆராய வேண்டும். மலிவான இந்திய ஊழிய நிரம்பல் வேண்டியளவு கிடைக்கக்கூடியதாயிருந்த நிலையில் சுதேச இலங்கையரை நவீன துறை நோக்கிக் கவரக்கூடிய ஒரு வேதனத்தைப் பெருந்தோட்டங்கள் ஒரு போதும் வழங்க முன்வரவில்லை. எனவே, இங்கு இரட்டைத் தன்மையானது கலாச்சார ரீதியான காரணிகளாலோ அல்லது நிலையான மூலதனச் செறிவுடைய தொழில் நுட்பத்தினாலோ விளக்கப்படவில்லை. ஆனால் மரபு ரீதியான, நவீன துறைகளின் பொருளாதார நடவடிக்கைகளுக்குக் கிடைக்கும் ஒப்பீட்டு விளைவு அல்லது வேதனம் என்ற இலகுவான கருத்தினாலேயே விளக்கப்படுகின்றது. தொழில் நுட்ப வேறுபாட்டின் மத்தியிலும், குடிபெயர்ந்த ஊழியத்தை இலகுவிற் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பிருக்குமாயின், அதுவே இரட்டைத் தன்மை நிலைத்திருப்பதற்குப் பொறுப்பாயுள்ள முக்கிய சக்தியாக விளங்குகிறதெனலாம். வேதனங்கள், சுதேச ஊழியம் மரபு ரீதியான துறையிலிருந்து நவீனதுறை நோக்கி அசைவதற்கு எத்தகைய தூண்டுதலையும் அளிக்காத ஒரு மட்டத்தில் வைத்திருக்கப்பட்டன. உள்நாட்டிற் பொருளாதார நிலைமைகள் சீர்கெட்டவிடத்துக் குடியான்கள் பெருந்தோட்ட வேலைகளை ஏற்றுக்கொள்வதற்குச் சித்தமாயிருந்தமை இந்த வாதத்துக்கு வலிமையளிப்பதாக உள்ளது.

மின்ற் (Hla. Myint), மறுபுறம், ஸ்னெட்கிருஸ் தெரிவித்த பெருந்தோட்டங்கள் பின்பற்றிய மலிவு ஊழியக் கொள்கை பற்றிய கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அதே நேரத்தில், தனிப்பிரதேச இரட்டைத்தன்மைக்குரிய அடிப்படையாக மூலதனச் சந்தையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார். அவருடைய முறைமையில் பொருளாதார ஒழுங்கு, உற்பத்தி வழிமுறைகள் என்பவற்றிற் குடியான்கள் துறைக்கும், பெருந்தோட்டத் துறைக்குமிடையே காணப்படும் இரட்டைத் தன்மைக்கு ஒத்ததாக இந்த இரு துறைகளுக்குமிடையே நிதிரீதியலமைந்த இரட்டைத் தன்மையொன்று காணப்படுகின்றது. இது மூலதனச் சந்தையின் பூரணத்துவமற்ற நிலை காரணமாகவே எழுகின்றது. நவீன வர்த்தக, கைத்தொழில், விவசாயத் துறைகள் நிதிச் சந்தைகளை இலகுவில் அடையக்கூடியதாயிருந்தது மாத்திரமன்றி மரபுரீதியான துறைக்குக் கிடைப்பதைவிட மிக மலிந்த விலைக்கு மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததால் மூலதனச் செறிவு மிகுந்த தொழில்நுட்பம், ஊழிய விளைதிறனின் உயர்ந்த மட்டம் என்பவற்றை அவை அடைய முடிந்தது. நவீன அபிவிருத்திகளாற் கவரப்பட்ட குடியான்கள் மேலதிகப் பண வருமானத்தை ஓரளவு பெற்றுக்கொள்ளும் பொருட்டுப் புதிய பயிர்களின் செய்கையில் ஈடுபட்டனரென்பது ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்டது. இது விடயத்தில் அவர்கள் எதிர்நோக்கிய மிகப்பெரிய தடை தமக்கு வேண்டிய மூலதனத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமையேயாகும். மேற்கத்திய வணிக வங்கிகள் உள்நாட்டுத் துறையைவிட ஏற்றுமதித் துறையிற் கூடிய கவனம் செலுத்தியது மாத்திரமன்றிக் கடன் வழங்குவதில் இவை பின்பற்றிய கடுமையான, பழமைவாய்ந்த விதிகள் உள்நாட்டவரில் மிகச் செல்வம் படைத்தவர்களாற் கூடப் பூர்த்திசெய்ய முடியாதவையாயிருந்தன. உதாரணமாக, இலங்கையின் உள்நாட்டு முதலாளிகள் வர்த்தக அடிப்படையிலமைந்த தெங்குப் பயிர்ச் செய்கை நோக்கித் தமது கவனத்தைத் திருப்பிய போது இந்தக் குறைபாடு தெளிவாகத் தெரியலாயிற்று.

இதுமட்டுமன்றித் தனிப்பிரதேச நிதித் துறையின் நடவடிக்கைகள் 'தவறான' கடன் பாய்ச்சல் முறைகள் ஏற்படுவதற்கும் வழி வகுத்ததாக மின்ற் சுட்டிக்காட்டுகின்றார். இந்த நிதி நிறுவனங்கள் உலக

நிதி நிலையங்களின் நிதியைக் குறைவிருத்தி நாடுகள் நோக்கிப் பாயச் செய்வதற்குப் பதிலாகத் தாம் உள்நாட்டிற் சேகரித்த சேமிப்பின் ஒரு பகுதியை உலக நிதி நிலையங்களுக்குக் கடனாகக் கொடுத்தன. இதனால் குறைவிருத்தி நாடுகளிலிருந்து மூலதனத்தின் தேறிய வெளிப் பாய்ச்சல் ஏற்படுவதற்கு இவை காலாவிருந்தன. ஆகவே இந்த மூலதன நிதியிலிருந்து குறைவிருத்தி நாடுகள் பெற்றுக் கொண்டிருக்கக் கூடிய நன்மைகள் அவற்றுக்குக் கிடையாமற் போயின. அந்நிய மூலதனத்தின் மொத்தப் பாய்ச்சல் என்ற வகையில் நோக்குமிடத்துக்கூட, 19ஆம் நூற்றாண்டிற் குறைவிருத்தி நாடுகளில் மூடக்கப்பட்டதில் அந்நிய மூலதனத்தின் பங்கு பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டப்படுவது போன்று மிகக் கூடிய தொன்றல்ல. குறைவிருத்தி நாடுகளை ஒரு கூட்டமாக எடுத்து நோக்குமிடத்து அவை, சர்வதேச மூலதனப் பாய்ச்சல் மிக உயர்ந்த கட்டத்தில் இருந்ததாகக் கருதப்படும். 1914ஆம் ஆண்டுக்கு முந்திய தசாப்தத்தில் வருடமொன்றுக்கு 500 மில்லியன் டொலர்களுக்கு அதிகமான அந்நிய முதலீட்டைப் பெற்றுக்கொண்டிருக்க முடியாதெனக் கையின்கிறெஸ் (A. K. Cairncross) மதிப்பிடுகின்றார். எனவே முடிவாக நோக்குமிடத்து, நவீன தனிப் பிரதேசம் உள்நாட்டு பொருளாதார அபிவிருத்தியின் மீது ஏற்படுத்திய தாக்கம், அதன் மலிவு ஊழியக் கொள்கை, முதலீட்டை உள்நாட்டுப் பொருளாதாரம் நோக்கித் திசை திருப்பத் தவறியமை என்ற காரணங்களினாலும் மட்டுப்படுத்தப்பட்டதொன்றாகவே இருந்தது.

V

மேற்கூறிய ஆய்விலிருந்து, தனிப்பிரதேச இரட்டைத் தன்மையின் வளர்ச்சி மேற்கத்திய முயற்சியின் அடிப்படையிற் குறைவிருத்தி நாடுகளில் உருவாகிய முதலாளித்துவ முறைமை தனது அபிவிருத்தியின் போது முழுப் பொருளாதாரத்தையும் உள்ளடக்கத் தவறியமையின் விளைவே என்பது தெளிவாகின்றது. வேறொரு வகையிற் கூறின் இந்த அபிவிருத்தியின் 'பரவல் விளைவுகள்' மிகப் பலவீனமானவையாயிருந்தன. ஒரு முக்கியமான அளவுக்கு ஏற்றுமதிப் பொருளாதார மொன்றின் அபிவிருத்தி அமைப்பு முறை அது முதன் முதல் நிறுவப்பட்ட நிலையிலேயே நிர்ணயிக்கப்பட்டுவிட்ட தெனலாம். பெரும்பாலான ஏனைய பொருளாதாரங்களின் சாதாரண வளர்ச்சியில் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திற்குமான உற்பத்திக் காரணிகள் அக் குறிப்பிட்ட முறைமையின் சமுதாயப் பெறுமதிகள், பொருளாதாரச் சன்மானங்கள் என்பவற்றின் விளைவுகளாக நிரம்பல் செய்யப்பட்டன. எனினும் பெருந்தோட்டப் பொருளாதாரங்களைப் பொறுத்தவரை அப்போது நிலவிய சமூக, பொருளாதார முறைமைகள் வேண்டியிருந்த காரணிகளாகிய மூலதனம், ஊழியம், முயற்சி என்பவற்றை வழங்க முடியவில்லை. பிறநாடுகளிலிருந்தே அவற்றைத் தருவிக்க வேண்டியதாயிற்று. ஆகவே சர்வதேசக் காரணி அசைவே பெருந்தோட்டப் பொருளாதாரங்கள் நிறுவப்படுவதற்கான அடிப்படையாயிற்று எனலாம்.

பழம் பொருளியலாளருடைய கோட்பாட்டின்படி சர்வதேச வர்த்தகம் ஒரு நாட்டின் உள்நாட்டு வருமானம் பரம்பலில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம், வேறுபட்ட கைத்தொழில்களிற் காணப்படும் வேறுபட்ட காரணி விகிதாசாரங்களுக்கேற்பவே கணிக்கப்படுகின்றது. இவ்வாறு செய்யுமிடத்து ஒரு நாட்டின் வளங்கள் தரப்பட்டவையாக, நிலையாக உள்ளனவென்றும், அந்த நாடு ஏற்றுமதி உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமாயின் உள்நாட்டுக் கைத்தொழில்களிலிருந்து வளங்களை மீளப் பெற்று அவற்றை ஏற்றுமதி உற்பத்திகளிற் பயன்படுத்துவதன் மூலமே அது சாத்தியமாகுமெனவும் கொள்ளப்படுகின்றது. காரணிகளின் சர்வதேச ரீதியான அசை

வின்மையும், உள்நாட்டு ரீதியிலான அசைவுமே சர்வதேச வர்த்தகம் பற்றிய பழம் பொருளியற் கோட்பாட்டின் அடிப்படையாக இருந்தது. 'வர்த்தகம் செய்யும் நாடுகளிடையேயான கட்டற்ற அசைவுத் தன்மை குறைவாயிருத்தலே சர்வதேச வர்த்தகத்துக்குரிய முக்கியபண்பை வழங்குகிறது' என ரௌசிக் என்பார் (F. W. Taussig) குறிப்பிட்டார். ஒரு நாட்டின் உற்பத்திக் காரணிகள், அந் நாட்டுக்குப் புறம்பான பிரதேசம் நோக்கி அசைந்து செல்லமுடியாதெனவும், ஆனால் அக் குறிப்பிட்ட நாட்டின் ஒரு பிரதேசத்திலிருந்து மறு பிரதேசத்துக்கு அசைந்து செல்லலாமெனவும் கருதப்பட்டது. ஆகவே இதன் மூலம் வெளிப்படும் கருத்து யாதெனில் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள காரணிகளின் ஏற்கனவே தரப்பட்ட நிரம்பல்தான் ஓர் ஏற்றுமதிக் கைத்தொழிலின் நிலையத்தை நிர்ணயிக்கமுடியு மென்பதேயாகும்.

எனினும் மேற்கூறிய தத்துவங்கள் குறைவிருத்தி நாடுகளில் முதல்விளைவு ஏற்றுமதிக் கைத்தொழில்கள் நிறுவப்பட்டமையை விளக்கமுடியவில்லை. அவற்றைப் பொறுத்தவரை உள்நாட்டுக்காரணிகளின் ஏற்கனவே தரப்பட்ட நிரம்பல் போதுமானதொன்றாக இராதது மட்டுமன்றிப் பொதுவாக அசைவற்றதாகவும் காணப்பட்டது, காரணிகளின் சர்வதேச அசைவு வழியாகவே பெருந்தோட்டக் கைத்தொழில்களை நிறுவுவதும், அவற்றை இயக்குவதும் சாத்தியமாயிற்று. அவற்றின் நிலையமும் உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பொதுவாக நிலையப்படுத்திய பொதுத் தத்துவங்களைப் பின்பற்றி மிகக் குறைந்த அசைவுத் தன்மை பொருந்திய உற்பத்திக் காரணிகளாகிய காலநிலை, தரைத்தோற்றம், நிலவளம் என்பவற்றினாலும் சந்தைக்கு அண்மித்த நிலையினாலுமே நிர்ணயிக்கப்பட்டிருந்தன. ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்குரிய வளங்களின் ஒரு பகுதி உள்நாட்டுத் துறையிலிருந்து பெறப்பட்டதென்பது உண்மையே. எனினும் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட மூலதனம், ஊழியம், முயற்சி என்பவற்றுடனும், அவை உருவாக்கிய விரிவுச் சக்தியுடனும் ஒப்பிடுமிடத்து இந்தப் 'பிரதியீட்டு' விளைவு மிகக் குறைவானதொன்றேயாகும்.

ஏற்றுமதிக் கைத்தொழில்கள் ஒரு முறை நிறுவப்பட்டதும் இந்தக் காரணிகள் அசைவுத் தன்மை பெற்று அந்தக் குறிப்பிட்ட பிரதேசத்தினுள் ஒரு கைத்தொழிலிலிருந்து மற்றொன்றுக்கு அசைந்து சென்றன. இலங்கையில், உதாரணமாக, அவை தேயிலை, றப்பர்க் கைத்தொழில்களிடையே அசைந்து சென்றன. அது மட்டுமன்றி, ஓர் ஏற்றுமதிப் பொருளாதாரம், நிலவளங்கள் அல்லது கனிவளங்கள் முடிவுற்றதனாலோ, கிருமிகள் தாவரத்தை அழித்ததனாலோ அல்லது வேறு மலிந்த பிரதியீடுகளைப் பயிர் செய்ததனாலோ, தொடர்ச்சியான பல ஏற்றுமதிக் கைத்தொழில்களை ஏற்றுக்கொண்டிருந்தால், அத்தகைய சந்தர்ப்பங்களிலும் இவ்வுற்பத்திக் காரணிகள் புதிய கைத்தொழில்களை நாடிச் செல்லக்கூடியதாயிருந்தன. அல்லது வேறு இடங்களில் தொழில் தேடக்கூடியதாயிருந்தன. இலங்கையில் கோப்பிச் செய்கை அழிவுற்றபோது, அதில் இடம் பெற்றிருந்த காரணிகள் எல்லாவற்றையும் தேயிலைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்குச் சுலபமாகப் பயன்படுத்த முடிந்தது. எனினும் ஆரம்பத்திற் காரணிகளின் சர்வதேச ரீதியிலான அசைவே ஏற்றுமதிக் கைத்தொழில்கள் நிறுவப்படுவதற்கும் அதன் வழி இரட்டைத் தன்மை உருவாவதற்கும் காலாயிற்று.

- கென்லி சேட் வகைகள்
- வெலோனு பெனியன்கள்
- டியூரோ சேட் வகைகள்

ஆகியவற்றின் வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

T. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

42–44, பெரியகடை :: யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7034

Booked

by

VIMS

14, CLOCK TOWER ROAD,

JAFFNA.

" அழகான புகைப்படங்களை
எடுத்து வழங்குவதில்
அனுபவம் வாய்ந்த
புகைப்பட நிலையம்

அசோகா போட்டோ

மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்

உங்களை அழைக்கின்றார்கள்
கிருஷ்ணா ஏஜென்சி
ஸ்தாபனத்தார்
இந்தியா, மலேசியா, சிங்கப்பூர்
மற்றும்
உலகின் எத்திக்கும் செல்வதற்கான
பாஸ்போர்ட், விசா,
விமான நுளைவு சீட்டு என்பன
பெற்றுக்கொள்ளவும்,
மற்றும் பிரதான தேவைகளுக்கும்

கிருஷ்ணா ஏஜென்சி
1/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

உங்கள் அன்றாட தேவைகளான
- நவதானிய வகைகள்,
- உழுந்து, தட்டாப்பயறு,
- பருப்பு வகைகள்.

என்பவற்றுடன், எமது தயாரிப்பான
அப்பளம், நல்லெண்ணெய்
என்பவற்றையும்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள

சிவகுமார் ஸ்ரோர்ஸ்
282, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

நவநாகரீக ஜவுளிகளுக்கும்
பிடவைத் தினுசுகளுக்கும்

கீரன்ஸ் KEERANS
27/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மூலதனத் திட்டங்களின் இலாப இயல்பு முறைகள்

டி. ரி. இராஜரட்ணம்,
Dip. in Accy.,
Dip. P. F. M., F. C. M. A. (Lond.)
பிரதிப் பணிப்பாளர் (நிதி) உள்ளூராட்சி
வீடமைப்பு நிர்மாண அமைச்சு
பகுதிநேர விரிவுரையாளர்
வித்தியோதய வளாகம்

தொழில் நிலையங்கட்குத் தேவைப்படும் மூலதனத்திற்கு ஒரு செலவு உண்டு. இந்த மூலதனத்திற்கு நியாயமான பங்கிலாபம் (பங்குமுதல்) அல்லது வட்டி (வட்டி உழைக்கும் முதல்) கொடுபடல் வேண்டும். ஆகவே இப் பணத்தை முதலீடு செய்யும் திட்டங்களின் விளைவுவீதம் அதன் செலவிலும் பார்க்க கூடுதலாக இருப்பது அவசியம். முதலீடு செய்யும் திட்டங்களின் இலாப இயல்பை அறிந்து கொள்வதற்கு பல முறைகள் உள. இம் முறைகளில் கழிவு முறைக் காசு ஓட்ட முறை (Discounted Cost flow Method) சிறந்ததாகும். இம் முறைகளின் பிரதான நோக்கம் பல மாற்றுத் திட்டங்களில் திறமான முதலீட்டுத் திட்டத்தைத் தெரிவு செய்வதாகும். இம் முறைகள் இவற்றிற்கு முன்னிருந்த பழைய மூன்று முறைகளின் திருத்தமாக வளர்ச்சி யடைந்தன. பழைய மூன்று முறைகளான மொத்த வருமானம், சராசரி வருமானம், முதல் திரும்பிவரும் கால முறை என்பனவற்றைக் கவனித்துவிட்டு திருந்திய கழிவுமுறைக்காசு ஓட்டமுறைகளுக்கு வருவது பொருத்தமாகும்.

மொத்த வருமான முறை :

இம் முறையின்கீழ் பல மாற்றுத் திட்டங்கள் ஒவ்வொன்றில் எதிர்பார்க்கும் மொத்த இலாபம்—முதலீடு என்பவற்றிற்கிடையிலான சதவிகிதத்தைக் கணக்கிட்டுக் கூடுதலான சதவிகிதமுள்ள திட்டமே சிறந்த திட்டமாக ஏற்றுக் கொள்ளப்படும். இந்த முறையின்கீழ் பணம் சேரும் காலம், வட்டி ஆகியன புறக்கணிக்கப்பட்டுள்ளன. அதாவது இப்போது கிடைக்கும் ரூபாவுக்கு பின்வருடங்களில் கிடைக்கும் ரூபாவின் பெறுமதி சமமாகக் கருதப்படுகின்றன.

சராசரி வருமான முறை:

பல மாற்றுத்திட்டங்களில் எதிர் பார்க்கும் சராசரி வருடாந்த இலாபம் — முதலீடு என்பவற்றிற்கிடையிலான சத விகிதத்தைக் கணக்கிட்டு கூடுதலான சத விகிதமுள்ள திட்டமே சிறந்ததெனக் கருதப்படும். மேலே குறிப்பிட்ட முறையில் உள்ள குறைபாடுகள் இம் முறையிலும் உண்டு. இந்த முறையின்கீழ் ஏதாவது திட்டத்தின் சராசரி வருடாந்த இலாப-முதலீடு வீதம் சாதாரண நிகழும் வீதத்திலும் பார்க்க குறைவாக இருந்தால் அத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

பணம் திரும்பிவரும் காலமுறை: (Pay Back Method)

இந்த முறையின்கீழ் ஒவ்வொரு திட்டத்திலும் முதலீடு அறவிடும் காலத்தை மதிப்பிட்டு, கூடிய கெதியில் முதலீடு அறவிடப்படும் திட்டத்தையே சிறந்த திட்டமென ஏற்றுக்கொள்ளப்படும்.

உதாரணம்:

	திட்டம் A	திட்டம் B
	ரூபா	ரூபா
முதலீடு	**50,000**	**50,000**
தேறிய வருமானம்		
1ஆம் வருடம்	20,000	30,000
2ஆம் ,,	20,000	20,000
3ஆம் ,,	20,000	—
4ஆம் ,,	20,000	—
முதலீடு திரும்பிவரும் காலம்	$2\frac{1}{2}$ வரு.	2 வரு.

இவ்விரு திட்டங்களில் திட்டம் Aஇன் முதலீடு $2\frac{1}{2}$ வருடங்களிலும், திட்டம் Bஇன் முதலீடு 2 வருடங்களிலும் திரும்பி வருவதால் திட்டம் B விரும்பத்தக்கதென ஏற்றுக்கொள்ளப்படும். இந்த முறையில் பணம் சேரும் காலத்தை எடுத்துக் கொண்ட போதிலும் முதலீடு திரும்பி வந்த காலத்திற்குப் பின் சேரும் பணம் கருத்தில் கொள்ளப்படவில்லை.

மேலே கூறப்பட்ட பழைய மூன்று முறைகளின் குறைபாடுகளைத் திருத்தி அமைத்துள்ள முறைகள் தேறிய நிகழ் மதிப்பு முறையும் (Net Present Value Method) விளைவு முறையுமாகும். இவ்விரு முறைகளின் கீழ் காசு வரவுகள் யாவும் வருட முடிவில் சேருவதாகவும், முதலீடு செலுத்துபவை யாவும் வருட ஆரம்பத்தில் செலுத்தப்படுவனவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேறிய நிகழ் மதிப்பு முறை:

இம் முறையின் கீழ் திட்டங்களில் சேரும் காசு ஓட்டங்களின் நிகழ் மதிப்பை அறிந்து மூலதன முதலீட்டுடன் ஒப்பிட்டு அவற்றின் இலாப இயல்பை அறிய முடியும். உதாரணமாக நிகழும் வட்டி 10 வீதமாக எடுத்துக்கொண்டால் இன்றைய ரூபா 100/- ஒரு வருடத்தின் பின் ரூபா 110 ஆகும். ஆகவே ஒரு வருடத்தின்பின் ரூபா 110 இன் நிகழ் மதிப்பு ரூபா 100 ஆகும். அல்லது ஒரு வருடத்தின் பின் ரூபா ஒன்றின் நிகழ் மதிப்பு ரூபா $\frac{100}{110}$ (0·909) ஆகும். இரண்டாம் வருட முடிவில் அதே ரூபா 100, 10 வீத வட்டியில் ரூபா 121 ஆகும். இரண்டாம் வருட முடிவில் ரூபா ஒன்றின் நிகழ் மதிப்பு ரூபா $\frac{100}{121}$ (0·826) ஆகும். இவ்வாறு குறிக்கப்பட்ட வட்டி வீதத்தில் ஒவ்வொரு வருட முடிவிலும் சேரும் ரூபாவின் நிகழ் மதிப்புக்களை அறியலாம். வெவ்வேறு வட்டி வீதத்தில் சேரும் ரூபாவின் நிகழ் மதிப்புக்களைக் கணிப்பதற்கு குறிக்கப்பட்ட வீதத்திற்குப் பொருத்தமான நிகழ்மதிப்பு அட்டவணையை உபயோகிக்கலாம்.

உ + ம்: ஒரு திட்டத்தில் ரூபா 350,000 முதலீடு செலுத்தப் பட்டுள்ளது. இத் திட்டத்தின் வருடாந்த வருமானம் ரூபா 100,000 ஆக அடுத்து 5 வருடங்கட்கு இருப்பின் இக் காசு ஓட்டத்தின் நிகழ் மதிப்புக்கள் பின்வருமாறு: (வட்டி: 10%)

வருடம்	வருமானம்	10 வீதத்தில் கழிவிடுதல் காரணி	வருமானத்தின் நிகழ் மதிப்பு
	ரூபா		ரூபா
1	100,000	0·909	90,900
2	100,000	0·826	82,600
3	100,000	0·751	75,100
4	100,000	0·683	68,300
5	100,000	0·621	62,100
	மொத்த நிகழ் மதிப்பு		379,000

வருமானங்களின் நிகழ்மதிப்பு	379,000
—மூலதன முதலீடு	350,000
தேறிய நிகழ்மதிப்பு	+ 29,000

வருமானத்தின் மொத்த நிகழ் மதிப்பு முதலீட்டிலும் கூடுதலாக இருப்பதால் இத் திட்டம் வரவேற்கத்தக்க திட்டமாகும்.

இதே உதாரணத்தில் முதலீடு ரூபா 400,000ஆக இருந்தால் இத் திட்டத்தின் இலாப இயல்பு பின்வருமாறு :-

வருமானங்களின் நிகழ் மதிப்பு	379,000
—மூலதன முதலீடு	400,000
தேறிய நிகழ் மதிப்பு	— 21,000

இங்கே வருமானங்களின் நிகழ்மதிப்பு மூலதன முதலீட்டிலும் குறைவாக இருப்பதால் இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. எனவே தேறிய நிகழ் மதிப்புமுறை திட்டங்களின் இலாப இயல்பை அளவிட உதவுகின்றது.

விளைவு முறை :

மேலே குறிப்பிட்ட தேறிய நிகழ் மதிப்பு முறையில் திட்டங்களின் தேறிய காசு ஓட்டத்திற்குரிய விளைவு வீதம் யாது என்னும் கேள்விக்கு விளைவுமுறை விடை அளிப்பதாக இருக்கும்.

உ + ம் : ஒரு திட்டத்தின் முதலீடு ரூபா 335,000 ஆகவும், அதன் தேறிய காசு ஓட்டம் வருட மொன்றிற்கு ரூபா 100,000 ஆக அடுத்து 5 வருடங்கட்கு இருப்பின், 10 வீத வட்டியில் வருமானத்தின் மொத்த நிகழ் மதிப்பு மேலே குறிப்பிட்டபடி ரூபா 379,000 ஆகும். இத் திட்டத்தின் தேறிய நிகழ் மதிப்பு ரூபா + 44,000 (379,000 — 335,000). ஆகவே இலாப இயல்பை உடைய திட்டமாகும். நிகழும் வட்டி 15% ஆக இருப்பின் இத் திட்டம் இலாப இயல்பை உடையதா? 15% உரிய நிகழ் மதிப்பு அட்டவணையின் படி இக்காசு ஓட்டங்களின் மொத்த நிகழ் மதிப்பு பின்வருமாறு :

வருடம்	வருமானம்	15% கழிவிடுதல் காரணி	வருமானத்தின் நிகழ் மதிப்பு
	ரூபா		ரூபா
1	100,000	0·869	86,900
2	100,000	0·756	75,600
3	100,000	0·657	65,700
4	100,000	0·571	57,100
5	100,000	0.497	49,700
	மொத்த நிகழ் மதிப்பு		335,000

வருமானங்களின் நிகழ் மதிப்பு	335,000
—முதலீடு	335,000
தேறிய நிகழ் மதிப்பு	0

நிகழும் வட்டியும் காசு ஓட்டங்களின் வீதமும் 15%ஆக இருக்கின்றபடியால் இத் திட்டத்தில் முதலீடு செய்வதால் இலாபமும் கிடையாது. நட்டமும் ஏற்படாது.

ஒரு திட்டத்தின் விளைவு வீதம் மூலதனக் கொள்வனவு வட்டி வீதத்திலும் கூடுதலாக இருப்பின் அத்திட்டம் ஏற்கக் கூடிய திட்டமாகும். மூலதனவிலை, திட்டத்தின் விளைவு வீதத்திலும் கூடுதலாக இருப்பின் அத்திட்டத்தில் முதலீடு செய்வது பொருத்தமற்றது.

வருக! வருக! என அழைக்கிறார்கள்

யாழ்நகரில்

பிறிஸ்டல் ஹோட்டல் தாபனத்தார்

சுத்தமான, சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் ஐஸ் சர்பத் வகைகளுக்கும், மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கும், சுவையான தேநீர் அருந்தவும்

சிறந்த இடம்

பிறிஸ்டல் ஹோட்டல்

ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

இன்றே விஜயஞ் செய்யுங்கள்.

பிறிஸ்டல் ஹோட்டல்

66–B, கஸ்தூரியார் வீதி :: யாழ்ப்பாணம்

ரேடியோ மனுவல்

ரேடியோ ரேப்றெக்கோடர்கள்

விற்பனையாளரும்,

பழுதுபார்ப்பவர்களும்.

- ஸ்பீக்கர்கள்
- ருன்ஸ்போமர்கள்

நிவைன்டிங் செய்பவர்களும்.

ரேடியோ மனுவல்

23/4, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்

- திருமண வைபவங்கள்
- பிறந்ததின வைபவங்கள்

மற்றும்

சகல

விசேஷ வைபவங்களுக்கும்

நாடுங்கள்

போட்டோ இராஜேஸ்

டச் ரோட்,

உடுவில்

எமது நல்லாசிகள்!

ERO

நீங்கள் விரும்பும் பாடல்களை

ஒலிப்பதிவு செய்வதிலும், ரேடியோ, ரேப் ரெக்கோடர்
மற்றும் சகலவிதமான
மின்சார உபகரணங்களைத் திருத்துவதிலும்
திறமை மிக்கவர்கள்

↓

ஈரோ எலெக்ரோனிக்ஸ்

23, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

தொழிற்சாலை: 1, மேல்மாடி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

அன்பளிப்பு!

- அழகுசாதனப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- கோல்ட் கவறிங் நகைகள்
- சிறுபிள்ளைகளின் விளையாட்டுச் சாமான்கள்

ஆகியவற்றுக்குச்
சிறந்த ஸ்தாபனம்

நிஹாஸ்

72, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

வாழ்த்துக்கள்!

அழகிய
பவுண், தங்க, வைர
நகைகளுக்கு
விஜயஞ் செய்யுங்கள்!

எம். கே. எஸ்.
ஜுவல்லர்ஸ்

R. G. பில்டிங்,
61, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்

தந்தி: எம். கே. எஸ்.
போன்: 7547



எமது நல்லாசிகள் !

- அழகிய பவுண் நகைகள்
- தங்கப் பவுண்கள்
- வைரங்கள்

என்பனவற்றிற்கு

★

கே. என். எம். மீறூன் சாஹிப்

தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னதிட்டி : : யாழ்ப்பாணம்

போன் : 585

புதுவருடத்தைக்
குதூகலமாகக் கொண்டாட
குளு குளு வண்ணப்
பட்டாடைகளுக்கும்
கூறைச் சேலைகளுக்கும்
றெடிமேட் உடுப்பு வகைகளுக்கும்
இன்றே விஜயஞ் செய்யுங்கள்

கணேசானந்தாஸ் சில்க் பலேஸ்

15, மக்கள் நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

With the best Compliments
from

For Guaranteed Gold Jewels

New Jewel Palace

68F, KANNATHIDDY
JAFFNA
Phone : 7042

1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிவுகள் — ஒரு கண்ணோட்டம்

ஆர். ஜெயரத்தினராசா, M. A.
பொருளியற்துறை விரிவுரையாளர்
கொழும்பு வளாகம்
பகுதிநேர விரிவுரையாளர்
வித்தியோதய வளாகம்

ஜனநாயக நாடுகளில் அரசியல் மாற்றமானது துப்பாக்கிமுனையில் இரத்தம் சிந்தாது, வாக்குச்சீட்டுக்களால் பொதுத் தேர்தல்கள் மூலம் ஏற்படுத்தப்படுவதாக நம்பப்படுகின்றது. பல ஜனநாயக நாட்டு அரசியல் அநுபவத்தினை நோக்கும்போது அரசியல் மாற்றம் என்ற பதமானது, இரு அரசியற் கட்சிகளின் அதிகார மாற்றத்தினையே அதிகளவில் குறித்து நிற்கின்றது. இந்த வரையறையானது நீண்டகால ஜனநாயக அரசியல் பாரம்பரியத்தினையும், அநுபவத்தினையும் கொண்ட மேலைத்தேய நாடுகளுக்கு மட்டுமன்றி, அண்மைக் காலத்தில் ஜனநாயக அரசியல் முறைகளைப் பின்பற்றிக் கொண்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் பொருத்தமானதாக அமைந்திருக்கின்றது. மேலும் அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றும் சக்தி வாய்ந்த இவ்விரு அரசியற் கட்சிகளுக்கிடையேயும் சமூக, பொருளாதார, அரசியல் விடயங்களைப் பொறுத்தமட்டில் பெருமளவு வேறுபாடுகளை அன்றி, நெருங்கிய ஒருமைப்பாடுகளைக் கொண்டிருப்பதும் மற்றுமொரு பொதுவான தன்மையாகும்.

1948ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் ஜனநாயக அரசியல் வரலாற்றினை நோக்கும்போது, ஒவ்வொரு பொதுத்தேர்தல்களிலும் மேற்கூறிய அம்சமானது உறுதிப்படுத்தப்பட்டு வரும் தன்மையினையே ஒரு அரசியல் மாணவனால் அவதானிக்க முடிகின்றது. ஆனாலும் 1956ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு பொதுத்தேர்தலும் முடிவுற்ற பின்பும் அத்தேர்தல் முடிவுகள் எமது நாட்டு வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளன என்று விமர்

சித்துக் கொள்கின்ற ஒரு அரசியல் மரபும் எமது நாட்டில் வளர்ச்சியடைந்துள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை. இத்தகைய பரந்த அடிப்படையில் அமைந்த விமர்சனத்தை மேற்கொள்வது இக் கட்டுரையின் நோக்கமல்ல. அத்துடன் அது சாத்தியமும் அற்றதாகும். இக் கட்டுரையானது 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகள் எவ்வளவு தூரம் அரசியற் கட்சிகளின் வரலாற்றிலும், வளர்ச்சிப் போக்கிலும் ஒன்றிணைந்ததாக அல்லது முரண்பட்டதாகக் காணப்படுகின்றது, அதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதனையே ஆராய முனைகின்றது. மேலும் வட, கிழக்கு மாகாணங்களில் அரசியற் கட்சிகளின் போக்குப் பற்றிய ஆய்விற்கு இங்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் அரசியற்கட்சிகளின் நிலையும், கொள்கை விளக்கமும் :

இத் தேர்தலில் பல அரசியற் கட்சிகள் போட்டியிட்ட போதும் இரு தனிக் கட்சிகளும், இரு அரசியற் கூட்டணிகளுமே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டன. தனிக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 153 அபேட்சகர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் 145 அபேட்சகர்களும் போட்டியிட்டனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியினைப் பொறுத்தமட்டில், 17 வருடங்களுக்குப் பின்பு முதன்முதலாக இத் தேர்தலிலேயே தனித்து நின்று போட்டியிடும் நிலையினை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இரு அரசியற் கூட்டணிகளும் மிக அண்மைக்காலத்து உற்பத்திகளாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியானது - தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ் கட்சி. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இஸ்லாமிய ஐக்கிய முன்னணி ஆகியனவற்றை இணைத்து 1976ஆம் ஆண்டில் உறுதியான அமைப்பாக உருப்பெற்றதெனலாம். ஐக்கிய இடதுசாரி முன்னணியானது இலங்கை சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்கட்சி, மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய மூன்றும் ஒன்றுசேர்ந்து தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் தினத்திற்கு இரு வாரங்களுக்கு முன்பே உருவாக்கப்பட்டதாகும். இதில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் 23 அபேட்சகர்களும், ஐக்கிய இடதுசாரி முன்னணியின் சார்பில் 130 அபேட்சகர்களும் போட்டியிட்டனர். இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தமட்டில் அரசியற் கூட்டணிகளும், போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கைகளும் அவற்றின் வரலாற்றுடன் இணைந்தனவாகும். ஆனால் தமிழரசுக் கட்சியினைப் பொறுத்த மட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனது முக்கிய முழு அரசியல் எதிரியான தமிழ்க் காங்கிரசுடன் போட்டித் தவிர்ப்பினை ஏற்படுத்திக் கூட்டு முன்னணியாகத் தேர்தலில் போட்டியிடுதல் இதுவே முதல் தடவையாகும்.

அரசியற் கட்சிகள் பொதுமக்களின் ஆதரவைப் பெற்று வளர்ச்சியடைந்து செல்வதற்கு பொதுமக்களின் நம்பிக்கையினைப் பெற்ற கட்சித் தலைமைப்பீடம் இன்றியமையாததொன்றாகும். ஏனைய ஜனநாயக நாடுகளைப் போன்றே இலங்கையின் அரசியற் கட்சிகளின் தலைமைப்பீடமானது செல்வாக்குப் பெற்ற உயர் வகுப்பினரது உடமையாக அமைந்துள்ளது. இலங்கையின் உயர் அரசியல் தலைமைப்பீடமானது பெருமளவிற்கு சிறு பிரிவினர்களான தொழிற் பிரிவினர்களிடமிருந்தே ஏற்படுகின்றது. அநேகமாக சட்டத்தொழில் புரிவோர், ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், வர்த்தகர்கள் ஆகியோராக இருக்கின்றனர்[1]. இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 73 சதவீதமானவர்கள் சிங்கள பௌத்தர்களாக இருப்பதனால், ஒவ்வொரு அரசியற் கட்சியும் பெரும்பான்மையினரின் ஆதரவினைப் பெறும் பொருட்டுச் சிங்கள பௌத்தர் ஒருவரையே தமது தலைவராக

வைத்திருக்க முனைகின்றன. இந்த விடயத்திற் கூட இடதுசாரிக் கட்சிகள் ஏனைய கட்சிகளுடன் ஒருமைப்பாடுடையதாகவே காணப்படுகின்றது.

இத் தேர்தலில் போட்டியிட்ட நான்கு முக்கிய அரசியற் கட்சிகளில் தனித்துப் போட்டியிட்ட இரு கட்சிகளுக்கு மட்டுமே தலைவர் என ஒருவர் காணப்பட்டார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 1960ஆம் ஆண்டிலிருந்து தலைமைப் பதவியினை வகித்துவந்தவராவார். ஐக்கிய தேசியக் கட்சியினைப் பொறுத்தமட்டில் அதன் தலைவரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன 1973ஆம் ஆண்டே தலைமைப் பதவியினை ஏற்றவராவார். எனவே சிறீலங்கா சுதந்திரக் கட்சியினைப் பொறுத்தமட்டில், இத் தேர்தலில் தலைமைப் பீடத்தால் மாற்றமிருக்கவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ புதியதொரு தலைமைப் பீடத்துடன் தேர்தலை எதிர்நோக்கியது. இரு அரசியற் கூட்டணிகளுக்கும் திட்டவட்டமான தலைவர் என ஒருவர் இருக்கவில்லை. ஐக்கிய இடதுசாரி முன்னணியில் இடம் பெற்ற மூன்று கட்சிகளின் தலைவர்களுமே அம் முன்னணித் தலைவர்களாகக் கருதப்பட்டார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் திரு. தொண்டமானே தலைவராகக் கருதப்பட்டபோதும், அவர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பிரதிநிதியாகவே தேர்தலில் போட்டியிட்டார். உண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியானது அதன் இரு இணைச் செயலாளர்களையுமே செயல்முறையில் தலைவர்களாகக் கொண்டு தேர்தற் பிரசாரத்தில் ஈடுபட்டது. இதுவரைகாலமும் கொழும்பு வாழ் மிரமுகர்களே வட, கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பொறுத்தமட்டில், தன்னிகரில்லாத் தலைவர்களாகக் கருதப்பட்டார்கள். 1930ஆம் ஆண்டிற்குப் பின்பு இத் தேர்தலில் மட்டுமே தமிழ் மக்கள் முதற் தடவையாக அத்தகைய தன்னிகரில்லாத் தலைமையின்றித் தேர்தலை எதிர்நோக்கினார்கள்.

இத் தேர்தலில் போட்டியிட்ட எல்லா அரசியற் கட்சிகளும் ஜனநாயக சோஷலிஸ தத்துவமே தமது இலட்சியம் எனக் கூறிக்கொண்டன. நீண்ட காலமாக மிகத் தீவிரமான வலதுசாரிக்கட்சியென வர்ணிக்கப்பட்ட ஐக்கியதேசியக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் முதன்முறையாகச் சமதர்ம தத்துவத்தினை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டமை, இக் கட்சிகளின் தத்துவார்த்த ரீதியான வளர்ச்சிப் போக்கினில் ஒரு முக்கிய கட்டமாகும். மரபு ரீதியான இடதுசாரிக் கட்சிகளின் சோஷலிஸ கொள்கையிலும் 1960க்குப் பின்பு படிப்படியான மாற்றங்கள் ஓரளவு ஏற்படலாயிற்று. அரசியல் விரக்தி காரணமாக அண்மைக் காலத்தில் மரபு ரீதியான இடதுசாரிக்கட்சிகள் மார்க்ஸிய வாதத்தினைத் தவிர்த்து, சிங்கள பௌத்த சார்பான சோஷலிஸத்தினைத் தமது பாராளுமன்ற இலக்கிற்கு முன் வைத்துள்ளனர்.[2] ஐக்கிய தேசியக்கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய இடதுசாரி முன்னணி ஆகிய மூன்று கட்சிகளின் சோஷலிஸ இலட்சியமானது பௌத்த சார்பானதாகக் காணப்பட, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சோஷலிஸ இலட்சியம் இனச் சார்புடையதாகக் காணப்பட்டது. எல்லாக்கட்சிகளும் ஜனநாயக சோஷலிஸத்தில் நம்பிக்கையுடையதாகக் கூறிக்கொண்டபோதிலும், இடதுசாரிகளின் கருத்து கூடியளவு தீவிரம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.[3] சுருக்கமாகக் கூறுவதேயானால், எல்லா அரசியற் கட்சிகளும் தேர்தலில் ஒரே அரசியற் தத்துவத்தினை முன்வைத்தபோதிலும்கூட, அதனை எவ்வளவிற்கு அமுலாக்குதல் என்பதிலேயே வேறுபாடுடையதாகக் காணப்படுகின்றன.

மேலும் பொதுமக்கள் எதிர்நோக்கும் அடிப்படையான எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணவேண்டிய அவசியத்தினை சகல கட்சிகளும் தேர்தலில் வற்புறுத்தின. இளைஞர்கள் மத்தியில் காணப்பட்ட வேலையின்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு,

வருமான ஏற்றத்தாழ்வு, வீட்டுப்பிரச்சனை விவசாயிகளின் நிலப்பிரச்சனை, கல்வி, சுகாதாரம், மனித உரிமைகள் போன்ற பிரச்சனைகளுக்குத் தாம் ஆட்சிக்கு வந்தால் சிறப்பான முறையில் தீர்வு காணப்போவதாகக் கூறிக்கொண்டன. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழ் முஸ்லிம் மக்களை அடிப்படையாகக்கொண்டே இப் பிரச்சனைகளை விளக்க முனைந்தனர். நாட்டின் அடிப்படையான பொருளாதார சமூகப் பிரச்சனைகளுக்கு அவசியம் தீர்வு காணவேண்டுமென்பதில் எல்லாக் கட்சிகளும் ஒருமைப்பாடுடையதாகக் காணப்பட்டன.

இத்தகைய பல ஒருமைப்பாடுகள் சகல கட்சிகளுக்கிடையேயும் காணப்பட்டபோதும், ஒவ்வொரு அரசியற் கட்சியும் வேறுபட்ட சில அரசியல் சுலோகங்களைப் பொதுமக்கள் முன் வைப்பதன் மூலமே தம்மை மற்றக் கட்சியிலிருந்து வேறுபடுத்த முனைந்தன. ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தமட்டில், ''நீதியும் சுதந்திரமுமான சமூகத்தினை உருவாக்கும் நடவடிக்கைக்கான வேலைத் திட்டம்'' என்பதே இவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தின் முக்கிய சுலோகமாகக் காணப்பட்டது. குடும்ப நலனும், ஊழலும் நிறைந்த அரசாங்கத்தினை ஒழித்துக்கட்டி ஜனநாயக சோஷலிச சமூகத்தினை உருவாக்குவதற்கே தாம் பொதுமக்களின் ஆதரவினை வேண்டி நிற்பதாக தேர்தல் பிரசாரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறிக்கொண்டனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசியற் சுதந்திரத்திலிருந்து பொருளாதார சுபீட்சத்தினை அடைவதற்காக சமதர்ம சமுதாயத்தினை எதிர்நோக்கிச் செல்வதற்குத் தமக்குப் பொதுமக்கள் இம்முறையும் வாக்களிக்கவேண்டுமென்ற பிரசாரத்தில் ஈடுபட்டனர். ஆனால், ஐக்கிய இடதுசாரி முன்னணியினரோ ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் முதலாளித்துவ வர்க்க நலன் பேணும் கட்சிகளென்றும் தமது கட்சியினால் மட்டுமே தீவிரமான சோஷலிச வேலைத் திட்டத்தினை அமுலாக்கி நாட்டின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முடியுமெனக் கூறிக்கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் அரசியற் சுலோகமானது ஏனைய மூன்று கட்சிகளையும் விட, அடிப்படையில் வேறுபாடுடையதாக அமைந்திருந்தது. 1619ஆம் ஆண்டு யுத்தக் களத்தில் போர்த்துக்கீசரினால் பறிக்கப்பட்ட தமிழ் மக்களின் இறைமையையும் அரசுரிமையையும் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து பெறுவதே தமது இலட்சியம் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வாதிட்டனர். ''மக்கள் இறைமை என்ற போர்வையில் ஆட்சியுரிமையை முற்று முழுதாகப் பெரும்பான்மை சிங்கள இனம் பெற வழிகோலிய அரசியல் யாப்பை தமது சுதந்திரத்தை இழந்து நிற்கும் இந் நாட்டுத் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்கின்றார்களா என்பதை நிர்ணயிப்பதாகவே இப் பொதுத் தேர்தல் அமையும்[4].'' தமிழர் விடுதலைக் கூட்டணியினரைப் பொறுத்தமட்டில், இத் தேர்தல் ஒரு பொதுசன வாக்கெடுப்பு என்ற சுலோகமாகவே அமைந்திருந்தது.

இலங்கையிலுள்ள அரசியற் கட்சிகளெல்லாம் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் மிகக் கூடிய ஆதரவினையும், ஏனைய பிரதேசங்களில் அவைகளுக்கான ஆதரவு மிகக் குறைவானதாகவுமே காணப்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் பலமானது பெருமளவிற்கு நகரப் புறங்களிலுள்ள மத்திய வகுப்பு வாக்காளரினதும், மத மொழி ரீதியான சிறுபான்மையினரின் வாக்குகளாலேயேயும் நிர்ணயிக்கப்படுவதொன்றாகும். ஆனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியானது கிராமப்புற மக்களிடம் கூடிய ஆதரவினைப் பெற்ற கட்சியாகும். ஏனெனில் இக் கட்சியானது சிங்கள மகாசபையிலிருந்து தோன்றியதுடன் பௌத்தமத குருமார், சிங்கள ஆசிரியர்கள், சுதேசிய மருத்துவர்களுடாகவே வளர்க்கப்பட்டதாகும். இடதுசாரிக் கட்சி

களின் ஆதிக்கமானது தென் மேற்குப் பகுதியில் குறிப்பாக, கொழும்பிலிருந்து தென் முனை வரையுள்ள பகுதி வரையுமே பெருமளவு பரவியிருக்கின்றது, இப் பகுதியில் செறிவான சனத்தொகை, நகராக்கம். கல்வி வளர்ச்சி, போக்குவரத்து, ஊதியம் பெறும் தொழில் அல்லது சந்தையினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறை ஆகியன இக் கட்சிகள் கூடிய ஆதரவினைப் பெற்றிருப்பதற்குக் காரணமாகும். தென், மேற்குப் பகுதிகளில் மார்க்சிய வாதிகளுக்கு கராவ (Karâva) சலாகம (Salagama), துராவ (Durâva) ஆகிய சாதியினரிடம் கூடிய ஆதரவு காணப்படுகின்றது[5]. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆதரவானது பெருமளவிற்கு வட, கிழக்கு மாகாணங்களிலேயே காணப்படுகின்றது. ஏனெனில் இம் மாகாணங்களிலேயே தமிழ் மக்கள் செறிவாக வாழ்கின்றார்கள்.

நான்கு முக்கிய அரசியற் கட்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டுமே வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நான்கு ஸ்தாபிக்கப்பட்ட கட்சிகளாகக் காணப்பட்டன. மேலும் பெரும்பான்மையினரான பௌத்த சிங்கள மக்களின் கலாச்சார பாரம்பரியத்தினை இவ்விரு கட்சிகளாலுமே பாதுகாக்கக் கூடியதாகவும் இருந்தன. ஐக்கிய இடதுசாரி முன்னணி 130 ஸ்தானங்களில் போட்டியிட்டபோதும், பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களின் ஆதரவினைப் பெற முடியாத கட்சியாகவே காணப்பட்டது. எனவே, இத்தேர்தலில் ஆரம்பத்திலிருந்தே போட்டியானது ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மிடையிலேயே காணப்பட்டது.

தேர்தல் முடிவுகளும் கட்சிகளின் நிலையும்:

இன்று ஜனநாயக நாடுகளில் அரசியற் கட்சிகளின் வளர்ச்சிப் போக்கினை மதிப்பீடு செய்வதற்குத் தேர்தல் முடிவுகள் மட்டுமே ஒரேயொரு வெளிப்படையான சுட்டெண்ணாகக் காணப்படுகின்றது. தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு கட்சிகளின் வளர்ச்சியினை ஆராயும்போது, பொதுத் தேர்தலில் ஒவ்வொரு கட்சிக்கும் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை, மொத்தமாகப் பெற்ற ஸ்தானங்கள் என்ற இரண்டு வகையாக மட்டுமே இதனை மேற்கொள்ள முடியும். ஆனால் பாராளுமன்ற ஆட்சி முறைகளில் நம்பிக்கையற்ற புரட்சிகர கட்சிகளினது வளர்ச்சிப் போக்கினை இத்தகைய ஒரு ஆய்வின் மூலம் மதிப்பீடு செய்ய முடியாது. ஆனால் இலங்கையினைப் பொறுத்த மட்டில், இத் தேர்தலில் போட்டியிட்ட நான்கு முக்கிய அரசியற் கட்சிகளுமே பாராளுமன்ற ஆட்சி முறைகளில் நம்பிக்கை கொண்ட கட்சிகளாக இருப்பதனால், இத்தகைய ஒரு மதிப்பீட்டின் மூலம் அவற்றின் வளர்ச்சிப் போக்கினை இலகுவாக விளக்க முடியும்.

இலங்கை அரசியலில் இன்று காணப்படும் இரு கட்சிகளினது அதிகாரப் போட்டியானது 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுடனேயே ஆரம்பமாகிய தெனலாம். எனவேதான் 1956ஆம் ஆண்டிலிருந்து 1977ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் நடந்த பொதுத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு கட்சிகளின் வளர்ச்சிப் போக்கானது இங்கு ஆராயப்படுகின்றது. 1956ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியானது பெற்ற வாக்குகளானது படிப்படியாக அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. 1956இல் மொத்த வாக்குகளில் 27·5 சதவீதமான வாக்குகளைப் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியானது 1977இல் 50·9 சதவீதமான அதிகரிப்பினைக் கொண்டிருக்கின்றது. இவ்விரு இடைக்காலங்களிலும் நடந்த பொதுத்

தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகளானது படிப்படியாக அதிகரித்துச் சென்றுள்ளது. ஆனால் 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் மட்டுமே இவ் அதிகரிப்பில் ஒரு சத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1956ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியானது பொது மக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற கட்சியாக வளர்ச்சியடைந்து சென்றுள்ளது என்பதனையே இது உணர்த்துவதாக அமைந்துள்ளது.

அட்டவணை I

பொதுத்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் கட்சிகளின் நிலை 1956 — 1977

(பெற்ற வாக்குகளின் விகிதாசார அடிப்படையில்)

கட்சிகள்	1956	1960 மார்ச்	1960 யூலை	1965	1970	1977
ஐ. தே. க.	27·5	29·6	37·6	38·9	37·9	50·9
சி. ல. சு. க.	39·9	21·2	33·6	30·2	36·7	29·7
* இடதுசாரி க.	15·1	15·2	10·3	10·2	12·2	6·9
த. அ. க.	5.4	5.7	7·2	5·4	4·9	—
த. கா. க.	0·3	1·2	1·5	2·4	2·3	—
	5·7	6·9	8·7	7·8	7·2	
தமிழ் வி. கூ.	—	—	—	—	—	6·8
ஏனைய கட்சிகள்	0·7	18·3	5·2	7·0	1·4	—
சுயேச்சைகள்	11·1	8·8	4·6	5·9	4·6	5·7

மூலம்: Economic Review, Peoples Bank of Ceylon, 1977. May & July.

* இடதுசாரிக் கட்சிகள் என்னும்போது 1970ஆம் ஆண்டு வரை, இலங்கை சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரண்டும், 1977இல் மக்கள் ஜனநாயக் கட்சியும் சேர்ந்தே குறிப்பிடப்பட்டது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியினைப் பொறுத்தமட்டில், 1956இல் இருந்து ஒரு ஒழுங்கான வளர்ச்சிப் போக்கினை அவதானிக்க முடியவில்லை. ஒவ்வொரு தேர்தலிலும் ஒன்றில் அதிகரிப்பினை அல்லது வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டதாகவுள்ளது. இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தமட்டில், 1960ஆம் ஆண்டிற்குப் பின்பு அவற்றின் வளர்ச்சியானது ஓரளவு வீழ்ச்சிப் போக்கினில் அமைந்திருக்கின்றது. 1960ஆம் ஆண்டு யூலை தேர்தலில் 15·2 சத வீதமான வாக்குகளைப் பெற்ற இடதுசாரிக் கட்சிகள் 1970இல் 12·2 சத வீதமான வாக்குகளையும், 1977இல் 6·9 சத வீதமான வாக்குகளையுமே பெற்றிருக்கின்றன. முன்னைய தேர்தல்களைவிட இத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் பெற்ற வாக்கானது ஏறக்குறைய 50 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளன. 1960 க்குப் பின்பு இடது சாரிக் கட்சிகள் தமது புரட்சிகர இலட்சியங்களைக் கைவிட்ட பின்பே பொதுமக்கள் மத்தியில் இவற்றிற்கிருந்த செல்வாக்கானது வீழ்ச்சியடைந்து செல்வதாக அமைந்திருந்தது.

தமிழ் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளான தமிழ் அரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் வளர்ச்சியும் முரண்பட்ட போக்கினைக் கொண்டதாகவுள்ளது. 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் மொத்த வாக்குகளில் 5·4 சதவீதமான தமிழரசுக் கட்சியின் பங்கானது 1960ஆம் ஆண்டுத்

தேர்தலில் 7·2 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஆனால் 1965இல் 5·4 சதவீதமாகவும், 1970இல் 4·9 சதவீதமாகவும், மொத்த வாக்குகளில் தமிழரசுக்கட்சியானது பெற்ற பங்கானது வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது. ஆனால் தமிழ்க்காங்கிரஸ் கட்சியானது 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் மொத்த வாக்குகளில் 0·3 சத வீதமாக இருந்த தமிழ்க் காங்கிரசின் பங்கானது 1970இல் 2·3 சதவீதமாக அதிகரித்துச் சென்றுள்ளது. மொத்தமாக இவ்விரு கட்சிகளும் 1960ஆம் ஆண்டு யூலையில் நடைபெற்ற தேர்தலில் 8 7 சதவீதமான வாக்குகளைப் பெற்றிருந்தன. ஆனால் 1970இல் இவ்விரு கட்சிகளும் மொத்த வாக்குகளில் 7·2 சதவீதமான வாக்குகளையே பெற்றிருந்தன. 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே தமிழர் விடுதலைக் கூட்டணியானது மொத்த வாக்குகளில் 6·8 சதவீதமான வாக்குகளையே பெற்றிருக்கின்றது. பொதுத் தேர்தலில் பெற்ற வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தமிழ் மக்களின் நலன் பேணும் கட்சிகள் 1960க்குப் பின் வீழ்ச்சிப் போக்கினையே கொண்டிருக்கின்றன.

1956ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டு வரையுள்ள பொதுத் தேர்தல்களில் நான்கு முக்கிய அரசியற் கட்சிகளும் குறிப்பிட்டளவு வீதாசாரமான வாக்குகளைத் தமது நிலையான வாக்குகளாகக் கொண்டிருப்பதனை ஓரளவு அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியானது ஏறக்குறைய 34 சத வீதமான வாக்குகளையும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி 32 சத வீதமான வாக்குகளையும், இடதுசாரிக் கட்சிகள் 11 சதவீதமான வாக்குகளையும், தமிழ் மக்களின் கட்சிகள் 7 சத வீதமான வாக்குகளையும் தம் நிலையான வாக்குகளாகக் கொண்டிருக்கின்றன. எனவே ஒவ்வொரு தேர்தலிலும் இந் நிலையான வாக்குகளில் சிறு வீதாசார மாற்றம் மட்டுமே 1970ஆம் ஆண்டுவரை ஏற்பட்டு வந்துள்ளது. 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிற்கூட இவ் அம்சமானது சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பொருத்தமானதாக அமைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியானது 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் பெற்ற வாக்குகளுடன் இத் தேர்தலில் பெற்ற வாக்குகளை ஒப்பிடும்போது 13 சதவீத அதிகரிப்பினையும், சராசரி நிலையான வாக்குகளுடன் ஒப்பிடுகையில் 16 சதவீதமான அதிகரிப்பினையும் கொண்டதாகவுள்ளது. இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தமட்டில், 1970ஆம் ஆண்டு பெற்ற வாக்குகளுடன் ஒப்பிடும்போது 5·3 சத வீதமான வீழ்ச்சியினையும், சராசரி நிலையான வாக்குகளுடன் ஒப்பிடும்போதும் ஏறக்குறைய இதே அளவினதாகவே யுள்ளது. இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பினையும், இடதுசாரிக் கட்சிகளின் வாக்கில் ஏற்பட்ட வீழ்ச்சியினையும், நீண்ட காலப்போக்கினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இது ஒரு அசாதாரண நிலை என்பது நன்கு புரிகின்றது. மேலும் 1970ஆம் ஆண்டுத் தேர்தலிலும் பார்க்க இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி 13 சதவீதமான வாக்குகளை அதிகமாகப் பெற்றமைக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த ஏறக்குறைய 8 சதவீதமான வாக்காளரும், இடதுசாரிக் கட்சிகளின் ஏறக்குறைய 5 சத வீதமான வாக்காளரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தமையே காரணமாகும். மேலும் ஒவ்வொரு கட்சியினதும் மொத்த வாக்குகளின் வீதாசாரமாக நோக்கும்போது சிறீலங்கா சுதந்திரக் கட்சியினை விட இடதுசாரிக் கட்சிகளிலிருந்தே மிகக் கூடிய வாக்காளர்கள் (ஏறக்குறைய 50 சதவீதம்) ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்துள்ளார்கள் என்பதனை அட்டவணை 1இன் மூலம் ஓரளவு அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஜனநாயக நாடுகளில் கட்சிகளின் பலமானது தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்தானங்களை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்படுகின்றது. இவ்வாறு மதிப்பீடு செய்யும்போது பொதுத் தேர்தலில் ஒவ்

வொரு கட்சியும் மொத்தமாகப் பெற்ற ஸ்தானங்கள், வீதாசார அடிப்படையில் பெற்ற ஸ்தானங்கள் என்ற வகையில் மேற்கொண்டால், சில தவறான முடிவுகளுக்கு வருவதற்கும் இது இடமளிப்பதாக இருக்கும். எனவேதான் இவற்றுடன் ஒவ்வொரு கட்சியும் பெற்ற விகிதாசாரமான வாக்குகளையும் சேர்த்து மதிப்பீடு செய்யும்போது மட்டுமே இது சிறப்பான முறையில் அமைந்த மதிப்பீடாக விருக்கும். பெற்ற ஸ்தானங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயும்போது, நான்கு அரசியற் கட்சிகளுமே அரசாங்கத்தினைக் கைப்பற்றும் சக்தி வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி 53·7 சதவீதமான ஸ்தானங்களையும், இடதுசாரிக் கட்சிகள் 17·9 சதவீதமான ஸ்தானங்களையும் பெற்றிருக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை 8·4 சதவீதமாக மட்டுமே காணப்பட்டன. 1970ஆம் ஆண்டுத் தேர்தலிலும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி 60 சதவீதமான ஸ்தானங்களையும் இடதுசாரிக் கட்சிகள் 16·7 சதவீதமான ஸ்தானங்களையும் பெற்ற அதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை 11·3 சதவீதமாகவே காணப்பட்டன. ஆனால் 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 83 3 சதவீதமான ஸ்தானங்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணி 10·7 சதவீதமான ஸ்தானங்களையும் பெற, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலை 4·8 சதவீதமாகக் காணப்படுகின்றது.

அட்டவணை II

பொதுத்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் கட்சிகளின் நிலை 1956 — 1977

(பெற்ற ஸ்தானங்களின் அடிப்படையில்)

கட்சிகள்	1956		1960 மா.		1960 யூ.		1965		1970		1977	
	தொகை	%	தொகை	%	தொகை	%	தொகை	%	தொகை	%	தொகை	%
ஐ. தே. க.	8	8·4	50	33·1	30	19·9	66	43·7	17	11.3	140	83·3
சி. ல. சு. க.	53	53·7	46	30·5	75	49·7	41	27·2	90	60·0	8	4·8
* இடது ஐ. மு.	17	17·9	13	8·6	16	10·5	14	9·2	25	16·7	—	—
த. அ. கட்சி	10	10·5	15	9·9	16	10·6	14	9·3	13	8·7	—	—
த. கா. க.	1	1·1	1	0·7	1	0·7	3	2·0	3	2·0	—	—
	11	11·6	16	10·6	17	11·3	17	11·3	16	10·7		
தமிழ் வி. கூ.	—	—	—	—	—	—	—	—	—	—	18	10·7
ஏனைய கட்சிகள்	0	0	19	12·6	7	4·6	7	4·6	—	—	—	—
சுயேச்சை	8	8·4	7	4·6	6	4·0	6	4·0	2	1·3	2	1·2
மொத்தம்	95	100	151	100	151	100	151	100	150	100	168	100

மூலம்: Economic Review, People's Bank of Ceylon, 1977. May & July.

* இடதுசாரிக் கட்சிகள் என்னும்போது 1970ஆம் ஆண்டு வரை இலங்கை சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரண்டும், 1977இல் மக்கள் ஜனநாயகக் கட்சியும் சேர்ந்தே குறிப்பிடப்பட்டது.

இடதுசாரிக் கட்சிகளும் தமிழ் மக்கள் நலன் பேணும் கட்சிகளும் சில பொதுத் தேர்தல்களில் பலம் மிக்க கட்சிகளாக இருந்த போதிலும் இரண்டு கட்சிகட்கிடையேயும் இவ்விடயத்தில் ஒரு பொதுவான தன்மையினை அவதானிக்க முடிகின்றது

தமிழ் மக்கள் நலன் பேணும் கட்சிகள் 1956 லிருந்து 1977 வரை வீதாசார அடிப்படையில் பெற்ற ஸ்தானங்கள் ஏறக்குறைய 10 சத வீதமாகவே காணப்படுகின்றன. இடது சாரிக் கட்சிகளும் கூட 1970ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 10 சத வீதமான ஸ்தானங்களையே கொண்டிருந்தன. இவ்விரு கட்சிகளின் வளர்ச்சியானது அதிகளவில் வரையறுக்கப்பட்டதாகவே அமைந்திருக்கின்றது. 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் எந்த ஸ்தானங்களையும் கைப்பற்ற முடியாமை ஒரு அசாதாரண நிலை என்பதனையே இது மேலும் வலியுறுத்துவதாகவுள்ளது. இது போன்றே பெற்ற ஸ்தானங்களின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தோல்வியும் என்றுமே எதிர்பாராத நிலைகளாகும். 1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் 43·7 சத வீதமான ஸ்தானங்களைப் பெற்ற வெற்றியினை, 1977இல் மொத்த ஸ்தானங்களில் 83·3 சத வீதத்தினைப் பெற்ற வெற்றியுடன் ஒப்பிடும் போது 1948 க்குப் பின்பு எந்தக்கட்சியுமே இத்தகைய வெற்றியினை அடைந்ததில்லை. 1970ஆம் ஆண்டிற்கு முன்பு இலங்கையில் ஒரு அரசாங்கக்கட்சி தேர்தலில் படுதோல்வியடைந்ததென்றால், அது 1956ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியானது 8·4 சத வீதமான ஸ்தானங்களைப் பெற்றமையையே குறித்து நிற்கும். 1956ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் 8·4 சத வீத ஸ்தானங்களை, 1977ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் 4·8 சத வீத ஸ்தானங்களுடன் ஒப்பிடும் போது இத் தோல்வி எத்தகையது என்பதை ஓரளவு ஊகித்துக் கொள்ள முடிகின்றது. சுருங்கக் கூறுவதானால், இத் தேர்தலில் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சியானது மிகப் பெரும் வெற்றியினையும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் படு தோல்வியினையும் அடைந்துள்ள தெனலாம்.

ஒவ்வொரு தேர்தலிலும் கட்சிகள் பெற்ற ஸ்தானத்தினையும், பெற்ற வாக்குகளையும் ஒப்பிடும் போது இரண்டிற்குமிடையே முரண்பட்ட தன்மையினைப் பொதுவாக அவதானிக்க முடிகின்றது. 1956ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியானது 27·5 சத வீதமான வாக்குகளையும், 8·4 சத வீதமான ஸ்தானங்களையுமே பெற்றிருந்தது. ஆனால் 39·9 சத வீதமான வாக்குகளைப் பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி 53·7 சதவீதமான ஸ்தானங்களைப் பெற்றிருந்தது. இதே போன்று 1970ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி 37·9 சத வீதமான வாக்குகளையும், 11·3 சத வீதமான ஸ்தானங்களையும் கைப்பற்றியமைக்குப் பதிலாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி 36·7 சத வீதமான வாக்குகளையும், 60 சத வீதமான ஸ்தானங்களையும் கைப்பற்றியிருந்தது. இலங்கையில் ஒவ்வொரு கட்சியினது மொத்த வாக்குகளில் ஏற்படுகின்ற சிறு மாற்றமானது மொத்த ஸ்தானங்களில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. அத்துடன் பொதுத் தேர்தலில் கூடிய ஸ்தானங்களைக் கைப்பற்றும் கட்சியானது மொத்த வாக்குகளில் பெறும் வீதாசாரத்தினை விட, கூடிய வீதாசார ஸ்தானங்களைக் கைப்பற்றும் தன்மை வாய்ந்ததாக இருக்கின்றது. இதே போன்று தேர்தலில் தோல்வியடைகின்ற கட்சிகள் பெற்ற ஸ்தானங்களானது அவை பெற்ற மொத்த வாக்குகளின் வீதாசாரத்தினை விட மிகக் குறைவாகவும் காணப்படுவதனை 1956இல் இருந்து நடந்த தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவாக அவதானிக்க முடிகின்றது.

1977ஆம் ஆண்டுத் தேர்தலும் கூட இவ் அச்சத்திற்கு விதிவிலக்காக அமையவில்லை. மொத்த வாக்குகளில் 50·9 சத வீதத்தினைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியானது மொத்த ஸ்தானங்களில் 83·3 சத வீதமானவற்றைப் பெற்றிருக்கின்றது. மொத்த வாக்குகளில் 29·7 சத வீதத்தைப்

பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி மொத்த ஸ்தானங்களில் 4:8 சத வீதத்தைப் பெற, 6·8 சத வீத வாக்குகளை மட்டும் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியானது 10:7 சத வீத ஸ்தானங்களைப் பெற்று எதிர்க் கட்சியாக இருக்கின்றது. ஆனால் 6·9 சத வீதமான வாக்குகளைப் பெற்ற இடதுசாரிக் கட்சிகளுக்கு தேர்தலில் எந்த ஸ்தானங்களையும் பெற முடியவில்லை. மொத்த வாக்குகளின் அடிப்படையில் நான்காவது பலமான கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியானது பெற்ற ஸ்தானங்களின் அடிப்படையில் இரண்டாவது பலம் மிக்க கட்சியாகக் காணப்படுகின்றது. பெற்ற வாக்குகளையும், பெற்ற ஸ்தானங்களையும் ஒப்பிட்டு நோக்கின், இலங்கையில் பலமிக்க அரசியற் கட்சிகளாக ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியுமாக இருப்பதுடன், இவை இரண்டுமே அரசாங்கத்தினைக் கைப்பற்றும் சக்தி வாய்ந்த கட்சிகளாக இன்றுவரை காணப்படுகின்றது.

வட, கிழக்கு மாகாணங்களில் கட்சிகளின் நிலை :

இலங்கையின் கட்சி முறையின் வியாபகத்தின் மிகக் கூடிய பிரதேச ரீதியான வேறுபாடானது இலங்கையில் சிறுபான்மையினரான தமிழ் மக்களின் பிறப்பிடமான வடமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியிலும் காணப்படுகின்றது[6]. இவ்விரு மாகாணங்களிலும் தமிழ் மக்கள் நலன் பேணும் கட்சிகளான தமிழரசுக் கட்சியும், தமிழ்க்காங்கிரசுமே பெருமளவு அரசியற் செல்வாக்குப் பெற்ற கட்சிகளாகக் காணப்படுகின்றன. இவ்விரு கட்சிகளும் இம் மாகாணங்களில் பெருமளவு ஸ்தானங்களைக் கைப்பற்றுவதை அடிப்படையாகக் கொண்டு மட்டும் இவ்விரு மாகாணங்களும் இலங்கையின் கட்சிமுறை வளர்ச்சிப் போக்கினில் எதிர் நீச்சல் தன்மையினைக் கொண்டிருக்கிறதா என்பதனை புள்ளிவிபர ரீதியான மெய்ச்சான்றுகள் மூலம் நோக்குதல் அவசியமானது மட்டுமன்றி, இன்றைய சூழ்நிலையில் பயன் நிறைந்ததுமாகும்.

வடமாகாணத்தினைப் பொறுத்தமட்டில், தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆகிய இரண்டும் மிகப் பலம் வாய்ந்த கட்சிகளாக இருந்த போதிலும், இடதுசாரிக் கட்சிகளும் சில இடங்களில் ஓரளவு செல்வாக்கு மிக்கனவாகக் காணப்பட்டன. இடதுசாரிக் கட்சிகளது அரசியல் செல்வாக்கானது 1956இலிருந்து 1977 வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்றுள்ளன. 1956ஆம் ஆண்டு தேர்தலில் 18·1 சதவீதமான வாக்குகளைப் பெற்ற இடதுசாரிக் கட்சிகள் 1977ஆம் ஆண்டு 0·9 சதவீதமான வாக்குகளையே பெறக் கூடியதாக விருந்தன. ஏனெனில் 1960க்குப் பின் இடதுசாரிக் கட்சிகள் பௌத்த சார்பான சோஷலிஸ தத்துவத்தினைப் பின்பற்றியமையினால் தமிழ் மக்களின் ஆதரவினைப் பெருமளவு பெற முடியாமையே இதற்குக் காரணமாகும். தமிழரசுக் கட்சியின் செல்வாக்கானது 1960ஆம் ஆண்டுக்குப் பின்பு வடமாகாணத்தில் வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டதாகவே காணப்படுகின்றன. 1960 யூலைத் தேர்தலில் 63.6 சதவீதமான வாக்குகளைப் பெற்ற தமிழரசுக் கட்சியானது 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் 47·8 சதவீதமான வாக்குகளையே பெற்றன. ஆனால் தமிழ்க் காங்சிரஸ் கட்சியினைப் பொறுத்தமட்டில், 1965இலிருந்து 1970 வரை தொடர்ச்சியான ஒரு வளர்ச்சிப் போக்கினை வடமாகாணத்தில் கொண்டதாகக் காணப்படுகிறது. 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் 4·6 சதவீதமான வாக்குகளைப் பெற்ற தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிலையானது 9170ஆம் ஆண்டு 34·5 சதவீதமாக அதிகரித்திருக்கின்றது. தமிழரசுக் கட்சியானது வடமாகாணத்தில் தன் பெரும் அரசியல் எதிரியான தமிழ்க் காங்கிரசுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியாக இணைவதற்கு, தமிழரசுக் கட்சியின் வீழ்ச்சிப் போக்கும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிப் போக்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்திருக்கலாம்.

அட்டவணை III

வடமாகாணத்தில் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் கட்சிகளின் நிலை 1956 — 1977

(சதவீதமாக)

கட்சிகள்	1956	1960 மார்ச்	1960 யூலை	1965	1970	1977
ஐ. தே. க.	—	—	2·8	—	3·2	7·6
சி. ல. சு. க.	—	—	—	—	0·4	1·5
* இடது ஐ. மு.	18·1	17·7	8·5	8·6	4·5	0·9
த. அ. கட்சி	48·2	45·4	63·6	48·6	47·8	—
த. கா. க.	4·6	16·6	16·9	31·4	34·5	—
	52·8	62·0	80·5	80·0	82·3	
தமிழ் வி. கூ.	—	—	—	—	—	68·6
சுயேச்சை	29·1	20·3	8·2	11·4	9·6	21·4
மொத்தம்	100	100	100	100	100	100

மூலம்: Economic Review, People's Bank of Ceylon, 1977. May & July.

* இடதுசாரிக்கட்சிகள் என்னும்போது 1970ஆம் ஆண்டு வரை, இலங்கை சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரண்டும், 1977இல் மக்கள் ஜனநாயகக் கட்சியும் சேர்ந்தே குறிப்பிடப்பட்டது,

1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகள் அதற்கு முற்பட்ட காலத்துடன் ஒப்பிடப்படும்போது, ஓரளவு வேறுபட்ட தன்மையினைக் கொண்டதாக அமைந்திருக்கின்றது. 1960க்குப் பின்பு ஒவ்வொரு தேர்தலிலும் தமிழரசுக்கட்சியும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் வடமாகாணத்தின் மொத்த வாக்குகளில் 80சத வீதத்தினைக் கொண்டிருந்தன. ஆனால் 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியானது 68.5 சதவீதமான வாக்குகளை மட்டுமே பெற்றிருக்கின்றன. தமிழர் நலன் பேணும் கட்சிகள் தமது அரசியற் கூட்டிணைப்பினாற் கூட தம் ஆதிக்கத்தினை இத் தேர்தல் மூலம் பெருமளவு நிலைநாட்ட முடியாத நிலைக்குள்ளாகி விட்டன. 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் 3·2 சதவீதமான வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியானது இம் முறை 7·6 சதவீதமான வாக்குகளையும், 0·4 சதவீத வாக்குகளைப் பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி 1·5 சதவீதமான வாக்குகளையும் பெற்றிருக்கின்றன. மேலும் வவுனியா, மன்னார் ஆகிய இரு தொகுதிகளிலும் இம்முறை தமிழர் விடுதலைக் கூட்டணியானது ஐக்கிய தேசியக் கட்சியுடன் மிகக் கூடிய போட்டியினை எதிர்நோக்கியிருந்தன. அதாவது இலங்கையின் அரசியலில் நீண்டகாலமாகத் தனித்தும் ஒதுங்கியுமிருந்த வடமாகாணத்தின் எல்லைப்புறங்கள் தேசியக் கட்சிகளின் செல்வாக்குக்கு உட்பட்டு வருவதனையே இது காட்டுகின்றது.

வட மாகாணத்தினைப் போலன்றி கிழக்கு மாகாணத்தில் வேறுபட்ட கட்சி முறையின் வளர்ச்சியினை 1960லிருந்து அவதானிக்க முடிகின்றது. இலங்கையின் ஏனைய மாகாணங்களைப் போன்றே கிழக்கு மாகாணத்தில் தேசியக் கட்சிகள் வகுப்புவாத கட்சிகளை விடப் பலமிக்க தொன்றாக வளர்ச்சியடைந்திருக்கின்றது. கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தமட்டில், எக்

காலத்திலும் வகுப்புவாதக் கட்சிகள் சக்தி வாய்ந்தனவாகக் காணப்படவில்லை. 1956ஆம் ஆண்டு மட்டுமே தமிழரசுக்கட்சி கிழக்கு மாகாணத்தில் மிகக் கூடிய வாக்குகளை ஏறக்குறைய 42·4 சத வீதமான வாக்குகளைப் பெற்றிருந்தது. 1956லிருந்து தமிழரசுக் கட்சி பெற்ற வாக்குகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்து 1970ல் 25·1 சத வீதமாக இருந்தது. இடதுசாரிக் கட்சிகள் தவிர்ந்த ஏனைய தேசியக் கட்சிகள் 1960லிருந்து ஒரு உறுதியான வளர்ச்சிப் போக்கினை கிழக்கு மாகாணத்தில் கொண்டிருக்கின்றன. 1960ஆம் ஆண்டு மொத்த வாக்குகளில் 4·9 சத வீதமாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பங்கானது, 1970இல் 31·6 சத வீதமாகவும், 6 சத வீதமாகவிருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பங்கு 25·2 சத வீதமாகவும் அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினை விட, ஐக்கிய தேசியக்கட்சியே மிகக்கூடுதலான வளர்ச்சியினைக் கொண்டிருக்கின்றது.

அட்டவணை IV

கிழக்கு மாகாணத்தில் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் கட்சிகளின் நிலை 1956 — 1977

(சதவீதமாக)

கட்சிகள்	1956	1960 மார்ச்	1960 யூலை	1965	1970	1977
ஐ. தே. க.	—	4·9	18·6	24·5	31·6	37·9
சி. ல. சு. க.	—	6·0	11·8	12·1	23·2	25·2
* இடது ஐ. மு.	3·8	0·8	—	0·3	—	1·6
த. அ. கட்சி	42·4	35·1	38·9	31·1	25·1	—
த. கா. க.	—	—	2·6	4·4	—	—
	42·4	35·1	41·5	35·5	25·1	
தமிழர் வி. கூ.	—	—	—	—	—	32·2
சுயேச்சையும் ஏனையவையும்	53·8	53·2	28·1	27·6	20·1	3·1
மொத்தம்	100	100	100	100	100	100

மூலம்: Economic Review, People's Bank of Ceylon, 1977. May & July.

* இடதுசாரிக் கட்சிகள் என்னும்போது 1970ஆம் ஆண்டு வரை இலங்கை சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரண்டும், 1977இல் மக்கள் ஜனநாயகக் கட்சியும் சேர்ந்தே குறிப்பிடப்பட்டது.

1977ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகளை அவதானிக்கும் போது இது ஏற்கனவேயுள்ள வளர்ச்சிப் போக்கின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் வளர்ச்சியடைந்து வரும் ஐக்கிய தேசியக் கட்சியினதும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதும் வாக்குகளில் கூடிய அதிகரிப்பு இம் முறை ஏற்பட்டுள்ளது. 1970இல் 31·6 சதவீதமாகவிருந்த ஐக்கிய தேசியக் கட்சி வாக்குகள், இத் தேர்தலில் 37·9 சதவீதமாகவும், 23·2 சதவீதமாகவிருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள் 25·2 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியினைப் பொறுத்தமட்டில் கூட, 1970இல் 25·1 சதவீதமாகவிருந்த வாக்குகள் இம் முறை 32·2 சதவீதமாக அதிகரித்துள்ளது. 1970ஆம் ஆண்டுத் தேர்தலுடன் ஒப்பிடும்

போது மட்டுமே தமிழர் விடுதலைக் கூட்டணி கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. ஆனால் அதற்கு முற்பட்ட காலத் தேர்தல்களில் பெற்ற வாக்குகளுடன் ஒப்பிடும்போது இது குறைவானதாகும். இத் தேர்தலில் 1970ஆம் ஆண்டுத் தேர்தலைவிட ஐக்கியதேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன கூடுதலான வாக்குகளைப் பெற்றமைக்குச் சுயேச்சை அங்கத்தவர்களின் வாக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். 1970இல் 20·1 சதவீதமாக இருந்த சுயேச்சை அங்கத்தவர்களின் வாக்குகள் இத் தேர்தலில் 3·1 சதவீதமாக அல்லது 17 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இப் 17 சதவீதமான வாக்குகளில் 9·9 சதவீதமான வாக்குகள் தேசியக் கட்சிகளாலும், 7·1 சதவீதமான வாக்குகளே தமிழர் விடுதலைக் கூட்டணியாலும் பெறப்பட்டிருக்கின்றது. இலங்கையின் கட்சி முறையில் பிரதேச ரீதியான வேறுபாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே காணப்படுகின்றது என்ற பேராசிரியர் ரொபேர்ட் கேர்ணியின் வாதம் கிழக்கு மாகாணத்திற்குப் பொருத்தமற்றதாகும்.[7] ஏனெனில் இன்று கிழக்கு மாகாணத்தின் கட்சி முறையும் ஏனைய மாகாணங்களில் கட்சி முறையினைப் போன்று தேசியக் கட்சிகளின் ஆதிக்கத்திற்குட்பட்டதாகக் காணப்படுகின்றன. 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் ஏறக்குறைய 64·7 சதவீதமான வாக்குகள் தேசியக் கட்சியினால் பெறப்பட்டதாகும்.

வட, கிழக்கு மாகாணங்களில் கட்சி முறையின் வளர்ச்சியினை மொத்தமாக நோக்கும்போதுகூட தமிழர் நலன்பேணும் கட்சிகளின் வீழ்ச்சிப் போக்கினையும், தேசியவாதக் கட்சிகளின் வளர்ச்சிப் போக்கினையுமே அவதானிக்க முடிகின்றது. 1956ஆம் ஆண்டு 2·4 சதவீத வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி 1977இல் 23·3 சதவீதமான வாக்குகளையும்; 3 சதவீத வாக்குகளைப் பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலை 13·7 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இடதுசாரிக்கட்சிகளைப் பொறுத்தமட்டில் 1956இல் 12·8 சதவீதமாக இருந்த வாக்குகள் 1977இல்

அட்டவணை V

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கட்சிகளின் நிலை 1956 — 1977

(சதவீதமாக)

கட்சிகள்	1956	1960 மார்ச்	1960 யூலை	1965	1970	1977
ஐ. தே. க.	—	2·4	10 7	12·2	17·6	23·3
சி. ல. சு. க.	—	3·0	5·8	6·0	11 9	13·7
* இடது ஐ. மு.	12·8	10·2	4·3	4 6	2·2	1·3
த. அ. க.	46·1	42·5	51·9	40·5	36·3	—
த. கா. க.	2·9	9·2	10·0	18·3	17·1	—
	49 0	51 7	61·9	58·8	53·4	
தமிழர் வி. கூ.	—	—	—	—	—	49·8
சுயேச்சை	38·2	32·7	17·3	18·4	14·9	11·9

மூலம்: Economic Review, People's Bank of Ceylon, 1977. May & July.

* இடதுசாரிக் கட்சிகள் என்னும்போது 1970ஆம் ஆண்டு வரை இலங்கை சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரண்டும் 1977இல் மக்கள் ஐனநாயக் கட்சியும் சேர்ந்தே குறிப்பிடப்பட்டது.

1·3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளன. தமிழர் நலன்பேணும் கட்சிகளும் 1960 யூலைத் தேர்தலில் 61·9 சதவீதமான வாக்குகளைப் பெற்றமைக்குப்பதிலாக 1977இல் 49·8 சதவீதமான வாக்குகளையே பெற்றிருக்கின்றன. வட, கிழக்கு மாகாணங்களில் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் 1960இலிருந்து ஒரு தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கினையும், இடதுசாரிக் கட்சிகளும், தமிழர் நலன்பேணும் கட்சிகளும் தொடர்ச்சியான வீழ்ச்சிப் போக்கினையும் கொண்டிருக்கின்றன. 1977ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவுகள் இவ்விரு மாகாணங்களிலும் புதிதான ஒரு அரசியல் மாற்றத்தினைப் பிரதிபலிப்பதாகத் காணப்படவில்லை. 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசியக் கட்சிகள் இவ்விரு மகாணங்களிலும் 31·7 சதவீதமான வாக்குகளையும், தமிழர் நலன் பேணும் கட்சிகள் 53·4 சதவீதமான வாக்குகளையும் பெற்றிருந்தன. ஆனால் 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் தேசியக் கட்சிகள் 48·3 சதவீதமான வாக்குகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி 49·8 சதவீதமான வாக்குகளையுமே பெற்றிருக்கின்றன. வட, கிழக்கு மாகாணங்களில் ஸ்தானங்களைக் கைப்பற்றுதல் என்ற குறிக்கோளில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஓரளவு வெற்றியடைந்துள்ள போதிலும் தேசியக் கட்சிகளின் வளர்ச்சியினைத் தடுத்து நிறுத்துவதில் தோல்வியே கண்டுள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்குப் பொறுப்பாக இருந்த காரணங்கள்:

இலங்கையிலுள்ள முக்கியமான அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு குறிப்பிட்டளவு வீதாசாரமான வாக்குகள் நிலையான வாக்குகளாக இருப்பதனால், எல்லை வாக்காளர்களே கட்சிகளின் வெற்றியினை நிர்ணயிக்கும் முக்கிய காரணகர்த்தாக்களாகக் காணப்படுகின்றனர். இத் தேர்தலில் மொத்த வாக்காளர்களில் 70 சதவீதமான வாக்காளர்கள் 18 வயதிற்கும் 35வயதிற்குமிடைப்பட்டவர்களாக இருந்ததுடன் இப் பிரிவினரிடையே வேலையற்றவர்கள் மிக அதிகமாகக் காணப்பட்டார்கள். பதின்மூன்று மில்லியன் சனத்தொகையில் ஒரு மில்லியன் மக்கள் வேலையற்றவர்களாகவும் காணப்பட்டனர்.[8] மேலும் 1971ஆம் ஆண்டு பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபட்டவர்களும், அதன் ஆதரவாளரும் கூட பல தேர்தற் தொகுதிகளில் எல்லை வாக்காளர்களாகக் காணப்பட்டார்கள். இவர்களிற் பலர் 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் வெற்றிக்காக உழைத்தவர்கள் என்பதும் குறிப்பிடக்கூடிய ஒரு அம்சமாகும். மேலும் இலங்கையின் பல தேர்தற் தொகுதிகளில் தமிழர்களும், முஸ்லிம்களும் எல்லை வாக்காளர்களாகக் காணப்பட்டார்கள். இத் தேர்தலின் வெற்றி, தோல்வியானது இளைஞர்கள், 1971ஆம் ஆண்டு பயங்கரவாத இயக்க ஆதரவாளர்கள், சிறுபான்மைச் சமூகத்தினர்கள் ஆகியோரின் கூடிய வாக்குகளைப் பெறுவதிலேயே தங்கியிருந்தது. மேற்குறிப்பிட்ட வாக்காளர்களின் ஆதரவினைப் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாக இருந்த காரணிகளை அக ரீதியான காரணிகள், புற ரீதியான காரணிகள் என இருவகையாகப் பிரித்து ஆராயலாம்.

அக ரீதியான காரணிகள் என்னும் போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்ட மாற்றங்களையே இது குறித்து நிற்கிறது. குறிப்பாக 1973ஆம் ஆண்டிற்குப் பின்பு திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் தலைமையுடன் கட்சியின் கிளைகள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டதுடன், அதன் அங்கத்தினர்களின் எண்ணிக்கையிலும் மிக வேகமான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தினர் எண்ணிக்கை 1976ஆம் ஆண்டு ஐந்து இலட்சமாக இருந்ததுடன், 1977ஆம்

ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மட்டும் இரண்டு இலட்சம்பேர் கட்சியில் சேர்ந்திருந்தார்கள். நாடு முழுவதும் 4000 பிரதானக் கிளைகள், இளைஞர் முன்னணிகள், மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன.[9] தேர்தலுக்குமுன்பாக 960,000 சந்தாப் பணம் செலுத்தும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. மேலும் முதலாவித்துவக் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஏழைமக்களின் ஆதரவுடன் சோஷலிசத்திற்கு உழைக்கும் ஒன்றாகவும் காணப்பட்டது.[10] புதிய தலைமைப்பீடத்துடன் 1973இக்குப் பின் ஐக்கிய தேசியக் கட்சியானது அமைப்பு ரீதியாகப் பெரும் வளர்ச்சியினை இக்காலத்தில் அடைந்திருந்தது.

இவ் அமைப்பு ரீதியான வளர்ச்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை ரீதியான மாற்றமும் குறிப்பிடக் கூடிய ஒரு அம்சமாகக் காணப்பட்டது. முதன் முதலாக ஐக்கிய தேசியக் கட்சியானது இத் தேர்தலிலேயே ஜனநாயக சோஷலிச வேலைத் திட்டத்தினை தான் அமுலாக்கப் போவதாகக் கூறியிருந்தது. "சோஷலிசமற்ற ஜனநாயகம் சுரண்டலின் ஜனநாயகமாகவும், ஜனநாயகமற்ற சோஷலிசம் அடக்குமுறையில் சோஷலிசமாகவும் அமைந்திருக்கும். என தாம் நம்புவதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனநாயக சோஷலிசம் பற்றிய விளக்கம் வரையறை செய்யப்பட்டிருந்தது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் விளக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் :

(i) இமாலயம் போன்று அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவைக் குறைக்க தீவிர நடவடிக்கைகள் எடுத்தல், மேலும் ஒவ்வொருவருக்கும் கிழமைக்கு எட்டு இறாத்தல் தானியம் வழங்கல்.

(ii) இளைஞர்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்பு வசதியினை அதிகரித்தல்.

(iii) தவறான முறையில் வழி நடத்தப்பட்டு 1971ஆம் ஆண்டுக் கிளர்ச்சியில் ஈடுபட்ட இளைஞர்களின் வழக்குகளை பரிசீலனை செய்தல்.

(iv) தமிழ் மக்களின் கல்வி, குடியேற்றம், தமிழ்மொழி உபயோகம், அரசாங்கத்திலும் அரசாங்கக் கூட்டுத் தாபனங்களிலும் வேலை வாய்ப்புக்கள் சம்பந்தமான விடயங்களை சர்வ கட்சி மகாநாடு மூலம் தீர்த்தல்.[11]

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயக சோஷலிச வேலைத்திட்டக் கொள்கையானது குடும்பப்பெண்கள், இளைஞர்கள், 1971ஆம் ஆண்டு பயங்கரவாத இயக்கத்தினர், தமிழ் மக்கள் போன்ற பல்வேறு வாக்காளப் பிரிவினரையும் கவரக்கூடியதாகவிருந்தது.

புறக் காரணிகள் என்னும்போது ஐக்கிய தேசியக் கட்சியினை எதிர்த்துத் தேர்தலிற் போட்டியிட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய இடதுசாரி முன்னணி ஆகியவற்றின் தவறுகளையும், குறைபாடுகளையுமே இது சிறப்பாகக் குறித்து நிற்கின்றது. குறிப்பாக 7 வருடங்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினால் ஜனநாயக சோஷலிசம் என்ற கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களின் தோல்வியே பொதுமக்களை இடதுசாரி இயக்கத்தின்மீதும் நம்பிக்கையிழப்பதற்குக் காரணமாக அமைந்திருந்தது. ஏனெனில் இந்த 7 வருடத்தில் 5 வருடத்திற்கு மேற்பட்ட ஆட்சியில் இவர்கள் பங்காளிகளாகவும் பொறுப்பாளிகளாகவும் காணப்பட்டனர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி குடும்ப ஆதிக்கமும், ஊழலும் நிறைந்த ஒரு ஆட்சி என்பதே ஐக்கிய தேசியக் கட்சியினது மட்டுமன்றி, ஐக்கிய இடதுசாரி முன்னணியினதும் வாதமாக அமைந்திருந்தது. தேர்தல் பிரசாரத்திற்காக வெளியிடப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசுரமொன்றில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இனத்தவர்கள் அரசாங்கத் துறைகளிலும் அரசாங்கக் கூட்டுதாபனங்களிலும் உயர் பதவிகளில் 51 பேர்களும், அமைச்சரவையில் நால்வரும்,

தேசிய அரசுப் பேரவையில் அறுவரும் இருப்பதாக எடுத்துக்காட்டப்பட்டது.[12] திருமதி பண்டாரநாயக்கா அரச உடமைக் கூட்டுத்தாபனங்கள் பலவற்றில் தம் இனத்தவர்கள் பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கியமையினால் உடமை மாற்றமானது தனியார் துறையிலிருந்து பிரதமரின் துறைக்கு மாற்றப்பட்டது.[13]

நாட்டின் வேலையின்மையானது அதிகரித்துச் செல்கின்ற நிலையில் குடும்ப ஆதிக்கத்துடன் புதியதொரு பணக்கார வகுப்பினரும் தோன்றியமை இளைஞர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்படுத்தவும் வழிவகுப்பதாக அமைந்திருந்தது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் விளைவாக அரச முதலாளித்துவமும், புதிய பணக்கார வகுப்பினரும் உருவாக்கப்பட்டுள்ளனர். காணிச் சீர்திருத்தக் கொள்கையானது அரச உத்தரவாதம் பெற்ற நிலச்சுவான் வகுப்பினரை உருவாக்கியுள்ளது. அதேபோன்று அரச உடமை நிறுவனங்களும் இதே போன்ற ஒரு வகுப்பினரையே உருவாக்கியுள்ளது.[14]

1970ஆம் ஆண்டுத் தேர்தலில் பயங்கரவாத இயக்கத்தினரைச் சேர்ந்த இளைஞர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காகத் தீவிரமாக பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார்கள். 1971ஆம் ஆண்டு நடந்த ஏப்ரல் கிளர்ச்சியினை அரசாங்கம் அடக்குவதற்கு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டமையினால் இவ் இளைஞர்களின் எதிர்ப்பினையும் இம்முறை சம்பாதிக்க வேண்டியிருந்தது. மேலும் 1976ஆம்ஆண்டு பல்கலைக்கழக மாணவன் ஒருவன் இலங்கையில் முதன் முதலாகச் சுட்டுக் கொல்லப்பட்டமையும், மாணவ சமுதாயத்தின் எதிர்ப்பினையும் பெறுவதற்கு காரணமாயிருந்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமானது இளம் சந்ததியினரின் பெருமளவு எதிர்ப்பைப் பெற்ற ஒரு அரசாங்கமாக இருந்தமையினால் இளைஞர்களின் பெருமளவு வாக்கினைப் பெற முடியாத நிலையிலிருந்தது.

சில அவதானிகள் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியின்போது தீவிர நிலையினை அடைந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, உயர்ந்த வேலையின்மை, மற்றும் வீட்டுப்பிரச்சனை, நிலப்பிரச்சனை போன்றவையே இதன் தோல்விக்குக் காரணமென அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்கள். ஆனால் இத் தேர்தலில் எந்த ஒரு கட்சியும் இப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான திட்டவட்டமான வேலைத்திட்டங்களையோ, வழிவகைகளையோ கூறவில்லை. எனினும் இவற்றினைத் தீர்ப்பதற்கான தீவிரமான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாக மட்டுமே கூறியிருந்தார்கள். எனவேதான் நாட்டில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்குத் தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தார்கள் என உறுதியாகக் கூறமுடியாது. எனவே ஏனைய காரணங்களே ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்குச் சாதகமாக இருந்தனவாகும்.

மரபு ரீதியான இடதுசாரிக் கட்சித் தலைவர்களின் தவறுகளும், கொள்கை ரீதியான பலவீனமும் கூட, இடதுசாரிக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்ட சாதாரண வாக்காளன் கூட இம்முறை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறான். இத் தேர்தலில் இடது சாரித் தலைவர்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் குறைபாடுகளை எடுத்துக் காட்டுவதில் கூடிய கவனஞ் செலுத்தினரே யொழிய, நாட்டின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பொது வேலைத் திட்டத்தினை மக்கள் முன் வைக்கத் தவறிவிட்டார்கள். அதே நேரத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் தவறுகளில் $\frac{5}{7}$ க்கு தாமும் பொறுப்பாளிகள் அல்லது பங்காளிகள் என்பதனை மறந்துவிட்டார்கள். தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் தோல்வியடைந்தமைக்கான காரணத்

தினை பொதுவுடமைக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. பீட்டர் கெனமன் அவர்கள் பின்வருமாறு கூறியிருந்தார். "பொதுத் தேர்தல் மனுப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கு இரு வாரங்களுக்கு முன்பே ஐக்கிய இடதுசாரி முன்னணி உருவாக்கப்பட்டமையினால் பொது மக்களைக் கவரக்கூடிய ஒரு மாற்றுத் திட்டத்தினை தம்மால் முன்வைக்க முடியவில்லை."[15] முப்பத்தைந்து வருட கால அரசியல் அனுபவமுள்ள இடதுசாரியினரால் நாட்டின் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடியதும், மக்களைக் கவரக்கூடியதுமான வேலைத் திட்டத்தினை முன்வைக்க முடியாமையும்கூட ஐக்கிய தேசியக் கட்சுயின் வெற்றிக்குச் சாதகமாக அமைந்திருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும் வெற்றிக்கு அகரீதியான காரணிகள், புறரீதியான காரணிகள் ஆகிய இரண்டுமே பெருமளவிற்குப் பொறுப்பாக இருந்திருக்கின்றன

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை ரீதியான தோல்விக்கான காரணிகள் :

தமிழர் விடுதலைக் கூட்டணியானது இத் தேர்தலை தமிழ் ஈழத்திற்கான ஒரு பொதுசன வாக்கெடுப்பாகவே கருதிப் போட்டியிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் 24 அபேசட்கர்களில் 18 பேர் இத் தேர்தலில் வெற்றி பெற்றாலும் பெற்ற வாக்குகளைப் பொறுத்தமட்டில், தோல்வியென்பதனை மறுப்பதற்கில்லை. 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் பெற்ற வபக்குகளை விட இத் தேர்தலில் குறைவான வாக்குகளையே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பெற்றுள்ளனர். மேலும் கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தமட்டில், தேசியக் கட்சிகளே மிகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பொதுவான தோல்விக்கான காரணங்கள், கிழக்கு மாகாணத்திற்கான விசேடமான காரணங்கள் என இரு வகையாக ஆராய்தல் பொருத்தமானதாகும்.

பொதுவான காரணங்கள் :

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தாம் தமிழ் ஈழத்தினை சமாதான வழி மூலமே அடைவதாகக் கூறிய போதிலும் சமாதான வழிகள் எவையெனத் திட்டவட்டமாகக் கூறவில்லை. மேலும் சமாதான வழி மூலம் சமஷ்டி ஆட்சியினைப் பெற முடியாத ஒரு அரசியற் கட்சியினால் எவ்வாறு தமிழ் ஈழத்தினைப் பெற முடியும் என்ற கேள்வி ஒரு சாதாரண வாக்காளனிடம் எழுவது தவிர்க்க முடியாததாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியிலுள்ள கட்சிகளிடம் சரியான ஒருமைப்பாடும் இருக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்து இத்தேர்தலிற் போட்டியிட்டது. இஸ்லாமிய ஐக்கிய முன்னணியானது இலங்கையிலுள்ள பெரும்பான்மை முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்ற இயக்கமாகவும் இருக்கவில்லை. தமிழ் காங்கிரசின் ஒரு பகுதியினர் ஜீ. ஜீ. காங்கிரஸ் என்ற பெயரில் தனித்து தேர்தலில் போட்டியிட்டனர். தமிழரசுக் கட்சியும் 1960 க்குப் பின் செல்வாக்கினை யிழந்து கொண்டு வந்த கட்சியாக இருந்தது. எனவேதான் இது ஒரு பலவீனமான கூட்டணியாகக் காணப்பட்டது.

தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதில் கூட பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. பல தேர்தல் தொகுதிகளில் அபேட்சகர் தேர்வுக்குப் பின் ஆர்ப்பாட்டங்களும் கொடும்பாவி எரிப்புக்களும் கூட நடைபெற்றன. மட்டக்களப்பில் இரு அபேட்சகர்களை நியமித்தது பொதுமக்கள் மத்தியில் கூட்டணியினர் பற்றி தவறான அபிப்பிராயங்கள் உருவாகுவதற்கும் வழி வகுத்தது.

வேலையின்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வறுமைபோன்றவற்றால் தவித்துக் கொண்டிருக்கும் சாதாரண ஒரு வாக்காளனுக்கு அயர்லாந்து தேசிய வாதிகளின் சுலோகங்களைப் போன்ற அரசியற் பேச்சுக்கள் கவர்ச்சியளிக்க மாட்டாது. இதனால்தான் வடமாகாணத்தில்கூட விவசாயிகளையும், குடியானவர்களையும் பெரு

மளவு கொண்ட கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய தொகுதிகளில் பெரும் வெற்றியினைக் கூட்டணியினரால் அடைய முடியவில்லை.

கிழக்கு மாகாணத்தில் காணப்பட்ட சூழ்நிலைகள்:

வடமாகாணமும், கிழக்கு மாகாணமும் தமிழ்மொழி பேசுபவர்கள் அதிகமாக வாழ்பவர்கள் என்ற அடிப்படையில் பொதுவான தன்மைகள் காணப்பட்ட போதிலும் உள்ளார்ந்த ரீதியாகப் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. வடமாகாணத்தினை விட, கிழக்கு மாகாணம் கூடியளவு ஒரு பன்முகச் சமூகமாக அமைந்திருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் 44 சத வீதமும், முஸ்லிம்கள் 34 சத வீதமும், சிங்களவர்கள் 20சத வீதமும் இங்கு வாழ்கின்றனர். மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மத்திய வகுப்பினர் (வெள்ளையுடை உத்தியோகத்தினர்) அதிகமாக இருப்பது போன்று கிழக்கு மாகாணத்தில் இல்லை. இங்கு விவசாயிகளும் குடியானவர்களுமே முக்கியத்துவம் பெறுகின்றனர். வரலாற்று ரீதியாக வடமாகாணம் யாழ்ப்பாண இராச்சியத்திற்குட்பட்டது போன்று கிழக்கு மாகாணம் கண்டி இராச்சியத்துக்குட்பட்டதாகவும் இருந்திருக்கின்றது. இதனாலேயே யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர் என்ற பிரிவு இலங்கைத் தமிழர் மத்தியில் இன்றுவரை காணப்படுகின்றது.

இத் தேர்தலில் யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர் என்ற பிரிவினை உணர்ச்சி, சக்தி வாய்ந்ததாகக் காணப்பட்டிருக்கின்றது. தேர்தலுக்கு முன்பும் பின்பும் கே. டபிள்யூ. தேவநாயகம் அவர்கள் கூறியவை இதற்கு சிறப்பான எடுத்துக்காட்டாகும். "தனித்தமிழ்நாடு உருவானால் கிழக்கை வடமாகாணத்தவர்களே ஆளுவார்கள்."[16] "இதுவரைகாலமும் வடமாகாண அரசியல் வாதிகளே எம்மை வழிநடத்தி வந்தனர். இனிமேல் எம்மை வழிநடத்த எமக்கே உரிமையும் யோக்கியமும் உண்டு,"[17] நீண்ட காலமாகக் கிழக்கு மாகாணத்தில் காணப்பட்ட இவ் உணர்ச்சி இத் தேர்தலில் மேலும் தூண்டிவிடப் பட்டிருக்கிறது.

வடமாகாணத்தினரையும், கிழக்கு மாகாணத்தினரையும், இணைக்கக்கூடிய ஒரு தலைமைப்பீடம் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் இருக்கவில்லை. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவுக்குப் பின், பொதுவான தலைமைப்பீடமின்மையினால் கிழக்கு மாகாண மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் நம்பிக்கையிழக்க மற்றொரு காரணமாக இருந்தது.

வடமாகாணத்தினர்களே பெருமளவு தரப்படுத்தல் முறை மூலம் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் கிழக்கு மாகாணம் கல்வியில் பின்தங்கிய ஒரு மாகாணமாக இருந்ததால் தரப்படுத்தல் பெரும் பாதிப்பினை இம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தவில்லை. கிழக்குமாகாண மக்கள் அரசாங்கத்தின்மீது குரோத மனப்பான்மை கொண்டு ஈழக் கோரிக்கைக்கு ஆதரவு கொடுக்கும் நிலையிலிருக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் விவசாயிகளையும் குடியானவர்களையும் பொறுத்தமட்டில், பல அடிப்படை பிரச்சனைகளை எதிர்நோக்கினார்கள். போக்குவரத்து, நீர்ப்பாசனம், மருத்துவம் ஆகியன விருத்தி செய்தல் இவர்களுக்கு இன்றியமையாதனவாக விருந்தன. மேலும் விவசாயிகளும் குடியானவர்களும் இலங்கையின் ஏனைய மாகாண விவசாயிகளும் குடியானவர்களும் எதிர்நோக்கும் பிரச்சனையினையே எதிர்நோக்கினார்கள். எனவே இவற்றிற்குத் தேசிய கட்சிகட்கு ஆதரவு கொடுப்பதன் மூலம் தீர்வு காணலாம் என எண்ணுவது இயல்பானதாகும்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் வாக்காளர் பெருமளவு காணப்படுகின்றனர். முஸ்லிம் மக்கள் தேசியக் கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலமே தம்

இன உரிமைகளைப் பாதுகாக்கலாம் என்பதே அவர்களின் அரசியல் நம்பிக்கையாகும். மேலும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகித்த இஸ்லாமிய ஐக்கிய முன்னணி, முஸ்லீம் லீக், இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி போன்று பெரும்பான்மை முஸ்லிம்களின் ஆதரவினைப் பெற்ற இயக்கமாக இருக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் இத்தகைய சூழ்நிலைகள் காணப்பட்டமையே ஈழ பொதுசன வாக்கெடுப்பில் கிழக்கு மாகாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பெரும் தோல்வியினை அடையவேண்டியிருந்தது.

தேர்தலின் விளைவுகள் :

1956ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு பொதுத் தேர்தலும் இலங்கையில் இருகட்சிப் போக்கின் தன்மையினை எடுத்துக்காட்டுவதாகவே அமைந்திருக்கிறது. அதே போன்று இத் தேர்தலும் இலங்கையில் அரசாங்கத்தினைக் கைப்பற்றும் சக்தியானது ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக கட்சி ஆகிய இரண்டினால் மட்டுமே சாத்தியமானது என்பதனை மேலும் வற்புறுத்துவதாகவே உள்ளது. இத்தகைய ஒரு முடிவானது ஜனநாயக முறைகளில் நம்பிக்கை கொண்ட அரசியற் கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட முடிவாக மட்டுமே கருதப்படவேண்டும். ஏனெனில் பாராளுமன்ற முறைகளில் நம்பிக்கையற்ற அரசியல் இயக்கங்களின் பலத்தினைப் பொதுத்தேர்தல் முடிவுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அனுமானிக்கமுடியாது.

இலங்கையில் தேர்தல்வன்செயல்களும் படிப்படியாக அதிகரித்து வருவதனை இத் தேர்தல் முடிவுகளின் பின் நன்கு அவதானிக்க முடிகின்றது. தேர்தல் வன்செயல்கள் 1965ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகளுடன் ஆரம்பமாகி 1970இல் வளர்ச்சியடைந்து இம்முறை மேலும் உக்கிர நிலையினை அடைந்துள்ளது. இம்முறை பொதுத்தேர்தலின் பின் ஏறக்குறைய இறந்தவர்கள் தொகை 50ஆகவும், நூற்றுக் கணக்கானவர் காயமடைந்ததுடன், ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகளும் நிறுவனங்களும் எரிக்கப்பட்டுள்ளன.[18] இதன் பின் நடந்த இனக்கலவரம் கூட இதன் தொடர்ச்சியாக அமைந்திருக்கின்றது. எனவே எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் தேர்தல்களின்பின் பெரும் உள்நாட்டுக் கலகம் ஏற்படுவதுகூட சாத்தியமானதாகும். சுருங்கக்கூறின், எமது நாட்டில் ஜனநாயக பாரம்பரியங்கள் எல்லாம் படிப்படியாக செயலிழந்து வருவதனையே இது எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன்முதலாக தொகை ரீதியாகவும், தர ரீதியாகவும் ஒரு பலவீனமான எதிர்க்கட்சி இத் தேர்தலினாலேயே உருவாக்கப்படடுள்ளது. அரசாங்கக் கட்சியானது 140 ஸ்தானங்களுடன் இருக்கின்ற நிலையில் எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியானது 18 ஸ்தானங்களுடன் மட்டுமே இருக்கின்றது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற வாக்குகள் 6·8 சதவீதமாகவும், ஐக்கிய இடதுசாரி முன்னணி பெற்ற வாக்குகள் 6·9 வீதமாகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி பெற்ற வாக்குகள் 29·7 சதவீதமாகவும் காணப்படுகிறது. உண்மையில் தேசிய அரசுப் பேரவையில் அரசாங்கக் கட்சிக்கு அடுத்து பொதுமக்கள் ஆதரவைப் பெற்ற கட்சி சிறீலங்கா சுதந்திரக் கட்சியாகும். ஒரு பொருத்தமற்ற நிலையிலேயே இன்று எதிர்க்கட்சியானது தேசிய அரசுப் பேரவையில் அமைத்திருக்கின்றது. தேசிய அரசுப் பேரவையின் எதிர்க்கட்சிகளின் நிலைபற்றி கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா பின்வருமாறு கருத்துத் தெரிவித்திருக்கின்றார் :

"இப்போதைய நிலையில் பேரவையில் கூட உரிய முறையில் விவாதித்துச் சட்டங்களை அலசி ஆராயக்கூடியோர் இல்லை. எதிர்க்கட்சி இருந்தபோதும், அதில் ஒரு சாராருக்கு வேறு பிரச்சனை உள்ளது. நாட்டைப் பிரிப்பதா? இல்லையா? என்

பதே இவர்களது பிரச்சனை. மற்றச் சாராரோ சரிவர விவாதிக்க முடியாதோ ராவார். அரசாங்கத் தரப்பினரோ தம்மை தாமே புகழ்வதிலேயே ஈடுபட்டுள்ளனர்."[19]

முற்பட்டகாலத் தேர்தல் முடிவுகளைப் போன்றே இத்தேர்தல் முடிவுகளும் பிரதேச வாரிப் பிரதிநித்துவத்தின் குறைபாடுகளை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கின்றது. இத் தேர்தலில் 50·9 சதவீத வாக்குகளைப் பெற்ற ஐக்கியதேசியக் கட்சி 140 ஸ்தானங்களையும், 29·7சதவீத வாக்குகளைப் பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி 8 ஸ்தானங்களையும், 6·8 சதவீத வாக்குகளைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஸ்தானங்களையும் பெற, 6·9 சதவீத வாக்குகளைப் பெற்ற ஐக்கிய இடதுசாரி முன்னணி எந்தவித ஸ்தானங்களையும் பெறவில்லை. சாதாரண பெருப்பான்மையினை அடிப்படையாகக் கொண்ட வாக்களிப்பு முறையானது நாட்டின் அரசியல் நிலையினை பூர்ணமாகப் பிரதிபலிக்கவில்லை. இதனால் ஒரு மாற்று வாக்களிப்பு முறை கட்டாயமாக உருவாக்கப்பட வேண்டும் என்பது கலாநிதி என். எம். பெரேரா அவர்களின் வாதமாகும்.[20] எனவே எதிர்காலத்தில் தற்போது ஆராயப்பட்டு வரும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையினை அமுலாக்குதல் இக் குறைபாடுகளைத் தவிர்ப்பனவாக இருக்கலாம்.

இலங்கையில் வகுப்புவாத அரசியல் செயல் இழந்து செல்கின்றது என்பதனையே இத் தேர்தல் முடிவுகள் மேலும் வற்புறுத்துவதாகக் காணப்படுகின்றது. இத் தேர்தலில் போடியிட்ட நான்கு முக்கிய அரசியற் கட்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளும் தேசியக் கட்சிகளாகக் காணப்பட்டன. இம் மூன்று கட்சிகளும் 1965ஆம் ஆண்டுத் தேர்தலில் 79·3 சதவீத வாக்குகளையும், 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் 86·8 சதவீத வாக்குகளையும், 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் 87·5 சதவீத வாக்குகளையும் பெற்றிருக்கின்றன. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி 1965இல் 7·8 சதவீத வாக்குகளையும், 1970இல் 7·2 சதவீத வாக்குகளையும், 1977இல் 6·8 சதவீத வாக்குகளையுமே பெற்றிருக்கின்றன. எதிர்காலத்தில் வகுப்புவாத அரசியல் சிறிது சிறிதாக அற்றுப்போய்விடுமென்பதனையே இது எடுத்துக் காட்டுகின்றது.

மரபுரீதியான இடதுசாரிக் கட்சிகளின் இறுதிக் கட்டமாகவே இத்தேர்தல் அமைந்திருக்கின்றது. எதிர்காலத்தில் இடதுசாரி இயக்கம் புனர் நிர்மானம் செய்யப்பட்டால் அன்றி, இலங்கையின் அரசியலில் இவை வளர்ச்சிப் போக்கினைக் கொள்ள முடியாது.

முடிவுரை:

இத் தேர்தல் முடிவுகளானது முற்பட்ட காலத் தேர்தல் முடிவுகளின் ஒரு தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்காகவே அமைந்திருக்கின்றது. மேலும் வட,கிழக்கு மாகாணங்களின் அரசியல் போக்கானது ஓரளவு தேசிய அரசியல் சத்திகளுடன் இணைத்துச் செயற்படத் தொடங்கி யிருக்கின்றது. இக் கூற்று கிழக்கு மாகாணத்திற்தே பெருமளவு பொருந்துவதாக இருப்பினும், வட மாகாணத்திலும் ஓர் ஆரம்ப நிலை ஏற்பட்டிருப்பதை ஓரளவு அவதானிக்க முடிகின்றது. மேலும் இத் தேர்தல் முடிவுகளை ஒரு தற்செயல் அரசியல் விபத்தாகக் கருதுவதற்கில்லை. ஆனால் எதிர்காலத்திலும் இத்தகையதொரு போக்கு சாத்தியமானதா என்பதனை திட்டவட்டமாக இன்று கூற முடியாது. எதிர்காலத்தில் ஏற்படும் அரசியல் சமூக மாற்றங்கள் இதற்கு முரணான முடிவுகளைக்கூட ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கலாம்.

அடிக் குறிப்புக்கள்

1. A. J. Wilson, **Politics in Sri-Lanka 1947 — 1973,** (London, 1974), P. 128.
2. Ibid, P. 129
3. **Asia's Voice,** (Bombay. 15 July 1977), P. 15.
4. *தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுத்தேர்தல் பிரகடனம், (கொழும்பு, 1977).*P. 1
5. Robert N. Kearney, **The Politics of Ceylon,** (London, 1973), P. 105.
6. Ibid., P. 104.
7. Ibid.
8. **Asia's Voice,** (Bombay, 15 July 1977), P. 15.
9. A. B, Talagune, **From J. R.....,** (Colombo, 1977), P. 5.
10. **Asia's Voice,** (Bombay, 29 July 1977), P. 11.
11, U. N. P. Elections Manifesto, (Colombo, 1977.)
12. A. R. Robinson, **The Family Free,** (Dehiwela, 1977), P. 5.
13. **Asia's Voice,** (Bombay, 15, July 1977) P. 14.
14. U. N. P. Manifesto, (Colombo, 1977), P. 1-
15, **Ceylon Daily News,** (Colombo, 29 July 1977), P. 1.
16. **தினபதி,** *(கொழும்பு,* 11 June 1977), P. 5.
17. **வீரகேசரி,** *(கொழும்பு,* 16 August 1977), P. 1.
18. **Sunday Times,** (Colombo, 14 August 1977) P. 4.
19. **வீரகேசரி,** *(கொழும்பு,* 22 September 1977), P. 4.
20. **Sunday Times,** (Colombo, 14 August 1977), P. 4.

மூலதன மீட்பு ஒதுக்கு நிதி

பங்கு மீட்பின்போது மீட்பு வட்டத்துடன் செய்யப்பட்டும் மீட்புக்காகப் புதிய பங்குகள் வழங்கும்போது அதுவும் வட்டத்துடனும் வழங்கப்பட்டிருப்பின் வட்டத்துடனான மீட்புத் தொகைக்கும் வட்டத்துடனான பங்கு வழங்கல் தொகைக்கும் இடையேயுள்ள வித்தியாசமே மூலதன மீட்பு ஒதுக்கு நிதியாக ஒதுக்கப்படவேண்டும். இது இலங்கையில் பின்பற்றப்படும் முறையாகும். இங்கிலாந்து முறைப்படி வட்டம் தவிர்ந்த பங்குகளின் பெறுமதி அதாவது முகப்பெறுமதி (Face Value) களின் வித்தியாசமே மூலதன மீட்பு ஒதுக்கு நிதியாக ஒதுக்கப்படும்.

சகலவிதமான
பலசரக்குச் சாமான்களுக்கும்

குணரத்தினம் ஸ்ரோர்ஸ்
96, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
போன் : 556

With the best Compliments
of

General Merchants
&
Commission Agents

R. N. R. Stores
33, MANIPAY ROAD,
JAFFNA.

Dealers in Household goods, groceries, stationery and gift articles. specilists in rosting and grinding of
COFFEE and SOYA BEAN.

Mohamedally Abdulally
5–7, Grand Bazaar, JAFFNA
Phone : 515 *Grams* : 'SAIFEE'
Branch :
81, Old Moor Street,
COLOMBO-12
Phone : 33569 *Grams* 'BARVALA'

- கைத்தறிப் புடவைகள்
- ரெடிமேட் உடுப்புகள்
- வர்ணக் குடைகள்

மற்றும்
நம்நாட்டு அன்பளிப்புப் பொருட்கள்
உற்பத்திப் பொருட்கள்
— அனைத்திற்கும் —

யூ ரூ ச னு ஸ்
17-18, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்,

எமது நல்வாழ்த்துக்கள்!

↓

பண்கோப்

உற்பத்திகள்

- தரமானவை
- உறுதியானவை
- கவர்ச்சியானவை
- மலிவானவை

பண்கோப் சேட் வகைகள்
பண்கோப் காற்சட்டைகள்
பண்கோப் சிறுவர் உடைகள்
பண்கோப் அரைக்காற்சட்டைகள்

இவைகளையெல்லாம்
மக்களுக்காகச் செய்து
வழங்கிச்
சேவை புரிவது

பண்டத்தரிப்பு பரிஷ்
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
பண்டத்தரிப்பு

தொலைபேசி:
தலைமை அலுவலகம்:
808 பண்டத்தரிப்பு
மொத்த விற்பனை நிலையம்:
36 பண்டத்தரிப்பு
தந்தி: "பண்கோப்"
பண்டத்தரிப்பு

வித்தியோதயத்துக்கு
எமது வாழ்த்துக்கள்!

↓

நங்கையர் விரும்பும்
நவநாகரீகப்
புடைவைத்
தேர்வுகளுக்கு

↓

கல்பனஸ்
ரெக்ஸ்ரைல்
70, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

எமது வாழ்த்துக்கள்!

↓

மீன்பிடித் தொழிலுக்குத்
தேவையான
உபகரணங்கள்,
நைலோன் வலைகள்,
நூல்கள்,
குறுலோன் வலைகள்,
நூல்கள்
யாவற்றையும் மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்!

❋

நித்தியா ஸ்ரோர்ஸ்
9, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

With the best Compliments of

↓

Vickna Tuition Center

விக்ஞ டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஸ்ரீதர் தியேட்டருக்கும் நாகவிஹாரைக்கும் மத்தியில்)

○ G. C. E. (O/L) ○ G. C. E. (A/L) ○ G. A. Q.
○ B. A. ○ B. Com.

வகுப்புக்கள் சிறந்த அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியர்களாலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் போதிக்கப்படுகின்றன.

எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

↓

நிதான விலை! **சிறந்த ரகம்!!**

தற்கால நவநாகரிகத்திற்கு ஏற்ற

தரம் மிக்க ஜவுளிகள்

அனைத்தையும் பெற்றுக்கொள்ள

கணேசன் ஸ்ரோர்ஸ்

63, 78, காங்கேசன்துறை வீதி :: யாழ்ப்பாணம்

கைத்தொழிற்துறை — பொருளாதார அபிவிருத்தியில் அதன் பங்கு

எம். யூ. எம். ஸனூஸ்
B. Com. (Sp.) (Vidyodaya).

சுதேச மன்னர்களின் ஆட்சிக்காலத்திலும், அதன் பின்னர் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களிலும் இலங்கை ஒரு விவசாய நாடாகவே இருந்துவந்தது. மிக அண்மைக் காலம் வரையில் தேயிலை, இறப்பர், தென்னை போன்ற விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து, எமக்குத் தேவைப்படும் எல்லாவகையான கைத்தொழில் உற்பத்திப் பொருட்களையும் இறக்குமதி செய்து வந்தோம். சவர்க்காரம், தீப்பெட்டி போன்ற மிகச் சாதாரண கைத்தொழில் நுகர்வுப் பொருட்களையேனும் மிக அண்மைக்காலம் வரை நாம் எமது நாட்டில் உற்பத்திசெய்யவில்லை. தவிர, எமது ஏற்றுமதிகள் யாவும் விவசாய உற்பத்திகளான முதல் விளைவுப் பொருட்களாகவே இருந்து வந்தன. இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட தொழிலாளரைக் குறைந்த கூலியில் ஊழியச் செறிவுடைய விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தக்கூடியதாக இருந்ததும், தொழில்நுட்ப அறிவு குறைவாக இருந்தமையும், ஊழியச் செறிவு குறைந்த ஆனால் மூலதனச் செறிவு கூடிய இயந்திரமயமான கைத்தொழில்கள் தேவைப்படாமையும், நாட்டின் இயற்கை வளங்கள் சரியாக ஆராயப்படாமையும் நாடு தொடர்ந்து கைத்தொழிலில் கவனம் செலுத்தாமல் இருந்ததற்கு முக்கிய காரணங்களாகும்.

எனினும், கைத்தொழில்—விஞ்ஞான யுகமாகிய இவ் 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் கைத்தொழிலின் பங்கானது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் மொத்தத் தேசிய உற்பத்தியில் கைத்

தொழிலின் பங்கே மிகவும் அதிகமாக — அதாவது 65 சதவீதம் வரையில் காணப் படுகிறது.

ஒரு நாட்டில் பல்வேறு காரணங்களுக் காகக் கைத்தொழிலானது அத்தியாவசியப் படுகிறது. முதலாவதாக, தொழில் வாய்ப் புக்களை உருவாக்குதல் முக்கியமாகக் கவ னிக்கப்படவேண்டும். நாட்டின் சனத் தொகைப் பெருக்கத்திற்கேற்பப் பொருளாதாரத்திலும் விருத்தியேற்பட வேண்டும். அவ்வாறு பொருளாதாரத்தில் வளர்ச்சி காணப்பட வேண்டுமாயின் விவ சாயத் துறையினால் மாத்திரம் அதனைச் சாதிக்கமுடியாதுள்ளது. விளைவிக்கக்கூடிய நிலம் வரையறுக்கப்பட்டுக் காணப்படுவ தும், நுகர்வுப் பொருட்களுள் பெரும் பங்கு கைத்தொழில் சார்ந்தவையாகமாறி வருவதுமே இத்தடைக்கு முக்கிய காரணங் களாகும். 1972ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின்படி, கைத்தொழிற் துறையி லுள்ள 1897 நிறுவனங்களில், நேராக வேலை செய்வோரின் எண்ணிக்கை 123, 986 பேர் ஆகும். இதிற் பல சிறிய நிறு வனங்களும் சொந்தக் கைத்தொழில் களும் சேர்க்கப்படவில்லை. அவ்வாறானவற் றில் வேலை செய்வோரின் எண்ணிக்கை யைக் குறைந்தபட்சம் 75,000 பேர் என மதிப்பிடலாம். இவற்றைவிட சுமார் 100,000 ஆட்களுக்குக் கைத்தொழிற் துறை மறைமுகமாக வேலையளிக்கிறது. அதாவது, இக் கைதொழில்களின் மூலப் பொருட்களையும், துணைப் பொருட்களையும் உதிரிப் பாகங்களையும், உற்பத்திசெய்யும் தொழில்களிலும், இவற்றின் விநியோகத் தொழில்களிலும் அவ்வளவு தொகையா னோர் ஈடுபட்டிருப்பர். எனவே மொத்தத் தில் கைத்தொழிற்துறை 1972இல் 300,000 பேருக்கு வேலைவாய்பளித்திருந் தது எனலாம்.

குறைவாக வருமானம் பெறுவோரின் திட்மிடப்பட்ட வருமான அதிகரிப்பின் காரணமாகத் தேவையில் அதிகரிப்புத் தோன்றுகிறது. இது வாழ்க்கைத்தர உயர் வினால் ஏற்படுவதாகும். இத் தேவை அதி கரிப்பை ஈடுசெய்யக்கூடிய வகையில், அவ சியமான நுகர்வுப் பொருட்களின் உற் பத்தியை அதிகரிப்பது அத்தியாவசியப் படுகிறது. இதனால் பாவனைப் பொருட் களை—பண்டங்களை உற்பத்தி செய்வதற் காகப் புதிய கைத்தொழில்களைத் தாபிப் பதும், ஏற்கனவே உள்ள கைத்தொழில் களை விரிவாக்குவதும் அவசியமாகிறது.

அடுத்து, பல்வேறு கைத்தொழில்கள் ஒன்றில் ஒன்று தங்கியே காணப்படுகின் றன. ஒரு கைத்தொழிற் பொருளின் ஆக் கத்துக்கு, வேறொரு கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படும் இடைப் பொருட் கள் தேவைப்படுகின்றன. அல்லது கைத் தொழில்களுக்குத் தேவையான மூலதனப் பொருட்களை-இயந்திர சாதனங்களை ஆக்கு வதற்காக அடிப்படைக் கைத்தொழில் களைத் தாபிப்பது அத்தியாவசியப் படு கிறது. "பிற கைத்தொழில்களுக்கு வேண் டப்படும் இடுகைகளை அளிக்க வல்ல அடிப் படைக் கைத்தொழில்களைத் தாபிக்க வேண்டிய தேவை: இது கைத்தொழில் துறைக்கும் பிற துறைகளுக்கும் இடையே யான இணைப்பும், பல்வகைத் தொழில்க ளிடையேயான இணைப்பும் தோன்ற ஏது வாகும். இதனால் தொடர்ச்சியான கைத் தொழில் வளர்ச்சி சாத்தியமான ஒன்று கும்" என ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப் பட்டுள்ளது. இவ்வாறு ஏனைய தொழில்க ளில் உள்வீடுகளை உற்பத்தி செய்யும் கைத் தொழில்கள் பாரிய கைத்தொழில்களாக வும் அடிப்படைக் கைத்தொழில்களாக வுமே அமைகின்றன. இவை பெருவீதத் தொழில்களாகும்.

மக்கள் பெருந்தொகையாக உபயோ கிக்கும் பாவனைப் பொருள் உற்பத்திக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது அவசிய மாகிறது. ஏனெனில் ஒரு பரந்த சந்தைக்கு இப் பாவனைப் பொருட்களைத் தொடர்ந் தும் இறக்குமதி செய்துகொண்டிருப்ப தற்கு, அந்நியச் செலாவணிச் செலவு இனி

மேலும் இடம் கொடுக்காது. எனவே இதற்காகவேனும் கைத்தொழில்களைத் தாபிப்பதும், விருத்தி செய்வதும் அத்தியாவசியமாகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன் காணப்பட்ட ஓரளவு மூடப்பட்ட, பொருளாதார அமைப்பிலிருந்து இலங்கையானது தற்பொழுது பூரணமாக விடுபட்ட நிலையில் காணப்படுகிறது. தன்னிறைவு கொண்ட கிராமிய வாழ்க்கை முறையில், சாதனங்களின் தோற்றத்தால் மாற்றங்கள் ஏற்பட்டு, ''பரிவர்த்தனை உலகில்'' இப்பொழுது சஞ்சரிக்கிறோம். இந் நிலையில் எமது தேவைகளில் பெரும் பங்கு இறக்குமதி செய்யப்படும் பாவனை — நுகர்வுப் பொருட்களில் தங்கியிருக்கிறது. இதனால் விவசாய முதல்விளைவுப் பொருட்களின் ஏற்றுமதியினால் சம்பாதிக்கப்பட்டு வந்த அந்நியச் செலாவணியானது, வெறும் நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக விரயமாக்கப்பட்டு வந்தது. இவ் அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்காகவேனும் இறக்குமதிப் பதிவீட்டின் அடிப்படையில் கைத்தொழிற் துறையை விருத்தி செய்வது அவசியமாகிறது. இன்று எமது கைத்தொழில்கள் எமக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களில் ஒரு பகுதியை உற்பத்தி செய்வதனால், நாம் ஒவ்வொரு வருடமும் சுமார் ரூபா 900 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிக்கிறோம். உதாரணமாக 1971ஆம் ஆண்டில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தொழிற் பொருட்களை நாம் இறக்குமதி செய்திருந்தால் சுமார் 1700 மில்லியன் ரூபா பிற நாட்டுச் செலாவணி செலவாகியிருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

நாட்டின் வளங்களின் சரியான பயன்பாட்டைப் பெறுவதற்கும் கைத்தொழிற் துறை அவசியமாகிறது. வளர்முக நாடான இலங்கையில் மிக அண்மைக்காலம் வரையில் இயற்கை வளங்கள் சரியாக ஆராயப்படாமல் வீணடிக்கப்பட்டே வந்தன. கைத்தொழிற் துறைகளின் தோற்றத்தினால் இவை இவ்வாறு வீணடிக்கப்படாமல் பொருத்தமான முறையில் பயன்பாட்டுக்கு உட்படுத்தப் படலாம். நகரப்புறங்களோடு மாத்திரம் நின்றுவிடாமல் கிராமப் புறங்களிலும் கைத்தொழில்கள் பரவலாக்கப் படுவதால் அப் பகுதிகளில் பெறத்தக்க மூலவளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். 'கிராமப் பிரதேசங்களிலும் கைத்தொழில்களை வளர்ச்சியுறச் செய்ய வேண்டிய தேவை; இதனால் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி கிராம வருமானத்தை அதிகரிக்கச் செய்யவும், கிராமப் புறங்களிலே பெறத்தக்க மூலப் பொருட்களுக்கான கிராக்கியை ஏற்படுத்தவும் முடியும்' என ஐந்தாண்டுத் திட்டம் கூறுகிறது. ஒரு நாட்டில் காணப்படும் மூலவளங்கள் —அதை நன்கு பயன்படுத்தக்கூடிய முறை—அறிவுத் திறமை என்பனவும் கவனிக்கப்படல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட நாட்டில் மூலவளங்கள் இல்லையாயின் அதனை அபிவிருத்தியடையும் நாடு என்றோ, அல்லது குறைவிருத்தி நாடென்றோ அழைக்க முடியாது. அபிவிருத்தி செய்யக்கூடிய மூலவளங்கள் இருப்பது குறைவிருத்திக்குரிய முக்கிய நிபந்தனையாகும். இத்தகைய மூலவளங்கள், இலங்கையில் சில அபிவிருத்தியடைந்த நாடுகளைவிடக் கூடியளவு இருப்பதையும் காணலாம். ஆனால் இம் மூலவளங்களைப் பயன்படுத்துவதிலேயே அபிவிருத்தியின் முக்கியத்துவமும், தரமும் தங்கியுள்ளது. உதாரணமாக அமெரிக்காவில் நிறைந்திருந்த வளங்களைச் சுதேசிகள் பயன்படுத்தாது குறைவிருத்தி நிலையில் இருந்த அதே வேளை ஐரோப்பியர் அவ்வளங்களுள்ள இடங்களை நாடிச் சென்று அவற்றைப் பயன்படுத்த முற்பட்டதால் அங்கு பொருளாதார வளர்ச்சி புரட்சிகரமாக ஏற்பட்டதைக் குறிப்பிடலாம்.

அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பதற்காகவும், ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்காகவும் கைத்தொழிற் துறையை அபி

விருத்தி செய்யவேண்டியது முக்கியமாகின்றது. மரபு வழியான விவசாயப் பொருட்களை நாம் தொடர்ந்தும் ஏற்றுமதி செய்வதனால் பாதகமான நிலைமைகளே ஏற்படுகின்றன, என்பதற்கு அண்மைக்காலப் புள்ளிவிபரங்கள் ஆதாரமாக அமைந்துள்ளன. 1972 முதல் 1976 வரையுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டதுபோல் ஏற்றுமதிச் சந்தையைப் பெருக்குவதற்காக, கைத்தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தவேண்டியது அவசியமாகும்.

விவசாயம் — கைத்தொழில் எனும் இரண்டுக்கும் அபிவிருத்தியில் சம முக்கியத்துவம் அளிக்கப்படுவேண்டுமெனினும், இன்று அபிவிருத்தியடைந்து காணப்படும் கைத்தொழில் நாடுகளில் விவசாயத்தை விடக் கைத்தொழிலுக்கே கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. இதனால் கைத்தொழிற் துறையின் விருத்தியே எந்த நாட்டிலும் அதன் முன்னேற்றத்தை அளவிடும் கருவியாகக் கருதப்படுகின்றது. பெரும்பாலான நாடுகளில், விருத்தியுடன் சேர்ந்து விவசாயத்துறையின் பங்கு குறைவடைய, கைத்தொழிற் துறையின் பங்கு அதிகரித்துவந்துள்ளது. இப் போக்கு காணப்படவில்லையெனில் அந்நாடுகளில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படவில்லையெனலாம். ஹோலிஸ் பி. சென்றி (Haulis P. Centry) என்பவரின் ஆய்வுப்படி விவசாயத் துறையில் நெகிழ்ச்சியின் அதிகரிப்பு விகிதம் 0·5 சதவீதத்துக்கும் குறைவாகவே இருக்கும். அதே வேளையில் கைத்தொழிற் துறையில் நெகிழ்ச்சி 1·3 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துச் செல்கிறது. ஆகவே மக்களது வருமானம் உயரும்பொழுது பொதுவாக விவசாயத்துறையின் முக்கியத்துவம், குறிப்பாக உணவுப் பொருட்களுக்கான கேள்வி குறைந்துகொண்டே செல்லும். ஆனால் அதே வேளையில், அவர்கள், கொள்வனவு செய்யும் பல்வேறு கைத்தொழிற் பொருட்களின் அளவு, வாழ்க்கைத் தர உயர்வுக்கேற்ப அதிகரிக்கும். இதனால் இயல்பாகவே விருத்தியடையும் நாடுகள் கைத்தொழில் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது.

கைத்தொழில்கள் கூடிய மூலதனச் செறிவுடையதாக இருப்பதால் தொழில் நுட்ப முன்னேற்றத்துக்கு அது வாய்ப்பளிக்கிறது. விவசாயத்துறை ஒழுங்கான முறையில் முன்னேறுவதற்குக் கைத்தொழிற் துறையும் முன்னேறவேண்டும். விவசாயத்துறையில் உருவாகக்கூடிய மேலதிக சனத்தொகையை உறிஞ்சக்கூடியதாகக் கைத்தொழிற்துறை அமையவேண்டும். இதனால் கைத்தொழிற்துறைக்கு வேண்டிய ஊழியப் பலம் கிடைப்பதோடு விவசாயத்திலும் புதிய தொழில்நுட்ப முறைகளையும், கருவிகளையும், புகுத்தமுடியும். மேலும், கைத்தொழிற்துறை விருத்தி மூலமே தலா, மெய் வருமானத்தை அதிகரிக்கலாம். உற்பத்தித்திறனை அதிகரிக்கும் வாய்ப்பும் கைத்தொழில் துறையில் மிக அதிகமாகும். இவ்வாறு பொருளாதார அபிவிருத்தியில் கைத்தொழிற் துறையானது பெரிதும் முக்கியத்துவம் பெறுகிறது.

நடைமுறைப் பொறுப்பு

கணக்காண்டு காலப்பகுதியில் கொடுத்துத் தீர்க்கவேண்டியிருந்த பொறுப்புக்கள் எல்லாம் நடைமுறைப் பொறுப்புக்களாகும். அவை எவ்வளவு தொகையாக இருப்பினும் விதிவிலக்குப் பெறு. உ + மாக 65இல் அழைக்கப்பட்ட 70இல் மீட்கப்படவேண்டிய தொகுதிக்கடன் 100,0000 ரூபா. 69ஆம் ஆண்டு ஐந்தொகையில் நீண்டகாலக் கடனாகும். 70ஆம் ஆண்டு ஐந்தொகையில் (காசு கொடுக்கப்படாதிருந்தால்) அது ஒரு நடைமுறைப் பொறுப்பாகும். ஏனெனில் அது அவ்வருடத்தில் கொடுக்கவேண்டிய ஒரு பொறுப்பாகும்.

அன்பளிப்பு!

★

மின்சார உபகரண
விற்பனையாளரும்
ஒப்பந்தகாரரும்

எலெக்ரோலக்ஸ்
ELECTROLUX

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

TISA TOYS

70, Manipay Road, JAFFNA.

வித்தியோதயம் சிறப்புடன் மலர
எமது வாழ்த்துக்கள்!

- சிறுவர் கண்கவர் விளையாட்டுப் பொருட்கள்
- பிறந்ததினப் பரிசுகள்
- புதுமனை புகுவிழாப் பரிசுகள்
- வீட்டை அழகு படுத்தும் அலங்கார அழகு சாதனங்கள்
- பாலர் பாடசாலைக்கு வேண்டிய நவீன உபகரணங்கள்
- காரியாலய பாவனைக்குரிய தளபாட வகைகள்
- சாப்பாட்டு மேசைகள் போன்றவற்றிற்குரிய விசேட ஆடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்
- இந்திய மர விளையாட்டுப்பொருட்களின் தரத்திற்கு இலங்கையில் மர விளையாட்டுப் பொருட்கள் செய்யும் ஒரே தாபனம்.

↓

திசா ரோய்ஸ்

70, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

வித்தியோதயத்துக்கு
எமது
முத்தான வாழ்த்துக்கள்!

அம்பாள் கபே

$\frac{218}{1}$, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

Donated

by

Institute of Commerce Studies

Classes for :

G. C. E. (O/L),

G. C. E. (A/L).

London Examination,

I. A. B. (Foundation-Intermediate & Final)

Director :

S. KANDASAMY

F. I. A. B (Lond.)

69. Sivan Bannai Road,

JAFFNA.

விக்கிபோகயம் மலர்ந்து மணாம் பரப்ப
எமது வாழ்த்துக்கள்!

எஸ். சின்னத்துரை அண்ட் பிறதர்ஸ்
யாழ்ப்பாணம்.

போன் 284

விக்கிபோகயம் வாழ்த்துக்கு

வாகனை உரிமையாளர்களே!
உங்களுக்குத் தேவையான
நயம், சிறப்பு வாகனத்தை
இன்றே முன்னாய் செய்யுங்கள்.

எஸ். வி. ஸ்ரீதரன்

154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

விக்கிபோகத்தார்:
லங்கா ஸ்ரோர்ஸ் (சென்றல்) கேம்பிறேஜ்

முகாமையில் அதிகாரக் கையளிப்பு — ஒரு கண்ணோட்டம்

செல்வி மீரா – சவுரிமுத்து
B. Com. (Sp.) (Vidyodaya.)

மனிதர்களையும் வளங்களையும் பயன் படுத்தி அதாவது மனித நலனுக்காக இயற்கை வளங்களையும், மனித சக்தியையும் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்துவதுடன் வழி நடத்திக் கட்டுபடுத்தும் ஒரு கலை, விஞ் ஞானமே முகாமை எனப்படுகின்றது. முகாமைக்கான இவ் வரைவிலக்கணத்தி லிருந்து ஐந்துவிதமான கருத்துக்களை நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின் றது, அதாவது சிந்தனையின் ஒரு வழியே முகாமை என்றும், புத்தி, திறமை என்னும் தன்மையில் வேறுபட்ட மனிதர்களைப் பற்றியதென்றும், மனிதர்களை ஒன்றிணைத்து வேலை செய்விப்பதும், அவர்கட்கிடையே யான வேறுபாட்டை நீக்குவதுமே முகாமை என்பதன் சாரம் என கூறக்கூடியதாக உள்ளது.

மேற்கூறப்பட்ட முகாமைபற்றிய கருத் துணர்வில் இருந்து முகாமையின் அமைப்பு தொழில்பாட்டிற்கு அதாவது தன்மையில் வேறுபட்ட மனிதர்களையும், இயற்கை வளங்களையும் ஒன்றிணைத்து, வழிநடத்தி நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற அதிகாரக் கையளிப்பின் முக்கியத்துவம் உணரப்படாமல் இருக்க முடியாது. அதி காரக் கையளிப்பு அமைப்பு தொழிற் பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது. ஏனெனில் அமைப்பிற்கான வரைவிலக் கணத்தை நோக்கும்போது முகாமையில் அமைப்புத்தொழில்பாட்டில் அதிகாரக் கையளிப்பின் அவசியத்தைப் புரிந்து கொள்வது சுலபமாக உள்ளது.

"அமைப்பு என்பது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் திட் டத்தை நடைமுறைப் படுத்தவும், நபர்கள் திறமையாக வேலை செய்ய

வும், நிறுவனத்தின் அலுவல்களைப் பகுதி பகுதியாகப் பிரித்துக்கொள்வது, அவ்வாறு பிரிக்கப்பட்ட பகுதி அலுவல்களை நிறைவேற்றுவதற்கு நடைமுறையில் முரண்பாடுகள் ஏற்படாதவாறு அதிகாரத்தைப் பிரித்து வழங்குவது'' என்று சுருக்கமாகக் கூற முடியும்.

எனவே முகாமைக் கோட்பாட்டின் முழு அமைப்பு தொழில் பாட்டிலும் பூரண ஆதிக்கம் செலுத்தும் அதிகாரக் கையளிப்புப்பற்றி ஆராயமுன் அதிகாரக் கையளிப்பு என்றால் என்ன என்பது பற்றி ஒரு சில வார்த்தை கூறப் புகுதல் சிறந்தது.

''அதிகாரக் கையளிப்பு என்பது ஒரு மேல்மட்ட அதிகாரி தன்னிடம் இருக்கும் அதிகாரத்தில் ஒரு பகுதியினை இன்னொருவருக்குத் தான் செய்யும் வேலைகளைத் தனக்காக நிறைவேற்றுவதற்காக வழங்கப்படும் அதிகாரமாகும்.''

அதிகாரக் கையளிப்பு இல்லாது அமைப்பு என்று ஒன்று இருக்கமுடியாது. ஏனெனில் அமைப்பை முகாமைத் தொழிற்பாடு என்ற ரீதியில் நோக்கும்போது நிறுவனத்தை ஒழுங்குபடுத்தி அமைப்பதும், அதன் விளைவாக உருவாகும் நிறுவன அமைப்பும், நிறுவன முயற்சியும் உள்ள அதிகார உறவு முறைகளையும் அடக்கி உள்ளதாக அவதானிக்க முடியும். நிறுவன நோக்கத்தை அடைய நடவடிக்கைகளைத் தொகுப்பதும், ஒவ்வொரு தொகுதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்ய அதிகாரம் வழங்கப்பட்ட முகாமையாளரை நியமிக்க ''அதிகாரக் கையளிப்பு'' அவசியமாகும்.

அடுத்து அதிகாரம் கையளிக்கப்படும் முறையாலும், கையளிக்கப்படும் அதிகாரத்தின் அளவினாலும், அதிகாரத்தின் அளவும் தன்மையும் வேறுபடலாம். இவ்வதிகாரக் கையளிப்பின் தன்மையில்தான் ஒரு நிறுவனம் தனது நோக்கத்தை நீண்ட காலத்தில் நிறைவேற்றக் கூடிய தகுதிகளைக் கொண்டிருக்கும். அமைப்பிற்கு ஒரு வடிவத்தைக் கொடுக்கும் அதிகாரக் கையளிப்பு முறையானது கீழ்மட்டத்தவர்கள் குறிக்கப்பட்ட அலுவல்களைச் செய்வதற்குத் தாமே தீர்மானங்களைச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் வழங்கப்படுகின்றது எனலாம். இவ் அதிகாரக் கையளிப்பு எந்த ஒரு நிறுவனத்தினதும் அதிகாரச் செறிவாக்கம், அதிகார பரவலாக்கம் எனும் தத்துவத்தை விளக்க உதவுவதுடன் தீர்மானம் எடுத்தலிலும் இவ் அதிகாரச் செறிவாக்கமும், பரவலாக்கமும் முக்கிய இடத்தை வகிக்கின்றது எனலாம்.

ஒருவர் தனக்காக ஒரு வேலையை நிறைவேற்றுவதற்கு இன்னொருவரிடம் அதிகாரம் வழங்கும்போது இரண்டாவது நபர் அவ்வேலையைச் செய்வதற்கு வழங்கப்படும் அதிகாரத்திற்கு நிகரான பொறுப்பை ஏற்றுக்கொள்ளின் அங்கு அதிகாரக் கையளிப்பு இடம்பெறும். எனவே மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டத்தவருக்கு வழங்கப்படும் அதிகாரத்தையே பொதுவாக அதிகாரக் கையளிப்பு என்ற பதம் விளக்குகின்றது என முகாமை அறிஞர்கள் கொள்வர். ஆனால் ஒரு கீழ்மட்ட முகாமையாளர் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீண்டும் மேல்மட்ட முகாமையாளருக்குக் கொடுத்துச் சில கடமைகளைச் செய்யும்படி கேட்கும்போதும் ஒரே மட்டத்திலுள்ளவர்கள் தமக்கிடையில் மேல்மட்டத்தவர் அனுமதியின்றி அதிகாரம் வழங்கும் போதும் முகாமைக் கட்டுப்பாடு விலகுவதுடன் அதிகாரக் கையளிப்பும் பலமற்றதாகின்றது எனக் கொள்ளவேண்டும்.

அதிகாரக் கையளிப்பைப் பொறுத்தவரையில் அதிகாரத்தை வழங்குபவரும், அதிகாரத்தைப் பெறுபவரும் தாமாக விரும்பி ஈடுபடல் வேண்டும். ஆனால் எப்போதும் கீழ்மட்டத்தவர் தாமாக விரும்பி அதிகாரத்தை ஏற்பர் எனக் கூறமுடியாது. பதவி உயர்வுகளைத் தடுத்தல், பதவி மாற்றம் செய்தல் எனும் சில நடவடிக்கைகள்

மூலம் கீழ்மட்டத்தவர் தாமாக விரும்பிப் பொறுப்புக்களை ஏற்கவும், அதிகாரத்தைப் பெறவும் வழிவகை செய்வதிலும், அதிகாரத்தைத் தாமாக விரும்பிக் கையளிப்பதிலும், ஏற்பதிலும் தான் ஒரு நிறுவனத்தின் மேல்மட்ட, கீழ்மட்ட முகாமைக் கிடையில் நெருங்கிய தொடர்பும், நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் இணைப்பும் ஏற்படும். மேலும் ஒரு மேல் மட்ட முகாமையாளனின் ஆற்றல், விருப்பம், என்பவற்றிலும், கீழ்மட்ட முகாமையாளர் ஒருவர் தனக்கு வழங்கும் அதிகாரத்தை ஏற்பதில் காட்டும் விருப்பம், அவரின் ஆற்றல் என்பவற்றிலும் கையளிப்பின் வெற்றி தங்கியுள்ளதுடன், கீழ்மட்ட உத்தியோகத்தரைச் செய்யும்படி கேட்கும் வேலையின் தன்மையிலும், அதன் அளவிலும் கையளிப்பின் வெற்றி தங்கியுள்ளது.

அடுத்து மேற் கூறப்பட்ட அதிகாரம் கையளிப்பின் வகைகளை ஆராய்தல் அதிகாரக் கையளிப்புக் கோட்பாட்டைத் தெளிவாக்க உதவும். அதிகாரக் கையளிப்பின்போது கீழ்மட்டத்தவருக்கு எவ்வளவு அதிகாரம் கையளிக்கப்படவேண்டும். மேல் மட்டத்தில் எவ்வளவு அதிகாரம், வைத்திருக்கப்படவேண்டும் என்பது அமைப்பு ரீதியில் அமைந்த முகாமைக் கோட்பாட்டில் முக்கிய பிரச்சனையாக உள்ளது. அதிகாரக் கையளிப்பை, மையப்படுத்தப்பட்ட அதிகாரக் கையளிப்பு என்றும் பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரக் கையளிப்பு என்றும் இருவகைப்படுத்தலாம். உயர் மட்டத்தில் முழு அதிகாரங்களையும் வைத்திருக்கும்போது அல்லது உண்மையில் அதிகளவான அதிகாரத்தை ஒரு நிறுவனத்தின் மேல்மட்டத்தினர் வைத்திருக்கும்போது அது மையப்படுத்தப்பட்ட அதிகாரம் என்றும், அதே வேளை ஒப்பீட்டு ரீதியில் அதிக அதிகாரத்தைக் கீழ்மட்டத்தில் அளிக்கும் போது அது பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரம் என்றும் கருதப்படும். ஒரு நிறுவனத்தில் பலவகையான கடமைகள் இருப்பதால் அவை யாவற்றையும் ஒருவர் புரிய முடியாது என்பதால் எந் நிறுவனத்திலும் முழுமையான அதிகார மையவாக்கம் இருக்கமுடியாததுடன் அதே வேளை கீழ் மட்டத்திலுள்ளவர்கள் தாம் நிறைவேற்ற வேண்டிய வேலைகட்கு தாம் நினைத்தவாறு தீர்மானம் எடுப்பாராயின் அது நிறுவன ஒருமைப்பாட்டைக் குலைக்குமாதலால் பூரண அதிகாரப் பரவலாக்கமும் இருக்க முடியாது.

எந்த ஒரு நிறுவனத்திலும் அதிகாரம் பங்கிடப்படும்போது நிறுவனத்தின் இணைப்புக்கும், ஒருமைப்பாடான நடவடிக்கைகட்கும் ஏற்ற வகையிலேயே அதிகாரம் பங்கிடப்படவேண்டும். எவ்வளவு அதிகாரம் கொடுக்கப்படவேண்டும் என்பது தீர்மானம் எடுத்தலில் தங்கியுள்ளது. எந்த மட்டத்தில் ஒரு தீர்மானம் எடுக்கப்படுகின்றது, நிறுவனத்தின் நோக்கில் அத் தீர்மானத்தின் முக்கியம் என்ன? அவ்வாறான தீர்மானங்களில் எவை முக்கியமானவை எவை முக்கியமற்றவை என அளவிடப் பொதுவான அளவீடு கிடைக்குமாயின் அதிகார பகிர்வு மிக இலகுவாக அமையும். உதாரணமாகத் தீர்மானம் எடுக்கும் நேரத்தின் அளவு, தீர்மானம் எடுக்கும்போது எதிர்பார்க்கப்படும் நிச்சயமின்மை, மூலப்பொருட்கள், கருவிகள் ஆகியவற்றின் செலவீடுபற்றி எந்தெந்த மட்டங்கள் தீர்மானம் எடுக்கவேண்டும், தொழிலாளர் நியமனம், பதவிஉயர்வு, பதவிநீக்கத் தீர்மானம் எந்த மட்டத்தில் எடுக்கவேண்டும், கூலி, சம்பளம் என்பவற்றை எந்த மட்டம் நிர்ணயிக்கவேண்டும் என்பனபோன்ற தகவல்களைக் கொண்டு ஒவ்வொரு நிறுவனமும் எவ்வளவு அதிகாரத்தை மேல்மட்டத்தில் வைத்தல், எவ்வளவு அதிகாரத்தைப் பங்கிடல் வேண்டும், எவ்வாறான முறையில் மையவாக்கத்திற்கும், பரவலாக்கத்திற்கும் இடையில் சமநிலை பேணவேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் அதிகாரக் கையளிப்பின் அளவு, தன்மைகள் என்பவற்றை நிர்ணயிக்கும்.

இவ்வாறான அதிகாரக் கையளிப்பை எந்த ஒரு நிறுவனமும் சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டுமாயின் கையளிடப் கோட்பாட்டை மிகச் சிறந்த முறையில் விளங்கியிருத்தல் அவசியம்; மேலும் கீழ்மட்ட உத்தியோகத்தரை பயிற்சியளிப்

பதன் மூலமும், அவர்களை முன்னேற்று வதில் அக்கறை காட்டுவதன் மூலமும், தீர்மானம் எடுக்க வேண்டிய விடயத் தின் முக்கியத்துவத்திற்கும் தீர்மானம் எடுக்கப்படும் மட்டத்தின் தன்மைக்கும் ஏற்ப அதிகாரத்தைக் கையளிப்பதன் மூலமும், உயரதிகாரி தன்னம்பிக்கை உடையவராக இருப்பதன் மூலமும் அதி காரக் கையளிப்பைச் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும். ஆனால் இதன் எதிர்த் திசையை நோக்கின் அதாவது அதிகாரக் கையளிப்புத் தோல்வியுறுவதற்கு அதிகாரக் கையளிப்புக்கோட்பாட்டைச்சரியாகவிளங் கிக் கொள்ளாமையும் ஒரு முக்கிய காரணி எனலாம். அத்துடன் மேலதிகாரி அதிகாரக் கையளிப்பின் பின்பும் மேற்பார்வை செய்ய முனைதல், அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள போது கீழ்மட்டத்தவர்கள் நெறிப்படுத் தப்படாதிருத்தல், கீழ்மட்டத்தவர்கள் பயிற்சி அளிக்கப்படாதிருத்தல், முழு நிறு வனத்தையும் உள்ளடக்கிய மிக முக்கிய மான தீர்மானத்தை எடுப்பதற்குக் கீழ் மட்டத்தவருக்கு அதிகாரம் வழங்கல், நிறுவனத்தில் தகவல் தொடர்பு போதி யளவு இன்மை, சமூக, அரசியல் பாதிப்புக் கள், கையளிக்கப்பட்ட அதிகாரத்தைச் சரியாக வரையறுக்காது விடல், அதிகாரம் வழங்கப்பட்ட பின்பு குறிக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய கருவி களை வழங்காது விடல், தேவையற்ற நேரத் தில் அதிகாரக் கையளிப்பு என்பன அதி காரக் கையளிப்புத் தோல்வியுறக் காரணங் களாக உள்ளன.

அடுத்து இவ்வாறான அதிகாரக் கைய ளிப்பு அல்லது அதிகாரப் பகிர்வை நிர் ணயிக்கும் காரணிகளில் தீர்மானத்தின் செலவு அல்லது பெறுமதி முதலிடம் வகிக் கிறது. செலவு கூடிய தீர்மானம் எடுக்கும் போதும் அதற்கான அதிகாரங்கள் மையப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்றும், ஒப்பீட்டு ரீதியில் குறைந்த செலவுடைய தீர்மானம் எடுக்கும் இடத்தில் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்பதும் பொதுவிதி ஆகும். எனவே பிரதான முத லீட்டுத் திட்டங்கள் எடுப்பதற்குரிய அதி காரத்தை மையப்படுத்த வேண்டும் என் றும், சிறிய கருவிகள் கொள்வனவு செய் தல் போன்ற தீர்மானங்கள் எடுத்தலில் அதிகாரம் பரவலாக்கப்படலாம். இன் னும் நிறுவனத்தின் புகழ், அதன் போட்டி, நிலை, தொழிலாளர் நடத்தை, ஒழுக்கம் போன்ற புலனாகாத காரணிகளும் அவற் றின் பெறுமதி அடிப்படையிலேயே அதி காரப் பகிர்வு செய்யப்படலாம். மேலும் ஒரு நிறுவனத்தின் ஒருமைப்பாடான கொள்கையும் அதிகாரப் பகிர்வு மையப் படுத்தப்பட வேண்டுமா அல்லது பன்முகப் படுத்தப்பட வேண்டுமா என்பதை நிர்ண யிக்கும். ஏனெனில் ஒவ்வொரு திணைக்கள மும் தமக்கென ஒரு உப கொள்கைகளைக் கொண்டிருப்பதினால் அவை சில சமயம் நிறுவனத்தின் பொதுக் குறிக்கோளை நிறைவேற்ற இடையூறாக இருப்பது மட்டு மன்றி அவ்வவ் துறையின் கொள்கைகளை நிறைவேற்றவும் இடையூறாக இருக்கும். ஒரு திணைக்களத்தில் உள்ளவர்கள் தமக்குக் கீழ் உள்ள அதிகாரத்தைக் கையாண்டு அத்துறையின் தொழிலாளர் பற்றிய சம் பளம், பதவி உயர்வு போன்ற தீர்மானத் தில் நிறுவனம் முழுமையாகவும் பாதிப் புச் செலுத்தும் போது அதிகாரம் இவ் விடத்தில் பகிரப்படுவதிலும்விட மேல் மட்டத்தில் மையப்படுத்தி வைத்திருப்ப தற்கு ஒருமைப்பாடான கொள்கை அவ சியம். அடுத்து ஒரு சிக்கனமான நிறுவ னத்தின் சிக்கன அளவு அல்லது பொரு ளாதார அளவும் அதிகாரப் பகிர்வை நிர் ணயிக்கும். நிறுவனம் வளர்ச்சியடையும் போது அதாவது துறைகளும், நிர்வாக மும் அதிகரித்துச் செல்லும் போது எடுக்க வேண்டிய தீர்மானத்தின் அளவும் விகிதா சார ரீதியாக அதிகரித்துச் செல்லும். எனவே இவ்வாறான சமயங்களில் பிர மாண்டமான நிறுவனங்களில் முகாமை ஆலோசகர்கள் அதிகரிப்பதுடன் தீர்மா னம் எடுப்பது காலதாமதத்தையும் கூடிய செலவையும் ஏற்படுத்தும். எனவே நிறு வனம் வளர்ச்சியடையும் போது அலுவ லின் சிறக்கின்ற அளவிற்கேற்ப அதிகாரம் பகிரப்படும்.

அடுத்து நிறுவனம் வளர்ச்சி அடைந்து வந்த முறையும் அதிகாரக் கையளிப்பை நிர்ணயிக்கும். ஒரு நிறுவனம் தானே வளர்ச்சியடையும்போது கூடியளவு அதி

கார மையவாக்கம் உடையதாகும். ஆனால் ஒன்றுக்கல், ஒன்றிணைதல் ஆகியனமூலம் வளர்ச்சி அடையும் நிறுவனங்களின் துணை நிறுவனங்கள் அதிகளவு லாபகரமானவை யாக இயங்க நன்றுகத் தீர்மானம் செய்து தீர்க்கமான முடிவு எடுக்கப்படுதல் அவசிய மாக இருப்பதால் கூடியளவு அதிகாரப் பகிர்வு அவசியம். இன்னும் நிறுவனம் கடைப்பிடிக்கும் முகாமைத்தத்துவமும் அதிகாரப் பகிர்வை நிர்ணயிக்கும். சில நிறுவனத்தின் முகாமைப் பீடம் அதிகளவு அதிகாரத்தைக்கீழ்மட்டத்திற்குப்பங்கிடுவ தையும் இன்னும் சில நிறுவனங்கள், உயர் முகாமைப் பீடம் குறைந்தளவு அதிகாரத்தைக் கீழ்மட்டத்திற்குப் பகிர்வ தையும் விரும்பலாம். இம் முகாமைத் தத்துவம் அந்தந்த நிறுவனங்களில் உள்ள தனிப்பட்ட முகாமையாளர்களின் விருப்பு, வெறுப்பைப் பொறுத்து அமையும். அதா வது உயர் முகாமைப்பீடம் கீழ்மட்டத்தில் உள்ளவர்கட்குப் பயிற்சியளிக்கவும், அவர் கட்குப் பொறுப்புகளை ஏற்கும் மனப்பான் மையை உருவாக்கவும் விருப்பம் இருந் தால் அங்கு அதிகாரப் பகிர்வு இருக்கும்.

மேலும் தன்னாதிக்கமும், சுதந்திரத்திற் கான விருப்பமும் அதிகாரக் கையளிப்பை நிர்ணயிக்கும் சில நிறுவனங்களில் உள்ள வர்கள் எல்லா விடயத்திற்கும் மேல் மட்டத்தவரைக் கலந்துஆலோசிப்பதையும் அனுமதி பெறுவதையும் விரும்புவதில்லை. இவ்வாறான நபர்கள் இருக்கும் இடத்தில் அதிகாரக் கையளிப்புஇடம்பெறும் மேலும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு நுண்முறை களை விருத்தி செய்தலும், வேலையின் பரவ லாக்கமும், சூழல் பாதிப்பும் அதிகாரப் பகிர்வை நிர்ணயிக்கும் கட்டுப்பாட்டு நுண் முறை எனும்போது உதாரணமாக நிறு வனத்தின் உற்பத்தித் துறையை எடுப்பின் தயாரிப்பு, கொள்வனவு, இருப்பு, தரக்கட் டுப்பாடு போன்ற நுண்துறைகள் இருக்கும், இவற்றைக் கொண்டு உற்பத்தித் துறைக் குள்ளேயே அதிகாரம் பகிரப்படலாம். வேலையில் பரவலாக்கம் எனும்போது வேலை யின் போக்கு, புவியியல் ரீதியாக வேலை அமைந்துள்ள இடம் என்பனவும் சூழல் எனும்போது அரசாங்கச் சட்டம், கட்டுப் பாடுகள், தொழிற்சங்க நடவடிக்கை என்பனவற்றைக் கூறலாம். உதாரணமாக அரசாங்கக் கட்டுப்பாடுகளை ஆராயின் விலைக்கட்டுப்பாடு இருக்கும்போது ஒரு நிறு வனத்தின் விற்பனைத்துறைக்கு விலையைத் தீர்மானிக்கின்ற அதிகாரத்தை நிறுவனத் திற்கு வழங்கத் தேவையில்லை.

இறுதியாக அதிகாரப் பரவலாக்கம் செய்வதற்கான காரணங்களை ஆராயின் முதலாவதாகத் தீர்மானம் எடுப்பதில் வேகமும், குழப்பமின்மையும் இருப்பதற் கும், உயர்மட்ட முகாமையினருக்கும் கீழ் மட்ட முகாமையினருக்கும் இடையில் பிரச்சனைகளைக் குறைப்பதற்குமே அதிகார பரவலாக்கம் அவசியம் எனப்படுகின்றது. மேலும் நிறைவேற்றும் அலுவல்கள் நியாய மான முறையில் நிறைவேற்றப்படவும், நன்றுகச் செய்யப்பட்ட அலுவல்கள் பா ராட்டப்படவும், முகாமையில் ஜனநாயக முறை கடைப்பிடிக்கப்படுவதற்கும், அதி காரப் பகிர்வு அவசியமாகும். உயர்மட்ட முகாமையினருக்கும் கீழ்மட்ட முகாமை யினருக்குமிடையில் அதிக இடைவெளி இல்லாது இருப்பதற்கும், சிறந்த தகுதி வாய்ந்த முகாமையாளர் பயிற்றப்பட் டுத் தேவையானபோது உயர்பதவிகட்கு நிர்ணயம் செய்யக்கூடியதாக இருப் பதற்கும், போட்டியான அரைச் சுதந்திரம் உள்ள பல்வேறு நிறுவனங்களில் முகாமை யாளர் ஈடுபடவேண்டி இருப்பதால் அவர் களின் திறமை வெளிச்சமாக அறியப்பட வும் அதிகாரக் கையளிப்பு அவசியம். இறுதி யாக, தகுதியுடைய ஒருவருக்கு அதிகாரம் வழங்கி வேலைகளை ஒப்படைக்காத போது விரக்தி ஏற்பட்டு அவர் முகாமைப் பிரச்சனை களை ஏற்படுத்தலாம் என்பதுடன், நிறுவன அலுவல்களை ஒருவரால் செய்யமுடியா திருப்பதாலும் அதிகாரப் பகிர்வு முக்கிய மான தொன்றுகக் கருதப்படுகிறது.

எனவே மனித சக்தியையும் இயற்கை வளங்களையும் ஒருங்கிணைத்து நோக்கை நிறைவேற்ற அதிகாரக் கையளிப்பு அதன் அளவிற்கும் தன்மைக்கும் ஏற்பப் பகிரப்படு தல் அவசியம் என்பதை மறுப்பதற்கில்லை.

வித்தியோதயத்துக்கு இனிய வாழ்த்துக்கள்!

'பூமா' நீர் இறைக்கும் 'வில்லியஸ்' இஞ்சின் பொருத்திய பம்
மற்றும் தண்ணீர் இயந்திரங்களுக்குரிய பலவித உபகரணங்கள்
வண்டில் முதலியனவும் விற்பனைக்குண்டு.

தயாரித்து விநியோகிப்போர் :

சிலோன் இன்டஸ்ரியல் எஞ்சினியறிங் வேர்க்ஸ்

158, ஸ்ரான்லி வீதி :: யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7426

With the best Compliments from :

★

Yarlmetal Sales Centre

Wholesales Retailers with a Guarantee for Fair Price

6 & 30, Model Market, Hospital Road, JAFFNA.

குறைவிருத்தி நாடுகளின் இறைக்கொள்கை
(Fiscal Policy in Under-Developed Countries)

கே. எஸ். நடராசா
B. Com. (Sp.) Hons.
(Vidyodaya)

இறைக் கொள்கையைப் போன்று பொருளியலின் வேறு எந்தத் துறைகளும் கடந்த ஆண்டுகளில் அபிவிருத்தி அடைந்த தில்லை. இறைக் கொள்கை பற்றி வளர்ச்சி யடைந்த பொருளாதாரத்தில் ஒழுங்கு முறையான அமைப்புக் காணப்பட்ட பொழுதிலும் வளர்ச்சியடைகின்ற பொரு ளாதாரத்தில் ஒழுங்குமுறையானதும் ஒன் றிணைக்கப்பட்டதுமான இறைக்கொள்கை காணப்படவில்லை. அத்துடன் குறைவிருத் திப் பொருளாதாரமானது இறைக் கொள் கையின் பிரச்சினைகள் பற்றிய கருத்துக் களைப் பெற்றிருக்கவுமில்லை. கடந்த காலத் தில் தனிநபர்களும், ஏஜென்டுகளும் (Agecies) கொள்கை ரீதியாகவும், நிர் வாக ரீதியாகவும் ஆராய்ந்தனர். குறிப் பாக ஐக்கிய நாடுகள் சபையானது ஒவ் வொரு நாடுகளிலும் பொருளாதார விவகாரங்களின் இறைக்கொள்கைத் திணைக்களத்தை (The Fiscal Division of the Department of Economtc Affairs) நிறுவி இறைக்கொள்கையைஆராய்ந்து வருகிறது. விரிவடைந்த பொருளாதாரத்தில் பொது நிதியியல் பிரச்சனைகளைப்பற்றி தொழில் நுட்ப உதவி நிர்வாகம் (The Techanical Assistance Administration) போன்றவை குழுக்களை (Mission) அனுப்பி ஆராய்ந்து வருகின்றன. ஐக்கிய அமெரிக்காவினால் (U. S. A.) அனுப்பப்பட்ட இறைக் கொள் கைக் குழுக்கள் (Fiscal Missions) பல்வேறு நாடுகளின் இறைக்கொள்கை பற்றிய அறிவும், விளக்கமும் வளர்ச்சியடைந் திருப்பதுடன் அதன் நடைமுறைப் பிரச் சனைகள் பற்றிய அறிவும் 2ஆம் உலக யுத்தத்தின் பின்னர் வளர்ச்சியடைந்து வருவதாகக் கருத்துத் தெரிவித்துள்ளது.

ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இறைக்கொள்கையானது அரசாங்க செலவு—வருவாய் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தேசிய வருமானம், உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு விரும்பத்தக்க உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்வதையே குறித்தது. 1930இல் ஏற்பட்ட மந்தம், 2ஆம் உலக யுத்தம் ஆகியனவற்றின் பின்னர் இறைக்கொள்கை பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது. கீன்சின் பொதுக்கொள்கை வெளியிடுவதற்கு முன்னர் குறுகிய கால உறுதிநிலை அதாவது பற்றுக்குறையை நிவிர்த்தி செய்வது பற்றி அக்கறை செலுத்தினர். இன்று நீண்ட கால உறுதிநிலைபற்றி (Long Run Stability) கவனம் செலுத்த முற்பட்டுள்ளனர். ''இறைக்கொள்கையின் மூல நோக்கமானது முன்னேற்றமடைந்து வருகின்ற பொருளாதாரமொன்றின் உறுதி நிலையான வளர்ச்சியை உயர்த்துவதற்காக உபயோகப்படுத்தும் நிபந்தனைகளைக் குறிக்கும்.''

பொருளாதாரத்தில் சுழற்சி முறையில் ஏற்படும் பின்னடைவுகளைக் குறைப்பதற்காக 1936இன் பின்னர் கெயின்சின் வருமான வேலைக் கொள்கையும், இயக்க ரீதியான மாதிரியங்களும் (Dynamic Models) கைக்கொள்ளப்பட்டன. கெயின்சின் அடிப்படையில் வேலையின்மையைக் குறைப்பதற்காகப் பொருளாதாரப் பின்னடைவுக் காலங்களில் வளர்ச்சியடைந்த நாடுகளில் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங்கள் தயாரிக்கப் பட்டன. எனவே குறைவிருத்தி நாடுகளிலும் இக் கொள்கையைப் பயன்படுத்த வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. பிரிட்டனில் இக் கொள்கை ஓரளவுக்கு உகந்ததாக அமைந்திருப்பினும் இலங்கை, இந்தியா போன்ற குறைவிருத்தி நாடுகளுக்குப் பொருத்தமாக அமைவதில் சிக்கல் ஏற்படுகின்றன. இவை விவசாய நாடுகளாகவும், ஆளுக்குரிய மூலதனத்தின் பிரயோகம் குறைவாகவும், மூலதன உபகரணங்கள் அடிக்கடி அதிகரிக்கப்படாமலும் உள்ளன. பெரும்பாலான மக்கள் சொந்த வேலை செய்பவர்களாகவும், உற்பத்தியைச் சந்தைக்கு வழங்காது தாமே நுகர்பவர்களாகவும், விவசாயப் பொருட்களின் வழங்கல் நெகிழ்ச்சியற்றதாகவும் உள்ளன. இச் சந்தர்ப்பத்தில் முதலீட்டில் ஏதேனும் அதிகரிப்பு ஏற்பட்டால் முதன் முறையாக வருமானமும், வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். இரண்டாவது கட்டத்தில் வருமானம் வெளியீடு, வேலைவாய்ப்பு ஆகியன கைத்தொழில், நுகர் பொருள் உற்பத்தித் துறையில் அதிகரிக்கும், எல்லை நுகர்வு நாட்டம் உயர்வாக அமைய, பெருக்கெண்ணும் உயர்வாக அமைந்து கேள்வி அதிகரிக்க வேலை வாய்ப்புக்கும், வெளியீடு அதிகரிப்புக்கும் வசதியேற்படுகிறது.

குறைவிருத்தி நாடுகள் விவசாய நாடுகளாகவும், தலா வருமானம் குறைந்த நாடுகளாகவும் காணப்படுகின்றமையால் வருமானத்தில் பெரும்பகுதி ஏறக்குறைய மொத்தச் செலவில் 67 சதவீதமானவை உணவுக்கே செலவிடப்படுகின்றது. எனவே வருமானம் உயரும்பொழுது அதனூடாக ஏற்படும் கேள்வி அதிகரிப்பானது விவசாயப் பொருள்களை நோக்கியே செலுத்தப்படுமிடத்து குறுகியகாலத்தில் அவற்றின் வெளியீட்டை அதிகரிக்க முடியாததாகையால் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கின்றன. இதனால் விவசாய உற்பத்தியாளர்களின்வருமானம் உயர்வடைய அவர்கள் தமது உணவுக்கான நுகர்வை முன்பிலும் பார்க்கக் கூட்டுவார்களாகையால் சந்தைக்கு வரக்கூடிய உணவுப் பொருள்களின் வழங்கல் குறைவடையும். தற்பொழுது அதிகளவு வருமானத்தினைப் பெறும் விவசாயிகள் தமது கேள்வியைக் கைத்தொழில் பொருட்களை நாடி அதிகரிப்பார்களானாலும் அக் கேள்வியைப் பூர்த்தி செய்யக்கூடியளவுக்குப் பொறிகளில் மேலதிக இயலளவு இருக்குமெனக் கூறமுடியாது. ஆயினும் இந்நாடுகளில் தனியார் துறையினரிலும் பார்க்கப்

பொதுத்துறை முயற்சிகளில் மேலதிக இயலளவு ஓரளவுக்கு இருக்கின்றதாயினும் அவை விலைப்பொறிக்கமைய இயங்குபவை எனக் கூறமுடியாது. எனவே பண வருவாயின் மூன்றாவது அதிகரிப்பானது வெளியீட்டையோ, வேலைவாய்ப்பையோ, அதிகரிக்கமாட்டாது. பற்றாக்குறை நிதியீட்டமானது இந்நாடுகளில் வெளியீடுகளையும் வேலைவாய்ப்பையும் உயர்த்துவதற்குப் பதிலாகப் பணவருமானத்தை அதிகரித்துப் பணவீக்கத்தை ஏற்படுத்துகின்றன. மூலதன உபகரணங்களில் மிகையான இயலளவுகள் சில சந்தர்ப்பங்களில் காணப்படுமாயினும் புதிய வருமான ஓட்டம் ஏனைய வளங்களின் விலைமட்டத்தை – மின்சாரம் இறக்குமதி மூலப்பொருள், போக்குவரத்து, திருத்தச்செலவுகள், கடன் வசதிகள் – உயர்த்துவதனால் சிக்கல்கள் மேலும் அதிகரிக்கின்றன. கீன்ஸ் பணக்கணியக் கோட்பாட்டைப் புனரமைக்கும்பொழுது விலை உயர்வினூடாக இத்தகைய பிரச்சனை தோன்றும் எனக் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் மூலவளங்களைக் குறுகிய காலத்தில் மிகச் சிறிய விலை உயர்வினூடாக அடைய முடிகின்றது.

குறைவிருத்தி நாடுகளில் யுத்தத்தின் போதும், அதன் பின்னரும் மேற்கொள்ளப்பட்ட பற்றாக்குறை நிதிகள் கீழுழைப்பையோ, வேலையின்மையையோ குறைப்பதற்குப் பதிலாகப் பணமதிப்பில் உறுதியற்ற தன்மையையும், பணவீக்கத்தையும் உருவாக்கியது. எனவே கீழுழைப்பையும், வேலையின்மையையும் குறைப்பதற்கு உழைப்புடன் ஏனைய உற்பத்தி நிரப்பிக் காரணிகளையும் இணைக்க வேண்டுமேயன்றி பணத்தை மட்டும் இணைப்பது நீண்டகாலப் பிரச்சனைக்குத் தீர்வு தரத்தக்கதாக அமையாது. குறிக்கப்பட்ட கீழ்மட்டத்திலிருக்கும் நாடுகள், வேலையின்மையிலிருந்தும். நிறைமட்டத்தை நோக்கிச் செல்லுதலே அதன் வளர்ச்சிக்குத் துணையாக அமையும். மந்தநிலைக்கு எதிராகக் குறுகிய கால நடவடிக்கைகளைக் கெயின்சின் வருமானத் துணிதல் கொள்கையின் சேமிப்பு-முதலீடு அணுகுதல் முறையினூடாகக் குறைவிருத்தி நாடுகள் மேற்கொள்ளுவது பெறுமதியற்றதாக அமையும். ஆயினும் இக் கொள்கை வருமானம் துணிதல் தொடர்பான செய்முறைகளை ஆராய்வது எந்த நாட்டுக்கும் பொருத்தமுடையதாகும். குறைவிருத்தி நாடுகளின் தேசிய வருமானத்தில் அவற்றின் குறித்த சில முதல் விளைவுப் பொருள்களின் ஏற்றுமதி வருவாயானது குறிப்பிடத்தக்க இடத்தை வகிப்பதனால் அவற்றின் பொருளாதாரத் தளம் பலுக்குக் கைத்தொழில் நாடுகளிலிருந்து வழங்கப்படும் குறைவான பொருளாதார நன்மைகளே காரணமாக அமைகின்றன. இந்நிலையில் வெளிநாட்டுக் கேள்வியில் மாற்றம் ஏற்படும் இடத்து பணவீக்க, சுருக்க நிலைமைகளினால் பொருளாதாரத் தளம்பல்கள் ஏற்படுகின்றன. ஏற்றுமதியில் உடனடி விரிவு ஏற்படுமாயின் வெளிநாட்டு வர்த்தகப் பெருக்கெண்ணின் தொழிற்பாட்டினால் தேசிய வருமானமும், விலைகளும் உயரும். குறைவிருத்தி நாடுகளின் முதலீட்டு அமைப்பானது தேசிய வருமானத்தில் மிகவும் குறைந்த வீதமாக அமைவதனால் தனியார் முதலீட்டினால் பொருளாதார நடவடிக்கைகளில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது. இக் காரணங்களின் அடிப்படையில் பொருளாதார நடவடிக்கைகளின் மட்டத்தைத் தீர்மானிப்பதால் முதலீட்டிலும் பார்க்க வெளிநாட்டு வர்த்தகமே முக்கிய பங்காக அமைகிறது. சில சந்தர்ப்பத்தில் மந்தநிலைகளைப் போக்குவதற்கான பற்றாக்குறை நிதிக்கொள்கையினால் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்குமிடத்து வெளிநாட்டுக் கேள்வி வீழ்ச்சியடைவதனால் உள் நாட்டுக் கேள்வி விரிவடையுமாயின் சிக்கலிலிருந்து விடுபடமுடியாத துன்பநிலை மேலும் தொடரும். இந்நாடுகளில் இறக்குமதிக்கான எல்லை நாட்டம் உயர்வாக இருப்பதனால் வருமானத்தில் ஏற்படும் உயர்வு இறக்குமதியை அதிகரிக்குமிடத்து–ஏற்றுமதி வீழ்ச்சியடைந்திருக்கும் நிலையில்–ஏற்

கனவே வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கங்கள் இருந்தாலன்றி சென்மதி நிலுவை பாதகமாக அமையும். இச் சந்தர்ப்பத்தில் இறக்குமதிக் கட்டுப்பாடு அறிமுகப்படுத்துமாயின் அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி உள்நாட்டுப் பொருட்களின் மீது திருப்புமாகையால் வெளியீடு அதிகரிக்க வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். ஆயினும் விவசாயப்பொருளாதாரங்களின் நிறுவன ரீதியான நெகிழ்ச்சியற்ற தன்மையாலும், மூலவளங்களின் அசைவு மிகக் குறைவாகவும் இருப்பதனாலும் இச் சந்தர்ப்பத்தில் வெளியீடு, வேலைமட்டங்களின் உயர்விலும் பார்க்க விலை உயர்வு அதிகமாக இருக்கும். எனவே சர்வதேச சந்தை நிலைமைகளே இந்நாடுகளின் தளம்பலுக்குக் காரணமாக அமைவதனால் பற்றாக்குறை நிதியீட்டத்தைக் கைக்கொள்ளும் பொழுது வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கங்களைப் பெறுவதற்கான வழிகளையும் அவதானித்தல்வேண்டும்,

செழிப்புக் காலத்தில் வழமையான மிகையான வரவு செலவுத் திட்டமே தயாரிக்கப்படுவதனால் மந்த காலத்துக்கு எதிரான நடவடிக்கைகளின் விளைவுகளிலும் பார்க்க செழிப்புக்கான விளைவுகள் மிகத் தாக்கமுடையனவாகும். இலங்கையில் யுத்தத்தின் போதும், யுத்தத்தின் பின்னரும் ஏற்பட்ட பணவீக்க நிலைமைகளை நேரடியான வளர்வீத வரிகளின் மூலம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது. பணவீக்க நிலைமைகளில் ஏற்றுமதி உடனடியாக அதிகரிக்கக் கூடுமாகையால் பொதுவான உயர்விலும் பார்க்க ஏற்றுமதித் தீர்வைகளே கூடுதலான தாக்கமுடையன. குறைவிருத்தி நாடுகளின் பணவீக்க நிலைமைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஏற்றுமதித் தீர்வைகள் மிகவும் தாக்கமுடையனஎன்பதைக் கடந்த அனுபவங்கள் – கொரியா யுத்தம்–வெளிப்படுத்துகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளை வரலாற்று ரீதியாக ஆராயும் பொழுது அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனத் திரட்சி, பொருளாதார முயற்சி, விரிவான அறிவும், அதனைப் பிரயோகித்தலும் அவசியம் என்று வற்புறுத்தலாம். நடைமுறையில் பல குறைவிருத்தி நாடுகளில் மூலதனத் திரட்சியானது மிகவும் வரையறைக் காரணியாக உள்ளது. தலைவீத வருமானம் குறைவாகவும், சேமிப்புகள் குறைவாகவும் இருப்பதனால் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறைகின்றன. எனவே நிறுவன ரீதியான அரசாங்க அமைப்புகள் முதலீட்டை வழங்கக் கூடியளவுக்கு தனி உரிமை முறையில் அமையாது போட்டி முறையில் பரவலாக உருவாக்கப்படுதல் வேண்டும். சேமிப்புகள் இல்லாத இடத்து இத்தகைய நிறுவனங்களின் தொழிற்பாட்டுக்குத் தேவைப்படும் மூலதனம் எவ்வாறு வழங்கப்படும் என்பதைப் பொறுத்தே நாட்டின் பணவீக்க நிலைமைகள் அமையும். பொருளாதார அபிவிருத்திச் செய்முறைக்குத் தேவைப்படும் முதலீடு இந்நாடுகளின் தேசிய வருமானத்தில் ஏறக்குறைய 12 சத வீதமாக அமைய வேண்டுமாயினும், மூலதனச் செலவுகள் மிகக் குறைவான வீதத்தில் அதாவது 6 சத வீதத்துக்குள்ளாகவே அமைந்துள்ளன. தலைவீத வருமானம் குறைந்திருக்கும் நிலையில் உயர்வான சேமிப்பிற்கும், முதலீட்டிற்கும் வாய்ப்பில்லாது இருக்கும். குறைவிருத்தி நாடுகளின் வருமானமும், சந்தையின் பருமனும் குறைவாக இருப்பதனால் தூண்டப்பட்ட முதலீடுகளில் பாய்ச்சல் குறைவாக உள்ளது. நச்சு வலையத்தைக் கேள்வியினூடாக உடைப்பதாயின் தனியார் முதலீடுகளின் எல்லை வினைத்திறன் அதிகரிக்கும். இச் சந்தர்ப்பத்தில் ஏதேனும் வெளிநாட்டு முதலீடுகள் சந்தைப் பருமனைக் கூட்டக் கூடியதாகவோ தொழில் நுட்பம், மூலப்பொருள், போக்குவரத்து, பொறி வசதிகள், கடன் வசதிகள் என்றவகையில் அல்லது சமூக மேலதிகச் செலவுகளின் வடிவத்தில் அரசாங்க முதலீடுகள், கல்லூரிகள், வைத்தியசாலைகள், நூல் நிலையம், பொதுச் சுகாதார

வசதிகள் என்ற வகையில் அமையுமாவின் விரிவான சந்தை அமைப்புக்கு வழி வகுக்கும்.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இறைக்கொள்கை இன்று பயன்படுத்தப்படும் நவீன கருத்தில் பயன்படுத்தப்பட்டிருக்க முடியாது. ஏனெனில் அரசாங்க நிதித் தொழிற்பாடுகளும், பொருளாதாரத் தொடர்புகளும் மிகவும் வரையறுக்கப் பட்டமையாகவே காணப்பட்டன. பல்வேறு நிதி அலகுகளுக்கிடையில் பொது நிதியியலானது தனித்தனி நிதி அலகாகக் காணப்பட்டது. தனியார் நிதி போன்று பொது நிதியும் முக்கியமான சில அடிப்படைகளின் கீழ் — அரசாங்கச் செலவினூடாக ஒன்று திரட்டிய தொகுதி — உச்சத் திருப்தியை அளிக்கக் கூடிய வகையில் கைக்கொள்ளப்பட வேண்டியதாயிற்று, எனவே அதற்குத் தகுந்த வகையில் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங்கள் கீன்சுக்குப் பின்னர் தயாரிக்கப்பட்ட போதும் அதற்கு முன்னர் பெரும்பாலும் சமமான வரவு செலவுத் திட்டங்களே தயாரிக்கப்பட்டன. ஆனால் அரசாங்க வரவு செலவுகளினூடாகத் தொழிற்பாட்டு நிதியின் முக்கியத்துவமும் இன்று அதிகரித்துள்ளமையால் உறுதியான தன்மையையும், வளர்ச்சியையும் பேணக்கூடிய ஆரம்ப ஆயுதமாகத் தொழிற்பாட்டு நிதியைப் பயன் படுத்தக் கூடியதாக உள்ளது.

உறுதியான வளர்ச்சிக்குரிய தேவைப்பாடுகளை ஹறொட், டொமர் (Harrod and Domar) இருவரும் ஆராய்ந்து காலத்துக்குக் காலம் ஏற்படக்கூடிய இயக்க ரீதியான சம நிலைக்கு வருமான வளர்ச்சி எந்தளவுக்கு அமையவேண்டுமெனக் கூறினர். இவர்கள் முதலீடானது இரட்டைத் தன்மைகளைக் கொண்டிருப்பதாகவும் அதாவது ஒருபக்கத்தில் வருமானத்தை அதிகரிப்பதாகவும், மறுபக்கத்தில் மூலதன இருப்புகளில் அதிகரிப்பை ஏற்படுத்துவதனூடாக உற்பத்தித்திறன் இயலளவுவிருத்தியடைவதாகவும் குறிப்பிட்டனர். கீன்சியனின்கொள்கையானதுகுறிப்பிடத்தக்கமட்டத்தில் மூலதனஇருப்பு இருக்கும்பொழுது வருமானத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பு முதலீட்டைத் தாக்கும் என்பதாகும். இது குறுகியகாலப் பிரச்சனைபற்றியே முக்கியமாக ஆராய்வதனால் நீண்டகாலத்தைக் கணக்கில் எடுக்கும்பொழுது தேறிய முதலீட்டின் இயலளவில் வளர்ச்சியை ஏற்படுத்தல் வேண்டும். வருமானமும் வெளியீடும் அதிகரிப்பது மட்டுமன்றி மூலதன இருப்பின் உற்பத்தித்திறன் விகிதாசாரமும் அதிகரிப்பதனால் பொருளாதாரமானது உறுதியான வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது. நீண்டகாலத்தில் முதலீட்டினதும், வருமானத்தினதும் வளர்ச்சி வீதத்தின் தொழிற்பாடானது வேலைவாய்ப்பை அளிக்கத்தக்கதாக அமைதல்வேண்டும். சமநிலையையும், வேலைவாய்ப்பையும் ஏற்படுத்துவதற்குத் தேவைப்படும் வருமான வளர்ச்சியை வளர்ச்சியின் முழு இயலளவு வீதம் என அழைக்கப்படும்.

ஹறோடியன் மாதிரியத்தைச் (Harodian Models)சமன்பாட்டு வடிவில் அமைப்பதாயின் $Gw = \frac{S}{Cr}$ என அமையும், Gw தேவைப்பட்ட வளர்ச்சி வீதத்தையும், C வருமானத்தின் மீதான சேமிப்பு விகிதத்தையும் (S/y), Cr உற்பத்தியில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்குத் தேவைப்பட்ட மூலதனப் பெறுமதியையும் குறிக்கும். எனவே இச் சமன்பாடானது முழு இயலளவையும் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதனால் வருமானமானது $\frac{S}{Cr}$ என்ற ஆண்டு வீதத்தில் அதிகரிக்கும் என்பதனைக் காட்டும். இந் நிலையில் உண்மையான வளர்ச்சி வீதத்தை G என்பது குறிக்குமாயின் Gயும் Gwயும் சமமாக இல்லாதிருக்குமாயின் (G = Gw சமநிலையான வளர்ச்சியைக் குறிக்கும்) விளைவுகள் வித்தி

யாசப்படும். G>Gw என அமையுமாயின் உண்மையான வளர்ச்சியின் இயலளவிலும் பார்க்க வருமான வளர்ச்சியானது வேக முடையதாக இருப்பதனால் உண்மையான மூலதன இருப்புக் குறைவாக அமைய இயலளவின் அமுக்கம் அதிகரித்துப் பண வீக்கம் உருவாகும். இந் நிலையில் முதலீடு கள் சேமிப்பிலும் பார்க்க அதிகமாக இருக் கும். G<Gw என அமையுமாயின் மேலதிக இயலளவு அதிகரித்து முதலீடு குறைந்து வேலை வாய்ப்பும் வருமானமும் வீழ்ச்சி யடையும். இதனை மந்தகால நிலை எனக் கூறலாம். ஆகவே நீண்டகால உறுதி நிலை யைக் கொண்டு வருவதற்கு G=Gw என அமையத்தக்கதாகப் பொதுக்கொள்கை வகுக்கப்படல் வேண்டும். இச் சந்தர்ப்பத் தில் இயக்கரீதியான சமநிலையின் முழு நிபந்தனைகளையும் காட்டுவதற்கு முழு வேலையுடைமையின் வளர்ச்சி வீதத்தை எடுத்து அதனை Gn எனக் குறிப்பிடுவோம். அதிகரித்த ஊழியப்படையை உற்பத்தித் திறன் அதிகரிக்கத் தக்க வகையில் பயன் படுத்துவதனால் வெளியீடு அதிகரிக்கும் n ஊழியப்படையில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதத்தையும், h ஊழிய உற்பத்தித் திறன் அதிகரிப்பையும் காட்டுமாயின், Gn=n+h ஆகும். தற்பொழுது Gn=Gw=G என அமையுமாயின் சமநிலை முழுவேலையுடமை வளர்ச்சியைக் காட்டும். Gwஆனது Gnஇல் இருந்து வேறுபட்டுக் காணப்படுமாயின் முழு வேலையுடைமையில் அசைகின்ற சம நிலையானது மிகவும் பாதிப்புக்கு உள்ளா கும்.Gn < Gw என அமையுமாயின் உற் பத்தியாளரைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற வளர்ச்சி முழு வேலை யுட மைக்காண வளர்ச்சியிலும் பார்க்கக் கூடு தலாகஇருப்பதனால் பொருளாதாரத்தில் வீக்கநிலைஏற்படுவதனைப்போன்று தோன்ற லாம். ஆனால் ஒருநாட்டினது உண்மையான வளர்ச்சியானது முழு வேலையுடமைக்கான வளர்ச்சிக்கு மேலாகச் செல்ல முடியாது. எனவே தேவைப்படும் வளர்ச்சி முழு வேலையுடமைக்கான வளர்ச்சியைவிட அதிகமாக இருக்கும்பொழுது உண்மை யான வளர்ச்சி தேவைப்படுகின்ற வளர்ச்சியைவிடக் குறைவாக இருக்கும். எனவே பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்படும். முழுவேலையுடமைக்கான வளர்ச் சியிலும் பார்க்கத் தேவைப்படும் வளர்ச்சி குறைவாயின் பொருளாதாரமானதுதேக்க நிலையை அடையக்கூடும். ஆனால் தேவைப் படும் வளர்ச்சியிலும் பார்க்க முழு வேலை யுடமையின் வளர்ச்சி அதிகமாக இருக்கு மாயின் நாட்டின் உண்மையான வளர்ச்சி தேவைப்படுகின்ற வளர்ச்சியிலும் பார்க்க உயர்வாக இருக்கும்.

விருத்தியடைந்த நாடுகளில் G wவும் G nம் ஒன்றிலும் பார்க்க மற்றது அதிக மாக இருப்பினும் G ஐ அவற்றுடன் இணைத்து ஏற்கனவே உயர்ந்த மட்டத் தில் இருந்து தலா வருமானத்தையும், வெளியீட்டையும் பாதுகாத்துப் பொரு ளாதார உறுதியை ஏற்படுத்துவதாகும். விருத்தியுற்ற நாடுகளில் G w என்பது Gn, G. என்றும் இரண்டிலும் பார்க்க அதி கமாக இருப்பின் மந்த நிலை ஏற்படும். இந் நாடுகளின் எல்லைச் சேமிப்பு நாட்ட மானது அதிகரித்து வருவதனால் அதனைக் குறைத்து நுகர்வைக் கூட்டத்தக்க வகை யில் — சேமிப்பில் வரி விரிப்பதனூடாக — பொதுக் கொள்கை அமையுமாயின் பொரு ளாதார உறுதியைப் பேண முடியும். குறை விருத்தி நாடுகளில் அனேக மக்கள் கீழ் மட்ட வருமானத்தினைப் பெறுவதினால் எல்லை நுகர்வு நாட்டம் உயர்வாக அமைந்து கேள்வி அதிகரிப்பதனால் முழு இயலளவையும் பயன்படுத்தி வெளியீட் டினை அதிகரிக்க முடியும். G w என்பது Gn லும் பார்க்க அதிகமாக இருப்பதனால் முதலீட்டு வீதம் கீழ் மட்டத்தில் காணப் படுவதுடன் கீழ் உழைப்பு நிலையும் சனத் தொகை அதிகரிப்பினால் ஊழியப் படை யில் வேலையில்லாது இருப்போரின் எண் ணிக்கையும் அதிகரிக்கும். ஆனால் Gn>Gw என அமையுமாயின் வேலையின்மையும்

பணவீக்கமும் ஏற்படும். எனவே பொதுக் கொள்கையானது இந்த இரு பிரச்சினைகளையும் தீர்க்கத்தக்க வகையில் வகுக்கப்படுதல் வேண்டும். இந்நாடுகளில் பணவீக்கமின்றி மூலதனச் சொத்துக்கள் அதிகரிக்க வேண்டியிருப்பதுடன் வளர்ச்சிச் செய்முறைக்கு அதன் உறுதிப்பாடும் இன்றியமையாதது. எனவே உறுதியைப் பேணத்தக்க வகையில் வேலையின்மையைக் குறைக்க வேண்டுமாயின் வருமான உயர்வினூடாக எல்லைச் சேமிப்பு நாட்டம் சராசரி நாட்டத்திலும் பார்க்க உயர்வாக அமையத்தக்கவகையில் சீரமைக்க வேண்டும். எனவே தனியாள் வருமானத்தை உயர்த்தத்தக்க வகையில் அரசாங்க முதலீடுகளினூடாக தொழிற்பாட்டு நிதி வழங்கப்படுதல் வேண்டும்.

இறைக் கொள்கையானது வரவு செலவுத் திட்டக் கொள்கையினூடாக முதலீடு, வேலைவாய்ப்பு, நுகர்வு, ஆகியவற்றை அதிகரிப்பதுடன் துணைத்திட்டமிடுதல் பொருளாதாரத்தில் [Quasi - Planned Economy] வாங்கு சக்தியை ஒழுங்குபடுத்தி, நாட்டின்ஒழுங்கற்றமுறையில் அமைந்திருக்கும். வருமானத்திலும், செல்வத்திலும் மறு பங்கீடு செய்து பொருளாதாரரீதியிலும், சமூகரீதியிலும், மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதாக அமைதல் வேண்டும், இறைக் கொள்கையானது அரசாங்க செலவு – வருமானம் ஆகிய இருவழிகளிலும் பொருளாதாரத்தில் செல்வாக்கு உடையதாகக் காணப்படுகிறது. திறைசேரிக்கு செல்லவேண்டிய வருமான மூலங்களைப் பெறுவதில் இக் கொள்கை வரி வசூலித்தல், மக்களிடம் இருந்தும் வங்கிகளிடம் இருந்தும் கடன் பெறுதல் மூலம் செயலாற்றுவதுடன், உறுதிப்பாட்டுடன் அமைந்த பொருளாதார வளர்ச்சியிலும் இணைவான கவனத்தைக் கொண்டுள்ளது.

இறுதியாகக் கூறுவதாயின் மக்களுக்கு இடையில் அல்லது தனியார் துறைக்கும், பொதுத்துறைக்கும் இடையில் வரவு செலவுத் திட்டக் கொள்கையினூடாக வளங்களை மாற்றியமைப்பதன் மூலம் உறுதிப்பாட்டுடன் அமைந்த பொருளாதார வளர்ச்சியை அடைய முனைகிறது.

இரகசிய ஒதுக்கம்

நிறுவனத்தினால் பாவிக்கக்கூடிய வளங்கள் அந் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் பிரதிபலிக்கப்படாமலிருப்பின் அவ்வாறான வளங்களை இரகசிய ஒதுக்கம் எனலாம். ஐந்தொகை முகப்பில் இவ்வொதுக்கத் தொகையோ வளமோ காணப்படாது. உதாரணமாக நிலையான சொத்துகளில் கூடிய தேய்மானத்தைப் பதிவழித்து வரும்போது சொத்தின் பெறுமதி குறைந்தோ அல்லது முற்றிலும் பதிவழிக்கப்பட்டோ இருக்கும். ஆனால் உண்மையில் அதன் பெறுமதி கூடுதலாகவும் பயன்படுத்தக் கூடியதாகவும் இருந்துவரும். அவ்வாறான மேலதிக பெறுமதியே இரகசிய ஒதுக்கம் எனப்படும். அதாவது உண்மையான இலாபங்கள் குறைத்துக் காட்டப்படும்போது இரகசிய ஒதுக்கங்கள் தோன்றுகின்றன.

Best Wishes from

Importers, General Rice Merchants
&
Commission Agents

New Sri Murugan Stores

49, OLD MOOR STREET, COLOMBO-12

Telegrams : ' MINNOLEY ' *Telephone* : 33770

வித்தியோதயத்துக்கு எமது மனமார்ந்த ஆசிகள்!



- மோட்டார்வாகனம்
- தண்ணீர்ப் பம்பு

ஆகியவற்றின் உதிரிப்பாகங்கள்
விற்பனையாளர்

ஜவ்னா ஒட்டோ ஹவுஸ்

171, ஸ்ரான்லி வீதி :: யாழ்ப்பாணம்

ஒன்றித்த கணக்குகளும் கம்பனிச் சட்டமும்

ச. தம்பிப்பிள்ளை,
Dip. in Accy., A. C. A.
பிரதிப் பணிப்பாளர் (வரவுசெலவுத் திட்டம்)
பொதுத் திறைசேரி
பகுதிநேர விரிவுரையாளர்
வித்தியோதய வளாகம்

கம்பனிச் சட்டம் இலங்கையில் 1938ஆம் ஆண்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தின் 124ஆவது பிரிவின் கீழ் கூறப்படுவதாவது: ஒரு கம்பனி, இன்னொரு கம்பனியில் 50 சத வீதத்துக்கு மேலான பங்குகளில் முதலீடு செய்திருந்தால் அதாவது 50சத வீதத்துக்கு மேலான வாக்குரிமையைப் பெற்று இருப்பின் முதலீடு செய்த கம்பனியை கொளிக்கம்பனி (Holding Company) என்று கூறப்படும். அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட கம்பனி கொளிக் கம்பனியின் உப கம்பனியாகும் என்று மேற்படி சட்டத்தின் 125ஆவது பிரிவின்கீழ் கூறப்படுகிறது. இச் சட்டத்தின் 123ஆவது பிரிவின்கீழ் உபகம்பனியின் பங்குகளில் ஒரு கம்பனி முதலீடு செய்திருந்தால், அச்சொத்தை முதலீட்டுக் கம்பனியின் (கொளிக் கம்பனி) ஐந்தொகையில் வேறாகக் குறித்துக் காட்ட வேண்டும்.

கொளிக் கம்பனியும் அதன் உப கம்பனியும் (அல்லது கம்பனிகளும்) தங்கள் ஒவ்வொருவரது இலாப நட்டக் கணக்கையும் ஐந்தொகையையும் தயாரிப்பதுடன் ஒன்றித்த இலாபநட்டக் கணக்கையும் ஒன்றித்த ஐந்தொகையையும் கொளிக் கம்பனியின் பங்காளர்களுக்குக் காண்பிப்பதற்காகத் தயாரிக்கலாம். 1938ஆம் ஆண்டுக் கம்பனிச் சட்டத்தின்கீழ் ஒன்றித்த கணக்குகள் தயாரிக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் இல்லை. ஒரு கொளிக் கம்பனியானது உப கம்பனியில் முதலீடு செய்திருந்தால் கொளிக்கம்பனி தனது ஐந்தொகையுடன் உபகம்பனியைப் பற்றிய சில விபரங்களையும் ஒரு கூற்றிலே இணைத்துக் காட்டல் வேண்டும். உபகம்பனியின் நட்டங்களுக்கு உபகம்பனியின் கணக்கிலோ அல்லது கொளிக் கம்பனியின் கணக்கிலோ

அல்லது இரண்டிலும் எவ்வளவுதூரம் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை குறிப்பாக இந்தக் கூற்று எடுத்துக் காட்ட வேண்டும். அத்துடன் கொளிக்கம்பனி இயக்குநர்கள் தமது (கொளிக்கம்பனி) இலாபநட்டங்களை கணிக்கும்போது எவ்வளவு தூரம் உப கம்பனி நட்டங்களை கணக்கில் கொண்டார்கள் என்பதையும் இக் கூற்றுக் காட்ட வேண்டும்.

ஆங்கிலக் கம்பனிகள் சட்டத்தின்கீழ் ஒன்றித்த கணக்குகள் தயாரித்தல் அவசியம் எனக் கூறப்பட்டுள்ளது. ஆங்கிலக் கம்பனிகள் காலத்திற்குக் காலம் கம்பனிச் சட்டத்தை மீளவாய்தல் செய்து வருகின்றன. ஆனால் இலங்கையில் 1938ஆம் ஆண்டிற்குப் பின் கம்பனிச் சட்டம் திருத்தி அமைக்கப்படவில்லை. அன்று உப கம்பனிகள் மிகக் குறைவாக இருந்தன. ஆனால் தற்போது இலங்கையில் உப கம்பனிகள் பல உள. எனவே கொம்பனிச் சட்டத்தின் கீழ் ஒன்றித்த கணக்குகள் தயாரிக்க வேண்டிய நிபந்தனைகள் இல்லா திருந்த போதிலும், கொளிக்கம்பனி — உப கம்பனித் தொடர்புள்ள கம்பனிகள் ஒன்றித்த கணக்குகள் தயாரித்து வருகின்றன.

ஒன்றித்த கணக்குகள் தயாரிக்கும் போது பின்வரும் முக்கிய அம்சங்களைக் கவனத்தில் வைத்துக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்.

நடைமுறைக் கணக்குகள் :

கொளிக் கம்பனியினதும் உப கம்பனியினதும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஒரே ஐந்தொகையில் காட்டும் பொழுது கம்பனிகளுக் கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தமக்குள் இரத்தாகும்.

வழியில் சொத்துக்கள் :

கம்பனிகளுக்கு இடையில் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டு, நிதியாண்டு முடிவில் அவை வழியில் சொத்தாக (காசாக அல்லது சரக்காக) இருப்பின் அக் கொடுக்கல் வாங்கல் பெறவேண்டிய கம்பனியின் அல்லது சேரவேண்டிய கம்பனியின் கணக்கில் பதிவு செய்யப்படும். இதன் பின்னர் உள்ள மீதிகளுக்கு ஏற்ப கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் இரத்தாகும்.

வருமதி சென்மதி உண்டியல்கள் :

உண்டியல்கள் தொகுதிக் கம்பனிகளுக்கு (Grouped Companies) இடையில் வருமதியாகவும் சென்மதியாகவும் இருப்பின் அவைகளும் ஒன்றித்த ஐந்தொகையில் சேர்க்கும்போது தமக்குள் இரத்தாகும்.

மேற்கூறப்பட்டவாறாக தொகுதிக் கம்பனிகளுக்கிடையில் நடைபெற்ற உண்டியல் கொடுக்கல் வாங்கலின் போது தொகுதிக் கம்பனியில் ஒன்று தனது வருமதி உண்டியலைக் கழிவுக்கு மாற்றியிருந்தால் அத் தொகை கம்பனிகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கலாக கருதி ஒன்றித்த ஐந்தொகையில் இருந்து ரத்தாக்கப்படமாட்டாது. ஏனெனில் உண்டியல் கழிவுக்கு மாற்றப்பட்டு விட்டபடியால் ஒன்றித்த ஐந்தொகை தயாரிக்கும்போது உண்டியலை மாற்றிக் கொடுத்த வங்கிக்கே உண்டியலை ஒப்புக்கொண்ட கம்பனி பொறுப்பாளராவர். எனவே உண்டியலை பிறப்பித்த கம்பனி இப் பொறுப்பில் இல்லை. எனவே இது கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கலாக கருதப்படமாட்டாது.

உப கம்பனிப் பங்கு இலாபம் :

கொளிக் கம்பனிக்கு உப கம்பனியில் இருந்து கிடைத்த பங்கு இலாபம் முன் இலாபம் அல்லது பின் இலாபமாக இருக்கலாம். முன் இலாபமாக இருந்தால் அதை மூலதன ஒதுக்கமாகக் கருதி கொளிக் கம்பனியின் ஏட்டிலுள்ள "உப கம்பனி முதலீட்டுக் கணக்கில்" பதியவேண்டும். பின் இலாபமாக இருப்பின் வருமானமாகக் கருதி கொளிக் கம்பனி இலாப நட்டக் கணக்கில் பதியப்படும்.

சரக்கிருப்பில் ஏற்பட்ட தேறாத இலாபம்:

தொகுதிக் கம்பனியில் ஒரு கம்பனி மற்றைய கம்பனிக்கு (கொளிக் கம்பனியோ உப கம்பனியோ யாராயினும்) இலாபத்துடன் சரக்குகளை விற்றிருந்து — நிதியாண்டு முடிவில் அச் சரக்குமுழுவதும் விற்கப்பட்டிருந்தால் தேறாத இலாபம் ஏற்படாது. ஆனால் அச் சரக்கில் ஒருபகுதிச் சரக்கு விற்கப்படாதிருப்பின் அத் தொகையில் அடங்கியுள்ள தேறாத இலாபத்தைக் கணித்து அதில் கொளிக் கம்பனியின் பங்கிற்கு தேறாத இலாப ஏற்பாடு செய்ய வேண்டும். ஒன்றித்த கணக்குகள் தயாரிக்கும்போது இத்தொகையைச் சரக்கிருப்பில் இருந்தும் கொளிக் கம்பனியின் இலாப நட்டக் கணக்கில் இருந்தும் கழித்துக் காட்டப்படவேண்டும்.

உப கம்பனியால் வழங்கப்பட்ட உபகாரப் பங்குகள்:

உப கம்பனி தனது பங்கு இலாபத்தை உபகாரப் பங்குகளாக வழங்கியிருந்தால் கொளிக் கம்பனியில் இதற்கான பதிவுகள் இடம்பெற மாட்டா. ஏனெனில் அப்பங்கிலாபம் பணமாகக் கிடைக்கவில்லை. பங்குகளாகவே கிடைத்துள்ளன. இவ்வாறு பங்குகளாக வழங்கும்பொழுது—ஒன்றித்த ஐந்தொகை தயாரிக்கையில் முன் இலாபமாக இருந்தால் அது மூலதன ஒதுக்கமாக கருதப்பட்டுக் கட்டுப்பாட்டுக் கிரயக் கணக்கில் காட்டப்படும் பின் இலாபமாக இருந்தால், கொளிக் கம்பனியின் பங்கை வருமானமாகக் கருதாது இதையும் மூலதன ஒதுக்கமாகத் தனியாகக் காட்ட வேண்டும். ஏனெனில் இப் பங்கிலாபம் கொளிக் கம்பனிக்குப் பணமாகக் கிடைக்கவில்லை.

உப கம்பனிச் சொத்துக்கள் — மீள மதிப்பிடல்:

கொளிக் கம்பனி உப கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்யும்பொழுது உப கம்பனியின் சொத்துக்களை மீள மதிப்பீடு செய்தபோதிலும் அவ்வாறு புத்தகங்களில் சாதாரணமாகப் பதிவதில்லை. ஆனால் ஒன்றித்த கணக்குகள் தயாரிக்கும்பொழுது அச் சொத்துக்களை மீள மதிப்பிட்ட பெறுமதியிலேயே ஐந்தொகையில் காட்டப்பட வேண்டும். இதனால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை முன் இலாபம் அல்லது முன் நட்டமாகக் கருதிக் கட்டுப்பாட்டுக் கிரயக் கணக்கிலும் (அல்லது நன்மதிப்புக் கணக்கு) சிறுபான்மையர் கணக்கிலும் பதியவேண்டும். அதே நேரத்தில் மீள மதிப்பினால் ஏற்பட்ட தொகையில் தேய்மானத்திற்கு சீராக்கம் செய்தல்வேண்டும்.

இவ்வாறு மேற்கூறிய முக்கிய அம்சங்கள் தொகுதிக் கம்பனிகளுக்கிடையிலான ஒன்றித்த கணக்குகளைத் தயாரிக்கும் பொழுது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

பங்கு மீட்பு வட்டம்

வட்டத்துடன் பங்குகளை மீட்கும்போது ஏற்படும் பங்கு மீட்பு வட்டத்தை, ஆரம்பத்தில் பங்கு வழங்கியபோது கிடைத்த வட்டத்தில் இருந்து ஈடு செய்யலாம் என்பது இங்கிலாந்து முறையாகும். இலங்கை முறைப்படி மீட்பதற்கு புதிய பங்குகள் வழங்கியிருப்பின் அதற்குரிய விகிதாசார மீட்பு வட்டத்தையே முன்பு வழங்கியபோது கிடைத்த வட்டத்தில் இருந்து ஈடு செய்யலாம். மிகுதியை வருமான ஒதுக்கங்களில் இருந்தே ஈடு செய்யவேண்டும்.

With the best Compliments

from

P. K. Paramanathan & Co.

(Kandiah Buildings)

109, Old Moor Street

COLOMBO-12

T'Grams: 'Sridharan' *T'Phone* : 33863

Branches :

Mano Mills & Industries

Station Road,

SEEDUWA

Grams : MANOINDUS

P. K. PARAMANATHAN

PAWN BROKERS & JEWELLERS

236, K. K, S. ROAD,

JAFFNA.

T'phone : 551

வாழ்த்துக்கள் !

சூரிய ஒளி

மருந்துக்கடை

176, மிக்கவார் தெரு வீதி :: யாழ்ப்பாணம்

With the best Compliments

from

SUNLIGHT DRYCLEANERS

BUS STAND SIDE

JAFFNA

T'Grams : 'DRYCLEAN' *T'Phone* : 474

இலங்கையின் வேலையின்மையின் நோக்கும் வேலை நிறைவுக் கொள்கையின் பங்கும்

சி. சிறீஸ்கந்தராசா
வர்த்தகவியல் (சிறப்பு)
இறுதி வருடம்

இட்டமிட்ட சமதர்ம நாடுகளைத் தவிர்ந்த உலகின் ஏனைய எல்லா நாடுகளிலும் இயல்பாகவே காணப்படுகின்ற வேலையின்மையானது, குறைவிருத்தி நாடுகளில் ஒன்றாகிய இலங்கையையும் பாதித்து பொருளாதார அபிவிருத்தியில் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளது. வேலையின்மை என்பது "எந்தவிதமான வேலையில்லாதவர்களையும், அதனால் வருமானம் பெறாதவர்களையும் குறித்து நிற்கின்றது. அத்துடன் பொருத்தமான வேலையின்மை, கீழ் உழைப்பு வேலையின்மை, பருவ வேலையின்மை ஆகியவைகளையும் வேலையின்மையின் தன்மையை ஆராயும்போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். இலங்கையில் அந்நியராட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட மறைமுக வேலையின்மை, சுதந்திரம் அடைந்ததும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. ஆனால் பொருளாதார நிலைமை சீராகக் காணப்பட்டமையும், சனத்தொகையின் மெதுவான வளர்ச்சியும், அதிகரிக்கும் மக்களை வரண்ட வலயம் தாங்கும் என்ற நம்பிக்கையும், வேலையின்மையின் பாரத்தை உணராமையும் தொழில்நுட்ப மூலதனச் செறிவால் பொருளாதாரத்தை நவீனமயமாக்கலாம் என்ற நம்பிக்கையும், போன்ற காரணங்களால் வேலையின்மையின் தாக்கம் உணரப்படாதிருந்தது. 58/59 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பத்தாண்டுத் திட்டத்தில் தொழில் பிரச்சினைகளுக்கு முக்கிய இடமளிக்கப்பட்டதும், 1963ஆம் ஆண்டு குடிசன மதிப்புப்புள்ளி விபரம் வேலையற்றோர் தொகையை 2,36,000 பேர்கள் எனக் காட்டியதுமே, இலங்கையின் வேலையின்

மையைத் தெளிவாகப் பிரதிபலித்தது. இவ் வேலையில்லாப் பிரச்சினையானது கல்வி கற்ற இளம் தலைமுறையினரை அதிக தாக்கத்திற் குள்ளாக்கியமையினால்தான் மொழி, மத, சாதி இனப் பிரச்சினைகள் ஏற்பட்டது மட்டுமன்றி, புதிய அரசியல் பிரச்சினையாகவும் வளர்ந்துள்ளது. இந்த இளம் தலைமுறையினரின் இப் பிரச்சினையானது, விரக்தி மனப்பான்மைக்குத் தூபமிட்டு, கொள்ளை, களவு, கொலை போன்றவற்றிற்கு வழி வகுத்து ஒரு பயங்கரவாத புரட்சிக்கே வழிவகுத்தது எனக் கூறலாம். எனவே வேலையின்மை என்றால் என்ன? இலங்கையின் வேலையின்மையின் வளர்ச்சியும், அதன் பரம்பலும் எவ்விதம் அமைந்துள்ளது? இதற்குரிய பிரதான காரணங்கள் யாவை? இலங்கை அரசு மேற்கொண்ட திட்டங்கள் வெற்றி பெற்றனவா? வேலை நிறைவுக் கொள்கையை எவ்விதம் செயற்படுத்தலாம்? என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

வேலையின்மை (Unemployment):

ஒரு உற்பத்திக் காரணி வேலைபார்க்கும் ஆர்வமும் அவசியமும் இருக்கின்ற போதும் கூட வேலையற்றிருக்கும் நிலையே வேலையின்மை எனப்படும். அதாவது உற்பத்திக் காரணி எதுவித வருமானமும் பெறாது இருக்கும் நிலையாகும். இதனைப் பழம் பொருளியலாளர்கள் (குறிப்பாக அடம் ஸ்மித், J. S. மில், டேவிட் ரிக்கார்டோ) பொருளாதாரத்தில், உராய்வு வேலையின்மை, விரும்பிய வேலையின்மை என்பன இயல்பானதொன்று எனவும், அது தடையற்ற சுதந்திர பொருளாதார நடவடிக்கையினால் பூரண வேலை நிறைவைப் பெறும் எனவும் விளக்கியிருந்தார்கள். ஆனால் நவீன பொருளியல் தந்தை என அழைக்கப்படும் கெயின்ஸ், அபிவிருத்தியடைகின்ற நாடுகளில் திரவப்பொறி நிலையில் வட்டிவீதம் மாறாது இருக்கும்போது பணநிரம்பல் அதிகரித்தாலும், வட்டிவீதம் வீழ்ச்சியடையாமையால் முதலீடு கூடாமல், குறையாமல் இருப்பதால், ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் கட்டாய வேலையின்மை நிலவும் எனவும், பயன்படு கேள்வியின் குறைவும் இதனை உறுதிப்படுத்தும் எனவும் கூறினார். ஆனால் ஏலின் என்னும் பொருளியலறிஞர் "கேள்வியில் ஏற்படும் குறைவுதான் கட்டாய வேலையின்மைக்குக் காரணம் எனக் கூறமுடியாது என்றும், பொருளாதார வளர்ச்சியினைத் தொடர்ந்து அடைகின்ற வேலைப் பெருக்கம் ஏற்படும் வரையுமே வேலையின்மை நிலவும் என்றும் இது தற்காலிகமாகக் காணப்படும் வேலையின்மை என்றும் கூறியுள்ளார்.

ஜோன் ரொபின்சன் "பிறழ்ச்சிகள் நிலவும் வரைக்கும் உராய்வு வேலையின்மை நிலவுவதால் வேலையின்மையை ஒருபோதும் நீக்கமுடியாது" என்று கூறினார். எனவே ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலையை நாடும்போது ஏற்படும் உராய்வு வேலையின்மை வேலையின்மையில் முக்கிய இடம் பெறுகின்றது, லேனர் "வேலையின் பொருளாதாரம்" என்ற நூலில் "உத்தியோகம் போதாமையால் வேலையின்மை ஏற்படுகின்றது என்றும், இது பணவாட்ட வேலையின்மை என்றும் குறிப்பிடுகின்றார். இதுவும் வேலையின்மையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்துவதாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு "வேலை நிறைவுபற்றிய தேசிய அனைத்துலக நடவடிக்கைகள்" என்ற நூலில் வளர்ச்சி குறைந்த பொருளாதாரமே வேலையின்மைக்குரிய காரணம் என்றும், வேலையின்மையை, வாணிகச் சூழல்சார் வேலையின்மை, பருவகால வேலையின்மை, நுட்பத் தொழில் சார் வேலையின்மை, உருமறைந்த வேலையின்மை என வகுத்து விளக்கியுள்ளது. அத்துடன் குறைவிருத்தி நாடுகளில் உரு மறைந்த வேலையின்மையே மிகவும் முக்கிய இடம் வகிக்கின்றது என்றும் வேலையின்மை என்பதைவிட வேலைக் குறைவு என உபயோகிப்பது சிறந்ததாகும் எனவும் கூறியுள்ளது.

இலங்கையின் வேலையின்மை :

இலங்கையின் வேலையின்மையானது, பூரண வேலையின்மை, அரைகுறை வேலையின்மை, பொருத்தமான வேலையின்மை, பருவ வேலையின்மை, உராய்வு வேலையின்மை, விரும்பிய வேலையின்மை, கீழ் உழைப்பு வேலையின்மை போன்ற தன்மைகளில் காணப்படுகின்றது.

அரைகுறை வேலையின்மை என்பது திறமையும், ஆற்றலும் உள்ள தொழில் அணி, தனது ஆற்றலுக்கு ஏற்ற வேலை செய்யாது, குறைவான வேலையில் ஈடுபடுவதைக் குறித்து நிற்கின்றது. பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பினை முடித்து வெளியேறியவர்கள், தமது படிப்புக்கு ஏற்ற வேலை கிடையாது, சாதாரண எழுதுவினைஞர் வேலை செய்வதைக் கூறலாம். கீழ் உழைப்பு என்பது, ஒரு குறித்த வேலை செய்ய, குறித்த தொகை வேலையணியை விட கூடிய தொழில் அணியினர் ஈடுபடுத்தப்படும்போது ஏற்படும் நிலையினைக் குறிக்கின்றது. அதாவது ஓர் ஏக்கர் நெற் காணி 10 பேர் வேலை செய்யப் போதுமானதாகும். ஆனால் அதே காணியில் 25 பேர் ஈடுபட்டிருக்கும் நிலையாகும். இலங்கையில் இன்று பெருமளவு காணப்படும் வேலையின்மை கீழ் உழைப்பு நிலைமையே ஆகும். 1975ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின்படி 6,38,846 பேர் கீழ் உழைப்பு நிலையில் காணப்பட்டார்கள் என்றும், இது தொழில் அணியில் 16% எனவும் கணிக்கப்பட்டது. இதில் 50% மாணவர்கள் ஆண்கள் என்றும் உணரப்பட்டது. கருணதிலக்க என்பவர் ''குறை உழைப்பு கிராமத்தை விட நகரப்புறத்தில் அதிகமாக உள்ளது'' எனக் கூறினார்.

தொழில் அணி பெற்ற கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்ற வேலை கிடைக்காமல் வேறு வேலை செய்வதைப் பொருத்தமான வேலையின்மை எனப்படும். பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகம், வியாபார நிர்வாகம், வரி மதிப்பீடு, அபிவிருத்திப் பட்டப் படிப்பு போன்ற விசேட கல்விப் பயிற்சி பெற்று வெளியேறியோர்கள், தமது கல்விப்பயிற்சிக்கேற்ற வேலை செய்யாது சாதாரண அன்றி வேறு வேலை செய்வதைக் குறிக்கின்றது. ஆனால் விரும்பிய வேலையின்மை என்பது மத்திய, உயர்கல்வி கற்றோர் தமக்கு விருப்பமான வேலையைப் பெற முடியாமையைக் குறிக்கின்றது. மார்கா நிறுவனம், ஆண் பெண், கல்வியளவு வேறுபாடுகளுக்கேற்ப விரும்பிய வேலையின்மையைக் கணிக்க முடியும் எனக் கூறியுள்ளது. மத்திய பாடசாலை ஆரம்பக் கல்வியைப் பெற்றவர்கள், கைப்பணி, கைத்தொழில், உற்பத்தி, ஆக்க வேலைகளையும், மத்திய கல்வியைப் பெற்றோர் (க. பொ. த. சாதாரணம், க. பொ. த. உயர்தரம்) களில் 18% மானவர்கள் ஆசிரியர், தாதி, உப வைத்தியம், ஆகிய அறிவுத் துறைத் தொழில்களையும், மருத்துவம், பொறியியல், கணக்காய்வு போன்ற நுட்பத் தொழில்களையும் விரும்பினர். இதனைவிட 15% மானோர் எழுதுவினைஞர் வேலையை விரும்பினர். இவர்கள் தாம் விரும்பியவாறு வேலைவாய்ப்பைப் பெற முடியாத நிலையே விரும்பிய வேலையின்மை உருவாகக் காரணமாக இருந்தது.

பருவ வேலையின்மை என்பது ஒரு பருவம் வேலை செய்வதும், அதன் பின் வேலையின்றியும், அடுத்த பருவம் வரை காத்திருக்கும் நிலைமையை குறிப்பிடுகின்றது. இலங்கையின் பெரும்பகுதிகளில் இடம் பெறும் கிராமிய விவசாய நடவடிக்கைகளில் இத்தன்மை காணப்படுவதாக உள்ளது. நெற் பயிர்ச் செய்கை, கரும்பு மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கை நடைபெறும் காலங்களில், சிறப்பாக விதைத்தல், அறுவடைக் காலங்களில் வேலை வாய்ப்பும், ஏனைய காலங்களில் வேலையின்றி இருக்கும் நிலை காணப்படுகின்றது. இத்தகைய நிலையினையே ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு ''உருமறைந்த வேலையின்மை'' எனக் கூறியுள்ளது. அத்துடன் இலங்கையில் உராய்வு வேலையின்மையும் அதிகரித்து வருகின்றது. ஒரு தொழில்

அணி ஒரு வேலையிலிருந்து இன்னுமொரு வேலைக்கோ அல்லது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கோ வேலை தேடிச் செல்லும் போது ஏற்படும் வேலையின்மையே உராய்வு வேலையின்மையாகும். இன்று கிராமம், பெருந்தோட்டம் ஆகியவற்றிலிருந்து பெருந்தொகையானோர் நகரங்களுக்கு இடம் பெயர்ந்து வருவதும் அதன் விகிதம் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வேலையின்மையின் வளர்ச்சி :

இலங்கையின் சனத்தொகை பெருகுவதனால், வேலைதேடும் தொழில் அணியும் அதிகரித்து வருகின்றது. இவ்வாறு அதிகரிக்கும் வேலை தேடுவோருக்கேற்ப எமது பொருளாதாரம் வாய்ப்பளிக்காமையால் தான் வேலையின்மை ஏற்பட்டது. அந்நிய ராட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை ஏற்பட்ட வேலையின்மையின் வளர்ச்சியை மூன்று காலப் பகுதியாகப் பிரித்து நோக்குவோம்.

(i) அந்நியராட்சிக் காலம் :

ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசினால் உருவாக்கப்பட்ட பெருந்தோட்டப் பொருளாதாரமும், கிராமப் புறங்களில் உருவாகிய நவீன நிலப்பிரபுத்துவ முறையும் மறைமுகமாக உருமறைந்த வேலையின்மையை உருவாக்கியது. தேயிலை, தென்னை றப்பர் போன்ற பெருந் தோட்டங்கள், அந்நிய முதலீடு, அந்நிய தொழில் அணி (இந்தியர்) அந்நிய தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டமையும் இலங்கையருக்கு வேலைவாய்ப்பை அளிக்க முன்வர முயலவில்லை. கிராமப் புறங்களில் உருவாக்கப்பட்ட பண்ணை நிலப் பிரபுத்துவம் முதலாளிகளால் மேற்கொள்ளப்பட்ட சிக்கன, கடின ஊழிய முறையும் அதிகரித்த சனத்தொகைக்கு தொழில் வாய்ப்பளிக்க முடியவில்லை. இதனால் மறைமுகமாக வேலையின்மையை உருவாக்கி, வறுமை, பசி, பட்டினி போன்ற நிலைகளை அனுபவிக்கச் செய்தது.

(ii) சுதந்திர காலம் தொடக்கம் 1963 வரை:

இக்காலப் பகுதிகளில் பெருந்தோட்டங்களிலும், கிராமிய விவசாய நிலவுடமைகளிலும் எதுவித மாற்றமும் செய்யப்படாமல், நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தியமையால், வேலைவாய்ப்பளிப்பதற்குப் பதிலாக வேலை செய்தவர்களையே வேலையற்றோராக்கியது. பெருந்தோட்டப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்த போதும் இலங்கைத் தொழில் அணிக்கு வேலையளிக்காது மாறாக இந்தியத் தொழில் அணிக்கே வேலை வாய்ப்பளித்தது. சுதந்திரத்தின் பின்னர் பதவியேற்ற அரசாங்கங்கள் எடுத்த நடவடிக்கைகள் முரண்பாடான அரசியல் கொள்கைகளால் வேலையின்மையை நீக்கமுடியவில்லை. அக்காலங்களில் ஏற்பட்ட செல்மதி நிலுவை சாதகநிலை தொடர்ச்சியாக இருக்கும் எனவும், நவீன விஞ்ஞான தொழில்நுட்பம் பயன்படுத்துவதன்மூலம் வாழ்க்கைச் செலவை உயர்த்தி சகலருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கமுடியும் எனவும் நம்பப்பட்டநிலையில் தொடர்ந்து வேலையின்மை அதிகரித்தது. இக் காலத்தின், மத்திய பகுதிக்குப்பின் (1957க்குப்பின்) தொடர்ச்சியாக ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளாலும், தொடங்கப்பட்ட கைத்தொழில்கள் யாவும், வெளிநாட்டு மூலப்பொருள் பயன்படுத்தப்பட்ட முதல்நிலைக் கைத்தொழில்களினாலும் வேலையின்மை தொடர்ச்சியாக அதிகரித்தது, 1963ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசனமதிப்புப் புள்ளி விபரத்தில் தொழில் அணி 32 இலட்சம் எனவும், இதில் 2,36,000 பேர் வேலையற்றோராக இருந்ததாகவும், இது மொத்தத் தொழில் அணியில் 8%மாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(iii) 1963இலிருந்து 1978வரை :

1963ஆம் ஆண்டிலிருந்து தெளிவாக வெளிக்கிளம்பிய வேலையில்லாப் பிரச்சினையானது, 1971இல் துரிதகதியில்அதிகரித்து 1978இல் மிகப் பெரிய பொருளாதாரப்

பிரச்சினையாக விளங்குகின்றது. 1963ஆம் ஆண்டு தொடக்கம் 1971ஆம் ஆண்டு வரை புதிய தொழில் அணிப் பிரவேசிகள் 10 இலட்சம் பேராக அதிகரித்தது. 1965—70ஆம் ஆண்டுகளில் 5,50,000 பேர் வேலையில்லாதிருந்தார்கள். அது 1971ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி 10 வயதுக்கு மேற்பட்ட வேலையற்றோர் தொகை 7,96000 பேர் என காட்டப்பட்டுள்ளது. எனவே 1963இல் 8%மாக இருந்த வேலையின்மை 1971இல் 29%மாக அதிகரித்தது. வருடாவருடம் 3·2% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 1973இல் மத்திய வங்கி தொழில் அணி பங்காற்றல் மதிப்பீட்டில் வேலையற்றோர் 7,93,000 பேர்கள்எனவும் 1974இல் மத்திய வங்கி காணி, தொழில் பயன்படுத்தல் மதிப்பீட்டில் 9,84,000 பேர் வேலையற்றவர்கள் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. பி. வில்சன் என்பவர் "இலங்கையின் வேலையின்மையானது 1971 — 1981ஆம் ஆண்டுக்கிடையில் வருடாவருடம் 157·6 ஆயிரம் அதிகரிக்குமெனவும், 1981ஆம் ஆண்டில் 59 இலட்சமாக உயரலாம்" எனவும் கூறியுள்ளார்.

வேலையின்மையின் பரம்பல்:

இலங்கையின் வேலையின்மை கிராம, நகரப்புறங்களில் பரவிவரும் நோயாகக் காணப்படுகின்றது. இத்தகைய வேலையின்மையின் பரம்பல் இலங்கையில் கிராம, நகர அடிப்படையிலும், ஆண், பெண் என்ற பால் அடிப்படையிலும், இளைஞர், முதியவர் என்றவயதின் அடிப்படையிலும், உலர்வலய, ஈரவலய மாவட்ட அடிப்படையிலும் வகைப்படுத்தி, அதன் தாக்கங்களை ஆராயலாம்,

கிராமங்களில், நகரங்களைவிட கூடிய வேலையின்மை காணப்படுகின்றது. சனத்தொகை 1 கோடி 20 இலட்சமாக இருந்த காலத்தில் மொத்தத் தொழில் அணி 38 இலட்சம் எனவும், இதில் கிராமம் $\frac{2}{3}$ பகுதி எனவும், பெருந்தோட்டமும் சேர்த்தால் இவ் விகிதம் $\frac{5}{6}$ எனவும் கூறப்பட்டது. கிராமப்புற பகுதிகளில் வேலையற்றோர் பற்றிய 1963ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டில் 1,84,450 பேர் எனவும், இது மொத்தத்தில் 77% எனவும் 1971ஆம் ஆண்டின் மதிப்பீட்டில் 5,71,800பேர் எனவும், இது மொத்தத்தில் 70% எனவும் மதிப்பிடப்பட்டிருந்தது. 1971இல் இருந்து அரசாங்கம் பின்பற்றிய கொள்கைகளினாலும், கிராம, பெருந்தோட்டங்களிலிருந்து வேலையற்றோர், வேலைதேடி நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்தமையினாலும், கிராமப்புறங்களில் காணப்பட்ட வேலையின்மை குறைவடைந்ததோடு, மாறாக நகர்ப்புறங்களில் வேலையின்மையின் வீதம் 1963இல் 23%ஆக இருந்து 1971இல் 30%ஆக மாறியது எனக் கூறலாம்

சனத்தொகை வேகமாக அதிகரித்தமையும் வயது அடிப்படையில் வேலையின்மை பரவ வழிவகுத்தது. 1942இல் இருந்து மேற்கொள்ளப்பட்ட நவீன சுகாதார வசதிகளினால் இறப்பு வீதம் குறைந்து, பிறப்புவீதம் அதிகரித்தமையினால்தான், இன்று இளைஞர்கள் தொகை அதிகரித்துள்ளதுடன், வேலையற்றோர் அணியில் இவ் இளைஞர்கள்தான் முன் நிற்கின்றார்கள். 1963ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி 15—24 வயதுகளுக்கிடைப்பட்டோர் 64% எனவும், இதில் 74% ஆண்கள், மிகுதி பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் 1950—1970 ஆண்டுகளுக்கிடையில் வருடாவருடம் இளைஞர்கள் தொகை 2·35%ஆக அதிகரித்தது எனவும், இது இலங்கையில் 3·82% அதிகரிப்பு எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீடுகளின்படி 15—24 வயதிற்கிடைப்பட்டவர்கள் 1953இல் 14 இலட்சமாகவும், 1971இல் 26 இலட்சமாகவும் அதிகரித்துள்ளதாகவும், இதில் 13·2 இலட்சம் பேர் அதாவது 50·52% சுறுசுறுப்பான தொழில் அணியாகவும் காணப்பட்டார்கள். இம் மதிப்பீட்டின்படி 15—29 வயதுக

ளுக்கிடையில் வேலையின்மையின் வீதம் 1963இல் 14·22% எனவும் 1975இல் 37·26%மெனவும் கூறப்பட்டது. இதனை 15 -24வயதுக்கிடையில் கவனிக்கும்போது 60%மாகவும் 15—30 வயதுக்கிடையில் 90%மாகவும் காணப்படுகின்றது. இதிலிருந்து இளைஞரிடையேதான் வேலையின்மை காணப்படுவதை உணரலாம்.

ஆண், பெண் என்ற பால் அடிப்படையிலும்வேலையின்மை பரந்து காணப்படுகின்றது. 1963ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டில் 15—24 வயதுக்கிடைப்பட்டோரில் 74% ஆண்கள் எனவும், 26% பெண்கள் எனவும் கணிக்கப்பட்டது. 1971இன் மதிப்பீட்டில் ஆண்களின் தொகையில் மாற்றமுறுதிருக்க பெண்களின் தொகை 41%மாக அதிகரித்தது. எனவே மொத்த தொழில் அணியில் ஆண்கள் 66·5%ஆகவும் பெண்கள் 33·5%மாகவும் காணப்பட்டது. தொழில் அணியில் 1963இல் 15—25 வயதுகளுக்கிடைப்பட்ட பெண்கள் 21·7% மாகவும், 1971இல் இத்தொகை 26·1% மாகவும் உயர்ந்துள்ளது. இன்னும் நுணுகி ஆராயும்போது பெண்களில் வேலையற்றோரில் கூடிய வீதம் 20—24 வயதுக்கிடைப்பட்டோரிடையே அதிகரித்துள்ளதைக் காணலாம். இவ்வயதெல்லையில் 1963இன் மதிப்பீட்டில் 29%மெனவும், 1971இன் மதிப்பீட்டில் 42·2%மெனவும் பெண்கள் வேலையின்மை வளர்ச்சி பெற்றதையும் உணரக் கூடியதாகவுள்ளது.

இலங்கையின் 22 மாவட்டங்களிலும் வேலையின்மையின் வீதம் வேறுபடுவதைக் காணலாம். 1973 — 74ஆம் ஆண்டில் "மார்கா நிறுவனம்" மேற்கொண்ட 125 தெரிந்தெடுத்த கிராமங்களின் அடிப்படையில் வேலையின்மையை மதிப்பீடு செய்தது. அப்போது கொழும்பு, களுத்துறை, காலி, கண்டி, மாத்தளை, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, குருநாகல் போன்ற மாவட்டங்களில் வேலையின்மையின் வீதம் கூடுதலாகக் காணப்பட்டது. இப் பிரதேசங்கள் சிறப்பாக தேயிலை, தென்னை, றப்பர் பெருந்தோட்டங்களை உள்ளடக்கியதும், இங்கு இந்தியத் தொழில் அணி பணியாற்றுவதும், சிறிய சிக்கலான நிலவுடமையில் பலர் தங்கியிருப்பதும் காரணமாகும். அனுராதபுரம், மொனராகலை, அம்பாறை மாவட்டங்கள் வரண்ட வலயமாகவும், நிலம் போதியளவு காணப்பட்டமையும், வேலையின்மையின் வீதம் (29%) குறைவாகக் காணப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 11% வேலையின்மை காணப்பட்டது. தோட்டப்பகுதி மாவட்டங்களில் இடப்பெயர்ச்சி அதிகரித்தமையால் வேலையின்மையின் வீதம் குறைவாகக் காணப்பட்டுள்ளது என மார்கா நிறுவன மதிப்பீட்டிலிருந்து உணரக் கூடியதாக உள்ளது.

வேலையின்மை ஏற்பட்டதற்குரிய காரணங்கள் :

(அ) வேகமாக வளர்ந்துவரும் ஜனத் தொகைப் பெருக்கம்.

(ஆ) பொருளாதாரத் தேக்கம்.

(இ) செல்மதி நிலுவைப் பிரச்சினை.

(ஈ) கல்விமுறைச் சீர்கேடு.

(உ) இளைஞர்களின் தொழில் எதிர்பார்ப்பு.

(ஊ) பெண்களின் நிலைமாற்றம்.

வேகமாக அதிகரித்துவரும் ஜனத் தொகையும் வேலையின்மை ஏற்படுவதற்குரிய பிரதான காரணமாகும். ஜனத் தொகை அதிகரிக்க, தொழில் அணி அதிகரிக்க, அதனைத் தாங்கும் வல்லமை எமது பொருளாதாரத்துக்கு இல்லாமையினால்தான் வேலையின்மை ஏற்பட்டது எனலாம். 1940 ஆண்டிலிருந்து புகுத்தப்பட்ட விஞ்ஞான சுகாதார, பாதுகாப்பு வசதிகள் இறப்பு வீதத்தைக் குறைத்து பிறப்புவீதத்தைக் கூட்டியமையினால்தான் இன்று உருவாகியுள்ள. இளைஞர் தொகைப் பெருக்கம் வேலை அணியில் கூடிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. 1963இன் மதிப்பீட்டின்படி சனத்தொகை 2·75%மாக அதி

கரித்தது எனவும், 15 வயதுக்குட்பட்டோர் 42%மாகவும் மதிப்பிட்டிருந்தது. ஆனால் 1969ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி 19 வயதுக்குட்பட்டோர் 48·9%மெனவும் 1978இல் இது 15—64க்குட்பட்டவர்கள் 59·8%மாக அதிகரிக்குமெனவும் மதிப்பிடப் பட்டது. திரு. பி. வில்சன் 1963—1971 வரை வருடாந்தம் 54,000 பேராகவும், 71—81வரை வருடாந்தம் 1,57,600 பேர் வீதம் தொழில் அணி பெருகும் எனவும், H. N. S. கருணதிலக்க, வருடம் 1,05,000 பேராகப் பெருகும் எனவும் குறிப்பிட்டிருந்தார். இதிலிருந்து வேலையின்மையின் வளர்ச்சிக்கு சனத்தொகை பெருக்கமே காரணமெனத் தோன்றுகின்றது.

இலங்கையின் பொருளாதாரம் வேலை செய்யக்கூடியவர்களுக்கு வாய்ப்பினை யளிக்க முன்வரவில்லை. கடந்த காலங்களில் விஞ்ஞானமுறை, தொழில்நுட்ப முறை, நவீன விவசாயமுறை முதல் செறிவான கைத்தொழில்கள் என்பவற்றினால் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றிருந்த போதிலும், வேலைவாய்ப்பினை அளிக்க முன்வரவில்லை. வேலைவாய்ப்பளிக்கக்கூடிய கட்டிடத்துறை, நிர்மானித்தல், நீர்ப்பாசனம் போன்றவைகளைத் திருத்தி அமைக்கவில்லை. விவசாயம், கைத்தொழில், மீன்பிடித்தல் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படவில்லை. பருவகால மாற்றமும், மந்தநிலையும் கூட எமது பொருளாதாரத்தில் ஒரு தேக்கநிலையை ஏற்படுத்துவதாக இருந்தது. 1971இன் குடிசன மதிப்பீட்டின்படி 63 — 71க் கிடையில் 10 இலட்சம் தொழில் அணியில் 4·5 இலட்சம் பேருக்கு மட்டுமே இலாபகரமான தொழிலை அளித்துள்ளது. இவ்வாறு அதிகரிக்கும் தொழில் அணிக்கேற்ப பொருளாதார வளர்ச்சிவீதம் 7%மாக இருந்தால் இதனை ஈடுசெய்திருக்கும். ஆனால் இதன் வளர்ச்சி வீதம் 4%மாக இருந்தமையினால்வேலையின்மைஏற்பட்டது.

இலங்கையின் கல்விமுறையும் வேலையின்மை வளரக் காரணமாகும். அந்நியரால் அறிமுகம் செய்யப்பட்ட புத்தகக் கல்வி முறையினால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்குப் பதிலாக பெரும் தலையிடியையே ஏற்படுத்தியது. மத்திய பாடசாலை ஆரம்பக் கல்வி பெற்றோர், க. பொ. த. (சாதாரண, உயர்தரம், வகுப்புகளில் கல்வி பெற்றோர், பல்கலைக் கழகப் பட்டதாரிகள் அதிகரிக்கப்பட்ட பொழுது அவர்களின் கல்விக்கேற்ற வேலை கிடைக்காமையும் வேலையின்மை தொடர்ச்சியாக அதிகரிக்கக் காரணமாகும். 1946ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலவசக் கல்வி முறையும் கிராமப் பகுதியில் படித்தவர்கள் தொகை அதிகரிக்கக் காரணமாக இருந்தது. இன்று கிராமத்தில் 76%மும் நகர்ப்புறத்தில் 70%மும் படித்தவாலிபர்கள் காணப்படுகின்றார்கள். கிராமப்புறத்தில் பெருமளவு கலைப் பாடங்கள் படித்தவர்களே உள்ளார்கள். 1946ஆம் ஆண்டில் ஆரம்பக் கல்விபெற்றோர் 86,000 பேராகவும், இன்று 3,50,000 பேராகவும், பல்கலைக்கழகத்தில் 1000 பேரும் இன்று 12,000 பேரும் கல்வி பயில்கின்றார்கள். 1969ஆம் ஆண்டு மத்தியவங்கி அறிக்கையின்படி 3 இலட்சம்பேர் (கிராமிய அரை குறை வேலையில்லாதவர் தவிர்த்து) க. பொ. த. வகுப்பில் சித்தியடைந்தவராகவும் இது ஏறத்தாழ 36·4%மாகவும், பல்கலைக்கழகப் பட்டதாரிகள் 10,000 பேரும் வேலையில்லாதோர்எனவும் கணித்துள்ளது. எமது பொருளாதார அமைப்புக்கேற்ற முறையில் இக்கல்வி முறை அமையாததும் வேலையின்மை தொடர்ந்துஅதிகரிப்பதற்கு காரணமெனக் கூறலாம்.

இளைஞர்களின் தொழில் எதிர்பார்ப்புகள், விருப்பு வெறுப்புக்களும் வேலையின்மை உருவாகக் காரணமாகும். தாம் விரும்பிய, எதிர்பார்த்த வேலை கிடைக்காத விடத்து வேலையின்றி இருக்க விரும்புகின்றார்கள். மத்திய பாடசாலை ஆரம்பக் கல்வி பெற்றோர், நெசவு, கட்டிட நிர்மாணம், தச்சு வேலை போன்ற கைப்பணி,

கைத்தொழில், உற்பத்தியாக்கல் தொழில்களை விரும்புகின்றார்கள். இந்த இளைஞர்கள் தமது தகப்பனார் செய்த குடும்பத் தொழிலைச் செய்ய 60% க்கு மேலானவர்கள் விரும்புவதில்லை. அத்துடன் க.பொ.த. பரீட்சைகளில் சித்தியடைந்தோர் ஆசிரியர், தாதித் தொழில், எழுது வினைஞர் தொழில்களையே விரும்புகின்றார்கள். ஒரு சிலர் மட்டுமே விவசாயம், சுரங்கம், கைத்தொழில், உருவாக்க வேலைகளில் ஈடுபட விரும்புகின்றார்கள். உயர் கல்வி பெற்றவர்களும் மருத்துவம், பொறியியல், கணக்காய்வு, நிருவாகம் போன்ற தொழில்களையே எதிர்பார்த்தார்கள். இந்த இளைஞர்கள் அனைவரும் வெள்ளை உடை அணியும் வேலைகளையே நாடியமையால் வேலையின்மை வளர்ச்சியடைந்தது எனக் கூறலாம்.

பெண்கள் தமது வழமையான தொழில்களை விட்டு தொழில் அணியில் சேர்ந்து வேலைதேட முன்வந்தமையும் வேலையின்மை உயர்வுக்கு காரணமாகும். பெண்களிடத்தில் குடும்பத் தொழில் ஈடுபாடு குறைந்தமை, உயர்கல்வி கற்றமை, குடும்பத்தில் தங்கியிருத்தலை விட்டு விடுபட வேண்டுமென்ற உணர்வு, வாழ்க்கைச் செலவு உயர்வைச் சமாளித்தல் போன்ற காரணங்களுக்காக பெண்கள் வேலை தேட முன்வந்தார்கள். 1963ஆம் ஆண்டு மதிப்பீட்டில் 29% மாக இருந்த பெண்கள் தொகை 1971இல் 42·2% மாக அதிகரித்தது. இவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர், தாதித் தொழில், எழுதுவினைஞர் தொழில்களையும் விரும்பினர். 11% மட்டுமே நெசவுத் தொழிலைச் செய்வதற்கு விரும்பினர். 73/74 ஆம் ஆண்டு மார்கா நிறுவனம் செய்த ஆராய்ச்சியின் போது, பெரும்பாலான பெண்கள் தமது தாய்மார் செய்த வேலையை விரும்பவில்லை எனத் தெரியவந்தது. எனவே பெண்களும் வேலை தேட தொழிற்சந்தைக்கு வந்தமையும் வேலையின்மை வளர்ச்சிக்கான காரணமெனக் கூறமுடியும்.

செல்மதி நிலுவையில் ஏற்பட்ட பாதக நிலைமையும் கைத்தொழில், விவசாய பொருளாதார நடவடிக்கைகளைப் பாதித்து வேலையின்மையை ஏற்படுத்தியது. எமது முதல் செறிவான கைத்தொழில்களுக்குத் தேவையான வெளிநாட்டு மூலப் பொருட்களையும், தேவையான பொறித் தொகுதி, இயந்திர உபகரணங்களையும் பெறுவதற்கு அந்நியச் செலவாணி பற்றாக்குறையாக இருந்தமையால், கைத்தொழில்களை இயக்குவதற்கும் முழு இயலளவை உபயோகிப்பதற்கும் முடியாமல் இருந்தமையால் வேலைவாய்ப்பை அளிக்க முடியவில்லை. இதுபோல் விவசாய நடவடிக்கைகளும், வெளிநாட்டு இயந்திரம், உரம் போன்றவற்றையும், கிருமிநாசினி, களைகொல்லி போன்றவற்றை கூடியளவுக்கு பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது, செலவாணி பற்றாக்குறையால் அவை இறக்குமதி மட்டுப்படுத்தியதும் விவசாய உற்பத்தி வீழ்ச்சியும் பொருளாதார வளர்ச்சியைப் பாதித்தது. அத்துடன் மறைமுகமாக வேலையின்மையையும் உருவாக்கியது எனலாம்.

வேலை வாய்ப்பளிக்கும் திட்டங்களும் அவற்றின் செயற்பாடுகளும்:

இலங்கை சுதந்திரமடைந்து 10ஆண்டுகளின் பின்னர் வேலையின்மையின் தாக்கம் வெளியரும்பிக்கொண்டிருந்தது. இலங்கையின் மக்கள் யாவரும் வேலைவாய்ப்புப் பெற்று பொருளாதார மறுமலர்ச்சியடைய வேண்டும் என்ற நோக்குடன் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. திட்டங்களின் உரிய இலக்குகளை அடையத் தவறியமையும், காலத்துக்கு காலம் ஏற்பட்ட பொருளாதார மாறுதல்களும் வேலையின்மையை உக்கிரவேகப்படுத்தின எனலாம்.



இவ் வேலையின்மையானது சனத்தொகைப் பெருக்கம், பொருளாதாரத் தேக்கம், செல்மதி நிலுவைப்பிரச்சினை, கல்வி முறைச் சீர்கேடு, தொழில் எதிர்பார்ப்பு மனப்பான்மை, பெண்களின் நிலை மாற்றம் போன்ற காரணங்களினால், இலங்கையின் கிராமிய, பெருந்தோட்ட, நகரப்பகுதிகளில் பல்வேறுபட்ட வேலையின்மையை உருவாக்கி, பல்வேறுபிரச்சினைகளைக் கொண்டுவந்துள்ளது. இதனை நீக்குவதற்காக திறனை திட்டமிடல், உறுதியான பொருளாதார வளர்ச்சி, தேசிய உணர்வு, கல்விமுறை மாற்றம், மனநிலை மாற்றம் போன்ற காரணங்களைக்கொண்டு வேலையின்மையை நீக்கமுடியும் என்பதையே இப்படம் விளக்குவதாக உள்ளது. எனவே இலங்கையின் திட்டங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும், அவை வேலைவாய்ப்பை ஏறபடுத்திய விதத்தையும் கவனிப்போம்.

(i) பத்தாண்டுத் திட்டம்:

[இளைஞர் விவசாயக் குடியேற்றத் திட்டம்]

1958/59 ஆண்டில் உருவாக்கப்பட்ட பத்தாண்டுத் திட்டம் (58 — 68 வரை) வேலை வாய்ப்புக்கள் அளிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. இதனை வேலைவாய்ப்பு ரூபத்திட்டம் என வர்ணிக்கலாம். இதனை காமினி கொரியா "வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் நோக்கமாகவே வரையப்பட்டது" எனக் கூறியுள்ளார். இத் திட்டத்தின்படி —

(அ) இளைஞர் விவசாயக் குடியேற்றத் திட்டம்.

(ஆ) கைத்தொழில் விருத்தி

(இ) விவசாய நிலம் பெருக்கல்

போன்றவைகள் முக்கிய இடம் வகித்தன. இவைகளினால் அதிக வேலை வாய்ப்பு அளிக்கலாம் எனக் கூறப்பட்டது. ஆனால் கைத்தொழில்கள் யாவும் வெளிநாட்டு முதல் செறிவான உற்பத்திகளிலும், வெளிநாட்டு தொழில் நுட்பங்களிலும் அதிகளவிற்குத் தங்கியிருந்தமையினாலும், எமது நாட்டு தொழில் அணிக்கு வேலைவாய்ப்பளிக்க ஊழியச் செறிவான கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படவில்லை. விவசாய உற்பத்தியும் நவீன தொழில் நுட்பம் பயன்பாடுகள் மனித சக்தியின் பயன்பாட்டைக் குறைத்தன. இளைஞர் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் வெற்றியளித்தாலும்

அதிகரித்த தொழில் அணியை இத் திட்டங்கள் தாங்கிக்கொள்ள முடியாமையும், தொழில் அணியின் மனப் போக்கும் இத் திட்டத்தின் இலக்காகிய பூரண வேலை நிறைவை அடைய முடியாமையுமே காரணம் எனக் கூறலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் முதல் வேலைவாய்ப்புத் திட்டம் — விவசாயப்படை

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் 65ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட (65 — 70) வேலைவாய்ப்புத் திட்டமும் வேலைவாய்ப்பளிக்கும் நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் பிரகாரம் 5 வருடத்தில் 6·3 இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவர் என எதிர்பார்க்கப்பட்டது. இத் திட்டம் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்காக —

(அ) விவசாயப்படை
(ஆ) கைத்தொழில் பேட்டை
(இ) நவீன விவசாயக் கடனும், விவசாய அபிவிருத்தியும்.

போன்றவைகளை மேற்கொண்டது. கைத்தொழில் பேட்டைகள் யாவும் வெளிநாட்டு மூலப் பொருளைப் பயன்படுத்தியமையும், இதனைப் பெற போதிய அந்நிய செலவாணி இல்லாமையால் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியளிக்கவில்லை. இதனால் இப் பேட்டைகளினால் போதிய வேலைவாய்ப்பை அளிக்க முடியவில்லை. மாறாக சில தனியுரிமை முதலாளிகளையே உருவாக்கியது. நவீன விவசாயக் கடன் மூலம் விவசாய அபிவிருத்தி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும், பெருகும் வேலை அணிக்கு வேலைவாய்ப்பளிக்கத்தக்கதாக நிலவுடமை அமையவில்லை. விவசாயப்படை ஓரளவு வெற்றி பெற்றாலும், இளைஞர்களின் மனப்பான்மையாலும், பின்னடைய வேண்டி ஏற்பட்டது. அவைகள் பின் வந்த அரசினால் கலைக்கப்பட்டமையும், காரணமாக இத் திட்டம் பெரும் தோல்வி கண்டதுடன் பெரும்பாலான வேலையற்றோர் தொழில் அணியையும் உருவாக்கியது.

ஐந்தாண்டுத் திட்டம்:

மாவட்ட அபிவிருத்திச் சபைகள்

மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட (72 — 76 வரை) ஐந்தாண்டுத் திட்டம் வேலைவாய்ப்பளிக்கும் மிகப்பெரிய திட்டமென வர்ணிக்கலாம். இத் திட்டத்தின் ஆரம்பத்தில் வேலையற்றோர் 5½ இலட்சம் எனவும் திட்ட முடிவில் 11 இலட்சமாக மாறும் எனவும் இதற்கேற்ப வேலை வசதி அளிக்கும் விதத்தையும் திட்டமிட்டிருந்தது.

விவசாயம்	3,50,000
கைத்தொழில்	1,65,000
நிருமாணவேலை	60,000
ஏனையவை	2,85,000
	8,10,000

பேருக்கு வேலையளிப்பதாகவும் கூறப்பட்டது. எனவே திட்டமுடிவில் 3 இலட்சம்பேர் வேலையின்றி இருப்பார்கள் எனவும் கூறப்பட்டது. இதற்கென திட்டத்தை விவசாயப் பகுதி, கைத்தொழில் பகுதி என வகுத்து செயற்படுத்தியது.

விவசாயத்தைப் பொறுத்த அளவில் இயற்கையின் பாதிப்பும், அமுல்செய்த முறையில் உள்ள குறைபாடும், வேறுபட்ட விவசாயச் சூழலை கவனிக்கத் தவறியமையும், விவசாயிகளுடைய பண்பாற்றல் வேறுபாட்டை உணராமையும் காரணமாக இத்துறை வெற்றி பெறவில்லை. இதேபோல் கைத்தொழில் துறையும், அரசாங்கம் உருவாக்கிய வசதிகள் எல்லாக் கிராமியக் கைத்தொழிலுக்கும் கிடைக்கவில்லை. கிராமியச் சமூகங்கள், முழுப் பொருளாதாரத்துடன் ஒருங்கு இணைக்கப்பட்டதாக அணுகுமுறை பின்பற்றப்படவில்லை. இதனால் கைத்தொழில் துறையும் எதிர்பார்த்த வெற்றிபெற முடியவில்லை.

இத்திட்டத்தின்கீழ் கிராம அபிவிருத்தி தொழில்வாய்ப்புத் திட்டங்கள்:

(i) இளைஞர்கள் குடியேற்றத் திட்டம்.
(ii) கூட்டுறவு கூட்டுப்பண்ணைத் திட்டம்.
(iii) பிரதேச அபிவிருத்திச் சபை.
(iv) ஐக்கிய நாடுகள் சபை சிறுநீர்ப் பாசனத் திட்டம்.
(v) மகாவலி, உடவளவை அபிவிருத்தித் திட்டம்.
(vi) ஜனவாசாக்கள். (கூட்டுறவுப் பண்ணைகள்)
(vii) பாற்பண்ணைத் திட்டம்.
(viii) மறுபயிர் அபிவிருத்தித் திட்டம்.

இத் திட்டங்களில் வேலையின்மையை நீக்குவது பாரதூரமாகக்குறிப்பிட்டிருந்தும் இத் திட்டங்களின் செயற்பாடுகளில் ஏற்பட்ட தவறுதல்களும், திறனற்ற முகாமையும், உறுதியற்ற மேற்பார்வையும் குறைந்த பலனை ஈட்டித்தந்தன. அரசியல் கட்சியின் முன்னேற்றம்கருதி உழைப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட அரசியல் பிரமுகர்களின் தவறான நடத்தைகளினாலும், அதனைக் கண்டிக்கும் ஆற்றல்வாய்ந்த உயர்மட்ட முகாமை இல்லாமையும் இத் திட்டத்தின் உரிய இலக்காகிய வேலை வாய்ப்பை அதிகளவுக்கு ஏற்படுத்தத் தவறிவிட்டது எனலாம்.

புதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள்:

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று அரசைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வேலையின்மையை நீக்குவதே முக்கிய நோக்காகக் கொண்டு பல திட்டங்களை உருவாக்கியுள்ளது. பின்வரும் அட்டவணை இதனைத் தெளிவுபடுத்துகின்றது.



(i) வேலைவாய்ப்பு அபிவிருத்தி வங்கி:

இலங்கையில் உள்ள 160 தேர்தல் தொகுதிகளிலும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்காகவும், தகவல்களை சேகரிப்பதற்காகவும், ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு வங்கிகள் நிறுவப்படும்.

(அ) தகவல் சேகரிக்கும் வங்கி
(ஆ) வேலை வழங்கும் வங்கி

தகவல் சேகரிக்கும் வங்கியானது அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டமுறையான நிறுவனங்கள், மற்றும் உள்ளூராட்சி தாபன நிறுவனங்களிலும் ஏற்படும் வெற்றிடங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும்.

வேலை வழங்கும் வங்கி வேலையற்றோர் பட்டியலைப் பெறுவதுடன், அவர்களின்

குடும்பநிலை, வருமானநிலை. கல்வித் தரா தரம் போன்ற தகவலைப் பெற்றுத் தகுதிக் கேற்ப வேலையைப் பெற்றுக் கொடுக்க முயற்சி எடுக்கும். இவ் வங்கிகள் மாவட்ட அமைச்சுமூலம் திட்டமிடல் செயற்பாடு கள் அமைச்சினுல் செயற்படுத்தப்படும்.

(ii) சுதந்திர வர்த்தகவலயம் (கட்டுநாயக்கா) :

கட்டுநாயக்கா விமானத் தளத்தைச் சுற்றி வரியற்ற சுதந்திர வர்த்தகவலயம் 1978ஆம் ஆண்டில் அமைக்கப்பட இருக் கின்றது. இப் பிரதேசத்துக்குள் வெளி நாட்டவர் தமது முதல், தொழில்நுட்பம், நிர்வாகம் போன்றவற்றை இங்குகொண்டு வந்து, இங்கு கைத்தொழில் நிலையங்களை நிறுவி, இங்குள்ள ஊழியத்தையும், மூலப் பொருட்களையும் பயன்படுத்திப் பொருட் களை உற்பத்திசெய்து மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு இடமளிக்கும் திட்டமாகும். இத் திட்டத்தினுல் அந்நியச் செலாவணி சேமிப்பதுடன், கப்பல் தங்கும் கட்டணம், உல்லாசப்பிரயாணக் கைத்தொழில் போன் றவை விருத்தி பெறுவதுடன் வேலையற்ற தொழில் அணியில் 50,000 பேருக்கு வேலை வாய்ப்பளிப்பதோடு மறைமுகமாக 80,000 பேருக்கும் வேலைவாய்ப்பளிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

(iii) மகாவலி திசைதிருப்பும் திட்டம் :

இத்திட்டம் 30 ஆண்டுகளில் பூர்த்தி செய்வதாகப் போடப்பட்ட நீண்டகாலத் திட்டத்தை இன்னும் 5 வருடத்துக்குள் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள் ளது. இத் திட்டம் பலபயன் தரும் திட்ட மாக இருப்பதனுல், பின்வரும் வழிகளில் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதாகஉள்ளது

(i) குடியேற்றத்திட்டம்
(ii) நீர்ப்பாசனத் திட்டம்
(iii) வலு உற்பத்தி
(iv) சிறுகைத்தொழில் — விவசாய அடிப்படை
  (அ) சீனிக் கைத்தொழில்
  (ஆ) புகையிலை பீடிக் கைத் தொழில்
  (இ) காகிதக் கைத்தொழில்
(v) விவசாயம்
  (அ) நெல் உற்பத்தி
  (ஆ) உபஉணவுப்பயிர்ச்செய்கை

(vi) மகாவலி திசை திருப்பு வேலைகள் போன்றவைகளின் மூலம் வேலைவாய்ப்பை ஏற்படுத்தலாம். மகாவலி திசைதிருப்பு வேலைகளுக்கு மனிதசக்தியைக் கூடுதலாகப் பயன்படுத்துவதின்மூலம் பெருந்தொகை யான வேலைவாய்ப்பை அதாவது ஏறத் தாள 10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கமுடியும் எனக் கூறப்படு கின்றது.

(iv) ஏனைய திட்டங்கள் :

வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற் காக இலங்கையின் பல்வேறுபாகங்களிலும் தேசிய இளைஞர்சபை வேலைக்குழுக்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் குழுக்கள் பொருளாதார அபிவிருத்தி, நீர்ப்பாசன பெருந்தெரு வேலைகள் போன்றவற்றிலும், கலை, கலாச்சாரப்பணி களிலும் ஈடுபடும். இதற்கு முன்னேடியாக மாத்தறை மாவட்டத்தில் 7 தேர்தல் தொகுதிகளிலும் அமைக்கப்பட்டு, தற் போது பெரும் வெற்றிபெற்றும் வரு கின்றது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும் தொழிலமர்த்துகை நிர்ணயக்குழு அமைக் கப்படவுள்ளது. இக்குழுவில் உதவி அர சாங்க அதிபர், தொழில்வகை விசேட அறிவு பெற்ற ஒருவர், தொழில் அமைச் சின் பிரதிநிதி போன்ற மூவர் அங்கம் வகிப்பர். இவர்கள் திட்ட செயற்பாட்டு அமைச்சினுல் நியமிக்கப்படுவர். ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் 1000 பேருக்கு வருடாவருடம் வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுக்கப்படும். ஆசன எண்ணிக்கைக் கேற்ப இவ்வெண்ணிக்கை வேறுபடும். இவ் வாறு வேலைவாய்ப்பளிக்கும்போது இப்

பகுதி தேசியப் பேரவை உறுப்பினரின் ஆலோசனையும்பெறப்படும். இக்குழு மார்ச் 1ஆந் திகதியிலிருந்து இயங்கும். 18—40 வயதுக்கிடைப்பட்டோரில், குடும்ப அடிப்படையில் ஒரு குடும்பத்தில் ஒருவருக்காவது அரசாங்கத்தொழில் பெற்றுக்கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இக்குழு தொழிற் தரத்தை வகைப்படுத்தினாலும் விண்ணப்பதாரிகள் தமது விருப்பமான தொழிலைத் தேர்ந்தெடுக்கலாம். இதன் மூலம் வேலையின்மையை நீக்குவதோடு விருப்பமான வேலையையும் பெற்றுக் கொள்ளலாம். இத்துடன் 1978ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்மூலம் வேலையற்றோராக, வேலை அபிவிருத்தி வங்கியில் பதிவுசெய்யும் ஒவ்வொருவருக்கும், வேலையின்மை மானியமாக ரூ. 50/- பணமாக வழங்கப்படும் திட்டமும் அமுலாக்கப்பட இருக்கின்றது.

இத் திட்டங்கள் யாவும் இலங்கையின் மாவட்டங்கள் ரீதியாகப் பரவலாக்கி, மாவட்ட அமைச்சர்களின் கீழ் ஒழுங்குபடுத்தவும், இப் பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்தாசையுடன் நிறைவேற்றவும், திட்டமிடல் செயற்பாடுகள் அமைச்சின் திறனை முகாமைக் கட்டுப்பாடுகளின் மூலம் குறித்த இலக்கினை நிறைவேற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புத் திட்டங்கள் பற்றிய திறனாய்வு:

இலங்கையின் பொருளாதாரம், விவசாய நடவடிக்கைகளின்மூலம் கூடிய தேசிய வருமானத்தைப் பெறுகின்றது. கைத்தொழில் வகிக்கும் பங்கு மிகவும் குறைவாக (14%)க் காணப்படுகின்றது. அந்நிய, காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து உருவாகிய பொருளாதார முறையானது ஒருபுறம் நிலச்சுவாந்தார்கள், தொழில் அதிபர்களையும், மறுபுறம் பல இலட்சக்கணக்கான அன்றாடம் உழைத்து உண்டு வாழும் பாட்டாளி வர்க்கத்தினையும் உருவாக்கி இரண்டு வேறுபட்ட வர்க்கப் பொருளாதாரமாக உருவாக்கியுள்ளது. தேர்தலுக்கு தேர்தல் மாறி மாறி ஆட்சிப்பீடமேறிய அரசியல் கட்சிகளின் கொள்கை முரண்பாடு காரணமாக பொருளாதார முன்னேற்றம் பல கஸ்ட நிலைகளுக்குள்ளாகி வளர்ந்து கொண்டிருக்கின்றது. கடந்த 1961—71 ஆண்டுகளுக்கிடையில் பொருளாதாரம் 4% வளர்ச்சியை காட்டியது. ஆனால் அதிகரித்து வந்த வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பை அளிப்பதானால் எமது பொருளாதாரம் 7% வளர்ச்சியையாவது அடையவேண்டும். இவ்வாறான வளர்ச்சியின்மைதான் வேலையின்மை அதிகரித்தற்கு காரணமெனக் கூறலாம். 1971ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் சீர்கேடும், இயற்கைப் பாதிப்பும் பொருளாதாரத்தை தேக்க நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் மந்த அல்லது தேக்க நிலையிலிருக்கும் போது, வேலையின்மை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. இலங்கையின் வேலையின்மையினை நோக்கும்போது,

1. அன்று தொடக்கம் இன்று வரை வேலையில்லாதிருப்போர் (10 இலட்சம் பேர்கள்)
2. இயற்கையான வருட அதிகரிப்பு (1,25,000 பேர்கள்)
3. தகுதி ஆற்றல், திறமைக்கேற்ப வேலை பெறுதோர் என வகுக்கலாம்.

இவற்றினை மனதில் கொண்டே வேலை வாய்ப்புத் திட்டங்களை, நீண்ட காலப் பயன் கருதியும், குறுகிய காலப் பயன் கருதியும் இடவேண்டும். திட்டங்கள் இடும் போது, உயர்மட்டத் திட்டங்களாக இருக்காமல் சமுதாயத் திட்டமாக இருக்க வேண்டும்: ஆனால் 65 — 70 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட விவசாயப் படையும்,

70 — 77 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டங்களும் வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டும், அவைகள் பலவீனமான முகாமையினால் தோல்வி கண்டன. இத்திட்டங்களின் தோல்விக்கு பிரதான காரணங்களாக, திட்டமிடலில் அனுபவமின்மை, செறிவான தொழில் வாய்ப்பளிக்கும் தொழில்நுட்பம் பயன்படுத்தாமை, பலவீனமான நிர்வாகம், உயர்மட்டப் பிழையான மதிப்பீடு கையாளப்பட வேண்டிய நுணுக்கங்களில் பரிச்சயமின்மை போன்றவைகளைக் குறிப்பிடலாம். எனவே கடந்த திட்டங்களின் அனுபவத்தைக் கொண்டு. இன்றைய திட்டங்களும் இத்தகைய நிலையை அடையாது பாதுகாக்கப்பட வேண்டும்.

எமது வேலைவாய்ப்புத் திட்டங்கள், கிராமிய ரீதியில் இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டங்களாக உருவாக்கப்பட வேண்டும். இன்றைய பிழைப்பூதிய விவசாயச் செய்கையை, அரசு இயன்றவரை சீர் செய்து ஒரு நிரந்தர விடிவு காணவேண்டும். அப்போது விவசாயிகளின் வருமானம் உயர்வடையும். இதனால் மக்களின் நுகர்வுப் பொருள்களுக்கான கேள்வி உயரும். இதனால் கைத்தொழில் உற்பத்தி பெருகுவதற்கு இடமுண்டு. ஆனால் இறக்குமதியைக் கட்டுப்படுத்தினால் மட்டுமே உள்நாட்டு உற்பத்தி பெருக முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனையே உலக வங்கித் தலைவர் மக்னமாரா ''விவசாயத்துக்கு முன்னுரிமை அளித்து, சந்தை வசதியை ஏற்படுத்திய பின்பே தானாகக் கைத்தொழிலைப் பெருக வைக்கமுடியும்'' எனக் கூறினார்.

கல்வி நிலையை மாற்றியமைத்து எமது பொருளாதாரத்துக் கேற்ப, தொழில் கல்வியைப் போதிப்பதன்மூலம் அதிகரித்து வரும் படித்த இளைஞர்களைக் குறைக்கலாம். இலங்கையைப் பொறுத்தவரையில் இன்றைய புத்தகக் கல்வி ஒருபோதும் பயன்படாது. இக் கல்வியைக்கொண்டு வெளிநாடுகளில் வேலை பெறலாம் எனக் கூறப்பட்டாலும் இது எவ்வளவுதூரம் வெற்றிதரும் எனக் கூறமுடியாது. தாய்மொழிக் கல்வி கற்ற பெரும்பான்மையோருக்கு ஆங்கில அறிவு மிகவும் குறைந்த நிலையில் காணப்படுவதனால் வெளிநாட்டில் வேலைபெறுவதும் பெரும் கஷ்டமாகும். தொழில் கல்வியுடன் ஆங்கிலப் பாடத்தையும் கட்டாய பாடமாக்கவேண்டும்.

ஏற்றுமதி வர்த்தகத்தை மாற்றியமைத்து செல்மதி நிலுவையைச் சாதகமாக்குவதுடன், கூடிய வெளிநாட்டுச் செலாவாணியையும் உழைக்க வேண்டும். இதற்கு எமது பாரம்பரிய ஏற்றுமதிகளாக தேயிலை, தென்னை, றப்பர் பொருட்களை இருந்த நிலையில் பேணி வருவதுடன், அப்பொருட்களிலிருந்து கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய வேண்டும். அத்துடன் பாரம்பரியமற்ற கைத்தொழில்களைப் பெருக்கி அதன் உற்பத்திப் பொருட்களையும் ஏற்றுமதி செய்யவேண்டும். வெளிநாட்டுச் சர்வதேச நாடுகளின் ஒப்பந்தங்களையும், நட்புறவினையும் ஏற்படுத்துவதன் மூலம் ஏற்றுமதிக் கைத்தொழிலைப் பெருக்குவதோடு, இயன்றளவு இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கைத்தொழில் நாடாக மாற்றலாம். இதனால் வேலையின்மை முற்றாக நீங்கும்.

இலங்கையில் இனப் பாகுபாட்டை முற்றாக நீக்கித் தேசப்பற்றுணர்ச்சியை அதிகரிக்கச்செய்து, மக்களைக் கடினமாக உழைக்கத் தூண்டுவதும், தாம் விரும்பிய தொழில், அந்தஸ்துள்ள தொழில் என்பதை விடுத்து எந்தத் தொழிலையும் செய்வதற்குரிய மனப்பான்மையை ஏற்படுத்துவதும் வேலையின்மையை நீக்குவதற்கு மிகவும் முக்கியமானதாகும். இதனையே சியார்ஸ் ''மக்களின் மனநிலையை மாற்றியமைக்க சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டும்'' என்று கூறினார்.

இலங்கையின் பயனுள்ள பொருளாதாரக் காரணியாகிய மனிதவளம், பயனற்ற முறையில் இருப்பது பெரும் கவலைக்

கிடமானதொன்றாகும். இது சமூகரீதியில் பெரும் பழுவாகவும், அரசியல் ரீதியில் ஆபத்தானதாகவும் காணப்படுகின்றது. அரசாங்கங்கள் உருவாக்கிய வேலை வாய்ப்புத்திட்டங்கள் தோல்வியடைந்தன. மறுகணம் அரசாங்கமே மாற்றியமைக்கப் படுகின்றது. இப்பிரச்சினை இன்று அல்லது நாளையுடன் முற்றாக நீங்கும் பிரச்சினை யல்ல. நாளுக்குநாள் வேலை தேடுவோர் அதிகரித்துக்கொண்டே இருப்பர், இதற் கேற்ப எமது பொருளாதார வளர்ச்சி தொடர்ச்சியாக வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கவேண்டும். வேலைவாய்ப் பினை ஏற்படுத்தக்கூடிய விதமாகப் பொரு ளாதாரம் நிலையிலிருந்து பிறழாமல் தொடர்ந்து வளர்ந்துகொண்டிருக்க, அர சாங்கம் தக்க ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

1. Macro Economics — *T. F. Durnburg & DM. MC Dougall*
2. பொருளாதார வளர்ச்சி பற்றிய கட்டுரைகள் M. K. சுப்பிரமணியம்
3. மத்தியவங்கி அறிக்கைகள் 71, 74, 76.
4. பொருளியல் நோக்கு
5. ஐந்தாண்டுத் திட்டம் (72 — 76)
6. வரவு செலவுத் திட்டங்கள் (71 — 77வரை)
7. மார்காநிறுவன அறிக்கை
8. புள்ளிவிபரத் திணைக்கள ஆண்டறிக்கை
9. அரசாங்கத்துறை முன்னேற்றம். — 1973
10. கணக்காளர் — ஏடு.

முன்னுரிமைப் பங்கு மீட்டல்

பங்குகளை மீட்கும்போது முற்றாக அழைக்கப்பட்ட பங்குகளையே மீட்க முடியும். மீட்கும்போது:

1. புதிய பங்குகள் — மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் தவிர்ந்த — வழங்கி மீட்கலாம்.
2. இலாபத்தில் இருந்து — வேண்டிய தொகையை மூலதன மீட்பு ஒதுக்கு நிதிக்கு மாற்றி — மீட்கலாம்.
3. பொது ஒதுக்கத்தில் இருந்து ஒதுக்கு நிதிக்கு மாற்றி — மீட்கலாம்.
4. இவை மூன்றின் மூலமாகவும் மீட்கலாம்.

With the best Compliments from :

YOU ARE FOR US —
WE ARE FOR YOU

You tell me anything What you like.

- SLACKS
- SHIRTS
- SHORTS
- CHILDREN GARMENTS

Visit to :

REFINE & CO.

40, Grand Bazaar Road.
JAFFNA.

With the best Wishes :

MODERN ROOMS WITH ALL COMFORT
and Convenience 150 yards from the BUS STAND

Kumaran Tourist Inn

67, STANLEY ROAD,
JAFFNA.

Kumaran Tourist inn Invite you.

கணக்கீடும் கணக்கீட்டுக் கற்பிதங்களும்

க. முருகேசு, A. C. A., A. C. M. A.
பிரதிப் பணிப்பாளர் (ஒழுங்குபடுத்தல்)
பொதுத் திறைசேரி
பகுதிநேர விரிவுரையாளர்
வித்தியோதய வளாகம்

"கணக்கீடு என்பது ஓரளவாவது நிதியியல்பு பொருந்தியதான கொடுக்கல்வாங்கல்களையும் நிகழ்ச்சிகளையும், காசினை தனித்திற அலகாகக் கொண்டு, விளைவுவளக்கூறுடைய வகையிலே பதிவு செய்தும் வகுப்பீடு செய்தும், சுருக்கியும் காட்டி அதனுடைய முடிவுகளை விளக்கிக் காட்டுவதாகும்" என உறுதிப்படுத்திய பொதுக் கணக்காளர் அமெரிக்க நிறுவகம் (A. I. C. P. A.) வரைவிலக்கணம் கூறுகின்றது. "விளைவு வளக்கூறுடைய" எனும்போது அறிக்கை எழும்காலத்துச் சமூகத்தின் பொருளாதார சட்ட அரசியல் நிலைமைகளுக்கு இணங்கிய வகையில் அறிக்கையைப் பெறுவோரது நோக்கங்களுக்கேற்ப பெறுவோருக்கு விளைவுவளக் கூறுடையதாக இருக்கின்றமையே கருதப்படுகின்றது. கணக்கீட்டுக் கற்பிதங்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கற்பிதங்களே. அவற்றின் அடிப்படையிலேயே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. அவை ஏற்றுக்கொள்ளப்படுவதும் பயன்படுத்தப்படுவதும் பாவனை செய்யப்படுவதன்றி குறிப்பாகவோ சுட்டிப்பாகவோ கூறும் வழக்கம் இல்லை.

கணக்கீட்டுமுறை கி. மு. 4500 வரையிலேகூட வழக்கிலிருந்ததெனக் கூறப்படுகிறது. ஆதியிலே கணக்கீட்டுப் பதிவுகளை எகிப்தியர், கிரேக்கர், உரோமர் முதலான முற்கால ஐரோப்பியர்களும் எழுதிவந்திருக்கிறார்கள். இந்தப் பதிவுகள் குறிப்பு நிலைப் பதிவுகளாகும். இப்படிப்பட்ட கணக்குகள் குறுகிய காலப் பங்குடமைக்கும், வர்த்தக முயற்சிகளுக்குமே மேற்கொள்ளப்பட்டு வந்தன. 12ஆம், 13ஆம் நூற்றாண்டுக் காலத்திலே முகவர் வாயிலான கொடுக்கல் வாங்கல்கள் அபிவிருத்தி பெற்று, ஏற்றுமதிகளும் கடன்வசதிக்

கொடுக்கல் வாங்கல்களும் அதிகரித்து வந்தன. இந்த நிலைமைகள் கொடுக்கல் வாங்கல்களில் இரட்டை விளைவினையும் இரட்டைப் பதிவு முறியினையும் ஏற்படுத்தின. கணக்குகள் யாவும் முற்பணக் கொடுப்பனவுகளையும் அட்டுறுகளையும் எடுத்துக் கருதாமல், காசு வரவுகள் கொடுப்பனவுகள் அடிப்படையிலேயே வைக்கப்பட்டன.

இக்கணக்கீட்டுப் பதிவுகள், தனித்த ஒருவரோ, பலர் கூடிய குழுவினரோ மேற்கொண்டு நடாத்திவரும் முயற்சி இலாபம் காட்டுகின்றதா, வருமதிகள் பெறப்பட்டதா, செல்மதிகள் கொடுக்கப்பட்டதா என்பவற்றை நிர்ணயிப்பதற்காக எழுதிப் பேணி வைக்கப்பட்டு வந்தன. ஒரு முயற்சியில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் யாவற்றையும் காட்டும் பதிவுகளைக் கொண்டனவாயும் அம் முயற்சியினை நடாத்துவோரோ முயற்சியின் சொந்தக்காரரோ அறியவிரும்பும் செய்திகளைச் சுருக்கமாகக் காட்டுவனவாயும் கணக்கு ஆவணங்கள் அமைந்திருந்தன. வர்த்தக தொழிற்பாடு விருத்திபெற்றுப் பெருகி வரவர கொம்பனிகள், கூட்டுத்தாபனங்கள் போன்ற வெவ்வேறு உருவிலே வர்த்தகத் தாபனங்கள் உருவாகி வந்தன. இவற்றிலே அக்கறை கொண்டோர் உரிமையாளருடன் கடன் வழங்குவோர், வங்கியாளர்கள், முதலீடு செய்வோர் உட்பட்டு வந்தனர். இத்தாபனங்களின் முகாமையாளர்களும் உரிமையாளர்களும் வேறுபட்டவர்களாவர். முகாமைப்பணி ஒரு கூட்டத்தினராலேயே கொண்டு நடாத்தப்படுகின்றது. நிகழும் கொடுக்கல் வாங்கல்கள் முழுவதையுமே முற்றாகப் பதிவு செய்து அவற்றை பொழிப்பாக சுருக்கி அக்கறையுடையோருக்கு வழங்குவது முகாமையாளரின் கடமையாகும். முகாமையாளரின் கணக்களி பொறுப்புக்கள் கணக்குவாயிலாகத் தீர்க்கப்படுகின்றன. கணக்கீட்டின் நோக்கமே கட்டுப்பாடுதான்.

கொடுக்கல்வாங்கல்களைப் பதிந்து வைக்கும் முறை காலப்போக்கில் அபிவிருத்தி பெற்று, திறம்பட்ட கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்ளும்வகையில் விரிவுபெற்றுள்ளது. இவ்வகையான நடவடிக்கைகளைப் பதிவுசெய்யும்போது பல கற்பிதங்கள் (Assumptions) கையாளப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி ஏற்றுக்கொள்ளும்போது இவையாவும் முறைகளாகவும் நடைமுறைகளாகவும் வகைமுறைகளாகவும் ஆகின்றன. நடவடிக்கைகளைப் பதிவுசெய்தலில் ஈடுபட்டோரினால் வழக்கத்திலிருந்து இம் முறைகளும், நடைமுறைகளும் வகைமுறைகளும் உருவாக்கப்படுகின்றன. நடவடிக்கைகளைப் பதிவு செய்தலில் இவர்கள் எப்போதும் இம் முறைகளைக் கையாளுவார்கள். எனவே இவை நாளடைவில் மரபொழுங்குகளாகவும் கோட்பாடுகளாகவும் மலர்ச்சி பெறுகின்றன. குறிப்பாகக் கூறுமலே இம் மரபொழுங்குகளினதும் கோட்பாடுகளினதும் பயன்படுத்தல் எப்போதும் பாவனை செய்யப்படுகிறது. வழக்கிலிருந்து படிப்படியாக உருவாக்கப்பட்டு மரபொழுங்குகள், கோட்பாடுகள் என்று கூறப்படும் கணக்கீட்டு கற்பிதங்களே கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்யும் விதித்தொகுப்பாக அமைகிறது. இவை கருதுகோள்கள் அல்லது கணக்கீட்டுக் கோட்பாடுகள் என்றும் சொல்லப்படும்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் உட்பட்ட சர்வதேச கணக்காளர் சபையின் கருத்துப்படி அடிப்படை கணக்கீட்டுக் கற்பிதங்கள் பின்வருவானவாகும்:

(1) செயல்படு அமைப்புக் கருக்கோள்,

(2) மாறுநிலைக் கருக்கோள்,

(3) அட்டுறுக் கருக்கோள்.

செயல்படு அமைப்புக் கருக்கோள் என்பது, ஒரு வணிகம் காலவரையின்றித் தொழிற்பட்டுக்கொண்டிருக்கும் என்றும், கொடுக்கல் வாங்கற் கணக்கெடுத்து மூடிவிட வேண்டிய நோக்கமோ அவசியமோ இல்லை

யென்றும், முக்கியமான அளவுக்கு தொழிற்பாட்டு எல்லையினைச் சுருக்கிக்கொள்ளும் கருத்தோ இல்லையென்றும் கொள்ளுவதாகும். இக் கருக்கோள் இருப்புச் சொத்துக்களின் பெறுமான மதிப்பீட்டினைப் பாதிப்பதாகும், நடைமுறைச் சொத்துக்கள் தேறிய காசாக்கற் பெறுமானத்தில் கணிப்பிடப்படுகின்றது. நிலையான சொத்துக்கள் வரலாற்றுக் கிரயத்திலிருந்து தேய்மானம் கழித்துக் கணிக்கப்படுகின்றது.

மாறுநிலைக் கருக்கோளின் படிநிதி கூற்றுக்களைத் தயாரிக்கும்போது கணக்கீட்டுக் கொள்கைகள் அதாவது கையாளப்படுகின்ற மூலங்களும் முறைகளும் காலத்துக்குக்காலம் மாறாமல் ஒரே படித்தானவையாய் இருத்தல்வேண்டும். உருத்திரிபினைத் தவிர்த்துக்கொள்வதற்காகவும் ஒரு காலத்துடன் மற்றொரு காலத்தை ஒப்புநோக்கிப் பார்ப்பதற்காகவுமே இப்படிச் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு வணிகத் தாபனம் நிலையான சொத்துக்களுக்கு நேர்கோட்டு முறையிலே தேய்மான ஏற்பாடு செய்துவந்தால் அப்படியே தொடர்ந்து செய்தல்வேண்டும். மதிப்பிறக்கத்திற்கு ஏற்பாடு செய்யும் முறையினை மாற்றிக் கொண்டால் — எடுத்துக் காட்டாக குறை மீதி முறையினைக் கையாண்டால்—தேறிய முடிவு திரிபுபட்டு முந்திய ஆண்டுகளின் முடிவுகளுடன் ஒப்பு நோக்கிப் பார்க்க இயலாது போய்விடும்.

அட்டுறுக் கருக்கோளின்படி வருமானங்கள் ஈட்டப்படுகிறதென்றும் செலவுகள் இறுக்கப்படுகிறதென்றும், கொள்ளப்படுகிறது. ஒரு காலத்தில் ஈட்டிய வருமானத்தையும் இறுத்த செலவுகளையும் தொடர்புகொண்டே அதே கால நிதிக் கூற்றுக்களில் பதியப்படுகின்றன. குறித்த ஒரு காலத்திலே ஈட்டிய வருமானங்கள் யாவும், அக்காலவெல்லையிலே ஈட்டிய ஆனால் பெறப்படாத வருமானங்களும் கணக்கிலே சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. அதேபோல அக்காலவெல்லையிலே இறுத்த செலவுகளும், இறுத்த ஆனால் தீர்க்கப்படாதனவும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன.

பின்வருவன உட்பட பிறகருக்கோள்களும் உண்டு.

1. உருப்படிக்கருக்கோள் — ஒரு நிதியறிக்கை தயாரிக்கப்படும் பொழுது அது ஒரு தாபனத்தினை அல்லது தொழிற்பாட்டினைப் பற்றியதாகவே இருக்கும். உதாரணமாக ஒரு தனி வணிகர், ஒருகொம்பனி, ஒரு கூட்டுத் தாபனம் அல்லது ஒரு தாபனத்தின் கிளை போன்றவையாகும். அதேபோல் ஒவ்வொரு கணக்கீட்டு ஆவணத்தொகுதியும் ஒரு தொழிற்பாட்டினைப் பற்றியதாகவே இருக்கும். இக்கருக்கோளின்படி அப்பொருளாதார தொழிற்பாட்டினைச் சுற்றி ஓர் எல்லை இருக்கிறதாகப் பாவனை செய்யப்படுகிறது. இது குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்படும் சாதனங்களின் ஒரு சேர்க்கையாக, அதன் சொத்துக்களில் உரிமையாளர், முதலீட்டாளர், கடனாளிகள் முதலியோரின் உரிமையுடன் கருதப்படுகிறது. கணக்கீட்டு உருப்படியானது சட்டப்படியான உருப்படிகளுடன் கட்டாயமாக ஒத்திருத்தல்வேண்டும்என்ற நியதியில்லை.

2. கணக்குக்காலம் — பொருளாதார தொழிற்பாடுகளின் நிலைபேற்றுக் காலத்துக்கு எல்லை கூறமுடியாது. அவை தொடர்ச்சியாக நீண்ட காலங்கள் செயற்படுகின்றன. ஒரு உருப்படியின் தொழிற்பாடுமுடிந்த பின்பும் அந்த உருப்படி எவ்வகையான பொருளாதார தொழிற்பாட்டினைப் புரிவதை நிறுத்தியதின் பின்புமே அதன் உண்மையான பெறுபேற்றை அறியமுடியும் கட்டுப்பாட்டுக் காரணங்களுக்காகவும் சட்டப்படி செய்யவேண்டியவைகளுக்காகவும் தொழிற்பாட்டின் நிலைபேற்றுக்காலம் விருப்பப்படி காலங்களாகப் பகுக்கப்படுகின்றது. சாதாரணமாக நிதி அறிக்கைக்கு இது ஒரு வருடமாகும். இக்கருக்கோள் ஒரு கால எல்லையாக அமைகிறது.

3. நாணயமாற்று விலைக்கருக்கோள் — காசு ஒரு பொது அளவையாயும், மாற்று ஊடகமாகவும் இருப்பதனால் நடவடிக்கைகள் யாவும் அவை நிகழும் போதுள்ள மாற்று விலைகளின் அடிப்படையிலே பதிவு செய்யப்படுகின்றன. இக் கருக்கோள் காசு வாயிலாக ஒரு நடவடிக்கையின் அளவை ஏற்படுத்துகின்றது. கொடுக்கல் வாங்கல்கள் அவை நிகழும்பொழுது காசு வாயிலாக நிர்ணயிக்கப்பட்ட அளவைகளின் அடிப்படையிலே புத்தகங்களில் பதிவு செய்யப்படுகின்றன. இதனை வரலாற்றுக் கருக்கோள் எனவும் கூறலாம்.

4. சமத்துவ கொள்வனவு வலுக்கருக்கோள்—இக்கருக்கோள் காலத்துக்குக் காலம் காசின் பெறுமதி மாற்றமடைவதில்லை எனப் பாவனை செய்கிறது. நடவடிக்கைகள் காசின் முகப்புப் பெறுமதிப்படியே பதிவு செய்யப்படுகின்றன.

5. புறநோக்குக் கருக்கோள்—இந்த மரபொழுங்கின் கீழ் நிதியறிக்கைகள், சரிபார்க்கக் கூடிய சான்றுகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இயன்றவரை வரலாற்று விலைகளே உபயோகிக்கப்படல் வேண்டும். எடுத்துக்காட்டாக நிலையான சொத்துக்கள் கொள்விலையில் மொத்தத் தேய்மானம் கழித்தே காட்டப்படுகின்றன. தேறக்கூடிய பெறுமதிகளை நோக்காமலே இருப்புகளும் கொள்விலைகளிற் காட்டப்படுகின்றன. மதிப்பீடு தேவைப்படும் பொழுது அது கிடைக்கக் கூடிய சகல சான்றுகளின் அடிப்படையிலும் செய்யப்படல் வேண்டும். இது அறிக்கைகள் எச்சார்புமின்றி இருப்பதை இயலச் செய்யும். அப்படிப்பட்ட அறிக்கைகளை, அறிக்கையைத் தயாரித்தவரல்லாத தகுதிவாய்ந்த ஒருவர் தனிப்பட்ட முறையில் சரிபார்த்து ஆய்வு செய்யலாம்.

6. பாதுகாப்புக் கருக்கோள் (Conservatism) — இருக்கருக்கோளின் கீழ் உள்ளபடியான சொடுக்கல் வாங்கல்கள் பூர்த்தி செய்யப்படாமலிருந்து அல்லது பெறுபேறுகள் தெரியாமலிருந்து கணக்கீட்டுத் தேதியில் அவை மதிப்பிடப்படுவதற்கு இருக்கும் நிலைமைகளில் சாத்தியமான நட்டமொன்றிருந்தால் அந்த நட்டம் கணக்கிற்கெடுத்துக்கொள்ளப்படும். ஆனால் எந்த இலாபங்களும் கணக்கிற்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது. நட்டமானது பல பெறுமதிகளில் மதிப்பிடப்படுமிடத்து ஆகக்கூடிய பெறுமதித் தொகை தெரிவுசெய்யப்படும். அது இலாபமாக இருக்குமிடத்து ஆகக் குறைந்த பெறுமதி தெரிவுசெய்யப்படும். இது முன்மதிக் கருக்கோள் (Prudence Concept) எனவும் அழைக்கப்படுகின்றது.

7. வெளிப்படுத்துதல் – எந்த அறிக்கைகளிலும் அல்லது முதனிலையாக வெளியிடப்பட்ட நிதி அறிக்கைகளில், வெளிப்படுத்தப்படாமலிருந்தால் அறிக்கையைப்பற்றித் தவறுகப்புரிந்து கொள்ளும் நிலைக்கு இட்டுச்செல்லக் கூடிய முக்கியமான தகவல்கள் யாவும் வெளிப்படுத்தல்வேண்டும்.வெளியிடப்பட்ட அறிக்கைகள் தொடர்பிலான கம்பனிச்சட்டத்தின் தேவைகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

8. பொருட்கூற்றுக் கருக்கோள் — பிரதிநிதித்துவப்படுதலைத் திரிபுபடுத்தக் கூடிய அளவிலானவைகளும், மதிப்பீட்டினையும் தீர்மானங்களையும் பாதிக்கக்கூடியவைகளுமான விடயங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். உதாரணமாக கையிருப்புக்களின் பெறுமான மதிப்பீட்டுக் கொள்கையானது மாற்றப்பட்டு தேறிய பெறுபேற்றின் மீதான தாக்கம் கணிசமான அளவினதாகவிருந்தால் மதிப்பீட்டு அடிப்படை மாற்றப்பட்டதையும் அம் மாற்றத்தின் தாக்கம் பற்றியும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

இக் கருக்கோள்கள் யாவும் கணக்கீட்டின் அமைப்பிற்கான ஏற்பாடாகவும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளாகவும் அமைகின்றன. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்தக் கணக்கீட்டுக் கோட்பாடுகள் கணக்கீட்டுக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் முறையிலும் அக்கறை யுடையவர்களுக்கு நிதி யறிக்கைகளைச் சமர்ப்பிப்பதிலும் பின்பற்றப்படுகின்றன.

With the best Wishes
from

Ambal Trade Centre
129, Old Moor Street,
COLOMBO-12

With the best Compliments
from

ESESCEE (Ceylon) Ltd.
169, Second Cross Street,
COLOMBO-11
T'Phone : **29040**

With the best wishes from :

↓

Importers
&
General Merchants

↓

Wijaya Trading Agency
229, 5th Cross Street,
COLOMBO-11
Cables : **'Nagammal'**
Phone . **33864**

வித்தியோதயம் சிறப்புடன்
மலர
எமது வாழ்த்துக்கள்!

சகலவிதமான புடைவைத் தினுசுகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
வழங்குபவர்கள்

கணேஸ் ரெக்ஸ்ரைல்
81-83, பிரதான வீதி,
கொழும்பு-11

எமது நல்லாசிகள்!

உள்ளூர் விளைவுப் பொருட்கள் கூடிய கமிஷனுக்கு
விற்றுக் கொடுக்கப்படும்
அத்துடன்
உள்ளூர் அரிசி, நவதானியப் பொருட்களையும் தேவைக்கேற்பப்
பெற்றுக்கொள்ளலாம்.

ஆனந்தா ஸ்ரோர்ஸ் ❖ Anantha Stores
130, DAM STREET
COLOMBO-12
போன் : 26856

ROYAL DISPENSRY

ரோயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA

பொதுத்துறை நிறுவனங்களில் விலையிடற் கொள்கைகள்

கே. ஏ. முனசிங்க
B. Sc. (Econ.); M. A., Dip. in Dev. Admn.
பதில் பீடாதிபதி
வணிக, முகாமைக் கல்விப்பீடம்
வித்தியோதய வளாகம்

இக்கட்டுரையின் தலைப்பு பொதுத்துறை நிறுவனங்களில் விலையிடற் கொள்கைகள் சம்பந்தமானதாகும். பொருளியல் சார் முகாமைத்துவத்தின் ஒரு அம்சமாகவே விலையிடல் உள்ளது. எனவே இந்நிறுவனங்களின் ஏனைய பிரதானமான பொருளியற்கொள்கைகள் விலையிடலுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருப்பதனால் அவற்றிலிருந்து வேறு பிரித்து ஆய்வு செய்தல் இயலாததாகும். பொதுத்துறை நிறுவனங்களில் இயக்கத்தைப் பற்றிய மதிப்பீடு செய்வதற்கான பொருளாதாரக் குறிகாட்டிகளாகிய நிதி நோக்குகளும், நடாத்தலும், முதலீட்டு நிலைமை, விலையிடல் போன்றவைமீது அதிக கவனம் எடுக்கப்படுகின்றது. பொதுமக்களின் கண்ணோட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட கைத்தொழில்களும் பொதுக் கூட்டுத் தாபனங்களும் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களாக நோக்கப்படுகின்றன. எனவே தற்பொழுது இந் நிறுவனங்கள் அரச இயந்திரத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படாது பொதுமக்கள் உரித்தாகிய பாரிய தொழில் முயற்சியாகவே நோக்கப்படுகின்றன.

1960—70 ஆண்டுக் காலப்பகுதி பிரித்தானிய தேசியமயமாக்கப்பட்ட கைத்தொழில்களின் பிரதான வீருத்தி பற்றி ஆய்வு செய்கையில் லெனுட் ரிவி (Leonard Tivey) "தேசியமயக் கைத்தொழில்களின் இப்பத்தாண்டுக் காலம் பொருளியலாளர்களின் யுகம் எனக் கூறலாம்" என்றார். "இச் சிக்கனத் தன்மையில் விளக்கமும், புதிய வினையாண்மையும் உண்டாகியுள்ளது."[1] இவ்வாறான நிலைமை அதாவது

வினையாண்மை அதிகரிப்பு தேசிய பொருளாதாரத்தில் கூடிய பங்கினை பொதுத்துறை கட்டுப்படுத்தும் நாடுகளுக்கு ஒரு நல்ல நிலையை எய்துவதற்கு அறிகுறியாகின்றது.

பொதுத்துறை நிறுவனங்களில் விலையிடல் கொள்கையானது பொருட்களையும் சேவைகளையும் நுகர்வோருடனும், அரசாங்கத்துடனும் மாத்திரமன்றி முழுச் சமூகத்துடனும் தொடர்பு பட்டதாகும். பொதுத்துறை நிறுவனங்கள் ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும் நாடுகளில் இக் கொள்கையானது, வாழ்க்கைச் செலவு, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதனால் பாதீட்டுக் கொள்கைகள் போன்று முக்கியத்துவம் பெறுகின்றன.

தனியார்துறை நிறுவனங்களால் அல்லது பொதுத்துறை நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளின் விலைகள் அவற்றின் ஆக்கச் செலவுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். ஆக்கச் செலவானது நிறுவனத்தின் பருமன்சார் அளவுசார் இயக்கத்திலும், கொள்ளளவுப் பயன்பாடு போன்றவற்றிலும் தங்கியுள்ளது. பொருட்கள் சேவைகளின் தன்மையும் அவற்றிற்கான கேள்வியும் பிரதான காரணிகளாகும். இக் கட்டுரையின் பிரதான பகுதிகளில் இவ்வெண்ணக்கருபற்றி ஆய்வு செய்யப்படும்.

ஒரு தொழில் நிறுவனத்தை வைத்து பொதுத்துறை நிறுவனங்களின் விலையிடல் கொள்கைகளைத் தீர்மானிக்க முடியாது. அவை நாட்டின் முழுப் பொருளாதாரத்துடன் தொடர்பு படுத்தியே நோக்கப்படல் வேண்டும். அத்துடன் எந்தவொரு நாட்டிலும் பொருளாதாரப் பாங்கு, பொதுத்துறையின் ஒப்பீட்டளவிலான பருமன், தேசியப் பொருளியற் கொள்கைகள் சமூக, அரசியல் நிலைமைகள் என்பன கவனத்திற் கொள்ளப்படல்வேண்டும்.

இக் கட்டுரையில் இப் பொருளை முழுவதாக ஆய்வு செய்ய முடியாமல் இருக்கின்றது. இக் கட்டுரையில் தொடர்பட்ட பிரதான அம்சங்கள் இடம்பெறுகின்றன.

எண்ணக்கருக்களும் கொள்கைகளும்

விலையின் முக்கியத்துவம் :

பண்டங்களினதும் சேவைகளினதும் பெறுமதியை அளவிடும் கருவியாக விலை இருக்கின்றது. விலை பண அலகிலேயே அளவிடப்படுகின்றது. கட்டில்லா நிறுவன அமைப்புக்களில் கேள்வி, நிரம்பல் ஆகியவற்றினால் சந்தை விலை நிர்ணயிக்கப்படுகின்றது. இவ் விலைகளே பொருளாதாரத்தில் காரணிகளின் உத்தம பங்கீட்டினைத் தீர்மானிக்கின்றது. விலைகள் வேறு காரணங்களுக்காகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். சார்விலைகள் பங்கீட்டின் மீதுபாதிப்பினை ஏற்படுத்துகின்றன, பொது விலைமட்டமானது மக்களின் வாழ்க்கைத் தரத்தை நேரடியாகப் பாதிக்கின்றது.

கட்டில்லாச் சந்தையில் ''மறைக்கரம்'' ஆனது பொதுத்துறை நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களினதும் சேவைகளினதும் விலைகளைத் தீர்மானிக்க மட்டாது. பொதுத்துறை நிறுவனங்களில் விலைகள் பொருளியல் சார் சிக்கன விலைகள் அல்லது அவை முகாமைசெய் விலைகளாகும். வேறு விதத்தில் கூறப்புகின் பொதுத்துறை நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களினதும் சேவைகளினதும் விலைகள், கேள்விநிரம்பல் ஆகிய பெயரளவு விசைகளினால் தீர்மானிக்கப்படுவதில்லை. ஆனால் வெவ்வேறு சந்தர்ப்பத்தைப் பொறுத்து வெவ்வேறு முறையில் தயாரிக்கப்படும். ஆனால் விலைத் தீர்மானத்தில் எக்காரணி முதலுக்கு கொடுத்த தென்பதும் கூறப்பட்டது. ஆனால் இவ்விலைகள் எவ்வடிப்படையில் தீர்மானிக்கப்படுவ தென்பதும், யாரால் இடப்பட்ட தென்றும் அறிதல்வேண்டும்.

விலை தீர்மானித்தலில் உள்ள அடிப்படைகள் :

கடந்தகாலத்திலும், தற்காலத்திலும் விலையிடல் பற்றி ஒரு முரண்பாடான கொள்கைகள் உள்ளன. அதாவதுபொதுத் துறை நிறுவனங்களால் உற்பத்தி செய்யப் படும் பொருட்களும் சேவைகளும் பொரு வியல், வர்த்தக ரீதியாக விலையிடப்படல் அல்லது விலையிடலானது சமூக, அரசியல், தேசிய ஆர்வம் சார்ந்ததாக இருத்தல் வேண்டுமா என்பதில் வேற்றுமை உள் ளது. அத்துடன் யார் விலையிடலைத் தீர் மானித்தல் வேண்டுமென்பது பற்றியும் தீர்வு காணப்படாத பிரச்சினை உளது. பொதுத்துறை நிறுவனங்களின் விலையிடல் பற்றிய பொறுப்பு அரசாங்கத்திடம் இருத் தல் வேண்டும் எனவும், இந் நிறுவனங் களை நடாத்தும் முகாமையினால் செய்யப் படல் வேண்டும் என்பது பற்றியும் கருத் துக்கள் உள்ளன. இதைவிட தேசிய விலை யிடல் அதிகாரசபையே விலையிடலைச் செய்ய வேண்டும் எனவும் கருத்து நிலவு கிறது.

விலை ஊக்குவித்தல் பொறிமுறை :

தனியார்துறை நிறுவனங்கள் தமது நிதிசார் நோக்கங்களை எய்துவதற்கு விலையே பிரதானமான முறைகளில் ஒன் றாகக் கருதப்படுகின்றது. சாதாரணநிலை யில் தமது இலாபங்களை உச்சப்படுத்தும் முறையிலேயே தனியார்துறை நிறுவனங் கள்விலையைத் தீர்மானிக்கின்றன. ஆனால் சில நிறுவனங்கள் சமூகத் தேவைகளையும் நிறைவேற்றமுனைகின்றன. நோக்கங்களைப் பொறுத்து தனியார்துறை பொதுத்துறை நிறுவனங்களுக்கிடையில் வேறுபாடுகளைக் காட்டுதல் அவசிமானதாகும். ஒரு தனி யார்துறை நிறுவனத்தின் நோக்கங்கள் அதன் அகத்திலிருந்து தோற்றுவிக்கப்பட் டதாக இருக்கும், ஆனால் பொதுத்துறை நிறுவனங்களில் அவ்வாறல்ல. போட்டிச் சந்தை திறனாக இயங்குமிடத்தில், ஒரு சாதாரண போட்டிக்குள் உள்ளாகி இருப் பின் விலையிடல் பற்றிய பிரச்சனைகள் அதிகம் தோன்று. ஆனால் தனியுரிமைக் கான நிலைமைகளை அனுபவித்துக்கொண் டிருக்கும் அதிகமான பொதுத்துறைபற் றியே தொடர்ந்த ஆய்வுகள் செய்யவேண் டியுள்ளன.

தனியார்துறைத் தனியுரிமையாளன் தனது இலாபத்தை உச்சப்படுத்தும் நிலை மையைப் பொறுத்து விலையை உயர் வாகவோ அல்லது குறைந்ததாகவோ தீர் மானித்துக்கொள்வான். ஆனால் பொதுத் துறை நிறுவனங்களில் விலை ஊக்குவிப்பு முறையைப் பொதுமையாக்கம் செய்வது இலகுவான காரியமல்ல. அதிகமான நிறு வனங்களில் "அரசாங்கத்தின் தீர்வுகளின் அடிப்படையிலேயே இலாப இலக்குகள் நிலைகொள்ளச் செய்யப்படுகின்றன".[1]

சட்டமுறை தீர்வுகளுக்கான தேவை யான வருமானத்தை உழைப்பதற்காக மட்டும் விலையிடல் தொழிற்பாடு இருத்தல் ஆகாது என்பது எடுத்துக்காட்டப்பட வேண்டியதாகும். திறனான உற்பத்திக்கு வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கு வழங்கு வதற்கு விலையிடப்படின், பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் கேள்வியுள்ள இடத்திற்கு அதாவது தமது திறனான பங்களிப்பைச் செய்யுமிடத்திற்கு வளங்களைக் கவர்தல் வேண்டும்.

உயர் விலையை நிலைநிறுத்துவதற்கு சார்பான காரணிகளில் சரியான போட்டி யில்லாமையும் நுகர்வோருக்கிடையில் பதட்டநிலை யுருவாகக்கூடிய நிலை ஏற்படு வதனால் அரசாங்கத் தலையீடும்அமைகிறது. அத்துடன் எல்லாப் பொதுத்துறை நிறுவ னங்களும் தேசியமயமாக்கல் மூலம் உரு வாக்கப்பட்டவையும் அல்ல. பொதுத் துறை நிறுவனங்களில் சில மறைமுகமான திரும்பல்களை அடிப்படையாகக்கொண்டு நேரில் திரும்பல்கள் குறைந்த விலையிடலை நிலைநிறுத்துவதற்கான வர்த்தகம்சார் தீர் மானமாக எடுக்கப்படுகின்றது. இது பொருளாதார, வர்த்தகம்சார் தீர்மானங் களுக்கு மேலாக சமூக, அரசியல் தீர்

மானங்கள் மேற்செல்லும் அபிவிருத்தி குறைந்த நாடுகளில் காணப்படுகின்றது.

கேள்வி நிலைமை:

பண்டங்களினது சேவைகளினதும் கேள்வித் தொகையானது அவற்றின் விலையோடு தொடர்புபட்டதாகும். முற்தீர் மானமான நிதிசார் நோக்கங்களை அடையும் நோக்கத்துடன் அதி உயர்விலை உற்பத்திகளுக்கு இடப்படின் அது கேள்வியைத் தாழ்வு அடையச் செய்வதுடன் தொழிலில் வேலையின்மையையும், கொள்ளளவு பயன்படாதிருத்தலும் ஏற்படுகின்றது. உற்பத்திப் பண்டத்திற்கான கேள்வி நெகிழ்ச்சியற்றதாக இருக்கும் போதே உயர்விலைகளை நிலைநிறுத்தலாம். எனினும் இது நுகர்வோரைச் சுரண்டும் நிலையை ஏற்படுத்துகிறது. ஆனால் குறைந்தவிலையானது கேள்வியை அதிகரிக்கச் செய்து தொழிலை அதிவிரிவாக்கம்செய்யத் தூண்டுவதனால் பொருளாதாரத்தில் மூல வளங்களின் ஒதுக்கல் செய்வதைச் சீர்குலையச் செய்கின்றது.

இலாபமும் விலையும்:

இலாபத் தன்மையும் விலையிடலும் ஒன்றிணைந்ததாகஉள்ள அம்சமாகும். விலைகளுக்கும் இலாபத்திற்கும் நேரடித் தொடர்பு இருப்பது போன்று உடன் நோக்கும்போது புலப்படும். அதாவது இலாப இலக்கு அதிகமாக இருக்கும் போது விலை அதிகமாக இருக்கும் என்பதாகும். ஆனால் ஒரு நிறுவனத்தின் கேள்வி நிரம்பல் நிலைகளைப் பொறுத்து வெவ்வேறு மாற்றீடான விலைமட்டங்களில் ஒரு குறித்தளவு இலாபத்தினைப் பேணும்வகையில் விலையிடல் செய்யலாம். அல்லது வெவ்வேறு சந்தைகளுக்கிடையில், நுகர்வோர்களுக்கிடையில் விலை பேதப்படுத்தலை நடைமுறைப் படுத்துவதன் மூலமும் தீர்மானித்த இலாப மட்டத்தை எய்தலாம். வினைத்திறனற்ற அதிகரித்த ஆக்கச் செலவினாலும் உயர் விலைகளிலும் குறைந்த இலாபத்தையும், உயர்மட்ட முகாமைத்துவ வினையாண்மையால் அதிகரித்த உற்பத்தியினாலும் குறைந்த விலையில் கூடிய இலாபத்தையும் எய்தும்.

இது பொதுத்துறை நிறுவனங்களில் ''திட்டமிடப்பட்ட இலாபம்'' என்பது பற்றிய பிரச்சினைக்கு இட்டுச் செல்கின்றது. இலாபத்திற்கான உயர்மட்டம் எதுவென நியமப்படுத்தப்படாத நிலையிலும் பொதுத்துறை நிறுவனங்கள் இலாபம்உழைத்தலைச் செய்யவேண்டியுள்ளன. எனவே இலாபத்தை உழைப்பதற்கு அதன் சிக்கன விலையிலும் கூடிய விலைக்கே விற்கப்படவேண்டி யுள்ளது. சிக்கன விலையானது ஆக்கச் செலவையும், பெறுமானத் தேய்வு, விரிவாக்கம், பராமரிப்பு ஆகிய செலவுகளையும் தீர்க்கக் கூடியதாக மட்டுமே அமையும். "இலாப விலையிடல் கொள்கை" பற்றிய சார்பான வாதமானது தனியார் துறை நிறுவனங்கள் இலாபத்தைஉழைத்து பங்குதாரர்களுக்குப் பகிர்வு செய்வது போல பொதுத்துறை நிறுவனங்கள் இலாபத்தை உழைத்து வேறு எங்காவது முதலீடு செய்யக் கூடாது என்ற கேள்வி எழுகின்றது. சோவியத் சமவுடைமைக் குடியரசில் பொதுத்துறை நிறுவனங்கள் தமது இலாபத்தினை தேசிய பாதீட்டிற்கும் வழங்குகின்றது.

கிரயமும் விலையும்:

விலையை தீர்மானிப்பதில் பிரதான மூலகமாக பண்டங்களினதும் சேவைகளினதும் கிரயம் அமைந்துள்ளது. மூல வளங்களின் திறனான பயன்பாட்டைப் பெறுவதற்கு விலைகள் கிரயத்துடன் தொடர்புபடுத்தப்படல் வேண்டும். ஆனால் சில சந்தர்ப்பங்களின் தேசிய நலன் கருதிப் பொதுத்துறை நிறுவனங்கள் பண்டங்களினதும் சேவைகளினதும் உண்மைக் கிரயத்திலும் குறைவாக விலையிடப்படும். நீண்டகால அடிப்படையில் இவ்வாறு ஏன் விலையிடப்படுவதில்லை என்பதற்கு காரணங்கள் உண்டு. பின்வருவன சிலகாரணங்களாகும். முதலாவதாக, இவ்வாறு செய்தல் பண

வீக்க நிலைமைக்கு இட்டுச்செல்லும். வேறு முறைகளில் ஈடுசெய்யப்படாவிடின் இக் குறைபாடானது பணவீக்கத் தாக்கத்தை ஏற்படுத்தும். இரண்டாவதாக, விற்பனை விலைகள் கிரயத்திலும் குறைவாக இருப் பின் அதிகவரி செலுத்தவேண்டி ஏற்படும். மூன்றாவதாக, விலையினால் கிரயமானது மீட்கப்படாவிடின் அதாவது பண்டங்களும் சேவைகளும் நட்டத்தில் விற்கப்படின் தொழில் நிறுவன அதிவிரிவாக்கத்திற்கு இட்டுச்செல்லும்.[2] நான்காவதாக வர்க்க ரீதியில் நுகர்வோருக்கு உதவிப்பணம் வழங்குவது தவறானதாகும். கடைசியாக, இவ்வாறான விலைக்குறைப்பானது ஏழை நாடுகளில் அத்தியாவசியப் பண்டங்களி னதும் சேவைகள் மீதும் அதிகம் தாக் கத்தை ஏற்படுத்துவதில்லை.

பொதுவாக விலைகள் கிரயத்தின் அடிப் படையிலேயே தொடர்பு படுத்தப்படு கின்றதாயினும் சிக்கனக் கிரயத்தைக் கணிப்பதனாலும் கிரயத்தைக் கணக்கிடுத லிலும் பல நுட்ப பிரச்சினைகள் இருக்கின் றன. நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் கிரயங்கள் இருப்பினும் விலைகள் மொத் தக் கிரயத்தைத் தீர்க்கக்கூடிய முறை யில் அமைந்திருக்கின்றன.

எல்லைக் கிரய விலைகள்:

பொருளியலாளர்களுக்கிடையில் விலை கள் கிரயத்துடன் தொடர்புபடுத்தப்பட வேண்டுமென்ற அம்சத்தில் ஒருமைப்பாடு காணப்படுகின்றது. பொதுத் துறையில் தொழில்கள் எவ்வகையான கிரய முறை யானது விலையிடலுக்குப் பொருந்தமானது என்பதுபற்றி திட்டவட்டமான அபிப் பிராயங்கள் பொதுவாக இல்லை. ஒரு சாரார் எல்லைக் கிரயத்தின் அடிப்படை யிலேயே விலையிடவேண்டும் என்று கூறு கின்றனர். ஆயினும் எல்லைக் கிரயத்தை அளவிடுதல் சம்பந்தமாகவும் விலைகள் குறுங்கால அல்லது நீண்டகால எல்லைக் கிரயத்தில் அல்லது அதன் அடிப்படையில் அல்லது அதைப் பிரதிபலிக்கும் வகையில் அல்லது அதோடு தொடர்புபடுத்தப் பட்ட வகையில் இருக்க வேண்டும் என் பது பற்றி பல கருத்துக்கள் காணப்படு கின்றன.

நிறைபோட்டி நிலைமைகளில் எல்லைக் கிரயம் விலைக்குச் சமமாகும். தூய தனி யுரிமை நிலைமைகளில் எல்லைக் கிரயமா னது எல்லை வருமானத்திற்குச் சமமாகும். இது விலையிலும் குறைவானதாக இருக் கும். இரு நிலைமைகளும் இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு நிலைமைகளை காட்டுகின்றது. பெரும்பாலான பொதுத் துறை நிறுவனங்கள் தனியுரிமையை அண் மித்ததாக இருப்பினும் இலாபத்தை உச் சப்படுத்துவதை எதிர்பார்ப்பதில்லை. எல் லைக்கிரய விலைகளானது மூலதன ஒதுக்குக் களைத் திறனாக ஊக்கிவிப்பதும், உற்பத் திக் காரணிகளை உச்ச அளவில் பயன் படுத்தவும், உற்பத்தி நிலையை உத்தம நிலையில் வைத்திருக்கவும் செய்கின்றது.

நடைமுறையில் எல்லைக் கிரய முறை யானது பல பிரச்சினைகளுடன் சம்பந்தப் பட்டதாகும். மூலவளங்களை உத்தம அள வில் ஒதுக்குவதற்கு முழுப் பொருளாதா ரத்திலும் எல்லைக் கிரயத் தத்துவம் பயன் படுத்தப்பட வேண்டும். கலப்புப் பொரு ளாதாரத்தில் தூய்மையில் நிறை போட்டி தனியார் துறையில், இந்நடவடிக்கையை எதிர்பார்க்க முடியாது. எல்லைக் கிரய நிலையிலும் நுகர்வோர்களுக்கு உற்பத் திக்குத் தேவையான வழங்கலின் விரயத் திற்குத் தேவையான மேலதிக பண்டங்க ளும் சேவைகளும் வழங்கப்படுவதில்லை. ஆயினும் இந்நோக்கம் மின்வலு, வாயு, போக்குவரத்து பாரிய மேந்தலைக் கிரயங் களையுடைய தொழில் முயற்சிகளினால் எய்தப்பட முடியாததாகும். உதாரண மாக மின்வலுத் தொழிலில் மின்வலுவுக் கான உயர்வுக் கேள்விகளை அடிப்படை யாகக் கொண்டே மின் ஆக்கிகளின் அளவு தேவைப்படுகின்றது. உயர்வு நேரங்கள் தவிர்ந்த நேரங்களில் பொறிகள் மேலதிக

மாக இருக்கின்றமையால் மேலதிக அலகுகளை உற்பத்தி செய்வதற்கான கிரயம் மிகவும் குறைவாக இருக்கும். இக் கிரயத்தின் அடிப்படையில் வரிகள் இடப்படின் இத்தொழிலானது வருமான குறைபாட்டைக் கொண்டிருக்கும். அதுபோன்று அதிகரித்த கிரயத் தொழில்களில் எல்லைச் செலவுமுறையிடலானது அதிக மிகையைக் கொண்டுவரும். பல் உற்பத்தி நிறுவனங்களில் ஒவ்வொரு உற்பத்திக்கும் எல்லைக் கிரய முறையைக் கடைப்பிடிப்பது பல பிரச்சனையைக் கொண்டுவரும்.

சராசரிக் கிரய விலையிடல்:

மேந்தலைக் கிரயத்தை அடக்கிய சராசரிக் கிரயத்தின் அடிப்படையில் எல்லா நுகர்வோருக்கும் ஒரே விலையே இடப்படுகின்றது. இம் முறையானது பெரும்பாலான நாடுகளின் தபாற்சேவையில் பயன்படுத்தப்படுகின்றன. எல்லைக் கிரயத்தின் அடிப்படையில் எல்லைக் கிரய விலையிடலில் நுகர்வோர் அலகுக்கான முழுக் கிரயத்தையும் வழங்குகின்றுன். இம்முறையில் சாதாரண இலாபத்துடன் உற்பத்திக் கிரயம் முழுவதும் கிடைக்கின்றது.

ஆனுல் பொருளாதார ரீதியில் நோக்கும்போது இம்முறை அதிகமான கைத்தொழில்களில் பிரயோகிக்கப்படும்போது பல தாக்கங்களைக் கொண்டுவரும். இதில் பிரதான பிரச்சினையாக உள்ளீடுகளின் கிரயத்தைச் சரியாகக் கணிப்பீடு செய்வதில் ஏற்படுகின்றது. இவ்விலையிடல் முறையில் மிகைக் கொள்ளளவு ஏற்படுவதும் இயக்கலின் வினையாண்மையின்மையும் உண்டாகும். அதிகமான தொழில்களில் ஒவ்வொரு நுகர்வோருக்கும் பண்டங்களையும் சேவைகளையும் பங்கீடு செய்வதற்கான செலவுகளில் வேறுபாடு ஏற்படுகின்றது. எனவே ஒரே விலையிடப்படுதல் சமமற்ற தன்மையைக் காட்டுவதுடன் மூலவளங்களின் பிழையான பங்கீட்டிற்கும் இடம் வகுக்கும். மின்வலு ஆக்கத்தை உதாரணமாகக் கொள்ளும்போது உயர் உற்பத்தி நேரங்களில் கிரயமானது உயர்வற்ற உற்பத்தி நேரத்திலும் உயர்வானது. இரு முறைகளுக்கும் சம விலையை இடும்போது அது "மானிய விரயமும் வரியிடல் பொருளாதாரமும்" (Subsidizing extravagance & taxing Economy) ஆகும்.[4]

கிரயத்துடன் இலாபத்தையும் சேர்த்து விலையிடல்:

இம் முறையில் அலகுக்கான கிரயத்திற்கான மதிபீடுகளுடன் இலாப வீதமொன்றும் இடப்படும். சில சமயங்களில் கிரயத்தின் ஒரு பகுதி கணிக்கப்பட்டு விற்பனைக்காக உள்ள விலைக்குறிப்பில் மீதி மதிப்பிடப்படாத கிரயம் அடககப்படும்.

கடைசி முறையானது வினையாண்மை இணைக்கப்படமுடியாமல் அதாவது நிறுவனத்தின் ஆரம்பகாலப் பகுதியில் பிரயோகிக்கப்படும். இம் முறையானது வரையறுத்த இந்தியத் தொலைபேசி தொழிலகத்திலும், வரையறுக்கப்பட்ட இந்துஸ்தான் வானூர்தி நிறுவனத்திலும் பயன்படுத்தப்படுகின்றது. இம்முறையானது இலங்கையில் உள்ள கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில் ஒரு விசாரணைக் குழுவிற்கு முன் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சாட்சியமளிக்கையில் "விலைகள் உற்பத்திக் கிரயத்துடன் பொருத்தமான எல்லை இலாபத்துடன் சேர்த்தே நிர்ணயிக்கப்படுகின்றது. இலாபத்தை உச்சப்படுத்தல் விலையை வழிநடத்தும் காரணியாக அமைக்கப்படுவதில்லை."[5]

இம் முறையானது உற்பத்திக் கிரயத்தை செம்மையானதாகக் கணிப்பதற்கான இலகு முறையாகும். ஆனுல் எந்தக் கிரயத்திற்கு எல்லையைச் சேர்த்தல் என்பது பற்றிய பிரச்சினை எழுகிறது. இம் முறை மூலம் உற்பத்திக் கிரயம் முழுவதும் பெறுவதற்கேற்றதாக இருப்பதனுல் வினைத்திறனின்மையால் ஏற்படும் கிரயம் இதனுல் பெற்றுக்கொள்ளப்படுகிறது. இம்முறையை

நீண்ட காலத்திற்குப் பயன்படுத்துவதாயின் கிரய வினையாண்மை பற்றி மிகவும் விரிவான பரிசோதனை இருத்தல்வேண்டும்.

"இலாபமின்மை", "நட்டமின்மை" விலையிடல்:

பேராசிரியர் ஆர்தர் லூயிஸின் கூற்றுப்படி பொதுத்துறை நிறுவனங்கள் இலாபமின்மை அல்லது நட்டமின்மையில் இயங்குவதாயின் எல்லாச் செலவினங்களின் இரு அடிப்படைகளில் தங்கியிருக்கும் என்பதாகும். இம்முறையானது ஒன்றில் பணவீக்கநிலைக்கு அல்லது பணச்சுருக்க நிலைக்கு இட்டுச்செல்லும். ஒரு பொதுத்துறை நிறுவனமானது மூலப் பொருட்கள் சேவைகள் என்பவற்றிற்குக் கொடுப்பனவு செய்வதன்மூலம் பணத்தைப் பணச்சுற்றோட்டத்தில் விடுகின்றது. பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் விலை அறவிடுவதன் மூலம் பணச் சுற்றோட்டத்தில் இருந்து பணத்தை நீக்குகிறது. வேறு ஏதாவது பொருளியல் முறையினால் சரிசெய்யப்படாவிடின் இக் குறைபாடு பணவீக்க நிலைமைக்குள்ளாக்கும். அதுபோல மிகையானது சுருக்கநிலைமையை உண்டாக்கும். எனினும் மிகை நிறுவனங்களும் குறைநிறுவனங்களும் இவற்றினால் பணச்சுற்றோட்டத்தில் ஏற்படும் தாக்கத்தினை இல்லாமல் செய்யலாம்.

இவ்வாறாக உற்பத்திக் கிரயம் தீர்க்கப்படுவதற்கான காரணங்களில் ஒன்று பொதுத்துறை நிறுவனங்களின் மிகை அல்லது குறை விரிவாக்கத்தைத் தடுப்பதற்காகும்.

ஐரிஷ் மின் வழங்கல் சபையானது சட்டத்தின்மூலம் சமநிலைப்புள்ளி நிலையை யடையும்படி கேட்கப்பட்டது. அத்துடன் பிரித்தானியத் தேசியமயக் கைத்தொழில்கள் 5 வருட காலத்தில் தமது கணக்குகளைச் சீர்படுத்தவேண்டும் என்பது உத்தியோக பூர்வமான கொள்கையாகும்.

பொதுப்பயன்பாட்டுத் தொழில்களைத் தவிர வேறு தொழில்களில் இம்முறை ஏற்கப்பட்டுள்ளன. பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கும் மிகைகள் அவற்றின் விஸ்தரிப்பிற்கு நிதி அளிக்கவும் வேறு திட்டங்களில் மீள முதலீடு செய்யவும் பயன்படுத்தப்படல்வேண்டும் என்பது பொதுவானதொரு அபிப்பிராயமாக இருக்கின்றது.

விலை பேதப்படுத்தல்:

தேர்வு முறை நுகர்வை ஊக்குவிக்க அல்லது பின்னடையச் செய்யும் நோக்குடன் விலை பேதப்படுத்தல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இம்முறை இலாபத்தை உச்சப்படுத்தும் நோக்குடன் தனியார்துறை தனியுரிமையாளன் நடைமுறைப்படுத்தும் விலை பேதப்படுத்தலில் இருந்து வேறுபட்டதாகும். நுகர்வுக்காகவும், முதலீட்டிற்காகவும் பயன்படுத்தப்படும் பண்டங்கள், சேவைகள் மீது இம்முறைதிறனாகப் பிரயோகிக்கப்படுகின்றது. உதாரணமாக கரி, கனிஜ எண்ணை, மின்வலு ஆகியவை இரு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. நுகர்விற்காகவும், உற்பத்திக்காகவும் எடுக்கப்படும் பண்டங்களில் நுகர்விற்குக் கூடிய விலையும் உற்பத்திக்குக் குறைந்த விலையும் அறவிடப்படுகின்றது. அதிகமான நாடுகளில் புகையிரதக் கட்டணங்களில் விலை பேதப்படுத்தல் நடைமுறையில் காணப்படுகின்றது.

பொதுக் கூட்டுத்தாபனங்கள் பல் வேறு காரணங்களுக்காக மானியமளிக்கப்பட்ட விலைகளை இடுகின்றன. இலங்கை உரயாக்கம் ஒரு எடுத்துக்காட்டாகும். வரையறுத்த இந்துஸ்தான் கப்பல்கட்டும் துறை நிறுவனங்கள் ஐ. இராச்சிய விலையுடனான நாணயமாற்று வீதத்தைப் பேணும் நோக்குடன் அரசாங்கத்தினால் மானியமளிக்கப் படுகின்றது. இப் பகுதி

யின் கடைசியில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மானியத்திட்டம் பற்றியும் ஆய்வு செய்யப்படும்.

பொதுத்துறை நிறுவனங்களில் விலையிடலுக்கு திட்டவட்டமான விதிகள் எவையும் பின்பற்றப்படுவதில்லை. விலையிடலானது கூடியளவில் நிறுவனத்தின் நிதிசார் நோக்கத்தை உற்பத்திசெய்யப்படும் பண்டங்கள் சேவைகளின் வகையை பொருளாதாரத்தின் தன்மை, அரசாங்கத்தின் சமூக அரசியல் நோக்கங்களைச் சார்ந்ததாகவே இருக்கின்றது. எனவே பொதுத்துறை நிறுவனங்களில் இவற்றுள் அதிஉயர்வாக எந்த ஒரு கொள்கையையும் வைக்கமுடியாது. பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படின் ஒரு ஒன்றித்த கொள்கை யொன்றினை எழுத்தாளர் ஒருவர் முன்வைத்திருக்கின்றார்:

(1) சமமான கேள்வியும் நிரம்பலும் இருத்தல் வேண்டும்.

(2) முழு உற்பத்திக்கிரயமும் பெறப்படுவதுடன் மூலதன மீட்பிற்கு மற்றைய தனியார்துறை நிறுவனங்கள் பெறுவது போன்று ஓரளவான திரும்பலும் இருத்தல் வேண்டும்.

(3) பொருளாதாரம் முழுவதிலும் மொத்த உற்பத்திக் கிரயமும் பங்கீட்டுச் செலவும் குறைக்கப்படல் வேண்டும்.

(4) அருமையான மூலவளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

(5) காரணி வருமானத்தைச் சமமாகப் பங்கிட உதவுதல் வேண்டும்.

கொள்கை அமுலாக்கம்:

முகவுரை:

விலையிடல் கொள்கையானது ஏனைய பொருளாதார, நிதிக் கொள்கைகளுடன் தொடர்பு பட்டமையால் அவற்றிலிருந்து வேறு பிரித்து ஆய்வுசெய்தல் சாத்தியமில்லை. அத்துடன் அவை அரசாங்கத்தின் சமூக, அரசியல், வர்த்தக நோக்கங்களுடனும் தொடர்புடையதாகும்.

இத்துடன் தொடர்புபட்ட பிரதான பிரச்சினை நிதிநோக்கம் சார்ந்ததாகும். அதாவது முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் திரும்பப்பெறுகை வீதம், முதலீட்டு முறை, விலையிடல் என்பதாகும். பிரித்தானிய அதிகார மையங்கள் கடந்த இருபது வருடங்களாக சுற்றிக்கொண்டிருக்கும் இப் பிரச்சினைகளுக்கு தேசியமயக் கைத்தொழில்களில் கொள்கைகளை உருவாக்க முனைகின்றனர். ஆனால் வேறுபாடுகள் தொடர்ந்து செல்கின்றன.

பொதுத்துறை நிறுவனங்கள் ஒரு குறித்த தேவைக்காக திறனாக இயங்க வேண்டுமாயின் அந் நிறுவனங்களுக்கு தீர்க்கமான கொள்கைகளும் நோக்கங்களும் இருத்தல் வேண்டும். ஆயினும் நோக்கங்கள் எவை, நோக்கங்களை உருவாக்குபவர் யார் என்பதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. நோக்கங்கள் வரையறுக்கப்பட்டவுடன் அதை அடைவதற்கான பொறுப்பு நிறுவனத்தின் முகாமைச் சபையினால் தாங்கிக்கொள்ளப்படும்.

பொறுப்புவாய்ந்த அமைச்சரே பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் நிறுவனத்தைத் திறனாமுறையில் நடாத்துவதற்குப் பொறுப்புடையவர் ஆகிறார். பொதுப்பணமே இம் முயற்சிகளில் ஈடு படுத்தப்பட்டிருக்கின்றது. எனவே அரசாங்கம் இந்நிறுவனங்களின் விவகாரங்கள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும். எனவே தர்க்கரீதியாகப் பார்க்குமிடத்து நோக்கங்களை வரையறை செய்வது அரசாங்கத்தின் ஒரு தொழிலாகவே அமைகின்றது.

அதிகமான நாடுகளில் சட்ட ஏற்பாடுகளும் நெறிப்படுத்தல்களும் இந் நிறுவனங்களின் முகாமையாளர்களுக்குச் சரியான வழிகாட்டியாக அமைவதில்லை.

திட்டவட்டமான நடைமுறைகள் நிதி ஏற்பாட்டில், முதலீட்டின் கணியமும் இயல்பும், விலையிடல், உற்பத்தி ஆகியவற்றில் தெளிவானதாக இருப்பின் முகாமையானது கட்டளைகளை நடாத்தியுள்ளதா இல்லையா என்பதை மதிப்பீடு செய்வதும் ஒழுங்குபடுத்துவதுமே பிரச்சினைகளாக அமைகின்றன. ''போர்ட் நிறுவக'' வல்லுநரான J. O. உதோஜி பின்வருமாறு கூறுகின்றார் :

''சில கூட்டுத்தாபனங்கள் தமது நோக்கங்களை அடையாமல் இருப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. கூட்டுத்தாபனங்கள் நோக்கங்களைப் பற்றிக் கூறும் போது..... அவற்றின்நோக்கங்கள் எவையும் திட்டவட்டமாக வரையறுக்கப்படுவதில்லை. நோக்கங்களை எய்துதல் இலாபத்தன்மையுடன் எப்பொழுதும் இணங்க வேண்டியதில்லை. சமூகவுடமை பொருளாதாரத்தில் இலாபம் உழைக்காது நோக்கங்கள் எய்தப்படுகின்றது,

அவ்வாறான நோக்கங்கள் இருக்குமாயின் அது தெளிவாக எடுத்துக்காட்டப்படல் வேண்டும். அரசாங்கம் கூட்டுத்தாபனங்களை என்ன செய்யவேண்டுமென்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்து வைத்திருப்பதில்லை. திட்டமிடல் காலவல்லை பூராவும் பொறுப்புவாய்ந்த அமைச்சினால் குறிப்பானதும், தெளிவானதுமான கணிய இலக்குகளாக, சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் பரிவர்த்தனை செய்யப்படல்வேண்டும்.''[7]

நிதி நிறைவேற்றுகைகள் :

நிதிசார் நோக்கங்கள் பொதுத்துறை நிறுவனங்களைப் பொறுத்தளவில் தெளிவாக்கப்படுதல் வேண்டும். அவை முகாமைக்கு ஊக்குவிப்பாகவும், நிறுவனத்தின் வெற்றி அல்லது தோல்வியை நிர்ணயிக்கும் அளவுகோலாகவும் அமைகின்றது.

சமனுக்கும் புள்ளிக்கு எய்தப்பட வேண்டும் என்ற நோக்குடன் அரசாங்கம் நிதித் தேவைகளை நியமப்படுத்தல்வேண்டும். நிறுவனங்கள் இலாபத்தை உழைக்க வேண்டுமென எதிர்பார்ப்பின் எவ்வளவு இலாபம் பெறவேண்டுமென்பது தீர்மானிக்கப்படல்வேண்டும். கணிய ரீதியில் கூறின், இலக்கை முன்வைத்தல் சொத்துக்களிலிருந்து மீளுதலை அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் இலக்குகள் ஒரு குறித்த தொகைப் பணமாக நிர்ணயிக்கப்படுவதுண்டு. உதாரணமாக இந்தியாவின் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தி நிறுவனங்களிலிருந்து ரூபா 4,500 மில்லியன் மிகை எதிர்பார்க்கப்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் சில நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதைச் சமூக அல்லது வேறு காரணங்களுக்காகச் செய்யலாம். எனினும் இச்சந்தர்ப்பத்திலும் தெளிவான நிதிசார் நோக்கங்கள் முகாமைக்கு அவசியமாகும். இரு நோக்கத்திட்டங்கள், நிறுவனத்தின் இயக்கத்தினால் ஏற்படக்கூடிய திட்டமிடப்பட்ட நட்டத்தினையும், மறுபக்கத்தில் போதியளவு மீள்கையையும் கொண்டிருக்கும். சுருங்கிச் செல்லும் மானிய முறைத் திட்டமும் சேர்ந்த நிதிசார் நோக்கமும் ஒரு முறையாகும்.

UNIDOவினால் நடாத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பொதுத்துறை நிறுவனங்களின் இலாபத்தன்மை பற்றிய உத்தியோக பூர்வமான கொள்கைகள் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. மேற்கு நாடுகளான பிரான்ஸ், சுவீடன், இத்தாலி ஆகியவற்றுள் உற்பத்தி நிறுவனங்கள் இலாபத்தை நோக்குகின்றன. "துருக்கியில் 440 இலாபத்தன்மை கட்டாயப்படுத்தப்பட்டு இருக்கின்றது. ஈராக்கில் மொத்த உற்பத்திக் கிரயத்தில் 10% இலாபம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவின் 4ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மூலதனத்தில் 11—12 வீத இலாபம் எதிர்பார்க்கப்படுகின்றது.''[8]

''இலாபமின்மை'', ''நட்டமின்மை''க் கொள்கைகள் பொதுவாகப் பொதுப் பயன்பாட்டு உற்பத்திகளில் மட்டுமே பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்களில் கடைப்பிடிக்கப்படுகின்றன. பொதுத்துறை நிறுவனங்கள் இலாபம் உழைக்க வேண்டுமா எனும் வினவுக்கு சார்பாகவும் எதிராகவும் வாதங்கள் செய்யப்படுகின்றன. இங்கு இலாபம் உழைத்தல் பண்டங்களினதும் சேவைகளினதும் விலையில் பாதிப்பை ஏற்படுத்தும் எனும் ரீதியிலேயே வினவப்படுகின்றது. விருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்கு இலாபம் உழைத்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ் இலாப உழைப்புக்கள் வினைத்திறன் மூலமாகப் பெறப்பட்டிருக்கவேண்டுமேயன்றி தனியுரிமைக் காரணத்தால் நுகர்வோரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்கக்கூடாது.

முதலீட்டுத் தீர்மானங்கள்:

அரசாங்கத்தினால் முதன்மையின் அடிப்படையில் பொருளியல் சார்பாக உருவாக்கப்படும் முதலீட்டுத் தீர்மானங்கள் ஒன்றிணைக்கப்படல்வேண்டும். தொழில் நுட்ப அபிவிருத்தி, நுகர்வோர் கேள்வியில் மாற்றம், சமூகத் தேவைகளை நிறைவுறச் செய்தல் ஆகியவற்றிற்குப் புதிய முதலீடுகள் அவசியமாக்கப்படுகின்றன. அவை பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாகவும் அமைகின்றன.

தனியார்துறைக் கைத்தொழில்கள் இழிவுத் திரும்பல் இல்லாவிடில் புதிய முதலீடுகளை விரும்பமாட்டாது. புதிய முதலீடுகளுக்கான திரும்பல் ஒரு நிறுவனத்தின் தேறிய சொத்திற்கான திரும்பலுக்குச் சமமாக இருக்கமாட்டாது.

புதிய முதலீடு ஒன்றின் வினைத்திறனை வர்த்தகவியல் ரீதியாக மதிப்பீடு செய்வதற்குக் கழிவு செய்யப்பட்ட காசுப்பாச்சல் நுட்பம் பயன்படுத்தப்படும். மூல வழங்களைத் திறனுக ஒதுக்கீடு செய்வதற்கான பல்வேறு மாற்றீடுகளில் இருந்து சிறந்த முதலீட்டைத் தேர்ந்தெடுப்பதற்கு இம்முறை உதவுகிறது. கழிவுசெய்யப்பட்ட காசுப்பாச்சல் நுட்பமானது ஒரு முதலீட்டின் எதிர்கால விளைவின் கழிவு செய்யப்பட்ட நிகழ் பெறுமதி கண்டறியப்படக்கூடியதாக இருக்கிறது. அத்துடன் கிரயத்துடன் அவற்றை ஒப்பீடு செய்யவும் உதவுகின்றது. முதலீட்டிற்கான எதிர்கால விளைவின் மதிப்பீடானது உற்பத்திப் பொருள் எவ்விலையில் விற்கப்படும் எனும் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே இவ் ரீதியில் விலைத்தீர்மானம் செய்தலும் முதலீட்டுத் தீர்மானம் செய்தலும் தொடர்புபடுத்தப்படுகின்றன.

நோக்கங்களுக்கிடையிலான தொடர்புகள்;

ஒரு குறித்த நிதிசார் நோக்கங்கள், ஒரு குறித்த முதலீட்டின் தீர்வு ஆகியவை பொருத்தமான விலைக் கொள்கையிலேயே தங்கியிருக்கின்றது. அரசாங்கத்தினால் இடப்படும் திட்டவட்டமான நோக்கங்கள் அல்லது கொள்கைகள் பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகத்தில் தீர்க்கப்படமுடியாத ஒன்றாக இருக்கும். அரசாங்கத்தினால் முதலீட்டுத் திரும்பல் வீதம், முதலீட்டுத் திட்டம், விலைக்கொள்கை போன்றவை முகாமையை இரும்புச் சட்டையினுள் திணித்ததுபோலாகும். எனினும் இம்மூன்று நோக்கங்களும் இரண்டுதிட்டவட்டமாக முகாமைக்கு இடப்பட்டு மூன்றாவது முகாமையினால் தீர்மானிக்கவிடப்படுகின்றது. இதிலும் எந்த இருகொள்கைகளை திட்டவட்டமாகத் தீர்மானிப்பது என்பதிலும் வேறுபாடுகள் உண்டு; பிரித்தானியாவில் தேசியமயமாக்கப்பட்ட கைத்தொழில்களின் தேர்வுக்குழு அரசாங்கம் புதிய முதலீடுகளுக்குத் தேர்வு விகிதத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் நீண்டகால எல்லைக் கிரயத்தின் அடிப்படையில் விலைகள் தீர்மானிக்கப்படவேண்டுமெனவும் கூறுகின்றது. இம்முறையானது பல பிரதான காரணிகளைத்தவிர்க்கின்றது.

நிதி இலக்குகள் ஒரு நிறுவனத்தை விலையாண்மையுடன் நடத்துவதற்கு முகாமைக்கு தூண்டுகோலாய் இருக்கின்றது. நோக்கமின்றி செயற்படவிடப்படும்போது நிறுவனங்கள் வருடம்தோறும் நட்டத்தை அனுபவிப்பதனால் முகாமைக்குக் களங்கம் ஏற்படுகின்றது. பொதுவாகப் பெரும்பான்மையான அரசியல்வாதிகளும் பொதுமக்களும் ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் வெற்றியை அல்லது தோல்வியை அதன் இலாபத்திலிருந்து அல்லது நட்டத்திலிருந்து கணிக்கின்றனர்.

எனவே ஒரு இலக்கை நிறுவுவதற்கான முறையான திரும்பல்விகிதத்தையும் புதிய முதலீட்டிற்கான கோதனை விகிதத்தையும் நிறுவி அதில் இருந்து விலைமட்டத்தைத் தீர்மானித்தல்வேண்டும். ஏனெனில்பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் தனித்துறைப் போக்கினைக் கொண்டிருக்கின்றமையால் விலையிடலை அடிக்கடி சோதித்துக்கொள்ளல் வேண்டும். எனினும் இங்கு கூறப்பட்டிருக்கின்றசில கொள்கைகள் பிரயோகிக்கப்படும்போது இலக்குகளின் எய்துகைக்கு நேரடித் தாக்கமாக இருக்க முடியாது. எனவே அத்தகைய சந்தர்ப்பங்களில் இவை விலைகளை அமைப்புச் செய்வதற்கான அடிப்படையாக இருக்கலாம். பொதுவாக அரசாங்கம் மேற்குறிப்பிடப்பட்ட கொள்கைகளை அமைக்கும்போது முகாமைச் சபையிடமிருந்து ஆலோசனைகளைப் பெறுவது வழக்காற்றுச் செயலாகும். அத்துடன் விரும்பக்கூடியதும் ஒன்றாகும்.

விலையிடலுக்கான பொறுப்பு :

தனியார்துறை நிறுவனங்களில் முகாமையாளரே விலையை அமைப்புச் செய்யும் சுதந்திரம் உடையவராக இருக்கின்றார். ஆனால் பொதுத்துறை நிறுவனங்களில் விலைக்கொள்கையை அமைப்புச் செய்வதற்கான அமைத்தல்முறை அரசாங்கம், பொறுப்புவாய்ந்த அமைச்சர், முகாமை ஆகியவற்றில் பரவி நிற்கிறது. அரசாங்கம் நிறுவனங்களுக்கு இலாப இலக்கொன்றை இடின் அரசாங்கம் விலையிடல் கொள்கைகளுக்கான வழிகாட்டுமுறையினையும் கூறல் வேண்டும். அதுவும் தனி உரிமை முயற்சிகளில் இது மிகவும் முக்கியமானதாகும். இலாபம் கொண்ட விலையிடற் கொள்கை மந்திரியினால் அல்லது அரசாங்கத்தினால் கூறப்படும்போது அவை எவ்விதம் முகாமையினால் நடைமுறைப்படுத்தப்படப் போகின்றது? எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு முகாமையாளர்கள் திருத்தமான கொள்கைகளை எவ்வாறுவெளியிடுவார்கள்? இப் பகுதியில் உரைக்கப்படும் ஒவ்வொரு விலையிடல் எண்ணக்கருக்களும் அனுகூலங்களையும்பிரதிகூலங்களையும் கொண்டுள்ளன. அத்துடன் நிறுவனத்தின் வகை அதன் வளர்ச்சியில் படிநிலை என்பவற்றில் விலையாண்மை தங்கியிருக்கும். உதாரணமாக எல்லைக்கிரய விலையிடல்முறை பயன்படுத்தப்படும்போது முகாமை ஒரு நிறுவனத்தின் முழுக் கொள் அளவையும் பயன்படுத்தக் கூடிய வகையில் உற்பத்தித் திட்டமிடல் அவசியமாகும். சராசரி கிரய விலையிடல் முறையில் தூங்கும் அல்லது தொழிற்படாதிருக்கும் நிலையான மூலதனத்தின் கிரயத்தை நுகர்வோர் செலுத்த வேண்டிய அவசியமில்லை. கிரயத்துடன் கூடிய முறையில் கிரயக்கட்டுப்பாடு எல்லாப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு அவையே எய்தப்படக்கூடிய கிரய அடிப்படை யாகின்றது.

எந்த ஒரு முறை பயன்படுத்தப்படினும், விலையானது உற்பத்திக் கிரயத்தை மீட்கக் கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் மீள அமைத்தலுக்கான ஏற்பாடுகள் விரிவடைதல் இலாபங்கள் ஆகியவற்றையும் அடக்கியிருத்தல் வேண்டும். ஆனால் விலைத் திறனின்மையினால் ஏற்படும் நட்டங்களை விலையினுள் அடக்கக்கூடாது. தேசிய நலனுக்காக கிரய வினைத்திறனை ஊக்குவிப்பதற்கான நுட்பங்களைப் பயன்படுத்துவது முகாமையின் பொறுப்பாகின்றது. அத்துடன் அரசாங்கமானது இந் நடவடிக்கையை உறுதிப்படுத்தல் வேண்டும்.

பெரும்பான்மையான நாடுகளில் உள்ள தனியார் கைத்தொழில்களில் உள்ள பொருளாதார நிர்வாக வினைத் திறனை அளவிடுவதற்கும் பேணுவதற்கும் நுட்பம் வாய்ந்த முறைகள் பின்பற்றப் படுகின்றன. ஆனால் எதிர்பாராத விதத் தில் பெரும்பான்மையான வளர்ந்துவரும் நாடுகளுக்கு இத்தகைய நுட்பங்களோ அல்லது வல்லுனத் தன்மையோ கிடைப் பது குறைவு. அப்படிக் கிடைப்பினும் அரசாங்கங்கள் அவற்றைப் பயன்படுத்த விரும்புவதில்லை. ஏனெனில் அவை நிறு வனங்களின் வினைத்திறனின்மையைவெளிக் காட்டுகின்றன.

திருத்தியமைக்கப்பட்ட கிரயக்கணக் கீட்டு நுட்பங்கள் பயன்படுத்துதலிலும் திறனை கணக்காய்வு முறைகளைச் செய் வதை உறுதிப்படுத்துவதிலும் கிரயவினை யாண்மையைப் பேணலாம். மூலதன வளங் களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், மூலப் பொருட்களின் உள்ளீடு, எரிபொருள், வலு, மனித வளங்கள் ஆகியவை மிகவும் கவனத்துடன் அவதானிக்கப்படவேண் டும். மேந்தலைச் செலவுகளைக் குறைத்த லுக்கான படிகள் உழைப்பின் உற்பத்தித் திறனை அளவிடுவதற்கும் திருத்தி அமைப் பதற்குமான முறைகளை உருவாக்குதல் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இலாபங்களில் இருந்து தூண்டல், உபகா ரப் பணங்களை வழங்குதல், இலாபப் பங் கீட்டுத் திட்டங்கள் வெளியீட்டு உபகாரப் பணங்கள் வழங்குதல் என்பவற்றைநடை முறைப்படுத்தல் மூலம் தொழிலாளர் களின் மனநிலையை செழிப்படையச்செய்து உற்பத்தியை அதிகரிக்கலாம். போட்டி யில்லா நிலையில் ஒரு நிறுவனத்தின் வினைத்திறனை அளவிடுவதற்கு இலாபத் தன்மையை ஒரு திருத்திகரமான முறை யாகக் கருத முடியாது. அதன்மூலம் உயர் மட்ட கிரய வினைத்திறனை எய்துவதற்கான சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கும் போது இலாபக்குறைவு வினைத்திறனின் மைக்கு ஒரு எடுத்துக்காட்டு அல்ல.

மானியங்கள் :

சில சந்தர்ப்பங்களில் பொதுத்துறை நிறுவனங்கள் மக்களுக்குவழங்கும் பொருட் களினதும் சேவைகளினதும் கிரயத்தை விலையினால் பெறமுடியாத நிலை ஏற்படுவது உண்டு. இதனால் நுகர்வோருக்கு மானிய மளிக்கவேண்டிய தேவை ஏற்படுகிறது. ஆனால் இம் மானியங்களுக்குத் தேவையான பணம் வரிசெலுத்துவோரிடமிருந்து பெறப் படுகின்றது. சமூக அல்லது அரசியல் கார ணங்களுக்காக அரசாங்கம் நிறுவனங்கள் தமது கிரயத்தை விலைகளின் மூலம் மீட்ப தற்கு அனுமதியளிக்கப்படுவதில்லை. கிரயத் திற்கும் விலைக்குமுள்ள வேறுபாடானது மானியமாக அளிக்கப்படுகிறது. வித்தி யாசமான மானிய முறைகளை நடைமுறைப் படுத்தல் சிக்கல் தன்மை வாய்ந்ததாகும். ஆனால் மானியம் வழங்குதல் முகாமையின் வினைத்திறனின்மைக்கும் ஊழலுக்கும் வழி வகுக்கும். இத்தகைய நிலையில் "தேசிய நலம்", பரந்த பொருளாதாரத் தீர்மா னங்கள் ஆகியவற்றினால் ஏற்படும் நட்டங் கள் மொத்த வினைத்திறனின்மையை விளக் கும். சில சந்தர்ப்பங்களில் சமூக காரணங் களுக்காக மானியம் அளித்தல் விரும்பக் கூடியதாக இருப்பினும் ஒரு சமூகத்தின் சமூக அம்சங்கள் அரசாங்கத்தினால் கவனிக் கப்பட்டு பொதுத்துறை நிறுவனங்களை வர்த்தகக் கொள்கைக்கு அமைய இயங்க விடல் வேண்டும். யதார்த்த ரீதியாக அர சாங்கம் நுகர்வுகளுக்கு நேரடியாக மானி யங்களை வழங்கி நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் சிக்கன விலையிடுதலை நடைமுறைப்படுத்தப் படல்வேண்டும். ஒரு நிறுவனத்திற்கு மானியம் வழங்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற் படின் நிருவாக சுதந்திரத்தை அமைப்ப தற்கு வெளிப்படையாக வழங்குதல் வேண்டும்.

விலைக்கட்டுப்பாடு :

சந்தையில் நிறைவுத்தன்மையின்மை விலைக்கட்டுப்பாட்டைக் கொண்டுவர

முயலும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு விலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமுல் நடாத்துவது அவசியம். ஏனெனில் இவை தனியுரிமையாக இருப்பதுடன் இலாப இலக்கு மிகவும் குறைந்ததாக இருப்பதனால் விலைகள் கட்டுப்பாடு செய்யப்படல் வேண்டும். தேசிய மட்டத்தில் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கெனச் சில நாடுகளில் சட்ட வழிமுறைச் சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுத்துறை நிறுவனங்களுக்கும், மற்றைய துறைகளுக்கும் வேறு அமைப்புக்கள் இருப்பது விரும்பத்தக்கதொன்றாகும். அரசாங்கத்தினால் அல்லது மந்திரியினால் விலையிடற் கொள்கை இறுதியாகத் தீர்மானிக்கப்படுவதாக இருப்பின் இவ் விலைக்கட்டுப்பாட்டு அதிகார சபை ஆலோசனை கூறுவதை மட்டுமே செய்யும். எப்படியாயினும் அச்சபைகள் சிறந்த ஆலோசனை அளிப்பதன்மூலம் முக்கியத்துவம் பெறலாம். இச்சபைகள் தமது தொழிற்பாடுகளைத் திருப்திகரமாகச் செய்யவேண்டுமாயின்நிறுவனங்களை ஆய்வு செய்வதற்கான சட்டரீதியான அதிகாரங்கள் அளிக்கப்படுதல்வேண்டும். இச்சபைகள் மூலதன அமைப்பிலிருந்து பொருட்களை விற்பனைசெய்யும் வரையிலான சகல அம்சங்களை ஆய்வுசெய்யவும் அதன் மூலம் பொதுத்துறை நிறுவனங்களின் உத்தம கிரய வினைத்திறனையும் பேண முடியும்.

முடிவுரை:

விலைகள், ஒரு நாட்டில் மூலவளங்களை ஒதுக்கீடு செய்வதில் பாதிப்பை ஏற்படுத்துவதனால் பங்கீட்டு விளைவுகளை உண்டாக்கும் ஒரு நாட்டில் சந்தையானது மூலவளங்களை ஒதுக்கீடு செய்வதில், பொதுத்துறை நிறுவனங்களின் விரிவு திருப்திகரமற்றதாக இருக்கின்றது. அரசாங்கம் பொதுப் பணத்தை முதலீடு செய்திருப்பதனால் விலைக் கொள்கையைத் தீர்மானஞ் செய்வதிலும், ஏனைய நிதிநோக்கங்களை தீர்மானிப்பதிலுமான உரிமை அரசாங்கத்திலேயே தங்கியிருத்தல் வேண்டும். பொதுத்துறை நிறுவனங்கள் உழைக்கும் இலாபங்கள் வினைத்திறன்மூலம் உழைத்த இலாபமாக இருக்கவேண்டுமேயன்றி தனியுரிமை மூலம் பெற்றதாக இருக்கக்கூடாது. விலையிடல் கொள்கையில் இறுதி இலக்கு அருமைத் தன்மையுடைய மூலவளங்களின் உத்தம ஒதுக்கீட்டைப் பெறுவதாகவும் பொது மக்களுக்கு உயர்ந்த நன்மைகளை அளிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

1. Leonard Tivey (de), The Nationalised Industries since 1960, p. 14.
2. V. V. Ramanandham, The finances of public enterprise, p. 58.

† There is, of course, the remote possibility of "denationalisation".

3. Nabagopal, The public sector in India, p. 113.
4. Francis Casell, "The pricing policies of Nationalised Industries in Nationalisation", A. H. Hanson (ed) p. 216.
5. Report of the Committee on Pricing Policies of Public Enterprises in Sri Lanka 1966 p. 2.
6. N. C. Joshi, "Pricing in Public Sector" Lok Udyog vol. 5, July 1971.
7. Quoted in the Report of the Cabinet Sub-Committee on Terms and Conditions of Employment in Statutory Boards and Corporations in Sri Lanka.
8. Profitability and efficiency measures of public enterprises. Paper prepared by UNIDO.

For the BEST in

OFFICE EQUIPMENT

- STEEL CUPBOARDS
- FILING CABINETS
- STEEL WARDROBES
- CARD BOXES
- CASH BOXES
- CARD INDEX CABINETS
- TYPEWRITERS
- ADDING MACHINES
- CALCULATORS
- DUPLICATING MACHINES
- PRE-PRINTED ACCOUNTING FORMS & OFFICE STATIONERY

AND for rellable after-sales service.....

CONTACT

OFFICE EQUIPMENT LIMITED

20, Parsons Road, COLOMBO-2.

205 (85), MANIPAY ROAD, JAFFNA.

சந்தைப்படுத்துதற் திட்டமும் அதன் முக்கியத்துவமும்

வ. அன்ரனி
வர்த்தகவியல், (சிறப்பு)
இறுதிவருடம்

பெரும்பாலான உற்பத்தியாளர்களின் நோக்கம் தமது பொருட்களை நல்ல விலைக்கு விற்று இலாபம் பெறுவதாகும். எனவே நல்ல விலைக்கு விற்று இலாபம் பெறுவதற்குச் சந்தைப்படுத்துவதற்கென அமர்த்தப்பட்ட நிர்வாகிகள் நன்கு ஆலோசனை செய்து திட்டம் ஒன்றினை வரைய வேண்டும். முற்காலத்தில் பொருட்களைச் சந்தைப்படுத்தும்போது இலாபத்தினை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு பொருள் உற்பத்தி நடைபெற்றன. ஆனால் இன்று சந்தைப்படுத்தும் திட்டத்தினை அமைக்கும் நிர்வாகிகள் நுகர்வோரின் தேவைகளைத் தகுந்த முறையில் பூர்த்திசெய்து நிறுவனத்தின் இலாபத்தினை அல்லது வேறு ஏதேனும் நோக்கத்தினை அடைவதாகும்.

சந்தைப்படுத்துவோர் தமது விற்பனை இலாப இலக்குகளை அடைவதற்கு நுகர்வோரின் திருப்தி அவசியமானதாகும். ஒரு பொருள் வெற்றிகரமாகச் சந்தைப்படுத்த வேண்டுமாயின் நுகர்வோரினதும், பயன்படுத்துவோரினதும், தேவைகளும், விருப்பங்களும் நியாயமான அளவு பூர்த்தி செய்யப்படல் வேண்டும், ஏனெனில், எல்லா நுகர்வோரினதும் கேள்வி மாறிகள் ஒரே தன்மையானவை என்று கொள்ளக்கூடாது. எனவே எல்லா வகையான நுகர்வோரினுடைய தேவைகளையும் திருப்தி செய்யக் கூடியதாகப் பொருள் அமைய வேண்டும். வேண்டுமாயின் பலவிதமான நுகர்வோரின் தேவைகளுக்குத் தகுந்ததாக ஒரு பொருளைப் பலதரமாக அல்லது பலவகையாக அளிக்க வேண்டும். சரியான முறையில் திருப்தி செய்யப்படாவிட்டால் சில சமயங்களில் பொருட்களை மாற்றி அமைக்க

வேண்டி ஏற்படும். எனவே சந்தைப்படுத்தும் திட்டத்தினை வரைந்தபின் அதனை இடைநிறுத்தாமல் அதனைக் கடைப்பிடித்து அத் திட்டத்தினால் வரும் விளைவுகளைப் பற்றி நன்கு ஆராய வேண்டும். குறிக்கப்பட்ட ஒரு சந்தைப்படுத்தும் திட்டத்தினை வரைந்த பின்பு அத்திட்டத்தின் நோக்கப்படி விளைவுகள் ஏற்படாமல் விடலாம் எனத் திட்டவட்டமாகத் தெரிந்தால் முதல் வகுத்த திட்டத்தினைக் கடைப்பிடித்தல் வேண்டுமெனப் பொருள்கொள்ளக்கூடாது. ஓர் அளவுக்குத் திட்டத்தினைச் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி அமைத்தல் அவசியமாகும்.

முதலாளித்துவ சமுதாய அடிப்படையில், அரசாங்கச் சட்டங்கள், கொள்கைகள் அனுசரிப்பதுடன் திட்டம் நீண்டகால திட்டங்களாகவும் குறுங்காலத் திட்டங்களாகவும் அமைக்கப்படல் வேண்டும். ஏனெனில் சந்தைப்படுத்தற் திட்டத்தினை வரையும்போது அரசாங்கங்களின் சட்ட திட்டத்திற்கு ஏற்ப அமைக்கப்படல் வேண்டும். அப்படி அமைக்கப்படாவிடில் அரசாங்கங்களின் எதிர்ப்புக்களைப் பெற வேண்டி நேரிடும். காரணம் அரசாங்கம் மக்களின் நன்மை கருதி இச் சட்டங்களை இயற்றுகின்றன. எனவே அரசாங்கச்சட்டங்களுக்கு ஏற்பச் சந்தைப்படுத்துதல் திட்டம் அமைக்கப்படல் வேண்டும். அத்துடன் அரசாங்கத்தின் உற்பத்தி அல்லது நுகர்வு அல்லது முதலீடு சம்பந்தமான திட்டங்களுடன் ஒரு முயற்சியாளனின் சந்தைப்படுத்தல் திட்டமும் ஒன்றிணைக்கத் தக்கதாக இருக்க வேண்டும். திட்டத்தின்படி அமைக்கப்பட்டால் அத் திட்டத்தின் விளைவு இலாபகரமாயின் அதன் பெரும் பகுதி சேமிப்பாகவும், முதலீடாகவும் மாறுகின்றது. இத் தனியார் முதலீட்டுத் திரட்டு ஒரு கால எல்லையில் அரசாங்க முதலீட்டுத் திரட்டுடன் சேர்ந்து தேசத்தின் அபிவிருத்தியை நிர்ணயிக்கும். ஆகவே திட்டம் சரியான முறையில் அமைக்கப்படல் வேண்டும். இதே போல் சூழலையும் மனதில் கொண்டு திட்டம் அமைக்கப்படல் வேண்டும். ஏனெனில், பலவிதமான சூழல் காரணிகள் ஒரு நிறுவனத்தின் சந்தைப்படுத்தும் திட்டத்தின்மேல் தற்காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

சந்தைப்படுத்தும் திட்டத்தினை வகுப்பது யார் பொறுப்பு? சந்தைப்படுத்தல் என்பது தற்காலத்தில் ஓர் சிக்கலான தொன்றாகும். எனவே சந்தைப்படுத்தற் திட்டத்தினை வகுப்பது அவ்வளவு எளிதான செயலன்று. எனவே அத்துறையில் தேர்ச்சி பெற்ற ஒருவரிடம் ஒப்படைத்தால் அவர் தம் விருப்பு வெறுப்புக்கு உட்பட திட்டத்தினை வரைவார். ஒருவரே ஒரு செய்தியை ஆராய்ந்து முடிவு காண்பதற்கும் பலர் ஆராய்ந்து முடிவு காண்பதற்குமிடையில் வேறுபாடுகள் இருக்கலாம். அதாவது ஒருவர் ஆராய்ந்து காணும் முடிவுகளில் உள்ள குறைபாடுகள் பலர்கூடி ஆராய்ந்துகாணும் முடிவில் இல்லாதிருக்கலாம். ஆனால் பலர் ஒன்றுகூடி ஆராய்ந்து ஒரு மனதான முடிவுக்கு வராமல் இருக்கலாம். எனவே சந்தைப்படுத்தற் துறையில் சில செய்திகள் உடனுக்குடன் முடிவு எடுக்க வேண்டி இருக்கும். பலர் ஒன்றுகூடி முடிவு எடுக்கக் காலதாமதம் ஏற்படலாம். காலதாமதம் ஏற்பட்டால் நட்டம் ஏற்படக்கூடும். எனவே நன்கு தேர்ச்சியும், அறிவும், அனுபவமும் மிகுந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்குச் சந்தைப்படுத்தற் திட்டத்தினை வரையும் பொறுப்பினைக் கொடுப்பது நன்று. ஆனால் அவர் மற்றய துறைகளுடன் கலந்து ஆலோசனை செய்து திட்டத்தினை வரைய வேண்டும்.

சந்தைப்படுத்தற்குப் பொறுப்பாக உள்ள முகாமையாளன் சில அம்சங்களைப் பற்றி முக்கியமாக ஆராயவேண்டும். அவையாவன:

1. விற்பனை முயற்சியும், உபாயங்களும் கேள்வி மாறிகளும்.

2. சந்தைப்படுத்தற் சேர்வை.
   (அ) சரக்குகளுக்கு குறியிடல்.

(ஆ) தரமும், தரப்படி வகைபிரித்தலும்:

(இ) விளம்பரத்திட்டம்.

(ஈ) விலைக்கொள்கை.

(உ) விநியோக வழிமுறைகள்.

3. சந்தை ஆராய்ச்சி.

4. விற்பனையின்பின் சேவையும், சந்தைப் பிரதிபலிப்பும்.

1. விற்பனை முயற்சியும் உபாயங்களும், கேள்வி மாற்களும்:

நுகர்வோருக்கு அளிக்கப்போகும் பொருட்களைப்பற்றி ஆராயப்படவேண்டும். அப் பொருட்களின் குணம், தோற்றம், அமைப்பு ஆகியவற்றினைத்தான் ஆராய வேண்டும். இத்தகைய பொருட்களை நுகர்வோர்கள் ஏற்பார்களா, எத்தகைய முயற்சிகளை எடுத்தால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கமுடியும், இவ் விற்பனைக்குரிய சந்தைகள் யாருக்கு, எப்போது எங்கே, எந்த அளவில் என்பதனையும், போட்டிப் பொருட்கள் சந்தையில் நிலவுகின்றனவா, அதன் காரணமாக நுகர்வோர் வேறு உற்பத்தியாளர்களின் பொருட்களை கொள்வனவு செய்கின்றனரா எனவும் ஆராய வேண்டும். அதற்கேற்ப தமது பொருட்களில் மாற்றங்களை ஏற்படுத்தித் தொடர்ந்தும் கொள்வனவு செய்யத்தூண்டல்வேண்டும். புதிய பொருட்களை அறிமுகம்செய்தால் எதிர்ப்புக்கிடைக்குமா என்பதனை ஆராய்ந்து விற்பனையை பெருக்க முயற்சிகள் எடுத்தல்வேண்டும்.

ஒரு ஸ்தாபனத்தின் விற்பனைக்கும், அதனது செலவுக்குக்மிடையேயான தொடர்பைக் கொள்வதில் காணும் வெற்றியின் விளைவுடன் நுகர்வோரின் தேவையைப் பூர்த்திசெய்யும் தன்மையுமே இலாபமாகும். ஆகவே இலாபம் கிடைக்கத்தக்க அளவில் விற்பனையை நடைபெறச்செய்தல் திட்டமிடல் முகாமையின் பணியாகும். ஸ்தாபனத்தின் விற்பனையானது அனேக மாறிகளினால் பாதிக்கப்படுகின்றது. இதில் கேள்வி மாறி முக்கியமானதாகும். இதில் வாடிக்கையாளர்கள் மாறிகளை எடுத்தால் ஸ்தாபனத்தின் விற்பனையானது சந்தையில் உள்ளகொள்வனவாளர்களின்தொகையினாலும் அவர்களது வருமான அளவினாலும், அவர்கள் தேவை மனப்பான்மை கொள்வனவுப் பழக்கம் போன்றவற்றினால் பாதிக்கப்படலாம். சூழல் மாறிகளாயின் சூழல் காரணிகள் பொருளாதார நடவடிக்கைகளின் அளவு, சட்டத்தின் தன்மையும் ஒழுங்கும், சுவாத்திய நிலைமைகள் என்பதன் ஒழுங்குகளாலும் ஸ்தாபனத்தின் விற்பனை பாதிக்கப்படலாம். இறுதியாகப் போட்டி மாறியை எடுத்தால் இத் தாபனத்தின் உற்பத்திப் பொருட்களை ஒத்த அல்லது பதிலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் போட்டியாளர்களின் கொள்கைகளாலும் ஸ்தாபனத்தின் விற்பனை பாதிக்கப்படலாம். இத்துடன் சந்தைத் தீர்மானங்களையும் எடுக்கலாம்.

2. சந்தைப்படுத்தற் சேர்வை:

சந்தைப்படுத்தும் சேர்வையை நோக்கும்போது சந்தைப்படுத்தும் தொழிற்பாடுகளில் முக்கியமான பகுதிகளை ஆலோசித்து ஆராயப்படவேண்டியதைக் குறிக்கும்.

(அ) சரக்குகளுக்குக் குறியிடுதல் (Branding of Goods):—

சரக்குகளை வாங்கும் மக்கள் தாங்கள் வேண்டும் சரக்கினுடைய தன்மை, தரம் முதலியவைபற்றி எளிதாகவும் இலகுவாகவும் அறிந்துகொள்ள உதவிசெய்வது இக் குறியாகும். சரக்குகளின் உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் தாம் விற்கும் சரக்கிற்குக் குறியிட்டு மக்களுக்குத் தம் குறியிட்ட சரக்கு இன்ன தன்மை உடையது, இன்ன தரத்தினை உடையது என்றெல்லாம் விளம்பரத்தின் உதவியுடன் உணர்த்துவார்கள். இதன் காரணமாகக் குறிப்பிட்ட அல்லது குறிப்பெயர் கொண்ட ஒரு சரக்கு யாரால், எந்த நிலையத்தால், உற்பத்தி செய்யப்பட்டது, என்பதனை அறிந்தபின்

இதனைத் தயக்கமின்றி வாங்கலாம் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படும். இக்குறியைச் சரக்கின் மீதோ அல்லது அதைச் சுற்றியிருக்கும் உறையின் மீதோ இடுவது வழக்கம். இதற்கு ஒரு சின்னத்தையோ, எழுத்துக்களையோ, அல்லது குறிக்கப்பட்ட ஒரு சொல்லையோ பயன்படுத்துவர். குறியீட்டினை வாணிபக் குறியாகப் (Trade Mark) பதிவு செய்து விட்டால் சட்டப்படி வேறு ஒரு வியாபாரியும் அவ்வகைச் சரக்கிற்கு அக் குறியினைப் பயன்படுத்தக்கூடாது. அப்படிப் பயன்படுத்தினால் சட்டப்படி நஷ்ட ஈடு கோரி நடவடிக்கை எடுப்பதுடன் மேலும் அப்படிச் செய்வதைத் தடுக்க உதவியாக இருக்கும். இப்படியாகக் குறிப்பெயர், எழுத்து, சொல் அல்லது சின்னத்தையோ தேர்ந்து எடுக்கும்போது மிகவும் கருத்துச் செலுத்த வேண்டும். ஏனெனில் மக்கள் மனதில் நிலைத்து நிற்கக்கூடிய பெயராக இருக்க வேண்டும். அதாவது எளிதாக உச்சரிக்கக் கூடியதாகவும், எளிதில் மற்றைய பொருட்களில் இருந்து வேறுபடுத்தக்கூடியதாகவும் இருக்கவேண்டும். தேர்ந்து எடுக்கப்படும் குறியீடு தனிச் சிறப்புக் கொண்டதாகவும் இருக்கவேண்டும். குறியீடு நல்ல தரத்திற்கு உறுதியளிப்பதாகத் திகழவேண்டும். அத்துடன் குறியினை அடிக்கடி மாற்றக் கூடாது.

(ஆ) தரமும் தரப்படி வகை பிரித்தலும்: (Standardising and Grading)

சரக்கின் குணத்தினைப் பொறுத்து அவைகளைப் பிரித்தலே தரப்படுத்துதல் என்கிறோம். சரக்குகளின் குணத்தினை நிர்ணயிப்பதற்கு அதன் அளவு, நிறம், எடை, தோற்றம், சுவை, மணம் முதலிய அம்சங்கள் அடிப்படையாக விளங்குகின்றன. ஒரு சரக்கு தரப்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது நல்ல சரக்கு என்று பொருள் கொள்ளக் கூடாது. அச் சரக்கு குறிக்கப்பட்டுள்ள குணங்களையுடையது என்பது தான் பொருள்.

விற்பனைத்துறையில் தரப்படுத்துதலும் தரப்படி வகைப்படுத்துதலும், வணிகருக்கும், நுகர்வோருக்கும் பெரும் நன்மை அளிக்கின்றது. ஆகவே இச் செயலை மேற்கொள்ள முன்பு தயாரிப்பாளர் (உற்பத்தியாளர்) பல செய்திகளைக் கவனிக்க வேண்டும். உதாரணமாக சரக்குகளை வகைப்படி பிரித்தால் அதனை வாங்கும் வணிகரும் ஏற்றுக்கொள்வார்களா, வகைப்படுத்திய சரக்கு ஒரே வாதிரியான குணத்தினை உடையனவாக இருக்கின்றனவா என்று கவனிக்கவேண்டும். இன்றைய விஞ்ஞான உலகில் வாணிபம் நாளுக்கு நாள் பெருகி வரும் நேரத்தில் உலகில் வாழும் நுகர்வோர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் தகுந்த முறையில் தரம் வகைப்படுத்தப்படாவிட்டால் சர்வதேச வர்த்தகம் சிறப்பாக நடைபெற மாட்டாது. எனவே சிறந்த முறையில் தரப்படுத்திவகைப்படுத்தவேண்டும். இதன் காரணமாக சரக்குகளை உற்பத்திசெய்யும் நாட்டின் அரசாங்கங்கள் தரங்களைப் பற்றியும், குறியிடுதல் பற்றியும், வகைப்படுத்தல் பற்றியும் பல சட்டங்களை இயற்றுகின்றன.

தரப்படுதல், குறியிடுதலால் உண்டாகும் நன்மைகள்:

1. தரப்படுத்திய சரக்கினை விற்பனை செய்வது மிகவும் எளிதானது. வாங்குபவரும் சரக்கினை மாறுபாடின்றி வாங்க முடிகின்றது.

2. வாங்குபவர்க்கு சரக்கின் தரம் உறுதியாகத் தெரிவதால் அச்சம், தயக்கமின்றி அவற்றினை வேண்டிய அளவிற்கு வேண்டுவதோடு, வாங்குபவர் விற்பவர் இடையில் வேண்டும் காலம் குறுகியதாகும்.

3. சரக்கின் குணத்தினை எல்லோரும் அறிவதால் சரக்கினைப்பற்றி அதிக விளம்பரம் செய்யத் தேவையில்லை.

4. தரப்படுத்தாத சரக்கினைவிட தரப்படுத்திய சரக்குகள் சந்தையில் அதிகம் விற்கப்படுவதால் பரும்படி ஆக்கத்திற்கு வழிகோலுகின்றது.

5. தரப்படுத்திய சரக்கினை கைஇருப்பாக வைத்திருக்கும் வணிகர் தமக்குப் பணம் தேவையாயின் வணிக வங்கியிடம் சரக்கினை அடைவாக வைத்துக் கடன் பெற முடியும்.

6. சந்தை நிலைமையைப்பற்றிச் சரியாக அறிந்துகொள்ளத் தரப்படுத்தல் பெரிதும் உதவுகின்றது.

7. ஒரே தரம் உடைய சரக்குகளை ஒன்றுசேர்த்து உற்பத்தியாளர்கள் விலைக் கட்டுப்பாடு முதலிய முறைகளை மேற்கொள்ளத் தரப்படுத்தல் உதவியாக உள்ளது.

பொதிகட்டுதல் :

தரமும், தரப்படி வகை பிரித்தலும் மட்டும் செய்தால் போதாது அதன் "கட்டுதலையும்" (Packing) சிறிது ஆராயவேண்டும். அதாவது கட்டுதல்எனப்படுவது சரக்கினை எடுத்துச்செல்லும்வகையில் கட்டிக்கொடுப்பது அல்லது பாதுகாப்பாகப் பெட்டிகளில் அடைப்பதுடன், பொருளை வேறுபடுத்தலும், கண்டுபிடித்தலுமே பொதிகட்டுதல் என்பர்.

சரக்கினைக் கட்டி விற்பதால் பல நன்மைகள் உண்டு.

1. அவற்றினை எடுத்துச்செல்வது சுலபம்.

2. சரக்குகளைக் கட்டாகக் கட்டி, அக்கட்டின்மேல் குறியினைத் தக்கவாறு இடுவதால் அதில் உள்ள தரம் உடைய சரக்கை எடுத்துக்கொண்டு போலிச் சரக்கினை அவற்றிற்குப் பதிலாக வைப்பதையும் தவிர்க்கப்படுகின்றது.

3. சரக்கினைக் கெடாமல் வைக்கவும் கட்டுதல் அவசியமாகின்றது.

4. சரக்கினைக் கட்டியிருக்கும் தாள் (உறை) மிகவும் அழகாக இருப்பின் சரக்கு என்ன தரமாக இருந்தாலும் அதனை வாங்கத் தூண்டும்.

5. சில சரக்குகள் கட்டப்பட்டுள்ள வகையையும், முறையையும் கண்டே மக்கள் அச் சரக்கினை எளிதாக அடையாளம் கண்டுகொள்ளலாம்.

(இ) விளம்பரத் திட்டம் :
(Advertising Planning)

விளம்பரத்தின் முக்கிய நோக்கம் சரக்கினை விற்பனை செய்வதாகும். ஒரு சரக்கிற்குப் புதிய பயனை உண்டாக்கியோ அல்லது புதிய வாடிக்கையாளனைச்சேர்த்தோ, அல்லது ஏற்கனவே வாங்கும் வாடிக்கையாளரை அதிகமாக வாங்கச்செய்வதன் மூலம் வாணிகர் தம் சரக்குகளின் விற்பனையை மிகைப்படுத்தலாம். விளம்பரத்தின் மூலம் மொத்த விற்பனையாளரும் சில்லறை விற்பனையாளரும் அதிக விற்பனையை நடாத்துகின்றனர்.

உற்பத்தியாளர்கள் தரம் உள்ள சரக்கினை உற்பத்திசெய்து அதை மக்களுக்கு தொடர்ந்து அளித்துவருவாராகில் நாளடைவில் மக்கள் அச் சரக்குக் குறியினை வெகு எளிதாக நினைவில் வைத்துக்கொள்வதுடன், அவ்வகைச் சரக்கைப்பற்றி நினைக்கும்போது குறிப்பிட்ட அந்தச் சரக்கினையே நாடுவர். இதற்குக் காரணம் விளம்பரமே. அச் சரக்கின் குணம், தரம் முதலியனபற்றி அசையாத நல் எண்ணம் மக்கள் மனதில் உண்டாகிவிட்டால் உற்பத்தியாளர்கள், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகளை நம்பி இருக்க வேண்டியதில்லை. மக்கள் தாமே அச் சரக்கினைக் கேட்டு வாங்கும் நிலைக்கு வந்துவிடுவர்.

விற்பனைத் துறையில் விளம்பரம் முக்கிய இடத்தினைக் கொண்டிருக்கிறது. எனவே விளம்பரப் பொறுப்பினை நிர்வகிக்க கம்பனிகளில் விளம்பர நிர்வாகி ஒருவர் அமர்த்தப் படுவார். அத்துறையில் அவர் ஆகக் கூடிய செலவினை சரிவர திட்டமிடலும் திட்டத்தினை செயலாற்றுவதும் அவர் பொறுப்பாகும். எனவே திட்டம் சரியான முறையில் அமைக்காவிட்டால் விளம்பரத்திற்காகச் செலவிட்ட பணம் வீணாகும். சரக்குகளுக்கு சரியான தேவை (Demand) கணக்கிடாமலும், விற்பனைத் துறையை சரிவரத் தேர்ந்து எடுக்காமலும் விளம்பரம் செய்தால் அது பயனளிக்காது. விளம்பரம் செய்தவுடன் விற்பனை பெருகவேண்டும் என எதிர்பார்ப்பதும் தவறு. விளம்பரத்தின் பயன் பல நாட்களின் பின்புதான் தெரியவரலாம். உடனே பயன் தரவில்லை என அரைகுறையாக விளம்பரம் செய்வதை நிறுத்திவிடக் கூடாது. அப்படிச் செய்தால் அதுவரை செய்த விளம்பரச் செலவு வீணாகும். எனவே தவறான

முறையில் வெளியிடப்பட்ட விளம்பரம் நற்பயனை அளிக்கமாட்டாது.

சரக்கை வாங்க நினைக்கும் நுகர்வோன் விளம்பரத்தினைக் கண்டதும் உடனே அச் சரக்கை வாங்க முடிவு செய்யலாம், அல்லது எதிர்காலத்தில் வாங்கத் தீர்மானிக்கலாம். இது விளம்பரத்தின் அமைப்பைப் பொறுத்தது. விளம்பரத்தினைப் படித்தவுடனே அவரது கருத்தைக் கவர்ந்து அவாவை உண்டாக்கி, அச் சரக்கினை வாங்கத் தூண்டும் வகையில் விளம்பரம் அமைந்தால் அது நிகழ்காலச் செய்கை விளம்பரநகல் எனப்படும். பெரும்பாலான விளம்பரங்கள் இவ்வகையினதாகஇருக்கும். எதிர்காலச் செய்கை விளம்பர நகல் நுகர்வோர்க்கு நினைவூட்டும் வகையில் அமைகின்றது. இவ் வகையான நகலை அடிக்கடி படிக்கும் நுகர்வோர் வாய்ப்பு ஏற்படும் போது இச் சரக்கினை வேண்ட முடிவு செய்வார்கள். எனவே விளம்பர நகலை தயார் செய்ய முன் விளம்பரம் செய்பவர் தமது குறிப்பான நோக்கம் என்ன என்று திட்டம் செய்து கொள்ள வேண்டும். விளம்பரம் செய்வது இருக்கும் தேவையை பெருக்கவா, அல்லது புதிய தேவையை உண்டாக்கவா என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். இந் நோக்கங்களுக்கு அமைய நகலை அமைக்க வேண்டும்.

இந் நகலை மக்களைக் கவரும் வகையில் அமைக்க வேண்டும். பால் உணர்வு மூலம் விளம்பரத்தினை பரப்புவதை நறுமணப் பொருள்தயாரிப்போர் கையாளுகின்றனர். அழகிய பெண்களின் உருவங்களைத் தீட்டி அவர்களின் அழகிற்குக் காரணம் குறிப்பிடப்பட்ட சவர்க்காரம், பவுடர் உபயோகிப்பதால் என்று எழுதி வைக்கின்றனர். சில விளம்பர தாரர்கள் அழகிய சினிமா நடிகைகளின் படங்களை விளம்பரங்களில் போடுகின்றனர். பொதுமக்களுக்கு இது பெரிதும் கவருவதாக உள்ளது. இதே போன்று பலவிதமான விளம்பரங்கள் அமைகின்றன. எனவே எவ்வித உணர்வைத்தட்டி எழுப்பும் விளம்பரமாக இருந்தாலும் அதன் முதல் சிறப்பு மக்களின் கவனத்தைக் கவரும் வகையில் அமைவதுதான். அவ் விளம்பரத்தினைக் கண்டதும் அதனைப் படிக்கத் தூண்டும் வகையில் நகல் அமைய வேண்டும். விளம்பரத்தைப் படித்தவர் அதைத் தன் மனதில் இருத்தி அதன்மீது நம்பிக்கை கொண்டு அதிற் கூறப்பட்ட சரக்கினை வேண்ட முடிவுசெய்யும் வண்ணம் நகல் அமைய வேண்டும்.

விளம்பரத்தினை மக்களுக்கு எந்தவகையில் அளிப்பது என்பது மிகவும் கவனிக்கத்தக்க ஒரு கேள்வியாகும்; ஏனெனில் விளம்பரத்தினால் எதிர்பார்க்கும் பலன் அடைவது, விளம்பரம் எதிர்பார்த்த அளவுக்கு மக்களுக்குக் கிட்டியதா என்பதைப் பொறுத்திருக்கிறது. சிறப்பானதும், பொருத்தமானதுமான விளம்பரம் யாதெனில் சரியான சாதன மூலம் கவர்ச்சிகரமாக அமைப்பதுதான். எவ்வளவு சிறப்பாகவும், கவர்ச்சியாகவும் விளம்பரம் அமைந்திருந்தாலும் அதை சரியான சாதனமூலம் வெளியிடாவிட்டால் எதிர்பார்த்த பலனை அளிக்காது. அதற்கெனச் செலவிடப்பட்ட பணம் வீண் ஆகும். விளம்பர சாதனத்தைத் தெரிந்து எடுத்து விட்டால் மட்டும் போதாது. அச் சாதனத்தில் உள்ள பல பிரிவுகளில் எது மிகவும் பொருத்தமானது என்று ஆராய்ந்து தேர்ந்து எடுக்கவேண்டும். இன்றைய வாணிப உலகில் கீழ்க்கண்ட விளம்பரச் சாதனங்கள் வழக்கத்தில் உள்ளன.

(அ) அக விளம்பரம் :

1. அச்சு விளம்பரம்
   (a) செய்தித்தாள்.
   (b) இதழ்கள்.
   (c) வாணிப இதழ்கள்.
2. தபால் வழி அனுப்புதல்.
3. வானொலி, டெலிவிசன்.

(ஆ) புற விளம்பரம் :

4. விற்பனையாளர்கள் சாதனங்கள்.
5. வீட்டுக்கு வீடு மாதிரி கொடுத்தல்.
6. பெருவகை அறிவிப்பு — உ+ம்: கலண்டர், மை ஒற்றுத் தாள், பொருட்காட்சி முதலியன.
7. சினிமாப் படக் காட்சி.

(ஈ) விலைக் கொள்கை :
(Pricing Policy)

உற்பத்திசெய்த பொருட்களின் விலையை நிர்ணயிப்பது விலைக்கொள்கை

எனப்படும். இவ் விலைக்கொள்கையை முடிவுசெய்யும் பொறுப்பு விற்பனை நிர்வாகி யினுடையதாகும். விலைக்கொள்கையை முடிவுசெய்யும் காரணிகள் தொழிலுக்குத் தொழில், ஆலைக்கு ஆலை, நிலையத்திற்கு நிலையம் வேறுபடுவதுண்டு. இருப்பினும் எல்லாச் சூழ்நிலைகட்கும் பொதுவான சில அம்சங்கள் உள்ளன. அவையாவன:

(அ) ஒரு சரக்கின் உற்பத்தி விலையில் அதன் உற்பத்தி விலை, தயாரிப்பாளருக்கு நியாயமான இலாபம் ஆகியவை சேர்ந்திருக்கும்.

(ஆ) அதே சரக்கினை உற்பத்தி செய்யும் மற்றைய உற்பத்தியாளர்களின் விலையை அறியவேண்டும். தனது விலைக்கும், மற்றைய உற்பத்தியாளர்களின் விலைக்குமிடையில் ஏற்றத்தாழ்வு இல்லையாயின் எப்படித் தமது உற்பத்தியில் சிக்கனத்தை ஏற்படுத்தித் தமது விலையைக் குறைக்கலாம் என்று ஆராய வேண்டும். மற்றைய உற்பத்தியாளரை விடத் தமது உற்பத்தி விலை அதிகமாயின் அப் பொருளின் உற்பத்தியினைத் தொடர்ந்து நடாத்த முடியுமா என ஆராய வேண்டும்.

(இ) குறிப்பிட்ட விலைக்கு மக்கள் தம் பொருட்களை வாங்கின்றனரா என சந்தை ஆராய்ச்சிமூலம்அறிந்துகொள்ளவேண்டும்.

(ஈ) சரக்குகளின் தரமும், மக்கள் அதனை எங்ஙனம் விரும்புகின்றனர் என்பதும், ஆடம்பரத்தினையும், சமூகத்தில் உயர்ந்த நிலைமையையும் நிலைநாட்ட வேண்டிச் சாதாரண ஒரு பொருளுக்குக் கூட மிகுதியானவிலையினைச் சிலர் கொடுக்க முன்வரலாம். பொதுவாகச் சரக்கை வாங்குபவர்கள் தமக்கு அது தேவைப்படுவதால் தான் வாங்குகின்றனர். எனவே அவர் விலையினைப்பற்றி இரண்டாவதாகத் தான் எண்ணுவார். சரக்கினை குறைவான விலைக்கு விற்கப்படுமாயின் அதன் காரணத்தினைக் குறித்து ஐயப்படுவதுண்டு. ஆகவே சரக்கின் விலைக்குத் தக்க அளவுக்கு மேல் முக்கியத்துவம் தரவேண்டுவதில்லை.

(உ) சரக்கு இருப்பாக இருந்தால் அதனை விற்பனைசெய்யநீண்டகாலம் ஆகும் என எதிர்பார்த்தால் அது விற்பனையாகாமல் கைஇருப்பாகக் கிடக்கும் காலத்திற்கு ஆகும் வட்டியையும் விலையுடன் சேர்த்து விடல் வேண்டும். இதனால் சரக்கின் விலை அதிகமாகும்.

சரக்குகளைச் சந்தை விலைக்குக் குறைவாகவோ சந்தை விலைக்கோ அல்லது சந்தை விலைக்கு அதிகமாகவோ விற்க விற்பனை நிர்வாகம் முடிவுசெய்யலாம். சந்தை விலைக்குக் குறைவாக விற்பனை செய்வதன் நோக்கம் போட்டியாளர்களை வெல்லவே. ஆனால் இந்த விலை பொருளின் அடக்கவிலைக்குக் குறைவாக இருக்கக்கூடாது. அவ்விலைக்குக் குறைவாக விற்றால் நட்டம் வரும். ஆகவே மற்றைய விற்பனையாளர் விலைக்கு சிறிது குறைவாக விற்பதே சந்தைவிலைக்குக் குறைவான விலை என்கின்றோம். மிகக் குறைந்த இலாபம் இவ் விற்பனையில் வருவதால் மிக அதிகமானசரக்குகள் விற்பனையாகும். அதிகசரக்குகள் விற்பதால் பெரும் இலாபம் கிடைக்கும்.

விலைக்கொள்கையில் முடிவுசெய்ய வேண்டிய மற்றும் ஓர் சிக்கலான செய்தி, எல்லோருக்கும் ஒரே விலையா அல்லது தயாரிப்பு நிலையத்தின் அருகில் இருப்பவர்களுக்கு ஒரு விலையும், அங்கிருந்து தொலைவில் இருப்பவர்களுக்கு, தொலைவில் இருப்பதற்கு ஏற்றபடி அதிக விலையுமா, அல்லது பெரும்தொகையாக வாங்குபவர்களுக்கும் சில்லறையாக வாங்குபவர்களுக்கும் ஒரே விலையா என்பதும் ஆகும். பொதுவாகத் தாயாரிப்பாளர்கள் மொத்த விற்பனைவிலை என்று ஒருவிலையும், சில்லறை விற்பனை விலை என்று வேறு ஒரு விலையும் நிர்ணயித்து அதன்படி விற்பனையை நடாத்துவர். குறிப்பிட்ட விலைக்குக் குறைவாக விற்பனைசெய்தால் மக்களுக்குச் சரக்கினைப்பற்றி, தவறான அபிப்பிராயம் தோன்றும். எனவே உற்பத்தியாளர்கள் விற்பனை விலையைக் கட்டுப்படுத்துவதுமுண்டு.

(உ) **விநியோக வழிமுறைகள்** :

சந்தைப்படுத்தற் துறையில் சரக்கினை உற்பத்தியாக்கி நுகர்வோரை அடையும் வரையும் பல கைகள் மாறுகின்றன. உற்பத்தி யாளருக்கும் சரக்கினைப் பெறும் நுகர்வோருக்கும் இடையே சரக்குகளை கையாளுவோரை இடைநிலையர் (Middle men) எனப்படுவர். எனவே ஒரு உற்பத்தி ஸ்தாபனம் தனது உற்பத்திப் பொருட்களைப் பல வழிகள் ஊடாக விநியோகம் செய்து, சந்தைப்படுத்த முயற்சிகளை எடுக்க வேண்டும்.

நேரடிக் கிளைகள் மூலம் விற்பது:



முகவர், நடுநிலையர் மூலம் விற்பது:



மேற்காட்டிய படத்தின்படி ஸ்தாபனம் சரக்கினை உற்பத்தியாக்கி பின் அச் சரக்கினை எத்தகைய வழிகள் ஊடாக நுகர்வோர் கையை அடையச் செய்தல் என்பதை இது குறிக்கும். எனவே நிறுவனத்தின் விநியோக முறையில் முக்கியமாக:

1. தனது நேரடிக் கிளைகள் மூலம் விற்பது.
2. முகவர், நடுநிலையர் மூலம் விற்பது.

தனது நேரடிக்கிளைகள் மூலம் விற்பதாயின் அதன் செலவு (Cost), காலம், அமைப்பு திறனுகப் பயன்தருமா, என்பதனை ஆராயப்படல் வேண்டும். ஆகவே நேரடியாக தமது கிளைகள் மூலம் கொடுத்து நுகர்வோருக்குச் சந்தைப்படுத்துவதாயின் ஒரு சிறிய இலாபத்தினை மட்டும் கிளைகள் வைத்து விற்கக்கூடியதாக இருக்கும். ஏனெனில் இதில் இடைநிலையர்களில் கிளைகள் மட்டும்தான் காணப்படுவர்.

முகவர், நடுநிலையர்கள் மூலம் சந்தைப்படுத்துவதாயின் இங்கு இடைநிலையர்கள் அதிகம் காணப்படுவர். உற்பத்தியாளன் நேரடியாக மொத்த வியாபாரிகளுக்கும், மொத்த வியாபாரி சில்லறை வியாபாரிகளுக்கும், பின்பு சில்லறை வியாபாரிகள் பொதுமக்களுக்கும் (நுகர்வோருக்கும்) விநியோகிப்பர். எனவே ஒவ்வொரு இடைநிலையர்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப சிறிய இலாபங்களை பொருளின் விலைமீது சேர்த்து விற்பதனுல் இறுதியாகநுகர்வோரை அடையும்போது நுகர்வோர் கூடிய விலையைக் கொடுக்கவேண்டி நேரிடும். இதனுல் நுகர்வோர் பொருட்களுக்கு அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்வார்களா என்பது சந்தேகத்திற் கிடமானதாகும். எனவே இரு வழிகளில் நுகர்வோரைப் பாதிக்காத வகையில் தேர்ந்து எடுக்க வேண்டும். இரண்டு வழிகளிலும் நன்மைகளும், தீமைகளும் இருந்த போதிலும் சரியான வழிமுறையை தேர்ந்து எடுத்து விநியோகம் செய்வது சிறந்ததாகும்.

3. சந்தை ஆராய்ச்சி: (Market Research)

சரக்குகளை உற்பத்திசெய்யமுன் உற்பத்தியாளர்கள் எந்த அளவிற்குச் சரக்குகளை உற்பத்திசெய்வது என்று நிர்ணயிக்க வேண்டும். அந்த அளவை நிர்ணயிக்கச் சரக்குகள் எந்த அளவிற்குத் தேவைப்படுகின்றது என்று தெரியவேண்டும். தேவைக்கு மேலதிகமாக உற்பத்திசெய்து விட்டால் சரக்குகள் விற்காமல் தேங்கி உற்பத்தி குறைவடைகின்றது. இதனுல் வேலையின்மை நிலையும் வந்துவிடும். தேவைக்குக்குக் குறைவாக உற்பத்திசெய்தால் நுகர்வோர் இன்னல்படுவர். ஆகவே தேவையும், நிரம்பலும், சமமாக இருக்கக் கூடியதாக உற்பத்தி செய்யவேண்டும்.

குறிப்பிட்ட ஒரு சரக்கு எவ்வளவு விற்கப்படுகின்றது எவரால், எங்கு, எப்போது விற்படுகின்றது என்ற செய்திகளை ஆராயவேண்டும். விற்பனைபற்றிய புள்ளி விபரங்களைச் சேர்க்கவேண்டும். விற்பனை குறைந்தால் காரணத்தினை ஆராய வேண்டும். சரக்கின் விலை அதிகரித்தால் விற்பனை குறைந்துவிட்டதா, அல்லது போட்டியின் காரணமாக வேறு தயாரிப்பாளரின் சரக்குகளை மக்கள் வேண்டத் தொடங்கிவிட்டனரா, என்று ஆராய்ச்சி செய்யவேண்டும். அல்லது தரம் மாறிவிட்டதா என ஆராயவேண்டும். குறிப்பிட்ட இடங்களில் விசாரணைகள் நடாத்தியும், மற்றும் சில இடங்களில் விற்பனைச் சோதனைகளை நடாத்தியும், புது விற்பனை முறைகளின் விளைவு பயன்தருகின்றதா, இல்லையா என்பதைக் கண்டறியலாம்.

நுகர்வோர் விருப்பு வெறுப்புக்களையும் பழக்க வழக்கங்களையும் கண்டறிய, நுகர்வோர் ஆராய்ச்சி நடாத்தப்படுகின்றது. அவர்களுக்கு வினுக்கொத்துக்களைச் சில்லறை விற்பனையாளர் மூலமும், தபால் மூலமும் அனுப்பி விடை பெறுவது வழக்கம். வினுக்கொத்தில் அச் சரக்கினை

விரும்பி வேண்டக் காரணம் என்ன, அதன் விலையைப் பற்றிய எண்ணம், நுகர்வோர் சரக்கினைப்பற்றிக் கூறும் சிறப்பு அச்சம் போன்ற பல அம்சங்கள் இடம் பெறும். வினாக்கள் அதிகமாக இருப்பின் அவர்கள் விடைகள் எழுதச் சோம்பல் படுவார்கள். எனவே ஓர் அளவான எண்ணிக்கையுடைய வினாக்களாக இருக்க வேண்டும். அத்துடன் விடைகள் அனுப்புவதற்குத் தபாற் செலவு கொடுத்து அனுப்பும்போது அது அச் செலவு இன்றி அனுப்புமாறு ஆராய்ச்சியாளர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். சில சமயங்களில் நுகர்வோர் வீட்டிற்குச் சென்று சரக்கினைப்பற்றி அவர்கள் கூறும் செய்திகளைப்பற்றிக் குறித்து வருவதுமுண்டு. இம்முறை ஆராய்ச்சியாளர்களுக்கு கூடுதலான பயனை அளிக்கும். எனவே சுருங்கக்கூறின் சந்தை ஆராய்ச்சியை நடாத்துவதன்மூலம் தயாரிப்பாளர்கள் தம் சரக்குகளின் தேவையை நிர்ணயிக்கவும், புதுச் சரக்குகளைப் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்யவும். அதன் விளைவுகளை சரியானமுறையிற் புரிந்துகொள்ளவும் முடிகின்றது. இதனால் சரக்குகளை விற்பதில் நட்டங்களைத் தவிர்ப்பது மட்டுமன்றி, பெருமளவு விற்பனையால் சிக்கனங்களும் அடையமுடிகின்றது.

4. விற்பனையின் பின் சேவையும், சந்தைப் பிரதிபலிப்பும்:

விற்பனைத் திட்டத்தின் இறுதி முக்கியமான தொழிற்பாடு விற்பனையின் பின் சேவையாகும். அதாவது விற்பனையாளர்கள் தங்களிடம் வேண்டிய பொருட்களை (சரக்குகளை) வேண்டியவரிடம் தாங்களே கொண்டுசென்று அவரிடத்தில் ஒப்படைத்தலைக் குறிக்கின்றது. இச் சேவை வாங்குபவர்களைத் தொடர்ந்தும் வாங்குவதற்கு ஊக்கப்படுத்துகிறது. இன்று நாம் காணக்கூடியது என்னவெனில் சில்லறை விற்பனையாளர்கள் தாங்கள் விற்பனை செய்த பொருட்களைத் தங்களது விற்பனை நிலையத்திற்கு வெளியே வாங்கியவர்களின் வாகனங்களில் தாங்களே ஏற்றிவிடுகின்றனர். இதேபோல், மொத்த வியாபாரிகள் தங்களது சொந்த வாகனங்களில் சில்லறை வியாபாரிகள் வாங்கிய பொருட்களை அவர்களது வியாபாரநிலையங்களில் கொண்டு சென்று ஒப்படைக்கின்றனர். எனவே பெரும்பாலான மொத்த வியாபாரிகளுக்கு வாகனங்கள் அவசியமாகத் தேவைப்படுகின்றன. எனவே விற்பனைத் திட்டத்தில் வாகனங்களுக்கு எனப் பராமரிப்பு ஸ்தாபனம் ஒன்று அமைக்கப்படவேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே மொத்த வியாபாரியின் வியாபார ஸ்தாபனத்தில் நல்ல ஓர் முறையான வாகனப் போக்குவரத்து அவசியம் தேவைப்படுகின்றது. ஆகவே வாடிக்கையாளர்களின் பொருட்களைத் தாங்களே கொண்டுசென்று சேர்ப்பதால் விற்பனையை மேலும் மேலும் மேம்படுத்தக்கூடியதாக இருக்கும்.

முதல் குறைப்பு மீதி

முதல் குறைப்பின் போது மீதி ஏற்பட்டிருந்து அதுபற்றிக் கணக்கில் எதுவுஞ் சொல்லாது விடப்பட்டிருப்பின் அதனை ஒரு மூலதன ஒதுக்கமாகக் கருதி ஐந் தொகையில் காட்டலாம். இது கட்டாயம் செலவு மீதியாகவே இருக்கும்.

The best wishes
from

General Rice Merchants
&
Commission Agents,
Dealers in Sri Lanka Produces

M. Letchumanan & Co.
133, Old Moor Street,
COLOMBO-12
T'Grams: **'Muruga'** *T'Phone* : **33487**

With the best Compliments
from

M/s. RANJANA STORES
52, Bankshall Street,
COLOMBO-11

The Best wishes
from

Dealers in :
Tyres, Tubes, Chemicals,
Hardware, Estate Supplier,
&
Transport Agents

JAILAXMI STORES
91-A, Maliban Street, COLOMBO-11
T'Phone: **26149**
T'Grams **'Jeya Export'**
Branch:
J. L. S.
MADULKELLE
Phone: **807**

விந்தியோதயத்துக்கு எமது
வாழ்த்துக்கள்!

உள்ளூர் விளைவுப்பொருள்
விற்பனையாளர்கள்

ராஜா ஸ்டோர்ஸ்
RAJA STORES
54, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி : **26722**
25176
தந்தி :
'பார்கெயின்

மனமுவந்த அன்பளிப்பு !

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின்
கமிஷன் விற்பனையாளர்.

வெலிகம ஸ்டோர்ஸ்
Weligama Stores
139, 4-ம் குறுக்குத் தெரு
கொழும்பு-11

அன்பளிப்பு!

பல்வகை உள்ளூர்
விளைபொருள்
விற்பனையாளர்கள்

PEOPLES TRADE
&
SUPPLIES
112, 4-ம் குறுக்குத் தெரு,
143, மலிபன் வீதி,
கொழும்பு-11
தந்தி : 'சரவணன்' போன்: 25389
23509

With Best Compliments
from

M/s. Vasanda's Ltd.
104, Third Cross Street
COLOMBO-11
T'Phone : 27871.

சுதந்திர வர்த்தக வலையம் — ஓர் அறிமுகம்

இ. இராசசுந்தரம்
வர்த்தகவியல் (சிறப்பு)
இறுதிவருடம்

சுதந்திர வர்த்தக வலையம் முதன் முதலில் அயர்லாந்தின் "சணன்"(Shannan) எனும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சிங்கப்பூர், பிரான்ஸ் ஹொங்ஹொங், எகிப்து. மொறிசியஸ், நைஜீரியா, சல்வடோர், பிறேசில், தாய்லாந்து போன்ற நாற்பது நாடுகளில் நடைமுறைக்குட்பட்டுள்ளது. இலங்கையில் 1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதற்கிணங்க ஒரு சுதந்திர வர்த்தக வலையத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக கொழும்புக்கு வடக்கேயுள்ள பகுதியில் 150 சதுரமைல் ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் நடவடிக்கையாக கட்டுநாயக்காவில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு வலையக் கைத்தொழிற்பேட்டை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. சுதந்திர வர்த்தக வலைய எல்லையை தேவைக்கேற்ப விஸ்தரிக்கலாம்.

சுதந்திர வர்த்தக வலையம் எனுமிடத்து வெளிநாட்டு மூலதனத்தைக் கவரக்கூடியதும், கட்டுப்பாடுகளற்றதுமான ஒரு கைத்தொழில் பேட்டையையே கருத்துக் கொள்ள ஏதுவாகின்றது. இவ்வரைவிலக்கணத்தை மட்டும் கொண்டு சுதந்திர வர்த்தக வலையத்தையிட்டு பூரணமாக ஆராய முடியாது. அதனையிட்டு மேலும் ஆராய்வதாயின் அதன் செயற்பாடுகள் என்னவென்ற தரவுகள் அவசியமாகும். எனவே அச்செயற்பாடுகளை ஆராய்வோம்.

சுதந்திரவர்த்தக வலையத்தை அமைக்கும் பொறுப்பு கொழும்பு பாரிய பொருளாதார ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுதந்திர வர்த்தகவலைய எல்லைக்குள் வெளிநாட்டு மூலதனமாயினும்சரி

உள்நாட்டு மூலதனமாயினும்சரி அனுமதிக்கப்படும். வெளிநாட்டு முதலீடும் சோசலிச நாட்டினதானாலென்ன முதலாளித்துவ நாட்டினதானாலென்ன அனுமதிக்கப்படும். ஆனால் எந்த ஒரு மூலதனமாவது எமது நாட்டிற்குத் தீமை விளைவிக்கும் எனக் கருதப்பட்டால் அதைத் தவிர்த்துக் கொள்ள முடியும். ஒரு மூலதனம் அனுமதிக்கப்படுமுன் நன்கு ஆராய்ந்தே அனுமதிக்கப்படும். பெரிய அளவினதான மூலதனத்திற்கும் கூடிய வேலை வாய்ப்பளிக்கக் கூடிய மூலதனத்திற்கும் வரிச் சலுகைகள் அளிக்கப்படும்.

கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவும் முடியும். இப்படி இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களுக்கு இறக்குமதி வரியோ, சுங்கத் தீர்வையோ அறவிடப்படமாட்டாது. ஆரம்பத்தில் தொழில்நுட்பவியலாளர்கள் வருவிக்கப்படுவர். நாளடைவில் எமது தொழிலாளருக்கும் தொழில்நுட்பம் பயிற்றப்படுங்கால் வெளிநாட்டுத் தொழிலாளர் தேவைப்படமாட்டார்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காகவே உற்பத்தி செய்யப்படும். உற்பத்தியில் சிறு பகுதி எமது நாட்டிற்குள்ளும் விற்கப்படலாம். அப்படி உள்நாட்டிற்குள் அனுமதிக்கப்படும் பொருட்கள் யாவும் இறக்குமதிப் பொருட்களாகக் கருதப்பட்டு இறக்குமதி வரி விதிக்கப்படும். சுதந்திர வர்த்தக வலையத்தினுள் இலங்கையர் அல்லாதோர் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கவும், இரகசிய கணக்குகள் வைக்கவும் வசதிகள் வழங்கப்படும். இங்கு சுவிற்சலாந்து வங்கியமைப்பைத் தழுவி வங்கி முறை விருத்தி செய்யப்படும்.

இவ் வர்த்தக வலையப் பிரதேசத்திற்குள் உள்ள கிராமசபைகள், நகரசபைகள் யாவும் கலைக்கப்படும். இவ்வெல்லைக்குள் தேர்தல் எதுவும் நடாத்தப்படமாட்டாது. பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு ஒரு "உன்னத மாநகரசபை" யாக இயங்கும். இதன் பரிபாலனம் ஆணைக்குழுவினால் விசேட ஆணையாளர் மூலம் நடாத்தப்படும். சுதந்திர வர்த்தக வலைய எல்லைக்குள் மக்கள் சுதந்திரமாகப் போகவும் வரவும் வசதிகள் இருக்கும். சுதந்திர வர்த்தக வலையம் அதிக கட்டுப்பாட்டுக் குட்படமாட்டாது. தொழிற்சாலை அமைப்பு நிறுவன நிர்வாகம், வேலைக்கு ஆள்சேர்த்தல் போன்ற விடயங்களில் அரசின் தலையீடோ அன்றி வேறெவரின் தலையீடோ இருக்கமாட்டாது. இவை யாவற்றையும் தொழிலதிபர்களே கவனிப்பர். எமது நாட்டிலுள்ள பொதுவான சட்டங்கள் யாவும் செல்லுபடியாகாது. தொழிலாளர் சேமநலன்புரி சட்டங்கள் இவ்வெல்லைக்குள் செல்லுபடியாகாது. திருப்தியில்லாத தொழிலாளரை தொழிலதிபர் வேலைநீக்கம் செய்ய முடியும்.

சுதந்திரவர்த்தகவலையத்தை எவ்வாறு வெற்றிபெறச் செய்யமுடியும் என்பதை ஆராய்வதற்காக சுதந்திர வர்த்தகவலைய நிபுணர்கள் வெளிநாடுகளிலிருந்து அழைக்கப்பட்டுள்ளார்கள். எனவே அவர்களின் ஆலோசனைப்படி மேலும் சில மாற்றங்கள் செய்யப்படக்கூடும்.

சுதந்திர வர்த்தகவலையத்தின் வெற்றி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வந்து முதலிடுவதிலேயே தங்கியுள்ளது. எனவே முதலீட்டாளர் இங்குவந்து முதலிடத் தூண்டும் காரணிகளை ஆராய்வோம்.

ஒரு முதலீட்டாளன் தனதுமுதலீட்டை ஈடுபடுத்தமுன் அம்முதலீட்டின் பாதுகாப்புத் தன்மை, இலாபத்தன்மைஎன்பவற்றை நன்கு ஆராய்ந்தே முதலிடுவான். முதலீட்டின் பாதுகாப்புத்தன்மை அரசியல் ஸ்திரத்திலேயே தங்கியுள்ளது. இலாபத் தன்மை வெற்றிகரமாக அமைய, உற்பத்திப் பொருட்கள் சந்தையில் ஸ்திரமான இடத்தைப் பிடிக்கவேண்டும். அதற்கு உற்பத்திச் செலவில் முக்கிய இடத்தை வகிக்கும் கூலி மலிவாகவும் போதியதாகவும் காணப்படவேண்டும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் தொழில்நுட்ப வளர்ச்சியினால் கூலி வீதம் கூடிக் காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே கூலி வீதம் குறைவாகவே உள்ளன. ஆசியாவில் உள்ள அநேக சுதந்திர வர்த்தக வலையங்களில் கூலிவீதம் கூடிச்சென்றுள்ளது. எனவே அபிவிருத்தியடைந்துவரும் எமது நாட்டில் கூலி வீதம் அவர்கட்குச் சாதகமாகவே காணப்படுகின்றது. எமது நாட்டில் பட்டதாரிகள் உட்பட 15 லட்சம் பேர் வேலையற்றுக் காணப்படுவதும், வேலையிலுள்ளவர்களிலும் பலர் தமது தகமைக்கேற்ப வேலையின்றி கீழ் உழைப்பிலுள்ளதும் முதலீட்டாளருக்கு குறைந்த கூலி வீதத்தில் கூடிய தொழிலாளர்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையைத் தூண்டக்கூடியதாகவுள்ளது,

கைத்தொழில் வளர்ச்சியடைய நிதிச் சந்தையின் சேவை முக்கியமானதாகும். இலங்கையில் நிதிச்சந்தையின் வளர்ச்சி திருப்திகரமற்றதாகவே இருந்த போதும், அக்குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதாவது இப்பிரதேசத்துக்குள் பிறநாட்டு வங்கிகளை அமைக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் செலவாணி நடவடிக்கைகளில் கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக சுவிஸ் வங்கியமைப்பினைத் தழுவி இரகசியமானதான ஒரு வங்கியமைப்பு அமைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் புவியியல் காலநிலை கைத்தொழில் பொருட்களின் உற்பத்திக்கு பாதகமற்றதாகவேயுள்ளது. எந்த ஒரு காலத்திலும் பனியாலோ மழையாலோ எமது நாடு பாதிப்படைவதில்லை. எனவே வருடம்முழுவதும் தொடர்ந்து உற்பத்தி செய்யலாம். கொழும்பில் சுகாதாரவசதி, போக்குவரத்துவசதி, தொலைபேசித்தொடர்பு என்பவை யாவும் மிகச் சிறந்தவகையில் உள்ளமையும் புதிய முதலீட்டாளர்கட்கு வசதியாகவேயுள்ளது.

சுதந்திர வர்த்தகவலையம் அமைவதின் மூலம் எமது பொருளாதாரப் பிரச்சனைகள் யாவும் முற்றாகத் தீர்ந்துவிடாது. ஆனால் சில பிரச்சனைகளை ஓரளவுக்காவது குறைத்து விடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே அப்பொருளாதாரப் பிரச்சனைகளையும் அவற்றை எவ்வாறு சுதந்திர வர்த்தக வலையம் தீர்க்கும் என்பதையும் ஆராய்வோம்.

கைத்தொழில்துறையில்வளர்ச்சியுள்ள நாடுகளே பொருளாதாரத் துறையிலும் வளர்ச்சியுடையனவாகக் காணப்படுகின்றன. இலங்கையை நோக்குமிடத்து 1975ஆம் ஆண்டு தேசிய வருமானத்தில் 13·2 வீதத்தையே கைத்தொழிற்துறை வகித்துள்ளது. இது மிகக் குறைந்த அளவாகவேயுள்ளது. எனவே எமது பொருளாதாரத் துறையை முன்னேற்றக் கைத்தொழிற்துறையை முன்னேற்றவேண்டியது அவசியமாகிறது. கைத்தொழிற்துறையின் முன்னேற்றத்திற்குச் சுதந்திர வர்த்தகவலையம் பேரளவில் உடந்தையாக அமையலாம்.

ஒரு நாடு கைத்தொழில்துறையில் முன்னேறுவதற்கு மூலதன ஆக்கம் இடம் பெற வேண்டும். குறை விருத்தி நாடுகளில் ஆக்கவீதம் குறைவாகவே காணப்படுகின்றது—5%க்குக் குறைவாகும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவ்வீதம் உயர்த்தியாகும்—15%—20%வரை காணப்படுகின்றது. இலங்கையிலும் ஆக்கவீதம் குறைந்துள்ளதற்குக் காரணம் குறைந்த சேமிப்பு மட்டமேயாகும். இருக்கும் சிறிது முதலீடும் குறுகிய கால பலனளிக்கும் நுகர்வில் முடக்கப்படுகின்றனவேயன்றி உற்பத்தித் துறையை நோக்கிச் செலுத்தப்படவில்லை.

மூலதன ஆக்கம் குறைவாக இருப்பதால் நாட்டிற்கு அவசியமாகும் மூலதனத்தை, உள்ளூர் சேமிப்புக்களை அதிகரித்தல், வெளிநாடுகளிலிருந்து கடன்களைப் பெறல், வெளிநாட்டு மூலதனங்களை ஈர்த்தல் ஆகிய முறைகளிலேயே பெறமுடியும்.

எமது நாட்டு மக்களின் சராசரி வருமானம் குறைவாக இருந்து அன்றாட வாழ்க்கைச் செலவுக்கே போராடிக்கொண்டிருக்கும் போது உள்ளூர்ச் சேமிப்பு மட்டத்தை உயர்த்தி அதன்மூலம் மூலதனத்தை அதிகரிப்பது முடியாத காரியமாகும். அடுத்து, வெளிநாட்டுக் கடன்களைப் பெறல், நாட்டை ஈடுவைப்பதற்குச் சமமானதாகும். ஆனாலும், இதையே நாம் பல காலமாகச் செய்துவருகின்றோம். கடன்களையும் அவைக்கான வட்டிகளையும் திருப்பிச் செலுத்தவேண்டிய பெரும் பொறுப்பு எமக்குள்ளது. எமது ஏற்றுமதி வருமானத்தில் $\frac{1}{3}$ பங்கு இக் கடன்களை அடைக்கவே இன்று பிரயோகிக்கப்படுகின்றது. இப்படிப் பெறும் கடன்களும் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடாது நுகர்ச்சி சம்பந்தமாகச் செலவிடப்படுவது மற்றுமோர் பெரும் குறைபாடு. அத்துடன் எம்மை நம்பிக் கடன் தருவோரும் குறைவாகவேயுள்ளனர். அடுத்து, முதலீடுகளை ஈர்ப்பதற்கு இதுவரை காலமும் அரசு எடுத்த முயற்சிகள் யாவும் போதிய திருப்தியளிக்கவில்லை. எனவே, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வழியில் சுதந்திர வர்த்தக வலையம் பயன்படுத்தப்படும்.

எமது நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக் குறைவுக்கு மற்றுமோர் காரணம் மனித மூலவளம் பற்றாக்குறையேயாகும். மனித மூலவளம் பற்றாக்குறைவு என்னும் போது இருக்கும் மூலவளத்தைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய தொழில்நுட்ப அறிவுடைய தொழிலாளர் குறைவாகவே காணப்படுகின்றனர் என்பதையே கருதப்படுகிறது. நாட்டில் 15 லட்சம் மக்கள் வேலையற்றுக் காணப்படுகின்றனர். இவர்களுள் கல்விகற்றோர் பெரும்பகுதியினரெனினும் தொழில்நுட்ப அறிவு கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகுறைவாகும். வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் தொழில்நுட்ப பயிற்சியின் மூலம் இக்குறைபாட்டைத் தீர்த்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை போதிய திருப்தியை அளிக்கவில்லை. ஆனால் சுதந்திர வர்த்தக வலையம் அமையப்படின் வருவிக்கப்படும் வெளிநாட்டு தொழில்நுட்ப நிபுணர்களூடாக எமது நாட்டுத் தொழிலாளிகளுக்கு தொழில் நுட்ப அறிவு புகட்டப்படும் வாய்ப்பு உண்டு எனலாம்.

கைத்தொழில் வளர்ச்சி குறைவுக்கு அரசியற் தலையீடு இன்னுமொரு காரணமாகலாம். நமது நாடு சுதந்திரம் பெற்று 30 வருடங்களாகின்றது. இக்காலப் பகுதியில் கைத்தொழிற்துறையை நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்கம் கட்டுப்படுத்தி வருவதையே காணக்கூடியதாகவுள்ளது. மூலப்பொருள் இறக்குமதிக் கட்டுப்பாடு, ஆள் சேர்த்தல் மற்றும் நிர்வாக விடயங்களில் அரசியல்வாதிகள் தலையிடுவதனால் இலாபம் தரக்கூடியதான முயற்சிகளை மேற்கொள்ள தொழிலதிபர்கள் இடைஞ்சல்களுக்கு உள்ளாகின்றனர். ஆனால் சுதந்திர வர்த்தகவலையம் அமையுங்கால் உள்நாட்டு முதலீட்டாளர்களும் முதலீடு செய்து இலாபம் சம்பாதிக்கலாம். இங்கு நடைமுறையில் உள்ளதுபோல் அரசியல் வாதிகளின் உறவினர்களோ ஆதரவாளர்களோ வேலைக்குச் சேர்க்குமாறு கட்டாயப்படுத்தவும் முடியாது. திறமையற்ற முகாமைக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனவே கைத்தொழில் வளர்ச்சியுற வழிவகுக்கலாம்.

எமது நாடு எதிர்நோக்கும் பிரச்சனைகளுள் பாதாரமானதும், உடன் தீர்க்கப்படவேண்டியதும் வேலையில்லாப் பிரச்சனையாகும். சுதந்திர வர்த்தகவலையத்தில் எமது நாட்டுத் தொழிலாளர்களே பிரயோகிக்கப்படுவாராகையால் ஏறக்குறைய $1\frac{1}{2}$ லட்சம்பேர் வேலைகொள்வர் என அரசாங்கம் நம்புகின்றது.

அடுத்து நாம் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சனையாக செலாவணிப் பற்றாக்குறையைக் கூறலாம். எமது ஏற்றுமதி வருமானம் குறைவடைந்துள்ளமை

யும் இறக்குமதிச் செலவினம் கூடியுள்ளமையும் செலவாணிப் பற்றுக்குறையை உண்டுபண்ணிற்று. சுதந்திர வர்த்தகவலையம் அமையுங்கால் அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்களின் கூலி, மற்றும் எமது மூலப்பொருட்களை விற்பதன்மூலம் பெறும் வருவாய் யாவும் எமது செலவாணிப் பிரச்சனைக்கு ஓரளவு தீர்வாக அமையும்.

எமது நாட்டில் கைத்தொழில் துறையின் உற்பத்தி அளவு சுதந்திர வர்த்தக வலையம் மூலம் பாதிப்படையும்எனக் குறை கூறப்படுகின்றது. இலங்கையில் நிலவும் கைத்தொழில்கள் பெரும்பாலும் தரமானவையாகவே காணப்படுகின்றது. உதாரணமாக இலங்கை புகையிலைக் கம்பனி, மகாராஜா ஒகனைஸ்சேசன் என்பன உலகக் கைத்தொழில்களுடனேயே போட்டிபோட வல்ல தரம் மிக்கவையாகும். அத்துடன் இன்று இறக்குமதித் தடை நீக்கியபின்பும் உள்நாட்டு கைத்தொழில்கள் இலாபம் சம்பாதித்துக்கொண்டே இருக்கின்றன. சுதந்திர வர்த்தகவலையத்தில் ஏற்றுமதிக்காகவே உற்பத்திசெய்யப்படும். உள்நாட்டுக்குள் வரும் சிறிய தொகைகூட இறக்குமதியாகக் கருதப்பட்டு விசேட தீர்வை விதிக்கப்படும். எனவே சுதந்திர வர்த்தக வலையம் வருமுன் இருந்த இறக்குமதிக் கட்டுப்பாடற்ற நிலைக்கும் சுதந்திர வர்த்தக வலையம் வந்தபின் இருக்கவுள்ள நிலைக்கும் வேறுபாடில்லை. அப்படி ஒரு சிறு அளவிலான உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாதிப்படைகிறார்கள் என்று கருதினாலும் கூட தரம்குறைந்த ஒரு சில தொழிலதிபர்கள் மூலவளங்களைத் திறனற்ற முறையில் பாவித்துக் கூடிய இலாபம் பெறுவதற்காக நாட்டிலுள்ள 140 லட்சம் மக்களும் பாதிப்படைவது நியாயமாகாது.

தொழிலாளர்களின் நலன்களைப் பேணும் சட்டங்கள் சுதந்திர வர்த்தக வலைய எல்லைக்குள் செல்லுபடியாகாது எனப் பொதுவாகக் கருதப்படுமிடத்து நம் நாட்டுத் தொழிலாளிகளை வெளிநாட்டு முதலாளிகள் சுரண்ட ஏதுவாகும் எனும் குற்றச்சாட்டு உண்டு. ஆனால் வர்த்தக வலையத்தில் வேலை செய்வோருக்கு ஆரம்ப கட்டத்தில் வழங்கப்படும் ஊழியமானது நாட்டில் ஏனைய பகுதியில் வேலை செய்யும் தொழிலாளர்கட்குக் கிடைப்பதை விட சிறிது அதிகமாகவே கிடைக்கும் எனப் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே தொழிலாளர் சுரண்டப்படும் சந்தர்ப்பம் குறைவாகவே காணப்படுகின்றது. இன்னும் நவீன முகாமைத்துவக் கொள்கைப்படி தொழிலாளர்களை நிரந்தரமாகவும், விசுவாசமாகவும் தொழில் புரியத் தூண்டுவதற்காக அவர்களுக்கு விசேட வசதிகள், சலுகைகள் அளிக்கப்படலாம். எது எப்படியிருப்பினும் அரபு மற்றும் நாடுகட்கு நம்மவர் வேலைதேடிச் சென்று அவதியுறுவதிலும் பார்க்க எமது நாட்டிலேயே வேலைபெறும் வாய்ப்பு நல்லது என்றே கூறவேண்டும்.

சுதந்திர வர்த்தகவலையம் அமைவதன் மூலம் அங்கு முதலிடவரும் முதலீட்டாளர்கள் எமது நாட்டு அரசியலில் தலையிட்டு எமது இறமை பாதிக்கப்படும் எனவும் குறை கூறப்படுகின்றது. முதலீட்டாளர்களோ குறுகிய கால இலாபம்பெறும் நோக்குடனேயே இயங்குவர். எனவே இவர்கள் தொடர்ந்தும் தமது நலன்களைக் காக்க உள்நாட்டு அரசியலில் ஈடுபடமாட்டார்.கள். எனவே இறமையும் பாதிப்படையாது.

With the best Compliments
from

Importers, Exporters,
General Merchants
&
Commission Agents

S. V.
KARUPPIAH & SONS

28, MANIPAY ROAD,
JAFFNA.

T'Phone: 7154
T'Grams: 'ESVEEKAY'

With the best Compliments
from

CITY BAKERY
&
TEA ROOM

220, Hospital Road,
JAFFNA.

எமது நல்வாழ்த்துக்கள்!

சாரதாதேவி இண்டஸ்ரீஸ்

98/1, வில்சன் வீதி,
கொழும்பு-12.

போன்: 26247

சுத்தமாகவும் சுவையாகவும்
தயாரிக்கப்பட்ட கீழ்க்காணும் சிறந்த
பொருட்களை எமிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

- பப்படம்—அம்மாமி மார்க்
  —மெங்கூஸ் மார்க்
  —பி. கே. ஜீ. மார்க்
- உழுத்தம்பருப்பு
- உழுத்தம்மா
- கேப்பைமா
- அரிசி மா
- சோளம் மா
- உள்ளூர் பருப்பு வகை
- மிளகாய்த்தூள்
- மசாலைத் தூள் மற்றும்
- ஹாட்வெயர்பொருள்கள்

விநியோகஸ்தர் :

சாரதாதேவி அன் கோ.

21, மூன்றாம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

போன்: 26938 தந்தி: 'Freshpack

இலங்கையில் விவசாயத்துறை தொடர்பான போக்குவரத்து முயற்சியும் சந்தைப்படுத்தலும்

கலாநிதி க. சுந்தரலிங்கம்
M. Sc. (Econ.) (Lond.);
Ph. D.(Lond.); A. M. Ins. T. (Lond.)
பிரதிப் பணிப்பாளர் — மார்கா நிறுவனம்,
பகுதிநேர விரிவுரையாளர்
வித்தியோதய வளாகம்

எமது நாட்டில் இன்று விவசாய முயற்சிகளுக்கும் பேரளவு முக்கியத்துவம் வழங்கப்படுவது விளங்கற்பாலது. கடந்த பத்தாண்டு காலத்துள் விவசாயத் திட்டங்கள் பல இடம்பெற்றுள்ளன. எதிர் காலத்திலும் பல திட்டங்கள் இடம்பெறவுண்டு. பிரதானமாக, மகாவலித் திருப்புத் திட்டத்தினுள் பெரியதும் சிறந்ததுமான பல விவசாயத் திட்டங்களை நாம் எதிர் பார்க்கலாம். ஆயினும், அம் முயற்சிகளின் வெற்றி ஆங்காங்கு இடம்பெறும் உற்பத்தி முயற்சிகளுக்கூடாகப் பெறப்படும் விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் சிறப்பினில் தங்கியிருக்கும் என்பது மறுப்பதற்கில்லை. சந்தைப்படுத்தும் முயற்சியில் போக்குவரத்து பிரதான ஸ்தானத்தை வகிக்கின்றது என்பதும் மறுத்தற்குரியதன்று.

இன்று ஆக்குவோர் தம் விவசாயப் பொருட்களுக்குக் கொள்ளும் விலையிலும் பார்க்க நுகர்வோர் அவற்றிற்குக் கொடுப்பது அதி உயர்வாக இருப்பது புலனாகும். அவ்விலை வேறுபாட்டிற்கு நடுவனே காரணமென்று உறுத்தப்படும் அதே வேளையில், அவன் தான் கொள்ளும் இலாப மட்டங்கள் பிறர் கருதுவதைப் போன்று அதி உயர்வானதல்லவென்றும் நுகர்வோருக்கும் ஆக்குவோருக்குமிடையே நிலவும் விலைமட்ட வேறுபாட்டிற்கு சந்தைப்படுத்தும் முயற்சி சம்பந்தமாகக் காணப்படும் வசதிக் குறைவுகளே அடிப்படைக் காரணம் என்று உறுத்த முன்வருகின்றான். இரு பாலார்களின் நியாய காரணங்கள் எவ்வளவு தூரம் ஏற்க வல்லனவென்பதை ஓரளவு ஆராயும் முகமாக விவசாயத்துறை

சம்பந்தமான சந்தைப்படுத்தும் தன்மைகளையும் அவை தொடர்பான போக்குவரத்துத் தன்மைகளையும் இங்கு சற்று அவதானிப்போம்.

சந்தைப்படுத்தல் என்றால் என்ன?

நுகர்வோர் விரும்பும் கால நேரங்களிலும் இடங்களிலும் அவர்கள் விரும்பும் தொகையளவுகளிலும் குறிப்பான பொருட்களை அவர்கள் விரும்பத் தகும் வழிகளில் அவர்களுக்கு வசதியான இடங்களில் கொண்டு சேர்க்கும் முயற்சியே சந்தைப்படுத்தல் எனப்படும். அம்முயற்சி தொடர்பான வேறும் பல முயற்சிகளை நாம் அடையாளம் கொள்ள ஏதுவாகின்றது. அவையாவன:— பொருட்களை ஒன்றுசேர்த்தல், துப்பரவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பெட்டியில், சாக்கில் அல்லது தகர டப்பாவில் அடைத்தல், ஆரம்ப முறைக்கான பதப்படுத்தல், போக்குவரத்து, நிதி மற்றும் நிர்வாகக் கணக்குச் சேவைகள் ஆகியவற்றை வழங்குதல் ஆகும்.

ஆக்குவோனும் நுகர்வோனும் ஒரே நபராக இருக்கும் சந்தர்ப்பத்தில் சந்தைப்படுத்துதல் அவசியமற்றது என்பது புலனாகின்றது. நுகர்வோன் ஆக்குவோனுக்கருகாமையில் இருந்து ஆக்கப்படும் பொருட்களில் எவ்வித உருவ மாற்றத்தினையும் அவன் விரும்பாத தன்மையில் சந்தைப்படுத்துதல் இலகுவாகக் காணப்படும். அவ்வாறான சந்தைப்படுத்தும் தன்மையை இன்றும் நாட்டுப் புறங்களில் நாம் காண ஏதுவாகின்றது. ஆங்கு, நுகர்வோர் தாம் நுகரும் பொருட்களில் பெரும்பாலானவற்றைத் தாமே உற்பத்தி செய்துகொள்வர். அதுவன்றி ஆக்குவோர் தம் பொருட்களை நேரடியாகத் தாமே நுகர்வோருக்கு விற்பனைசெய்வர். ஆங்கு நடுவன் இடம் பெறமாட்டான். ஆகவே நகரப்புறத்தில் இடம் கொண்டுள்ள சந்தைப்படுத்தும் முயற்சித்தன்மை கிராமப்புறத்தில் இடம் பெறுவது இல்லை என்பதாகும். அந் நிலைமையில் நவீன சந்தைப்படுத்தும் முயற்சி தொடர்பாக மேற்கூறப்பட்ட முயற்சிகள் எவையும் இடம்பெறமாட்டா. அதன் காரணமாகச் சந்தைப்படுத்துதல் தொடர்பான செலவுகளும் தவிர்க்கப்படுகின்றன.

மேலும் கிராமப்புறச் சந்தைப்படுத்துதலில் போக்குவரத்துத் தேவைகளும் அதிகுறைவாகவே காணப்படும். எதிர்நிலையில், ஆக்குவோன் நாட்டுப்புறத்திலும் நுகர்வோன் பட்டினப்பகுதியிலும் வசிப்பவர்களாயிருப்பின் அவர்களிடையே நிலவும் பௌதீக இடைவெளி விசாலமாக இருப்பதைக்கொண்டு உற்பத்தியாக்கப்படும் பொருட்களை நுகர்வோர் பெற்றுக்கொள்ளும் தன்மையில் போக்குவரத்து அதிமுக்கியத்துவம் பெறுகின்றது. இடைவெளி விசாலமாகும் நிலையில் சந்தைப்படுத்துதல் சம்பந்தமான மற்றும் முயற்சிகள் இடம் பெறுவதுடன் நடுவனின் தனிப்பெருமையும் ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றது.

விவசாயப் பொருட்களுக்கான சந்தைப்படுத்தும் முயற்சிகள் பேரளவு சிக்கற் தன்மையைக் கொண்டு காணப்படுவதும் புலனாகும். பொருட்களின் தனி விசேட குணாதிசயங்களைக்கொண்டு விசேடத்துவம் கொண்ட சேவைகள் அவற்றிற்கு அவசியமாகின்றன. சாதாரண நடைமுறையில் விவசாயப் பொருட்களில் அநேகமானவை நெடுந்தூர இடமாற்றங்களுக்கு அருகதையற்றனவாகும். அவ்வகைத் தூரப் போக்குவரத்திற்குள்ளாகும் பொருட்களுக்கு அவைக்கென விசேட வசதிகள் அளிக்கப்படாத தன்மையில் நிறையிலும் தரத்திலும் அவை பாதிப்பிற்குள்ளாகும் விசேட களஞ்சிய வசதிகளில்லாத நிலையில் பழவகைகள், மரக்கறி வகைகள், மீன், இறைச்சி, பால் போன்ற பொருட்கள் அழிவுறுவது தவிர்க்கமுடியாது.

இலங்கையின் விவசாயப் பிரிவுகளும் அவற்றிற்கான போக்குவரத்து வசதிகளும்:

இலங்கையில் விவசாயத்துறையினை இரு பிரிவுகளுக்குள்ளாக்கலாம். ஒன்று

பெருந்தோட்டப் பிரிவு. அங்கு தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய மூன்று பயிர்களும் விசாலமான நிலப்பரப்புக்களில் பயிர் செய்யப்படுகின்றன. மற்றது சிறு தோட்டப் பிரிவு. இங்கு நெல் மற்றும் தானிய வகைகள் இதர உணவுப் பயிர்கள் மரக்கறி, பழவகைகள் யாவும் சிறு நிலத்துண்டுகளில் பயிரிடப்படுகின்றன.

விரிவடைந்த வர்த்தக அமைப்பு அடிப்படையில் பயிர் செய்கைக்குள்ளாகிய தேயிலை, இறப்பர், தென்னைப் பயிர்களுக்கான போக்குவரத்து வசதிகள் ஆரம்பம் தொட்டே, சிறு தோட்டப் பயிர்ச்செய்கை சம்பந்தமான வசதிகளிலும் திறன்வாய்ந்தனவாக இருந்துள்ளன.

1850 தொட்டு நிறுவப்பட்ட பெருந் தெருக்களும், பின்னர் இடம்பெற்ற புகையிரதப்போக்குவரத்து வசதிகளும் பெருந் தோட்டத்துறையைக்குறித்தே அமைக்கப்பட்டன. இன்று அத்துறை, சிறு தோட்டத் துறையிலும் திறன்வாய்ந்த போக்குவரத்து வசதிகளைக்கொண்டு காணப்படுவது ஏற்கற்பாலது.

ஆகவே, அத்துறையையிட்டல்லாது சிறு தோட்டத்துறையையிட்டே எமது கவனத்தைச் செலுத்துவது இங்கு அவசியமாகும். சிறு தோட்டப் பயிர்ச்செய்கை பிரதானமாக நாட்டுப்புறத்துடன் தொடர்பு கொண்டது. ஆங்கு விவசாயிகளில் பெரும்பாலோர் ஓர் ஏக்கருக்குக் குறைந்த பரப்பிற்குள்ளான நிலத்துண்டுகளிலேயே விவசாய முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் தம் சுய தேவைகளை நிவர்த்திசெய்யும் முகமாகவே விவசாயத்தில் ஈடுகொண்டவராவர். நெல், குரக்கன், இறுங்கு, கவ்பி, உழுந்து, பயறு, எள்ளு போன்ற பயிர்களை அவர்கள் பயிர் செய்து, வெளியீட்டினில் தேவைக்கு மேலதிகமானவற்றைத் தம் உள்ளூர்ச் சந்தைகளில் பிற வியாபாரிகளுக்கு விற்பர். உடனடியாகப் பழுதடையாப் பொருட்களை (நெல், எள்ளு, பயறு) சிறு காலம் களஞ்சியப்படுத்தி இறுதியில் விலைகள் சற்று உயர்ச்சிபெறும் தறுவாயில் தம் கிராமங்களுக்குப் புறத்தேயிருந்து வரும் வியாபாரிகளுக்கு விற்கும் தன்மை நிலவுவதும் பொதுத்தன்மை.

நெல், எள்ளு, பயறு போன்ற ''காத்திரமான''பொருட்களுக்குத் தேவையாகும் போக்குவரத்துவசதிகள், காத்திரமற்ற சீக்கிரம் அழிவுக்குள்ளாகவல்ல பழம், மரக்கறி போன்ற பொருட்களுக்காகும் வசதிகளிலிருந்து வேற்றுமை கொண்டன. அதி சீக்கிரம் பழுதடையவல்ல பொருட்களைச் சீக்கிரமாக விற்கவேண்டிய அவசர நிலைமையைப் போன்று நெல், பயறு போன்ற காத்திரமானபொருட்களை விற்கவேண்டிய அவசியம் பொதுவாக நிலவாதெனினும் பெரும்பாலும் சிறுவிவசாயிகள் ஏற்கனவே நடுவர்களிடமிருந்து (நடுவர்கள் பெரும்பாலும் அந்தந்தக் கிராம வியாபாரிகளாக இருப்பர்.) தாம் பெற்றுள்ள கடன்களைத் திருப்பும் முகமாக அப்பொருட்களையும் அதே அவசரத்துடன் விற்கவேண்டிய சந்தர்ப்பம் நிலவுவது எம் நாட்டில் பொதுப் படையானது என்பது விளங்கும். அது வல்லாது களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகளின்மையுடன் போக்குவரத்து வசதிகளின்மையும் நிறுவகப்படுத்தப்பட்ட கடன் வசதிகளில்லாத தன்மையும் சேர்ந்து தம் உடனடித் தேவைகளுக்கு மேலதிகப் பொருட்களைக் காலதாமதமின்றி விற்கத் தூண்டும் சந்தர்ப்பம் சகல சிறுதுறை விவசாயிகளிடையே நிலவுவது நாட்டினில் இன்று நிலவும் குறிப்பான தன்மை எனலாம்.

சீக்கிரம் அழிவுறவல்ல விவசாயப் பொருட்களுக்கும் அழிவுறாத பொருட்களுக்கும் வெவ்வேறான சந்தைப்படுத்தும் சேவைகள் தேவையெனினும் இங்கு அவை இருதொகுதிகளுக்கும் பொதுவான வசதிகளையிட்டே ஆராயப்படுகின்றது.

சந்தைப்படுத்தும் வசதிகள்:

எமது நாட்டின் உற்பத்தி அமைப்பினில் விவசாயத்துறை முக்கியத்துவம் கொண்ட தொகுதியெனினும் அதற்குப் போக்குவரத்து சம்பந்தமாக வழங்கப்படும் முக்கியத்துவம், வர்த்தகம், சேவை, கைத்தொழில் ஆகிய துறைகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்திலும் அதி குறைவென்பது பொருளாதார அறிஞர்களின் அபிப்பிராயம். அதுவன்றி விவசாயத் துறையினிலும் வெவ்வேறு பொருட் தொகுதிகளுக்கான வசதிகளிலும் பேரளவு வேறுபாடுகள் நிலவுகின்றன. நெல், அரிசி, மாவு, சீனி ஆகிய பொருட்கள் மக்களின் அன்றாட சீவியத்தினில் முக்கியத்துவம் வாய்ந்தனவெனும் அடிப்படையில் அவைக்கான சந்தைப்படுத்தும் வசதிகள் ஓரளவில் திறன் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. அப் பொருட்களின் இடம் மாற்றுதலுக்கு அரசாங்கம் பொறுப்பாகையால் திறன் கூடிய சேவை, வசதிகள் இடம்பெறுகின்றன. உதாரணமாக நெல் சந்தைப்படுத்தும் துறையில் காணப்பட்ட இடைசல்களை நிவிர்த்திசெய்யும் நோக்குடன் நெல் சந்தைப்படுத்தும் சபை நிறுவப்பட்ட தன்மை அப்பொருள் சம்பந்தமாக அரசாங்கம் செலுத்தும் அக்கறையை வெளிக்காட்டுகின்ற ஓர் உதாரணமாகும். மாவு, சீனி, அரிசி ஆகிய பொருட்கள் பங்கீட்டிற்கு உரித்தான பொருட்களாகையால் நடுவர்கள் தவிர்க்கப்பட்டு அதன் காரணமாகப் பொருட்களையிட்டு எழக்கூடிய போக்குவரத்து சம்பந்தமான கேள்வியமைப்பு ஓரளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதும் புலனாகின்றது. ஆயினும் அப் பொருட்கள் சம்பந்தமான போக்குவரத்துத் தேவைகள் முழுவதாகத் தவிர்க்கப்பட்டுள்ளன என்பதற்கில்லை. நெல் சந்தைப்படுத்துவதற்காகச் சபையொன்று நிறுவப்பட்டிருப்பினும் நெல் வயல்களிலிருந்து சபையின் சேகரிப்பு நிலையங்களுக்கும், நிலையங்களிலிருந்து நெல் குற்றும் ஆலைகளுக்கும் அங்கிருந்து நுகர்வோருக்கு அரிசியை வழங்கும் முகமாகவும் போக்குவரத்துச் சேவைகள் அவசியமாகின்றன. நெல், அரிசி, சீனி, மாவுக்கான போக்குவரத்து வசதிகள் பொதுத்துறை முயற்சிகளான காரணத்தைக் கொண்டு ஓரளவு திறன் வாய்ந்ததாகக் காணப்படும். அதேவேளையில் பழவகை, மரக்கறிவகை மற்றும் விவசாயப் பொருட்களுக்கான போக்குவரத்து வசதிகள் திறன் குறைந்தவை என்பதில் ஐயமில்லை.

மரக்கறி, பழம் போன்ற பொருட்களையும் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்றவற்றையும் சந்தைப்படுத்தும் போது மூன்று தொழிற்பாடுகள் இடம் பெறுகின்றன. சிறுசிறு தொகைகளை ஒன்றாக்குதல், அவற்றினை விற்பனைக்குத் தயார் செய்தல், பல சிறு வியாபாரிகளூடாக நுகர்வோருக்கு அவற்றினைப் பங்கீடு செய்தல், மேல்மிதமான சிறு தொகைகளைப் பல விவசாயிகளிடமிருந்து ஒன்று சேர்ப்பது அதிகளவு தொழிற் பிரயோகத்திற்கும், பணச்செலவிற்கும் உள்ளாகும் அம்சம். அத்தொழிலுக்கு எக்காலமும் வாகனங்களின் பிரயோகம் பொருந்தாது என்பதும் விளங்கற்பாலது.

பங்கீட்டிற்கான வழிவகைகள்:

நுகர்வோருக்கு பொருட்களின் விநியோகம் மூன்று முயற்சியாளர்களூடாக நிவர்த்தி கொள்கின்றது — ஆக்குவோர், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள். ஆக்குவோர் மட்டத்தில் கீழ்க் காணும் முயற்சியாளர்கள் காட்டப்படுகின்றனர்:- கமிஷன் ஏஜென்டுகள், மொத்த வியாபாரிகள், கூட்டுறவுச் சங்கங்கள், விற்பனைத் திணைக்களம், கிராமச் சந்தையில் இயங்கும் மொத்த வியாபாரிகள் அல்லது தனிப்பட்டு இயங்கும் ஒன்றுசேர்க்கும் வியாபாரிகள். மரக்கறிப் பொருட்களின் விநியோகத்திற்குக் கமிஷன் ஏஜென்டுகள் பெரிதும் விரும்பப்படுவர். மாகாணங்களிலுள்ள பிரதான நகரங்களில் கமிஷன் ஏஜென்டுகளுக்கும் விவசாயிகளுக்கு

மிடையே நிலவ வேண்டிய தொடர்பைப் பெருந்தெருப் போக்குவரத்து ஏஜென்டுகள் அமைத்துக் கொடுப்பர். விவசாயிகள் தம் பொருட்களைச் சாக்குகளில் கட்டி முக வரிகளிட்டு அவர்களிடம் ஒப்படைப்பது வழக்கம். பெரும்பாலும் இச் சேவையின் திறன் பல அம்சங்களில் தங்கியிருப்பது புலனாகும். இறுதி நிலையங்களில் எச் சீக் கிரத்துடன் பொருட்கள் ஒப்படைக்கப் படு கின்றன, பொருட்களுக்கு ஏற்படும் சேதத் தின் தன்மை, அன்றி அவை தொலைவுறும் தன்மையாவன அவ்வம்சங்களில் சில எனலாம்.

சந்தைப்படுத்தல் சம்பந்தமாக ஏற் படும் மொத்தச் செலவுகளில் போக்கு வரத்துச் செலவுகள் பெரும் பங்கிற்கு உரித்தாகவுள்ள காரணத்தைக் கொண்டு சிறு விவசாயிகளுக்கான சந்தைப்படுத்தும் வசதிகள் எத்தூரம் திறன்வாய்ந்தன வென்பதை அடையாளம் கொள்வதற்கும் போக்குவரத்து வசதிகளின் திறன் இன்றி யுமையாதது.

இன்றைய நிலைமையில் கூட்டுறவுச் சங்கங்களின் தொழில் பிரதானமாக அவற் றில் அங்கத்துவம் கொண்ட ஆக்குவோரின் பொருட்களை ஒன்று சேர்த்துப் பல நோக் குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒப்படைப்பது மட்டுமாகவே காணப்படுகின்றது. உதா ரணமாக மலைநாட்டுப்பகுதியில் (பலுகம) உடபாலத்துக் கூட்டுறவுச்சங்கம், மரக்கறி வகைகளை நேராகக் கொழும்பில், விற் பனைத் திணைக்களத்திற்குரிய மத்திய கொள்வனவுச் சந்தைக்கு அனுப்புகின்றன, ஆயினும் அவை வழங்கும் சேவைகள் திருப்தியற்றனவெனும் காரணமாக மரக் கறி விவசாயிகள் தம்பொருட்களைவிற்பனை செய்யும் முகமாகப் பிற சேவை வசதிகளை நாடுவது பொதுத்தன்மை. அத்தன்மையை பலுகமவில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு வெளிக்கொணர்ந்துள்ளது.*

தனியார்துறைவழங்கும் வசதிகளுடன் ஒப்பிடுமிடத்து விற்பனைத் திணைக்களம் வழங்கும் வசதிகள் அண்மையில் விஸ்தரிப் புக்கொண்டிருப்பினும், இன்னமும் திருப்தி யற்றனவாகக் காணப்படுகின்றன. விற் பனைத் திணைக்களம், மரக்கறி மற்றும் விவசாயப் பொருட்கள் பெருந்தொகை யளவில் உற்பத்தியாக்கப்படும் பிரதேசங் களில் பொருட்களைச் சேகரிக்கும் முக மாகப் பல நிலையங்களை அண்மையில் நிறுவி அவற்றினூடாகக்கொள்ளப்படும்பொருட் களைத் தனது சில்லறை விற்பனை நிலையங்க ளூடாகச் சந்தைப்படுத்துவது வழக்கமா யிற்று. ஆயினும் விற்பனைத் திணைக்களத்தி னூடாகச் சந்தைப்படுத்தப்படும் தொகை அதிகுறைவாகும். அதற்குக் காரணம், அதன் சேவைகள் பொதுவாக, மற்றும் அரசாங்கத் திணைக்களச் சேவைகளைப் போன்று திறன் குறைவாக இருப்பது என்பது ஏற்கற்பாலது

தம் மேலதிகப் பொருட்களை உற்பத்தி யாளர்கள் தத்தம் உற்பத்தி ஸ்தானங்க ளுக்கு அருகாமையிலுள்ள சந்தையில் விற்பதுமுண்டு. ஆங்கு நாட்டின் பல பகுதி களிலிருந்து வரும் மொத்த வியாபாரிகள் அவற்றினை விலைக்குக் கொள்வர்,

இவ்வகைச் சந்தைப்படுத்தலில் காணப் படும் பிரதான நன்மை பொதுவாகப் பொருட்களைக் கைப்பணத்திற்கு விற்பதே. தனிப்பட்ட சிறு வியாபாரிகளும் பொருட் களைக் கைப்பணத்திற்குக் கொள்வாரெனி னும் அவர்களின் செயற் தொகையளவு அதி குறைவாகவே காணப்படுகின்றது.

*1973இல் மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீட்டில் மரக்கறி உற்பத்தியாளர் களில் 51·3% கமிஷன் ஏஜென்டுகள்மூலமாகத் தம் பொருட்களை உற்பத்திசெய்த னர். 24·4% தம் பொருட்களில் பெரும் பகுதியைக் கமிஷன் ஏஜென்டுகள் ஊடாகவும், எஞ்சியதைக் கூட்டுறவுச் சங்கங்களுடாகவும் விற்றனர். 7·7% மட்டுமே தம் பொருட் களின் விற்பனைக்குக் கூட்டுறவுச்சங்கங்களை முழுதாக நாடினர். 15·3% தம் பிரதேசங் களில் காணப்பட்ட மொத்தச் சந்தை வசதிகளைப் பயன்படுத்தினர்.

கொழும்பில் இயங்கும் மொத்த வியாபாரிகள் சந்தைப்படுத்தும் முயற்சியில் பிரதான பங்கினைக் கொண்டவரெனும் பேரில் மரக்கறி உற்பத்தியாளர்கள் அவர்களை நாடுவது பொதுத்தன்மை. மொத்தத் தொகைச் சந்தைப்படுத்துதல் சம்பந்தமாக கொழும்பில் காணப்படும் பிரதான விற்பனை நிலையங்கள் புறக்கோட்டைச் சந்தையும், சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் மொத்த வியாபாரத் தளமும் ஆகும். இவ்விரு தளங்களும் பொருட்களைத் துப்பரவு செய்தல், தரப்படுத்துதல் போன்ற முயற்சிகளுக்குத் திருப்தியான நிலப் பரப்பினைக் கொண்டு காணப்படாதது ஒரு பெரும் குறைபாடு எனலாம்.

தனியார் சந்தைப்படுத்தும் ஸ்தாபனங்களை, மரக்கறிப் பொருட்களை உற்பத்தி செய்வோர் நாடுவதற்குப் பல காரணங்கள் உள. கொள்வனவு செய்த உடனேயே பொருட்களுக்கான விலைப்பணம் செலுத்தப்பட்டு விடும். மொத்த வியாபாரிகளும், கமிஷன் ஏஜென்டுகளும் உற்பத்தியாளர்களின் தேவைக்கேற்பக் கடனுதவி வழங்குவர். அரசாங்க சந்தைப்படுத்தும் திணைக்களம் அல்லது கூட்டுறவுச் சந்தை வழங்குவதற்குக் கூடுதலான விலைகளை உற்பத்தியாளர்களுக்குத் தனி வியாபாரிகள் வழங்குவர். அவையல்லாது அரசாங்க நிறுவனங்களுக்கு எதிராகப் பல்வேறு குறைபாடுகளைக் காண ஏதுவாகின்றது. நிறுவைக் குறைவு, காலதாமதம், இம்சைகள், இலஞ்சம், விலைக்குக் கொள்ளுதல் தொடர்பாகப் பண, பௌதிகக் கட்டுப்பாடுகள் யாவும் ஆங்கு காணக்கூடிய இடைசல்களில் சில. உற்பத்தியாளர்கள் தம் பொருட்களை அரசாங்கக் கொள்வனவு நிலையங்களுக்கு இடமாற்றம் சம்பந்தமான இன்னல்களை ஏற்றுக்கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவதுடன், போக்குவரத்து சாக்குகளில் கட்டுதல், தரப்படுத்துதல் ஆகிய முயற்சிகளுக்கான செலவுகளையும் திருப்பிப் பெறும் வாய்ப்பினைப் பெறுதிருப்பதும் இன்னொரு தடையான அம்சம்.

விவசாயத்துறையில் போக்குவரத்துத்துறையின் பங்கு :

திறன்வாய்ந்த சந்தைப்படுத்தும் அமைப்பிற்கு மூலைக்கல்லாகப் போக்குவரத்து முயற்சிகள் அமைகின்றன. உணவுப் பொருட்கள், விவசாயத்தொடர்பான பல மூலப்பொருட்கள், உரம் யாவும் அவையவை உற்பத்தி யாக்கப்பட்ட ஸ்தலங்களில் இருந்து அவற்றினை நுகரும் ஸ்தலத்திற்கு நெடுந்தூரம் இடமாற்றம் அவசியம் இன்று உண்டு. சனத் தொகையின் விஸ்தரிப்பு, கிராமப் பகுதிகளில், இருந்து பட்டினப் பகுதிகளுக்குக் குடியேறும் தன்மை, விவசாயப் பிரதேசங்களில் இருந்து அதி தூரமான ஸ்தலங்களில் கைத்தொழிற்துறையும், மக்கள் குடியேற்றமும் விஸ்தரிப்புறும் தன்மை யாவும் ஒன்றுசேர்த்து விவசாயப் பொருட்களின் இடமாற்றத்திற்கு, விஸ்தரிப்புக்குள்ளானதும் திறன்கொண்டதுமான போக்குவரத்து வசதிகளைக் கோரும் நிர்ப்பந்தத்திற்கு நாம் இன்று உள்ளாகியுள்ளோம்.

சந்தைப்படுத்துதல் தொடர்பான மற்றும் இதரமுயற்சிகள் — துப்பரவாக்குதல், தரப்படுத்துதல், அடைத்தல் யாவும் பூர்த்தியாக்கப் பெறினும் பொருட்களை நுகர்வோருக்குக்கிடைக்கும்வண்ணம்அவற்றினை இடமாற்றுதநிலையில் நுகர்ச்சிபூர்த்தி கொள்ளாது என்பது விளங்கும். ஆகவே சந்தைப்படுத்துதலும் பூர்த்திகொள்ளாதிருக்கும். இத்தன்மையே போக்குவரத்தின் முக்கியத்துவத்தை உறுத்துகின்றது எனலாம். நுகர்ச்சி பூர்த்தி உறுவதாயின் நுகர்வோனிடம் நுகர்வுப் பொருள் சேர்க்கப்படல்வேண்டும். அன்றி நுகர்பொருள் இருக்கும் ஸ்தலத்திற்கு நுகர்வோன் இடமாற்றம்கொள்ளவேண்டும். இந்தஇரண்டு தொழிற்பாடுகளுக்குமே போக்குவரத்து அவசியம் ஆயினும் இன்றைய சமூக பொருளாதார சூழ்நிலைகளை நோக்குமிடத்து நுகர்வோன் நுகர்பொருள் இருக்கும் இடத்தை நாட விருப்பங்காட்டுவதற்கு

எதிராகப் பொருளை அவனிடம் இட்டுச் செல்லவேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது.

விவசாயப் பொருட்கள் தொடர்பான போக்குவரத்து வசதிகளை இரு தொகுதிகளாக்கலாம்—நெடுந்தூரப் போக்குவரத்து, குறுந்தூரப் போக்குவரத்து. சிக்கலற்றனவாக மேற்பரப்பில் தோன்றக்கூடும் ஆயின் குறுந்தூரப் போக்குவரத்து கூடுதலான சிக்கற்தன்மை கொண்டுள்ளது. தேவையான காலநேரங்களில் சேவைகள் கிடைக்காதிருப்பதுடன் கூடுதலான செலவுகளுக்கு அவை அருகதையாயும், பௌதீக இடைவெளி தொடர்பாக நோக்குமிடத்து, சந்தைப்படுத்துதல் சம்பந்தமான செலவுகளில் கூடுதலான பங்கிற்கும் அவை உரித்தாகக் காணப்படுகின்றன.

பலுகமத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் மரக்கறி உற்பத்தி செய்யப்படும் ஸ்தலத்திலிருந்து அரைமைல் தூரத்திலிருக்கும் ஒன்று சேர்க்கும் நிலையத்திற்கு ஒரு மூடை மரக்கறியை இடமாற்றுவதற்கு 1 ரூபா செலவான அதே வேளையில், 125 மைல்களுக்கப்பால் இருக்கும் கொழும்பு மத்திய சந்தைக்கு இடமாற்றுவதற்கான செலவு 2 ரூபா 50 சதம் மட்டுமாகக் காணப்பட்டது. அதாவது முற்தொகுதிச் செலவு பிற்தொகுதிச் செலவிலும் 100 மடங்கு அதிகமானது என்பது புலனாகின்றது. அக் கிராமத்தில் திருப்தி வாய்ந்த பெருந் தெருக்கள் காணப்படாததன் காரணமாக உற்பத்தியாளர்கள் பொருட்சுமைகளைத் தம் தலைகளிலே இட்டு இடம் மாற்றவேண்டியதாகின்றது. அதுவல்லாது மதிப்பீட்டின் பிரகாரம் உற்பத்தியாளர்களில் 20% தாம் விரும்பிய கால நேரங்களில் போக்குவரத்து வசதிகளைக் கொள்ளும் வாய்ப்பற்று இருந்தனர் என்பதும், அம் மதிப்பீட்டில் இருந்து வெளிப்படை ஆயிற்று. அவ்வாறான சேவைக் குறைவு உற்பத்தி அதி உச்சநிலை கொண்டிருக்கும் தறுவாயில் ஏற்பட்டதன் காரணமாக அவர்கள் தம் பொருட்களை விற்க வல்ல விலைகளுக்கல்லாது அதி குறைவான விலைகளுக்கு விற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயினர் என்பதும் வெளிப்படை ஆயிற்று.

தம் மரக்கறி தோட்டங்களில் இருந்து ஒன்றுசேர்க்கும் நிலையங்களுக்கு உரித்தாய குறுந்தூரப் போக்குவரத்துச் சம்பந்தமான மேலதிகச் செலவுகளை ஏற்றுக்கொள்வதுடன் விவசாயிகள் தம் தோட்டங்களில் இருந்து உள்ளூர்ச் சந்தைகளுக்குத் தம் பொருட்களை இடமாற்றம் சம்பந்தமாகவும் பல இன்னல்களுக்குள்ளாயினர். அதே போன்று வடமத்திய மாகாணத்தில் பெரும்பாலான சிறு தோட்டங்கள், மோட்டார் வாகனங்கள் உபயோகிக்கும் பெரும் பாதைகளிலிருந்து குறைந்தது 4—5 மைல்களுக்கப்பால் இருப்பதன் காரணமாகத் தம் சொந்த மாற்றுப் போக்குவரத்து வசதிகள் இல்லாத நியதியில் சிறு சுமைகளை விவசாயிகள் தம் தலைகளிலேயே கொண்டுசென்று பேரூந்துகளினூடாகச் சந்தைகளுக்கு இடமாற்றுவது பொதுத்தன்மை. இத் தனிப்பட்ட இன்னல்களுடன் பேரளவு பணச் செலவிற்கும் இவ்வித இடமாற்றம் உள்ளாகின்றது.

வடக்கு, வடமத்திய, கீழ் மாகாணங்களில் விவசாயப் பொருட்களை இடம் மாற்றுவதற்கு டிராக்டர்களும், இணைப்பு வண்டிகளும் பேரளவு உபயோகிப்புக்குள்ளாகின்றன. ஆயினும் அண்மையில் எரிபொருட்களுக்கு ஏற்பட்ட விலைகளின் உயர்ச்சிகள்காரணமாக டிராக்டர்போக்குவரத்துச் செலவும் அரிகரிப்புற்று, சிறு விவசாயி அப்போக்குவரத்தை நாடாது பொருளாதார ரீதியில் அதி குறைவான பலாபலன்களைக் கொண்ட எருத்து வண்டிகளைப் பயன்படுத்துவதற்குத் தூண்டப்பட்டுள்ளான்.

விவசாயப் பொருட்களுக்கான நெடுந்தூரப் போக்குவரத்து வசதிகள் புகையிரத மார்க்கமாயும் பெருந்தெரு மூலமாயும் வழங்கப்படுகின்றன. ஆயினும் சீக்கிரம் பழுதடைய வல்ல பொருட்களில் பெரும்பாலான பங்கின் இடமாற்றுத

லுக்குப் பெருந்தெருப் போக்குவரத்து பெரிதும் விரும்பப் படுகின்றது. சீக்கிரம் பழுதடைய வல்லாத பொருட்களுக்கும் பெருந்தெருப் போக்குவரத்தையே உற்பத்தியாளர்களும் நடுவரும் இன்று விரும்புகின்றனர். அதற்குச் காரணம் புகையிரதப் போக்குவரத்திலும் பெருந்தெருப் போக்குவரத்து பல வழிகளில் குறைந்த செலவுகளுக்கு அருகதையாயுள்ளதே. பெருந்தெருப் போக்குவரத்தில் இரட்டை ஏற்றி இறக்கல் தவிர்க்கப்படுகின்றது. எதிர்நிலையில் புகையிரதப்போக்குவரத்தில் ஆரம்ப/இறுதி நிலையங்களில் பொதிகளை வாகனங்களில்ஏற்றியும் அவைகளிலிருந்து இறக்கிக்கொள்ளும் தன்மை நிலவுவதுடன் புகையிரத நிலையங்களிலிருந்து திரும்பவும் பெருந்தெருக்கான வேறு வாகனங்களில் ஏற்றி இறுதியாக அடையவேண்டிய நிலையங்களில் இறக்கும் நியதியும் உண்டு. புகையிரத நிலையங்களுக்கு அவைக்கருகாமையிலே நுகர்ச்சி இடம்பெறாது பொதுவாக அவற்றிற்கு அப்பால் இடம்கொண்டுள்ள பட்டினங்களிலேயே (சந்தைகளிலேயே) மொத்த/சில்லறை வியாபாரிகள் ஈடுபட்டுள்ளதன் காரணமாக அவ்வகையான இரட்டை ஏற்றி இறக்கல் அவசியமாகின்றது. இத்தன்மைகளுக்கு எதிராகப் பெருந்தெருப் போக்குவரத்து உற்பத்தியாளர்களின் ஸ்தலத்திலிருந்து நுகர்வோன் இருக்கும் ஸ்தலத்திற்கு நேரடியான சேவையை வழங்குகின்றது எனலாம். வெவ்வேறு நிலையங்களில் ஏற்றி இறக்கும் கூலிகள் போக்குவரத்துக்கான மொத்தச் செலவுகளை உயர்ச்சியாக்குகின்றன. அத்துடன் அவ்வகையாக ஏற்றி/இறக்கும் சூழ்நிலைகளில் பொருட்கள் கூடுதலான சேதத்திற்குள்ளாவதுடன் காலநேரச்சுணக்கமும் இடம்பெறுவது பொதுத்தன்மை. மேலும் உடனடி இணைச் சேவைகள் இல்லாத தன்மையில் புகையிரதப் போக்குவரத்துச் சார்பான தன்மைகள் குறைவுறுகின்றன.

புகையிரதப் போக்குவரத்துக்கு எதிராகச் செலவு சம்பந்தமாகக் காணக்கூடிய குறைபாடுகளுடன் கூடுதலான பயண நேரமும், சிரமமற்றதும் உற்பத்தியாளனுக்குச் சார்பான சேவை வசதிகளின் மையும் திருப்தியற்ற ஏற்றி/இறக்கும் தன்மை காரணமாக நிலவும் பொருட் சேதமும், களவுகளும்பெருந்தெருப்போக்குவரத்தின் நற்றன்மையை உறுத்துகின்றன. மேலும் இக்குறைபாடுகள் தனிப்பட்ட ஒவ்வொரு உற்பத்தியாளனுக்கு மேலதிகச் செலவுகளை வழங்கவல்லன என்பதும் புலனாகும். வேகம் சம்பந்தமாக நிலவும் தன்மையுடன் புகையிரதப் போக்குவரத்தில் காணக்கூடிய மற்றும் பல வசதியீனங்களும் பெருந்தெருப் போக்குவரத்தில் தவிர்க்கப்படுகின்றன. பற்பல பாரங்கள் (Forms) நிரப்புவதிலும், பொருட்களை நிலையங்களிற் பாரம் கொடுப்பதிலும், அவற்றை மீட்பதிலும் செலவாகும் நேரம், புகையிரத ஊழியர்களின் பல்வகை இம்சைகள் (இலஞ்சம் உட்பட) யாவும் புகையிரதத் துறையுடன் தொடர்பான வசதியீனங்களிற் சில.

பல நற்றன்மைகளைப் பெருந்தெருப் போக்குவரத்தில் காணக்கூடுமாயினும் உண்மைநிலையில் இன்று நிலவும் பெருந்தெருப் போக்குவரத்து வசதிகள் விவசாயப் பொருட்களை இடமாற்றுதற்குத் திறன்வாய்ந்தன என்பதற்கில்லை. அத்துறையில் பிரதிபலிக்கும் பிரதான குறைபாடு அங்கு நிலவும் பௌதீகப் பற்றாக்குறை என உறுத்தலாம். நாட்டில் இன்று பதிவுக்குள்ளாகியிருக்கும் லொறிகள், வான், டிராக்டர் வாகனங்களின் எண்ணிக்கையில் ஏறக்குறைய 65% 15 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து பாவனைக்குள்ளானவை. ஆகவே அவற்றின் செயற்றிறன் பெரிதும் ஐயத்துக்குள்ளாகும். மேலும் கடந்த 5 வருடங்களுள் எரிபொருள், இதர உதிரிப் பாகங்கள் தொடர்பாக இடம் கொண்ட விலை உயர்வுகள் பெருந்தெருப் போக்கு

வரத்துக்கான செலவுகளை 300% உயர்த்தியுள்ளன.

இத்தன்மைகள் விவசாயப் பொருட்களின் சந்தைப்படுத்தும் முயற்சியில் பேரளவு வரையறுப்புக்களை உறுத்துகின்றன. சராசரி உற்பத்தியாளன் தன் சொந்தப் போக்குவரத்து வசதிகளைக் கொண்டில்லாத பேரில் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதைத் தம் முழுத் தொழிலாகக் கொண்டிருக்கும் ஏஜண்டுகளுக்கு அதி உயர்வான கூலிகளை வழங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர். உயர்வான போக்குவரத்துச் செலவுகள் பொருட்களின் விலைகளை உயர்த்தும் தன்மையைக் கொண்டுள்ளதால் பொருட்களுக்கான இறுதிக் கேள்வி அமைப்பும் பாதிப்பிற்குள்ளாகலாம். அந்நிலையில் அவற்றின் ஆக்கத் தொகையிலும் வரையறைகள் இடம் பெறும் சந்தர்ப்பம் நிலவும்.

இவையன்றி பெருந்தெரு வாகனங்கள் மரக்கறி, பழவகைகள் போன்ற இலகுவில் பழுதடையவல்ல பொருட்களை இடமாற்றுவதற்குப் பொருத்தமானதன்று. எதிர் நிலையில் காத்திரமான பொருட்களை (தானிய வகை, காய்ந்த மிளகாய் போன்றவற்றை) இடம் மாற்றுவது கடினமான பிரச்சினைகளைக் கொணரமாட்டாது. அவ்வாறாயினும் அவை தொடர்பாக நிலவும் போக்கு வரத்தும் பௌதிகப் பற்றாக்குறையும் சேவையின் தரைமட்டக் கட்டுப்பாடும் சேர்ந்து அவற்றிற்கான போக்குவரத்துச் செலவுகளையும் உயர்த்துகின்றன என்பது ஏற்கற்பாலது. மரக்கறி, பழவகைகள் யாவும் சாக்குகளிலும் பெட்டிகளிலும் அடைக்கப்பட்டே லொறிகளில் இடம் மாற்றப்படுகின்றன.

சாக்குகளையும், பெட்டிகளையும் ஒன்றுக்குமேல் ஒன்றாக அடுக்குமிடத்து காற்றோட்டமில்லாது பொருட்சேதம் உயர்ச்சி கொள்வது பொதுவான ஒரு குறைபாடு. இங்கு லொறி வாகனங்களின் கூரைகளிலும் இவை அடுக்கப்பட்டு இடமாற்றத்தின்போது உஷ்ணம் காரணமாகவும் பொருட்கள் சேதத்துக்கு உள்ளாகின்றன. அவ்வாறாக ஏற்படும் சேதம் பண அடிப்படையில் நோக்குமிடத்து போக்குவரத்துடன் தொடர்பான செலவு என்பது விளங்கற்பாலது. மேலும் பெருந்தெருப் போக்குவரத்தில் கட்டணங்கள் புகையிரதப் போக்குவரத்தினில் போன்று நிறைகளிலல்லாது துண்டுக்கணக்கில் அறவிடப்படுவதால் உற்பத்தியாளர்கள் இயலுமளவு நெருக்கமாகச் சாக்குகளிலும் பெட்டிகளிலும் பொருட்களை அடைப்பதும் பொதுத் தன்மை. அம்முறையைக் கொண்டு சேமிக்கப்படும் போக்குவரத்துச் செலவுக்கெதிராக பொருட்சேதத்தினால் ஏற்படும் நட்டம் அதிகூடுதலாக இருக்கும். ஆயினும் தனிப்பட்ட உற்பத்தியாளன் மேற்கொள்ளும் பண நட்டத்திற்கு மேலாக நாட்டிற்கு ஏற்படும் சமூக பொருளாதார நட்டம் கூடுதலானதென்பதை அவன் உணரவல்லானல்ல. அதற்குக் காரணம் பிரதான போக்குவரத்து வசதிகளிற் காணப்படும் பற்றாக்குறைகளிலிருந்து உருவாகும் பிரச்சினை என்று இங்கு குறிப்பிடுவது நியாயம். மேலும் இவ்வகையாக சாக்குகள், கூடைகள், பெட்டிகள் ஆகிய உபகரணங்களில் அடைக்கப்பட்டபொருட்களில் பெருமளவு சேதமுறும் காரணத்தைக் கொண்டு அவற்றுக்கு நுகர்வோர் வழங்கவேண்டிய விலைமட்டங்களும் உயர்ச்சி பெற்று வாழ்க்கைச் செலவும் உயர்ச்சி கொள்ளும் தன்மை நிலவுகின்றது. அதன்பேரால் ஏற்படும் மறு சமூக பொருளாதார பிரதிபலிப்புக்களும் பல உண்டு.

விற்பனைத் திணைக்களம் மரக்கறிப் பொருட்களைக் காற்றோட்டம் கூடிய வாகனங்களில் இடமாற்றுவது உண்மையெனினும் அவ்வகைச் சேவையை விஸ்தரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஆங்கு குறைவாகையால் பொருட்சேதமும் விரயமும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

புகையிரதத் துறையிலும் விசேட வாகனங்களை மரக்கறிப் போக்குவரத்துக்காகப் பாவிக்கின்ற சந்தர்ப்பங்கள் உள.

ஆயினும் ஆங்கும் பண இடைஞ்சல்கள் காரணமாக திருப்தியான முறையில் அவ் விசேட வாகனங்களின் எண்ணிக்கையை விஸ்தரிக்கும் வாய்ப்பு நிலவாததுடன் கையிருப்பிலிருக்கும் வாகனங்களைத் திறனான முறையிற் பயனுக்குள்ளாக்கும் சந்தர்ப்பங்களும் என்ஜின் பற்றாக்குறைகளின் காரணமாகத் தவிர்க்கப்படுகின்றன. இங்கும் மரக்கறி வகைகளையும் மற்றும் சீக்கிரம் பழுதடைய வல்ல பொருட்களையும் இடம்மாற்றுவதற்குச் சாக்குகள், கூடைகள், பெட்டிகள் போன்ற உபகரணங்களே பயனுக்குள்ளாக்கப் படுகின்றன.

பொதுவாகப் பெருந்தெருப் போக்குவரத்திற் போன்று போக்குவரத்துக்கான கூலிகளில் சேமிக்கும் நோக்குடன் பொருட்கள் நெரிசலாக அடைக்கப்படும் நியதி நிலவாதெனினும் (புகையிரதத் துறையில் கூலிகள் நிறை அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன.) அடைக்கும் உபகரணங்களின் உயர்ச்சியான விலைகள் உற்பத்தியாளர்களையும் நடுவர்களையும் அதே திருப்தியற்ற வழிகளைப் பின்பற்றத்தூண்டி பொருட்களிற் பெரும்பங்கு சேதமுறுகின்றன என்பது ஏற்கப்பால்து. ஆகவே விசேடவாகனங்களும் உபகரணங்களும் திருப்தியான அளவுகளில் பயனுக்குள்ளாகாத நியதியில் பொருட்சேதம், அழிவுறுகின்ற தன்மையைப் பொதுவாக போக்குவரத்துத் தொடர்பான இன்னல் என்று கணித்து அத்தால்வரும் பண நஷ்டத்தை போக்குவரத்துத்துறைக்கான அதிகப்பேறான செலவு என்று கணிக்கும் நியதியுண்டு.

புகையிரதத் துறையை மேலும் ஆராயுமிடத்து அதன்பேரில் ஏற்படும் கூடுதலான இடமாற்றும் நேரமும் பொருட்சேதத்திற்கு உடந்தையாகக் காணப்படுகிறது. எனினும் புகையிரத நிலையங்களில் பொருட்களை களஞ்சியப்படுத்தும் வசதிகள் பெருந்தெருப் போக்குவரத்துத் துறையிலும் திறன்வாய்ந்தன வென்று ஒரு வகையில் புகையிரதத்துறைக்குச் சார்பானதாகத் தோன்றுகிறது.

புகையிரதத் துறையினர் ஆரம்பந்தொட்டு விவசாயப் பொருட்களுக்குக் கூலி வகையில் விசேட சலுகைகள் வழங்கி வந்துள்ளனர். ஆயினும் மறு மார்க்கங்களுடான செலவுகள் தொடர்பான சேமிப்புக்கள் காரணமாகப் பெருந்தெருப் போக்குவரத்தினையே மக்கள் பொதுவாக நாடுகின்றனர். இந்நிலையில் 1974இல் புகையிரதத் துறையினர் மரக்கறி, பழ வகைகளுக்கான கட்டணங்களை மும்மடங்காக்கிய தன்மை பெருந்தெருப் போக்குவரத்தினை உற்பத்தியாளர்களும், நடுவர்களும் மேலும் விரும்புவதற்குத் தூண்டியுள்ளது எனலாம். ஏற்கனவே வாகனப் பற்றாக்குறையால் வாகனப் போக்குவரத்து பல இன்னல்களுக்குள்ளாகியிருக்கும் நியதியில் அதன் சேவைகளுக்கான கேள்வி மேலும் விரிவடைந்ததன் காரணமாகப் போக்குவரத்துக் கட்டணங்கள் மேலும் உயர்வுற்று சேவைகளை வழங்கும் முகமாக மற்றும் இடைஞ்சல்கள் விஸ்தரிப்புக் கொண்டுள்ளன என்பது விளங்கற்பாலது. தம் கட்டண உயர்ச்சியால் புகையிரதத் துறையினர் எந்தளவு இலாபம் கொண்டனர் என்பதும் கட்டண உயர்வால் முன்னைய பொதிச்சுமையில் என்ன வீதம் புகையிரதப் போக்குவரத்தை நாடாதுவிட்டது என்பதும் அதன் காரணமாக அத்துறையில் எந்தளவு கொள்வனவு பாவிக்காதுவிட்டது என்பதும் பெருந்தெருப்போக்குவரத்திற்கு அக் கட்டண உயர்வு எந்தளவில் கேள்வியை உயர்த்தி பொதுவாக அத்துறையை நாடியவர்களுக்கேற்பட்ட உயர்ச்சியான செலவு எந்தளவு என்பதையும், ஆராய்வது ஒரு கடினமான அப்பியாசம் ஆயினும் பலவித பிரதிபலிப்புக்கள் உருவாகி இறுதியில் நுகர்வோர் தம்பொருட்களுக்குக் கூடுதலான விலைகளை வழங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயினர் என்பது ஏற்கவல்ல ஒரு முடிவு.

அது வல்லாத மற்றொரு முடிவு இன்றைய நிலையில் புகையிரதப் போக்கு

வரத்துவசதிகள் விவ்சாயப்பொருட்களின் இடமாற்றத்திற்கு திருப்தியற்றனவென்பதாகும். விவசாயத்துறையில் விஸ்தரிப்பை எதிர்நோக்கும் அரசாங்கம் விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான முயற்சிகளை விஸ்தரிக்க வேண்டிய அவசியத்தை உணராதுள்ளது மிகவும் வருந்தத்தக்க ஒரு அம்சம். விவசாயப்பொருட்களைச் சந்தைப்படுத்தலில் அரசாங்கம் பிரதான அக்கறையைக் காட்ட வேண்டியதற்கு இன்னொரு காரணத்தையும் நாம் உணர ஏதுவாகின்றது. அது பிரத்தியேகமாக மக்களின் வாழ்க்கைச் செலவுடன் தொடர்பானது. திறன் வாய்ந்த போக்குவரத்துவசதிகள் வழங்கப்படுமிடத்து சந்தைப்படுத்துதல் தொடர்பான செலவுகள் குறைவுற்று பொருட்களின் விலைமட்டங்கள் வீழ்ச்சிகொள்ளுமாதலால். வாழ்க்கைச் செலவும் வீழ்ச்சிகொள்வற்கு ஏதுவாகின்றது. அத்தன்மை அரசியல் தொடர்பான பல நற்பலாபலன்களை உறுத்துமாயினும், சமூக பொருளாதார நற்பலன்களுக்கு அருகதையானதாகையால் அம்முயற்சிகளை ஈடேற்றும் முகமாக அரசாங்கம் போக்குவரத்துத் துறையில் இன்று நிலவும் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய முன்வரவேண்டிய அவசியம் பிரதிபலிக்கின்றது.ஆயினும் அரசாங்க முயற்சிகளிலும் பல்வேறு வரையறுப்புகள் உண்டு. பெருந்தெருப் போக்குவரத்துப் பகுதியை விஸ்தரிப்பதற்கு பேரளவு அந்நிய செலாவணி அவசியமாகும். லொறிகள், டிராக்டர்களை இறக்குமதி செய்யவேண்டும். அவற்றுடன் கூடுதலான தொகையில் எரிபொருளும் உதிரிப் பாகங்களும் அவசியமாகும். பெருந்தெருக்களை நிறுவி பராமரிக்கும் செலவுகளும் அதிகரிக்குமாயினும் கையிருப்பிலிருக்கும் அவ் வசதிகள் ஓரளவு திருப்தியாகக் காணப்படலாம். புகையிரதப் போக்குவரத்துத் துறையூடாக விவசாயப்பொருட்களை திறனான வகையில் இடமாற்றம் செய்வதாயின் ஆங்கும் அதிகளவு பணச் செலவுகளை மேற்கொள்ளவேண்டி இருக்கும். புதிதாக வாகனங்களையும் என்ஜின்களையும் பிறநாட்டிலிருந்து வரவழைப்பதற்கான செலவுகளுடன் ஏற்கனவே திருப்தியற்றதாகக் காணப்படும் பாதைகளைத் திருத்தி அமைப்பதற்கான செலவுகளும் சேர்ந்து அத் துறைக்கான செலவுகள் பேரளவு உயர்ச்சி கொள்ளும் அவ்வாறாகப் புதிய செலவுகள் மேற்கொள்ளப்படுமாயினும் சில பொருட்கள் புகையிரத போக்குவரத்திற்கு அருகதையற்றனவாகையால் அவை பெருந்தெருப் போக்குவரத்தையே நாடும் தன்மை நிலவும்.

விவசாயப் பொருட்கள் தொடர்பான போக்குவரத்து முயற்சிகள் திறன்கொள்வதற்கான எதிர்கால நடவடிக்கைகள் பேரளவு சிக்கல்களைக் கொண்டு காணப்படும் என்பது ஏற்கப்பாலது. ஆங்கு பண, நிர்வாகப் பிரச்சினைகளல்லாது சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளையும் அடையாளம் கொள்ளலாமாகையால் போக்குவரத்துச் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எவ்வித முயற்சிகளும் தகுந்த ஆராய்ச்சி அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய அவசியம் புலனாகின்றது.

வாடகைக் கொள்வனவு விலை

வாடகைக் கொள்வனவில் கொள்விலையுடன் இலாபமும் சேர்ந்ததே காசு விலையாகும். காசு விலையுடன் வாடகைக் கொள்வனவு வட்டியும் சேர்ந்தது விற்பனை விலையாகும். எனவே கொள்விலைக்கும் விற்பனை விலைக்கும் உள்ள வித்தியாசத்தில் இலாபமும் வட்டியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ் விற்பனை விலையே வாடகைக் கொள்வனவு விலையாகும்.

BARINGTANS
Tutorial College

Head Office :
K. K. S. ROAD,
CHUNNAKAM.

Branch :
POWER HOUSE ROAD,
JAFFNA.

FOR

G. C. E. (O/L), G. C. E. (A/L)

SCIENCE,

ARTS

&

COMMERCE

Director : A. Satchithananthan

வித்தியோதயம் சிறப்புடன்
மலர
எமது வாழ்த்துக்கள்!

சகல உள்ளூர்
விளைபொருள்கள்
விற்பனையாளர்கள்!

Nallur Traders

நல்லூர் டிரேடர்ஸ்

49, நான்காம் குறுக்குத் தெரு,
கொழும்பு–11.

தந்தி: "PONVILA"
போன்: 33991

அன்பளிப்பு

- பூப்போட்ட சீத்தை
- புது வண்ணக் கூறை
- றெடிமேட் சேட்

பற்றிக்ஸ், சிந்தட்டிக்ஸ்
புத்தாடைத் தினுசுகளுக்கு

நியூ சிவாயம்ஸ்

58, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

GENERAL MERCHANTS

M/s. Thiruppathy Stores
51, Manipay Road,
JAFFNA.

With the best Compliments

from

Dealers in:

- All Electrical Goods
- Winding wire

and
General Suppliers

Ampex Commercial Agencies

29, PRINCE STREET,
COLOMBO-11.
Phone: 25255

வித்தியோதயத்துக்கு எமது வாழ்த்துக்கள்

●

"புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவ தில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்."

என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

—ஓர் அன்பர்

கணக்கியலில் சில நுண்ணாய்வுகள்
Investications in Accounts

எஸ். இராசதுரை
B. Com. (Cey.), A. C. A., A. C. C. A.
கணக்காய்வு அத்தியட்சகர்
இலங்கை விமானசேவை
பகுதிநேர விரிவுரையாளர்
வித்தியோதய வளாகம்

நுண்ணாய்வு கணக்காய்விலிருந்து வேறுபட்டதாகும். ஏனெனில், கணக்காய்வின் நோக்கம் கணக்குகளிலும் ஐந்தொகையிலும் ஒரு கணக்காய்வாளரை அறிக்கை செய்வதற்கு இயல்புபடுத்தக் கூடியதாக அமைகின்றது. ஆனால், நுண்ணாய்வு குறிக்கப்பட்ட தனிப்பட்ட ஒருவர் சார்பிலோ அல்லது பலரைக் கொண்ட குழு சார்பிலோ சில முக்கிய அந்தரங்க தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. நுண்ணாய்வு செயல் நிலையில் கட்டுப்படுத்தப்படலாம். உதாரணமாக, காசுக் கொடுக்கல் வாங்கல்களைச் சார்ந்த மோசடியை நுணுகிக் காண்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படலாம். ஆயின், நியமச்சட்ட ஏற்பாடொன்றின் கீழ் கணக்காய்வொன்று நடாத்தப்படுமாயின் அதனை எவ்விதத்திலும் மட்டுப்படுத்த முடியாது.

நுண்ணாய்வின் வகுப்பினங்கள் :

நுண்ணாய்வு பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளப்படலால், இவற்றைப் பெருமளவில் மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன :

1. முதலீடு அல்லது நிதிசார்ந்தவை.
2. தவறான முகாமைப்படுத்தல்.
3. மோசடிகள்.

1. முதலீடு அல்லது நிதி சார்ந்தவை :

இந் நுண்ணாய்வு பலர் சார்பில் எழலாம்:–

(i) எதிர்கால வாய்ப்புக்களை எதிர் நோக்கி முதலீடு செய்பவர் ஓர் வியாபாரத்தைக் கொள்வனவு செய்ய அல்லது பங்குடமையில் பங்காளராக ல்லது பங்குகளையோ தொகுதிக்

கடன்களையோ கொள்வனவு செய்ய அல்லது ஓர் வியாபாரத்தை எடுத்து ஒரு கம்பனியைத் தொடக்கிவைக்க ஆலோசிக்கும் ஓர் உயர்வு ஊக்குவிப்பவர் (Promoter) சார்பில்.

(ii) தொகுதிக் கடன்களை அல்லது பங்குகளை வாங்குவதால் எழும் வருவாயைக் கொண்டு ஓர் வியாபாரத்தைக் கொள்வனவு செய்யும் ஓர் கம்பனி, கம்பனிச் சட்டத்தில் வேண்டியவற்றிற்கிணங்க முன் விவரணத்தில்சேர்த்துக்கொள்வதற்காக வேண்டும் அறிக்கைக்காக,

(iii) ஒரு வியாபாரத்திற்கு இருக்கும் கடன் வசதியைக் கொடுப்பதற்கு அல்லது கூட்டுவதற்கு அல்லது பணம் கடன் கொடுப்பதற்குக் கடன் கொடுப்பவர் சார்பில்.

2. தவறான முகாமைப்படுத்தல்:

இவ்வாறான நுண்ணாய்வு பின்வருபவர் சார்பில் ஏற்றுக்கொள்ளப்படலாம்:—

(i) வகையற்றதென ஐயுறவு கொள்ளப்பட்டால் சென்மதியாளர் குழுச் சார்பில்.

(ii) தவறான முகாமையெனச் சாட்டப்பட்ட வேளையில் அங்கத்தவர்கள் சார்பில்.

iii) பொதுத் தர்மகர்த்தாச் சட்டத்தின் கீழ் தர்மகர்த்தா அல்லது நலம் பெறுபவர் சார்பில்.

3. மோசடிகள்:

இவ்வித நுண்ணாய்வு பின்வருவோர் சார்பில் ஏற்றுக்கொள்ளப்படலாம்:—

(i) பணத்தை வஞ்சக வழிப்படுத்தியிருந்தால் அதன் தொகை எல்லையைக் கூர்ந்து காண்பதற்கு உரிமையாளர்கள் சார்பில்

(ii) வரி செலுத்தாது நழுவிக்கொண்டால் உள்நாட்டு இறைவரி அதிகாரிகள் சார்பில்

இவ்வித நுண்ணாய்வைக் கையாள்வதற்கு கண்டிப்பான பிரமாணங்கள் இடப்படவில்லை. இருந்தும், நுண்ணாய்வின் நோக்கமும் ஒவ்வோர் விடயம் பற்றிய குறிப்பான சூழ்நிலைகளும் செய்யவேண்டிய வேலைப் பரவியலையும், இயல்பையும் தீர்மானித்துக்கொள்ளும்.

இவ்வாறு எழும் பலவித நோக்கிலான நுண்ணாய்வுகளையும் விபரமாக இங்கு கூற முடியாமையால் சுருக்கமாக விளக்கப்படுகின்றது. முதலில் ஒரு வியாபாரத்தைக் கொள்வனவு செய்பவர் அல்லது பங்காளர் அல்லது ஒரு கம்பனியை உயர்வு ஊக்குபவர்கள் சார்பில் எழும் நுண்ணாய்வில், ஆய்வுக் கணக்குகள் பேரேடுகளில் மட்டும் தங்காது, வியாபாரத்தைப் பெருமளவில் சார்ந்துள்ள மற்றைய விடயங்களையும் பெறுவதற்குத் தகவல் கோரப்படவேண்டும். கணக்குகளைப் பரீட்சிப்பதால் வியாபாரத்தின் விவகாரநிலை உண்மையானதென்றும், மெய்மையானதென்றும் அதன் அடிப்படையில் செலுத்தும் கொள்வனவுக் கிரயம் ஓரளவிற்குப் போதியதென்றும் தீர்மானிக்கமுடியும். எனினும் பின்வரும் விடயங்களில் விசேட விசாரணைகள் எழ வேண்டும்:

(i) பங்காளரைச் சேர்ப்பதற்கு அல்லது வியாபாரத்தை விற்பதற்குரிய காரணங்கள் யாவை? இது வியாபாரப் போட்டியால் அல்லது அயலார் குணமாற்றங்களால் அல்லது பழக்கவழக்கங்களால் அல்லது வியாபாரம் எதிர்காலத்தில் இலாபகரம் குறைந்ததாகலாமாகையினால் அல்லதுஇதுபோன்ற மற்றும் காரணங்கள் தெளிவாக வெளிவரமுன் வியாபாரத்தைக் கையகற்ற ஆலோசிக்கலாம்.

(ii) வியாபார இயல்பு உண்மையில் ஒருவர் குணாதிசயத்தில் தங்கியிருந்து இன்னுமொருவருக்கு மாற்றமுடியாததாகலாம்.

(iii) வியாபாரத் தொழிலகத்தின் உரிமை நுகர்வுக்காலம் முக்கியமாகக் குத்தகையுரிமை, அபிவிருத்தித்தடைகள் ஆகியன இருக்கலாம்.

(iv) ஊழியர்களுடன் அல்லது மற்றவர்களுடன் இருக்கும் ஒப்பந்தங்களில் திறமைவாய்ந்த அல்லது மதிப்பான ஊழியர்கள் தமது கடப்பாட்டைப் புதிய உரிமையாளருக்கு மறுக்கலாம்.

(v) இந்த வியாபாரக் கொள்வனவு ஒப்பந்தம் விற்பவரைக் குறிக்கப்பட்ட சுற்றுடலில் அதே போன்ற வியாபாரத்தை நடாத்திப் பழைய வாடிக்கைக்காரரை அழைக்கக்கூடும்.

(vi) வியாபாரத்தில் கொடுபடும் அல்லது பெறப்படும் கடன்வசதி, இருப்புச் சுழற்சி, தேவைப்படும் தொழிற்படு மூலதனம் முதலியன கணிக்கப்பட வேண்டும்.

கணக்குகளைப் பரீட்சித்தல் :

பரிசீலனைக்கு உள்ளடக்கவேண்டிய காலத்தை வாடிக்கைக்காரனுடன் ஒழுங்குபடுத்த வேண்டும். ஆய்வில் கணக்குகள் அமைப்பொத்த விதத்தில் திரும்ப வரையப்பட வேண்டுவதுடன் எல்லாச் செலவுகளும் விற்பனையின் விகிதாசாரத்துடன் வருடாவருட விளைவைக் கண்காணிக்கக் கூடிய முறையில் தயாரிக்க வேண்டும். ஐந்தொகையும் செங்குத்து நிலையில் நிலையான சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள், தொழிற்படு மூலதனம், முழு மூலதனம் என்பன வருடாவருடம் தெரியும் விதத்தில் வரையப்பட வேண்டும். உற்பத்தியாக்க அல்லது வியாபாரக் கணக்கில் வரும் மேன்தலைச் செலவுகள் விற்பனையுடன் அசைவன வேறாகவும், அசையாதவை வேறாகவும் பகுத்தாய வேண்டும். இதன் பின் ஓர் ஆரம்ப பரீட்சை பின்வரும் அம்சங்களை கவனத்தில் கொண்டு நடாத்த வேண்டும்.

(அ) **விற்பனை**

இதன் போக்கு எவ்வாறு உள்ளது என்பதைக் கவனித்து அசாதாரணமான ஊசலாட்டமிருப்பின் அதற்கான காரணங்கள் அறியப்பட வேண்டும். இது திடீர் வளர்ச்சியால் அல்லது விசேட விற்பனைகளால் அல்லது போலி அல்லது கபட வீக்கத்தால் காட்டப்படலாம்.

(ஆ) **விற்பனையின் கொள்விலை**

நுகர்ந்த பொருட்களின் கொள்விலை விற்பனையின் கொள் செலவு என்பன விற்பனையுடன் ஒப்பிடக்கூடியதாக இருக்க வேண்டும். விற்பனையிலிருந்து விற்பனையின் கொள்விலை பல காரணங்களால் ஊசலாட்டமடையும். அவையாவன :

(i) விற்பனைவிலை அல்லது கொள்விலை மாற்றங்கள்.

(ii) விற்பனைப் பதிவேடுகளை சூழ்ச்சித் திறனுடன் கையாளுவதால்

(iii) கொள்வனவுகளை இறுதி இருப்பிற்கு எடுத்துக்கொண்டுகொள்வனவில் கொண்டுவராது விடுதல்

(iv) விற்ற பொருட்களையும் இறுதி இருப்பில் சேர்த்தல்

(v) இருப்பைக் கூட்டி அல்லது குறைத்து மதிப்பிடுதல்

(vi) இருப்பில் அல்லது ஆக்க இருப்பில் மேன்தலைச் செலவுகளைக் கூடிய அளவில் சேர்த்துக் கொள்ளல்

(இ) **ஊதியமும் ஆக்கச் செலவுகளும் :**

விகிதார அசைதல் சம்பள விகித மாற்றத்தால், ஆக்கமுறை மாற்றத்தால் அல்லது உரிமையாளர் செலவினங்களைத் தனது பணத்திலிருந்து செலவுசெய்து மொத்த இலாபத்தை

வீக்கிக்கொள்வதால் அல்லது சம்பளச் செலவில் சூறையாடுதலால், கணக்குகள் சூழ்ச்சிமுறையில் தயாரிப்பதால் ஏற்படலாம்,

(ஈ) மொத்த இலாப விகிதாசாரம்;

இது மேற்கூறிய காரணங்களால் அல்லது வியாபார இயல்பு மாற்றத்தால் ஊசலாடலாம்.

(உ) இலாபநட்டக் கணக்குகள்:

இங்கு ஒவ்வொரு அம்சமும் பரீட்சித்து ஊசலாட்டம் யாவும் கவனிக்கப்படவேண்டும். நிலையான செலவுகள் உதாரணமாக வாடகை, சம்பளம் ஆகியன விற்பனையுடன் சாதாரணமாக அசையமாட்டாது. இவற்றின் முரண்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். அறவிட முடியாக் கடன்களுக்கும் தேய்மானங்களிற்குமான பதிவழித்தல் பற்றி விசேடமாகக் கவனிக்கவேண்டும். பழுது பார்த்தல், புதுப்பித்தல் போன்ற செலவுகளைத் தாக்கல் செய்யாதும், செலவுகளைப் பதியாது தமது பணத்திலிருந்து உரிமையாளர் செலவு செய்வதாலும் இலாபநட்டக் கணக்கில் தாக்கல் செய்யாது விடலாம்.

(ஊ) தேறிய இலாபத் திருத்தங்கள்:

இந்த வியாபாரம், பெறக்கூடிய தேறிய சராசரி இலாபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துமெனக் கணிக்க முன், இலாபத்தை உழைக்காத செலவுகள் யாவும் உதாரணமாக, இலாபப் பகிர்வுகள், மூலதனச் செலவுகள், கடன்வட்டிகள் மற்றும் இலாபம் உழைப்பதில்லாத செலவுகள் இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டால் நீக்கப்படவேண்டும். அதேபோல் முதலீட்டு வருமானம் மூலதனவருவாய் போன்றவையும் நீக்கிக் கணிக்கப்படவேண்டும். முகாமை ஊதியத்திற்குப் போதிய கழிவுகொடுக்க வேண்டும். இதன்பின் எழும் திருத்தப்பட்ட சராசரி இலாபம் வியாபார விற்பனையின் கிரயத்துடன் ஒப்பிட்டு எதிர்பார்க்கும் வருவாயையும் பார்வையிடவேண்டும்.

சான்றுய்வு:

இதன் பரவியலை மேல் எழுந்துள்ள விடயங்களைக் கொண்டு ஊகித்துக் கணித்துக்கொள்ளவேண்டும்; தொழில் ரீதியான கணக்காய்வாளரால் பரீட்சிக்கப்பட்ட கணக்குகளாயின் நம்பிக்கை வைக்கக் கூடியதாகும். அவரின் கூற்றுக்களில்கொண்டுள்ளவையையும் கவனித்துக்கொள்ளலாம். அவரிடமிருந்தும் விளக்கங்கள்: தகவல்ககளை பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு தேடுதற் பரீட்சையைக் கையாள முடியும்.

நன்மதிப்பு:

நன்மதிப்பு மதிப்பீட்டு அடிப்படையைப் பரீட்சித்து வியாபாரத்தின் சூழ்நிலையில் அம் மதிப்பீடு நியாயமானதென விளங்கிக்கொள்ளவேண்டும்.

அறிக்கை:

இது முழுமையானதாகவும் ஐயுறவற்றதாயும் இருக்கவேண்டும். நுண்ணுய்வு, வியாபாரக் கொள்வனவிற்காக எழுந்திருத்தால் அவ்வியாபாரத்தின் குறுகிய கால சரித்திரத்தையும், அதன் ஆளணியினர்பற்றியும் அபிவிருத்தி பற்றியும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பட்டியல்படுத்தி விசேட ஊசலாட்ட விளக்கங்களையும் கொடுத்து மொத்த, தேறியஇலாபங்களைக் காட்டி, முழு மூலதனத்தில் சராசரி வருவாயையும், வாடிக்கைக்காரன் விரும்பும் வேறும் விசேட தகவல்களையும் அறிக்கையில் சேர்த்துக் கூறவேண்டும்.

முன் விவரணத்தில் சேர்க்கவேண்டிய அறிக்கை:

கம்பனியின் பங்குகளுக்கு அல்லது தொகுதிக் கடன்களுக்கு பணம் அழைக்

கும் முன் விவரணத்தில் எடுத்துக் காட்ட வேண்டிய அறிக்கை கம்பனிச் சட்டத்திற் கிணங்க பின்வரும் விதத்தில் சுருக்கமாக வுள்ளது :

(அ) கிளைக் கம்பனிகள் இல்லாத கம்பனியாயின் கம்பனியின் கணக்காய்வாளரின் அறிக்கை பின்வருவனவற்றைக் காட்டவேண்டும்.

(i) கடந்த ஐந்து வருடங்களில் ஒவ்வொரு வருட இலாப நட்டங்களும்.

(ii) கடைசியாகக் கணக்குகள் தயாரிக்கப்பட்ட திகதியிலான சொத்துக்களும் பொறுப்புக்களும்.

(iii) அந்த ஐந்து வருடத்திலும் ஒவ்வொரு பங்கு வகுப்பிலும் செலுத்தப்பட்ட பங்குலாப விகிதங்களும், எந்த வகுப்பிலான ஏதேனும் பங்குகளுக்கு எந்த வருடத்திலாவது பங்குலாபம் செலுத்தப்படாதிருப்பின் அதற்கான கூற்று ஒன்றும்.

(iv) மேற்கூறிய ஆண்டுக் காலங்களில் எந்த ஓர் கணக்கும் விவரணம் வழங்குவதற்கு மூன்று மாதத்திற்கு முன் தயாரிக்கப்படாதிருந்தால் அதன் காரணம் பற்றிய கூற்று ஒன்றையும்

(ஆ) கிளைக் கம்பெனிகளை அக்கம்பனி வைத்திருந்தால் அக் கம்பனியின் கணக்காய்வாளரின் அறிக்கை பின் வருவனவற்றைக் காட்டவேண்டும்

(i) (அ) கடந்த ஐந்து வருடத்துக்கான வருடாந்த இலாப நட்டங்களுடன் எல்லாக் கிளைகளின் —

(1) ஒன்றித்த இலாப நட்டக் கணக்கு; அல்லது

(2) ஒவ்வொரு கிளையினதும் தனித்த இலாப நட்டக் கணக்கும் அல்லது

(ஆ) கம்பனியினதும் அதன் கிளைகளினதும் ஒன்றித்த இலாப நட்டக் கணக்குகளும்

(ii) கணக்குகள் தயாரிக்கப்பட்ட திகதியிலான சொத்துக்களு பொறுப்புக்களும், கம்பனியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் தனிப்பட்ட விதத்தில் கொடுத்துக் காட்டுவதுடன் —

(1) கம்பனியுடன் சேர்த்தோ சேர்க்காமலோ கிளைக் கம்பனிகளின் ஒன்றித்த சொத்துக்களும் பொறுப்புக்களும்; அல்லது

(2) ஒவ்வோர் கிளைக் கம்பனிகளினதும் சொத்துக்களும் பொறுப்புக்களும் தனிப்பட்ட விதத்தில்

கிளைகளின் இலாப நட்டங்கள் பற்றிய தகவல் அக்கம்பனியின் பங்காளர்களைப் பொறுத்து வேண்டப்படுகின்றது. கிளைக்ளின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பற்றிய கூற்று சிறுபான்மையினரின் அக்கறையைக் காட்டவேண்டும்.

(இ) வழங்கீட்டின் வருவாய் முழுவதிலும் அல்லது ஒரு பகுதியில் ஓர் வணிகத்தைக் கொள்வனவு செய்தலில் பயன்படுத்தப்பட்டால் முன் விவரணத்தில் குறிப்பிட்ட கணக்காளரின் அறிக்கையும். (இவர் கம்பனிக் கணக்காய்வாளராக நியமிக்கப்படக்கூடிய தகுதிவாய்ந்தவராக இருக்கவேண்டும்.)

(i) வழங்கீட்டிற்கு முந்திய ஐந்து வருடங்களின் வருடாவருட இலாப நட்டங்களும்,

(ii) கடைசியாகக் கணக்குகள் தயாரிக்கப்பட்ட திகதியில் வணிகத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும்.

(ஈ) வழங்கீட்டு வருவாய் முழுவதிலும் அல்லது ஒரு பகுதியில் இன்னொரு கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்து அதனால் அக் கம்பனி கிளைக்கம்பனி யாகுமாயின் (இ) என்ற பகுதியில் காட்டிய மாதிரியான விபரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

இவ் அறிக்கை செம்மையாக்கப்பட்டவற்றை கொடுக்கப்பட்ட தொகைகளில் எம்மாதிரிச் செய்யப்பட்டன வென்று அடிக்குறிப்பில் கூற வேண்டும்.

கடன் கொடுப்பவர் சார்பிலான நுண்ணாய்வில் முன்னுரிமைப் பொறுப்புக்களிலும், பாதுகாப்புப் பொறுப்புக்களிலும், வணிகத்தின் திரவ நிதிநிலையையும், கடந்த காலச் சரித்திரத்தையும், பதிவேடுகளையும் தற்போதைய நிதி இடர்பாடுகளையும் விசேட கவனத்திற்கு உட்படுத்தவேண்டும்.

வங்கியாளர் சார்பிலான நுண்ணாய்வில் கடன் வசதியின் காரணத்தையும், கடனின் திரவத் தன்மையையும், கடன் பொதுப் பையும் காட்ட வேண்டும். கணக்காளரின் கூற்று சொத்துக்களையும், பொறுப்புக்களையும் — முக்கியமாக பலவித தருமதியாளர்கள், வருமதி உண்டியல்கள், இருப்பு, உண்மையான ஆதனங்கள், முதலீடுகள், பாதுகாப்புப் பொறுப்புக்கள், காப்புறுதிகள் ஆகியவற்றின் விபரங்கள் பெறப்பட வேண்டும்.

மோசடிகளை நுண்ணாய்தல் :

மோசடிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்.

(அ) காசு, பொருள், கைமாறக்கூடிய ஆவணங்கள் ஆகியனவற்றைத் துர்ப்பிரயோகம் செய்தல்.

(ஆ) கணக்குகளைச் சூழ்ச்சி முறையில் பிழையான நிதிநிலையைக் காட்டும் விதத்தில் தயாரித்தல் அல்லது மோசடிகளை மறைத்தல்.

(இ) வரி செலுத்தாது நழுவும் விதத்தில் கணக்குகளைத் தயாரித்தல்.

பண துர்ப்பிரயோகப் பலவிதத்தில் செய்யப்படலாம். அவற்றில் சில பின்வருமாறு :

(i) காசு விற்பனையைக் களவாடுதல்.

(ii) தருமதியாளரிடமிருந்து வரும் பணத்தை எடுத்தல்.

(iii) வாடிக்கைக்காரருடன் கூட்டுச்சதி செய்தல்.

(iv) வியாபாரச் சென்மதியாளருடன் கூட்டுச்சதிசெய்தல்.

(v) கொள்வனவுப் பட்டியல்களை இரட்டித்தல்.

(vi) சம்பளத் தாள்களில் சூழ்ச்சிசெய்தல்.

(vii) சில்லறைக்காசில் களவாடல்செய்தல்.

இவ்வாறு எழும் மோசடிகளைக் கண்டுபிடித்து கொடுக்கல் வாங்கல்களைக் கால ஆரம்பத்திலிருந்து சான்றாய்வு செய்து, காட்டும் சூழலுக்கேற்ற விதத்தில் விசாரணைகள் நடாத்தவேண்டும். இவ்வாய்வு கணக்காய்வில் செய்யும் முறைகளைப் போல அமையலாம்.

கம்பனிச் சட்டத்தின்கீழ் நுண்ணாய்தல் :

கம்பனிப் பதிவாளர் கம்பனிச்சட்டத்தின் கீழ் கம்பனியின் விடயங்களை நுண்ணாய்வதற்குப் பரிசோதகர்களை நியமிக்கலாம். இது விண்ணப்பத்தின் பிரகாரமாகும். இந்நிலை—

1. குறிப்பிடப்பட்ட பங்காளர் விண்ணப்பத்திலும்

2. கம்பனியின் விசேட தீர்மானத்தாலும்
3. நீதிமன்றக் கட்டளையாலும்

கம்பனியின் விவகாரங்களை நுண்ணாய்விற்குப் பிரகடனம் செய்யலாம். கம்பனிப் பதிவாளரும் இதைச் சூழ்நிலை இருப்பின் உருவாக்கலாம். இச் சூழ்நிலை பின்வருமாறு ஆகலாம்:

(i) கம்பனியின் வணிகம் சென்மதியாளரை ஏமாற்றும் நோக்குடன் நடாத்தப்பட்டால் அல்லது சட்டமற்ற அல்லது கபடநோக்கான விதத்தில் அமைந்திருந்தால் அல்லது நடாத்தப்பட்டால்

(ii) கம்பனியின் உருவாக்கத்தில் அல்லது அதன் விவகார முகாமையில் ஈடுபட்டோர் மோசடிக் குற்றவாளியாகவும் அல்லது பங்காளரைப்பொறுத்த அளவில் கெட்ட நடத்தைகாட்டியும் இருந்தால்; அல்லது

(iii) கம்பனியின் பங்காளருக்கு அவர்கள் நியாயமாக எதிர்பார்க்கும் எல்லா வித தகவல்களும் கொடுபடாதிருந்தால்

இதன் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள பரிசோதகர்களுக்கு கம்பனியின் கிளைக்கம்பனிகளை அல்லது கொழுக் கம்பனியை அதன் விவகார நிலையை அறிய ஆய்வதற்கும், கடந்தகால தற்போதைய ஊழியர்களை சத்தியமுறையில் விசாரிக்கவும், மற்றும் கம்பனியின் முகவர், வங்கியாளர், கணக்காய்வாளர், சட்டத்தரணிகள் ஆகியோரைப் பரீட்சிக்கவும் உரிமையுண்டு.

வரிப்பொறுப்புச் சார்ந்த நுண்ணாய்வு:

இங்கு நுண்ணாய்வு பெருமளவில் வியாபார இயல்பிலும், இருக்கும் பதிவேடுகளிலும், பதிவேடுகளைப் பிழையாக வைக்கக் கூடிய சந்தர்ப்பங்களிலும் தங்கியுள்ளது. இதில் கணக்காய்வாளர் போதிய திறமை காட்டவேண்டி நேரிடும். அவர் முதலில் உள்ளடக்கவேண்டிய காலத்தைத் தீர்மானிக்கவேண்டும். அத்துடன் வாடிக்கைக்காரனிடமிருந்து அவரிடமிருக்கும் பின் வரும் மாதிரியான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்:

(i) வியாபாரப் புத்தகங்களும் பரீட்சிக்கப்பட்ட கணக்குகளும்

(ii) வங்கிப் புத்தகங்கள், கூற்றுக்கள், வைப்புப்பற்றுச்சீட்டுக்கள், ஆதியனவும் நடைமுறை மீதிகள் காட்டும் சாட்சிப்பத்திரங்களும்.

(iii) நுண்ணாய்வுக்கால ஆரம்பத்திலும் இறுதியிலும் தனியார் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய கூற்றுக்கள்.

(iv) கொள்வனவு செய்யப்பட்ட முதலீட்டுப் பட்டியலும், சான்றிதழ்களும், யார் யார் பெயரில் கொள்ளப்பட்டதும்.

(v) வாடிக்கைக்காரன் சார்பில் வைத்திருந்த சொத்துக்களில் ஒப்புக்கடிதங்களும்.

(vi) முதலீடுகள் பற்றிய தரகர் கொள்வனவு விற்பனைக் கூற்றுக்கள்.

(vii) வியாபாரத் தோடல்லாத சொத்துக்கள் அல்லது ஆதனங்கள் வாங்கி விற்கப்பட்டிருப்பின் அவற்றின் விபரங்கள்.

(viii) இக் காலத்துக்குள் முற்றிய காப்புறுதி, விருப்புரிமைக் கொடை, மூலதன வரவினம் ஆகியவற்றையும் காப்புறுதி செய்யப்பட்டிருப்பின் செலுத்தப்பட்ட கட்டணங்கள். எல்லா, வட்டி பங்கிலாப அடிச்சீட்டுக்கள், வாடகைகள், அதன் செலவுகள்.

சொந்தச் செலவுகள், சீவியச் செலவுகள், பிள்ளைகளின் படிப்புச் செலவுகள், விடுதலைப் பிரயாணச் செலவுகள், நன்கொடைகள் மற்றும் சாதாரணச் செலவுகள் பற்றிய உத்தேசக் கணிப்புகள்.

வருமானவரிக்குக் காட்டிய விபரங்களும் செலுத்தப்பட்ட வரிகளும் பெறப்பட வேண்டும்.

புத்தகங்கள் பேணப்பட்டுக் கணக்குகள் சீராகவிருந்தால் ஆய்வு சுலபமாக இருக்கும் விற்பனைகளை மறைப்பதிலும், கொள்வனவுகளைக் கூட்டிக்காட்டுவதிலும், இருப்பைக் குறைத்து மதிப்பீடு செய்வதிலும் இலாபத்தைக் குறைத்துக் காட்டலாமாகையால் இவ் விடயத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். எல்லா வங்கிக் கூற்றுக்களும் சரி நுட்பமான விபரத்தில் ஆராயப்படவேண்டும். இதனால் வைப்புப் பண ஆரம்பமும் செலவினங்களின் சேரிடங்களும் விசாரணையில் அறிய முடியும். இவ்வாறு விவரங்களைத் திரட்டியபின் காசு வரவினம், செலவினம் கொண்ட ஓர் மொத்தக்கணக்குத் தயாரித்து நுண்ணிய விருப்பவருடைய சாதாரண வீட்டு, சீவியச் செலவுகளையும் கவனித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கணக்கு பின்வருமாறு திரட்டமுடியும்:—

வரவுப்பக்கம் :

—வங்கியிலிருந்து எடுத்தபணம்
—வியாபாரத்திலிருந்து எடுத்த பணம்
—வேறு காசு வரவினங்கள்.
உதாரணமாக வாடகைத் திரட்டல்கள்

செலவுப்பக்கம் :

—வங்கியில் போட்ட பணம்
—மூலவழி காணமுடியாத வங்கி வைப்புக்கள்
—காசால் செலவிடப்பட்ட செலவினங்கள்
உதாரணமாக வரிப்பணம் மற்றும் திருப்பத் திரும்ப வரும் செலவுகள்
—மனைவிக்கு அல்லது பிள்ளைகளுக்கு வீட்டுச் செலவுக்கு அல்லது கைப்பணமாகக் கொடுத்தவை
—மற்றும் காசுச் செலவுகள்
—வரி செலுத்துபவரின் சொந்தக் காசுச் செலவுகளின் மதிப்பீடுகள்

இவ்வாறு தயாரிக்கப்படும் கணக்கில் செலவினம் கூடியிருந்தால் மூலவழி காட்டப்படாததிலிருந்து காசு பெறப்பட்டு இருக்கின்றதென்பதைக் கணக்காய்வாளர் அறிந்துகொள்ளலாம். இவ்வாறான வித்தியாசம் விளக்கப்பட முடியாததினால் வரி அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியாதெனவும் சுட்டிக்காட்ட வேண்டும்.

புத்தகங்கள், பேரேடுகள் தயாரிக்காவிடில் வங்கிக் கூற்றுக்கள், கொள்வனவு விற்பனைப் பட்டியல்கள், சென்மதியாளர் கூற்றுக்கள், செலவினங்களின் பற்றுச் சீட்டுக்கள் ஆகியவற்றிலிருந்து கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். சகல காசு வருவாயும் வருமதியாளர்களிடமிருந்து பெற்ற பணங்களும் வங்கியில் போடப்படாதிருந்தால் விற்பனையின் தொகை உண்மையாகக் கணிக்க முடியாது. ஆனால் கொள்வனவுகள் நிச்சயிக்கப்பட்டால் மொத்த இலாபத்தை வியாபாரத்துக்கு ஏற்ற முறையில் கொள்விலையின் இலாப விகிதத்தின்படி கணிக்கமுடியும்.

தகவல்கள் அருமையாகவிருந்தால் இலாப நட்டக் கணக்குகள் தயாரிக்க முடியாது. கணிக்கக்கூடிய ஒரேவழி கால ஆரம்பத்திலும் இறுதியிலும் இருந்ததேறிய மதிப்பு அஃதாவது, சொத்துகளிலிருந்து பொறுப்புக்களைக் கழித்தபின் எழும் தேறிய மதிப்பு கணித்து வாடிக்கைக்காரனின் சொந்தமான சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒவ்வொரு திகதியிலும் பொற்றுக்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு கூற்றில் காட்டும் தேறிய சொத்து மிகைப்பிற்கு கூட்ட வேண்டியவை:

—வாடிக்கைக்காரனின் சீவியச் செலவுகள், சொந்தச்செலவுகள் அவர்களின் குடும்பநிலைக்கேற்ப
—முதலீட்டு விற்பனையில் ஏற்பட்ட நட்டங்கள்

—சூதாட்ட நட்டங்கள்

—மூலதன நட்டங்கள் போன்ற மற்றைய நட்டங்கள்

—கையகற்றப்பட்ட அல்லது பாவிப்புக்கு அப்பாற்பட்டசொத்துக்களின் மதிப்புக்கள்

—மற்றும் எந்தவிடயத்தாலும் தேறிய சொத்து மதிப்புக் குறைக்கப்படுமாயின் அதையும்

இவ்வாறு பெற்ற தொகையிலிருந்து கழிக்கவேண்டியவை :

—காப்புறுதி முற்றுதல்களிலான வருவாய்

—சூதாட்ட இலாபங்கள்

—முதலீட்டு விற்பனையிலான இலாபங்கள்

—நன்கொடை உரிமைகள்

—நட்டஈடு போன்ற மற்றைய மூலதன வரவினங்கள்.

இவ்வாறு எழும் தொகை நுண்ணாய்வுக் காலத்தில் எல்லாவித மூல வழிகளால் எழும் மொத்த வருமானத்தைக் குறிக்கும் இவ் இலாபம் பின்வரும் மூல வழிகளால் எழும் வருமானமாகக் கணிக்கப்படும்.

— முதலீடுகள்

—ஆதனங்கள்

—மற்றைய மூல வழிகள்

—மீதி வியாபார இலாபம்.

இவற்றை இலாபப் போக்கு இடைக் காலங்களில் சொந்தமாக வைத்திருந்த சொத்திற்கேற்ப வரி வருட காலத்திற் கமைய நுண்ணாய்வுக் காலத்தில் உள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் பகிர வேண்டும். கணக்காய்வாளர் தமது அறிக்கையில் தரப்பட்ட விடய விபரங்களில் குறைபாடு அல்லது திருப்தி அடைய முடியாதவை அல்லது விளக்கக் குறைவானவை இருப்பின் அவை பற்றியும் குறிப்பிட வேண்டும்.

கணக்குப்பதிவியலும், கணக்கியலும்
Book-Keeping and Accounts

வியாபார அன்றாடக் காசுக் கொடுக்கல் வாங்கல்களைப் புத்தகங்களில் பதிவு செய்துவைப்பதே கணக்குப் பதிவியலாகும். உதாரணம்: காசேடு, நாளேடு, பேரேடுகளில் பதிவு செய்தலாகும். கணக்கியல் என்னும்போது அவ்வாறு பதிவு செய்த கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டு கணக்குக் கால முடிவில் இலாப, நட்டங்களைக் கணிப்பதற்காகக் கூற்றுக்களைத் தயாரித்தலாகும். உதாரணம்: வியாபார, இலாப நட்டக் க/கு கள், ஐந்தொகைகள் என்பன தயாரித்தலாகும்.

Donated by

Rathy Watch Works & Stores

44-46, Kasturiar Road,
JAFFNA.

அன்பளிப்பு!

சகலவித இரும்பு, பித்தளைச் சாமான்கள், பலவர்ணமை வகைகள் முதலியன சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

த மலாயன் ரேடிங் கொம்பனி

128-130, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன் : 547

வித்தியோதயம் வாழ்க!

சப்பாத்து, பாதணிகள் விற்பனையாளர்

சரவணஸ்

45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

Space Donated by

ELECTRICAL CONTRACTORS & DEALERS

Jaffna Electricals

6, STANLEY ROAD,
JAFFNA.

இலங்கை நாணயத்தின் மீள் மதிப்பீடு

எச். எம். மொஹமட் இல்லியாஸ்
வர்த்தகவியல் (சிறப்பு)
இறுதி வருடம்

இலங்கை நாணயத்தின் மீள் மதிப்பு (Re-valuation) எனக் கூறுமிடத்து இலங்கையுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டிருக்கும் ஏனைய நாடுகளின் நாணயங்களுக்கு எதிராக எமது நாணயத்தில் எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும் என நிர்ணயிப்பதாகும். அதாவது நடைமுறையில் (மீள மதிப்பீடு செய்யப்படும் வேளையில்) உள்ள செலாவணி மாற்று வீதத்தில் மாற்றம் செய்யப்படுவதை மீள் மதிப்பீடு எனக் குறிப்பிடலாம். மீள் மதிப்பீடு எனும் பதம் இரண்டு விடயங்களை உள்ளடக்கி உள்ளது. அதாவது ஏனைய நாடுகளின் நாணயங்களின் மதிப்பிற்கு எதிராக, எமது நாணயத்தின் மதிப்பு குறைக்கப்படுமாயின் அது நாணய மதிப்பிறக்கம் (Devaluation) எனவும், எமது நாணயத்தின் மதிப்பு அதிகரிக்கப்படுமாயின் அது மிகை மதிப்பு (Over-Valuation) எனவும் அழைக்கப்படும்.

இலங்கையின் அண்மைக்கால பொருளாதார வரலாற்றில் அதன் நாணயத்தில் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீடானது இலங்கையின் பொருளாதார நடவடிக்கையில் ஆர்வம் உடையவர்களை விமர்சனக்கண் கொண்டு நோக்கத் தூண்டியது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் போக்கை அந் நாட்டின் நாணயத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றத்தைக் கொண்டு ஓரளவு அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. எனவே இலங்கையின் ரூபா நாணயத்தை மீள் மதிப்பீடு செய்வதில் கடந்த இரு சகாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அறிவது அவசியமாகின்றது. இதுவே இக் கட்டுரையின் நோக்கமும் ஆகும்.

இலங்கை நாணயத்தின் மதிப்பானது காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் மாற்றமடையச் செய்யப்பட்டது எனக் கூறுமிடத்து அதற்கான பின்னணிக் காரணிகளையும் நோக்குவது அவசியமாகின்றது. இலங்கை நாணயத்தின் மதிப்பானது அதன் பொருளாதார அமைப்பின் முக்கிய அம்சமான "ஏற்றுமதி — இறக்குமதி"ப் பொருளாதாரத் தன்மையுடன் நெருங்கிய உறவுகொண்டதாகக் காணப்படுகின்றது. ஏனெனில், எமது தேசிய உற்பத்தியில் ஏற்றுமதி — இறக்குமதித்துறையானது ஏறத்தாழ 20% மான பங்கினை வகிக்கின்றது. அத்துடன் எமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மாவு, சீனி, துணி வகைகள், மருந்து வகைகள் மற்றும் இரசாயனப் பொருட்கள், கைத்தொழில் மூலப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் போன்றவற்றிற்கு நாம் இறக்குமதியையே நம்பி இருக்கவேண்டிய நிலையில் உள்ளோம். இவ்வாறான அத்தியாவசியப் பொருட்களை நாம் இறக்குமதி செய்யவேண்டிய கட்டாய நிலையில் இருப்பதால் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கில் ஏற்படும் சாதக—பாதக நிலைமைகள் எமது நாணயத்தை மீள் மதிப்புச் செய்யவேண்டிய கட்டாய நிலைக்கு உந்துகின்றது எனலாம்.

கடந்த இருபது வருடங்களாக எமது சென்மதி நிலுவை (Balance of Payment) பாதகமான தன்மையையே அனுபவித்து வருகின்றது. 1955ஆம் ஆண்டு தொடக்கம் அண்மைக்காலம் வரை எமது பிரதான ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, இறப்பர் என்பவற்றின் விலைகள் உலகச்சந்தையில் கீழ்நோக்கிய போக்கினைக் கொண்டதாகவே காணப்பட்டன. இவ்வாறு விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கிய அதே கால கட்டங்களில் தேயிலை, இறப்பர் என்பவற்றின் ஏற்றுமதியளவில் அதிகரிப்புக் காணப்பட்டாலும் தொகையளவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கேற்ப ஏற்றுமதி வருவாய் அதிகரிக்கவில்லை. ஆனால் 1956ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து இறக்குமதியளவும், இறக்குமதிப் பொருட்களின் விலையும் அதிகரித்து வந்துள்ளன. 1956ஆம் ஆண்டைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கமானது குறைநிலை வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக உள்நாட்டில் பணநிரம்பல் அதிகரித்துச் செல்ல ஏதுவாயிற்று. அதாவது குறைநிலை வரவு செலவுத் திட்டத்திற்கான நிதியீட்டமானது பெரும்பாலும் வர்த்தக வங்கிகளிடம் இருந்து பெறும் கடன்களினாலும், மத்திய வங்கியினால் விநியோகிக்கப்படும் புதிய நாணயத் தாள்களினாலும் நிறைவேற்றப்படலாயிற்று. இவ்வாறு குறைநிலை வரவுசெலவுத் திட்டத்திற்குப் பெறப்பட்ட நிதியானது நாட்டின் ஆக்கத்தை அதிகரிக்கக்கூடிய துறையில் முதலீட்டுச் செலவாக இடப்பட்டு இருந்தால் அது ஒருவேளை எமது சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் பாதகத் தன்மையைக் குறைத்து இருக்கும் எனலாம். ஆனால் குறை நிலை வரவு—செலவுத்திட்ட நிதியீட்டமானது சமூகச் செலவீடுகளிலேயே மேற்கொள்ளப்படலாயிற்று. இதன்காரணமாக உள்நாட்டுச் சந்தையில் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தது. ஆயினும் உள்நாட்டுக் கேள்வி அதிகரிப்பிற்கு ஏற்ப உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பல தடைகள் காணப்பட்டமையால் அதிகரித்த கேள்வியை ஈடுசெய்ய இறக்குமதியளவு தொடர்ந்து அதிகரித்துச் செல்வது அவசியமாயிற்று.

இவ்வாறு ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்து சென்றதாலும் இறக்குமதியின் கொடுப்பனவு அதிகரித்துச் சென்றமையாலும் எமது சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு பற்றுக்குறையைக் காட்டியது. ஆயினும் 1960ஆம் ஆண்டுவரை எமது வெளிநாட்டுச் சொத்தைக் கொண்டு நடைமுறைக் கணக்கின் பற்றுக்குறை ஈடுசெய்யப்படலாயிற்று. ஆனாலும் தொடர்ந்தும் இந்நிலைமை நீடிக்க முடியவில்லை. எமது தேறிய வெளிநாட்டுச் சொத்தின் அளவானது படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்றமையால் 1961க்கும் 1965க்கும் இடைப்பட்ட காலத்தில் இறுக்கமான இறக்குமதிக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் ஓரளவு சென்மதி நிலுவையின் பற்றுக் குறையின் தாக்கம் குறைவடைந்து காணப்

படலாயிற்று. அத்துடன் 1964ககும் 1965க்கும் இடைப்பட்ட காலத்தில் இறக்குமதிப் பதிலீட்டுப் பொருள் உற்பத்திகள் பல உள் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டமையாலும் சென்மதி நிலுவைப் பற்றுக் குறையை ஓர எவு குறைந்த அளவில் வைத்திருக்கக் கூடியதாக இருந்தது.

ஆயினும், இவ்விறக்குமதிக் கட்டுப் பாட்டு முறைமைகளும், இறக்குமதிப் பதிலீட்டு உற்பத்திகளும் எமது சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய சக்தி வாய்ந்த கருவிகளாக அமையவில்லை. தொடர்ந்தும் 1966, 1967ஆம் ஆண்டுகளில் சென்மதி நிலுவையின் நடைமுறைக்

இலங்கையின் சென்மதி நிலுவை

மில்லியன் ரூபாயில்

ஆண்டு	உள்நாட்டு ஏற்றுமதி (மீள் ஏற்றுமதி தவிர்த்து)	இறக்குமதி	வர்த்தக நிலுவை	தேறியகட்புலனுகாத மாற்றுதல்கள் (அன்பளிப்பையும் உள்ளடக்கியது)	நடைமுறைக் கணக்கு நிலுவை	தேறிய மீண்டகால மூலதனம்	குறுகியகாலக் கடன்கள்	பிழைகளும் தவறுகையும் Errors and Omission	மொத்த வெளிநாட்டுச் சொத்தில் மாற்றம்	இக்கால முடிவில் இவ்வெளிநாட்டுச் சொத்து
1957	1669	1764	— 95	— 100	— 195	— 18	— 1	—	— 214	1062
1958	1624	1713	— 89	— 64	— 153	+ 8	+ 32	+ 16	— 129	933
1959	1773	1958	— 185	— 23	— 208	+ 32	—	+ 1	— 175	734
1960	1796	2006	— 210	— 10	— 220	+ 22	— 24	+ 29	— 193	541
1961	1707	1794	— 87	— 7	— 95	+ 11	+ 93	— 19	— 9	532
1962	1763	1906	— 143	+ 3	— 140	+ 39	+ 42	+ 31	— 28	504
1963	1708	1869	— 161	— 7	— 168	+ 80	+ 42	+ 4	— 42	462
1964	1767	1960	— 193	+ 33	— 160	+ 69	+ 33	— 8	— 51	351
1965	1909	1922	— 13	+ 72	+ 59	+ 58	+ 3	— 6	+ 114	440
1966	1674	2018	— 344	+ 53	— 290	+ 137	+ 53	— 22	— 122	318
1967	1650	1968	— 335	+ 46	— 289	+ 161	+ 271	— 12	+ 131	449
1968	1975	2341	— 366	+ 20	— 346	+ 224	+ 162	— 26	+ 14	463

அட்டவணை : 1

மூலம் : இலங்கை மத்திய வங்கியின் ஆண்டு அறிக்கை — 1968

கணக்கு (Current Account) கூடிய அளவு பற்றுக் குறையையே காட்டி நின்றது. அத்துடன் எமது வெளிநாட்டுச் சொத்தும் மிகக் குறைந்த மட்டத்தையே அடைந்து இருந்தது. மேற்கூறிய நிலைமையை அட்டவணை ஒன்றில் கொடுக்கப்பட்ட தரவுகள் தெளிவாக விளக்குகின்றது. எனவே தொடர்ந்தும் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறையை வெளிநாட்டுச் சொத்துக்களைக் கொண்டு ஈடு செய்வது என்பது சாத்தியமற்றதென்பது நன்கு உணரப்படலாயிற்று.

சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்குப் பற்றுக் குறையைத் தீர்ப்பதற்கு அல்லது அதன் தாக்கத்தைக் குறைப்பதற்கு ஒன்றில் உள்நாட்டுப் பணக் கொள்கையைக் கடைப்பிடிப்பது அல்லது நாணய மதிப்பிறக்கம் செய்வது அவசியமாயிற்று. உள்நாட்டு பணக் கொள்கை என்பது உள்நாட்டில் பண நிரம்பலைக் குறைப்பதற்கு வட்டி வீதத்தை அதிகரித்தல் என்பதாகும். ஏனெனில் உள்நாட்டில் அதிகரித்துச் செல்லும் பண நிரம்பலே இறக்குமதிப் பொருட்களுக்கான கேள்வியை அதிகரிக்க முக்கிய காரணமாக அமைந்திருந்தமையாகும். அத்துடன் இறக்குமதிப் பதிலீட்டுப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் போன்றவற்றிற்கும் கூடிய அளவு இறக்குமதிக் கேள்வி காணப்படலாயிற்று. எனவே உள்நாட்டில் இறுக்கமான பணக்கொள்கை கடைப்பிடிக்கப்படுமானால் அதாவது வட்டி வீதம் உயர்த்தப்படுமானால் உள்நாட்டில் பண நிரம்பல் கட்டுப்படுத்தப்படுவதுடன் இறக்குமதிப் பொருட்களுக்கான கேள்வியும் குறைவடையக் கூடிய சந்தர்ப்பம் கூடுதலாகக் காணப்பட்டது. ஆயினும் இவ்வாறு வட்டி வீதத்தை உயர்த்துவது உள்நாட்டில் முதலீட்டுத் துறையைப் பாதிக்கக்கூடியதாக அமையும், அவ்வாறு உள்நாட்டில் முதலீடு குறைவதானது பொருளாதார இலட்சியங்களில் ஒன்றான பூரண வேலை வாய்ப்பு மட்டத்தை அடைதல் அல்லது பூரண வேலை வாய்ப்பு மட்டத்தை அடைய முயற்சித்தல் என்ற விடயம் தடைப்படும். அத்துடன் வட்டி வீதம் உயர்த்தப்படுமாயின் ஏற்றுமதிப் பொருட்களின் விலை கூடி அதனால் உலகச் சந்தையில் அப்பொருட்களுக்கான கேள்வி குறைவடைய வகை செய்யும். மேலும் ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்கள் தமக்கு வேண்டிய நிதி வசதியைப் பெற இயலாது ஸ்தம்பித நிலையை அடையவும் கூடும். எனவே சென்மதி நிலுவைப் பற்றுக் குறையைத் தீர்ப்பதற்கு உள்நாட்டில் இறுக்கமான பணக்கொள்கையைக் கடைப்பிடிப்பது சாத்தியமற்ற ஒரு செயலாயிற்று.

1967ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவையானது 329 மில்லியன் ரூபாயினால் பற்றுக் குறையை வெளிப்படுத்தியது. இவ்வாண்டில் வர்த்தக மாற்று வீதம் 9·4%ஆல் அதிகரித்தது. இவ் அதிகரிப்பிற்கு ஏற்றுமதிப் பொருட்களின் விலை 6·3%ஆல் குறைந்ததும் இறக்குமதிப் பொருட்களின் விலை 3·4% ஆல் அதிகரித்ததும் முக்கிய காரணமாக இருக்தன. அத்துடன் 1960ல் எமது வெளிநாட்டுச் சொத்து 458 மில்லியன் ரூபாயாக இருந்து 1966 ல் 282 மில்லியன் ரூபாயாகக் குறைவடைந்தது.

இந்நிலையில் 1966ஆம்ஆண்டு ஜூன்மாதம் இந்தியா தனது ரூபாவின்மதிப்பைக்குறைத்தது. இதன் காரணமாக இந்தியாவின் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகுறைந்து குறிப்பாக இந்தியாவின் தேயிலையின் விலை குறைந்து எமது தேயிலை ஏற்றுமதி வர்த்தகத்தைப் பாதிக்கும் என அஞ்சப்பட்டது. ஆயினும் இந்திய அரசாங்கம் நாணய மதிப்பிறக்கத்தால் பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய்மீது கூடிய அளவு கட்டணம் விதித்தமையால் இலங்கை ரூபாவின் பெறுமதியைக் குறைக்க வேண்டியதில்லை என

இலங்கை அரசாங்கம் முடிவு செய்தது. ஆனால் குறுகிய காலத்திற்குள் இந்திய அரசாங்கம் தேயிலை ஏற்றுமதி வருமானத்தின் மீது விதித்த கட்டணத்தை நீக்கியமையால் இலங்கையும் தனது ரூபாவின் மதிப்பைக் குறைக்க வேண்டிய நிலைக்கு உள்ளாயிற்று. அத்துடன் ஸ்டேர்லிங் பவுணின் மதிப்பு 14·3%ஆல் குறைக்கப் பட்டதைத் தொடர்ந்து இலங்கையும் தனது நாணயத்தின் மதிப்பை 20%ஆல் 1967ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி குறைத்தது.

1967இல் இலங்கை ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டதற்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது எமது சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் தொடர்ந்து நிலவி வந்த பற்றாக் குறையாகும். ரூபாவின் மதிப்புக் குறைக்கப்பட்டதனால் எமது ஏற்றுமதிப் பொருட்களின் விலை உலகச் சந்தையில் குறைவடைந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் கேள்வி கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் எமது ஏற்றுமதிப் பொருட்களின்விலைகுறைவடைவதால்உலக சந்தையில் ஏனைய நாட்டுப் பொருட்களுடன் போட்டி இடுவது இலகுவாகும் எனக் கருதப்பட்டது. நாணய மதிப்பிறக்கத்தின் காரணமாக ஏற்றுமதிப் பொருட்களுக்கு கேள்வி கூடும் என எதிர்பார்க்கப்பட்டாலும் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பானது அதன் விலை நெகிழ்ச்சியைப் பொறுத்த ஒரு விடயமாகும். பிரதான ஏற்றுமதிப் பொருட்களாக இருந்த தேயிலை, தென்னை, இறப்பர் என்பன விவசாயப் பொருட்களாக இருந்தமையால் அவற்றின் நிரம்பல் நெகிழ்ச்சியும் குறைவு என்பது நோக்கத்தக்கது. அத்துடன் நாணய மதிப்பிறக்கம் காரணமாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை கூடுவதினால் இறக்குமதிப் பொருட்களின் அளவு குறையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுள் அதிகமானவை ஒன்றில் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மாவு, சீனி, மருந்து வகைகள் அல்லது கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், மூலதனப் பொருட்களாக இருந்தன. இவற்றின் கேள்வி நெகிழ்ச்சியானது மிகக் குறைவானதாக இருக்கின்றபடியால் நாணய மதிப்பிறக்கத்தினால் இறக்குமதியை கட்டுப்படுத்த முடியும் என்பது பூரண வெற்றியை அளிக்கவில்லை. நாணய மதிப்பிறக்கத்தின் மற்றுமொரு நோக்கம் உள்நாட்டில் பொருட்களின் விலையை அருமையாக இருக்கும் அந்நியச் செலாவணியின் பெறுமதியுடன் ஒரு நேர் கோட்டில் இணைக்கச் செய்வதாகும்.

இவ்வாறு நாணய மதிப்பிறக்கம் பல்வகைப்பட்ட நோக்கங்களின் அடிப்படையில் செய்யப்பட்டதாயினும் அதன் முழுப் பயனையும் பெறமுடியாத நிலையை உள்நாட்டுக் கூலி மட்டமும் பண வருமானமும் அதிகரிக்கப்பட்டமை ஏற்படுத்திற்று எனலாம்.

எனவே 1967ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி செயற்படுத்தப்பட்ட நேரடியான 20% நாணய மதிப்பிறக்கத்தைத் தொடர்ந்து 1968ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் (Foreign Exchange Entitlement Certificate Scheme) நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதுவும் இலங்கை நாணயத்தின் மறைமுகமான மதிப்பிறக்கமாகும். தேர்ந்து எடுக்கப்பட்ட குறிப்பிட்ட சில பொருட்களைத் தவிர ஏனைய பொருட்களுக்கு அதன் இறக்குமதிப் பெறுமதியில் 44% மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும் என விதிக்கப்பட்டது. இதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு, முன்னர் செலுத்திய பணத்தை விடக் கூடுதலாகச் செலுத்தவேண்டிய நிலை உருவாயிற்று. இவ் அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தியதற்குப் பல காரணங்கள் கூறப்படலாயிற்று.

இக் காலகட்டத்தில் இறக்குமதி நடவடிக்கைகளுக்கும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டு முறைமைக்கும் இடையில் ஒரு முரண்பாடு இருப்பது கவனிக்கப்படலாயிற்று. அதாவது நடைமுறையில் இருந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டு முறையானது இறுக்கமான அனுமதிப் பங்கு (Quota) அடிப்படையில் அமைந்திருந்தமையால் எமது பொருளாதாரத்தில் சில விடயங்களில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. உதாரணமாக, கூடிய அளவு இலாபம் உழைக்கக் கூடியதும் திறனுக இயங்கிக் கொண்டிருந்தனவுமான பல கைத்தொழிற் துறைகளும் விவசாயத் துறைகளும் பெருமளவு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையே உள்ளீடாகக் கொண்டிருந்தன. ஆனால் இவற்றிற்குப் போதியளவு இறக்குமதி அனுமதிப் பங்கு கொடுக்கப்படாமையால் அவை தமது இயலளவிலும் குறைவாகவே செயற்படவேண்டியதாயிற்று. எனவே நாட்டின் பொருளாதார நலன் கருதி நுட்பம் கூடிய ஒரு இறக்குமதிக் கட்டுப்பாட்டு முறை அவசியமாயிற்று.

அத்துடன் 1967ஆம் ஆண்டின் 20% நாணய மதிப்பிறக்கமானது பாரம்பரியமான ஏற்றுமதிகளுக்கே ஓரளவு ஊக்கம் அளிப்பனவாக இருந்தது. ஆனால் பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதிக்கு இந் நடவடிக்கை போதியளவு ஊக்கம் அளிப்பனவாக அமையவில்லை. ஏனெனில் பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருட்களின் ஆக்கச் செலவானது 1967ஆம் ஆண்டின் 20% நாணய மதிப்பிறக்கத்தால் கூடியது மட்டுமன்றி ஏற்கனவே அத்துறைகள் போதியளவு இலாபம் உழைக்காதவைகளாகவும் காணப்பட்டன. ஆனால் எமது சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பது அத்தியாவசியமாகக் காணப்பட்டது. இக் குறையினைத் தீர்ப்பதற்காகவும் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் புகுத்தப்படலாயிற்று. அதாவது இச் சான்றிதழை வைத்திருப்பவர்கள் குறிப்பிடப்பட்ட ஏற்றுமதிகளுக்கு எதிராக அந்நியச் செலாவணியை வர்த்தக வங்கிகளிடம் ஒப்படைப்பார்களாயின் அவ் ஏற்றுமதி வருவாயில் 44% மேலதிகமாக உள்நாட்டு நாணயத்தில் வழங்கப்படலாயிற்று. இவ்வாறு வழங்கப்படும் தொகையானது பின்னர் 55% ஆகவும் அதன் பின்னர் 65% ஆகவும் அதிகரிக்கப்பட்டது. அதே போன்று இறக்குமதியைப் பொறுத்தவரை நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த 20% நாணய மதிப்பிறக்கம் துணை புரியும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இலங்கையில் வருமானம் சமனற்ற முறையில் பங்கீடு செய்யப்பட்டுள்ளமையால் உயர் வருமான வகுப்பினரது ஆடம்பரப் பொருட்களுக்கான இறக்குமதிக் கேள்வியைக் குறைப்பதில் அது பூரண வெற்றியடையவில்லை எனலாம். எனவே. இவற்றைச் சீர்செய்ய அந்நிய செலவாணி உரிமைச் சான்றிதழ் திட்டம் துணைபுரியும் எனக் கருதப்பட்டது.

அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தின்படி இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் A, B எனும் இரு வகுப்பினுள் அடக்கப்பட்டன. வகுப்பு Aயினுள் அடங்கிய பொருட்களை இறக்குமதி செய்வதாயின் அந்நியச் செலாவணிக்கு நிர்ணயிக்கப்பட்ட வீதம் (Offical Rate) கொடுக்கப்பட வேண்டும். வகுப்பு Bயை மேலும் இரண்டாக பிரிக்கலாம். அதன் முதலாவது பிரிவு அனுமதிப்பங்கு வழங்கப்பட்ட பொருட்கள் அனுமதிப்பங்கு அளிக்கப்பட்ட தொகையிலும் கூடுதலாக இறக்குமதி செய்யப்படுமாயின் அம் மேலதிகத் தொகைக்கு குறிப்பிட்ட வீதம் மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டியதாயிற்று. மற்றைய பிரிவு பொது அனுமதிப்பத்திர முறையின் (Open General Licence) கீழ் இறக்குமதி செய்யப்படக்கூடிய பொருட்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. இப்பொழுது அனுமதிப்பத்திர முறையின்

கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இறக்குமதிப் பெறுமதியில் 44%ம் ஆரம்பத்தில் மேலதிகமாகச் செலுத்த வேண்டியதாயிற்று. பின்னர் இத் தொகை 65%வரை அதிகரிக்கப்பட்டது. அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தின் முக்கிய நோக்கம் இறக்குமதிக் கொடுப்பனவைக் குறைப்பதும் ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதுமாகும். எவ்வாறாயினும் அது இலங்கை நாணயத்தின் மதிப்பை மறைமுகமாகக் குறைத்தது என்பது மிகையாகாது.

1967ஆம் ஆண்டின் நாணய மதிப்பிறக்கமும் 1968ஆம் ஆண்டின் அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டமும் எமது சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் பற்றாக் குறையை நீக்குவதில் பூரண வெற்றி பெறவில்லை எனலாம். இலங்கை அரசாங்கம் தொடர்ந்து குறை நிலை வரவு செலவுத் திட்டத்தைச் செயற்படுத்தியமையாலும் உள்நாட்டில் பண நிரம்பல் அதிகரித்துச் சென்றமையாலும் இறக்குமதிப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்துச் சென்றது. அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை உலகச் சந்தையில் அதிகரித்துச் சென்றமையும் ஏற்றுமதிப் பொருட்களின் விலை கீழ்நோக்கி சென்றமையும் எமது சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை தொடர்ந்தும் ஒரே போக்கைக் கொண்டதாக அமையக் காரணமாயிற்று. இவ் விடயத்தை அட்டவணை இரண்டில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் தெளிவாக விளக்குகின்றது எனலாம்.

இலங்கையின் சென்மதி நிலுவை

மில்லியன் ரூபாயில்

ஆண்டு	வர்த்தக நிலுவை Trade Balance	தேறிய கட்புலனாகா ஏற்றுமதி மாற்றுக் கொடுப்பனவை உள்ளடக்கியது	நடைமுறைக் கணக்கு மீதி Balance on Current Account	நீண்டகாலத் தேறிய முதலீடு	அடிப்படை மீதி Basic Balance
1967	— 335	+ 46	— 289	+ 161	— 128
1968	— 380	+ 25	— 355	+ 224	— 131
1969	— 746	— 51	— 797	+ 275	— 522
1970	— 315	— 35	— 350	+ 184	— 166
1971	— 287	+ 71	— 216	+ 404	+ 188
1972	— 255	+ 59	— 196	+ 292	+ 96
1973	— 299	+ 138	— 161	+ 190	+ 29
1974	— 1263	+ 356	— 907	+ 298	— 609
1975	— 1421	+ 649	— 772	+ 613	— 159
1976	— 709	+ 659	— 50	+ 715	+ 665

அட்டவணை 2

மூலம் : இலங்கை மத்திய வங்கியின் ஆண்டு அறிக்கை — 1976

1971ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் ரூபா நாணயத்தை மதிப்பிறக்கம் செய்வதற்கு மறைமுகமான, ஆனால் இலகுவான ஒரு முறை பின்பற்றப்பட்டது. அதாவது சர்வதேச நாணய அமைப்பு முறையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப ரூபா நாணயம், பவுண் ஸ்டேர்லிங்குடனும் அமெரிக்க டொலருடனும் மாறி மாறி இணைக்கப்பட்டது. 1971ஆம் ஆண்டு நவம்பர் வரை ரூபா நாணயம் பவுண் ஸ்டேர்லிங்குடன் இணைக்கப்பட்டு இருந்தது. 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்க டொலர் மிதக்க விடப்பட்டதும் அதன் மதிப்பு பவுண் ஸ்டேர்லிங்கிற்கு எதிராக இறங்கிற்று. இதன் காரணமாக பவுண் ஸ்டேர்லிங்குடன் இணைக்கப்பட்டு இருந்த ரூபா நாணயத்தின் மதிப்பு ஏற ஆரம்பித்தது. இந்நிலையில் 1971ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ரூபா நாணயம் அமெரிக்க டொலருடன் இணைக்கப்பட்டது. இதனால் ரூபா நாணயத்தின் மதிப்பு பவுண் ஸ்டேர்லிங்குக்கு எதிராகக் குறைவடைந்தது. ஆனால் 1972 ஜூன் மாதத்தில் பவுண் ஸ்டேர்லிங் மிதக்க அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் ஸ்டேர்லிங் வர்த்தக வட்டாரத்தில் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருப்பது சிரமமாக இருந்தபடியால் மீண்டும் ரூபா நாணயம் பவுண் ஸ்டேர்லிங்குடன் ஒரு பவுண்=15-60 ரூபா என்ற வீதத்தில் இணைக்கப்பட்டு 1972 ஜூலை முதல் 1976 ஏப்ரல் வரை செயற்படுத்தப்பட்டது. பின்னர் 1976 மே 24இல் இருந்து ஸ்டேர்லிங் பவுணுடனான இலங்கை ரூபாவின் தொடர்பைத் துண்டிக்கத் தீர்மானித்ததுடன் மத்திய வங்கி செலாவணி வீதத்தை வெளிநாடுகளின் குறிப்பிட்ட நாணயங்களுடன் தொடர்புடையதாக நிர்ணயித்தது. இவ்வாறு அந்நியச் செலாவணிச் சந்தையில் மதிப்புக் குறையும் நாணயங்களுடன் ரூபா நாணயத்தை இணைத்துச் செல்லும் போக்கானது ரூபா நாணயத்தின் மதிப்பு ஏனைய நாணயங்களுக்கு எதிராகக் குறைவடைந்து செல்ல ஏதுவாயிற்று.

இலங்கை நாணயத்தின் மீள் மதிப்பிடல் வரலாற்றில் ஒரு முக்கிய அம்சமாகக் குறிப்பிடக்கூடிய ஒரு விடயம் யாதெனில் 1977ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை நாணயம் 20%ஆல் மிகை மதிப்புச் செய்யப்பட்டதாகும். முன்னர் ஒரு அமெரிக்க டொலர் 8·72 ரூபாவில் இருந்து மிகை மதிப்பின் பின் ஒரு அமெரிக்க டொலர் 7.28 ரூபாவாகக் காணப்பட்டது. அதே போன்று ஒரு பவுண் ஸ்டேர்லிங் 14·97 ரூபாவில் இருந்து மிகை மதிப்பின் பின் 12.51 ரூபாவாகக் காணப்பட்டது. அன்றைய அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தின் 65%ஐயும் சேர்த்துக் கணக்கிட்டால் மார்ச் மாத நடுப்பகுதியில் ஒரு அமெரிக்க டொலர் 12·01 ரூபாவாகவும், அதற்குமுன்னர் 14·38 ரூபாவாகவும், முன்னர் ஒரு பவுண் ஸ்டேர்லிங் 24·70 ரூபாவாக இருந்து மிகை மதிப்பின் பின் 20·65 ரூபாவாகவும் காணப்பட்டது.

இலங்கை நாணயத்தின் மதிப்பேற்றத்திற்கு அன்றைய நிதியமைச்சரினால் கூறப்பட்ட காரணம் கூடியளவு கவனத்திற்குரிய விடயமாகும். அதாவது சென்மதி நிலுவை சாதகமாக இருப்பதனால் அதன் நற்பயனை நாட்டு மக்கள் அனுபவிக்க வேண்டு என்பதே நாணயத்தின் மிகை மதிப்பின் அடிப்படை நோக்கம் எனக் கூறப்பட்டது. ஆனால் உண்மையில் சென்மதி நிலுவை சாதகமாகக் காணப்பட்டதா? அது நிலைத்து நிற்கக்கூடியதா எனநுணுக்கமாக நோக்குதல் அவசியமாகின்றது. 1976ஆம் ஆண்டின் மத்திய வங்கியின் ஆண்டறிக்கை அவ்வாண்டில் மிகவும் திருப்தியான வர்த்தக நிலுவை காணப்பட்டதாகக் கூறுகின்றது. இக் கூற்றின் உண்மையை முன்னைய வருடங்களின் வர்த்தக நிலுவைகளுடன் ஒப்பிட்டு நோக்குவதன் மூலமே உணரக்கூடியதாக இருக்கும். 1976ல் 49,450 இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட இறக்குமதிகளுடன் ஒப்பிடுகை

யில் ஏற்றுமதி வருவாய் 48,400 இலட்சம் ரூபா பெறுமதியுடையதாக இருந்தமையைக் காட்டியதுடன் வர்த்தக நிலுவை 1050 இலட்சம் ரூபா கொண்ட குறைநிலையையும் காட்டியது. தேயிலை. தெங்குப் பொருட்களின் ஏற்றுமதியளவில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் தேயிலை, இறப்பர் முதலியவற்றின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பும் இறக்குமதிப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் காரணமாக அமைந்தன. இதன் காரணமாக வர்த்தக மாற்று வீதம் (Terms of Trade) ஓரளவு திருப்தியடைந்து காணப்பட்டது. இம் முன்னேற்றம் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார பன்முகப்படுத்தலினால் பெறப்பட்ட பெறுபேறுகளினாலும் ஏற்பட்டது எனலாம். மூன்று முக்கிய வேளாண்மைப் பொருட்கள் ஏற்றுமதியில் தங்கியிருக்கும் நிலை 1975இல் மொத்த உள் நாட்டு ஏற்றுமதியில் 76%இலிருந்து 1976ஆம் ஆண்டில் 70%ஆக வீழ்ச்சியடைந்து.

1976ஆம் ஆண்டின் சென்மதி நிலுவைத் தரவுகளின் நியதிப்படி வணிகக் கணக்கு ரூபா 7090 இலட்சம் குறைநிலையைக் காட்டியது. இக் குறை ரூ. 47,070 இலட்சம் கொண்ட ஏற்றுமதி வரவுகளை ரூபா 54,170 இலட்சம் கொண்ட இறக்குமதிக் கொடுப்பனவு விஞ்சியதினால் ஏற்பட்டதாகும். இவ்விறக்குமதிப் பொருட்களுள் 5,000 இலட்சம் ரூபா கொண்ட பொருட்கள் பன்னாட்டு முகவர்களிடம் இருந்தும் வெளிநாட்டு அரசாங்கங்களிடம் இருந்தும் பொருட்கள் வடிவில் குறிப்பாகக் கோதுமை மாவாக முழுதான நன்கொடையாகப் பெறப்பட்டது. இதனால் ஏற்றுமதி வரவுகளுக்கு மேலாகச் சொந்த மூலங்களில் இருந்து நிதியிடப்படவேண்டி இருந்த இறக்குமதிகளின் பெறுமதி ரூபா 2100 இலட்சம் மட்டுமேயாகும். வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கைக் குடிகளிடம் இருந்து பெறப்பட்ட கட்புலனாகக் கொடுக்கல் வாங்கல்களினாலும் உள்வந்த பணவருகையாலும் ரூபா 1600 இலட்சம் பெறக்கூடியதாக இருந்தது. எனவே சென்மதி நிலுவைக் குறைநிலையை நிதியீட்டுவதற்கு மேலதிகமாகத் தேவைப்படும் தொகை ரூபா 500 இலட்சம் மட்டுமேயாகும். இவ்வாண்டில் ரூபா 9430 இலட்சம் பெறுமதிகொண்ட பண்ட, செயற்திட்ட உதவிகளும் காசுக் கடன்களும் கிடைத்தமையால் குறைநிலையை எவ்வித இடர்பாடும் இன்றி நிதியிட்டக்கூடியதாக இருந்தது. இத்தன்மையால் கடந்தகாலக் கடன்பாடுகளை மீளச் செலுத்துவதற்கு இடமளித்தபின்பும் 1976இல் ரூபா 7100 இலட்சம் கொண்ட தேறிய உள் வருகை பதிவுசெய்யப்பட்டது. இதனால் சென்மதி நிலுவையின் அடிப்படை நிலுவை (Basic Balance) சென்ற ஆண்டில் ரூபா 1590 இலட்சம் கொண்ட குறைநிலைக்கு மாறாக ரூபா 6650 இலட்சம் கொண்ட மிகையைக் காட்டியது.

இலங்கை நாணயத்தை மிகை மதிப்பு செய்தது பொருளாதாரசித்தாந்தங்களுக்கு இயையுடையதா? என்ற வினா பரவலாக எல்லோரிடமும் எழுப்பப்பட்டது. சென்மதி நிலுவையில்மேலதிகம் தென்பட்டதெனபது அதாவது சென்மதி நிலுவை சாதகமான மீதியைக் காட்டுகின்றது என்பது எவ்வளவில் உண்மையானது என்பது நோக்கப்படவேண்டும். சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கானது ரூபா 500 இலட்சம் பற்றாக்குறையைக் காட்டியது. இதற்கான நிதியீட்டம் மத்திய கிழக்கு நாடுகளிடம் இருந்து பெற்ற கடன்களால் ஈடு செய்யப்பட்டது. எனவே கடன்கள் பெறுவதினால் எமது வெளிநாட்டுச் சொத்து அதிகரிப்பதைக் கொண்டு எமது வெளிநாட்டு வர்த்தகம் திருப்தியான நிலையில் உள்ளது எனக் கூறமுடியாது. அத்துடன் தேயிலையினதும், இறப்பரினதும் விலை ஏற்றம் நிச்சயமானது எனக் கூறமுடியாது; எனவே ஏற்றுமதிப் பொருட்களை நிச்சயமற்ற விலையேற்றத்தையும் நடைமுறைக் கணக்கின் பாதகமான மீதியை வெளி

நாட்டுக் கடன்களால் நிதி வீட்டம் செய்ததையும் அடிப்படையாகக் கொண்டு நாணய மிகைப்புச் செய்வது பொருளாதார ரீதியில் ஏற்ற செயல் அன்று. சுருக்கமாகக் கூறுவதாயின் நாணயத்தை 20% மிகைமதிப்பு செய்தது பொருளியற் காரணியன்று அரசியற் காரணமே ஆகும் எனக் கூறுவது மிகையன்று.

எனவே 1977ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி மீண்டும் இலங்கை நாணயத்தின் மதிப்பு இறக்கம் செய்யப்பட்டது. அதாவது இதுவரை காலமும் நடைமுறையில் இருந்த அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் அகற்றப்பட்டது. அத்துடன் இலங்கை நாணயம் மிதக்கவிடப்பட்டு ஒரு அமெரிக்க டொலர் = ரூபா 16 என்ற வரையறைக்குள் கொண்டுவரப்பட்டது. இந்நாணய மதிப்பிறக்கத்திற்கு முன்பு ஒரு அமெரிக்க டொலர் = 12·01 ஆக காணப்படலாயிற்று. இத்தொகை அந்நியச் செலவாணிச் சான்றிதழ் திட்டத்தின் 65%தையும் சேர்த்ததாகும். நாணயத்தின் மிகை மதிப்பிற்கு முன்பு ஒரு அமெரிக்க டொலர் = ரூபா 14·38 ஆகக் காணப்பட்டது. இவற்றுடன் ஒப்பிடும்போது இலங்கை ரூபா நாணயத்தின் மதிப்பு இறக்கம் செய்யப்பட்டு இருப்பது நன்கு விளங்கும். இந்நாணய மதிப்பிறக்கம் 1977 மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகை மதிப்பையும் வடித்துச் செல்வதாக அமைந்தது. இவ்வகையான நாணயமதிப்பிறக்கத்திற்கான நோக்கமும் அதன் விளைவும் ஒன்றுடன் ஒன்று முரண்படுவனவாக உள்ளன.

மூலதனச் செலவும் வருமானச் செலவும்

ஒரு வியாபாரத்தின் உழைக்கும் சக்தியைக் கூட்டுவிக்கும் நோக்குடன் செய்யப்பட்ட செலவுகள் யாவும் மூலதனச் செலவாகும். ஒரு வியாபாரத்தைக் கொண்டு நடாத்த ஏற்பட்ட செலவு அல்லது ஒரு சொத்தினைத் திறம்பட இயங்கும் நிலையில் பராமரிக்கும் செலவு வருமானச் செலவாகும். இவற்றினைத் தீர்மானிக்கும் முக்கிய மூன்று காரணங்கள் :

1. செய்யப்பட்ட செலவின் அளவு.
2. குறிப்பிட்ட செலவிற்கும் வியாபாரத்திற்கும் உள்ள தொடர்பு.
3. குறிப்பிட்ட செலவு வியாபாரத்தின் நிதியில் அல்லது தொழிற்படு முதலில் எவ்வளவு வீதம் என்பது.

மனமுவந்த அன்பளிப்பு!

↓

சிறந்த புகைப்படங்களுக்கு
நாடுங்கள்

பிரபா போட்டோ
108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

The best wishes

Leading Emporium for
Quality Fancy Goods

★

FANCY HOUSE
68, GRAND BAZAAR,
JAFFNA.

தரமான, சுவையான

- ஐஸ்கிறீம் வகைகள்
- குளிர்பானங்கள்
- சிற்றுண்டி வகைகள்
- ஐஸ் பழம்
- ஐஸ்சொக்
- ஐஸ்ஜொலி

ஸ்பெஷல்

- சொக்லெட் கிறிப்ஸ்
- ஸ்ரோபறி கிறீம்
- ராஜா பீடா

மற்றும் களியாட்டங்களுக்குத்
தேவையானவற்றைக்
குறித்தநேரத்திற் பெற்றுக்கொள்ள

ராஜா கிறீம் ஹவுஸ்
(நவீன ஐஸ்கிறீம் தாபனம்)
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

Donated By

↓

IMPORTERS & DISTRIBUTERS
OF

- MOTOR SPARES
- MOTOR CYCLE SPARES
- TRACTOR SPARES

&

- ELECTRICAL GOODS

R. Kanapathipillai & Co
12/2, Stanley Road,
JAFFNA.

அன்பளிப்பு!

எங்களிடம் சகலவிதமான

- ● அழகுசாதனப் பொருட்கள்
- ● கோல்ட்கவரிங் நகைகள்
- ● றீல் நூல்கள் ○ றேந்தைகள்
- ○ பட்டன்கள்
- ○ எலாஸ்ரிக் வகைகள்
- ○ நைலோன் நூல்கள்
- ○ வூல் நூல்கள்
- ● விளையாட்டுப் பொருட்கள்

மற்றும்

- ○ சாய்ப்புச்சாமான்களையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

●

அம்பிகாபதி ரெக்ஸ்ரைல்ஸ்

66, பெரியகடை :: யாழ்ப்பாணம்

போன் : 7437

வித்தியோதயம் சிறப்புடன் மலர எமது வாழ்த்துக்கள்!

↓

வேல் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

221, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

மலரும் வித்தியோதயத்துக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

→

வேண்டுமா?

- ● நகர்ச்சிப் பொருட்கள்
- ● பிடவை வகைகள்
- ● குடுசுறிப் பொருட்கள்
- ● விவசாயப் பொருட்கள்
- ● கட்டடப் பொருட்கள்
- ● பெற்றோலியம் கூட்டுத்தாபனப் பொருட்கள்.

வாருங்கள்! வாங்குங்கள்! மலிவுவிலையில்!

வேலை ப. நா. கூ. சங்கம் (லிமிற்றுள்ளது)

தொலைபேசி: 809

வேலணை.

ஏற்றுமதி இறக்குமதியில் வர்த்தக மாற்று வீதத்தின் தாக்கம்

து. சந்திரகுமார்
வர்த்தகவியல் (சிறப்பு)
இரண்டாம் வருடம்

கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்தே வெளிநாட்டு வியாபாரம் வளர்ச்சியடைந்தது. இன்றைய சூழ்நிலையில் எந்த ஒரு மனிதனோ அல்லது ஒரு நாடோ தனக்குத் தேவையான பொருட்களைத் தனித்து நின்று உற்பத்திசெய்ய முடியாது. எனவே இந் நிலையில் ஒரு நாடு ஏனைய நாடுகளுடன் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இவ் வர்த்தகமானது எவ்வாறு அமைகின்றது என்பதை ஒவ்வொரு நாடுகளும் வர்த்தகமாற்றுவீதம் மூலம் கண்டுகொள்கின்றன. அதாவது ஒரு நாடு தாம் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே இறக்குமதி செய்ய வேண்டிஇருக்கும். எனவே இறக்குமதி செய்யக் கூடிய பொருட்கள் சேவைகளது அளவு ஏற்றுமதிமூலம் கிடைக்கும் வருமானத்தில் தங்கியுள்ளது. இதனால் இறக்குமதி செய்யும் சக்தி ஏற்றுமதிச் சக்தியில் தங்கியுள்ளது. இத்தகைய ஏற்றுமதி இறக்குமதிச் சக்திகளுக்கு இடையே உள்ள தொடர்பை இவ் வர்த்தகமாற்றுவீதம் எடுத்துக் காட்டுகின்றது. இவற்றை வேறுவிதமாகக்கூறின் ஏற்றுமதி செய்கின்ற அலகு (Unit) ஒன்றைக் கொண்டு எத்தனை அலகுகளை இறக்குமதி செய்யலாம் என்பதைக் காட்டுவதே வர்த்தக மாற்று வீதம் எனப்படும். இத்தகைய வர்த்தக மாற்று வீதத்தை ஒரு நாட்டு அரசாங்கம் அல்லது அதன் பிரதிநிதியான மத்திய வங்கி வருடா வருடம் கணிப்பிடுகின்றது.

வர்த்தக மாற்று வீதத்தை பொதுவாக 3 வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:—

(1) பண்ட வர்த்தக மாற்றுவீதம். (Barter terms of Trade)

(2) வருமான வர்த்தக மாற்றுவீதம். (Income Terms of Trade)

(3) தனிக் காரணி வர்த்தக மாற்று வீதம். (Single factoral Terms of Trade)

இவற்றில் பெரும்பாலான நாடுகள் பண்ட வர்த்தக மாற்று வீதத்தையே அதிகளவில் பயன்படுத்துகின்றன. வர்த்தக மாற்றுவீதத்தைக் கணிப்பிடுவதற்கு முதலில் ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணையும், இறக்குமதி விலைச் சுட்டெண்ணையும் கணிக்க வேண்டும். ஏற்றுமதி இறக்குமதி விலைச்சுட்டெண்ணைப் பின்வருமாறு கணிக்கலாம்:

ஏற்றுமதி விலைச் சுட்டெண்:

$$\frac{\text{நடைமுறை ஆண்டு ஏற்றுமதிப் பொருட்களின் சராசரி விலை}}{\text{அடிப்படை ஆண்டு ஏற்றுமதிப் பொருட்களின் சராசரி விலை}} \times 100$$

இறக்குமதி விலைச்சுட்டெண்:

$$\frac{\text{நடைமுறை ஆண்டு இறக்குமதிப் பொருட்களின் சராசரி விலை}}{\text{அடிப்படை ஆண்டு இறக்குமதிப் பொருட்களின் சராசரி விலை}} \times 100$$

நடைமுறை ஆண்டென்பது வர்த்தக மாற்றுவீதத்தைக் கணிக்க இருக்கும் ஆண்டையே குறிக்கும். இந் நடைமுறை ஆண்டின் நிலையை ஓர் நிலையான ஆண்டுடன் ஒப்பிட்டே கணிக்கவேண்டும். இந் நிலையான ஆண்டையே (Base Year) அடிப்படை ஆண்டு என்கிறோம். (இலங்கையில் 1967ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாகக் கணிக்கப்படுகிறது) ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணை இறக்குமதி விலைச் சுட்டெண்ணால் பிரித்து வீதத்தில் கணிப்பதே வர்த்தக மாற்று வீதமாகும்.

வர்த்தக மாற்று வீதம்:

$$\frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்}} \times 100$$

ஒரு நாட்டின் வர்த்தக மாற்று வீதம் சாதகமாகவோ பாதகமாகவோ காணப்படலாம். அதாவது ஏற்றுமதிச் சக்தி இறக்குமதிச் சக்தியிலும் கூடிக் காணப்பட்டால் சாதகமாகவும், ஏற்றுமதிச் சக்தி இறக்குமதிச் சக்தியிலும் குறைந்து காணப்பட்டால் பாதகமாகவும் இருக்கும். அதாவது வர்த்தக மாற்றுவீதக் குறிகாட்டி நூற்றுக்கு மேலாக இருக்குமாயின் அது ஏற்றுமதிச் சக்தி கூடுதலாக இருப்பதையும், இறக்குமதி சக்தி குறைவாக இருப்பதையும் குறிக்கும். வர்த்தக மாற்றுவீதக் குறிகாட்டி நூற்றுக்குக் குறைவாக இருக்குமாயின் ஏற்றுமதிச் சக்தி குறைவாக இருப்பதையும் இறக்குமதிச் சக்தி கூடுதலாக இருப்பதையும் காட்டுகின்றது. இத்தகைய வர்த்தக மாற்று வீதத்தின் பயன்பாட்டினை இரண்டுவகையாகப் பிரிக்கலாம்.

(i) ஒரு நாடு குறிப்பிட்ட ஏற்றுமதியைக் கொண்டு எவ்வளவு இறக்குமதி செய்யலாம்.

(ii) குறிப்பிட்ட அளவு இறக்குமதியை மேற்கொள்ள எவ்வளவு பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதை முன்கூட்டியே அறியலாம்.

வர்த்தக மாற்று வீதத்தில் மாற்றம் ஏற்படுவதற்குக் காரணம் ஏற்றுமதி விலைகளின் போக்கும் இறக்குமதி விலைகளின் போக்குமாகும். ஏற்றுமதி விலைகள் மாறாமல் இறக்குமதி விலைகள் அதிகரித்தால் அல்லது இறக்குமதி விலைகள் மாறாமல் ஏற்றுமதி விலைகள் குறைந்தால் பாதகமான வர்த்தக மாற்றுவீதத்தை ஏற்படுத்தும். இறக்குமதி விலைகள் மாறாமல் ஏற்றுமதி விலைகள் கூடினால் அல்லது ஏற்றுமதி விலைகள் மாறாமல் இறக்குமதி விலைகள் குறைந்தால் சாதகமான வர்த்தக மாற்று வீதத்தை ஏற்படுத்தும். இத்தகைய மாற்று வீதம் வர்த்தக மாற்று வீதத்தை எவ்வாறு பாதிக்கும் என்பது இறக்குமதி ஏற்றுமதிகளுக்கான கேள்வி நெகிழ்ச்சியைப் பொறுத்து இருக்கும்.

இறக்குமதிப் பொருட்களை நோக்குவோமானால் இறக்குமதிப் பொருட்களின் விலை கூடும்போது கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாயின் முன்பு இறக்குமதி செய்த அதே அளவு பொருட்களை இறக்குமதி செய்யவேண்டியதால் மொத்தஇறக்குமதிச் செலவு கூடும். இதனால் வர்த்தக மாற்று வீதம் பாதகமான நிலையை அடையும். கேள்வி நெகிழ்ச்சி ஒன்றானால் மொத்த விலையில் ஏற்படும் மாற்றமும் மொத்த இறக்குமதியில் ஏற்படும் மாற்றமும் ஒரே அளவாக இருப்பதால் மொத்தச் செலவில் மாற்றம் ஏற்படாது. எனவே வர்த்தக மாற்றுவீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது. நெகிழ்ச்சி ஒன்றுக்கு மேலானால் விலை வீத அதிகரிப்பு வீதத்திலும் பார்க்க இறக்குமதி அளவு கூடியவீதத்தால் வீழ்ச்சியடைவதால், முன்னைய இறக்குமதி செலவிலும் பார்க்கத் தற்போது செலவு குறைவதால் வர்த்தக மாற்றுவீதம் சாதகமான நிலையை ஏற்படுத்தும். நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானால் விலை வீத அதிகரிப்பிலும் பார்க்க இறக்குமதி குறைந்த அளவு வீழ்ச்சி அடைவதாலும், முன்னரிலும் பார்க்கக் கூடிய தொகை செலவு செய்ய வேண்டியிருப்பதாலும் வர்த்தக மாற்று வீதம் பாதகமான நிலையை ஏற்படுத்தும்.

இறக்குமதிப் பொருட்களின் விலை குறையும்போது கேள்வி நெகிழ்ச்சி பூச்சிமானால், இறக்குமதித் தொகையில் மாற்றம் ஏற்படாததால் மொத்தச் செலவு குறைவடைந்து வர்த்தக மாற்று வீதத்தில் சாதகமான விலையை ஏற்படுத்தும். கேள்வி நெகிழ்ச்சி ஒன்றாயின் விலையில் ஏற்படும் மாற்றமும் இறக்குமதித் தொகையில் ஏற்படும் மாற்றமும் ஒரே அளவாக இருப்பதால் மொத்தச் செலவில் மாற்றம் ஏற்படாது. எனவே வர்த்தக மாற்று வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது. கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் கூடுதலானால் விலையில் ஏற்படும் சிறு வீழ்ச்சி வீதத்திலும் பார்க்க, இறக்குமதித் தொகை கூடிய வீதத்தால் அதிகரித்து இறக்குமதி மொத்தச் செலவு முன்னரிலும் பார்க்க அதிகரிப்பதால் வர்த்தக மாற்று வீதம் பாதகமான நிலையை ஏற்படுத்தும். கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவாயின் விலை வீழ்ச்சி வீதத்திலும் பார்க்க, இறக்குமதித் தொகை அதிகரிப்பு வீதமானது சிறிதளவாகக் காணப்பட்டு, இறக்குமதி மொத்தச் செலவு குறைவடைவதால் வர்த்தக மாற்று வீதம் சாதகமான நிலையை ஏற்படுத்தும்.

ஏற்றுமதிப் பொருட்களின் விலை கூடும் போது கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமானால், ஏற்றுமதித் தொகையில் மாற்றம் ஏற்படாது. எனவே மொத்த வருமானம் அதிகரித்து வர்த்தக மாற்று வீதத்தில் சாதகமான நிலையை ஏற்படுத்தும். கேள்வி நெகிழ்ச்சி ஒன்றாயின் விலையில் ஏற்படும் மாற்றமும் ஏற்றுமதித் தொகையில் ஏற்படும் மாற்றமும் ஒரே அளவாக இருப்பதால் மொத்த வருமானத்தில் மாற்றம் ஏற்படாது. எனவே வர்த்தக மாற்று வீதமும் மாற்றம் அடையாது. கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் கூடவாயின் விலை வீத அதிகரிப்பிலும் பார்க்க, ஏற்றுமதித் தொகை கூடிய வீதத்தில் வீழ்ச்சியடைவதால் முன்னர் ஏற்றுமதி செய்த பொருட்களிலும் பார்க்கக் குறைவான தொகையே ஏற்றுமதி செய்யப்படும். இதனால் மொத்த வருமானம் குறையும். எனவே வர்த்தக மாற்று வீதத்தில் பாதகமான நிலையை ஏற்படுத்தும். கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு குறைவாயின் விலை வீத அதிகரிப்பிலும் பார்க்க, குறைந்த வீதமே ஏற்றுமதித் தொகை வீழ்ச்சியடைவதால் முன்னர் ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானத்திலும் பார்க்க, கூடிய வருமானம் கிடைப்பதால் வர்த்தக மாற்று வீதம் சாதகமான நிலையை ஏற்படுத்தும்.

ஏற்றுமதிப் பொருட்களின் விலை குறையும் போது கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமானால், ஏற்றுமதித் தொகையில் மாற்றம் ஏற்படாது. ஆனால் மொத்த வருமானம்

குறைவதால் வர்த்தக மாற்று வீதத்தில் பாதகமான நிலையை ஏற்படுத்தும். கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுயின் விலையில் ஏற்படும் மாற்றமும் ஏற்றுமதித் தொகையில் ஏற்படும் மாற்றமும் ஒரே அளவாக இருப்பதால் மொத்த வருமானத்தில்மாற்றத்தை ஏற்படுத்தாது. எனவே வர்த்தக மாற்று வீதமும் மாற்றம் அடையாது. கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் கூடுதலாயின் விலை வீழ்ச்சியில் ஏற்படும் மாற்றத்திலும் பார்க்க கூடிய வீதத்தில் ஏற்றுமதித் தொகை அதிகரிப்பதால் மொத்த வருமானம் அதிகரிக்கும். எனவே வர்த்தக மாற்றுவீதம் சாதகமான நிலையை ஏற்படுத்தும். கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவாயின் விலை வீழ்ச்சி வீதத்திலும் பார்க்க, குறைந்த வீதத்தில் ஏற்றுமதித் தொகை கூடுவதால் முன்னர் கிடைத்த வருமானத்திலும் பார்க்க, தற்போது மொத்த வருமானம் குறைவதால் வர்த்தக மாற்று வீதத்தில் பாதகமான நிலையை ஏற்படுத்தும்.

இத்தகைய வர்த்தக மாற்று வீதத்தை ஆதாரமாகக் கொண்டு பழம் பொருளியல் அறிஞர்கள் சர்வதேச வியாபாரத்தைப் பொறுத்த வரையில் மூன்று பிரதான விடையங்களுக்கு விடைகாண முயன்றனர்—

(i) ஓர் குறிப்பிட்ட நாடு ஏனைய நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் போது எப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் எப்பொருட்களை இறக்குமதி செய்யும்.

(ii) பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும்போது அவை என்னென்ன விலைகளில் அதாவது என்ன மாற்று விகிதங்களில் மாற்றப்படுகிறது.

(iii) வர்த்தகத் தொடர்புகளிலே மாற்றங்கள் ஏற்பட்டு வர்த்தகச் சமநிலை பாதிக்கப்பட்டு மீண்டும் சமநிலை ஏற்படுத்தப் படும்போது என்ன நடைபெறுகிறது? அத்துடன் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் வர்த்தக மாற்று வீதத்தின் முக்கியத்துவத்தை பல கோணங்களில் இருந்து ஆராய்ந்தார்கள்:

(i) வெளிநாட்டு வர்த்தகத்தின்பங்கு அதி உயர்வாக இருக்கும் நாடுகளின் வர்த்தக மாற்று வீதத்தின் முக்கியத்துவம்.

(ii) வர்த்தக மாற்றுவீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் நாடுகளுடைய வருமானப் பங்கீட்டைப் பாதிக்கிறது. எனவே நாடுகளிடையே காணப்படும் வருமான வேறுபாடுகளுக்கு வர்த்தக மாற்றுவீதம் எவ்வளவு காரணமாயுள்ளது?

(iii) குறைவிருத்தி நாடுகளின் குறைந்த வருமான மட்டத்திற்கு வர்த்தக மாற்று வீதங்கள் எவ்வளவு தூரம் காரணமாய் இருக்கலாம் என்னும் விடயங்கள் ஆராயப்பட்டன.

இலங்கையின் வர்த்தக மாற்று வீதத்தை நோக்குவோமானால்:

1967 = 100

ஆண்டு	ஏற்றுமதி விலைகட்டெண்	இறக்குமதி விலைக்கட்டெண்	வர்த்தக மாற்றுவீதம்
1959	122	83	148
1960	122	83	148
1961	112	82	136
1962	109	77	142
1963	109	85	129
1964	111	105	105
1965	113	100	112
1966	107	98	109
1967	100	100	100
1968	117	126	93
1969	117	134	88
1970	118	140	84
1971	117	150	78
1972	118	158	75
1973	137	209	65
1974	213	370	58
1975	199	433	46
1976	239	383	62

மூலம்: இலங்கை மத்திய வங்கி மீளாய்வு

இலங்கையின் வர்த்தக மாற்று வீதத்தை 1968ஆம் ஆண்டு தொடக்கம் நோக்கினால், தொடர்ச்சியாகப்பாதகமான

நிலையில் செல்கின்றது. 1967ஆம் ஆண்டு சாதகமோ, பாதகமோ அற்ற ஒரு சமநிலை யாகக் காணப்படுகின்றது. இதனால், இவ்வாண்டு அடிப்படை ஆண்டாகக் கொள்ளப்படுகின்றது. 1966ஆம் ஆண்டுக்கு முன்னர் வர்த்தக மாற்றுவீதம் சாதகமான நிலையில் இருந்தது. வர்த்தக மாற்று வீதத்தை ஆதாரமாகக் கொண்டு எவ்வளவு அலகுகளை இறக்குமதி செய்ய லாம் எனக் கணிப்பிடலாம். அதாவது 1967ஆம் ஆண்டுக்கு முன்பு 100 அலகுகளை ஏற்றுமதி செய்து 100க்கு மேற்பட்ட அலகுகளை இறக்குமதி செய்யமுடியும். 1962ஆம் ஆண்டில் 100 அலகுகளை ஏற்று மதி செய்து 142 அலகுகளை இறக்குமதி செய்ய முடியும். ஆனால் 1967ஆம் ஆண் டுக்குப் பின்பு 100 அலகுகளை ஏற்றுமதி செய்தால் 100க்குக் குறைந்த அலகையே இறக்குமதி செய்ய முடியும். 1976ஆம் ஆண்டு 100 அலகுகளை இறக்குமதி செய்ய வேண்டுமானால்

$$\frac{38}{62} \times 100 = 61 \cdot 3 + 100 = 161 \cdot 3$$

அலகுகளை ஏற்றுமதி செய்யவேண்டும்.

இலங்கை அரசாங்கம் வர்த்தகத்தைப் பன்முகப் படுத்திய போதும் அது வர்த் தக மாற்று வீதத்தில் சாதகமான நிலையை ஏற்படுத்த வில்லை. இறக்குமதிப் பொருட் களின் விலைகள் மாறு விகிதத்தில் ஏறிக் கொண்டே போக, அதே வேளையில் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் சரிந்து கொண்டே போயின 1960—1970ஆம் ஆண்டுக்கிடையில் எல்லா ஏற்றுமதிப் பொருட்களினதும் விலைச் சுட்டெண்கள் 30 சத வீதத்தால் வீழ்ச்சியுற்ற அதே வேளையில் இறக்குமதிப் பொருட்களின் விலைச்சுட்டெண் 68·7 சத வீதத்தால் அதிகரித்தது. எனவே மேற்படி பத் தாண்டுகளில் எமது வர்த்தக மாற்று விகிதம் 43·3 சத வீதத்தால் வீழ்ச் சியுற்றது. இது இலங்கையின் கொள் வனவுப் பலம் வீழ்ச்சியுற்றமையை எடுத் துக் காட்டுகிறது. இந் நிலைமை 1970க்கும் 1975க்கு மிடையில் தொடர்ந்து நிலவி யது. எனவே எல்லா ஏற்றுமதி விலைச் சுட்டெண்களும் 80·5 சத வீதத்தால் இறங்க, இறக்குமதி விலைச் சுட்டெண் 31 சத வீதத்தால் அதிகரித்தது. எனவே 1960ஐ அடிப்படை வருடமாகக் கொண்ட ஒரு கணிப்பில் 1975இல் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தின் கொள்வனவுப் பலம் 61 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

இலங்கையின் வர்த்தகமாற்றுவீதத்தை 1971ஆம் ஆண்டுக்கு முற்பட்ட, பிற்பட்ட காலப் பகுதி என இரு பிரிவாக ஆராய லாம். முற்பட்ட பகுதியை நோக்கினால் ஏற்றுமதிப் பொருட்களின் விலையில் பெரு மளவு மாற்றம் ஏற்படவில்லை. அதாவது சிறிதளவு வீழ்ச்சி தொடர்ந்து ஏற்பட்டுள் ளது. இறக்குமதிப் பொருட்களை நோக்கு வோமானால் விலை அதிகரிப்பு வீதம் படிப் படியாக அதிகரித்து வருகின்றது. இதனால் வர்த்தக மாற்று வீதம் சாதகமான நிலை யில் இருந்து பாதகமான நிலையை ஏற் படுத்தியுள்ளது. 1971ஆம் ஆண்டுக்கு முற் பட்ட காலப் பகுதியில் ஏற்றுமதிப்பொருட் களின் விலையும், இறக்குமதிப் பொருட் களின் விலையும் முன்னைய ஆண்டைவிடக் கூடிய வீதத்தில் அதிகரித்து உள்ளது. ஆனால் ஏற்றுமதிப் பொருட்களின் விலை உயர்வை விட இறக்குமதிப் பொருட்களின் விலை கூடிய வீதத்தில் அதிகரித்தமையால் வர்த்தக மாற்று வீதம் தொடர்ந்தும் பாதகமான நிலையில் உள்ளது. 1971ஆம் ஆண்டுக்கு முன்னர் ஏற்றுமதிப் பொருட் களின் விலைகள் அதிகரிக்காமைக்கு காரணம் முக்கிய ஏற்றுமதியாக தேயிலை, இறப் பர், தெங்குப் பொருட்கள் இருந்தமை யாகும். இவற்றின் விலை நீண்ட காலமாக உயர்ச்சி இன்றி இருந்து வந்துள்ளன. மொத்த ஏற்றுமதியில 90% மான இப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்க ளாக இல்லாமையும், பிரதியீட்டுப் பொருட்கள் கூடியளவு இருந்தமையும், புதிய நாடுகள் தேயிலை உற்பத்தியில் ஈடு பட்டமையும், உலகச் சந்தையில் மேலதிக

மாகத் தேயிலை வந்தமையும் இதற்குக் காரணமாகும். இறப்பருக்குப்பதிலாகசெயற்கை இறப்பர் உற்பத்தி செய்யப்பட்டமையும், தெங்குப் பொருட்களுக்குப் பதிலாகக் கடலை பயன்படுத்தப்பட்டமையும் இதன் விலையை உயர்த்த முடியாமைக்கு மேலும் காரணமாக அமைந்தன. இறக்குமதிப் பொருட்களைப் பொறுத்த வரையில், அவை அத்தியாவசிய உணவுப் பொருட்களாக இருப்பதாலும், உலக சந்தையில் குறைவாக பொருட்கள் வருவதாலும், அதன் விலை தொடர்ந்தும் அதிகரிக்கின்றது. 1971ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப் பகுதியை நோக்குவோமானால் ஏற்றுமதிப் பொருட்களின் வருவாய் அதிகரித்தமைக்கு முக்கிய காரணம் பாரம்பரியமற்ற ஏற்றுமதியாகும்: இவற்றில் இரத்தினக்கல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இறக்குமதிகளைப்பொறுத்தமட்டில்விலைதொடர்துகூடிய வீதத்தில் அதிகரிக்கின்றது. உலகச் சந்தையில் எரி பொருட்களின் விலை அதிகரித்தமை இதற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றது. எனவே வர்த்தக மாற்று வீதம் பாதகமான நிலையை தொடர்ந்தும் அடைகின்றது.

இலங்கை ஒரு விவசாய நாடாக இருந்தும் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்தலும், கைத்தொழில் அபிவிருத்தியடையாமையும் முக்கிய பிரச்சினையாகும். எனவே வர்த்தக மாற்றுவீதத்தை சாதகமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் உணவுப் பொருட்களில் தன் நிறைவை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் கைத்தொழிலையும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

நிறுக்கப்பட்ட சராசரி முறை
WEIGHTED AVERAGE METHOD

கணக்கில் தரப்பட்டுள்ள இலாபங்களை அவற்றிற்கெனத் தரப்பட்ட நிறையால் பெருக்கிவரும் தொகையின் கூட்டுத் தொகையை மொத்த நிறைகளால் பிரித்து வரும் சராசரியை, வேண்டிய கொள்வனவால் பெருக்க வேண்டும். கொள்வனவு எத்தனை வருடம் எனத் தரப்படாவிட்டால் இரண்டு வருடக் கொள்வனவாகவே கணிக்கப்பட வேண்டும். இம்முறை பெரும்பாலும் நன் மதிப்புக் கணிப்பதற்கே பயன்படுத்தப்படுகிறது.

With the Best Compliments

from

↓

தலைமை அலுவலகம் :

கல்வி போதனா நிலையம்

34, பலாலி வீதி :: யாழ்ப்பாணம்

கிளை :

Loganathan Institute

166/1, ஆஸ்பத்திரி வீதி :: யாழ்ப்பாணம்

↓

G. C. E. (O/L - A/L) :— காலை மாலை முழுநேர வகுப்புகள்

G. A. Q. First in Commerce :
— சனி, ஞாயிறு மாத்திரம்.

I. A A., I. A. B., I. C. M. A.
Chartered Accountancy:
— கிழமை நாட்களில் மாலை,
— சனி, ஞாயிறு தினங்களும்

SPOKEN ENGLISH :
— மாலை வகுப்புகள்.

Space Donated

by

Ameer Tex

JAFFNA.

அன்பளிப்பு !

அழகான புகைப்படங்களை
சிறந்த முறையிலும் குறைந்த
செலவிலும் எடுத்து
வழங்குபவர்கள்

கஜேந்திரா ஸ்ருடியோ

40, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

Space Donated

by

Thirugnanas & Company

Certified Accountants, (Lond.)

Dr. V. Thirugnanasambanthar

B. Com., M. Com,, Ph. D., A. C, I. S.,
A. M. B. I. M., A. C. C. A., D. Com.,
Final I. C. M. A.,
Certified Accountant (London).

141, C. Ponnampalam Road,
JAFFNA.

Donated by

M. Nagaratnam & Co

Dealers in Electrical Goods,

62, Stanley Road,
JAFFNA.

பொருளியலில் சில விளக்கங்களும் சில முக்கிய பிரச்சினைகளும்

ந. கலைச்செல்வன்
வர்த்தகவியல் (சிறப்பு)
இரண்டாம் வருடம்

பொருளியல் என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணத்துடன் ஆரம்பிப்பதாயின் அது பொருத்தமற்றதாகவே காணப்படும். ஏனெனில் அன்றில் இருந்து இன்றுவரையும் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டவட்டமான பரிபூரணமான வரைவிலக்கணத்தை எவரும் வழங்கவில்லை. அத்துடன் தற்காலத்தைப் பொறுத்தவரையில் பொருளியல் என்றால் என்ன என பொருளியலாளர்களால் வரைவிலக்கணம் செய்யப்படும் முயற்சியானதும் மேற்கொள்ளப்படுவதில்லை. காரணம், தற்காலத்தைப் பொறுத்தவரையில் பொருளியல் என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் செய்யும் முயற்சியிலும் பார்க்க தனிப்பட்ட மனிதர்களோ, அன்றி பல்வேறுபட்ட சமூகங்களோ, சமுதாய அமைப்புக்களோ இன்னோரன்ன பல்வகையான பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் நிரந்தரமான வரைவிலக்கணத்தை அமைக்க வேண்டிய பாரிய பொறுப்பும், கடமைப்பாடும் காணப்படுகின்றது. அத்துடன் பல சிறந்த பொருளியல் அறிஞர்கள் தாம் வாழ்ந்த வெவ்வேறு காலத்துக்கேற்ப அக்கால பொருளாதார நிலைகளை அடிப்படையாகக் கொண்டு வேறுபட்ட விளக்கங்களை வழங்கியுள்ளார்கள். இவ்வாறாக பல்வேறு விளக்கங்களையும், கருத்து வேற்றுமைகளையும் வழங்கியபோதும், ஒரு பரிபூரணமான விளக்கத்துக்கு வெற்றி காணவில்லை. எனவே பொருளியல் பற்றிப் பரிபூரணமான வரைவிலக்கணம் ஒன்றை நிரந்தரமானதாகக் கூற முடியாதமைக்குப் பல காரணங்களைக் காட்டியபோதும், முக்கியமான காரணங்களில் ஒன்று என்னவெனில் பொருளியலானது ஒன்றோடு

ஒன்று இணைக்கப்படாத ஒரு தனி நடவடிக்கை அல்ல. இது நாளாந்த மனித நடவடிக்கைகள், மனித நடத்தைகள், இயற்கை யமைப்புக்கள் போன்றவற்றுடன் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதொன்றாகும். இவ்வகையில் மிகப் பாரிய அடிப்படையில் அல்லது மிகவும் குறுகிய அடிப்படையில் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணத்தைப் பின்வரும் முறையில் விளக்குவது பொருத்தமானதொன்றாகும்.

பொருளியல் பற்றி விளக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் அதன் வரலாறு ரீதியாக ஆராயும்போது மூன்று பிரதான அம்சங்களுக்குப் புகழிடம் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தகுந்ததே. இவ்வகையில் மிகவும் ஆரம்பகால பொருளியல் விளக்கங்கள், கருத்துக்களைப் பொறுத்தவரையில் செல்வத்தைப் பிரதான அம்சமாகக் கொண்டும், அடுத்து 18ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்திலும், அதனைத் தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டுப் பகுதிகளிலும் வழங்கப்பட்ட பொருளியல் கருத்துக்கள் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டும், இறுதியாக விளக்கப்பட்ட பொருளியல் விளக்கங்கள் அருமையை அடிப்படை அம்சமாகக் கொண்டும் விளக்கப்பட்டு, அக்கால கட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டுள்ளது,

இவ்வகைப்பட்ட விளக்கங்களைக் கூர்ந்து நோக்குவோமாயின், 18ஆம் நூற்றாண்டின், ஆரம்ப காலகட்டத்தில் வாழ்ந்தவரும், பொருளியல் தந்தையென அழைக்கப்படுபவருமான 'அடம் சிமித்' (Adam Smith) என்ற பொருளியல் அறிஞர் எழுதிய ''தேசங்களின் செல்வம்'' (Wealth of Nations) என்ற நூலில் செல்வத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கியுள்ளார். அதாவது, ''பொருளியல் என்பது செல்வத்தின் தன்மை, அதற்கான காரணங்கள் பற்றிய ஓர் ஆய்வாகும்'' என விளக்கம் கொடுத்துள்ளார். இவரது வரைவிலக்கணத்தைத் தொடர்ந்து வந்த மற்றுமோர் பழம் பொருளியலாளராகக் கருதப்படும் ஜே. எஸ். மில் (J. S. Mill) என்பவர் ''பொருளியலானது செல்வத்தின் ஆக்கத்தையும், அதனது விநியோகத்தையும் பற்றிய ஓர் நடைமுறை விஞ்ஞானமே யாகுமென'' — வரைவிலக்கணம் வகுத்துள்ளார். செல்வம் பற்றிய வரைவிலக்கணத்தில் இருந்து பொருளியல் என்பதற்கான வரைவிலக்கணத்தை அறிந்துவிட முடியாது. காரணம் செல்வம் என்று கூறும்போது அது பொருட்களை மட்டும் கருதுகின்றதே தவிர, சேவையைப் பற்றிக் கவனிக்கவில்லை. அதுமட்டுமன்றி செல்வத்தின் ஆக்கத்தையும், அதனது விநியோகத்தையும் பற்றிக் கூறுகின்றதே தவிர அதை அனுபவிக்கும் மனிதனின் நடத்தைகளைப் பற்றியும் கூறவில்லை. மேலும் ''டிவன் போட்' (Devenport) என்ற பொருளியலறிஞர் ''விலையின் அடிப்படையிலே விளக்கங்கள் அளிக்கும் விஞ்ஞானமே பொருளியலாகும்'' — என விளக்கம் செய்தார். இங்கு விளக்கப்பட்ட அத்தனை விளக்கமும், பணம் — செல்வம் என்னும் பெறுமதிகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, விளக்கப்பட்டுள்ளது. எனவே பொருளியல் பற்றி அறியும் ஆரம்பக் கோட்பாட்டுக் காலப் பகுதிகளில் வாழ்ந்த பொருளியலறிஞர்கள் யாவரும் செல்வம் பற்றிய நிலையில் இருந்தே பொருளியல் என்பதற்கு விளக்கம் அளித்துள்ளனர். எனவேதான் இவ்வறிஞர்களால் பொருளியல் பற்றி வகுக்கப்பட்டு, விளக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் பூரணத்துவமான வரைவிலக்கணமாக அமையாது, பொருளியலின் ஒரு பக்கம் சார்ந்த வரைவிலக்கணமாக அமையக் காரணமாயிற்று.

இதன் பின்னணியில் தோன்றிய பொருளியல் அறிஞர்கள் பொருளியல் என்பதற்கான விளக்கங்களை, சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு வகுத்துள்ளார்கள். சிறப்பாக நோக்குமிடத்து பொரு

ளியலறிஞரான ''அல்பிரட் மார்ஷல்'' (Alfred Marshall) என்பவரால் கொடுக்கப்பட்ட விளக்கமான மனித வாழ்க்கையும், அதனது சாதாரண பிரச்சனைகளையும் தீர்வுகாணும் என்ற முறையில் அமைந்த விளக்கத்தைக் குறிப்பிடலாம். குறிப்பாகத் தனி மனித வாழ்க்கையில் உலகியல் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டவர்களுக்கு இவ்விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. மனித வாழ்க்கையில் சாதாரண பிரச்சினை என்பது பொருளாதாரப் பிரச்சினையை மட்டும்தான் கருதுவதாக அமையாது. மாறாக அவை ஆத்மீகத் துறையுடன் தொடர்புடைய அல்லது குடும்ப உறவு முறைகள் பற்றிய தொடர்பான பல்வேறு பிரச்சினைகளுடன் தொடர்புடையனவாக இருக்கலாம். எனவே இவ்வாறு எழும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்றோ, அல்லது பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் இப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றோ இங்கு விளக்கம் அளிக்க முடியாது. அவ்வாறாக விளக்கம் அளிப்பதாக இருப்பின் செல்வம் மிகுந்த மேற்கு நாடுகளில் சமூகங்களிடையே ''புற்றுநோய்''என வர்ணிக்கப்படத்தக்க ''கிப்பீஸ்'' இயக்கத்தினைப் பொருளாதார ரீதியாக விளக்கவோ, ஆராயவோ முடியாது. மேலும் இதே அடிப்படையில் அமைந்த சமூக நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் பேராசிரியர் ''பிகு'' (Piegu) என்பவர் நேரடியாகவோ அல்லதுமறைமுகமாகவோ பொதுநலன் என்பது பணத்துடன் தொடர்புடையது என விளக்கம் அளித்துள்ளார். எனவே பணமானது சமூக நலனுடன் தொடர்புடையதாக இருப்பதனால் சமூக நலன் கோட்பாட்டினுள் இவரது பொருளியல் வரைவிலக்கணமும் அமைந்துள்ளது.

இறுதியாக அருமையை அடிப்படையாகக் கொண்டு பொருளியலுக்கான வரைவிலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. ''மனித தேவைகள் அதிகமாகவும், நாணயமும் பொருள்களும் பற்றாக்குறையாக இருத்தல் ஆகிய இரு நடவடிக்கைகள் இடையே யேற்படுகின்ற தொடர்பினால் எழுகின்ற மனிதனின் நடத்தை பற்றி ஆராயும் விஞ்ஞானக்கலையே பொருளியல் கலையாகும்'' எனப் பொருளியலறிஞரான ''லயனல் ரொபின்சன்'' (Linal Robinson) என்பவர் விளக்கியுள்ளார். அதாவது தேவையின் அதிகரிப்பினால் பற்றாக்குறையாக இருக்கும் சாதனங்களை வழிப்படுத்தும் ஆற்றலைப் பற்றிய ஆய்வே பொருளியலாகும் என்பதாகும். எனவே இவரது விளக்கமானது அருமையை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு உபயோகங்களைக் கொண்ட சாதனங்களுக்கிடையே மனித நடத்தையானது எவ்வாறு அமைகின்றது என்பதையும், பொருளாதார அமைப்புக்களிடையே பற்றாக்குறையான சாதனங்கள் மத்தியில் மனிதனின் எண்ணிறந்த தேவையிடையே எவ்வாறு ஒழுங்குசெய்வது என்பதையும் கொண்டு காணப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும், இங்கு மனித நடத்தை, மனிதனின் நாளாந்த பிரச்சினைகள், அவற்றை நிறைவுபடுத்தத் தேவைப்படும் சாதனங்கள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து விளக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். லயனல் ரொபின்சன் என்ற பொருளியலாளரின் கருத்து விளக்கத்தில் இருந்து விளங்குவதாவது, பொருளியல் என்பது அருமையைப் பற்றியது என்பதாகும். ஆனால் இன்று பொருளியலானது அருமைப் பிரச்சினையை மட்டும்தான் ஆராய்கின்றது எனப் பூரணமாகக் கூறமுடியாது. ஏனெனில், பல்வேறு நாடுகளில் பொருளாதாரம் அருமை பற்றிய பிரச்சினைகளுக்கு மட்டுமன்றி விரயத்தை எவ்வாறு தடுப்பது, என்ன வழிகளைக் கையாள்வது என்ற பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டியுள்ளது. குறிப்பாக அமெரிக்காவின் பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டால், அங்கு அருமை பற்றிய பிரச்சினை மட்டுமன்றி விரயத்தைத் தடுக்கவேண்டிய நிலையும் காணப்படுவது வெளிப்படை. எனவே இன்றைய பொருளாதாரத்தில் அருமை பற்றிய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதை விட விரயத்தைத்

தடுத்தல் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கஷ்டமானதாக இருக்கின்றது. ஆகவே இன்றைய பொருளாதாரப் போக்கின்படி அருமை பற்றிய விதியினைச் செயல் படுத்த முடியாதுள்ளது.

மேற்காட்டிய செல்வ நிலையில் ஆராயப்பட்ட கோட்பாடுமூலமும், சமூக நலனை ஆதாரமாகக் கொண்டு ஆராயப்பட்ட கோட்பாடு மூலமும், அருமை நிலையினை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்ட கோட்பாடுமூலமும் எடுத்துக்காட்டப்பட்ட பொருளியல் பற்றிய விளக்கங்கள் யாவும் பொருளியல் என்பதற்கு முற்றும் முழுதான நிரந்தரமான விளக்கத்தைக் கொடுக்கக்கூடியதாக அமையவில்லை. ஒவ்வொரு கோட்பாட்டாளர்களும், தமக்கு முன்னைய கோட்பாட்டு ரீதியாக ஆராயப்பட்ட கோட்பாடுகளுக்குத் தக்க முறையிலேயே தமது விளக்கங்களையும் வகுத்து விளக்கியுள்ளார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தனிநபர் இடையேயோ அல்லது சமூகங்களிடையேயோ அல்லது நாடுகளிடையேயோ உள்ள பொருளியல் நிலையைப்பற்றி ஆராயும்போது பொருளியல் என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணத்தை அறிந்துகொள்வதிலும் பார்க்க, அவற்றின்மீது ஏற்படுகின்ற பிரச்சினைகள் பற்றியோ அல்லது அப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற மூல வளங்களைப் பற்றியோ அல்லது அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கையாளும் வழிமுறைகளைப் பற்றியோ சிந்திக்கவேண்டியதாகவும், அவற்றின் நிரந்தரமான தீர்வுக்கு விளக்கமளிக்கவேண்டியதாகவும், பூரண பொருளாதாரத் தன்னிறைவை அடைய வழிவகுக்கவேண்டியதாகவும் காணப்படுகின்றது. எனவே தற்காலகட்டத்தில் பொருளியல் பற்றிய விளக்கம் அளிக்க முற்பட்டால் அது பொருளியல் பிரச்சினைகளின் தீர்வு பற்றிய விளக்கமாகவே அமையும். எனவேதான் இன்று நாம் பொருளியல் பற்றி மிகவும் எளிமையான வரைவிலக்கணம் ஒன்றை வழங்க வேண்டியதாகவுள்ளது. ஆனால் இவ்வாறான பொருளியல் பற்றிய விளக்கம் அளிப்பது இலகுவானதொன்றல்ல. ஏனெனில் பொருளாதாரப் பரந்தவியலில் சமூகங்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சினைகளானது வெவ்வேறு விதமான மாற்றங்களை அணுகிக்கொண்டு செல்கின்றது. இதனால்தான் "யோக்கப் லீனர்" (Jocob Liner) என்ற பொருளியலறிஞர் "எதை எதைப் பொருளியல் என்கின்றார்களோ! அவைகளே பொருளியலாகும்" என விளக்கம் அளித்துள்ளார்.

"பொருளியல் பிரச்சினைகள்" என்று கூறும் போது அவை ஒரு நாட்டின் பொருளாதார அமைப்புக்கள் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பொதுவாக முதலாளித்துவ அமைப்பு, பொதுவுடமை அமைப்பு அல்லது இரண்டும் பெற்ற கலப்புப் பொருளாதார அமைப்புப் போன்ற நிலைகளில் உள்ள ஒரே தன்மையையொத்த மூலப் பிரச்சினைகளைக் கொண்டவையாகவே இருப்பதைக் குறித்து நிற்கின்றது. இப் பிரச்சினைகள் பொருளாதார அமைப்புக்களுக்கு ஏற்ப ஒத்தனவாகக் காணப்படினும் தீர்க்கும் வழிமுறைகள் வித்தியாசப்பட்டவையே. பொருளாதார அமைப்புக்கள் எதுவாக இருப்பினும் பின்வரும் பொருளாதார அடிப்படை அம்சங்களான அருமை, தெரிவு, பரிமாற்றம், உச்சப்பயன் ஆகியவை பொதுவானவையாகவேயுள்ளன. அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வழிகளே பொருளாதார அமைப்புகளுக்கு ஏற்ப வேறுபட்டுக் காணப்படுகின்றது. குறிப்பாக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பை எடுத்துக்கொண்டால் அங்கு "விலைப்பொறி முறை இயக்கத்தை" (The Price Mechanism) அடிப்படையாகக் கொண்டே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வழிமுறைகள் இயக்கப்படுகின்றன. ஆனால் சமூகவுடைமைப் பொருளாதார அமைப்புடைய நாடுகளில் "மத்திய திட்டக் குழு" (Central Economic Planning Council) பின்வரும் வழிகளில் தோன்

றும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளைப் பரந்த அடிப்படையில் நோக்குகின்றது.

(1) "என்ன" பொருட்களை உற்பத்தி செய்தல்.

(2) "எவ்வாறு", "எவ்வழிகளில்" உற்பத்தி செய்தல்

(3) "யாருக்காக" இவற்றை உற்பத்தி செய்தல் — என்பனவாகும்.

எந்தப் பொருளாதார அமைப்புக்களும் தம் நாட்டிடையே ஏற்படுகின்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மேற்கூறப்பட்ட ஏதோவொரு வழிமுறைகளில் தீர்வுகாண முயலுகின்றன. குறிப்பாக இலங்கையின் பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால் இதன் அமைப்பு முற்றும் முழுதான ஒரு தனி அமைப்பாக அமையாது, முதலாளித்துவ சமூகவுடமைக் கொள்கைப் போக்குக்கள் இரண்டும் கலந்த அமைப்பாகவுள்ளது எனலாம். எனவே இலங்கையின் பொருளாதார நிகழ்வில் இவ்வாறான கலப்புத் தன்மை காணப்படுவதற்கு முக்கிய காரணமாக அமைவது காலத்துக்குக் காலம் அரசியல் கொள்கைகளும், அரசாங்கப்போக்குகளும் மாற்றம் அடைவதே. இலங்கையின் அரசியல், பொருளாதார நிலைகளை வரலாற்று ரீதியாக அவதானிக்கும்போது நிரந்தரமான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளின்கீழ்த் திட்டமிடப்பட்டு அவை செயல்படுத்தப்படவில்லை. எனவே தான் இலங்கையின் பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் இரு துறை அமைப்புக்களின் போக்குகள் காணப்படுகின்றது.

தற்கால சூழ்நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற முக்கியமானதும், தீர்வுகாணப்பட வேண்டியதுமான பிரச்சினைகள் அதிகம் இருப்பினும் நாட்டின் உடனடித் தேவைக்காகத் தீர்வு காணவேண்டிய பிரச்சினைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

சனத்தொகையும் அதன் தாக்கமும்:

இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும் முக்கியமான பிரச்சினையாக அமைவது சனத்தொகைப் பிரச்சினையே. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான வேகத்திலும் பார்க்க, இச் சனத்தொகை அதிகரிப்பு வேகம் அதிகரித்துச் செல்வதனாலேயே பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவது வெளிப்படையாகத் தெரிகின்றது. இவ்வாறு சனத்தொகை அதிகரிப்பு வீதம் அதிகரித்துச் செல்வதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு:

(அ) கிராமப்புறமட்டத்தில் கல்வியறிவு வளர்ச்சி குன்றியிருத்தல்.

(ஆ) நாட்டின் சுகாதார சேவைகள் அதிகமாகவும், திடமானவையுமாக இருத்தல்.

(இ) நாட்டின் கலாச்சார, பண்பாட்டுடன் தொடர்புடையதான மரபுவழி காரணமாக இளமையில் திருமணம் செய்தல்.

(ஈ) இலங்கையில் ஏனைய நாடுகளைப் போலன்றி இயற்கையால் ஏற்படும் அழிவுகள் ஏற்படாது இருத்தல்.

(உ) மக்கள் தமது பொழுதினை உல்லாசமாகக் கழிக்கக் கூடியளவுக்கு பொழுதுபோக்கு வசதிகள் குறைவாக இருத்தல்.

(ஊ) பழமை பேணும் மக்கள் அதிகமாக இருத்தல். அதாவது சமய நம்பிக்கைக் குட்பட்டவர்கள் மகப்பேறு கிடைக்கக் கிடைக்க "இறைவன்வரம்" எனக் கருதி "கருத்தடை" செய்ய விரும்புவதில்லை.

முன்னைய அரசாங்கத்தினால் தீட்டப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தில் கடந்த 10 வருட காலங்களில் வருடத்துக்கு சராசரி 3,70,000 குழந்தைகள் பிறக்கின்றன

என்று கூறப்படுகின்றது. இந்த விகிதப்படி சனத்தொகை பெருகிக்கொண்டு போகுமானால் 1981ஆம் ஆண்டில் வருடத்துக்கு சராசரி 5,05,000 குழந்தைகள் பிறக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதாவது 8 வருடங்களால் இலங்கையின் சனத்தொகையில் சராசரி பிறப்புத் தொகை 5,00,000 ஆகும். கட்டத்தை அடைந்துவிடும் முன்னைய அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட சமூக, பொருளாதார ஆய்வின்படி 5 குழந்தைகளுக்கு மேல் உள்ள குடும்பங்களில் 63%மான குடும்பங்கள் மாதம் 200 ரூபா வருமானத்துக்குக் குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். ஒவ்வொரு 100 இலங்கை மக்களில் 41 பேர் 15 வயதுக்குட்பட்டவர்களாவர். அபிவிருத்தியடைந்த நாடுகளில் 22—30 பேர்களே 15 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கின்றார்கள். சனத்தொகை எதுவித கட்டுப்பாடும் இல்லாமல் பெருகுமானால் அண்டி வாழ்பவர்களின் தொகை கூடிக்கொண்டே போகும். ஒரு நாட்டின் சனத்தொகையில் அண்டி வாழ்பவர்களின் தொகை கூடிக்கொண்டே போனால் அது முதலீட்டைப் பெரிதும் பாதிக்கும். இவ்வாறு முதலீட்டைப் பாதித்தால், அப்பாதிப்பு நாட்டின் உற்பத்தித்துறையைப் பெரிதும்பாதிக்கும். உற்பத்தித்துறை பாதிப்படைய நாட்டின் பொருளாதாரத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு வழங்கப்படும் வழங்கல் அளவு குறைவாகக் காணப்படும். இந்நிலை எல்லாத் துறைகளிலும் ஏற்படும்போது நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும்பாதிக்கக் கூடியளவுக்கு உற்பத்திப்பொருளிலும், உற்பத்திச் சாதனங்களின் அமைப்பிலும் அருமை நிலையை உண்டுபண்ணுவதுடன் நாட்டில் பணத்தின் பெறுமதி குறைவடைந்து விலை வீக்கப் பிரச்சினையைக்கூட ஏற்படுத்திநிற்கும். எனவேதான் ஒவ்வொரு நாட்டின் அரசாங்கங்கள் சனத்தொகை அதிகரிப்பு வீதத்தைக் கட்டுப்படுதுவதற்காகப் பல வழிகளைக் கையாளுகின்றன.

இலங்கையின் சனத்தொகை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகத் தோன்றுவது யாதெனில் பிறப்புவீதம் அதிகமாகவும், இறப்புவீதம் மிகவும் குறைவாகவும் இருப்பதேயாகும். அதாவது பிறப்பு வீதம் பெருக்கல் விருத்தி முறையிலும் பெருகிச் செல்வதையும் இறப்புவீதம் கூட்டல்விருத்தி முறையிலும் கூடிச் செல்வதையும் குறித்து நிற்கின்றது. சனத்தொகை விகிதாசார அளவீட்டின்படி 43% மானோர் தொகை இளைஞர்களாக இருப்பதனால் இவர்களில் பெரும் பகுதியினர் உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் தன்மை அற்றவர்களாகவும், உற்பத்தி செய்த பொருட்களையும், சேவைகளையும் நுகர்ச்சி செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்நிலையில் நாட்டின் முதலீட்டுப் பெருக்கம் குறைவாகவும்— அதாவது சேமிப்புத் தொகை குறைவாகவும்—நுகர்ச்சிச் செலவுவீதம் அதிகமாகவும் இருக்கும். இக்கட்ட நிலையில் நாட்டின் பொருளாதாரத்தைச் சரிப்படுத்துவது என்பது பிரச்சினைக்குரியதொன்றே.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் சனத்தொகையைக் கட்டுப்படுத்துவது என்பது அவசியமாகின்றது. பெண்களுக்கான இனப்பெருக்க வயதான 15—44 வயதுக்குமிடையில் இலங்கையில் 37,63.000 பெண்கள் இருக்கின்றனர். ஆண்களுக்கான இனப்பெருக்க வயதானது இடைவெளி மிகவும் கூடியது எனினும் இலங்கையில் அவர்களின் தொகை 40 இலட்சத்துக்கு மதிப்பிடலாம். ஆகவே இலங்கையின் முக்கிய பிரச்சினை யாதெனில் சனத்தொகையை அதிகரிக்கவிடாமல், கட்டுப்படுத்தும் பல வழிகளைக் கையாளுவதேயாகும்.

(அ) பெண்கள் விவாகம் செய்யும் வயதைக் கூட்டுதல்.

(ஆ) உபகாரப் பணம் கொடுத்துப் பெரும்பான்மையானவர்களைக் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு வேண்டிய சத்திரசிகிச்சை செய்யும்படி வேண்டுதல்.

(இ) இலங்கையில் குறைந்தபட்சம் அடுத்த மூன்று ஆண்டுக்குள் 10 இலட்சம் குடும்பக் கட்டுப்பாட்டுச் சத்திர சிகிக்சையாகிலும்செய்தல்வேண்டும். ஏனெனில் பிறப்பு வீதம் 1000க்கு 30 ஆகவும், இறப்பு வீதம் 1000க்கு 8 ஆகவும் உள்ளது. எனவே கிட்டத்தட்ட சமநிலைக்குக் கொண்டு வர வேண்டும்.

தொழில் இன்மையும் அதன் தாக்கமும் :

நாட்டின் தொழில் இன்மைப் பிரச்சினை என்று கூறும்போது, அப் பிரச்சினை பின்வரும் காரணங்களினாலேயே பெரிது படுத்தப்படுகின்றது:

(அ) நாட்டின் பொருளாதார நிலைக் கேற்ப கைத்தொழில், விவசாயத் துறைகளின் உற்பத்தியில் பன்முகப்படுத்தப் பட்ட திட்டமிட்டு இயங்காதிருத்தல்.

(ஆ) இலங்கையில் பெறத்தக்க மூல வளங்களைக்கூட உரியமுறையில் பயன்படுத்தப்படாது விட்டுவிடுதல்.

(இ) நாட்டின் உற்பத்தித்துறையின் பெருக்க விகிதத்திலும் பார்க்க, சனத்தொகை அதிகரிப்பு வீதம் கூடிக்கொண்டு செல்லுதல்.

(ஈ) நாட்டின் சேமிப்பு மிகக் குறைவாக இருப்பதனால், மூலதன முதலீட்டுநிலை மிகவும் பின்தங்கிய கட்டத்தை அடைந்திருப்பதும், மூலதன முதலீட்டுநிலை பின்தங்கிய கட்டத்தை அடைந்திருப்பதனால், பல்வகை உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் நவீன தொழிற்சாலைகளை அமைக்கும் வாய்ப்பு அரிதாக இருப்பதனாலும், தொழிலின்மை நிலையில் உள்ளோர் தொகை அதிகரிக்கக் காரணமாகின்றது. அத்துடன் உரிய தொழில்களுக்கெனப் பயிற்றுவிக்கப்படுகின்ற பயிற்சியாளர்களுக்குக் கூட தற்கால இலங்கைப் பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்பு அளிக்க முடியாதுள்ளது.

1946இல் இலவசக்கல்வி முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்கள் கல்வி கற்க முனைந்ததன் காரணத்தால், தொழிற்பட்டாளத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதி கல்வி கற்ற ஒரு பகுதியாக மாத்திரமன்றி ஆரம்ப உயர்கல்வி கற்ற பகுதியாகவும் காணப்படுகின்றது. குடித்தொகைப் புள்ளி விபரவியற் திணைக்களத் தகவல்களின்படி 1971இல் 7,96,199 பேர் வேலையின்றி இருந்தனர். இவ் வெண்ணிக்கை அப்போதைய மொத்தத் தொழிற்பட்டாளமான 44 இலட்சத்தில் 18%ஆக இருந்தது. ஆனால் மத்திய வங்கியால் 1975இல் மேற்கொள்ளப்பட்ட நிலை தொழில் பயன்பாடு தொடர்பான ஓர் ஆய்வின்படி 9,68,313பேர் தொழில் இன்றி இருந்தனர். இவ் வெண்ணிக்கை மொத்தத் தொழிற்பட்டாளத்தில் 20%ஆக இருந்தது. வேலையின்மை 15—29 வயதுக் குழுவினரிடையே அதிகமாகக் காணப்படும். அதே வேளை குறை உழைப்புநிலையானது 15—59 வரையான சகல வயதுக் குழுவினரிடையேயும் காணப்படுகின்றது. 20—29 வயதுக் குழுவினரிடையே இது மிக அதிகமாகக் காணப்படுகின்றது. வேலையின்றியுள்ளோர் இளவயதினர் மட்டுமன்றி, அவர்கள் ஓரளவு கல்வி கற்றோரும் ஆவர். 1963-71 காலப் பகுதியில் தொழில் வாய்ப்புக்கள் வருடாந்தம் 54,000 தொழில்கள் என்ற விகிதத்தில் அதிகரித்தன எனவும், 1971—81 காலப்பகுதியில் வேலையின்மை வருடாந்தம் 1,05,000 என்ற விகிதத்தில் அதிகரித்து வரும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. சுதந்திரத்தைத் தொடர்ந்த பத்தாண்டுகளில் வேலை வாய்ப்பை உருவாக்கும் கொள்கைகள் எவையும் நடைமுறைப் படித்தப் பட்டதாக இல்லை. பொதுவாகப் பொருளாதார நிலைமை சீராகக் காணப்படாமை சனத்தொகையின் மெதுவான வளர்ச்சி அதிகரிக்கும் மக்களை வரண்ட வலய அபிவிருத்தித் திட்டங்கள் தாங்கிக்கொள்ளும் என்ற நம்பிக்கை,

அதிகரித்து வந்த வேலையின்மையின் பாரதூரமான விளைவை உணர்ந்துகொள்ள முடியாமல் போனமை போன்ற காரணங்களால், தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கும் தொழில் நுட்பங்கள் மூலமாகவன்றி முதலீட்டுச் செறிவுள்ள தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை நவீன மயமாக்குவதிலேயே அரசாங்கங்கள் அக்கறை செலுத்தியது. ஆனால் கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி, கிராமத் தொழில் வாய்ப்புப் பெருக்கத் திட்டங்களில் பின் வருவன நடைமுறையில் செயல்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்:

(அ) இளைஞர்களைக் குடியேற்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவென, 1966இல் இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டங்கள் கூட்டுறவு அடிப்படையில் செயற்படும் நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டதாயினும், தற்போது ஏறக்குறைய எல்லாத் திட்டங்களிலும் காணிகள் ஒவ்வொருவருக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. 1974இல் சுமார் 5000 இளைஞர்கள் இச் செயற்பாட்டின் மூலம் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

(ஆ) கூட்டுறவுக் கூட்டுப்பண்ணைத் திட்டங்களை ஸ்தாபிப்பதற்கான திட்டமொன்று 1971இல் ஆரம்பிக்கப்பட்டது. 1974 அளவில் 50 திட்டங்கள் இயங்கிவந்தன. இவற்றில் 3,400 பேர் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். மேலும் 15 திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. எனவே இன்னும் அதிகப்படியானோருக்கு தொழில் வாய்ப்பு இத்துறையில் கிடைக்கும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

(இ) பிரதேச அபிவிருத்திச் சபைத் திட்டங்கள் 1971இல் தொடங்கப்பட்டன. 1975 மார்ச் வரை 1,673 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. 31,656 பேருக்கு இவை வேலைவாய்ப்பை வழங்கவல்லன. இவற்றுள் 984 திட்டங்கள் தற்போது இயங்கிவருவதுடன் 18,772 பேருக்குத் தொழில் வாய்ப்பையும் வழங்கியுள்ளது

(ஈ) ஐ. நா. உதவியுடன் கிராமக் குளங்களையும், சிறுநீர்ப்பாசனத் திட்டங்களையும் புனர் நிர்மாணம் செய்யும் வேலைத் திட்டமொன்று 1968இல் ஆரம்பிக்கப்பட்டது. மொத்த இலக்கான 8,000 சிறிய குளங்களுள் 1974 யூன் அளவில் 445 புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. மேலும் 1029 தேக்கங்களில் வேலை ஆரம்பிக்கப்பட்டது. இவற்றுடன் 1975இல் மேலும் 1971 நீர்த்தேக்கங்கள் புனர்நிர்மாணம் செய்யப்படவிருந்தன. இவ் அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளினால் அதிகப்படியான அளவு வேலைவாய்ப்பினைச் செய்யக்கூடியதாகவுள்ளது.

(உ) 1972, 1973ஆம் ஆண்டுகளில் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் கையேற்கப்பட்ட சில காணிகளில் ''ஜனவாசா''க்கள் (கூட்டுப் பண்ணைகள்) உருவாக்கப்பட்டன. இலாப நோக்குக்குப் பதிலாகக் கூடிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. இவற்றின் மூல மேலதிகமாகப் பலருக்குத் தொழில் வசதிகள் கிடைக்கும். 1975 இறுதியளவில் சுமார் 11,500 இளைஞர்களும், யுவதிகளும் இங்கு தொழில் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

(ஊ) நாட்டின்பால் பொருட்தட்டுப்பாட்டை நீக்கும் நோக்குத்துடன் 42,000 ஏக்கர் நிலத்தில் பால்பண்ணை நடவடிக்கைகள் அபிவிருத்திசெய்யும் புதிய திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் புதிய திட்டத்தினால் அதிகமானோர் வேலைவாய்ப்பு வசதியினைப் பெற்றிருகின்றனர்.

(எ) மகாவலி, உடவளவை அபிவிருத்தித்திட்டங்களின் கீழ் 25,000 குடும்பங்களுக்கு மேல் நேரடியாக விவசாயத்தின் மூலம், மேலும் சில ஆயிரம் குடும்பங்களுக்கு அவைசார்ந்த ஏனைய தொழில்கள்

மூலமும் வாழ்க்கை வசதிகள் கிட்டுவதுடன் அநேகமான தொழில் வாய்ப்பு வசதிகளும் கிட்டும்.

சென்மதி நிலுவைப் பிரச்சினையும் அதன் தாக்கமும்:

''சென்மதி நிலுவை'' என்பது ஒரு நாட்டின் கட்புலனாகும் ஏற்றுமதியினதும், கட்புலனாகாத ஏற்றுமதியினதும் மொத்தத் தொகைக்கும், கட்புலனாகும் இறக்குமதியினதும், கட்புலனாகாத இறக்குமதியினதும் மொத்தத் தொகைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தையே குறித்து நிற்கின்றது. குறிப்பாக ஒரு நாட்டின் கட்புலனாகும், கட்புலனாகாத ஏற்றுமதிகளின் மொத்தத்தொகை அந்நாட்டின் கட்புலனாகும், கட்புலனாகாத இறக்குமதிகளின் மொத்தத் தொகையிலும் பார்க்கக் கூடுதலாக இருப்பின் அது சாதகமான சென்மதிநிலுவையினையும், கட்புலனாகும், கட்புலனாகாத ஏற்றுமதிகளின் மொத்தத் தொகை கட்புலனாகும், கட்புலனாகாத இறக்குமதிகளின் மொத்தத் தொகையிலும் பார்க்கக் குறைவாகக் காணப்படுமாயின், அது பாதகமான சென்மதி நிலுவையினையும் ஏற்படுத்தி நிற்கும். அதாவது வேறுவிதமாகக் கூறின் ஒரு நாட்டின் மொத்த வெளிநாட்டு வருமானங்களின் அளவிற்கும், அந்நாட்டின் மொத்த வெளிநாட்டுச் செலவினங்களின் அளவிற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் குறித்து நிற்கும். மொத்த வெளிநாட்டு வருமானத்திலும் பார்க்க மொத்த வெளி நாட்டுச் செலுத்துகை குறைவாக இருப்பின் சாதகமான சென்மதி நிலுவை மீதியும், மொத்த வெளிநாட்டு வருமானத்திலும் பார்க்க மொத்த வெளிநாட்டுச் செலுத்துகை அதிகமாக இருப்பின் பாதகமான சென்மதி நிலுவை மீதியும் ஏற்படும். எனவேதான் இவ்வாறான பாதகமான நிலுவை மீதியானது ஒரு நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்கின்றது. இவ்வாறான பாதிப்புக்கள் அந்நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும்போது அந்நாட்டின் அரசு அதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவது அவசியமானதே. இவ்வாறான பாதகமான பாதிப்பு நிலையானது ஒரு நாட்டில் தொடர்ச்சியாக இருப்பின், அந்நாடு ஏனைய நாடுகளுக்கு கடனாளியாகச் செல்லும் நிலைமையேற்படும். இதனால் அந்நாட்டின் விலைமட்டம், வேலைமட்டம், வருமானமட்டம் என்பன பாதிப்படையும். இவ்வாறான பாதகமான சென்மதி நிலுவை மீதியானது இலங்கையின் பொருளாதாரத்தை பல வருட காலமாகப் பாதித்து வந்துள்ளது. குறிப்பாக இலங்கை 1950ஆம் ஆண்டின் பின்னர் 1951, 1952, 1954, 1956 ஆகிய ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய காலம் தொட்டு இப் பாதிப்புக்கு இலக்காகி வருகின்றது. இதனைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றது:

(அ) இறக்குமதிக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது அதிகவரி விதிக்கும் முறை ஏற்படுத்தப்பட்டது.

(ஆ) ஏற்றுமதிசெய்யப்படும் பொருட்களின் அளவும், பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்றுமதியின் அளவும் அதிகரிக்கப்பட்டது. அதாவது ஏற்றுமதியை பன்முகப்படுத்தியமை, இறக்குமதிப் பதிலீட்டு நடவடிக்கைகளை ஏற்படுத்தியமை என்பன.

(இ) நாட்டில் நாணயப் பெறுமதி இறக்கம் செய்தல்.

(ஈ) அந்நியச் செலவாணிக் கட்டுப்பாட்டைச் செய்தல். அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தை ஏற்படுத்தலும், நடைமுறைப்படுத்தலும்.

(உ) பல்நாணய மாற்று வீதத்தை ஏற்படுத்தி வருதல்.

(ஊ) நாட்டில் பணச்சுருக்க நிலையை ஏற்படுத்துதலும், நடைமுறைப்படுத்துதலும்.

இவ்வாறான நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பதனால்தான் ஒரு நாடு பாதகமான சென்மதி நிலுவைப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதன் மூலம் நாட்டில் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற தாக்கத்தைத் தளர்த்தி அபிவிருத்தியடையமுடியும்.

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வரையுளது) சுன்னாகம்

நுகர்ச்சிப்பொருள் விநியோகத்தில் : முப்பத்தினான்கு நுகர்ச்சிப் பொருள் விநியோக நிலையங்களைக் கொண்டு, தன்னிகரற்று விளங்குகின்றது.

புடவை விநியோகத்திற்காக : தரமான புடவைகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதுடன், மூன்று தரமான கைத்தொழில் நிலையங்களையும் தன்னகத்தே நிறுவியுள்ளது.

கட்டிடப்பொருள் விநியோகம் : எல்லாப் பொருட்களையும், இலகுவாகப் பெறுவதற்கான வசதிகளுடன் மலிந்த விற்பனை.

கிராமிய வங்கிகள் : ஏழை விவசாயிகளுக்கு இலகுவான கடன் வழங்குதல், அடைவு பிடித்தல் ஆகியவற்றைச் செய்கின்றது.

ஒப்பந்த வேலைப் பகுதி : குறித்த காலங்களுக்குள் தரமான கட்டிடங்களை அமைத்துக் கொடுத்து வருகின்றது.

கைத்தொழில்களை ஊக்குவிக்க : பாண் தொழிற்சாலை, பீடித் தொழிற்சாலை, காகித உறைத் தயாரிப்புத் தொழிற்சாலை போன்றவற்றைச் சிறப்பாக நடாத்தி வருகின்றது.

இன்னும் அரசாங்க முற்போக்குத் திட்டங்களை முன் வைத்து பலவகையான ஆக்க வேலைகளிலும், முன்னணியில் நின்று செயல்படக் காத்திருக்கின்றது.

அண்ணா கோப்பி.

விஞ்ஞான ரீதியில் சுகாதார முறைப்படி உங்கள் முன்னிலையில் மின்சார ரோஸ்டரில் வறுத்து அரைக்கப்பட்டு,

என்றும் நறுமணத்துடனும், சுவை குன்றாமலும், புதிதாகவும் இருக்கும் வகையில் பத்திரப்படுத்தி உடனுக்குடன்

$\frac{1}{4}$ றாத்தல், $\frac{1}{2}$ றாத்தல், 1 றாத்தல் ஆகிய அளவுப் பைக்கற்றுக்களில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணா தொழிற்சாலை (கிளை)

4, நவீன சந்தை, : : யாழ்ப்பாணம்.

போன் : 7413

தலைமையகம்:

அண்ணா தொழிற்சாலை
இணுவில்.
போன் : 7412

கிளை :

1, மத்திய சந்தை,
சுன்னாகம்.

" அம்மா "

என். சரவணபவன்
வர்த்தகவியல் (சிறப்பு)
மூன்றும் வருடம்

1

அன்று நண்பகல் கோட்டைப் புகையிரத நிலையம் மக்கள் கூட்டத்தால் நிறைந்து கொண்டிருந்தது. சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களின் விடுமுறையைப் பயன்படுத்தி தங்கள் ஊர்களுக்குச் சென்று திரும்புவதற்காகப் புறப்பட்டு வந்தவர்கள் கூட்டம் மிக அதிகமாயிருந்தது. அவர்கள் எல்லோரும் கோட்டையில் இருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் யாழ்தேவியை எதிர்பார்த்த வண்ணமாக நிற்கின்றனர். சிலர் பத்திரிகைகளைப் புரட்டிப் புரட்டிப் படித்தப , அதில் வந்த செய்திகளை விமர்சிப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர். வேறு சிலர் குடும்ப, அரசியல் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுகின்றனர். எதிரும் புதிருமான கருத்துக்கள் அவர்கள் மத்தியில் பரிமாறப்படுகின்றன. இன்னும் சிலர் தங்கள் பழைய நண்பர்களைக் கண்ட குதூகலத்தில் பரஸ்பரம் தங்கள் பழைய நட்பைப் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றனர். மற்றும் சிலர் காதலராகிக் காதல் மொழி பேசுகின்றனர். அவர்களிடையே சிலரிடம் பிரிவின் ஏக்கம் பெரிதாகக் காணப்படுகின்றது. வாழ்க்கைப் பயணத்துக்குத் துணை தேடாதவர்களும், யாழ்தேவிப் பயணத்துக்கு ஏற்ற துணையைத் தேடிப் பெற்று அவர்களுடன் கதை பேசுகின்றனர். மற்றுமுள பேர்கள் கணவன், மனைவி, பிள்ளைகளாக குடும்ப சமோதமாய் காட்சி தருகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்குள் ஏதேதோ பற்றி உரையாடிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு புகையிரத நிலைய மேடை பேச்சொலிகளால் நிறைந்திருந்தது. ஆனால் நான் மட்டும் துணை யாருமின்றித் துயர் படிந்த உள்ளத்

துடன் தனித்து நின்று கொண்டிருக்கின்றேன்.

சற்று நேரம் கடந்து.....

புகையிரத மேடைக் கடிகாரம் நேரம் 11·30 எனக் காட்டியது. யாழ்தேவி வந்து கொண்டிருப்பது கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிந்தது. யாழ்தேவி நிற்பதற்கு முன் அதன் நுழைவாயில்களில் தொங்கிப் பாய்ந்து ஏறுபவர்களும், அது நின்றதும் முண்டியடித்துக்கொண்டு ஏறுபவர்களும், யன்னல் வழியாகத் தமது பொருட்களைத் திணித்து விட்டு பின்னர் நுழைவாயிலால் ஏறுபவர்களுமாக "கோணர்சீற்" எனும் இருக்கை தேடும் படலம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. யாழ்தேவி நிறுத்தப்பட்டபோது நான் நின்றுகொண்டிருந்த இடத்தில் ஒரு நுழைவாயில் இருந்தமையால் அதிக சிரமமின்றி ஏறி "அப்பனே" என்று ஓர் ஆசனத்தில் அமர முடிந்தது. சிறிது நேரத்தில்..... யாழ்தேவி புறப்படுவதற்கான சத்தத்துடன் இரைச்சலிட்டு முன்னேக்கிக் கிளம்பியது. எனது நினைவுகளோ என் அம்மாவுடன் நான் வாழ்ந்த காலத்துக்கு பின் நோக்கிக் கிளம்பியது.

நான் வாழ்க்கையில் தனித்தவனாகி நாளையுடன் ஒரு மாதம் பூர்த்தியாகின்றது. பத்து மாதம் என்னைச் சுமந்து பெற்றெடுத்து — பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிப் பேணி வளர்த்து — என்னை இன்றைய இந்நிலைக்கு ஆளாக்கிய என் அன்னையை இழந்து ஒரு மாதமாகிவிட்டது. ஆனால் நேற்றுப்போன்றல்லவா தெரிகிறது! அம்மாவின் இறுதிக்கிரிகையை நிறைவேற்றிவிட்டுக் கொழும்புக்கு வந்த நான், இப்போது அம்மாவின் அந்தியேட்டிக்காக அம்மாவின் ஊருக்கு — அம்மாவின் வீட்டுக்குக் காலடி எடுத்துவைக்கப்போகிறேன். அம்மாவின் வீட்டில் இப்போதிருக்கும் மாமாவும், மாமியும். பிள்ளைகளும் என்னைக் கண்டதும் வரவேற்பார்கள்தான். ஆனால் முன்பெல்லாம் கொழும்பில் இருந்து திரும்பும்போது என்னைக் கண்டு அம்மா அடையும் மகிழ்ச்சி; அம்மாவைக் கண்டு என்னுள்ளத்தில் எழும் மகிழ்வலைகள்; அப்பப்பா..... அந்த மகிழ்வுக்கு அளவேது? அதை நான் இப்போது நினைத்துப் பார்க்கையில் என்னுள்ளம் ஏக்க மிகுதியால் வருந்துகிறதே!

அம்மா தெரிந்தும் தெரியாமலும் நான் உனக்கு எத்தனை பிழைகள் செய்திருப்பேன். கோபவெறி தலைக்கேறியதால் சிலசமயம் என்னை நான் மறந்து, நீ என் தாயென்பதையும் மறந்து உன்னை ஏசியும், பேசியும் நான்புரிந்த தவறுகள் கொஞ்சமா? அவற்றையெல்லாம் நீ எவ்வளவு பெருந்தன்மையுடன் பொறுத்து மன்னிப்பளித்தாய்!

இறுதிக்காலத்தில் உன்னுடலில் நோய் குடிகொண்டுவிட்டபோதும் கூட எனக்காக உன்னுடலை வருத்தினாய். அறுவகைச் சுவைகளையும் ஆக்கி அளித்தாய். "தாயோடு அறுசுவை போம்" என்ற தத்துவத்தின் உண்மை ஒளிர்வினை இப்போது காண்கின்றேன். உன் பொருளையெல்லாம் பொருளாக மதியாது என்னையே நீ பொருளாக மதித்து என்னை வாழவைக்க உன் பொருளையெல்லாம் கொடுத்தாய். உன்உயிர் உலகை விட்டுப் போகின்ற இறுதி நிமிடத்திலும் உன் நினைவு என் நினைவாகவே இருந்ததை எப்படி மறப்பேன்? இவ்வாறு உடல் பொருள் ஆவியையும், எனக்காகவே அர்ப்பணித்த உனக்கு நான் என்ன கைமாறு செய்வேனம்மா? அம்மா நீதெய்வமம்மா... என் கண்கண்ட தெய்வமம்மா... என் உள்நின்றொளிரும் ஒளிவிளக்கம்மா நீ!

கொல்லனில் உலைக்களத்தில் ஊத ஊத மேன்மேலும் ஒளிரும் பொன்போன்று நான் எனது நினைவலைகளில் மீண்டும் மீண்டும் உன்னை இருத்திப் பார்க்கின்ற ஒவ்வோர் தடைவையும் உன் மகிமையின் ஒளிர்வினை என்னுள் காண்கின்றேன். கள்ளமற்ற உனது வெள்ளை உள்ளத்தையும், உன் உள்ளம் வாழ்வு பூராவுமே எனக்காக ஏங்கித் தவித்ததையும் நீ உயிருடன் இருக்கும்போது நினைத்துப் பார்க்காத நான்

இப்போது காலம்கடந்து உன்னை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றேன். 'அம்மா ... கவனமாய்ப் படிராசா தகப்பன் இல்லாத பிள்ளையல்லே நீ எனக்கு ஒரே பிள்ளை நீதான், கவனமாய்ப் படித்து முன்னுக்குவா' இப்படி எத்தனை அறிவுரைகளை வழங்கினாய். அவற்றை அப்போது நான் அசட்டை செய்தேன். இப்போது உன்னை இழந்து ஓர் மாதமாகி விட்ட இந்நேரத்தில் உன் மதிப்பு மிக்க அறிவுரைகளின் மகிமையை எண்ணிப் பார்க்கிறேன். உள்ளத்தால் உணர்ந்து கொள்கிறேன்.

அம்மா.. ...நீ உயிருடன் இருந்தபோது ஊற்றெடுத்துப் பிரவகித்த தாயன்புக் கடலில் நான் சுகமாகவே நீந்தி வந்தேன். பாற்கடல் மீன்கள் அங்குள்ள பாலைப் பருகாது நீந்தியது போன்று உன் தாயன்பாம் கடலில் நீந்திய நானும் தாயன்பை அப்போது உணர்ந்திலன். நீ என்னை விட்டு இவ்வுலகினின்றும் பிரிந்தபின்தான் எனது தாயன்புக் கடல் வற்றியதை உணர்ந்தேன். இப்போது நான் நீந்தவில்லை; நடக்கின்றேன். வற்றிவிட்ட அந்தக் கடலின் அடியில் கிடந்த கல்லும், முள்ளும் நிறைந்த அப்பாதையில் நடக்கின்றேன். வாழ்வின் கற்களிலும், முட்களிலும் நான் வைக்கும் ஒவ்வோர் அடியின்போதும் உன்னை நான் நினைக்கின்றேன்; வேதனைகொள்கின்றேன்; அந்த வேதனையால் வெந்துகொண்டிருக்கின்றேன்.

ஆறு வயதில் நான் அப்பாவை இழந்ததினால் நீ எனக்கு அம்மாவாக இருந்ததோடு அப்பாவாகவும் இருந்தாய். நித்த குடிவெறியரான அப்பாபோனதும் நீ என்னை வறுமையிலும் செம்மையாய் வளர்த்தாய். எனை நீ கண்ணை இமை காப்பதுபோல் காத்து வளர்த்ததால்போலும் உன் நினைவு என் கண்முன் நிலைத்துநிற்கிறது.

நான் உத்தியோகம் தேடி அலைந்து இறுதியில் கவலையுடன் வீடு திரும்பியதும் 'வேல் உண்டு வினை இல்லை மயிலுண்டு பயமில்லை' என்ற கந்தநாமத்தைக் கூறி என்னை நீ ஆறுதல்படுத்துவாய். நான் உத்தியோகம் ஆகிவிடவேண்டுமென்று நீ ஆறுபடை வீடுடைய முருகனை நாள்தோறும் பூச்சூடி கண்ணீர்சிந்த வணங்கினாயே. உன் வேண்டுதல் வீண்போகவில்லை. நான்கு வருடங்களுக்கு முன்பு நான் உத்தியோகம் கிடைத்துவிட்ட செய்தியை உன்னிடம் கூறியபோது நீ அடைந்த மகிழ்ச்சி தான் எவ்வளவு?

முன்பெல்லாம் கதைகள், கட்டுரைகள், நாவல்கள் என்று இலக்கியத்துறையில் தீவிரமாக ஈடுபட்டு வந்துள்ளேன். ஆனால் நீ இறந்தபின் உன் நினைவிலேயே என் காலம் கடந்துவிடுகின்றது. கதைகளுக்கான கருக்களும், கற்பனைகளும் உதித்த என் சிந்தையில் இப்போது உனது சிந்தனையே திரும்பத்திரும்ப ஏற்படுகின்றது. ஏதாவது எழுதுவோம் என்று பேப்பரையும் பேனாவையும் எடுத்தால் உன் நினைவில் உன்னைப்பற்றியே எழுதத் தோன்றுகிறது"

2

யாழ்தேவி முன்னேக்கிச் சென்றுகொண்டிருந்த அதன்பாதையில் பாலம் ஒன்றினைக் கடந்துகொண்டிருந்தது. பாலத்தைக் கடக்கும்போது ஏற்பட்ட பெரும் இரைச்சல் பின்நோக்கிச் சென்ற எனது அம்மாவின் நினைவலைகளிலிருந்து என்னை நிறுத்தியது. நான் சுயநினைவு பெற்றேன். என் கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டேன். தலையைச் சற்றுமுன்னேக்கி நிமிர்த்திப் பார்க்கிறேன்.. எனக்குள் ஒருவியப்பு; திகைப்பு; பதைப்பும் கூட.

என்ன ஆச்சரியம்! எனது அம்மாவின் இளமை குன்றா எழில் வதனம். நான் அவளை மீண்டும் மீண்டும் பார்க்கிறேன். அவளும் என்னையே நோக்கி நிற்கிறாள். அவள் பார்வையில் அனுதாபத்துடன் கூடிய புன்சிரிப்பொன்று தோன்றி மறைகின்றது. அது எனது அம்மாவின் புன்சிரிப்போ? நான் காண்பது கனவோ,

நனவோ என்ற ஐயம் மனதில் எழுகிறது. கனவல்ல நனவே என மனம் தெளிகிறது.

"அம்மா...! அம்மா ! அம்மா...!" வார்த்தைகள் உள்ளக் கருவறையில் எழுந்து வெளிக்கிளம்பாது என் உள்ளத்தின் உள்ளேயே தொடர்ச்சியாக ஓய்வின்றி ஒலிக்கிறது. சிந்தனைச் சுழற்சி இப்போது புதுவேகம் கொள்கிறது.

அவளின் முகம் அம்மாவின் முகம் போன்றல்லவா இருக்கிறது? இறந்த எனது அம்மாதான் நான் இங்கு வருந்துவது கண்டு எழுந்தோடி வந்தாளோ? அவள் தான் பிடிசாம்பலாகி விட்டாளே! அப்படியானல் இவள்...? "அம்மா...! அம்மா...! அம்மா...!" என் இதயம் அவளை அழைக்கின்றதா?

அம்மாவின் அழகுமுகம் பொழியும் இவளைக் கண்டதும் என் உணர்வுகள் என்னுள் உந்துதல் பெற அவள் காலடியில் விழுந்து வணங்கிவிடத் துடித்தேன்.

3

கந்தோரில் எனது சக நண்பர்கள் அங்கு வேலைபார்க்கும் பெண்களுடன் எவ்வளவு கேலியும், கிண்டலும் புரிவார்கள்! அவசியமில்லாமல் அடிக்கடி அவர்கள் தங்கள் வீரப் பிரதாபங்களைப் பெண்கள் மத்தியில் கூறித் தம்மைத்தாமே புகழ்ந்து கொள்வார்கள். எனக்கோ இவை பிடித்தமற்ற செயல்கள். கந்தோரில் வேலை விடயமாக சக பெண் ஊழியர்களுடன் கதைக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் தினமும் எனக்கு ஏற்படுவதுண்டு. அப்போதெல்லாம் ஓரிரு வாக்கியங்களில் அளவாகப் பேசி எனது வேலையை முடித்துக் கொள்வேன். வேலை விடயமாகப் பெண்கள் யாராவது என்னுடன் வந்து கதைக்கும் போதும் நான் இவ்வாறுதான் நடந்து கொள்வது இயல்பு[illegible]து இந்த இயல்புக்கு முரணாக எந்தப் பெண்ணும் நடந்தது கிடையாது. ஒவ்வொரு பெண்ணையும் பெயரளவில் தெரிந்துவைத்திருக்கின்றேனே ஒழிய, அதற்கு மேலாக அவர்களைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தெரிந்துகொள்ள நான் முயற்சித்ததுமில்லை. ஆனல் அம்மாவின் அழகு முகம் பொருந்திய இவளைக் கண்டதும் அவளைப்பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளும் அவா என்னுள் எழுந்தது. அவ் வுந்துதல் என்னைப் பேசவைத்தது.

"நீங்கள் எங்கே இருக்கிறது?" அம்மாவுக்குமுன் நான் பேசுவதுபோன்று என் வார்த்தைகள் வெளிவந்தன.

"கொக்குவில்". அவள் ஒரே வார்த்தையில் பதில் கூறினள். அம்மாவின் குரலில் இருக்கும் அதே இனிமை அவள் குரலிலும் இருப்பதாக எனக்குத் தோன்றியது. அவளைப்பற்றிய மேலும் பல விபரங்களைக் கேட்டு அறிந்துகொண்டேன்.

... நீண்ட அமைதி. பின் —

அவள் கேட்டாள் ."உங்கள் உள்ளத்தில் பெரியதொரு சோகம் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறேன்..... கண்ணீர் விட்டு இப்படிக் கவலை கொள்ள அப்படி என்ன துன்பம் உங்களுக்கு நேர்ந்துவிட்டது?" நான் அதைத் தெரிந்துகொள்ளலாமா?

என்னுள்ளத்தில் பொங்கி நின்ற அந்தச் சோகக் கதையை ஒருவாறு அவளுக்குக் கூறி முடித்தேன். இறுதியாக எழுந்து கண்ணீர்விட்ட வண்ணமாகக் கூறினேன்: "உமது அழகு முகம் என் அம்மாவின் முகத்தைப் போன்றுள்ளது. உருவத்தாலும், உள்ளத்தாலும் நீர் அம்மாவைப் போன்றே இருக்கிறீர். எனது அம்மாவின் குரலின் இனிமையை உமது குரல் நாதத்தில் காண்கிறேன்."

நான் கூறி முடித்ததும் அவளும் எழுந்து கொண்டாள். ஒரு கையால் என்னை அணைத்தாள். மறுகையால் எனது கன்னத்தில் வழிந்திருந்த கண்ணீரைத் தனது கைக்குட்டையால் துடைத்து விட்டாள். அப்போது நான் சிறுவனக இருந்தபோது அழுகின்ற சமயங்களில் அம்மா தன் சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்து விடுகின்றபோது எனக்கு ஏற்படும் சுகம் ஏற்பட்டது போன்று இருந்தது.

அவளும் கூச்சம் எதுவுமின்றி என்னைப் பற்றிய எல்லா விபரங்களையும் கேட்டறிந்து கொண்டாள். ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டோம்; புரிந்து கொண்டோம். அப்போது நான் கேட்டேன்—

"உங்கள் பொழுதுபோக்கு என்ன?"

"நாவல்கள் என்றால் எனக்கு நிறையப் பிடிக்கும். அதனால் நாவல் படித்தலையே எனது பொழுதுபோக்கு ஆக்கிக் கொண்டேன்."

"எந்த எழுத்தாளரின் நாவல்கள் உங்களுக்குப் பிடிக்கும்?"

"கலைக்கண்ணன்" என்னும் புனை பெயரில் எழுதி வருகிறாரே ஒருவர், அவருடைய எழுத்துக்களே எனக்குப் பிடித்தமானது. அவரது நாவல்கள் சமுதாயத்தை யதார்த்த பூர்வமாகச் சித்தரிக்கும். அவரது 'சிறைவாசம்' என்ற நாவலைப் படித்த பின்பு அவருக்கு ஒரு பாராட்டுக் கடிதம் எழுதிவிட முயன்றேன். ஆனால் அவரது சரியான முகவரி கிடைக்கவில்லை. 'தமிழிதழ்' பத்திரிகையில் அவரது 'பூமகள்' என்ற நாவல் வாரந்தோறும் வெளிவந்தது. ஆனால் சென்ற மாதம் அது இடையில் நின்றுவிட்டது, 'கலைக்கண்ணனின்' தாயார் இறந்து விட்டதனால் அவர் தொடர்ந்து எழுத முடியாத நிலையில் தாயை இழந்து வருந்துகிறார். வெகு விரைவில் தொடர்ந்து எழுதுவார் எனப் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார்கள். அப்போதும் ஒரு ஆறுதல் கடிதம் அவருக்கு எழுத முயற்சித்தேன். ஆனால் அவரது முகவரியை என்னால் பெறமுடியாமல் போனது. இப்போதும் அவரின் பழைய நாவல்களைத் திரும்பத் திரும்பப் படித்து வருகிறேன். எத்தனை தடவை படிப்பினும் அவரின் நாவல்கள் சுவைகுன்றாதவை. காலத்தால் சாகாதவை" என்று கூறியவள் தனது கையிலிருந்த 'இதயவன்பு' என்னும் 'கலைக்கண்ணனின்' நாவலை எனக்குக் காட்டினாள்.

மீண்டும் "கலைக்கண்ணனின் முகவரி உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

நான் இதுவரை மறைத்து வந்த உண்மையை இனியும் மறைக்க மனமொப்பவில்லை. "நீங்கள் அவனின் முகவரிக்காக இனிக் கவலைகொள்ள வேண்டாம். அவனுக்கு நீங்கள் தெரிவிக்கும் பாராட்டை எனக்குத் தெரிவியுங்கள். அப்பாராட்டு அவனுக்கே போய்ச் சேரும்."

"என்ன.....நீங்கள் கூறுவதொன்றும் எனக்குப் புரியவில்லையே ...."

என் முகத்தில் ஒரு புன்சிரிப்பு இழையோடக் கூறினேன்—"அவன்தான் உங்கள் முன் நிற்கின்றான்"

"அப்படியானால்... நீங்களா அந்தக் கலைக் கண்ணன்?"

"ஆம். நானேதான்."

அவள் ஆச்சரியத்துடன் என்னையே நோக்கி நின்றாள். அவளின் இதயம் ஆயிரம் கதை பேசியது. ஆனால் வாய் மௌனம் சாதித்தது. மௌனத்தின் பின்னர் கேட்டாள்—

"பூமகள் என்ற நாவலை இனி எப்போது தொடர்ந்து எழுதுவீர்கள்?"

"எங்கே எழுதப்போகிறேன். அம்மாவை இழந்தது முதல் அவளையே அல்லும் பகலும் நினைந்து என் வாழ்வு உருகிறதே ...."

பதில் கூறிவிட்டு யாழ்தேவியின் விரைவு சிறிது சிறிதாகக் குறையவே யன்னலூடாக எனது பார்வையை வெளியில் செலுத்தினேன். யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் வந்துவிட்டதை அப்போதுதான் உணர்ந்தேன். எனது சூட்கேசை எடுத்தவண்ணம் அவசரமாக அவளுக்கு விடை கூறினேன். ஆனால் அவள் எனக்கு விடை தரவில்லை. மாறாக, "போய் வருகிறேன்" என நான் கூறியபோது அவள் "போகிறீர்களா?" என்று கேட்டுவிட்டு விம்மி விம்மி அழுதாள். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பெரும் சிரமப்பட்டு ஒருவாறு அவளைத் தேற்றிவிட்டு இறங்கினேன், புகையிரத நிலையத்துக்கு

வெளியே வந்து புகையிரதப் பாதையின் அருகில் செல்லும் குறுகியவீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தேன். யாழ்தேவி புறப்பட்டு என்னைக் கடந்து செல்ல முற்பட்டது.

யாழ்தேவியின் உள்ளே தெரியும் மங்கலான வெளிச்சத்தில் அம்மாவின் முக வழகுடைய அவளின் முகத்தை இறுதித் தடவையாகத் தரிசிக்க நினைத்து என்னைக் கடந்துசென்ற யாழ்தேவியின் ஒவ்வொரு பெட்டியையும் உற்று நோக்கிக்கொண்டிருந்தேன்... கடைசிப் பெட்டியும் அப்பால் கடந்தது. அவளின் "அம்மா முகம்" காணாது ஏமாற்றமடைந்து என் கால்களைச் சோர்வுடன் முன்னோக்கி வைத்தேன்.

"நில்லுங்கள், நானும் வருகிறேன்." என் பின்னால் அம்மாவின் இனிய குரல் இப்படி அழைக்கவே என் முகத்தைப் பின் நோக்கித் திருப்பினேன். அதிர்ச்சியில் தாக்குண்டேன். சற்றுமுன் யாழ்தேவியில் நான் விடைகொடுத்துவிட்டு வந்த "அம்மாமுகம்" பொருந்திய அவள் என்னருகில் ஓடோடிவந்தாள். வந்ததும் என்னை அணைத்துக்கொண்டாள்.

"நான் உங்கள் எழுத்தில் என்னை எப்பவோ பறிகொடுத்தேன். இங்கு உங்களிலேயே என்னைப் பறிகொடுத்துவிட்டேன். தயவுசெய்து என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் அம்மாவே என்னை உங்களிடம் அனுப்பியதாகக் கருதி என்னை ஏற்றுக்கொள்ளமாட்டீர்களா?" அவள் என் நெஞ்சில் முகம் புதைத்து உருக்கமாகக் கூறினாள்.

அவளை இறுக்கமாகப் பற்றிக்கொண்டேன். "நிச்சயமாக" இந்த ஒரு வார்த்தையத் தவிர வேறு எதுவுமே என்னால் கூற முடியவில்லை. தண்கள் பனித்தன. என் கண்ணீர்த்துளிகள் அவளுடம்பில் பட்டுச் சங்கமமாகியது.

ஆழமான நடுக்கடலில் சுங்கான் உடைந்து தவித்த படகுக்குப் புதியதொரு சுங்கான் கிடைத்தது போன்று, அம்மாவை இழந்து தவித்துக்கொண்டிருந்த என் மனதுக்கு இப்போது புதியதொரு சுகம்—ஒரு நிம்மதி — ஒரு நிறைவு உண்டானது. ஓ... இனியென் வாழ்க்கைப் படகு தடையேதுமின்றிச் செல்வது உறுதியாகிவிட்டதல்லவா?

என் கையிலிருந்த சூட்கேஸ் அவள் கைக்கு அசைகிறது. இதுவரை பாரம் மிக்க சூட்கேசைப்பற்றி வந்ததால் வலி உண்டான என் கை இப்போது "அம்மா"வின் அழகு மென் கரங்களைப் பற்றிக் கொள்கிறது. எவ்வளவு சுகம்!

"அம்மா வா" என்று அவளை உரிமையுடன் அழைத்தேன்!

ஒரு பக்கம் பௌத்த விகாரையும், மறு பக்கம் ஆரிய குளமும் அமைந்த அந்த நெடுவீதி வழியாக இருவரும் கை கோத்த வண்ணம் சென்றுகொண்டிருந்தோம்.

"நீங்கள் என்னை "அம்மா?, என்று அழைக்கின்றீர்களே! அப்படியானால் உங்கள் அம்மா உயிருடன் இருந்தபோது நீங்கள் எவ்வாறு உயர்ந்த — உயிர்த் துடிப்புள்ள இலக்கியங்கள் ஆக்கினீர்களோ, அப்படியே இனியும் உங்கள் இலக்கியங்கள் உயர்ந்து பிரகாசிக்க வேண்டும்" என "அம்மா" கூறிவிட்டுச் சிரித்தாள்.

"சந்தேகமில்லை. என் எழுத்துக்களை நீதான் அருகிருந்து அனுபவிக்கப் போகின்றாயே!"

ஒளிச்சுடர் விளக்காக இருந்து என்னை இவ்வுலகில் பிரகாசிக்கவைத்து, நான் பிரகாசிக்க வேண்டுமென்பதற்காகவே தன் நெய் உடம்பை உருக்கி, என்னை விளங்கவைத்த என் அம்மா இப்போது எனது உள்ளத்திலேயே புதியதொரு ஒளியை ஏற்றிவிட்டாள். அந்த ஒளி உள்ளத்தில் எங்கோ பிரகாசித்தது.

(யாவும் கற்பனை)

அன்பளிப்பு!

ஸ்ரார்

யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு!

சகலவிதமான
மருந்துச் சாமான்களையும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
போன் : 7135

With the Best Compliments
from

JAFFNA TURNERS
No. 2, Stanley Road,
JAFFNA.

மலரும் வித்தியோதயத்துக்கு
எமது வாழ்த்துக்கள்!

மோட்டார் உதிரிப்பாக
விற்பனையாளர்கள்

யாழ்மோட்டோர் ஸ்ரோர்ஸ்
YARL MOTOR STORES
108/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன் : 7752

மனமார்ந்த அன்பளிப்பு!!

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்
කියවීමෙන් මිනිසෙකු සම්පූර්ණ වේ
READING MAKES A MAN PERFECT

By Courtesy: MILK WHITE SOAP WORKS, Jaffna (SRI LANKA)

★ மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கொடுக்கும் ஆதரவாகும். ஆதரவு பெருகுதல் அறப்பணிக்கே உதவும்.

மில்க்வைற் சவற்காரத் தொழிலகம்

த. பெ. எண்: 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கிளை: 79, மெசென்ஜர் வீதி,
கொழும்பு-12. தொலைபேசி: 36063

அன்பளிப்பு!

Vijaya Hardware Stores

விஜயா ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ்

146, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வித்தியோதயம் வாழ்க!

V. M. Paramanathan & Sons

47, K. K. S. ROAD,
JAFFNA.

கம்பனிகள் சட்டம்

செ. தங்கராஜா
B. Sc. (Madras), L. L. B. (Cey.)
Attorney - at - Law
பகுதிநேர விரிவுரையாளர்
வித்தியோதய வளாகம்

[தமிழில் சட்டநூல்கள் இல்லாமையினால் கம்பனிச் சட்டத்தின் முக்கிய ஏற்பாடுகள் (கம்பனி குலைத்தல் பற்றிய ஏற்பாடுகள் தவிர) மாணவர்களின் நன்மைக்காக இக் கட்டுரையில் சுருக்கித் தரப்பட்டுள்ளன. கம்பனிச் சட்டத்தைப் படிக்க வேண்டியுள்ள மாணவர்களின் தேவைக்கு இது உதவும் என்று நம்புகிறோம்.]

1. கம்பனிகளின் தன்மையும் அவற்றை உருவாக்கலும்:

1.1. தன்மை

சட்டத்தில் கம்பனி என்பது ஒரு சட்ட நபராகும். அதாவது, சட்டக் கடப்பாடுகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளவும் சட்ட வுரிமைகளைப் பிரயோகிக்கவும் இயலுமான ஒரு நபராகும். அது யாரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளதோ அவர்களிலும் பார்க்க வேறுபட்ட ஒரு தனித்துவமான சட்ட நபராகும். எனவே கம்பனியானது அதன் பணிப்பாளர்களிடமிருந்தும், பங்குதாரர்களிடமிருந்தும் வேறுபட்ட ஒரு தனி நபராகும். (சலோமன் எதிர் சலோமன் அன்ட் கம்பனி லிமிடெட் 1897 A. C. 22)

ஒரு செயற்கை நபரான கம்பனிக்குச் சட்ட நபரென்ற தனித்துவம் கிடைப்பது அது நியதிச் சட்டத்தின்கீழ்க் கூட்டிணைக்கப்படும்போதுதான் ஆகும். வியாபாரமொன்று கம்பனியால் நடாத்தப்படும் போது அவ்வியாபாரத்திற்கு வர்த்தக முறையில் பல அனுகூலங்கள் கிடைக்கப்படுகின்றன; அவையாவன:—

(அ) கம்பனிப் பங்குதாரர்கள் எவர் இறப்பினும் அல்லது அவர்களுள் எவரும்

வங்குரோத்காக அல்லது சித்தசுவாதீன மற்றவராக வரினும், அவை கம்பனியைப் பாதிக்கா. கம்பனி தொடர்ந்து இருந்து வரும்.

(ஆ) கம்பனியினால் பயன்படுத்தப் படும் மூலதனமானது நிரந்தரமான கூட்டுப் பங்குத் தொகுதியாகும். இது பங்கு தாரர்களால் உதவப்பட்டிருப்பினும் இதனை வாபஸ்பெறமுடியதென்பதால் இது நிரந்தரமானதாகும்.

(இ) கம்பனியின் மூலதனமானது பங்குதாரர்களால் வாபஸ் பெறப்படமுடியாத தொன்றாயினும், அது மாற்றப்படக் கூடியதாகும். அதாவது பங்குதாரர் ஒருவர் கம்பனி மூலதனத்தில் உள்ள தனது பங்கினை வேறொருவருக்கு விற்கலாம் அல்லது மாற்றலாம்.

(ஈ) கம்பனியினால் கூறப்படும் கடன்களுக்கும் மற்றும் கடப்பாடுகளுக்குமான பங்குதாரரின் பொறுப்பானது பங்குதாரர் தனது பங்கு தொடர்பில் இன்னமும் செலுத்தப்படாத தொகையினளவிற்கு அல்லது அவர் உத்தரவாதம்செய்த தொகையினளவிற்கு வரையறுக்கப்படலாம்.

(உ) உறுப்பினர்கள், கம்பனி உறுப்பினர்கள் என்ற முறையில் கம்பனியை எச் செய்கையினாலும் கட்டுப்படுத்தமுடியாது. கம்பனி தகுதிவாய்ந்த, நியமிக்கப்பட்ட தனது முகவர்கள் மூலமாகவேதான் செயலாற்ற முடியும்.

(ஊ) கம்பனியினால் கூறப்படக்கூடிய சட்ட முறையான கடப்பாடுகளின் அளவும், தன்மையும் கம்பனி அமைப்பினால், முக்கியமாக அகவுரையில் உள்ள நோக்கம்பற்றிய வாசகத்தினால் ஆளப்படும்.

1.2. கம்பனிச் சட்டங்கள்

கம்பனிகள் பற்றிய சட்டம் மிகுதியாக நியதிச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு சட்டமாகும். பங்குடைமையின் பிரதிகூலங்களைக் கண்டறிந்த ஆங்கிலச் சட்டவறிஞர்கள், அவ்வில்லங்கங்களை அகற்றும் நோக்குடன் 'கம்பனி' என்ற கோட்பாட்டைக் கண்டுபிடித்த நாள்முதல் கம்பனிகள் ஆங்கில நாட்டில் பிரபல்யமடைந்து வந்தன. ஆங்கில நாட்டுக் கம்பனிகள் பற்றிய சட்டம் முதன்முதலில் 1866ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்னர் 1861ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கச் சட்டம் கூட்டுக் கம்பனிகள் பற்றிக் கூறியிருப்பினும், கம்பனிகள் பற்றிய ஆங்கிலச் சட்டம் முழுமையாகக் கொண்டுவரப்பட்டது 1866ஆம் ஆண்டில்தான். இதனை அடுத்து 1888, 1893, 1897 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு வகைக் கம்பனிகள் பற்றிய சட்டங்கள் ஆக்கப்பட்டிருந்திருப்பினும், 1938ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்தான், கம்பனிகள் பற்றி ஏற்கனவே இருந்துவந்த எல்லாச் சட்டங்களையும் நீக்கி அவற்றின் ஏற்பாடுகளை ஒருமுகப்படுத்தி முழுமையானவொரு கம்பனிச் சட்டத்தை இலங்கைக்கு அளித்தது. 1938ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கம்பனிகள் கட்டளைச்சட்டம் காலத்துக்குக் காலம் சிறிதளவேதான் திருத்தப்பட்டிருக்கிறதென்பதையும், அதுவே இன்றும் தொடர்ந்து இருந்துவரும் வலுவுள்ள சட்டமென்பதையும் நாம் மனத்திலிருத்திக் கொள்ளவேண்டும். 1938ஆம் ஆண்டின் 51ஆம் இலக்கக் கட்டளைச் சட்டமானது முழுக்கமுழுக்க 1929ஆம் ஆண்டின் ஆங்கிலக் கம்பனிகள் சட்டத்தின் அடிப்படையில் அமைந்த தொன்றாகும்.

கம்பனிச் சட்டமானது தற்கால நவீன சர்வதேசத் தொடர்புடைய சூழ்நிலைகளுக்கேற்ப அமைந்திருக்கவேண்டுமென்று கருதப்பட்டு கம்பனிச் சட்டமறுமலர்ச்சிக்காக இலங்கையில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு சிறந்த நல்ல ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் கூட தீர்க்கமான முடிவு எதுவும் செயற்படுத்தப்படவில்லை என்பது மிகவும் துரதிஷ்டவசமானதாகும்.

1.3. கம்பனி வகைகள்

பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் பின் வருவனவாகப் பாகுபடுத்தப் படலாம்:—

(அ) வரையறுக்கப்பட்ட கம்பனிகள்; இக்கம்பனிகளின் கடனுக்கான உறுப்பினர்களின் பொறுப்பானது வரையறுக்கப்பட்டதாகும். எனவே கம்பனியானது தனது கடப்பாடுகளை இறுப்பதற்குப் போதிய சொத்துக்களை வைத்திருக்காவிடின் அதன் கடன்களைச் செலுத்துமாறு கடன் கொடுத்தவர்கள் கம்பனியின் உறுப்பினர்களைக் கோர முடியாது. கம்பனியின் கடனுக்கான உறுப்பினர்களின் பொறுப்பு பின்வரும் இரண்டிலொரு வகையால் எழலாம்:

(i) பங்கினால் வரையறுக்கப்பட்ட கம்பனியில், தனது பங்கில் செலுத்தப்படாத தொகைக்கு மேற்படாத எதற்கும் மேலதிகமாக ஒரு பங்குதாரர் பொறுப்பாக மாட்டார்;

(ii) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனியில், அவர் உத்தரவாதம் செய்யப்பட்ட தொகைக்கு மேற்படாத எதற்கும் மேலதிகமாக ஒருவர் பொறுப்பாக மாட்டார். உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று பங்கு மூலதனத்தையும் கொண்டிருக்கலாம்.

(ஆ) பகிரங்கக் கம்பனிகளும் தனியார் கம்பனிகளும்: பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் ஒன்றில் பகிரங்கக் கம்பனிகளாக அல்லது தனியார் கம்பனிகளாக விளங்கி வருகின்றன.

(i) ஒரு பகிரங்கக் கம்பனி ஆகக் குறைந்தது 7 உறுப்பினர்களைக்கொண்டதாகும். அதன் பங்குகள் இலகுவில் மாற்றக் கூடியவை. அது தனது பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்கலாம்.

(ii) தனியார் கம்பனியொன்று 2க்குக் குறையாத உறுப்பினர்களைக்கொண்டதாகும். அதன் பங்குகள் இலகுவாக மாற்றப் படக்கூடியனவல்ல. இதில் 50க்குமேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கக்கூடாது.

தனியார் கம்பனிகள் பகிரங்கக் கம்பனிகளிலும் பார்க்க பல அனுகூலங்களை உடையன. எனவேதான் பொதுவாக முதலில் தனியார் கம்பனிகள் உருவாக்கப்கப்பட்டுப் பின்னர், அவை பகிரங்கக் கம்பனிகள் ஆக்கப்படுகின்றன.

1.4. பதிவு செய்யப்படும் கம்பனிகள் உருவாக்கப்படுதல்

1.4.1. கூட்டிணைக்கப்படு முன்னரான ஒப்பந்தங்கள்

ஏற்கனவேயுள்ள ஏதேனும் ஒரு வியாபாரத்தை – ஆதனத்தை வாங்குவதற்காகவே கம்பனியொன்று சாதாரணமாக உருவாக்கப்படுகிறது. ஆனால் அது கூட்டிணைக்கப்படும்வரை அதனால் ஒப்பந்தமெதுவும் செய்யமுடிவதில்லை.

சிலவேலைகளில் வியாபாரத்தை அல்லது ஆதனத்தை விற்பவருக்கும் உருவாக்கப்படப்போகும் கம்பனியின் முகவர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற முறையில் இன்னொருவருக்குமிடையில் ஓர் ஒப்பந்தம் ஏற்படலாம். ஆனால் அவர் இல்லாத ஒரு நபருக்காக முகவராகச் செயலாற்ற முடியாது. இதனால் பின்வரும் விளைவுகள் ஏற்படலாம்—

(அ) கம்பனி உருவாக்கக்பட்டபின் அதன் சார்பில் அது உருவாகுமுன்னர் செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்குக் கம்பனி கட்டுப்பட்டதாகாது. (இங்கிலிஸ் அன்ட் கொலனியல் புரடியூஸ் கம்பனி 1906-2CH. 435.)

(ஆ) கம்பனியானது ஒப்பந்தத்தின் மீது பொருள் விற்றவரை வழக்கிடமுடியாது. (நேரல் லான்ட் கம்பனி எதிர் போலின் கோல்பரி சின்டிகேட் லிமிட்டெட் 1904. A. C. 120)

(இ) ஒப்பந்தத்திற்கு எவர் முகவராகச் செயற்பட்டாரோ அவரே அவ்வொப்பந்தத்திற்குத் தனிப்பட்ட முறையில் பொறுப்பாக இருத்தல்வேண்டும். (கெல்னர் எதிர் பக்சர் 1866. L. R. 1 CP. 174.)

மேற்படி சட்ட விளைவுகளைத் தடுக்கும் நோக்குடன் சில வாசகங்கள் சாதாரணமாக ஒப்பந்தத்தில் உட்புகுத்தப்பட்டிருக்கும். அவையாவன—

(i) கம்பனிபின்னால் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டால் முகவரின் பொறுப்பு முடிவடையும் ;

(ii) கம்பனி குறிப்பிட்ட கால எல்லைக்குள் அத்தகைய உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளத் தவறுமிடத்து உடன்படிக்கைத் திறத்தவர்களுள் எவரும் அதனை நீக்க உரிமையுடையவராவர் ;

(iii) கம்பனி தொடங்கப்பட்ட பின்னர் அது புதிய உடன்படிக்கையினைச் செய்துகொண்டு முகவரின் பொறுப்பை நீக்கலாம்.

1. 4. 2. பதிவுசேய்தல்

கம்பனியை ஊக்குவிப்போர்கள் கம்பனிக்குத் தேவையான ஆகக்குறைந்த எண்ணிக்கையானசந்தாதாரர்களை(பகிரங்கக் கம்பனிக்கு 7; தனியார் கம்பனிக்கு2) முதலில் சேர்த்து உருவாக்கப்போகும் கம்பனியின் புறவுரையை அவர்களைக் கொண்டு ஒப்பமிடச் செய்தல் வேண்டும். பின்னர், அவர் பின்வரும் ஆவணங்களைக் கம்பனிப் பதிவாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவாளரிடம் கோப்பிடப்படவேண்டிய ஆவணங்கள் ;

(அ) **புறவுரை:** இப்புறவுரை கம்பனியின் பெயர், அதன் குறிக்கோள், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், அதன் மூலதனம், அதன் பொறுப்புடமை ஆகிய விடயங்கள்பற்றி எடுத்துக்கூறுவதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) **அகவுரை:** கம்பனியின் அலுவல்கள், முகாமை எவ்வாறு செய்யப்படவேண்டுமென்ற ஒழுங்கு விதிகளை இவ் ஆவணம் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) **நியதிச்சட்ட வெளிப்படுத்துகை:** இது கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டிருக்கின்றனவென வெளிப்படுத்துதலாகும்.

(ஈ) பணிப்பாளர்களாகச் செயலாற்றச் சம்மதம் தந்த ஆட்களின் நிரல்.

(உ) பணிப்பாளர்களாகச் செயலாற்ற விருப்பவர்களின் எழுத்திலான சம்மதங்கள்.

கவனிக்க: (ஈ) வும் (உ) வும் தனியார் கம்பனிகளுக்குத் தேவையில்லை.

1. 4. 3. கட்டிணைப்புச் சான்றிதழ்

மேற்படி எடுத்துக் கூறப்பட்ட ஆவணங்கள் யாவும் கம்பனிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைவாகவும், இணங்கியொழுகுவனவாகவும் பதிவாளரின் திருப்திக்கமைய இருக்குமிடத்துப் பதிவாளர் இக் கம்பனியின் பெயரைக் கம்பனிகள் பதிவேட்டில் பதிந்து கூட்டிணைப்புச் சான்றிதழை வழங்குவர். கூட்டிணைப்புச் சான்றிதழ்த் தேதி முதல் உருவாக்கப்பட்ட கம்பனியானது இடையறு வழியுரிமையையும், பொது இலச்சினையையும் கொண்ட தனித்துவமான சட்டநபராகக் கருதப்படும். மேலும் கூட்டிணைப்புச் சான்றிதழானது, பதிவுத்தொடர்பிலும் அது தொடர்பாக முன்னர் செய்யவேண்டிய நடவடிக்கைகளும் அதன் இடைநேர் விளைவான நடவடிக்கைகளும் முழுமையாக இணங்கியொழுகப்பட்டன என்பதற்கும், அது முறையாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறதென்பதற்கும் மறுதலிக்க முடியாச் சான்றாக இருக்கும்.

கூட்டிணைப்புச் சான்றிதழ் பெறப்பட்டவுடன், கம்பனி சட்ட நபராகக் கருதப்படினும் கூட தனியார் கம்பனிகள் தவிர்ந்த ஏனைய கம்பனிகள், உடனேயே வியாபாரம் தொடங்க முடியாது. அவை கட்டளைச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி வியாபாரச் சான்றிதழைப் பெற்றபின்னரே வியாபாரத்தினீடுபட முடியும். 93ஆம் பிரிவின்படி கம்பனி ஆகக்குறைந்த சந்தாப் பணத்தை

மூலதனமாகப் பெற்றிருந்தாலன்றி வியாபாரச்சான்றிதழைப் பெறமுடியாது. ஆகக் குறைந்த சந்தாப்பணமென்பது ஆரம்பச் செலவினங்கள், ஏற்கெனவே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மீதான கொடுப்பனவுகள், வியாபார மூலதனம் ஆகிய மூவற்றினதும் கூட்டுத்தொகையாகும்.

1.4.4. புறவுரை

உள்ளீடு (i) வரையறுக்கப்பட்டது என்ற சொல்லினை உள்ளடக்கிய கம்பனியின் பெயர்; (ii) பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள இடம்; (iii) கம்பனியின் குறிக்கோள்கள்; (iv) கம்பனி உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதென்ற கூற்று; (v) உத்தேசிக்கப்பட்ட மூலதனமும் அது எவ்வாறு பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்பதுவும்.

(அ) கம்பனிப்பெயர்

கம்பனியின் பெயரில் ''வரையறுக்கப்பட்டது'' என்ற சொல் இருக்கவேண்டுமென்பது நியச்சட்ட நிபந்தனையாக இருப்பினும் வர்த்தகம், கலை, விஞ்ஞானம், சமயம், அறநிலையம் அல்லது வேறு ஏதேனும் உபயோகமான குறிக்கோளுக்காக உருவாக்கப்பட்ட கம்பனிகள் ''வரையறுக்கப்பட்டது'' என்ற பதத்தைப் பயன்படுத்தத் தேவையில்லை. ஆனால் இதற்குப் பதிவாளரின் சம்மதம் தேவை. மேலும் இத்தகைய கம்பனிகளின் இலாபங்களைப் பங்கிலாபங்களாக வழங்கமுடியாது.

கம்பனியின் பெயர் துலாம்பரமாகவும், தெளிவாகவும் அதன் பதிவு அலுவலகத்திலும் மற்றும் கம்பனியின் எல்லா வியாபார நிலையங்களிலும் வைக்கப்படுதல் வேண்டும்.

கம்பனியின் பெயர் ஏற்கனவேயுள்ள ஒரு கம்பனியின் பெயரை ஒத்ததாகவோ, அதனோடு சம்பந்தப்பட்ட தெனக்கருதக் கூடிய அளவில் உள்ளதாகவோ, அல்லது வேறு கம்பனிப் பெயருடன் மயக்கம் தருவதாகவோ இருக்கக்கூடாது. இவ்வாறிருப்பின் பதிவாளர் அக் கம்பனியைப் பதிய மறுக்கலாம், அல்லது பெயர்ப் பதிவினால் இன்னலுற்ற திறந்தவர் அக் கம்பனிக்கெதிராகத் தடைக்கட்டளை பெறலாம். பின்வரும் வழக்குகள் இக் கோட்பாட்டை விளக்குவனவாகும்:—

(i) ஊவா சிலோன் எஸ்டேட் லிமிடெட் எதிர் ஊவா சிலோன் ரப்பர் எஸ்டேட் லிமிடெட்—தடைக்கட்டளை வழங்கப்பட்டது.

(ii) செசயிட்டே பன்காட் எற் லவசர் எதிர் பன்காட் லவசர் மோட்டார் கம்பனி லிமிடெட் 2 CH. 513—தடைக்கட்டளை வழங்கப்பட்டது.

(iii) நோர்த் செசயர் அன்ட் மன்சஸ்டர் புறுவரி கம்பனி லிமிடெட் எதிர் மன்சஸ்டர் புறுவரி கம்பனி லிமிட்டெட் (1899) Ac. 87—தடைக்கட்டளை வழங்கப்பட்டது.

(iv) சிலோன் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் எதிர் யூனைட்டெட் சிலோன் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் (48 NLR 567) என்ற வழக்கில் இன்சூரன்ஸ் என்னும் பதம் ஒருவரினதும் ஏகபோக உரிமையில்லை என்றும் அது ஒரு செய்தொழிலைக் குறிப்பதாதலால் தடைக்கட்டளை வழங்கப்படமாட்டாது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

சில பதங்களும், வார்த்தைகளும், சொற்றொடர்களும் பயன்படுத்தப்பட முடியாதவை. அவற்றின் பிரயோகம் கட்டளைச் சட்டத்தின் 18ஆம்பிரிவினால் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: ரோயல், இம்பீரியல், மாநகரம், வரைவுபெற்ற, கூட்டுறவு, தேசிய, அரச, இலங்கை முதலியன.

பெயரைச் சிறப்புத் தீர்மானத்தினாலும், பதிவாளரின் சம்மதத்துடனும் மட்டுமே மாற்ற முடியும்.

(ஆ) கம்பனியின் பதிவலுவலகம்

கம்பனியின் பதிவு அலுவலகம் எம் மாவட்டத்தில் அமைந்திருக்கவேண்டுமென்பது அகவுரையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு கம்பனிக்கும் ஒரு பதிவு அலுவலகம் இருத்தல்வேண்டும். இவ்வலுவலக இடம் பதிவாளருக்கு அறிவிக்கப்படவேண்டும். கம்பனிக்கு அறிவிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் யாவும் அதன் பதிவலுவலகத்திற்கே அனுப்பப்படும்.

(இ) கம்பனியின் குறிக்கோள்

சந்தாதாரர்கள் என்னசெய்யப்போகிறார்கள் என்பதை மட்டும் கூறுவதல்ல இவ்வாசகம். இது இரு பயனுடையது. முதலாவதாக, குறிக்கோள் வாசகம் கம்பனியின் தத்துவங்களை வரையறை செய்வதாகும். இரண்டாவதாக, இவ்வாசகம் கம்பனியின் செயற்றத்துவங்களை வரையறை செய்வதாகும். கம்பனி குறிக்கோள் வாசகத்திற் கொடுக்கப்பட்ட தத்துவங்களுக்கு முரணான எவ்வித செயலையும் செய்ய முடியாது. தத்துவத்திற்கு அப்பாற்பட்ட ஒப்பந்தங்கள்வறிதானவையாகும். (அஷ்பரி ரெயில்வே கரீஜ் கம்பனி எதிர் ரிச் 1875 L. R. 7 H. L. 672.)

மேற்படி விதி பொதுமக்களையும் இனி வரப்போகும் பங்குதாரர்களையும் பாதுகாக்கவே அமைந்துள்ளது. எனினும் பின்வரும் சந்தர்ப்பங்களையும் விளைவுகளையும் அவதானித்தல் வேண்டும் :—

(அ) செய்யப்பட்ட செயல் பணிப்பாளர்களின் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டதாய் மட்டும் இருந்தால், பங்குதாரர்கள் அதனை ஏற்றுக்கொள்ளலாம்;

(ஆ) அது அகவிதிகளுக்கு அப்பாற்பட்டதாயின் கம்பனி அகவிதியை முறையாக மாற்றியமைக்கலாம்;

(இ) கம்பனியின் அகவிதி கடும் பொருள் கோடலுக்கு உட்படுத்தப்படுதலாகாது. (வொல்டர் எதிர் லண்டன் சதாம் அன்ட் டோவர் ரெயில் கம்பனி.)

(ஈ) வெளிப்படையாகச் சொல்லப்படாத சில தத்துவங்கள் உட்கிடையாக ஊகிக்கப்படுதல் வேண்டும்.

இன்று, கம்பனியை ஊக்குவிப்பவர்கள் கம்பனியின் நோக்கங்களை மிக விரிவாக எடுத்துக் கூறுவதுண்டு. அவ்வாறாயினும் கம்பனியின் நோக்கங்களை முக்கிய நோக்கம், இடைநிலை நோக்கமெனப் பாகுபடுத்தலாம். கம்பனி தனது முக்கிய நோக்கத்தை அடைய முடியாவிட்டால், அதன் இடைநிலை நோக்கம் அடையப்பட முடியுமாயினும் கூட, கம்பனி கலைக்கப்பட வேண்டும். (ஜேர்மன் டேட் கோப்பி கம்பனி 1882).

நோக்கம் பற்றிய வாசகம் பின்வருட நோக்கங்களுக்காக மாத்திரமே சிறப்புத் தீர்மானத்தினால் மாற்றப்படலாம்:

(i) கூடிய பொருளாதார மேன்மை.

(ii) கம்பனியின் முக்கிய நோக்கினை புதிய அல்லது சீர்படுத்திய செய்முறைகளால் எய்தல்.

(iii) அதன் இயக்கெல்லையை விரிவாக்கல்.

(iv) ஏதேனும் நோக்கினை மட்டுப்படுத்துதல் அல்லது விட்டுவிடுதல்.

(v) வியாபாரத்தை விற்றுவிடுதல்.

(vi) வேறொரு கம்பனியுடன் கூட்டிணைத்தல்.

நோக்கம் பற்றிய வாசகம் மாற்றப்படுவதை ஆட்சேபித்து கம்பனியின் பங்குகளில் 15சத வீதத்திற்குக் குறையாத பங்குகளையுடைய பங்குதாரர்கள், நீதிமன்றத்திற்கு 21 நாட்களுக்குள் மனுச்செய்யலாம். அவ்வாறு மனுச்செய்யப்படின் நீதிமன்றத்தின் தீர்மானத்தின் பின்னரே அம்மாற்றம் வலுவுள்ளதாக வரும்.

(ஈ) வரையறைப் பொறுப்பு

கம்பனி பங்குகளினாலா அன்றி உத்தர வாதத்தினாலா வரையறுக்கப் பட்டதென்பதை அகவுரையில் எடுத்துக் கூறுதல் வேண்டும்.

(உ) மூலதனம்

கம்பனியின் மூலதனம் எவ்வாறு பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மூலதனம் பற்றிய வாசகம் எடுத்துக் கூறும் சந்தாதாரர் ஒவ்வொருவரும் ஒரு பங்குக்குக் குறைய எடுத்தலாகாது.

(ஊ) இணைப்பு வாசகம்

மேற்படி ஐந்து கட்டாய வாசகங்களுடன் சந்தாதாரர்கள் தமது கூட்டுச் சேரும் எண்ணத்தை எடுத்துக்கூறுவதே இவ்வாசகமாகும். இவ்வாசகத்தினடியில் ஆகக்குறைந்த ஏழு சந்தாதாரர்கள் ஒப்பமிடுவர். அவர்களது பெயர், விலாசம், தொழில் அவர்கள் எடுத்துக்கொள்ளும் பங்கின் எண்ணிக்கை ஆகியன தரப்பட வேண்டும். சந்தாதாரர்கள் ஒவ்வொருவருக்கும் தாம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்கான பணத்தைச் செலுத்துவதற்கும், அகவுரைக்கு ஒப்பமிடுவதற்கும், முதற் பணிப்பாளர் சபையை நியமிப்பதற்கும், அவ்வாறான நியமனம் தாமதப்பட்டால் பணிப்பாளர்களாகத் தாமே கடமையாற்றவும் கடமைகள் உண்டு.

1. 4. 5. அகவுரை

இவை கம்பனியின் முகாமைபற்றியும் கம்பனிக்கும் உறுப்பினர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் ஏனைய உறுப்பினர்களுக்குமிடையே உள்ள தொடர்புகளையும் பற்றிய ஒழுங்கு விதிகளாகும். அநேகமான கம்பனிகள், கம்பனிச் சட்டத்தின் (அ) நிரலில் காணப்படும் புறவுரையையே தமது தேவைப்பாடுகளுக்கிணங்க ஏற்ற மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ளுகின்றன.

(அ) உள்ளீடு:— (i) பங்குகள் வழங்கல், பங்குரிமைகள், அவற்றை மாற்றும் வழிவகைகள்; (ii) பங்குச் சான்றிதழ்கள் வழங்கல், அழைப்புகள், இழப்பீடுகள் முதலியன; (iii) பங்குகளின் மாற்றமும் வழியுரிமை மாற்றமும்; (iv) கணக்குகள் கணக்குப் பரிசோதனை பற்றிய ஏற்பாடுகள்; (v) பொதுக்கூட்டங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையும் அறிவித்தல் பற்றிய ஏற்பாடுகளும்; (vi) பணிப்பாளர்களினதும், செயலாளரினதும் நியமனமும் கடமைகளும்.

அகவுரை அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும். அகவுரைகள் பதியப்பட்டதன் மேல் கம்பனியையும், அதன் உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும் அகவுரை எப்பொழுதும் புறவுரைக்கு அமைந்ததே ஆகும். அகவுரை கம்பனியின் தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட எவ் வேற்பாட்டையும் கொண்டிருத்தலாகாது.

அகவுரையின் எவ்வாசகமும் சிறப்புத் தீர்மானத்தின் மூலமே மாற்றப்படலாம். இம் மாற்றமானது சட்டபூர்வமானதாகவும் புறவுரைக் கமைந்ததாகவும் சிறுபான்மை உறுப்பினர்களின் நலனை மோசடி செய்வதாக இல்லாததுமாய் இருத்தல் வேண்டும். (அலன் எதிர் கோல்ட் ரீவ்ஸ் லிமிட்டெட். 1 Ch. 656 — சைட் பொட்டம் எதிர் கேர்சோ லீஸ் அன்ட் கம்பனி 1 Ch. 154.)

அகவுரையினதும், புறவுரையினதும் பிரதிகள் பதிவலுவலகத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அது எவராலும் பெறப்படுவதற்கானதாகவும் இருத்தல் வேண்டும்.

2. ஊக்குவிப்போனும் கம்பனி விபரத் திரட்டும்:

2. 1. ஊக்குவிப்போன்

சட்டத்தில் எங்கணும் ஊக்குவிப்போன் பற்றி வரைவிலக்கணம் கூறப்படவில்லை. ஊக்குவிப்போன் என்பவன் கொடுக்கப்பட்ட குறிக்கோள் தொடர்பில் கம்பனியொன்றை உருவாக்க முனைந்து அதற்கான ஆயத்தங்களைச் செய்பவன் என்று கூறலாம். (ரைகுரஸ் எதிர் கிராண்ட் 1977 2 GPD 541.)

ஊக்குவிப்பவர்கள் கம்பனியின் முகவர்களுமல்ல, நம்பிக்கைப் பொறுப்பாளர்களுமல்ல. ஏனெனில் அவர்கள் கம்பனிக்காகச் செயலாற்றும்போது கம்பனி கூட்டிணைக்கப் பட்டிருக்கவில்லை யாதலால் அது

சட்டநபரல்ல. ஆனால் ஊக்குவிப்போர் கம்பனியுடன் நம்பிக்கையுறவு கொண்டவர்களாவர். (ஏர்லங்கர் எதிர் நியு சோம் பேரோ போஸ்பேட் லிமிட்டெட் 1878.3 AC 1236).

ஊக்குவிப்போன் நேரடியாகவோ மறைமுகமாகவோ கம்பனியின் அறிவும், சம்மதமும் இன்றி இலாபமெதுவும் பெறுதலாகாது. அவர் இரகசிய லாபமெதனையும் பெற்றால் அத் தொகையைக் கம்பனிக்குக் கொடுத்தல் வேண்டும். (லீட்ஸ் அன்ட் ஹன்லி தியேட்டர் ஒவ் வரயிற்றீஸ் லிமிட்டெட் 2CH 809).

ஊக்குவிப்போன் ஒருவன் தனது பொருளை அல்லது ஆதனத்தைக் கம்பனிக்கு விற்கும்போது—

(அ) அவ்வாதனத்தின் மீதான அக்கறையை சுயாதீனமான பணிப்பாளர் சபைக்கு வெளியிடுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய எல்லா நிகழ்வுகளையும் பொதுமக்களுக்கு கம்பனி விபரத் திரட்டுமூலம் வெளியிடுதல் வேண்டும்.

2.2. கம்பனி விபரத் திரட்டு

'கம்பனியின் ஏதேனும் பங்கை அல்லது கடன் பத்திரத்தைப் பொதுமக்கள் வாங்குவதற்காக முனைவு செய்யும் ஏதேனும் விபரத்திரட்டு, அறிவித்தல், சுற்றறிக்கை, விளம்பரம் அல்லது வேறு முனைவழைப்பே கம்பனி விபரத் திரட்டாகும்' என்று 363ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கம்பனி விபரத்திரட்டு வெளியிடப்படுவதன் நோக்கம் பொதுமக்களைக் கூடிய முறையில் கவருவதற்கேயாம். ஆனால் சட்டத்தின் நோக்கம் பொதுமக்கள் தவறாக வழி நடாத்தப்படுவதையும், மோசடி செய்யப்படுவதையும் தவிர்ப்பதேயாம்.

கம்பனி விபரத் திரட்டை வெளியிடுவதற்குப் பொறுப்பானவர்கள், கம்பனியில் முதலீடு செய்வதனால் ஏற்படப்போகும் அனுகூலங்களைப் பற்றி எடுத்துக் கூறுபவர்களாதலால், அதில் காணப்படும் எல்லா நிகழ்வுகள் பற்றியும் மிகவும் திட்டவட்டமாகவும், மெய்யாகவும் எடுத்துக் கூறவேண்டுமென்பதுடன் தமது அறிவுக்கு எட்டிய பாரிய நிகழ்வெதுவும் பற்றிக் கூறாமலுமிருக்கக் கூடாது, கம்பனி விபரத்திரட்டை வெளியிடுவதற்குப் பொறுப்பானவர்களின் கடமைகளையும், அக்கடமைகளைப் புரியாதவிடத்து ஏற்படும் விளைவுகளையும் நூலாசிரியர் பார்மர் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறார் :

(i) கம்பனி விபரத் திரட்டை வெளியிடுவதற்குப் பொறுப்பானவர்கள் பொய்யான அல்லது தவறான கூற்றுக்களைச் செய்யக்கூடாது. அவ்வாறு செய்யின்—

(அ) வழங்கப்பட்ட பங்குகள் மோசடிக்காக அல்லது பொய்யான பிரதிநிதித்துவத்திற்காக நீக்கப்படலாம்.

(ஆ) மோசடிக்காக அவருக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படலாம்.

(இ) கட்டளைச் சட்டத்தின்கீழ் பொய்யான பிரதிநிதித்துவத்திற்காக அவருக்கெதிராக நட்டஈட்டு வழக்குத் தொடுக்கப்படலாம்.

(ii) கம்பனிகள் கட்டளைச் சட்டத்தினால் வெளியிடப்பட வேண்டுமென்று தேவைப்படுத்தப்பட்ட எல்லா விடயங்கள் பற்றியும் அவர் கம்பனி விபரத்திரட்டில் வெளியிடுதல் வேண்டும். இவ்விடயம் பற்றிய சட்ட ஏற்பாடானது (அ) முக்கிய நிகழ்வுகளை மறைத்து வைத்தல்; (ஆ) கம்பனியில் பணிப்பாளர்கள் முக்கிய பண முதலீடு செய்யாமை; (இ) போதிய மூலதனத்தைத் திரட்டாது கம்பனி வியாபாரத்தை தொடங்குதல்; (ஈ) வாங்கப்பட்ட ஆதனவுக்கான விற்பனைப் பணமாக கூடுதலான பணங்களைக் ஊக்குவிப்போருக்கு வழங்கி மூலதனத்தைக் குறைத்தல் ஆகிய நிகழ்வுகளைத் தடுப்பதற்காகவே செய்யப்பட்டுள்ளது.

கம்பனி விபரத்திரட்டை வெளியிடும் கம்பனியொன்று கட்டளைச் சட்டத்தின் நான்காம் அட்டவணையில் Iஆம் பாகத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள எல்லா விடயங்கள் பற்றியும் எடுத்துக்கூற வேண்டும். அத்துடன் அவ்வட்டவணையின் IIஆம் பாகத்தில் காணப்படும் அறிக்கைகளும் அதனுடன் இணைக்கப்படவேண்டும். அத்தகைய விடயங்களும் அறிக்கைகளும் பின் வருமாறு :

(அ) புறவுரையின் உள்ளீடும் சந்தாதாரர்களின் பெயர், விபரங்கள், முகவரிகள் ஆகியனவும்

(ஆ) கணக்குப் பரிசோதகர்களின் பெயரும், முகவரியும்.

(இ) பணிப்பாளர்களின் பெயர்கள், விபரங்கள் மற்றும் முகவரிகள் முதலியனவும் அவர்களின் ஊதியங்களும்

(ஈ) ஊக்குவிப்போருக்குக்கொடுக்கப்பட்ட பணத்தொகை எதுவும், அதற்காக அவரிடமிருந்து கம்பனி பெற்ற எதிர்ப்பயனும்.

(உ) பங்குகளின்பல்வேறு வகைகளும், அவை தொடர்பான வாக்குரிமைகளும், மூலதனம், பங்கிலாபம் தொடர்பான சிறப்புரிமைகளும்.

(ஊ) பங்குக்காக விண்ணப்பம் செய்யப்படும்போதும் பங்குகள் வழங்கப்படும் போதும் செலுத்தப்படவேண்டிய பணத்தொகை.

(எ) தாபிப்பவர்கள் பங்குகள், எவையேனுமிருப்பின் அதுவும், பணிப்பாளர்களின் தகமைக்காக நிர்ணயிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையும்.

(ஏ) ஏதேனும் வியாபாரம் வாங்கப்பட்டிருந்தால் அதற்காகக் கொடுக்கப்பட்ட விலையும், நன்மதிப்புக்காகக் கொடுக்கப்பட்ட தொகையும்.

(ஐ) ஆரம்பச் செலவுகள் பற்றிய மதிப்பீடு.

(ஒ) கம்பனியினால் சாதாரண வியாபார முறையில் அல்லது கம்பனி விபரத் திரட்டு வழங்கப்படுவதற்கு இரு ஆண்டுகளுக்குள் செய்யப்பட்ட முக்கிய ஒப்பந்தங்கள் பற்றிய விபரங்கள்.

(ஓ) கம்பனி வியாபாரம் தொடங்கி நடாத்தியிருப்பின் வியாபாரம் நடாத்தப்பட்ட காலப்பகுதி.

(ஔ) விற்பனைக் கமிசன் ஏதேனுமிருப்பின் அத்தொகை.

(க) பொதுமக்களுக்குப் பங்குகள் விற்பனைக்காக வைக்கப்படும்போது ஆகக் குறைந்த சந்தாப்பணம்.

(ங) ஊக்குவித்தலிலும் கம்பனியினால் கொள்ளப்பட்ட ஆதனங்களிலும் பணிப்பாளர்களின் அக்கறையும், பணிப்பாளராக்குவதற்கு அவரைத் தூண்ட அல்லது அவர் தகமையெய்த அவருக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகை.

(ச) பணமாகவன்றி வேறு ஏதேனும் எதிர்ப்பயனுக்காக வழங்கப்பட்ட பங்குகளின் அல்லது கடன் பத்திரங்களின் எண்ணிக்கை.

அறிக்கைகள் :—

(அ) கம்பனி விபரத்திரட்டு வெளியிடப்படுவதற்கு முந்திய மூன்று ஆண்டுகளுக்குமான கணக்குப் பரிசோதகர் அறிக்கைகள்.

(ஆ) ஏதேனும் வியாபாரம் வாங்கப்பட வேண்டுமாயின் அவ்வியாபாரம் பற்றி பெயர் குறிப்பிட்ட ஒரு கணக்காளரின் அறிக்கை.

கம்பனியொன்று விபரத்திரட்டை வெளியிடாவிடின் அக்கம்பனி பங்குகளை வழங்குவதற்கு 3 நாட்களுக்கு முன்னர் பதிவாளரிடம் விபரத் திரட்டுக்குப் பதிலான கூற்று ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். விபரத் திரட்டுக்குப் பதிலான கூற்றும் விபரத் திரட்டிலுள்ள அதே விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. உறுப்பினர்களும் பங்குதாரர்களும்

3. 1. எவ்வாறு உறுப்பினராகலாம் என்பது :

பின்வரும் ஏதேனும் வழிகளில் ஒருவர் கம்பனியின் உறுப்பினராகலாம் :

(அ) புறவுரைக்கு ஒப்பமிடுதன் மூலம் ஒருவர் கம்பனியின் உறுப்பினராகலாம். புறவுரைக்கு ஒப்பமிடுபவர்கள் யாவரும் கம்பனியின் உறுபினர்களாகக் கருதப்பட்டு அவர்களின் பெயர் உறுப்பினர் பதிவேட்டில் வைக்கப்படல் வேண்டும். இவர்களின் விடயத்தில் இவர்கள் உறுப்பினர்களாக வருவதற்குக் கம்பனி அவர்களுக்குப் பங்குகள் வழங்கியிருக்கத் தேவையில்லை. [லண்டன் அன்ட் புரவின்சியல் முதலி கம்பனி (1877); நிக்கல்சின் வழக்கு (1885)].

(ஆ) உடன்படிக்கையினாலும் சிலர் கம்பனியின் உறுப்பினராகலாம். இது பல வழிகளில் ஏற்படலாம்:–

(i) கம்பனியிடமிருந்து பங்குகளை வாங்க விண்ணப்பம் செய்து, பங்கினைப் பெற்றதனால் உறுப்பினர் இடாப்பில் பெயருடையவர்கள்.

(ii) வேறொரு பங்குதாரரிடமிருந்து பங்கினை வாங்கியதனால் மாற்றம் பெற்றவர்கள்.

(இ) பங்குதாரர் இறப்பின் அவரது பங்குகள் அவரது வழியுரிமையாளருக்குச் செய்வதால்.

(ஈ) ஒருவர் தனது பெயரை உறுப்பினர் இடாப்பில் இருக்கவிட்டு தம்மை உறுப்பினரெனக் காட்டிக்கொள்வதினால், (சுவெல்ஸ் வழக்கு 1866).

(உ) பணிப்பாளராகச் செயலாற்றும் ஒருவர் சில வேளைகளில் தனது தகமைப் பங்குகளை வாங்க உடன்பட்டுள்ளாரெனக் கருதப்படுவார், (சால்ரன் எதிர் நியூ பஸ்ரன் கம்பனி. 1899. 1 CH. 775).

(ஊ) கம்பனியின் பங்குகளின்மீது பிணை ஈடாகப் பணம் கடன் கொடுத்த ஒருவர் அப்பங்குகள் தொடர்பில் உறுப்பினர் போன்று பொறுப்பாவார்.

(அடிசன் வழக்கு 1870·5 Ch. A. 294).

(எ) புனைப்பெயரில் அல்லது பொய்ப் பெயரில் பங்குகளை வாங்கும் ஒருவரும் உறுப்பினர் போன்று பொறுப்புடையவரே, (சென்றல் கிளென்டிக் கோல்ட் மைனிங் கம்பனி 1899).

3 . 2. யார் உறுப்பினராகலாம் என்பது

கம்பனியொன்று வெறொரு கம்பனிப் பங்குகளை வாங்கலாம்; அதன் உறுப்பினராகலாம். ஆனால் கம்பனி தனது பங்குகளைத் தானே வாங்கமுடியாது. அகவிதி இதற்கு அனுமதித்தாலும்கூட இது முடியாததாகும், (ரெவர் எதிர் விற்வோர்த். 1887. 12 Ac. 109)

பராயமடையாதவர் ஒரு பங்குதாரராக வரலாம். ஆனால் அவ்வொப்பந்தம் வறிதாக்கப்படக்கூடிய தொன்றாகும்.

இலங்கையில் கல்யாணம் செய்த பெண் ஒருத்தி திருமணமான பெண்களின் ஆதனம் பற்றிய கட்டளைச் சட்டத்தின்கீழ் இன்று ஒரு பங்குதாரராக முடியும்.

3 . 3. உறுப்பினர் இடாப்பு

ஒவ்வொரு கம்பனியும் தனது உறுப்பினர்களது பெயர்கள், முகவரிகள், அவர்களின் பங்குகளின் எண்ணிக்கை, அவர்கள் உறுப்பினர்களாக வந்த தினம், அவர்கள் உறுப்பினராக இல்லாதொழிந்த தேதி ஆகியவிபரங்களை உள்ளடக்கிய உறுப்பினர் இடாப்பினை வைத்திருத்தல் வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐம்பதிற்குக் கூடுதலாகவும் உறுப்பினர் இடாப்பு அகர வரிசையில் இல்லாதுமிருந்தால் அவ்விடாப்பினைச் சுலபமாகப் பார்வையிடுவதற்கு வசதியாகச் சுட்டொன்றும் வைத்திருக்கப்படுதல் வேண்டும். உறுப்பினர் இடாப்பும் சுட்டும் கம்பனியின் பதிவலுவலகத்தில் வைத்திருக்கப்பட வேண்டுமென்பதுடன் எவராலும் பார்வையிடுவதற்கும் கிடைக்கச் செய்தல்வேண்டும்.

உறுப்பினர் இடாப்பில் உறுப்பினர்களின் உரிமைபற்றிக் குறிப்பிட்டிருக்குமே தவிர சட்டவுரிமை தவிர்ந்த நம்பிக்கைப் பொறுப்பு போன்ற ஏனையவுரிமைகள்

எதுவும், அவை வெளிப்படையாக உருவாக்கப்பட்டிருப்பினுஞ்சரி உட்கிடையாக உருவாக்கப்பட்டிருப்பினுஞ்சரி பதியப்படுதலாகாது.

ஒவ்வொரு கம்பனியும் ஒவ்வோராண்டும் கம்பனி உறும்பினர் இடாப்பில் செய்யப்பட்ட மாற்றங்களை உள்ளடக்கிய ஆண்டுத் திரட்டொன்றைத் தயாரித்துப் பதிவாளருக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும்

4. பங்குகள்

4.1. பங்கு மூலதனம்

முதன்மைக்கண் பொறுப்புக்கும் இரண்டாவதாக அக்கறைக்குமாக கம்பனிச் சட்டத்திற்கிணங்க எல்லாப் பங்குதாரர்களுக்கிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் மூலம் உருவாக்கப்பட்ட அக்கறையின் பண அளவே பங்காகும். அகவுரையின் பயனாக எழுந்த ஒப்பந்தத்தின் முதல் விளைவே பங்கு. பங்கென்பது ஒரு பணத் தொகையல்ல. அது ஒப்பந்தத்திலுள்ள பலவேறு உரிமைகளைக் கொண்ட ஒரு பணத் தொகையால் அளவிடப்படக்கூடிய ஓர் அக்கறையாகும். பங்கு மூலதனம் என்ற சொற்கள் பின்வரும் வழிகளில் பயன்படுத்தலாம்;

(அ) பெயரளவிலான அல்லது அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம்—

இது கம்பனியால் மொத்தமாக வழங்கப்படக்கூடிய பங்குகளின் பெறுமதி.

(ஆ) வழங்கப்பட்ட மூலதனம்—

உண்மையில் பங்குதாரர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பெயரளவினதான மூலதனம்.

(இ) சந்தாவழி மூலதனம்—

பங்குதாரர்கள் பணஞ் செலுத்திவிட்ட அத்துணை எண்ணிக்கையாக வழங்கப்பட்ட மூலதனம்.

(ஈ) அழைக்கப்பட்ட மூலதனம்:—

வழங்கப்பட்ட பங்குகளின்மீது செலுத்தப்படவேணடு மென்று அழைக்கப்பட்ட தொகையே இதுவாகும். ஏதேனும் மிகுதித் தொகை அழைக்கப்படாத மூலதனம் என அழைக்கப்படும்.

(உ) செலுத்தப்பட்ட மூலதனம்—

அழைக்கப்பட்ட மூலதனத்தில் உண்மையாகச் செலுத்தப்பட்ட தொகையே இதுவாகும்.

(ஊ) ஒதுக்கிய மூலதனம்—

குலைக்கப்படும் போதல்லாது வேறு சந்தர்ப்பங்களில் அழைக்கப்பட முடியாத—அழைக்கப்படாத மூலதனத்தின் பகுதியே இதுவாகும்.

கவனிக்க:— மூலதனம் என்னும் பதம் பின்வரும் பொருளிலும் பயன்படுத்தலாம்;

(i) மூலதனச் சொத்துக்கள்: தடுத்து வைப்பதற்கும் பயன்படுத்தப்படுவதற்குமாகக் கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்கள் அல்லது கையளிக்கப்படுவதற்கு முன்னர் தற்காலிகமாக வைத்திருக்கப்படும் சுற்றும் சொத்துக்கள் ஆகியன உள்ளடங்கிய கம்பனியின் ஆதனம் இதுவாகும். தொழிற்சாலைகளும் அதில் காணப்படும் பொருத்தப்பட்ட எந்திரங்களும் நிலையான சொத்துக்களுக்கு உதாரணமாகும். உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படவுள்ள மூலப்பொருட்களும், விற்பனைக்காக வைத்திருக்கப்படும் உற்பத்திசெய்யப்பட்ட பொருள்களும் சுற்றும் மூலதனத்திற்கு உதாரணங்களாகும்.

(ii) கடன்பத்திர மூலதனம்: (சில வேளைகளில் கடன் மூலதனம் என்றும் அழைக்கப்படும்). கம்பனியினால் தனது கடன் பத்திரப் பிணை மூலமாகக் கடனாகப் பெறப்பட்ட தொகையே இதுவாகும்.

(iii) முறைமை மூலதனம்: பங்கு இலாபங்கள் விநியோகிக்கப்படுவதிலும், கம்பனி குலைக்கப்படும்போது சொத்துக்களிலும் முழுமையாகப் பங்கெடுக்கக்கூடிய அத்தகைய பங்குதாரர்களால் கொடுத்துவப்பட்ட வழங்கப்பட்ட மூலதனத்தின் பாகமே இதுவாகும். சாதாரணப் பங்குக

ளால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் மூல தனத்தையே இது குறிக்கும்.

4 . 2. பங்குகளின் வகைகளும் பங்கு தாரர்களும்

பல்வேறு வகையினவான பங்குகளைக் கம்பனியொன்று வழங்கலாம்; அதாவது வைத்திருக்கும் பங்கின் வகைக்கேற்பக் கம்பனிக்கெதிரான பங்குதாரர்களின் உரிமைகளும் வேறுபடும். ஒவ்வொரு வகைப் பங்கிற்குமுள்ள உரிமைகளைக் கண்டறிய அகவுரையை அல்லது எந்நியதிகளின்மீது பங்குகள் வழங்கப்பட்டனவோ அந்நியதிகளை ஆராய்தல்வேண்டும். பொதுவாகப் பின்வரும் வகைப் பங்குகள் வழங்கப்படுகின்றன :-

(அ) **சிறப்புரிமைப் பங்குகள்**—இப் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் பங்கு லாபங்களைப் பெறுவதில் சிறப்புரிமையுடையவர்கள். சாதாரண பங்குதாரர்களுக்கு பங்கிலாபம் வழங்குவதற்கு முன்னர் குறிப்பிடப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் சிறப்புரிமைப் பங்குதாரர்களுக்கு பங்குலாபங்கள் வழங்கப்படும். குறிப்பாகச் சொல்லப்படாவிடின் சிறப்புரிமைப் பங்குகள் **சேர்ப்புத்** தன்மையின; அதாவது ஏதாவதொரு ஆண்டில் கம்பனி பங்கு லாபங்களை வெளியிடாவிடின், அடுத்து வரும் ஆண்டுகளில் பங்கிலாபங்கள் வழங்கப்படும்போது வழங்கப்படாத ஆண்டிற்கும் சேர்த்துப் பங்கிலாபங்கள் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) **சாதாரண பங்குகள்**—காலத்துக்குக் காலம் கம்பனியினால் வெளியிடப்படும் பங்கு லாபங்களைப் பெறவும், கம்பனி குலைக்கப்படும்போது கம்பனியிலுள்ள கூடுதலான சொத்தில் பங்குபெறவும் சாதாரண பங்குதாரர்கள் உரிமையுடையவர்களாவர். அவர்கள் கூட்டங்களில் வாக்களிக்கவும் உரித்துடையவர்கள். சில வேளைகளில் சில கம்பனிகள் வாக்குரிமையில்லாத சாதாரண பங்குகளையும் வழங்குவதுண்டு.

(இ) **மீட்கப்படக்கூடிய சிறப்புரிமைப்பங்குகள்** : அகவுரை அதிகாரமளிப்பின், கம்பனியொன்று, தனது முனைவால் மீட்கப்படக் கூடியனவான சிறப்புரிமைப் பங்குகளை வழங்கலாம். ஆனால் —

(i) அத்தகைய பங்குகள் யாவும், பங்குலாபங்களாக வழங்கப்படுவதெற்கெனவுள்ள கம்பனியின் லாபங்களைக் கொண்டல்லாது அல்லது அத்தகைய மீட்புக்காகச் செய்யப்பட்ட புதிய பங்கு வழங்கல்களினால் சேர்க்கப்பட்ட தொகையைக் கொண்டல்லாது மீட்கப்படக் கூடாது.

(ii) அத்தகைய பங்குகள் முழுமையாகச் செலுத்தப்பட்டாலன்றி அவை மீட்கப்படமுடியாது.

4 . 3. மூலதனத்தை மாற்றுதல்

கம்பனியானது தனது புறவுரையில் காணப்படும் மூலதனம் பற்றிய வாசகத்தைப் பின்வரும் எவ்வழிகளிலும் மாற்றலாம்—

(அ) தனது மூலதனத் தொகையை அதிகரிக்கலாம். இது புதிய பங்குகளை வழங்குவதன் மூலம் நடைபெறலாம். அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் அதிகரிக்கப்படவேண்டுமாயின், பொதுக்கூட்டத்தில் சிறப்புத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படல்வேண்டும்.

(ஆ) அது தனது எல்லாப் பங்குகளையும் ஒன்று சேர்த்துப் பின் பெரும் பங்குகளாக; அதாவது பங்கின் எண்ணிக்கையைக் குறைத்து மதிப்பைக் கூட்டி வழங்கலாம்.

(இ) தனது செலுத்தப்பட்ட பங்குகளை எல்லாம் திரட்டிப் பங்குத் தொகுதிகளாக மாற்றலாம். மேலும் பங்குத் தொகுதியைச் செலுத்தப்பட்ட பங்குகளாக மாற்றலாம்.

(ஈ) தனது பங்குகளை மேலும் சிறு பங்குகளாகப் பிரிப்பதன்மூலம் பங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்து அவற்றின் மதிப்பைக் குறைக்கலாம்.

(உ) தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளன்று விற்கப்படாத அல்லது விற்கப் படவென ஒப்பந்தம் செய்யப்படாத அத் தகைய எண்ணிக்கையான பங்குகளை இல்லாதொழிக்கலாம். இவ்வில்லாதொழிப் பானது பங்கு மூலதனத்தைக் குறைப்ப தாகாது.

(ஊ) அகவுரையில் அதிகாரமளிக்கப் பட்டிருப்பின், சிறப்பான தீர்மானத்தினால் பங்கு மூதனத்தைக் குறைக்கலாம். அத் தகைய தீர்மானம் நீதிமன்றத்தின் அங்கீ காரம் பெறவேண்டும். இல்லையேல் அத் தீர்மானம் வலுவற்றதாகும்.

4. 4. பங்குகளை மாற்றுதல்

பங்குதாரர் ஒருவர், அகவுரையானது வேறு வகையாக ஏற்பாடு செய்தாலன்றி தனது பங்குகளை வேறு எவருக்கும் மாற்றலாம். (தனியார் கம்பனியின் அகவுரை பங்குமாற்றத்தை மட்டுப்படுத்து வதாக அமைந்திருக்கும்.) பங்குகள் மாற் றப்படும்போது மாற்றுச் சாதனமானது மாற்றம் செய்பவரால் ஒப்பமிடப்பட வேண்டும். பின்னர் அச்சாதனமானது பங்குச் சான்றிதழுடன் கம்பனிக்கு அனுப் பப்படவேண்டும். கம்பனிப் பங்குதாரர் களின் இடாப்பினைத் திருத்தி மாற்றம் பெற்றவரின் பெயரினை அதிற் பதிந்து அவருக்குப் புதிய பங்குச் சான்றிதழ்களை அனுப்பும். பங்குச் சான்றிதழானது பங்கிலுள்ள உரித்திற்கு முதற்றேற்றச் சான்றாகும்.

4. 5. பங்கிலாபங்கள்

கம்பனியின் உறுப்பினர்களுக்குப் பங் கிலாபங்கள் வழங்குவதுபற்றிய ஏற்பாடு கள் கம்பனியின் அகவுரையில் காணப் படும். பங்கிலாபங்கள் லாபங்களிலிருந்து தான் வழங்கப்படவேண்டும்; மூலதனத்தி லிருந்தல்ல. கம்பனிதான் பங்கிலாபங்களை வெளிப்படுத்தமுடியும். ஆனால் அது பணிப் பாளர்களின் விதப்புரையின்மீதே செய்யப் படலாம். பங்கிலாபங்கள் வெளிப்படுத் தப்பட்ட பின்னரே அது பங்குதாரர்களுக் குச் செலுத்தப்படவேண்டியனவாக வரும். பங்கிலாபங்கள் வெளிப்படுத்தப்படுவது தொடர்பில் பின்வரும் பொது விதிகள் கவ னத்துள் எடுக்கப்பட வேண்டியனவாகும் :-

(அ) பங்கிலாபங்கள் வெளிப்படுத்தப் படுவது கம்பனியின் அகவுரை, புறவுரை களுக்கிணங்கவே செய்யப்பட வேண்டும். ஆனால் அவை, பங்கிலாபங்கள் மூலதனத்தி லிருந்து வெளிப்படுத்தப்பட வேண்டுமென அதிகாரமளிக்க முடியாது.

(ஆ) கம்பனி தனது கடன்களை இறுக்க வழியுடையதாயின் மட்டுமே பங்கிலாபங் கள் வெளியிடப்படலாம்.

(இ) பங்கிலாபங்கள் வழங்கப்படு முன்னர் நிலையான சொத்துக்களுக்கு ஏற் பட்ட தேய்மானத்தைச் சரிசெய்வது கம் பனிக்கு அவசியமாகாது.

(ஈ) கம்பனியின் வருவாய் இழப்புக் கள் சரிசெய்யப்பட்ட பின்னரே லாபங்கள் கணிக்கப்பட வேண்டும். ஆனால் முந்திய ஆண்டின் வருவாய் இழப்புக்கள் சரிசெய்யப் பட வேண்டுமென்பது, சிறந்த வர்த்தக வழமையாய் இருப்பினும் சட்ட பூர்வமான அவசியமல்ல.

(உ) அகவுரைக்கமைய நிலையான சொத்தினை விற்பதன்மூலம் பெறப்பட்ட இலாபங்களிலிருந்து பங்கிலாபங்கள் வழங் கப்படலாம்.

(ஊ) அகவுரைக்கமைய நிலையான சொத்துக்கள் மீதான மதிப்பீட்டின் பய னாகப் பெறப்படாத இலாபங்களிலிருந்து பங்கிலாபங்கள் வழங்கப்படலாம். ஆனால் நடைமுறையில் இது செயற்படுத்தப்படுவ தில்லை. அவ்வாறு செய்யப்படுகையில் பங் கிலாபங்களுக்குப் பதிலாக, போனஸ் பங்குகள் வழங்கப்படுகின்றன.

(எ) பணிப்பாளர் இடையிட்ட பங்கிலாபங்களைத் தமது தற்றுணியில் வழங்கலாம்.

(ஏ) பணிப்பாளர்களினால் விதப்புரைக்கப்பட்ட தொகைக்குக் கூடுதலாக வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபங்கள் இருக்கக்கூடாது.

(ஐ) பங்கிலாபங்களை வெளிப்படுத்து முன்னர் பணிப்பாளர்கள் இலாபத்தின் ஒரு பகுதியினை ஒதுக்கு நிதிக்கு ஒதுக்கலாம்.

5. கம்பனியின் முகாமை

5.1. பணிப்பாளர்கள்

கம்பனி ஒரு செயற்கையான நபராதலால் அதன் அலுவல்களைக் கவனிக்க வேறொரு இயற்கையான நபர் அல்லது அவ்வாறான இயற்கை நபர்களைக்கொண்ட சபை அவசியமாகிறது. (பெர்குசன் எதிர் வில்சன் 2Ch. App. 77) எனவேதான் கம்பனிச் சட்டம் தனியார் கம்பனி தொடர்பில் ஆகக் குறைந்தது ஒரு பணிப்பாளராகவாவது இருக்கவேண்டும் என்றும், பகிரங்கக் கம்பனி தொடர்பில் ஆகக் குறைந்தது இருவராவது இருக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்துள்ளது. பணிப்பாளர்களின் முடிவை நிறைவேற்றுவதற்கென ஒவ்வொரு கம்பனிக்கும் ஒரு செயலாளர் இருத்தல்வேண்டும்.

5.1.1. பணிப்பாளர்களின் நியமனம்

கம்பனியின் அகவுரையானது எவ்வாறு பணிப்பாளர்கள் நியமிக்கப்படலாமென ஏற்பாடு செய்யும். வழக்கமாக ஒவ்வோராண்டும் பணிப்பாளர்கள் ஒரு சுற்றுவகையில் இளைப்பாறித் திரும்பவும் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராயிருப்பர். ஒவ்வொரு கம்பனியும் தனது பதிவலுவலகத்தில் பணிப்பாளர்கள், செயலாளர் ஆகியோர் பற்றிய விபரங்களைப் பதிந்து வைத்திருத்தல் வேண்டும்.

5.1.2. வேதனம்

சாதாரணமாகப் பணிப்பாளர்கள் வேதனம் பெற உரித்துடையவர்களல்லர். ஆயின், அவர்கள் கம்பனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் வேதனத்தைக் கோர உரிமையுடையவர்களாகக் கூடும். வழமையாக வேதனம் பற்றிய ஏற்பாடுகள் கம்பனியின் அகவுரையில் காணப்படும்.

5.1.3. பணிப்பாளர்களின் அதிகாரம்

பணிப்பாளர்களின் நிறைவேற்று அதிகாரம் கம்பனியின் அகவுரையிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கிறது. மேலும் கம்பனியின் அலுவல்களைக் கவனிக்கவும், கம்பனிக்காகச் செயலாற்றவும் தகுத்த யெசலாளர்களையும், ஊழியர்களையும், கம்பனி முகவர்களையும் நியமிக்கும் அதிகாரம் பணிப்பாளர்களுக்கு உட்கிடையாகக் கிடைக்கிறது.

தமது வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரத்தைப்பிரயோகிப்பதில் கம்பனியானது தனது முகவர்களான பணிப்பாளர்கள் மூலமாகவே செயலாற்றுகிறது. எனவே கம்பனியைக் கட்டுப்படுத்தப் பணிப்பாளர்கள் ஒரு சபையாகச் செயல்படவேண்டும். சில வேளைகளில் தனித்த ஒரு பணிப்பாளருக்கும் அத்தகைய அதிகாரத்தைக் கம்பனி வழங்கலாம்.

5.1.4. பணிப்பாளர்களின் சட்ட அந்தஸ்து

சட்ட ரீதியாகப் பார்க்கப்போனால் கம்பனியின் பணிப்பாளர்கள் மூன்று வகையான அந்தஸ்தை உடையவர்களாகின்றனர். அவையாவன :—

(i) கம்பனியின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்.

(ii) கம்பனியின் முகவர்கள் அல்லது முகாமையாளர்கள்.

(iii) கம்பனியுடன் ஒரு நம்பிக்கை அடிப்படையில் எழுந்த உறவு.

(i) பணிப்பாளர்கள் சில சந்தர்ப்பங்களில் கம்பனியின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகிறார்கள். பின்வரும் நோக்கங்

களுக்காக அவர்கள் நம்பிக்கைப் பொறுப்பாளராகக் கருதப்படுவர்—

(அ) மாற்றங்களைச் செய்ய; (ஆ) பங்குகளை வழங்கவும், குறித்தொதுக்கவும்; (இ) அழைப்புக்களை விடுக்க; (ஈ) அவர்களது உடமைக்குள் வரும் ஆதனங்கள் சம்பந்தமாக.

அநேக நோக்கங்களுக்காக அவர்களுக்கும் கம்பனிக்குமிடையே நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்தவோர் உறவு காணப்படுகிறது. பணிப்பாளர்கள் கம்பனியின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களேயல்லாது கம்பனியின் தனிப்பட்ட உறுப்பினர்களது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்லர். (பேர்சிவல் எதிர் றைற் 1902. 2. Ch. 421.) வழமையான நம்பிக்கைப் பொறுப்பாளர்களது கடமைகளிலும் பார்க்க இவர்களின் கடமைகள் சிறிதளவு வேறுபட்டவையாகும். பணிப்பாளர்கள் ஏனைய நம்பிக்கைப் பொறுப்பாளர்களைப் போன்று எல்லாவகை விடயங்களிலும் கணக்குக்காட்ட வேண்டியதில்லை. (சிமித் எதிர் அன்டர்சன் 188. 15 Ch. 247).

(ii) கம்பனிக்கும் பணிப்பாளர்களுக்குமிடையே காணப்படும் உறவு முழுமையான முதல்வர்—முகவர் உறவு எனக் கொள்ளப்படுதலாகாது. இது ஏனெனில், ஒப்பந்தம் செய்யும்பொழுது உண்மையான திறத்தவராக அமைவது கம்பனியே. கம்பனியொன்று ஒப்பந்தம் செய்யும்பொழுது உண்மையில் கம்பனியே ஒப்பந்தம் செய்கிறது. இவ்வொப்பந்தமானது ஒன்றோ அதற்கதிகமான பணிப்பாளர்களினால் வெறுமனே அங்கீகரிக்கப்படுகிறது. (நியூபோர்ன் எதிர் சென்சொலிட் 1953 1 AER 708).

பணிப்பாளர்கள் கம்பனிக்காக ஒப்பந்தம் செய்கிறார்களே தவிர தாமே எவ்வித பொறுப்பையும், ஒப்பந்தம் அவர்களது சொந்தப் பெயரிலிருந்தாலொழிய, எடுப்பதில்லை. பின்வரும் விதிகள் இது தொடர்பில் ஏற்புடையனவாகும்:-

(i) கம்பனியின் பெயரில் அல்லது கம்பனியைக் கட்டுப்படுத்தும் வகையில் பணிப்பாளர் ஒருவர் ஒப்பந்தம் செய்தால் கம்பனியே அவ் வொப்பந்தத்திற்குப் பொறுப்பாகும். (பணிப்பாளர்களல்ல) பணிப்பாளர்கள் சொந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டால் மாத்திரமே அத்தகைய ஒப்பந்தத்திற்குப் பொறுப்பாவர். (மக்கொலிங் எதிர் கில்பின் 1880.5 QBD 390).

(ii) பணிப்பாளர்கள் கம்பனிக்காக, ஆனால் தனது சொந்தப் பெயரில் ஒப்பந்தம் செய்தால், ஒப்பந்தத்திற்கான திறத்தவர் உண்மையான முதல்வரைக் கண்டுபிடித்துக் கம்பனிக்கெதிராக அவ் வொப்பந்தம் தொடர்பில் வழக்கிடலாம்.

(iii) ஒப்பந்தம் கம்பனியின் தத்துவங்களை மீறுததாய் ஆனால் பணிப்பாளர்களின் தத்துவங்களை மீறியதாக இருக்குமிடத்துக் கம்பனியே அவ் வொப்பந்தத்திற்குப் பொறுப்பாகும். ஆனால் பணிப்பாளர்கள் கம்பனிக்குப் பொறுப்பாக வேண்டும். (றோயல் பிரிட்டிஷ் பாங்எதிர் ரேக்குவன்ட்)

(iv) ஒப்பந்தம் கம்பனியின் குறிக்கோளை மீறியதாக இருப்பின் கம்பனி அவ் வொப்பந்தத்திற்குப் பொறுப்பாகாது. ஆனால் பணிப்பாளர்கள் உட்கிடையான அதிகார வாரண்டியை மீறியதற்குப் பொறுப்பாவார்.

5.1.5. பணிப்பாளர்களின் கடமைகள்

பணிப்பாளர்கள் கம்பனியினால் தொழிலுக்கமர்த்தப்பட்டவர்கள் எனவே அவர்களது கடமை கம்பனிக்கேயாகும். பணிப்பாளர் பங்குதாரர் ஒருவருக்கு எவ்வித கடமையையும் உடையவரல்ல. பணிப்பாளர்கள் யாவரும் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த ஒரு உறவினைக்கொண்டிருப்பதால், அவர்கள் எப்பொழுதும் நேர்மையுடனும், நம்பிக்கையுடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் தமது கடமைகளையும் அவ்வாறே புரிதல்வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என்ற முறையில் அவர்கள் எல்லோரும் கம்பனியின் பொது நன்மைக்கும், அனுகூலத்திற்குமான செயல்களையே செய்தல் வேண்டும்.

நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த கடமைகள் யாவற்றுடனும் சேர்த்து அவர் தமது கடமைகளைப் புரிவதில் தகுந்த கவனத்தையும், நுட்பத் திறமையையும் பயன்படுத்த வேண்டும். இரகசிய இலாபங்கள் எதனையும் பெறுதலாகாது.

சிட்டி ஈகூவிற்றி பயர் இன்சூரன்ஸ் கம்பனி (1925) என்ற வழக்கில் பணிப்பாளர்களின் கடமைகள் பின்வருமாறு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன:-

(அ) பணிப்பாளர் ஒருவர் தனது கடமைகளைப் பிரயோகிக்கையில், அவரது அறிவும், அனுபவமும் கொண்ட ஒருவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதிலும் கூடுதலான அளவு திறமையை வெளிக்காட்டத் தேவையில்லை.

(ஆ) கம்பனியின் அலுவல்களில் பணிப்பாளர் தொடர்ந்து கவனத்தை எப்பொழுதும் வைத்திருக்கத் தேவையிலை, அத்துடன் எல்லாச் சபைக் கூட்டங்களுக்கும் அவர் வருகை தரவேண்டிய அவசியமில்லை.

(இ) கடமைகள் தொடர்பில் அலுவல்களின் தன்மையையும், கம்பனியின் அகவுரையின் ஏற்பாடுகளையும் கவனத்துட்கொண்டு பணிப்பாளர், அக்கடமைகளை வேறு உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கலாம். ஐமிச்சம் ஏற்பட்டாலொழிய பணிப்பாளர், ஓர் உத்தியோகத்தர் தமது கடமைகளை விசுவாசமாகப் புரிவார் என்று நம்புவது தவறாகாது.

5.2. கூட்டங்களும் தீர்மானங்களும்

5.2.1. கூட்டங்கள்

எந்தவொரு கூட்டத்திற்கும் ஆகக் குறைந்தது இரு உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும். ஆனால் ஒருவகைப் பங்குகள் எல்லாவற்றையும் ஒருவரே வைத்திருப்பாராயின் அவ்வகைப் பங்குதாரர்களின் கூட்டத்திற்கு அவர் ஒருவரே சமூகமாயிருப்பினும் அது ஒரு முறையான கூட்டமாகும். மேலும் நீதிமன்றம் ஒரு கூட்டத்தைக் கூட்டும்போது ஒருவர் மட்டுமே அக் கூட்டத்திற்குச் சமூகமளிப்பினும் அது ஒரு கூட்டமெனவே கருதப்படும். சாதாரணமாக கம்பனியில் பங்குதாரர்களின் மூன்று வகைக் கூட்டங்கள் நடைபெறும். அவை யாவன:— (i) நியதிச் சட்டக் கூட்டம் (ii) வருடாந்தக் கூட்டம் (iii) அதிவிசேட கூட்டம்.

5.2.2. நியதிச்சட்டக் கூட்டம்

கம்பனியானது வியாபாரத்தை ஆரம்பித்து ஒரு மாதங்களுக்குப் பின் ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டவேண்டும். இக் கூட்டம் நியதிச்சட்டக் கூட்டமெனப்படும். இக் கூட்டத்தைக் கூட்டும் அறிவிப்புடன் ஒரு நியதிச் சட்ட அறிக்கையும் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். அவ்வறிக்கையானது பின்வரும் விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) குறித்தொதுக்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை, அவற்றுள் முழுதுமாகச் செலுத்தப்பட்ட தொகை, பகுதியாகச் செலுத்தப்படவுள்ள தொகை, பங்கு ஒதுக்கலுக்காகப் பெறப்பட்ட எதிர்ப்பயன் ஆகியன.

(ஆ) குறித்தொதுக்கப்பட்ட பங்குகளின் தொகை தொடர்பில் கம்பனியினால் பெறப்பட்ட மொத்தப் பணத்தொகை.

(இ) அறிக்கை தயாரிக்கப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்கு முன்னர் வரை கம்பனியின் பெறப்பட்ட — செலவிடப்பட்ட தொகைகளின் வெளியீடும், கம்பனியின் ஆரம்பச் செலவுபற்றிய மதிப்பீடும்.

(ஈ) கம்பனியின் பணிப்பாளர்கள், கணக்குப் பரிசோதகர்கள், முகாமையாளர்கள், செயலாளர்கள் என்போரிருப்பின் அவர்களது பெயர்கள், முகவரிகள் மற்றும் விபரங்கள் என்பன.

(உ) கூட்டத்தில் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ள ஏதேனும் ஒப்பந்தத் திரிபுகளின் விபரங்கள்.

மேற்படி அறிக்கையின் பிரதி பதிவாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

5.2.3. வருடாந்தக் கூட்டம்

ஒவ்வொரு கம்பனியும் ஒவ்வோராண்டும் வேறு ஏதேனும் கூட்டங்களுடன் தனது ஆண்டுப் பொதுக்கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும். இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்களுக்கிடையில் 15 மாதகால இடைவெளிக்கு மேல் இருக்கக் கூடாது. ஆனால் கம்பனியின் முதலாவது பொதுக்கூட்டம் கம்பனி கூட்டிணைக்கப்பட்ட நாளிலிருந்து 18 மாதங்களுக்குள் இருத்தல் வேண்டும். ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் பொதுவான நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு இருக்கும்:

(i) பங்கிலாபங்களை வெளியிடல்.

(ii) கம்பனியின் கணக்குகள்; லாப நட்டக் கணக்குகள்; பணிப்பாளர்கள், கணக்குப் பரிசோதகர்கள் ஆகியோரின் அறிக்கைகள் ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்தல்.

(iii) இனைப்பாறும் பணிப்பாளர்களின் இடத்திற்குப் புதிய பணிப்பாளர்களை நியமித்தல்.

(iv) கணக்குப் பரிசோதகர்களை நியமித்தலும், அவர்களது வேதனத்தை நிர்ணயித்தலும்.

ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெறுவிடின் அதற்குக் காரணமான ஒவ்வொரு பணிப்பாளரும் முகாமைபாளரும் குற்றமொன்றைப் புரிந்தவராகக் கருதப்படுவார்.

5.2.4. அதிவிசேட கூட்டம்

நியதிச்சட்டக் கூட்டத்தையும், ஆண்டுப் பொதுக்கூட்டத்தையும் தவிரப் பணிப்பாளர்கள் கம்பனியின் அகவுரை ஏற்பாடுகளுக்கமைய அவர்கள் வேண்டும்போது எக் கூட்டத்தையும் கூட்ட முடியும். அத்தகைய கூட்டங்கள் அதிவிசேட கூட்டங்கள் எனப்படும். மேலும் கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் பத்திலொரு பாகத்திற்குக் குறையாத பங்குகளைக் கொண்டவர்களும்வாக்குரிமைஉடையவர்களுமான பங்குதாரர்கள் அத்தகைய அதிவிசேட கூட்டங்களைக் கூட்டுமாறு பணிப்பாளர்களைக் கட்டாயப்படுத்தலாம். கம்பனியின் அகவுரையானது இத்தத்துவத்தை நீடிக்கலாமே யொழிய அதனை மட்டுப்படுத்தலாகாது.

மேற்படி கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று கோரும் பங்குதாரர்கள் தமது கூட்டத்தின் குறிக்கோள்களை எடுத்துக் கூறுவதாக அக் கோரிக்கை இருக்கவேண்டும். இவ்வாறான கோரிக்கை செய்யப்பட்ட 21 நாட்களுக்குள் பணிப்பாளர்கள் அதி விசேட கூட்டத்தைக் கூட்டாவிடின் கோரிக்கை செய்தவர்களில் அரைவாசிப் பேர் தாமாகவே ஒரு கூட்டத்தைக் கூட்டலாம்.

5.2.5. கூட்டங்கள்பற்றிய பொது ஏற்பாடுகள்

கம்பனியில் காணப்படும் கூட்டங்கள் பற்றிய பல்வேறு ஏற்பாடுகளுடன் பின்வரும் ஏற்பாடுகளும் கவனத்துள் எடுக்கப்பட வேண்டியனவாகும்:

(அ) விசேட தீர்மானங்கள் கூட்டப்படுவதற்கான கூட்டங்களைத் தவிர ஏனைய கூட்டங்கள் யாவும் எழுத்திலான 7 நாள் அறிவித்தலில் கூட்டப்படலாம்.

(ஆ) கம்பனியின் உறுப்பினரெல்லாருக்கும் அறிவித்தல் வழங்கப்படவேண்டும்.

(இ) ஏதேனும் விசேட அலுவல் விவாதிக்கப்படவிருப்பின் அறிவித்தலானது அதன் தன்மைபற்றிக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் பத்திலொரு பாகமான பங்குகளை உடைய இரண்டு அல்லது அதற்கதிகமான உறுப்பினர்கள் அல்லது கம்பனியானது பங்குமுதலை உடையதல்லவாயின் கம்பனி உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 5 சதவீதமானோர் கூட்டமொன்றைக் கூட்டலாம்.

(உ) முறையாகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டம் பணிப்பாளர்களினால் தள்ளிவைக்கப்படுதலாகாது.

(ஊ) தனியார் கம்பனிக்கு இருவரும், பகிரங்கக் கம்பனிக்கு மூவரும் கூட்ட நடப்பெண்ணாக இருப்பர். ஆனால் அகவுரை வேறு ஓர் எண்ணை கூட்ட நடப்பெண்ணாகக் குறித்து நியமிக்கலாம். அவ்வெண்ணிக்கையான உறுப்பினர்கள் நேரடியாகச் சமூகம் தர வேண்டும்.

(எ) சமூகமாயிருக்கும் உறுப்பினர்கள் தம்முள் ஒருவரைக் கூட்டத் தவிசாளராக (தலைவராக) நியமிக்கலாம்.

(ஏ) இரகசிய வாக்கெடுப்பதற்காக ஒரு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டால், அத்தகைய ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் முந்திய கூட்டத்தின் தொடர்கூட்டமாகக் கருதப்படும். முந்திய கூட்டத்தில் எடுக்க முடியாத விடயங்கள் இவ்வொத்திவைக்கப்பட்ட கூட்டத்தில் விவாதிக்கப்படலாகாது.

(ஐ) கூட்டத்திற்குச் சமூகமளிக்க முடியாதவர்கள், தமது பிரதிநிதியைப் பிரதியாகக் கூட்டத்திற்கு அனுப்பி அவர் மூலமாக வாக்கினை அளிக்கலாம். அத்தகைய பிரதிநிதி அக்கூட்டத்தில் பேச முடியாது. வாக்கினை மட்டுமே அளிக்கலாம். ஆனால் தனியார் கம்பனிகளில் அத்தகைய பிரதிநிதிகள் வாக்களிக்கலாமென்பதுடன் பேசுவதற்கும்உரிமையுடையவர்களுமாவார்.

5.2.6. தீர்மானங்கள்

கம்பனியின் கூட்டங்களில் நிறைவேற்படும் தீர்மானங்கள் மூன்று வகையின. அவையாவன: (i) சாதாரண தீர்மானங்கள் (ii) அதிவிசேட தீர்மானங்கள் (iii) சிறப்புத் தீர்மானங்கள்.

(i) சாதாரண தீர்மானங்கள்: வாக்களிப்பவர்களில் பெரும்பான்மையினரின் வாக்கைப் பெற்று நிறைவேற்றப்படுவது தான் சாதாரண தீர்மானமாகும். அவை சாதாரணமான முறையில் நிறைவேற்றப்பட்டுக் கூட்ட அறிக்கைப் புத்தகத்தில் தவிசாளரினால் பதியப்படும். தவிசாளரின் அத்தகைய பதிவானது, அத்தகைய தீர்மானம் முறையாக நிறைவேற்றப்பட்டதற்கான சான்றாக அமையும். நியதிச் சட்டம் அல்லது அகவுரையானது ஒரு தீர்மானம், அதிவிசேட தீர்மானமாக அல்லது சிறப்புத் தீர்மானமாக இருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தாலன்றிக் கம்பனியின் அலுவல்கள் சாதாரண தீர்மானத்தினாலேயே செய்யப்படுகின்றன.

(ii) அதிவிசேட தீர்மானங்கள்: பொதுக் கூட்டமொன்றில் வாக்களிக்க உரிமையுடைய உறுப்பினர்களின் வாக்களிப்பின் போது மூன்றில் நான்கு பெரும்பான்மை வாக்குப் பெற்று நிறைவேற்றப்படும் இவ் அதிவிசேட தீர்மானங்கள் பற்றிய அறிவித்தல், அத்தகைய தீர்மானங்கள் அதிவிசேடமானவையாக நிறைவேற்றப்படக் கருதப்பட்டுள்ளனவென்று குறிப்பிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். இத் தீர்மானம் பற்றிய அறிவித்தலானது தீர்மானத்தின் அதே வாசகங்களைக் கொண்டிருக்கவேண்டும். பொதுவாக இத்தகைய தீர்மானங்கள் தாமாகவே கம்பனியைக் குலைக்க அல்லது பணிப்பாளர்களை நீக்க அவசியமானதாகும்.

(iii) சிறப்புத் தீர்மானங்கள்: இவையும் நான்கில் மூன்று பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேற்றப்படவேண்டும். இத் தீர்மானங்களின் அறிவித்தல்கள் 21 நாட்கள் அறிவித்தல்களாக இருக்க வேண்டும். தீர்மானத்தின் வாசகம் அறிவித்தலில் முழுமையாக இருக்கவேண்டும். (அ) கம்பனியின் அகவுரையை மாற்ற, (ஆ) புறவுரையின் நோக்க வாசகத்தை மாற்ற, (இ) கம்பனியின் பெயரை மாற்ற, (ஈ) நீதிமன்ற அனுமதியுடன் கம்பனியின் மூலதனத்தைக் குறைக்க, (உ) அழைக்கப்படாத மூலதனத்தை அல்லது அதன் ஒரு பகுதியை ஒதுக்கு மூலதனமாக மாற்ற, இத்தகைய சிறப்புத் தீர்மானங்கள் அவசியமாகும்.

5. 2. 7. கூட்ட அறிக்கை

கம்பனிக் கூட்டங்களின் நடவடிக்கைகள் யாவும் கம்பனியால் பேணப்பட வேண்டிய கூட்ட அறிக்கைப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவேண்டும். இப் புத்தகமானது கம்பனிப் பதிவகத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அது எவரேனும் உறுப்பினரால் பார்வையிடப்படலாம். பார்வையிடுவதற்கு உறுப்பினரிடமிருந்து கட்டணமெதனையும் வசூலிக்கக்கூடாது.

6. கம்பனிக் கணக்குகள்

6. 1. கணக்குப் புத்தகங்கள்

ஒவ்வொரு கம்பனியும் (i) வரவினங்கள் செலவினங்கள் (ii) விற்பனைகள் வாங்குவன; (iii) சொத்துக்கள் பொறுப்புக்கள் ஆகியன பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருத்தல் வேண்டும். கட்டளைச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கம்பனியில் லாபநட்டக் கணக்குகளையும் ஐந்தொகையையும் கணக்குப் பரிசோதகர்கள் தயாரிப்பதற்கு அவருக்கு அவசியமாகக் கூடிய அத்தகைய தகவல்களைக் கொண்டிருக்கும். கணக்குப் புத்தகங்கள் "முறையான கணக்குப் புத்தகங்களாக"க் கருதப்படும். (ஹீன்பண்டா எதிர் ஹெரத் 51 NLR 305)

கணக்குப் புத்தகங்கள் கம்பனிப் பதிவகத்தில் அல்லது பணிப்பாளர்களால் நியமிக்கப்படக்கூடிய அத்தகைய இடத்தில் கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்பட வேண்டும். அவை பணிப்பாளர்கள் பார்வைக்குக் கிடைக்கக்கூடியனவாக இருத்தல் வேண்டும்.

மேற்படி ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறும் எப்பணிப்பாளரும் அல்லது கம்பனி அத்தவறைச் செய்வதற்குத் தமது வேண்டுமென்ற செயலின் காரணமாக இருக்கும் எப்பணிப்பாளரும் குற்றமொன்றைப் புரிந்தவராவர்.

கம்பனியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பணிப்பாளர்கள் கம்பனியின் இலாப நட்டக் கணக்கையும், ஐந்தொகையையும் சமர்ப்பித்தல் வேண்டும். கம்பனியின் அலுவல்கள் பற்றியும் பங்கிலாங்களாகச் செலுத்தப்படச் சிபாரிசு செய்யப்படும் தொகை பற்றியும், ஒதுக்காக வைக்கப்படவுள்ள தொகைபற்றியும் பணிப்பாளர்களின் அறிக்கையொன்று ஐந்தொகையுடன் சேர்த்தனுப்பப்படல்வேண்டும்.

6. 2. லாபநட்டக்கணக்கும்ஐந்தொகையும்

ஒவ்வோராண்டுப் பொதுக்கூட்டத்திலும் லாபநட்டக் கணக்கும் ஐந்தொகையும் சமர்ப்பிக்கப்பட்டு கூட்டத்தின் கவனத்துக் கெடுக்கப்பட வேண்டும். ஐந்தொகையானது பின்வருவனபற்றிய விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம். (ஆ) வழங்கம்பட்ட மூலதனம். (இ) பொறுப்புகள். (ஈ) சொத்துகள். (உ) பொறுப்புக்கள் சொத்துக்கள் ஆகியவற்றின் பொதுவான தன்மையைக் காட்டும் விபரங்கள். (ஊ) தனித்தனியே நிலையான சொத்துக்கள், மிதக்கும் சொத்துக்கள் பற்றிய விபரங்கள்.

மேலும், ஐந்தொகையானது புறம்பாகப் பின்வரும் விபரங்களைக் காட்டுவதாக இருக்க வேண்டும்:-

(i) ஆரம்ப மூலதனம் (ii) பங்குகள் அல்லது கடன்பத்திரங்கள் வழங்குவதில் ஏற்பட்ட செலவினங்கள் (iii) வியாபார நன்மதிப்பு, வியாபாரச் சின்னங்கள், வர்த்தக அடையாளங்கள் ஆகியவற்றின் மதிப்பு (iv) பிணையுடைய பொறுப்புக்கள் (v) பங்குகள் கடன் பத்திரங்கள் மீதான கொமிஷன்களும், கழிவுகளும் (vi) கம்பனி ஊழியர்கள் பங்குகளை வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட கடன்கள் (vii) மீட்கப்பட்ட முதனுரிமைப் பங்குகளின் எண்களும், தொகையும் (viii) பணிப்பாளர்கள் ஊழியர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரம். (ix) ஏனைய கூட்டுக் கம்பனிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்

கள், அவற்றின் இலாப நட்டங்கள் (x) பணிப்பாளர்களின் ஊதியமாக வழங்கப்பட்ட பணத்தின் தொகை.

6.3. கணக்குப் பரிசோதகர்கள்

கம்பனியின் கணக்குகள் பரிசோதனை செய்யப்பட வேண்டுமென்பது கட்டாயமாகும். கணக்குப் பரிசோதகர்களுக்குக் கட்டளைச்கட்டம் மிக அதிகளவான தத்துவங்களை வழங்கியுள்ளது. கம்பனியின் முதலாவது கணக்குப் பரிசோதகர்கள் முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் எப்பொழுதும் பணிப்பாளர்களால் நியமிக்கப்படலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட கணக்குப் பரிசோதகர்கள் ஆண்டுப் பொதுக்கூட்டம் வரை பதவிவகிப்பர். கம்பனியானது தனது பொதுக்கூட்டத்தில் அவ்வாறு நியமிக்கப்பட்ட முதலாவது கணக்குப் பரிசோதகர்களை அகற்றி வேறு எவரையும் அவரிடத்திற்கு நியமிக்கலாம். மேலும் பணிப்பாளர்கள் கணக்குப் பரிசோதகர்களை நியமிக்காதவிடத்து தாமே கணக்குப் பரிசோதகர்களை நியமிக்கலாம்.

ஏனைய கணக்குப் பரிசோதகர்கள் ஆண்டுப் பொதுக்கூட்ட மொவ்வொன்றிலும் நியமிக்கப்படுவர். அவ்வாறு நியமிக்கப்படாவிட்டால் எவரேனும் உறுப்பினரின் விண்ணப்பத்தின்மீது கம்பனிப் பதிவாளர் கணக்குப் பரிசோதகர்களை நியமிக்கலாம். புதிய கணக்குப் பரிசோதகர் ஒருவரை நியமிப்பதற்குக் கம்பனிக் கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது 14 நாட்கள் அறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

பதிவுசெய்யப்பட்ட கணக்குப் பரிசோதகர்கள் மட்டுமே நியமிக்கப்படலாம். பின்வருவோர் நியமிக்கப்படத் தகுதியற்றவர்களாவர்:

(அ) கம்பனியின் பணிப்பாளர் அல்லது வேறு உத்தியோகத்தர்.

(ஆ) கம்பனியின் அல்லது, கம்பனியின் உத்தியோகத்தரின் பங்காளர் அல்லது அவரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர். (தனியார் கம்பனி தவிர)

(இ) ஒரு கூட்டுத்தாபனம்.

கணக்குப் பரிசோதகர்கள் கம்பனியில் எல்லாப் புத்தகங்களையும் பெற்றுப் பார்வையிடத் தகுதியுடையவர்களாவர். அவர்களது அறிக்கை கவனத்துக்கெடுக்கப்படும் எல்லாக் கூட்டங்களிலும் சமூகம் தரவும் அவர்கள் உரிமையுடையவர்கள்.

6.4. கணக்குப் பரிசோதகர்களது கடமைகள்

முதலாவதாக, கணக்குப் பரிசோதகர்கள் தமது ஆய்வுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் கம்பனியிடமிருந்து பெற்றார்களா என்பது பற்றியும் கம்பனியின் ஐந்தொகை முறையாக வரையப்பட்டிருக்கிறதா என்பது பற்றியும் உறுப்பினர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ஐந்தொகையுடன் கணக்குப் பரிசோதகர்களின் அறிக்கையும் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வாசிக்கப்படவேண்டும். உறுப்பினர்கள் அறிக்கையைப் பார்வையிடவும் அதன் பிரதிகளைப் பெறவும் உரித்துடையவர்களாவர்.

இரண்டாவதாக, கணக்குப் பரிசோதகர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழும் கம்பனியின் அகவுரையின் கீழும் தமது கடமைகளைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

மூன்றாவதாக. கணக்குப் பரிசோதகர்கள் தமது கடமைகளைப் புரிவதில் நேர்மையுடனும் நியாயமான கவனத்துடனும் செயல்பட வேண்டும். அவரது கவனமின்மையால் அல்லது நேர்மையின்மையால் கம்பனிக்கு ஏற்படும் இழப்புகளுக்கு அவர் பொறுப்பாவார்,

7. கம்பனியின் ஒப்பந்தம் செய்யும் தகைமை

7.1. அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட ஒப்பந்தங்கள்

கம்பனியின் புறவுரையில் உள்ள குறிக்கோள் பற்றிய வாசகம் கம்பனியின் ஒப்பந்தம் செய்யும் தகமையைக் கட்டுப்படுத்

துவதாகும். கம்பனி தனது அதிகார வரம்புக்குள் செய்யப்படும் ஒப்பந்தங்களுக்கெல்லாம் பொறுப்பானது என்பதை முன்னர் பார்த்தோம். ஒப்பந்தமொன்று கம்பனியின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாயின், ஒப்பந்தம் வறிதானதாகும்.

கம்பனி ஒரு செயற்கையான நபராதலால் அதனது முகவர்கள் மூலமாகவே கம்பனி செயற்படமுடியும். கம்பனி முகவர்களின் உண்மையானதும் வெளித்தோற்றமானதுமான அதிகாரங்கள் கம்பனியின் கட்டுப்படுத்தப்பட்ட ஒப்பந்தத் தகமைப் பின்னணியில் கவனிக்கப் படுதல் வேண்டும். கம்பனி முகவர்களின் அதிகாரம் பொதுவாகப் கம்பனியின் அகவுரையில் வரையறை செய்யப்பட்டிருக்கும்.

சில சந்தர்ப்பங்களில் கம்பனியின் முகவர்களினால், அதாவது பணிப்பாளர்களினால் செய்யப்படும் ஓர் ஒப்பந்தம் அவர்களது அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாயும் ஆனால் கம்பனியின் அதிகாரத்திற்கு உட்பட்டதாயும் அமையலாம். இச் சந்தர்ப்பங்களில் அத்தகைய ஒப்பந்தங்களுக்குக் கம்பனியே பொறுப்பாகும். கம்பனியுடன் ஒப்பந்தம் செய்பவர் கம்பனியின் அகவுரை புறவுரை ஆகியவற்றில்சொல்லப்பட்டனவற்றைத் தெரிந்துவைத்திருக்க வேண்டுமேயொழிய கம்பனியின் அன்றாட அலுவல்களையோ, சம்பிரதாயங்களையோ அவை பின்பற்றப்பட்டனவா என்பதையோ அறிந்து வைத்திருக்கத் தேவையில்லை. (ரோயல் பிரிட்டிஸ் பாங் எதிர் நேர்குவன்ட்).

ஆயினும் இத்தகைய நேர்குவன்ட் விதி பின்வரும் சந்தர்ப்பங்களையும் பாதுகாப்பதாகாது;

(அ) வெளியாருக்கு (ஒப்பந்தம் செய்பவருக்கு, செய்யப்படும் ஒப்பந்தம் ஒழுங்கற்றது எனத் தெரிந்தால்

(ஆ) ஒப்பந்தம் பற்றிய அலுவல் பெறுமதியுடையதாக வருவதற்கு அதிவிசேட அல்லது சிறப்புத் தீர்மானம் தேவையாய் இருந்திருப்பின். (இத் தீர்மானங்களின் பிரதி பதிவாளருக்கு அனுப்பப்பட்டிருக்கும்.). (இ) நம்பப்படும் ஆவணம் புனையப்பட்டதாயின். (ஈ) ஒப்பந்த அலுவல் சாதாரண வகையில் ஐமிச்சத்தை வரவழைத்திருக்கக் கூடியதாகவிருந்திருந்தால்.

7.2. கடன் வாங்கும் அதிகாரம்

கம்பனியின் கடன்வாங்கும் அதிகாரம் அதன் ஆவணங்களினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். கம்பனி தனது அதிகாரத்திற்கு அப்பாற்பட்டு ஒரு கடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டால் அவ்வொப்பந்தம் வறிதானதாகும். எனினும் இங்கும் நேர்குவன்ட் விதி செல்லும். அதாவது கடனானது பணிப்பாளர்களின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டும் ஆனால் கம்பனியின் அதிகாரத்திற்கு உட்பட்டும் மிருந்தால் அவ்வொப்பந்தம் செல்லுபடியானதாகும்.

7.3. கடன் பத்திரங்கள்

கம்பனி கடன்வாங்கியுள்ளது என்பதை நிரூபிக்கும், அத்தாட்சிப்படுத்தும் ஆவணமே கடன்பத்திரமாகும். இது கடன் ஒப்பந்தத்தின் முக்கிய நியதிகளைக்கொண்டிருக்கும். எழுத்திலான இவ் ஆவணம் கம்பனி கடன்கொடுத்தவருக்குக் கொடுத்துள்ள பிணை, கடன்மீது செலுத்தப்படவேண்டிய வட்டி வீதம், கடனைத் திருப்பிச் செலுத்துவோமென்ற உறுதிமொழி ஆகிய நியதிகளைக் கொண்டிருக்கும். எழுத்திலான நியதிகளுக்கிணங்கக் கடன் பத்திரங்கள் பிணையுடன் கூடியனவாக அல்லது பிணையற்றவையாக, அல்லது பதிவு செய்யப்பட்டனவாக அல்லது வைத்திருப்பவரைச் சாந்ததாக அல்லது மீட்கப்படக்கூடியதாக அல்லது இடையறுததானதாக இருக்கலாம்.

7.4. கம்பனிச் சொத்தின் மீதான அக்கறைகள்

பிணையுடன் கூடிய கடன்பத்திரங்கள் வழங்கப்படும்போது, கம்பனியின் சொத்துக்கள் மீது நிலையான அக்கறைகள் அல்லது மிதக்கும் அக்கறைகள் அல்லது இரண்டும் சேர்ந்த அக்கறைகள் உருவாக்கப்படுகின்றன.

நிலையான அக்கறைகள் என்பது கம்பனிக்குச் சொந்தமான ஒரு குறிப்பிட்ட பொருள்மீது உருவாக்கப்படும் அக்கறையாகும். இத்தகைய அக்கறை பொதுவாகச் சட்டமுறையான ஈட்டின்மூலம் செய்யப்படலாம். சிலவேளைகளில் அவதானத்தின் உறுதிகளைக் கடன் கொடுப்பவரிடம் விட்டுவைப்பதன்மூலமும் பிணைஉருவாக்கப்படலாம். இத்தகைய பிணை முறைமையடிப்படையில் அமைந்ததாகும்.

மிதக்கும் அக்கறைகள் கம்பனியின் மிதக்கும் சொத்துக்களின்மீது அல்லது வேறு ஏதேனும் சொத்தின்மீது உருவாக்கப்பட்டதாகும். இத்தகைய சொத்துக்கள் கம்பனியால் எவ்வகையாலும் கையாளப்படலாம். இதுவே இத்தகைய அக்கறையின் அனுகூலமாகும்.

7.5. கடன் கொடுத்தவர்களுக்கான நிவாரணங்கள்

கடன் கொடுத்தவர்களுக்கான நிவாரணங்கள் அவர்களுடைய கடன் பத்திரங்களின் வகையைப் பொறுத்ததாகும்.

பிணையற்றகடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் சாதாரண கடன் கொடுத்தவர்களாகவே கருதப்படுகின்றனர். கம்பனியானது முதலையும், வட்டியையும் கொடுக்கத் தவறுமிடத்து கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் கம்பனிக்கெதிராக ஒப்பந்த முறிவிற்கான வழக்கொன்றைத் தொடரலாம்; அல்லது கம்பனி குலைக்கப்படவேண்டுமென்று மனுச் செய்யலாம்.

கடன் பத்திரமானது பிணையுடன் கூடியதாயின் பின்வரும் நிவாரணங்கள் அவருக்குண்டு:—

(அ) கம்பனிக்கெதிராக ஒப்பந்த முறிவிற்காக வழக்குத் தொடர்ந்து முதலையும், வட்டியையும் கோரலாம்; அல்லது

(ஆ) கம்பனி குலைக்கப்படவேண்டுமென்று நீதிமன்றத்திற்கு மனுச் செய்யலாம்; அல்லது

(இ) கடன் பத்திரத்தில் அவருக்குத் தரப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து பிணையாகவுள்ள ஆதனத்தை விற்கலாம் அல்லது பெறுநர் ஒருவரை நியமிக்கலாம்; அல்லது

(ஈ) நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து பிணையாகவுள்ள ஆதனத்தை விற்கும்படி அல்லது பெறுநர் ஒருவரை நியமிக்கும்படி வேண்டலாம்.

BEST WISHES

AUTHORISED stockists of
DUCO DULUX
&
PENTALITE EMUSSION
PAINTS

T. Rasiah & Sons
23/10, Stanley Road,
JAFFNA.

வித்தியோதயத்துக்கு
எமது வாழ்த்துக்கள்!

சுத்தமான ருசிமிக்க
உணவுகளுக்கு

மலாயன் கபே
36-38, பெரிய கடை
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு !

சுவையான 'யானை மார்க்'
குளிர்பானங்களுக்குச்
சிறந்த இடம்

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் ரோட்,
யாழ்ப்பாணம்,

With Best Compliments
from

Cheapest House for
QUALITY TEXTILES
&
FANCY GOODS

Visit Once ! and you will be
Satisfied Well

SASIYOGAS
183/1, GALLE ROAD,
DEHIWELA

அன்பளிப்பு

அழகிய தங்கப்பவுண், வைர நகைகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

○ ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

கே. கே. வி. யாழ்ப்பாணம்
நகை மாளிகை
82/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : **362**

விக்கியோகயம் நலமே மலர்க!

நகை வைர வியாபாரிகள்!

ஸ்ரான் ஜூவல்ஸ்
R. G. பில்டிங்ஸ்
50, கன்ஸ்ரீட் ரோட், **யாழ்ப்பாணம்**
தந்தி : 'இரத்தினம்ஸ்' தொலைபேசி : **444**

With the best Compliments

from

Dealers in Motor Parts

Subamala Motor

79, Stanley Road,
JAFFNA.
T'Phone: **7520**

அன்பளிப்பு !

எங்களிடம் சகலவிதமான அழகுசாதனப் பொருட்கள், ரேகார்ட் கவரிங் நகைகள், மற்றும் சாப்பிடும் சாமான்களும், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ அம்பிகா பென்சி பலஸ்
(ராணிக் தியேட்டர் அருகாமை)
5, மின்சார நிலைய வீதி, (ஜுபிலி பஜார்)
யாழ்ப்பாணம்

போன் : 678 தந்தி: 'அம்பிகா'

மன்றச் செய்தியும் மரபும்

1976-77-78

செயற்குழு — 1976–77–78

காப்பாளர் :	பேராசிரியர் ரியூலி த. சில்வா *வளாகத் தலைவர்*
துணைக் காப்பாளர் :	திரு. சி. மாணிக்கவாசகர் *வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்*
பெரும் பொருளாளர் :	கலாநிதி கா. சிவத்தம்பி *இணைத் தமிழ் பேராசிரியர்*
தலைவர் :	திரு. மூ. சுப்பிரமணியம்
துணைத் தலைவர் :	ஜோ. மலன்கோவ்
செயலாளர் :	திரு. க. தர்மகுணசிங்கம்
துணைச் செயலாளர் :	ஜனுப் யூ. க; மரைக்கார்
பொருளாளர் :	திரு. கு. வீமராசன்
இணை இதழாசிரியர்கள் :	திரு. ச. அருட்சோதி திரு. நா. வரதராசா
செயற்குழு உறுப்பினர்கள் :	திரு. அ. தேவச்சந்திரன் திரு. சி. திருச்செல்வம்

செயற்குழு மாணவ உறுப்பினர்கள் — 1976 – 77 – 78

ப்பாவர்கள் (இடமிருந்து வலம்): திரு. க. தர்மகுணசிங்கம் (செயலாளர்), திரு. யோ. மலன்கோவ் (துணைத் தலைவர்), திரு. மூ. சுப்பிரமணியம் (தலைவர்), திரு. ச. அருட்சோதி (இணை இதழாசிரியர்).

பவர்கள் (இடமிருந்து வலம்): ஜனுப் யூ. க. மரைக்கார் (துணைச்செயலாளர்), திரு. நா. வரதராசா (இணை இதழாசிரியர்), திரு. கு. வீமராசன் (பொருளாளர்), திரு. அ. தேவச்சந்திரன் (செயற்குழு உறுப்பினர்).

கமளிக்காதவர் : திரு. சி. திருச்செல்வம் (செயற்குழு உறுப்பினர்).

செயலாளர் ஏட்டில்.....

"தமிழுண்டு தமிழ் மன்றமுண்டு—நற்தமிழுக்கு
நாளெல்லாம் செய்வோம் நல்லதொண்டு"

தமிழ் மன்றங்கள் கலை, கலாச்சாரம், இலக்கியம் என்பவற்றை வளர்ப்பதன் மூலம், தமிழைப் பேணி வளர்ப்பதற்கெனவே ஆரம்பிக்கப்படுகின்றன. இவ்வகையில் எமது வித்தியோதய வளாகத் தமிழ் மன்றம் தனது பணியினைத் திறம்படச்செய்து வந்திருக்கின்றது. இன்று மூன்றுண்டுகளைக் கடந்து நிற்கும் எமது மன்றத்தின் கடந்த காலத்தை எண்ணிப் பார்க்கவேண்டியது இங்கு அவசியமாகின்றது. எமது மன்றம் இரண்டு கலைவிழாக்களை மிகவும் விமரிசையாகக் கொண்டாடியது என்பதையிட்டு நடைமுறையாண்டின் செயலாளர் எனும் முறையில் பெருமிதம் அடைகின்றேன். அத்துடன் "வித்தியோதயம்" மூன்றுவது மலர் வெளியீடும், கலைவிழாவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில், முன்னவர்கள் தொடர்ந்து செய்துவந்த பணியை நாமும் தளர்வின்றித் தொடர்ந்து செய்துமுடித்தோம் என்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வித்தியோதய வளாகத்தில் கல்விபயிலும் நாமனைவரும் முகாமைப்பீட மாணவர்கள். நாமும் கலையார்வம் கொண்டவர்கள்; தமிழ்மொழிப் பற்று உடையவர்கள். மிகக் குறைந்த எண்ணிக்கையை உடைய நாம் பிரமாண்டமான ஓர் கலைவிழாவினை நடத்துவதுடன், பன்னீராயிரம் ரூபா செலவில் ஓர் மலரினையும் வருடாவருடம் வெளியிட்டு வருகிறோம் என்றால், அதற்குத் தமிழின்மேல் நாம் கொண்டுள்ள பற்றும், தமிழை மேம்படச்செய்வதில் நாம் கொண்டுள்ள ஆர்வமுமே காரணமாகும்.

பல்கலைக்கழக வளாகங்கள் அடிக்கடி மூடப்பட்டமையால்குறிப்பாக—இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற இனக்கலவர காலத்தில் நீண்டகாலம் வளாகங்கள் மூடப்பட்டமையால், ஏனைய வளாகங்களுடன் எமது மன்ற விவாதக்குழு விவாத அரங்குகளை நடத்தச் சாத்தியமான நிலைமைகள் ஏற்படவில்லை. ஆயினும் மன்ற அங்கத்தினர்களின் விவாதத்திறமையை ஊக்குவிப்பதற்காகவெனக் கீழ்வரும் தலைப்புக்களில் பல விவாத அரங்குகளை எமது வளாக சுமங்கலா விரிவுரை மண்டபத்தில் ஏற்படுத்தி நடாத்தியுள்ளோம்.

"தற்போதைய அரசின் காலத்தில் தமிழர் பிரச்சனை தீர்க்கப்படும் என்பது ஒரு ஏமாற்று வித்தையே"

"சுதந்திர வர்த்தக வலையம் இலங்கையின் இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையுமா?"

"இன்றைய வரவுசெலவுத்திட்டம் கட்டுப்பாடற்ற சுதந்திரப் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும்"

மேலும் "நாளை நமதே", "விடிவு காண்போம்" என்ற தலைப்புகளில் கவியரங்குகளையும் நடாத்தியுள்ளோம்.

எமது மன்றத்தின் சார்பில் பல சுற்றுலாக்களையும் ஒழுங்குசெய்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கதிர்காமம், திருக்கோணேஸ்வரம் போன்ற பல்வேறு இடங்களையும் பார்வையிட்டுள்ளோம்.

எமது இரண்டாவது கலைவிழாவில் மேடையேறிய அ. தாசீசியஸின் நெறியாள்கையில் உருவான நா. சுந்தரலிங்கத்தின் "ஓலங்கள்" என்னும் நாடகத்தைக் கொழும்பில் நடிகர் ஒன்றியத்திற்காக லயனல் வென்ற் தியேட்டரில் இரண்டாவது தடவையாக மேடையேற்றினோம். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எமது மன்ற நிதிக்காக க. பாலேந்திராவின் நெறியாள்கையில் உருவான நா. பார்த்தசாரதியின் "மழை" நாடகத்துடன் கூடவே மூன்றாவது தடவையும் மேடையேற்றினோம்.

இறுதியாக எமது மன்ற வளர்ச்சிக்காக பலவிதத்திலும் உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றி கூறுவிடில் நாம் நன்றி மறந்தவர்களாகிவிடுவோம். நாம் நன்றி சொல்ல வேண்டும் இவர்களுக்கு—

வணிக, நிர்வாகத்துறையில் சிறந்துவிளங்கும் "வித்தியோதயம்" எனும் இம் மலரை வெளியிடவும் சிறந்த முறையில் கலைவிழாவினை நடத்தவும் ஒத்துழைப்பு நல்கிய எல்லோருக்கும் நன்றிகளை உருத்தாக்குகின்றேன். குறிப்பாக கலைவிழாவில் நடைபெறும் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்யவும், நிரற்படுத்தவும் பலவிதத்திலும் ஆலோசனை வழங்கிய எமது பெருப் பொருளாளர் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்களுக்கும், லாதீஸ் லோகநாதன், கே.எஸ். நடராசா அவர்களுக்கும் எமதுநன்றிகள் உரியதாகும்.

எமது இன்றைய கலைவிழாவில் மேடையேறும் "ஒர் யுகத்தின் விம்மல்" என்னும் நாடகத்தின் பிரதியினைத் தந்துதவியதுடன், மேடையேற்றுதற்குதவிய க. பாலேந்திரா அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எம்மிரு நாடகங்களிலும் பங்கேற்று நடித்த எமதினிய மாணவ நண்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். மேலும் எமது கலைவிழாவில் நடனவிருந்தளிக்கும் செல்வி காஞ்சனா தாமோதரம் அவர்களுக்கும், கார்த்திகா ஆடற்கலையக மாணவிகட்கும் எமது இனிய நன்றிகள் உரியதாகும்.

எமது மன்றத்துக்கு மறைமுகமாகப் பலர் உதவிசெய்திருக்கலாம். அவர்களுக்கும், எனது ஞாபகசக்திக்கு உட்படாதவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இம்மன்றத்தை, எம்மைத் தொடர்ந்து அடுத்துவரும் செயற்குழுவினர் திறம்பட இயங்கச்செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

க. தர்மகுணசிங்கம்
செயலாளர்

பொருளாளர் ஏட்டில் .....

எமது மன்றத்தின் வருடாந்தவெளியீடான ''வித்தியோதயம்'' சஞ்சிகையின்மூன்றாவது ஆண்டு மலர் தங்களுடைய கரங்களில் தவழ்ந்துகொண்டிருக்கின்ற இதேவேளையில், மன்றத்தின் பொருளாளர் என்றவகையில் என் உள்ளத்தில் இருந்து சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

இலங்கைப் பல்கலைக்கழக ஆறு வளாகங்களிலும் வித்தியோதய வளாகம் மிகக் குறைந்த தமிழ்பேசும் மாணவர்களைக் கொண்டதாகத் திகழ்வதனால் அத்தகைய நிலையில் தமிழ் மன்றத்தை நடாத்துவதில் ஏற்பட்ட—ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற இன்னல்களோ அளவிடற்கரியன.

பல இன்னல்கள், துன்பங்கள் வந்தபோதும் அதைப் பெரும் துயரெனக் கருதி மனந்தளராத எமது மாணவர்களின் முயற்சியால், தவழ்ந்து துள்ளி நடைபோடும் சிறு பராயத்தில் வளர்ந்துவரும் எமது தமிழ்மன்றம், இம் மலர் வெளியிடுவதற்கும், கலைவிழா நடாத்துவதற்கும் நிதிசேகரிப்பதில் நாம் அனுபவித்த கஷ்டங்கள் சொல்லும் தரமன்று.

எமது மன்றத்தின் நிதி உதவிக்காக 1976ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ஆந் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ''ஓலங்கள்'', ''மழை'' எனும் இரு நாடகங்களை மேடையேற்றியதுடன் 1978ஆம் ஆண்டு தை மாதம் 29ஆந் திகதி தெகிவளை ட்ரியோ படமாளிகையில், ''ராமன் எத்தனை ராமனடி'' திரைப்படத்தை நிதிஉதவிக் காட்சியாகக் காண்பித்ததன் மூலம் போதியளவு நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆதரவு தந்த அன்பர்களுக்கும், இக் காட்சிகளை ஒழுங்குபடுத்துவதில் உதவிபுரிந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளும் அதேவேளையில், இம் மலர் வெளியீட்டுக்காக எத்தனையோ வர்த்தக நிறுவனங்களின் வாசற்படியேறி விளம்பரம் கேட்டுச் சென்றபோது எம்மை உதாசீனம் செய்யாது மனமுவந்து விளம்பரம் தந்து உதவியவர்த்தகப் பெருமக்களுக்கும் நன்றி கூறுவதுடன், தொடர்ந்துவரும் ஆண்டுகளிலும் எமது மன்றம் சிறப்பாகத் தன் பணிகளை ஆற்றுவதற்கு உங்களினது ஆதரவினை வேண்டிநிற்கிறது.

இறுதியாக, மன்றத்தின் நிதியீட்டத்திற்கு என்னுடன் தோளோடு தோள்நின்று உழைத்த செயற்குழுவினருக்கும், காப்பாளருக்கும், பெரும் பொருளாளருக்கும், மன்ற அங்கத்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறி, அடுத்துவரும் ஆண்டில் மன்றத்தினைப் பொறுப்பேற்று நடாத்த இருக்கும் செயற்குழுவினரை, வாருங்கள் வந்து சிறப்பாக நடாத்துங்கள் என ஆசி கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

கு விமராசன்
பொருளாளர்

மரபுவழி நின்று மாண்புடன் நவில்கின்றோம் !

- மலரின் இதழ்களை மணம்பெறச் செய்யும் வண்ணம் சிரமம் பாராது சீரிய கருத்துக்களுடனான விடையதானங்கள் தந்துதவிய விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும்;
- மன்றத்தின் சாதனைகளுக்கு மேன்மைமிகு பணிபுரிந்தும், மலர் வெளியீட்டுக்கு மகத்தான ஆலோசனைகள் வழங்கியும் எம்மை ஊக்குவித்த மன்ற பெரும்பொருளாளர் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்களுக்கும், துணைக்காப்பாளர் திரு. சி. மாணிக்கவாசகர் அவர்களுக்கும், விரிவுரையாளர் திரு. எஸ். சிதம்பரநாதன் அவர்களுக்கும் ;
- மாணவர்களின் ஆக்கங்களை சிரமத்தைப் பாராது சீர்திருத்திச் சிறப்பாக்கிய சகல விரிவுரையாளர்களுக்கும்;
- இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கியும், எமதுமன்றக் காப்பாளராக இருந்தும் எமக்கு மேலான உதவிகள் புரிந்த வளாகத் தலைவர் பேராசிரியர் ரியூலி த சில்வா அவர்களுக்கும்; ஆசிச்செய்திகள் வழங்கிய பதில்ப் பீடத் தலைவர் திரு. முனசிங்க அவர்களுக்கும்; வணிகத்துறைத் தலைவர் திரு. ஹேமா விஜயவர்த்தனா அவர்கட்கும்; காப்பாளர் திரு. சி. மாணிக்கவாசகர் அவர்களுக்கும்; பெரும்பொருளாளர் கலாநிதி கா. சிவத்தம்பி அவர்களுக்கும்;
- இயலாத நிலையிலும் இல்லையென்று சொல்லாது மனதார விரும்பி மலர் வளம் பெற விளம்பரம் தந்துதவிய எமது விளம்பரதாரர்களுக்கும் அதனைச் சேகரிக்க சேர்த்ந்தவிய எம்தினிய நண்பர்களான சி. நவரத்தினம், எம். ஜமால், து. சந்திரகுமார், ந. கலைச்செல்வன், பொ. இரத்தினசிங்கம், இ. இராஜசுந்தரம், பொ. முருகையா, J. ஆப்தீன், வ. அன்ரனி, இராசரத்தினம் ஆகியோருக்கும்;
- இம் மலரின் அட்டைப்படத்தினை அழகுற வரைந்துதவிய அன்பர் ''வண்ணவாரிதி'' திரு. வீ. கனகலிங்கம் (வீ. கே.) அவர்களுக்கும்;
- இம் மலருக்கு ஆய்வுரை நிகழ்த்தவிருக்கும் திரு. வாமதேவன் அவர்களுக்கும்;
- சிரமங்களையும் இழப்புகளையும் சிந்தனையில் கொள்ளாது எடுத்த முயற்சியைச் சிறப்புடன் முடிப்போம் என அல்லும் பகலும் அயராதுழைத்த இவ்வாண்டு செயற்குழுவினர்க்கும்;
- மலர் வெளியீட்டில் என்னுடன் தோளோடு தோள் கொடுத்துச் சகல விதத்திலும் துணைநின்ற நண்பன் நி. சரவணபவனுக்கும், மற்றும் கா. ஆறுமுகராசா அவர்களுக்கும்;
- குறுகிய காலத்தில் கூடிய முயற்சியுடன் சிறப்புற இம்மலரை செம்மையுடன் அச்சிட்டு வழங்கிய சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினருக்கும், அதன் முகாமையாளர் சோ. இராசரத்தினம் அவர்களுக்கும், அழுத்தக ஊழியர் அனைவருக்கும்;
- நாம் நன்றிகூற மறந்திட்டபோதும் நன்மைசெய்ய மறந்திடாத ஏனைய அன்பு உள்ளங்களுக்கும்;
- மண்டபம் தந்துதவிய கதிரேசன் மண்டப நிர்வாகத்தினருக்கும்;

எமது இதயம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

இணை இதழாசிரியர்கள்

With the best Compliments of

Cey-Nor

Boat Yard,
KARAINAGAR.
Phone: 804

Fishing Net Factory,
GURUNAGAR,
JAFFNA.
Phone: 76

- **Manufacturers of :**
  Fibre Glass
  Ferrocement Boats
  and
  Fishing Nets.
- **Exporters of :**
  Marine Products.
- **Importers and Distributers of :**
  All Sizes of Kuralon
  Ropes.
- **Also Supplies :**
  Frozen Fish.

சீ-நோர்

படகு உற்பத்திச்சாலை,
காரைநகர்.
போன்: 804

வலைத் தொழிற்சாலை,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
போன்: 7604

- கண்ணாடி நார் மீன் பிடிப் படகுகள்.
- சீமேந்து ஆழ்கடல் மீன் பிடிப் படகுகள்.
- நைலோன், குறுலோன் வலைகள் உற்பத்தியாளர்கள்
- கடல் உற்பத்திப் பொருள் ஏற்றுமதியாளர்கள்.
- குறுலோன் கயிறுகள் இறக்குமதி விநியோகஸ்தர்கள்.
- குளிரூட்டிய மீன் விநியோகஸ்தர்கள்.

With the Best Compliments

of

K. K. S. Exports

181, Dam Street . . . MBO-12

Phone : 32802 *Gram* "SABAI"

அச்சுப்பதிவு : திருமகள் அழுத்தகம், சுன்னாகம்—967/2-78